... 11.9.81.

மொழியியல்

தொகுதி 4 ஜூலை - டிசம்பர் எண் 4.1 & 2

பேராசிரியர்

தெ. பொ. மீ. நினைவு மலர்

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

இராம. சுந்தரம்

பொன். கோதண்டராமன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

1980

T13381

R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்	**டாக்டர் மு. சண்முகம் பிள்ளை** (மதுரை)
துணைத் தலைவர்	**டாக்டர் சி. சுப்பிரமணியம்** (நாகர்கோவில்)
செயலாளர்	**டாக்டர் ச. அகத்தியலிங்கம்** (அண்ணாமலைநகர்)
பொருளாளர்	**டாக்டர் ந. குமாரசாமிராஜா** (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்	**டாக்டர் கி, அரங்கன்** (மைசூர்)
	டாக்டர் கோ. சீனிவாசவர்மா (அண்ணாமலைநகர்)
	டாக்டர் சௌரிராஜன் (திருப்பதி)
	டாக்டர் ஜெ. நீதிவாணன் (மதுரை)
	டாக்டர் எஸ். வைத்தியநாதன் (பட்டியாலா)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ. 200-00	US S 50-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ. 300-00	US S 75-00
ஆண்டு கட்டணம்	ரூ. 20-00	US S 5-00
ஆண்டு கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ. 30-00	US S 7-00
ஆண்டு கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ. 10-00	.

பேராசிரியர்

தெ. பொ. மீ. நினைவு மலர்

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

1901 — 1980

பேராசிரியர்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் அவர்கள்

வாழ்க்கைக் குறிப்பு

பெயர்: டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

பிறந்த நாள்: 8—1—1901

பிறந்த இடம்: சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

கல்விச் சான்றிதழ்கள் :

பி.ஏ. 1920 : சென்னை பச்சையப்பன் கல்லூரி

பி.எல். 1922 ; சென்னை சட்டக் கல்லூரி

எம்.ஏ. 1923 : வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம்

பி.ஓ.எல்., எம்.ஓ.எல். 1934-க்குள் : சென்னைப் பல்கலைக்கழகம்

வகித்த பதவிகள் :

1924 ; சென்னை நகராண்மைக்கழக உறுப்பினர்.

1925 : அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவர்.

1929–1980 : சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலாளர், தலைவர்.

1944 : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தமிழ்ப் பேராசிரியர்.

1955–1966 : அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல், இலக்கியத் துறைகளின் பேராசிரியர்.

1961 : சிகாகோ பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்.

1966–1971 : மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தர்.

1973 : திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளர்.

1974 : ஆழ்நிலைத் தியானதேசியக் குழுவில் உறுப்பினர்.

சிறப்புப் பட்டங்கள் :

டி.லிட்., 1967 ; மதுரைப் பல்கலைக்கழகம்.

டி.லிட்., 1976 : இலங்கைப் பல்கலைக்கழகம்.

டி.லிட்., 1979 : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பத்மபூஷண், 1977 : நடுவண் அரசு, புதுடில்லி.

கலைமாமணி, 1978 : தமிழக அரசு, சென்னை.

மறைந்த நாள் : 27—8—1980.

பேராசிரியர்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் அவர்கள்

வாழ்க்கை வரலாறு

இந்த நூற்றாண்டில் தோன்றிய பேராசிரியர்களுள் தமிழகம் தந்த டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தனி ஒரு சிறப்பிடம் பெற்றவர். பேராசிரியர் அவர்கள் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 1901-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம் நாள் தோன்றினார். இவருடைய முன்னோர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள். இவருடைய தந்தையார் பொன்னுசாமி கிராமணியார் அவர்கள் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கரான அட்டாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்களிடம் தமிழ் பயின்றவர். அந்த மகாவித்துவானின் பெயரையே தமது புதல்வருக்கும் சூட்டினார்.

பேராசிரியர் அவர்கள் கோவிந்தநாயக்கர் இடைநிலைப்பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் கல்வி பயின்று தம் பதினைந்தாம் வயதிலேயே பள்ளி இறுதித் தேர்வில் வெற்றிபெற்றார். பின்னர் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று 1920-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். அதன்பின் சட்டக் கல்லூரியில் பயின்று 1922-ல் பி. எல். பட்டமும், 1923-ல் வரலாற்றுத்துறையில் எம். ஏ. பட்டமும் பெற்றார்.

1923-லேயே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டு வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினாலும் பேராசிரியர் அவர்கள் குறுகிய வட்டத்தினுள் தம்மை அடக்கிக் கொள்ளாது பல்வேறு துறைகளிலும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு விளங்கினார். நாட்டுப்பற்றும், தமிழ்ப்

பற்றும், சமயப்பற்றும், மக்களுக்குத் தொண்டாற்றும் ஆர்வமும் அவரிடம் போட்டியிட்டு வளர்ந்தன. 1924-ஆம் ஆண்டிலேயே சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகப் பொறுப்பேற்று மக்களுக்குத் தொண்டாற்றினார். 1936-ல் சென்னை நகராண்மைக் கழக சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு மிகுந்து 1944-ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகளின் ஆணைப்படி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார்.

பேராசிரியர் அவர்கள் முற்போக்குச் சிந்தனைகளும், குறுகிய சாதி, சமய வேறுபாடுகளினின்றும் விடுபட்ட பரந்த மனப் போக்கும் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார். உயர்வு, தாழ்வு கருதாது ஜனநாயக மனப்பான்மை கொண்டு ஏழை எளியவர்களிடமும் தாராளமாகக் கலந்து பழகும் அவர்தம் உளப்பாங்கு போற்றற்குரியது. 1916-ஆம் ஆண்டிலேயே அரிசனங் களுக்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தத் தலைப்பட்டு, நெடுங் காலம் அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். 1925-ல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராகவும், 1935-லிருந்து நேஷனல் ஸ்டார் இன்ஷுரன்ஸ் கம்பெனியின் தலைவராகவும் தொண்டாற்றினார். 1936-ல் வேதாந்த சங்கத் திற்குத் தலைமை பூண்டு வேதாந்த பாடங்களும் தமிழ்ப் பாடங்களும் நடத்தும் பொறுப்பினை ஏற்றார். பேராசிரியர் அவர்கள் சென்னை மாநில ஆந்திரப் பிரிவின் காங்கிரஸ் தலை வராகவும், துவக்கக் கல்விக்குழு, உயர்நிலைக் கல்விக்குழு ஆகிய இரண்டிலும் உறுப்பினராகவும், சென்னை நகர நூலகக் குழுவின் தலைவராகவும், சென்னை மாநிலக் குழுவின் உறுப்பினராகவும் யூனெஸ்கோவின் 'கூரியர்' இதழ்க்குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 1929-முதல் இறுதிநாள்வரையிலும் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலாளராகவும், தலைவராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார்.

கொழும்பில் சைவசித்தாந்த மகாநாடு கூடியபோது பேராசிரியர் அவர்கள் அதன் தலைவராக விளங்கினார் திருவாவடுதுறை திருமந்திர மகாநாட்டிற்கும், திருவனந்தபுரம்

சைவசித்தாந்த மகாநாட்டிற்கும் இவரே தலைவராக இருந்தார். 1974-முதல் ஆழ்நிலைத் தியானத் தேசியக்குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினார். பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு தம்முடைய இறுதியான சில வருடங்களில் மகேஷ்யோகியின் தியானமுறையில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய சமய ஞானத்தையும் மனப்பக்குவத்தையும் நன்குணர்ந்த மகேஷ் யோகி இந்தியநாட்டின் தலைமைப் பதவியை தெ. பொ. மீ. அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இங்ஙனம் இவர் ஆற்றிய பொதுத்தொண்டுகளும் சமயப்பணிகளும் பலப்பல.

பேராசிரியர் அவர்களின் உள்ளம் எல்லாம் தமது அறிவுத் திறனையும் ஆய்வுத் திறனையும் பெருக்கிக்கொள்வதிலேயே இருந்தது. கல்லூரியில் பெற்ற ஆங்கிலக் கல்வியோடு மகா வித்துவான் கோ. வடிவேலு செட்டியார் அவர்களிடம் முறையாகத் தமிழ் பயின்று வித்துவான் புகுமுகத்தேர்வு, இறுதித் தேர்வு ஆகிய இரண்டையும் ஒருசேர எழுதி மாநிலத்திலேயே முதல்வராக வெற்றி பெற்ருர். தமிழ்ஒலியை ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டமும் பெற்ருர். ஆங்கிலம், தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம், மளையாளம், சமஸ்கிருதம், ஹிந்தி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்று 'பன்மொழிப் புலவர்' என்று பாராட்டுப் பெற்ற பேரறிஞராகத் திகழ்ந்தார்.

பேராசிரியர் அவர்கள் சங்ககாலம் தொட்டு இக்கால இலக்கியம்வரை அனைத்து இலக்கியங்களையும் கற்பதில் பேரார்வம் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழக நூல் நிலையம், சென்னை கன்னிமரா நூல்நிலையம் இரண்டிலும் இவருடைய கைபடாத நூலே இல்லை எனலாம். தாம் பயில்வதோடு நிற்காமல் தாம் பெற்ற அறிவுத்திறனை தம்முடைய மாணுக்கர்களுக்கும் புகட்டினுர். பேராசிரியர் அவர்கள் தத்துவம், இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கினார். ஒப்பியல் அடிப்படையில் வகுப்புகள் நடத்துவதில் அவருடைய திறன் குறிப்பிடத்தக்கது. மாணாக்கர்களின் ஆய்வு உணர்வுகளைத் தூண்டி பல்வேறு துறைகளிலும் ஆய்வு நடத்தத் துணைபுரிந்தார். அவரிடம் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றவரும், பி. ஏ. (ஆனர்சு),

எம். ஏ. பட்டங்கள் பெற்றவரும் பலப்பலர். எம்.ஓ.எல்., எம்.லிட். பி. எச்டி. ஆராய்ச்சிப்பட்டங்கள் பெற்றவர் பலர். திரு இ. அண்ணாமலை, திரு ப. அருணாசலம், திரு க. ஆறுமுகன், திருமதி இராசலட்சுமி, திரு எஸ். இராமகிருஷ்ணன், திரு ஆ. இராம சாமிப்பிள்ளை, திரு சொ. நா. கந்தசாமி, திரு கனகசபாபதி, திரு சச்சிதானந்தம், திரு செ. வை. சண்முகம், திருமதி சீதாபாய், திரு ந. வீ. செயராமன், திரு தா. ஏ. ஞானமூர்த்தி, திரு சுப. திண்ணப்பன், திரு ஆர். நடராசன், திருமதி நித்தியகல்யாணி, திருமதி பரமேஸ்வரி, திருமதி பாகீரதி, திரு டி. எஸ். மாணிக்கம் ஆகியோர் பேராசிரியர் அவர்களின் கீழ் பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர்களே. பேராசிரியர் அவர்கள் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட 42-க்கும் மேற் பட்ட நூல்களும் 90-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவை அவர்தம் கடல்போன்ற அறிவின் பரப் பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

சென்னை மாநிலக் கல்லூரியில் மூன்றாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து, பின்னர், இவருடைய திறனின் சால்பினை அறிந்து இணைவேந்தர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அழைத்ததின் பேரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1944-ல் தமிழ்ப்பேராசிரியராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1958-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி ஏற்றார். அச்சமயத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையைத் துவக்கி அதனை மொழியியல் உயர் ஆய்வுத்துறை யாக வளர்த்து தமிழகத்தில் மொழியியலுக்கு வித்திட்ட பெருமை பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களையே சாரும். மொழியியல் ஆராய்ச்சியால் அனைத்துலக ஒற்றுமை காணலாம் என்ற நோக்கம் இவர் ஆர்வத்திற்கு அடிப்படையாக அமைந்தது. ஒப்பியல் மொழிநூல், நாட்டுப்புற இயல் வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் வித்திட்டவர் இவரே. அமெரிக்க நாட்டிலும் தமிழைப் பரப்ப 1961-ல் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்று அங்கு தமிழ்க்கல்வியைத் துவக்கி வைத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கும் மொழியியல்துறைக்கும் தலைவராகப் பணியாற்றிய

காலத்தில் தமிழக அரசு 1966-ல் இவரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமித்தது. இன்றைய மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பல்துறையிலும் சிறந்து விளங்க அடிகோலியவர் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களே. 1973–74ல் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளராகப் பணியாற்றினார்.

தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் மடம் ஆகியவை இவருக்குப் பொன்னாடை போர்த்துப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தன தருமபுர ஆதீனம் இவருக்குப் 'பல்கலைச்செல்வர்' என்ற பட்டத் தையும், குன்றக்குடி திருவண்ணாமலை மடம் டாக்டர் அழகப்பச் செட்டியார் தலைமையில் 'பன்மொழிப்புலவர்' என்ற பட்டத் தையும் கேடயத்தையும், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை முன்னாள் முதலமைச்சர் காமராசர் தலைமையில் 'பெருந் தமிழ்மணி' என்ற பட்டத்தையும் பொற்பதக்கத்தையும் வழங்கின. 1958–ல் பூ. சா. கோ. கலைக்கல்லூரி பொன்னாடை போர்த்து பொற்கலன் வழங்கியது. அதே ஆண்டில் கோவை நன்னெறிக் கழகம் பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்தது. 1967-ல் மதுரைப் பல்கலைக்கழகமும் 1976-ல் இலங்கைப் பல்கலைக்கழகமும், 1979-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் டாக்டர் (டி. லிட்.) பட்டம் அளித்துப் பேராசிரியர் அவர்களைச் சிறப்பித்தன. 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று அவர்தம் மாணாக்கர்களின் போற்று தலுக்குரியவராகத் திகழ்ந்தார். 1977-ல் நடுவணரசு 'பத்ம பூஷண்' பட்டமும் 1978-ல் தமிழக அரசு கலைமாமணிப்பட்டமும் வழங்கிப் பாராட்டின.

தமிழ்க் கலைக்களஞ்சியப் பதிப்புக் குழுவிலும், தமிழ் வளர்ச்சிக் கழகத்திலும், தமிழ்க்கலை மன்றத்திலும், சாகித்ய அகாடெமியிலும், இந்திய மொழியியல் கழகத்திலும், திராவிட மொழியியல் கழகத்திலும் இன்னோரன்ன பல்வேறு மன்றங் களிலும் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய பெருமை இவருக்குண்டு. ஆண்டுதோறும் நாட்டின் பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் நாடெங்கு முள்ள பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களையும், ஆய்வாளர்களை

யும் ஒன்றுகூட்டி தமிழின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வரும் அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் துவக்கி வைத்தவர் பேராசிரியர் அவர்களே. தமிழகத்தில் மொழியியல் வளர்ச்சியை தன் இலக்காகக் கொண்டு செயலாற்றிவரும் அனைந்திந்தியத் தமிழ் மொழியியற்கழத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று தமது இறுதிக்காலம் வரை பணியாற்றினார்.

இங்ஙனம் வாழ்நாள் எல்லாம் பல்வேறு துறைகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பேராசிரியர் அவர்கள் 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 28-ஆம் நாள் இவ்வுலகை நீத்துச் சென்றார்.

தமது அயராத உழைப்பினாலும், அறிவின் சால்பினாலும் தமக்கென தனி ஒரு சிறப்பிடம்பெற்று ஒளிவீசி மறைந்த பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறக்க இயலாது. தமிழும் தமிழகமும் உள்ளவரை அவரது புகழ் நிலைத்து நிற்கும். அவர் தம் நினைவுமலராக இந்த இதழினை தமிழ் மொழியியல்கழகம் வெளியிடுகிறது.

டாக்டர் மீனாட்சிசுந்தரன் அவர்களின்

புத்தகங்களும் கட்டுரைகளும்

1929

கோயிலை இடிப்பதா? கொண்டு திருத்துவதா? ஸ்ரீ சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை.

இராமாயணப் போராட்டம் (குருடன் கனா, ஊமையன் உளறல்) ஸ்ரீ சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை.

1930

வள்ளுவரும் மகளிரும், ஸ்ரீ சாதுரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை.

1935

அன்புமுடி, நால்வர் புத்தக நிலையம், மதுரை.

1938

The Tamil Sounds, Madras University, Madras.

1941

'முத்தமிழ்' பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் *மணிவிழா மலர்*.

1944

கால்டுவெல் ஒப்பிலக்கணம்–அடிச்சொற்கள், சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடு, சென்னை.

சூளாமணி, பதிப்பாசிரியர், சென்னை.

1946

மனோதத்துவ சாத்திரம் (முதல் பகுதி), சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

The Tamil Plutarch, General Publishers Ltd., Colombo.

1948

'கடிகாரம்' *கலைக்கதிர்*, மலர் 1, இதழ் 6, கோயம்புத்தூர்.

'மயிலையும் குமரியும்' *கலைக்கதிர்*, மலர் 1, இதழ் 12, கோயம் புத்தூர்.

'மார்க்கோபோலோவும் மாபரும்' *கலைக்கதிர்*, மலர் 1, இதழ் 11, கோயம்புத்தூர்.

'ஜர்மானியர் கண்ட வள்ளுவர்' *கலைக்கதிர்*, மலர் 1, இதழ் 10, கோயம்புத்தூர்.

மனோதத்துவ சாத்திரம் (இரண்டாம் பகுதி) சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

1951

'Portuguese Influence Revealed by Tamil words', *Annamalai University Journal* Vol. XVI, Annamalainagar.

1952

எண் சுவடியா, பாட்டா?' *கலைக்கதிர்*, மலர் 4, இதழ் 2, கோயம்புத்தூர்.

'கம்ப நாடகம்' டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் *நினைவுமலர்*, விழாக்குழு.

'வலஞ்சுழியும் தென்புலமும்' *கலைக்கதிர்*, மலர் 4, இதழ் 1 கோயம்புத்தூர்.

1953

'The Tamil Script Reform' *Tamil Culture* Vol. II No. 1. Madras.

1954

'*தமிழா, நினைத்துப்பார்!*'' தெ. பொ. மீ. வெள்ளிவிழா வெளியீடு, சென்னை.

நற்றிணை நாடகங்கள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

"நாட்காலைக் கலையா பாட்டு?" *கலைக்கதிர்*, மலர் 6, இதழ் 1, கோயம்புத்தூர்.

நீங்களும் சுவையுங்கள், வசந்தம் பதிப்பகம், சென்னை.

வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

மகாபுராண அம்மானை, கிழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

1955

சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், தருமபுர ஆதீனம், தருமபுரம்.

பிறந்தது எப்படியோ, பாரி நிலையம், சென்னை.

'A Tamilian's Thought on a Singhalese Balasiksha' *Journal of Annamalai University Silver Jubilee.*

1956

'குழப்புதல் வேண்டாம்' *கலைக்கதிர் பயிற்சிமொழி மலர்,* மலர் 8 இதழ் 12. கோயம்புத்தூர்.

'பழமையே புதுமை' *கலைக்கதிர்,* மலர் 8 இதழ் 1, கோயம் புத்தூர்.

'புத்தர்நெறி தமிழ்நெறி' *கலைக்கதிர்,* மலர் 8 இதழ் 6, கோயம்புத்தூர்.

'வரிப்பாட்டு' *மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை மணிவிழா மலர்* சென்னை.

'Introduction' *இலக்கியச்செல்வி,* கழகம், சென்னை.

1957

'அன்பின் கொடிவிளக்கு' *பேராசிரியர் சுந்தரம்பிள்ளை விழா மலர்,* கழகம், சென்னை.

'காப்பியமும் வாழ்க்கை வரலாறும்' *கலைக்கதிர்,* மலர் 9, இதழ் 1, கோயம்புத்தூர்.

சம்பந்தரும் சமணரும், ருத்திரா பதிப்பகம், சென்னை.

'நிமிர்ந்து நின்றான்' *கலைமகள் கதம்பம்,* வெள்ளிவிழா வெளியீடு, கலைமகள் காரியாலயம், சென்னை.

'விடுதலையும் இலக்கியமும்' *கலைக்கதிர் விடுதலைப் போராட்ட மலர்,* மலர் 9, இதழ் 8, கோயம்புத்தூர்.

'Nasal vowels in Tamil' *Indian Linguistics*, Beschi Memorial volume, Insttute of Deccan College, Poona.

1958

'தமிழ் வளர்கிறதா?' *கலைக்கதிர்*, மலர் 10, இதழ் 1, கோயம் புத்தூர்.

Mullaippa:ttu - The Idyll of Jasmine Orient Longmans, Madras.

'The Tamil of Seventeenth century' *Indian Linguistics* Vol. XVII. Insttute of Deccan College, Poona.

'The Teaching of Tamil Grammar', *Tamil Culture*, Madras.

1959

'சிலப்பதிகாரத்தில் தேவந்தி ஏன்?' *சன்மார்க்க சபை பொன் விழா மலர்*, மேலைச்சிவபுரி.

'விஞ்ஞானமும் சமயமும்' *கலைக்கதிர்*, மலர் 11, இதழ் 1, கோயம்புத்தூர்.

'Linguistics and Tamil' *Madras Information Annual*, Madras.

'Pluta in Tamil' *Proceedings of All India Oriental Conference*, Bhuvaneswar.

'The so — called Inflectional Increments in Tamil' *Indian Linguistics Turner Jubilee* Vol. II Deccan college. Poona.

1960

'இந்திய மொழிகளில் தமிழ்மணம்' *கலைக்கதிர்*, மலர் 12 இதழ் 1, கோயம்புத்தூர்.

'The Tamil Dictionary on Historical Principles *Madras Information Annual*, Madras.

1961

'அனைத்துலகப் பொதுமகன்' *கலைக்கதிர்* மலர் 13 இதழ் 6, கோயம்புத்தூர்.

'ஆசிவகரும் சம்பந்தரும்' கழக ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர், கழகம், சென்னை.

கவிஞர் இரவீந்திரநாத தாகூர் நூற்றாண்டு விழா வெளியீடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

கானல்வரி, கலைக்கதிர் வெளியீடு, கோயம்புத்தூர்.

'சங்கப்பாடலும் சிலப்பதிகாரமும்' டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை வெள்ளிவிழாமலர், சென்னை.

சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கலைக்கதிர் வெளியீடு, கோயம்புத்தூர்.

சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை, பாரிநிலையம், சென்னை.

குலசேகரர், கலைக்கதிர் வெளியீடு, கோயம்புத்தூர்.

'திருவெம்பாவையில் வரும் நீராட்டு' தருமை கனகாபிஷேக விழா மலர், மாயூரம்.

'நற்றிணை' கலைக்கதிர், மலர் 13 இதழ் 1, கோயம்புத்தூர்.

Prof. T.P. Meenakshisundaran Sixty First Birthday Commemoration Volume–Collected Papers of Prof. T.P.M., Annamalai University, Annamalainagar,

Lectures on Saiva Siddanta, Annamalai University, Annamalainagar.

1962

'தமிழ்க்குழவி தமிழ் கற்க வேண்டாமா?' கலைக்கதிர் மலர் 14 இதழ் 1, கோயம்புத்தூர்.

'Indian Heritage and Barathi' *Essays on Barathi* (vol. II), Barathi Tamil Sangam, Calcutta.

'Koel Song' *Essays on Barathi* (Vol. II). Calcutta.

1963

'அப்பர் மனமாற்றம்' திருவாமூர் மகா கும்பாபிஷேக மலர், திருவாமூர் கும்பாபிஷேகக் குழு, திருவாமூர்.

'காந்தியுகம் வளர்த்த வீரவடிவம்' சர்தார் வேதரத்னம் அவர்கள் நினைவுமலர், கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம், வேதாரண்யம்.

'காப்பியக் கதையே கவிஞர் கதை' கலைக்கதிர், மலர் 15 இதழ் 1, கோயம்புத்தூர்.

'காளி–தமிழ்நாட்டில் வேட்டுவ வரி' ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மகா கும்பாபிஷேக மலர், மதுரை.

'தமிழ் இலக்கியம்' இன்றைய இந்திய இலக்கியம், சாகித்ய அகாடெமி, புதுதில்லி.

பாட்டிலே புரட்சி தொல்காப்பியர் நூலகம், சென்னை.

'Dr. Pope's Spirit of Universalism', Dr. G.U. Pope Commemoration Volume, Pope's College, Samperpuram.

1964

'கம்பராமாயணத்தைக் கற்க முடியுமா?' கலைக்கதிர், மலர் 16, இதழ் 1, கோயம்புத்தூர்.

'காப்பியம் தந்த சிற்பம்' தஞ்சைக் கலைக்கண்காட்சி, கலைக் கண்காட்சிக்குழு, தஞ்சாவூர்.

1965

'கல்விச்சிந்தனைகள்' 1965 சேகர் பதிப்பகம், சென்னை.

Prof. T. P. Meenakshisundaran Sixty Fifth Birthday Commemoration Volume – collected Papers of Prof. T. P. M., Annamalai University, Annamalainagar.

'*A History of Tamil Language*' Deccan Collage, Poona.

'*A History of Tamil Literature*' Annamalai University, Annamalai nagar.

'Saivism after the Imperial Cholas' அழகரடிகள் மணிவிழா மலர் குருகுலம் அழகரடிகள் மணிவிழாக்குழு, சென்னை.

1966

'அணிந்துரை' கவியரசர் பாரதி, பாண்டியன் அச்சகம், சிதம்பரம்

'இலக்கியப் புலமை சான்ற அரசியல் அறிஞர்' *கலைக்கதிர்*, மலர் 18 இதழ் 7, கோயம்புத்தூர்.

'ஒரு காணிக்கையும் ஒரு வேண்டுகோளும்' பேராசிரியர் ஆர். கே. *விசுவநாதன் சஷ்டி அப்த பூர்த்தி விழாமலர்*, சென்னை.

'தாமே கற்ற தமிழறிஞர்' *சிலம்புச் செல்வர் ம. பொ. சி. மணி விழா மலர்*.

'திருக்குறளில் பொதுநூற்கருத்துக்கள்' *தமிழ் உறவு ஆண்டு மலர்* தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை.

நாடகக் காப்பியங்கள், சேகர் பதிப்பகம், சென்னை.

'பயன்படும் வாரியார் பல்லாண்டு வாழ்க' *திருமுருக கிருபான ந்த வாரியார் அவாகள் மணிவிழா மலர்*, காங்கேயநல்லூர்.

'Service for Hindu Religion and Philosopy' *திருமுருக கிருபான ந்த வாரியார் மணிவிழக நினைவு மலர்*, திருமுருக கிருபானந்த வாரியார் உயர்நிலைப்பள்ளி, காங்கேய நல்லூர்.

The Pagent of Tamil Literature, Sekar Patippagam, Madras.

1967

'அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' *1967 தமிழ் வட்டம் ஆண்டு மலர்*, பாஸ்கர நிலையம். சென்னை.

'பாலே நடனம்' *சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர்*, பாஸ்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை.

'வாழ்க அ. சீனிவாசராகவன்' *'பேராசிரியர் அ. சீனிவாசராகவன் மணிவிழா*, மணிவிழா மலர்க்குழு, தூத்துக்குடி.

1968

'காந்தியும் நாமும்' *கலைக்கதிர் – காந்தியடிகள் நூற்றாண்டுச் சிறப்புமலர்*, மலர் 20 இதழ் 10, கோயம்புத்தூர்.

'திருவள்ளுவரும் இந்நாளைய கல்விக்கொள்கையும்' *'திருவள்ளுவர் திருநாள் விழா மலர்*, கழகம், சென்னை.

'பொருள்நூற்கருத்துகள்' *திருக்குறள் கனிகள்*, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை.

'Inscriptions and the History of Tamil Language' *Seminar on Inscriptions*, Books (India) Private Ltd., Madras.

1970

'காந்தியும் நாமும், *அண்ணல் காந்தி மலரஞ்சலி*, வானதி பதிப்பகம், சென்னை.

'Tamil and other cultures' *Third International Tamil Conference Seminar*, Paris.

1971

'உயர்நிலைக்கல்வி' *கலைக்கதிர்*, மலர் 23 இதழ் 9, கோயம் புத்தூர்.

'ஊசியின் காதில் ஒட்டை நுழைந்தது' 125–ஆவது ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

'குடிமக்கள் காப்பியம்' மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

'தமிழகத்திற்கு அப்பால் தமிழின் செல்வாக்கு' தில்லித்தமிழ்சங்க வெள்ளிவிழா மலர், தில்லித்தமிழ்ச் சங்கம், தில்லி.

தொல்காப்பியம்—சொல்லதிகாரம் பதிப்பு: டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்நாடு அரசு ஓரியண்டல் வரிசை எண் CL 8, தமிழ்நாடு.

'மாஸ்கோவில் திருக்குறள்' ஆராய்ச்சி, மலர் 3 இதழ் 1, பாளையங் கோட்டை.

'மொழியியல் வழியிலே இலக்கியச்சுவை' கலைக்கதிர், மலர், 23 இதழ் 1, கோயம்புத்தூர்.

'A Plea for fixing the age of Kampan', ஆய்வுக்கோவை தொகுதி 3, அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பு வெளியீடு, அண்ணாமலைநகர்.

Philosophy of Tiruvalluvar Tirumathi Sornambal Endowment Lectures on Tirukkural, University of Madras, Madras.

1972

'அவ்வையின் அவதாரம்' அவ்வை சண்முகம் மணிவிழா மலர், அவ்வையகம், சென்னை.

'தற்கால இலக்கியப் போக்கும் சங்க இலக்கியமும்', *கலைக்கதிர்*, மலர் 24, இதழ் 1, கோயம்புத்தூர்.

'விடுதலைக்குப் பின் தமிழ் இலக்கிய வளர்ச்சி' **கலைக்கதிர்** மலர் 24, இதழ் 8, கோயம்புத்தூர்.

'Is the Tamil Alphabet System an Adaptation' *Journal of Tamil Studies*, International Institute of Tamil Studies, Madras.

Tamil, Indian Council for Cultural Relations, New Delhi.

1973

'சீன ராமாயணம்' *கலைக்கதிர்*, மலர் 25, இதழ் 1, கோயம் புத்தூர்.

தமிழ் மணம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

'பாராட்டுரை' *மகா கும்பாபிஷேகச் சிறப்புமலர்*, திருப்பாதிரிப் புலியூர்.

'Some Peculiarities of the Tamil of the Viracoliyam Age' *வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலர்*, தமிழ்ச்சங்க வெளியீடு, சென்னை.

'Two Tolkappiyars' – **ஆய்வுக்கோவை** – தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, சென்னை.

1974

'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக்கட்டுரைகள் I. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

'கம்பன் ஒரு நோக்கு' கலைக்கதிர் வெள்ளிவிழா மலர், கோயம்புத்தூர்.

'கல்விச்செல்வர்' நா. மகாலிங்கம் பொன்விழா மலர் நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி.

'முன்னிலையில் நாம்' ஆய்வுக்கோவை-தொகுதி 6, பாண்டிச்சேரி அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, பாண்டிச்சேரி.

Advaita in Tamil, Madras University, Madras.

'ஜைன சமயத் தமிழ்ப் பெருங்காப்பியம்' திருக்கோயில், மாலை 17 மணி 3.

Foreign Models in Tamil Grammar, Dravidian Linguistics Association, University of Kerala, Trivandram.

தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

1975

'கடநிலைத் தியானம் பற்றி விஞ்ஞானம் என்ன கூறுகிறது?' கலைக்கதிர், மலர், 27 இதழ் 12, கோயம்புத்தூர்.

வாழும் கலை, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை.

'தகப்பன்' *Annals of Oriental Research, Silver Jubilee Volume*, University of Madras, Madras.

'The Structure of a few Proper Names in Tamil' ஆய்வுக்கோவை தொகுதி 7 பகுதி 2, நாகர்கோவில் தென் திருவாங்கூர் இந்துக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, நாகர்கோவில்.

1976

‘கடநிலைத் தியானம் பற்றி விஞ்ஞானம்’ *கலைக்கதிர்*, மலர் 28, இதழ் 1, கோயம்புத்தூர்.

‘கடநிலைத் தியானம் பற்றி விஞ்ஞானம்’ *கலைக்கதிர்*, மலர் 28, இதழ் 3. கோயம்புத்தூர்.

Tamil–A Bird's–Eye view, Makkal Nalvaalvu Manram, Madurai.

1977

தமிழ் மொழி வரலாறு (தமிழாக்கம்: ச. செயப்பிரகாசம்) சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை.

மொழியியல் விளையாட்டுக்கள் சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை.

Aesthetics of the Tamils (Golden Jubilee Publication) University of Madras, Madras.

Lectures on Some Aspects of Indian Social Philosophy (Golden Jubilee Publication), University of Madras, Madras.

1978

‘முன்னுரை’ *தமிழ் இலக்கிய வரலாறு*, சாகித்திய அகாடமி, புது தில்லி.

தேனிப்பு (ஆழ்நிலைத் தியானம்) சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

1979

‘உயிர்நிலைப்பாட்டு’ *கம்பன் மலர்*, தமிழுறவு வெளியீடு சென்னை.

1980

அன்னீத நாடகம், தில்லைவிடங்கன் மாரிமுத்து சர்வோதய இலக்கியப்பண்ணை, சென்னை.

1981

பத்துப்பாட்டு ஆய்வு (புறம்), சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, (மறைவிற்குப் பின்னர் வந்த வெளியீடு).

[இவை தவிர கலைக்களஞ்சியக் கட்டுரைகள் – 78.]

[மேலே உள்ள பட்டியலில் கண்ட சில கட்டுரைகள், நூல்கள் பற்றிய முழுவிவரம் கிடைக்கவில்லை; பட்டியலும் முழுமை யானதன்று].

மொழியியல் 4.1 & 2 (1980)

பேச்சு மொழியின் இலயமும் பாரதி கூட்டிய பெருமையும்*

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

0. சுப்பிரமணிய பாரதி ஒரு மக்கள் கவிஞர். சாதாரண பேச்சு மொழியையே அவர் தம் பாடலுக்கு மொழியாகக் கொள்ளுகின்றார். பாரதி காலம் வரை பேச்சு மொழியைப் பயன்படுத்தாதவையே பேரிலக்கியங்களாகக் கொள்ளப் பெற்றிருந்தன.

1. இரு நிலைகள்

1.1. **சங்ககாலம் :** தமிழிலக்கிய வரலாற்றில் இரு வகையான பாட்டு நிலைகளைக் காணலாம். அறிஞர்களின் கவிதைகளாகவும், நாட்டுப்புறப் பாடல்களாகவும் நம்மால் அவற்றைப் பிரித்துக் காண இயலும். காலப்போக்கில் கவிதை நடையும் மரபு வழிப்பட்டு நிற்கும் உயர்ந்த நடையைத் தொட்டுவிட்ட சங்ககாலக் கவிதைகளிலும் இந்த மரபு வழிப்பட்டு நிற்கும் நிலையைத் தெளிவாகக் காணலாம். ஐங்குறுநூற்றில் அக்கால நாட்டுப்புறப்பாடலின் தாக்கத்தை உணரலாம். நாட்டுப்புறப் பாடல்களின் கருத்துக்களை இலக்கிய மொழிவடிவில் கவிஞர்கள் வடித்திருப்பதை கலித்தொகை, பரிபாடல்

ஆகிய நூல்களில் காணலாம். சிலப்பதிகாரத்தில் இரு மாறுபட்ட நடைகளையும் தெளிவாகவே அறியலாம். எடுத்துரைக்கும் முகத்தால் அமைந்தவை இலக்கிய நடையாகவும், பிற இசைவடிவங்கள் எல்லாம் அக்கால நாட்டுப்புறப் பாடல்களின் இசையாகவும் காண முடிகின்றது.

1.2. **பல்லவர்கள்**: பல்லவர்காலச் சிற்றிலக்கியங்களான கலம்பகம் முதலியவற்றில் நாட்டுப்புறப் பாடல்களையும், நாட்டுப்புறக் கூறுகளையும் இலக்கிய வடிவமாக மாற்றும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. இந்த புத்திலக்கிய வடிவமும் காலப்போக்கில் மாறா நிலைபெற்றது. நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் பெரும் பகுதி நாட்டுப்புறப் பாடல்களின் சாயல்களாகவே விளங்கின. குறிப்பிட்டுக் காட்டக்கூடிய அளவில் மாணிக்கவாசகர் அவற்றின் பாதிப்புக்கு ஆளாகியிருந்தார். இயற்பா (இலக்கியம்) வுக்கும், சந்தமென வழங்கப்படும் இசைப்பாவுக்கும் இம்முறையில் நாம் வேறுபாட்டினைத் துணியலாம். இவ்வேறுபாடு இப்போதைக்கு நாலாயிரம் முதலிய வைணவப் பாடல்களோடு பொருத்தி விளக்கப் பட்டாலும், பிற பாடல்களுக்கும் இது அமைவதாகும்.

1.3 **பிற்காலம்:** அவ்வக்கால சராசரி மனிதன் மகிழ்ந்து இசைத்த நானாவிதப் பண்களையும் வேதாந்தப் பாடல்களின் தொகுப்பு முறையாக விளங்கும் தத்துவராயரின் பாடுதுறையில் காணலாம். அடங்கன் முறையை இலக்கிய நடையில் இயற்றிய ஆசிரியரே இதனையும் செய்திருக்கின்றார் என்பது வியத்தற்குரியது. தமிழனின் சுதந்திரம் பறிபோகத் தொடங்கியபோது, மிகச்சில இலக்கிய வாணர்களே அரசர்களையும், மடங்களையும் சார்ந்து நின்றனர். பல கவிஞர்கள் நாட்டுமக்களின்பால் தம் எண்ணங்களைத் திருப்பினர். அதன் விளைவாக, பாமர மக்களின் இசைவடிவங்கட்கேற்பவே பாடினர். பள்ளு, நொண்டி நாடகம், சிந்து என அவை மலர்ந்தன. ஆனால் அத்தகு கவிஞர்களால் கூட நாட்டுப்புறமக்கள் தாமே அமைத்துக் கொண்ட நாட்டுப்புறப் பாடல்களை உயர்ந்தவையாக மதிக்க இயலவில்லை. வழக்கப்படியே இலக்கிய நடையில் எழுதிக் குவித்தனர். எடுத்துக்காட்டாக, இப்போது புகழ் பெற்றிருக்கும் இராமநாடகக் கீர்த்தனையை எழுதிய அருணசலக் கவிராயரே

இலக்கிய நடையில் இயற்றிய சீர்காழிப்புராணம், அனுமார் பிள்ளைத் தமிழ் போன்றவற்றைக் கூறலாம்.

1.4. இராமலிங்கர்: ஆயின், பத்தொன்பதாம் நூற்றாண்டில் நன்கு அறிமுகமான முனியும் கவிஞருமான இராமலிங்கரைப் பெற்றோம். சித்தர்கள் கூறும் கருத்துக்கள் சாதாரண நிலைக்கும் உயர்ந்ததாக இருந்தும்கூட எப்போதும் நாட்டுப்புற நடையிலேயே எழுதினர். அதனால் அவர்தம் பாடல்கள் உயர்ந்த இலக்கியங்களாகக் கொள்ளப்படவில்லை. சித்தர்களின் அடியொற்றி வந்த இராமலிங்கர் தம் பாடல்களை சாதாரண இலக்கியத்தில் ஆனால் மதிப்புக்கெடாத பேச்சுவழக்கில் அதாவது பொதுநிலைப் பேச்சு வழக்கின் தரத்தில் இயற்றினார். இங்கிதமாலை போன்ற பல பாடல்கள் இலக்கிய நடையிலும் இயற்றியுள்ளார். இறைநிலை கலந்தவராக மாற மாற உலகளாவிய மதத்தைப் பாடும் சிறந்த கவிஞராக விளங்கினார். உயர் இலக்கிய நடையைக் காட்டிலும் பாமர மக்களின் சாதாரண பேச்சினிமையை விரும்பினரர். இசை வடிவங்களான கீர்த்தனை, கும்மி முதலியனவும் புனைந்தார். அவர் பாடல்களின் பெரும்பகுதி எண்சீர் விருத்தங்களே. சித்தர் பாடல்களும் இவ்வகையினவே. ஆயினும் இதிகாசம் அல்லது பேரிலக்கியம் படைக்குமளவுக்கு சாதாரண மனிதனின் பேச்சு இலயம் அவரை ஈர்க்கவில்லை.

1.5. கோபாலகிருஷ்ண பாரதியும் பிறரும்: பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலகிருஷ்ண பாரதியும் பிறரும் நாட்டுப்புற இலக்கியத்தாலும், நாட்டுப்புறப் பாடல்களாலுமே புகழ்பெற்றனர். ஆனால் கவிஞரும் அறிஞருமான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தனார் கீர்த்தனை மூலம் ஈர்க்கப்பட்டு எப்போதும் அடைந்திராத புதிய அனுபவம் பெற்றும் கூட, பேச்சு வழக்கினைப் பாடலில் அமைக்க மனங்கொள்ளாமல் இகழ்ந்துரைத்தார். சுப்பிரமணிய பாரதிதான் இராமலிங்கர், கோபாலகிருஷ்ண பாரதிதம் பாடல்களை இலயம் அறிந்து வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தினார்.

2. பாரதியும் சாதாரண நடையும்

2.1. இந் நடைபற்றிய பாரதியின் எண்ணம்: நாட்டுப்புறப்

பாடல்களை பாரதி எந்த அளவுக்கு அறிவார்? அவர் அப்பாடல் களைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம் யாது? என ஆராயும்போது, நல்வாய்ப்பாக சங்கீத விஷயம் என்ற கட்டுரையைக் காண நேர்ந்தது. முதல் தரமான இசையைப்பற்றி ஆராய்ந்த பின்னர் நாட்டுப்புறப் பாடல்களாகவோ அல்லது எளிய இசையாகவோ கருதக்கூடியவற்றைக் குறிப்பிடுகின்றார். திருமணம் போன்ற சமூக நிகழ்ச்சிகளில் நாட்டுப்புறப் பெண்களால் பாடப்பெறும் பாடல்களே முதலில் அவர் நினைவுக்கு வருகிறது. கும்மிப்பாட்டு, பல்லிப்பாட்டு, கிளிப்பாட்டு போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இனிமையான இசையை இவை நமக்குத் தருகின்றன என முடிக்கின்றார். மேலை நாட்டு இசையை உள்நுழைய விடுவதையும், அதில் காணும் கீழ்மையையும் கண்டிக்கின்றார். நாட்டுப்புறப் பாடலின் தாக்கம் திருவாசகத்தில் காணப்படுவதையும் குறிப்பிடுகின்றார். நாட்டுப் புறப் பெண்களின் பாடல்களை வகைப் படுத்துகின்றார். நலங்கு, பத்யம், ஊஞ்சல், ஓடம் முதலியன சேர்ந்த கல்யாணப் பாட்டை முதல்வகையாக்குகின்றார். ஒரு செயலோ அல்லது நடனமோ உள்ள கும்மி முதலான பாடல்களை இரண்டாம் பிரிவிலும், அம்மானை, தூது, மாலை, சோபனம் போன்ற எடுத்துரைக்கும் முகமாய் அமைந்த நீண்ட கதைப் பாடல்களை மூன்றாம் பிரிவிலும், தாலாட்டு, விளை யாட்டுப் பாடல்கள், ஜாவளி, கீர்த்தனை போன்ற பிறவகை இசைப் பாடல்களை நான்காம் பிரிவிலும் அமைத்து வகைப்படுத்துகின்றார்.

2.2. **அவற்றைப் பற்றிய அவர்தம் திறனாய்வு:** நெல், எலு மிச்சை போன்றவற்றைப் பயிரிடும் தொழிலாளர்தம் பாடல்களையும் பாரதி ஆழ்ந்து பயின்றிருக்கின்றார். நாடோடிகளாய் கைரேகை பார்த்தும், கயிற்றில் நடனமாடியும் திரியும் மலைநாட்டு மக்களின் பாடல்களையும் கேட்டிருக்கின்றார். பல்வேறு தொழில் புரியும் தொழிலாளருக்கேற்ப பலவித இசைவடிவங்கள் உள்ளன என் கின்றார் பாரதி. மனத்தை மகிழவைக்கும் பல்வேறு இலயங்களை எடுத்துக்கூறி அவற்றைப் போற்றிக் காக்க வேண்டிய கடமைக் காக முறையிடுகின்றார். கொச்சை மொழிகளும் ரசக் குறைவும் மலிந்த பாட்டுக்கள் உள என்பதை ஒப்புக் கொள்ளும் அவர், அத்தகு குப்பைக் குவியல்களுக்கிடையில் விலை மதிப்பற்ற மாணிக்கங்களும் இருப்பதைச் சுட்டுகின்றார். அவர் சில எடுத்துக்

காட்டுகளைத் தருகின்றபோது கண்ணீர் வழிகின்றது. ஒப்பற்ற முத்தான சொற்கள் அவற்றுள் இருப்பதுவும் உறுதிப்படுகின்றது.

2.3. பாரதியின் கருத்துரை: பாரதியின் போக்கைப் புரிந்து கொண்டால்தான் தமிழ்ப் பாட்டில் பாரதி அறிமுகப்படுத்திய மாற்றத்தை நம்மால் எளிதில் உணர்ந்து கொள்ள இயலும். பண்பாடு, இலக்கியம், இசை முதலியவற்றின் வளர்ச்சிக்கு அரசு ஆதரவு இல்லையே என்ற மக்களின் குறையை அவர் அறிவார். இங்ஙனம் குறை கூறுவதைக் காட்டிலும் குறைக்குக் காரணமாக இருந்த சூழலை அவர் வரவேற்றார். கவிஞர்கள் சாதாரணமாக மக்களைச் சார்ந்திருக்க வேண்டும் என அறிவுறுத்துகின்றார். மக்கள் ஆதரவு சிறியதாக இருந்தபோதிலும், தனிமனித ஆதரவை விட வலுவுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றார்.

2.4. பாரதியும் குடியாட்சியும்: குடியாட்சியிலும் சுதந்திரத் திலும் நம்பிக்கையுடையவர் பாரதி. அதனால் பாமர மக்களின் பேச்சு மொழியின் இறைத்தன்மையை உண்மையாக நம்புவதில் வியப்பேதுமில்லை. ஆயின் கீழ்மையான மொழியில் எழுத அவர் விரும்புகின்றார் என்பது இதன் பொருளல்ல. முன்னரே கூறியபடி அதனை எதிர்க்கின்றார். சாதாரண பேச்சு மொழியின் இலயத்தைப் பற்றிக் கூறும்போது அம்மொழியின் இயல்பு பற்றியும் கூறியாக வேண்டும். அதனை தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வழங்கும் பொதுவானதும், படித்த, படிக்காத மக்களுக்கும் பொதுவானதுமான பேச்சு மொழியின் செம்மாந்த நடை என்றுகூடக் கூறலாம்.

2.5. பிற பாடல்களில் பயனில்லாமை: பாரதியுடைய பல பாடல்கள் பழைய இலக்கிய நடையிலேயே அமைந்தவை. சந்திரிகை முதலியவற்றில் ‘யாணர்’ போன்ற வழக்கிழந்த சொற்களைக் கையாளுவதைச் சான்றாகக் காட்டலாம். ஒரு பா ஒருபஃது, நவ ரத்தின மாலை, நான்மணிமாலை முதலிய பழைய இலக்கிய வகை களையும் கூட இயற்றியிருக்கின்றார். இலக்கிய நடையில் பாடினா லும் அவர் மெல்ல மெல்ல தமிழ்நாட்டில் வழக்கத்திலிருக்கும் புதிய பேச்சு மொழியைப் பயன்படுத்தினார். அதுவே அவர்தம் மொழி நடையாகவும் இருந்தது. தற்கால இளைஞரின் எழுச்சி மிகு பேச்சாக பழைய இலக்கிய வடிவங்கள் இல்லாமையால் மக்களைக் கவர

வில்லை என்றே காரணம் கூறலாம். ஆனால், அழகு, மதிப்பு, ஆழம் முதலியவற்றுக்கும் மேலாக நம்முள்ளே உணர்ச்சியைத் தூண்டவல்லதாகவும் அமைந்து, அது ஒரு கால கட்டத்தை உரு வாக்கியுள்ளது. இனி அக்காலகட்டம் நம்முடையதாகக் கொள்ள இயலாது. அவற்றைக் கண்டு வியக்கலாம்; போற்றலாம்; வணங்க லாம்; அவற்றை நம்முடைய மகிழ்ச்சிக்கும், துன்பத்திற்கும், எதிர் பார்ப்புக்கும், ஏமாற்றத்திற்கும், குறிக்கோள்கட்கும், நடைமுறைக்கும் ஏற்ற வடிவங்களாகக் கொள்ள இயலாது. இராமலிங்கரின் பாடல் களிலும் நாட்டுப்புறப் பாடல்களிலும் இவற்றை இனங்காணலாம். பாரதி இத்தகு பாடல்கள் மூலம் செய்திகளை வெளிப்படுத்தும் மறை வழியைக் கண்டுகொண்டார். சில வேளைகளில் இதனை மறந்து, வேண்டாத இலக்கியச் செம்மொழிகளை கீர்த்தனை முதலியவற்றில் தமிழாகவோ வடமொழியாகவோ பயன்படுத்தியுள்ளார். எடுத்துக் காட்டாக 'பூலோக குமாரன்' போன்ற பாடல்களைக் காட்டலாம். அவை மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளன. கீர்த்தனைகள் பலவும் எழுதியுள்ளார். அவருடைய பெரும்பாலான பாடல்கள் சிந்து, கண்ணி, ஆனந்தக் களிப்பு, காவடிச் சிந்து, பள்ளு முதலிய வடிவங் களாகவே அமைந்துள்ளன. குழந்தைகூட இந்தப் புலவனின் இசையையும் இலயத்தையும் உணரும்.

2.6. **நாட்டுப்பற்று என்னும் புதியகரு:** பாரதியின் கால கட்டத்தில் பரவி இருந்த புதிய உணர்ச்சிப் போராட்டமே, பாடல் களுக்குக் கருவாய் பாரதியால் அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டுப் பற்றினை உணர்த்தும் பாடல்கள் அல்லது நாட்டுப்பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்குப் புதியவை. பாரதியாலும், பிறராலும் அவை விரிவு பெற்றன. அரசனிடம் நன்றி பாராட்டும் முகத்தான் அமைந்த பாடல்களில் நாடு, பண்பாடு, மதம் பற்றிய கருத்துக்கள் இருந்தன. தேசியப்பாடல்களிலோ நாட்டுக்கும், மக்களுக்கும் நன்றியுடன் இருப்பதையே காணலாம். விடுதலைப்போரில் மக்களிடமும், சாதாரண மனிதனிடமும் இவற்றையே வலியுறுத்தினர். அது தெளி வாகவும் விளங்கியது. பண்பாட்டின் பெருமையும், மொழிப் பெருமையும் வெளிப்பட்டன. கடந்தகால நினைப்புகளின் பெருமை யையும் கூட காணமுடிகின்றது. கடந்தகாலக் கனவை நினைவு படுத்துவனவாக மட்டும் அமையாமல் நிகழ்காலத்திலும் எதிர்

காலத்திலும் உணர்ச்சியைத் தூண்டுவதாகவும் அமைந்துள்ளன. மொழியும் பண்பாடும் தனித்துப் பிரித்துப்பார்க்கப் பட வேண்டியவை அல்ல. சாதாரண மனிதன் புண்ணிய பூமியைக் கயிலாயத்திலோ வைகுந்தத்திலோ காண வேண்டியதில்லை. அவனைச் சுற்றியுள்ள மரங்களிலும், வயல்வெளிகளிலும், ஆறுகளிலும் காணலாம். தெய்வீக மொழி, பனை ஓலைகளில் மட்டும் எழுதப்பெற்றதில்லை. பெண்களின் பாடல்களிலும், குழந்தைகளின் ஆடல்களிலும், திரும்பத் திரும்ப அடிக்கடி கூறப்படும் பழமொழிகளிலும், சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலும் கூடத் தெய்வீக மொழியைக் காணலாம். பாண்டிய சோழ அரசுகள் மட்டுமல்ல. இறையுணர்வும் கூட மனிதனுக்கும் மொழிக்கும் இடையில் ஓர் இடைவெளியை உண்டாக்கவில்லை. எல்லோரும் இந்நாட்டு மன்னர்; இறைமையை நாம் உணருகின்றோம். மண்துகளிலும், ஆணிலும், பெண்ணிலும், சாதாரண வாழ்விலும், நண்பர்களிடையேயும், ஆசிரியருள்ளும், தலைவருள்ளும், ஏன் கடைநிலை ஊழியர்களிடமும் கூடக் கடவுளைக் காணலாம். புதிய இந்தியக் குடியரசின் மதம் இதுவென்று கண்ணன் பாட்டில் பாரதி பாடுகின்றார். பாட்டில் பதிந்த இந்தப் புதிய கருத்தும், புதிய போக்கும் புதிய இலயத்தையும், யாப்பையும் ஏற்றுக்கொண்டதில் வியப்பேதுமில்லை. இவை பழைய கருவைப் புதியநோக்கில் உணர்ந்ததாகக் கொள்ளலாம். மக்களின் தூய்மையும், பெருமையும் புதியனவாகத் திரும்பக் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இரண்டும் உணர்ச்சியாலும், வெளிப்படுத்தியமையாலுமே அறிந்துகொள்ள முடிந்தவையாயின.

2.7. **மறுமலர்ச்சி;** யாப்பின் மறுமலர்ச்சி சமுதாய மறுமலர்ச்சிக்குக் கட்டியங் கூறுவதாய் அமைந்தது. பாரதியின் ஞானக்கண் விடுதலைப் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே விடுதலை கிடைத்துவிடும் என்பதை அறிந்திருந்தது. சுதந்திரப்பள்ளு என்ற பாடலில் இதனைப் பாடி மகிழ்ந்தார். 1947 ஆகஸ்டு பதினைந்தில் விடுதலை பெற்ற அன்று இப்பாடலைப் பாடி மகிழ்ந்தோம். முதியவரோ, இளைஞரோ, ஆணோ, பெண்ணோ, படித்தவரோ, பாமரரோ, பணக்காரரோ, ஏழையோ எவராயினும் ஒவ்வொரு இந்தியனும் பாடவேண்டிய பாடலிது. அந்தப் பாடல், நிலத்தில் அடிமைத் தொழிலாளியாய்ப் பாடுபடும் பள்ளனின் பேச்சு மொழியாய் அமைந்திருந்தது. இதன் தத்துவம் நாமெல்லாம் இந்தப் புனித

மண்ணின் ஒரேவகை ஊழியர்கள் என்பதனை எண்ணிப் பள்ளைப் பாடுதல் வேண்டும் என்பதாகும். சுதந்திரத்தையும், விடுதலையையும் வெளிப்படுத்தியபின் சமத்துவத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம். அன்னை இந்தியாவில் காணும் இந்த உறவுமுறை நம்மை ஒரு பெருங் குடும்பமாக எண்ண வைக்கின்றது.

2.7.1. **காவிய யாப்பமைப்பு:** பாமர மனிதனின் இலயமாகவே தன் பாடல்களை பாரதி உருவாக்கியமை முதன்மையாகக் கருதத் தகும். பாரதியின் காவியமான பாஞ்சாலி சபதத்தின் இசையாகவும் இது ஏற்கப்பட்டுள்ளது. காவியம் எப்போதும் வெவ்வேறு இயக்கமும், சூழலும் பெற்றிருப்பதால் பல்வேறு யாப்புகளும் தேவைப்படுகின்றன. அந்த வகையில் பாரதி கண்டெடுத்தது பொதுவான இலயமாகும். இத்தகு மறைமொழிகளையெல்லாம் பாரதி பாஞ்சாலி சபதத்தில், அழகாக வெளிப்படுத்துகின்றார். எனவே, உண்மை அழகையும், பாடலின் ஆழ்ந்த கருத்தையும் அறிந்துகொள்ள பாரதியின் பாவமைப்பை ஆராய வேண்டுவது இன்றியமையாததாகும்.

• பேராசிரியர் தெ.பொ.மீ. யின் **"The Rhythm of the Common Speech — Its Glorifications by Bharathi" (Papers on Linguistics and Literature, Annamalai University** 1965. பக். 79-86) என்ற கட்டுரையின் தமிழாக்கம்.
தமிழாக்கம்: சா. வளவன்.

துணை நூல்கள்

அருணாசலக் கவிராயர், 1911, **இராம நாடகம்**, பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை.

———, **சீர்காழித் தல புராணம்**, ஜீவரட்சமித்ர அச்சுக்கூடம், சென்னை.

இராமலிங்கர், 1964 **திரு அருட்பா**, வள்ளலார் பதிப்பகம் சென்னை-17.

இளங்கோவடிகள், 1964 **சிலப்பதிகாரம்**, பதிப்பு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், சென்னை.

ஐங்குறுநூறு, 1957 மர்ரே & கோ., சென்னை.

கலித்தொகை 1957 மர்ரே & கோ., சென்னை

சுப்பிரமணியபாரதி 1962 **பாரதியார் கட்டுரைகள்,** அருணா பதிப்பகம், மதுரை.

——— 1964 **பாரதியார் கவிதைகள்** பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், 1962 பதிப்பு, இராமகிருஷ்ண முதலியார், சென்னை.

பரிபாடல், 1957 மர்ரே & கோ. சென்னை.

மாணிக்க வாசகர், 1964, **திருவாசகம்** திருவாவடுதுறை மடம்

மொழிபெயர்ப்பு விளக்கம்

மொழிபெயர்த்தென்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது. அதுவுந் தமிழ்நூலுள் வழிநூற்கு மரபாமென்றவாறு. **அதர்ப்படவென்பது,** நெறிப்படவென்றவாறு; நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும்; தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் **தமிழாக்கும் ஆரியர்க்குமென்பது.** மொழிபெயர்த்தெனவே, பொருள் பிறழாமை பெற்றாம்.

டாக்டர். **இராம.** சுந்தரம்

ஆதாரம்: **தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை**

சென்னை, 1972

தமிழ், ஜப்பானிய மொழிகளுக்கிடையில் ஒற்றுமை

ஜப்பான் கருஷின் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் திரு சுசுமோ ஓனோ அவர்கள் மேற்கொண்ட தமிழ் — ஜப்பானிய மொழிகளின் ஒப்பாய்வு தமிழ்மொழிச் சொற்கள் எனக் கருதப்படக்கூடிய 330 சொற்கள் ஜப்பானிய மொழியில் உள்ளதாகத் தெரிவிக்கிறது.

ஜப்பானிய மொழியிலும் தமிழிலும் 500 சொற்கள் தம்முள் ஒத்திருப்பதைத் தாம் கண்டதாகவும் ஆனால் பின்னர் அவருடைய இரு தமிழ் நண்பர்கள் அவற்றில் சில சொற்களை நீக்கிவிட்டு 330 ஆகக் குறைத்ததாகவும் திரு. ஓனோ தெரிவித்தார். மேலும் அவர் இந்த 330 சொற்களில் பெரும்பாலானவை இன்று வழக்கிலில்லை என்று கூறினார்.

திரு ஓனோ ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையில் உள்ள சில ஒற்றுமைகளை எடுத்துக்காட்டி விளக்கினார். ஜப்பானியச் சொல் **varru** 'தவறி விழு' என்று பொருள்படும். இது தமிழ் 'வழு' என்ற சொல்லிலிருந்து வந்திருக்கக் கூடும். இந்த இரு மொழிகளிலும் 'தவறுசெய்' என்ற பொருளையும் தருகிறது. இதுபோன்றே, **nikki** அல்லது **nikko** என்ற ஜப்பானியச் சொல் அன்பு நெஞ்சம் அல்லது அன்பாக இருத்தலைக் குறிக்கிறது. இதனோடு தொடர்புடைய தமிழ்ச்சொல் 'நெகிழ்'. மேலும் சில சொற்கள் **kiru**- கீறு (வெட்டு), **annya** – அண்ணா (தமிழில் மூத்த சகோதரன்), **akka** – அக்கா (தமிழ், ஜப்பான் இரு மொழிகளிலும் மூத்த சகோதரி)

திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் கள ஆய்வு செய்துள்ள திரு ஓனோ அவர்கள் தமிழ் – ஜப்பானியப் பழங்கதைகள், பழமையான நாகரிகம், சமயநெறி ஆகியவற்றில் ஒற்றுமை காணப்படுவதாகக் கூறினார். ஆகவே, சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே இரு நாடுகளுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது அவர் கருத்து. ஆயினும் எப்படி இந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்று அவரால் ஒன்றும் சொல்ல இயலவில்லை.

இந்தியன் எக்ஸ்பிரஸ்
சென்னை, 5—10—1980.

மொழியியல் 4.1 & 2 (1980)

கிளை மொழியியல்: கிளைமொழி அகராதி

கோ. சீனிவாசவர்மா

கிளைமொழி அகராதி என்பது, ஒரு மொழியில் உள்ள பல கிளை மொழிகளில் உள்ள சொற்களை, அவைகளின் வடிவம், பொருள் ஆகிய ஒப்புமை அடிப்படையில் முறையாக தொகுத்தளிக்கும் நூல்.

ஒரு மொழியில் பல வட்டாரக் கிளைமொழிகள், சமுதாயக் கிளைமொழிகள், தொழில் அடிப்படையில் அமைந்த கிளை மொழிகள் சாதிக் கிளைமொழிகள் உள்ளன. இக்கிளை மொழிகளில் உள்ள சொற்கள் பல வடிவானவை, வெவ்வேறு வேர்ச் சொற்களிலிருந்து உருவானவை, பிறமொழிச் சொற்கள், பல வேறுபட்ட பொருளைத் தருவன என்ற முறையில் உள்ளன. கிளைமொழி அகராதி, அச் சொற்களைப் பொருள் அடிப்படையில் ஒரு கிளை மொழியிலுள்ள சொல்லுக்கு இணையான பிற கிளைமொழிச் சொற்கள் என்னென்ன என்பதையும், ஒரு சொல் எந்தெந்த பொருளில் வேறு கிளைமொழியில் வழங்கிவருகின்றது என்பதையும் விளக்கும். இக்கட்டுரையில் வட்டாரக் கிளை மொழிகளிலிருந்து மட்டுமே எடுத்துக்காட்டுகள்

கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் சாதி அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் கூடக் கிளைமொழி அகராதி உருவாக்க முடியும். அவைகள் தயாரிக்கப்படும்பொழுது மேலும் சில உத்திகளைக் கையாளவேண்டும்.

கிளைமொழி அகராதி கருத்துப் பரிமாற்றத்திற்கும், வட்டார மொழியில் உள்ள சொற்கட்கு இணையான நிலைபேறு பெற்ற சொற்களையும், பொதுமைச் சொற்களையும் அமைக்கவும் வழிவகை செய்யும். முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகியவைகளில் வட்டாரச் சொற்களின் மூலம் விளக்கம் கொடுக்கும் பொழுது அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றனர். புரிந்துகொள்ளும் அளவும் அதிகமாகிறது; கருத்துப் பரிமாற்றம் எளிதாக ஏற்படுகிறது. மேலும் பழைய ஓலைச் சுவடிகள், கல்வெட்டுக்கள், நாட்டுப்புறப் பாடல்கள், பழங்கதைகள், விடுகதைகள் முதலியவைகளில் வரும் சொற்கட்கு எளிதில் பொருள் புரிந்து கொண்டு நல்ல தகுதியான விளக்கங்களைப் பெறமுடியும். இத்துறை தமிழ் மொழியின் சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு வலுவூட்டும். எல்லாம் தமிழால் முடியும் என்போருக்கு இஃது ஒரு கருவூலமாக விளங்கும். மொழி வளம்பெற, பாடநூல்கள் வெளியிட, கருத்துப் பரிமாற்றம் எளிதில் ஏற்பட ஒருவரை யொருவர் புரிந்துகொள்ள இத்துறை பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

'கிளைமொழி அகராதி' என்பது தமிழ்மொழிக்கு புதியதுறையாகும். தமிழ்மொழியில் 'அகராதி' என்பது பழைய பாரம்பரியத்தின் புதிய வடிவமாகும். 'நிகண்டுகள்' சொற்களின் பொருளை விளக்குவனவாக செய்யுள் வடிவில் அமைந்திருந்தன. மேனாட்டாரின் வருகையால் அகராதி—குறிப்பாக 'சதுரகராதி' என்பது முதன் முதலில் வெளி வந்தது. அகராதி என்ற சொல்லை 'அகர முதலி' என மொழிபெயர்த்தும் கூறுவர். ஆயினும் அகராதி என்ற சொல்லே பெரு வழக்கில் உள்ளது. இதுவே நிலைபேறு பெற்ற சொல்லாக வழங்கியும் வருகின்றது. அகராதியில் அகர வரிசையில் சொற்கள் அமைக்கப்பட்டு, அச்சொல்லின் பொருள்கள் கொடுக்கப்படும். தனித்தன்மை பெற்ற அகராதியில் சொல்குறிக்கும் பொருளின் வடிவம், வரைபடம், அச்சொல் இலக்கியங்களில் வந்துள்ள இடங்கள், மேற்கோள்கள் முதலிய

களுடனும் அமைக்கப்பட்டிருக்கும். மற்றும் வேறு வடிவமைப்புகளிலும் அகராதிகள் வெளிவந்துள்ளன. வேர்ச்சொல் அகராதி, எதிர்ப்பத அகராதி. இருமொழி அகராதி, நான்குமொழி அகராதி (நான்குபாஷை ஒக்க புலேரி) என்பன அவைகளில் சில. வேர்ச்சொல் அகராதியில் ஒரு மூலமொழியிலிருந்து தோன்றிய சொற்கள் அவைகளின் வடிவ ஒற்றுமை, வேற்றுமை, சொல்லமைப்பு' பொருள் ஆகியவைகளைக் கொண்டு தொகுத்து வரிசைப்படுத்தப் பட்டிருக்கும். இதில் குறிப்பிட்டுள்ள மொழிகள் அனைத்தும் ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவை. இவைகட்கு அடுத்த நிலையில் உள்ளவை இருமொழி அகராதிகள். பிறமொழியாளர்கட்கும், மாணவர்கட்கும் இவ்விருமொழி அகராதிகள் பெரும்பயன் நல்கி வருகின்றன. தெரிந்த ஒருமொழியின் சொற்களுக்கு இணையான அயல்மொழிச் சொற்களை இவை தருகின்றன. ஆதலால் மொழி கற்போருக்கும், கற்று, பயன்படுத்துவோருக்கும் இருமொழி அகராதிகள் பெருமளவில் துணை செய்கின்றன. வரலாற்று அடிப்படையிலும் அகராதிகள் அமைக்கப்படுவது வழக்கம். இருமொழி அகராதிகளில் மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்ததாகவோ அல்லது வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்ததாகவோ அமையலாம். எடுத்துக் காட்டாக தமிழ் - மலையாளம், தமிழ் - தெலுங்கு அகராதிகள் ஒரே குடும்பமொழி அகராதிகள்; மாறாக தமிழ் - ஆங்கிலம், தமிழ் - இந்தி, தமிழ் - பிரெஞ்சு ஆகியன வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த அகராதிகள்.

கிளைமொழி அகராதி - அமைப்புமுறை

சொற்கள் அகரவரிசையில் தொகுக்கப்பட வேண்டுமா? அவ்வாறானால் எந்தக் கிளைமொழியின் சொற்கள் அகராதிக்கு அடிப்படைச் சொற்களாக அமையும், அந்தக் கிளைமொழியின் சொற்களுக்கு இணையான பிற கிளைமொழி வடிவங்கள் என்னென்ன என்பதை வகைப்படுத்த வேண்டும். அல்லது பொருள் அடிப்படையில் சொற்களை வகைப்படுத்தி அமைக்க வேண்டுமா? கிளைமொழியில் சேகரிக்கப்பட்ட அத்தனைச் சொற்களுமே அகராதியில் இடம் பெற வேண்டுமா அல்லது ஆய்வாளரின் கருத்திற்கேற்ப சிலவற்றை ஒதுக்கிவிட்டு ஏனையவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளலாமா? இம்முடிவினால் அகராதியின் சிறப்பு குறையுமா? குறையாதா?

டாக்டர் பி. எச். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெலுங்கு தொழில் கிளைமொழிகளைப் பற்றிய ஆய்வில் தாம் மேற்கொண்ட கிளை மொழி அகராதி அமைப்பு முறையை நன்கு விளக்கியுள்ளார். பல வட்டாரக் கிளைமொழிகளின் சொற்களைத் தொகுக்கும்பொழுது அவைகட்கான குறிப்புகள், மேற்கோள்கள், வருமிடங்கள் ஆகியன பற்றிய செய்திகள் எங்கெங்கு எவ்வாறு சேர்க்கப்பட வேண்டும்? சொற்களின் பொருள்களை எவ்வாறு கண்டறிய வேண்டும்? அவை களின் அடிப்படை யாது? இவைகளைப்பற்றி இவண் காண்போம்.

i) பொருள் அடிப்படையில் சொற்களைப் பிரித்தல். ஒரு தலைப்பின்கீழ் வரும் சொற்கள் ஒன்றுக்கொன்று ஏதேனும் ஒரு முறையில் தொடர்புடையதாக இருக்கும். அப்பகுதியில் வரும் சொற்கள் அகர வரிசையில் அமையும். இக்கட்டுரையில் சொற்கள் தென்மாவட்டங்களிலிருந்து ஆரம்பித்து வடக்கு நோக்கி ஏறும் முனையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் சொல்லுக்கும் முன்னால் உள்ள எண், அக்கிளை மொழியைக் குறிக்கும். இம் முறையில் ஒருவர் தமக்குத் தேவையான துறையில் உள்ள சொற்களை மட்டும் படிக்க விரும்பினால் அத்துறையினை மட்டும் எளிதாக இனம் கண்டு கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் அச்சொல் வழங்கப்படவில்லையானால், எண்ணுக்குப் பக்கத்தில் ஒரு சிறு கோடு அந்த இடத்தை நிரப்பும். குறிப்பிட்ட கிளைமொழிச்செய்தி ஆய்வாளருக்கு கிடைக்கவில்லை என்றால், அந்த எண் விடப்பட்டி ருக்கும்.

ii) அகராதியில் உள்ள சொற்கள் அனைத்திற்கும் ஓர் அகர வரிசைத் தொகுப்பு, நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டு, ஒவ்வொரு சொல்லும் எந்த எண்ணால் குறிக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் கொடுக்கப்பட்டிருக்கும்.

iii) களப்பணியில் சேகரிக்கப்பட்டுள்ள எல்லா சொற்களுமே அகராதியில் இடம் பெறவேண்டும். இஃது அகராதியின் சிறப்பை மேலும் வளர்ப்பதோடு வருங்காலத்தில் அவைகட்கு இணையான சொற்களைக்கண்டு பிடிக்க, மாற்றங்களை அறிய, பெரிதும் துணை செய்யும்.

iv) ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள், அச்சொற்கள் ஒவ்வொன்றும் வழங்குமிடங்கள் ஆகியவற்றைத் தொடர்பு படுத்தி, மேற்கோள்காட்டி, அகராதிக்குள் வருமிடம் குறிப்பிட்டு விளக்கம் தரவேண்டும். கிளைமொழி அகராதியின் சிறப்பு, அதன் அமைப்பு, சொற்களின் வடிவம், அவை வழங்கும் இடங்கள், குறிக்கும் பொருள்கள் ஆகிய செய்திகளைத் தருவதில்தான் உள்ளது. மேலும் ஒரே வடிவத்தை உடைய சொல் வெவ்வேறு பொருளிலும் வழங்கும். அதனையும் அகராதி விளக்கும். இக்கட்டுரையில் அமைக்கப்பட்டுள்ள கிளைமொழி அகராதியில் சொற்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் சொல்லின் வரிசை எண், கருத்து, எழுத்து மொழியில் வழங்கும் சொல், அதன் கீழே ஆறு வட்டாரக்கிளை மொழிச் சொற்கள் எண்கள் 1,2,3,4,5,6 என அமைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்கள் முறையே

1. கன்னியாகுமரி
2. மதுரை
3. திருச்சி
4. தென்னாற்காடு
5. செங்கல்பட்டு
6. கோவை மாவட்டங்களைக் குறிக்கும்.

50 சொற்கள் ஆறு தலைப்பின் கீழ் அகர வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை

i) உறவு முறைப்பெயர்கள், 1 முதல் 10 வரை,
ii) உடைகள் 11 முதல் 13 வரை
iii) உடல் உறுப்புகள் 14 முதல் 15 வரை
iv) விலங்குகள் 16 முதல் 20 வரை,
v) உயிரற்ற பொருள்கள் 21 முதல் 43 வரை
vi) வினைச் சொற்கள் 44 முதல் 50 வரை.

I உறவுமுறைப் பெயர்களும் மனிதர்களைக் குறிக்கும் சொற்களும்.

1. அண்ணாரின்மனைவி - அண்ணி

1. மைனி
2.6. அண்ணி

2. அம்பட்டன் - நாவிதன்/அம்பட்டன்

1. நாவியென்/குடிமொவென்
2.3.5. அம்பட்டென்
4. அமட்டென்/பரியாரி
6. நாசுவென்

3. அம்மா - அம்மா

1. அம்மெ
2.6. அம்மா
4. அம்மா/ஆயி/ஆத்தா

4. அம்மாவின் தங்கை/சித்தப்பாவின் மனைவி - சித்தி

1. சித்தி
2.3.6. சின்னம்மா
4. சின்னம்மா/சின்னாயி
5. சின்னம்மா/தொத்தா

5. உன் தங்கை

1. தொங்கச்சி
2.5. ஒன் தங்கச்சி
6. ஒடன் பொரப்பு/ஒன் தங்கெ

6. ஓரகத்தி - ஓரகத்தி

1. அனந்தவதி
2.4. ஓப்பிடியா
5. ஒத்தா ஓப்பிடியா
6. ————

7. பாட்டன் - தாத்தா/பாட்டன்

1. கண்ணயா/தாத்தா
2. பாட்டென்
3.6. தாத்தா/பாட்டென்

8. திக்குவாயன் - திக்குவாய்ன்

1. கொன்னெயென்
2.3.6. திக்குவாயென்

4. தெத்துவாயென்/கொளருவாயென்
5. தெத்துவாக்காரென்

9. பூசாரி – பூசாரி

1. பூயாளி/பூஜாரி
2. பூஜாரி
3. பூசாரி
4. பூசாரி/சாமியாரு
5. குருக்கள்
6. அய்யரு/பூசாரி.

10. மீனவர் — மீனவர்/செம்படவர்

1. முக்குவென்/பரவென்
2. ————
3. செம்ப்டெவன்
4. செம்படெவென்/கரெயான்
5. செம்படெவென்/பட்ணவென்/மீன்காரென்
6. செம்படெவென்

II உடைகள்

11. கௌபீனம் — கோவணம்

1. குர்யமுண்ணு
2. கோவணொம்/சீலெ
3. கோமணொம்
4. கோமணொம்/நீர்சீலெ
5. தாச்சீலெ
6. கோவணொம்

12. சேலை — சேலை/புடவை

1,2. சீலெ
3,5,6. சேலெ
4. சேலெ/பொடவெ

13. தலைப்பாகை — தலைப்பாகை

1. உறுமாலு
2–4. தலப்பா
5. தலகட்டு/உருமால்கட்டு
6. தலப்பாகட்டு/உருமாலு

III உடல் உறுப்புகள்

14. குண்டி — குண்டி

1. கும்பி
2–3. சூத்து
4. சூத்தாம்பட்டெ
5. குண்டி/சூத்து
6. பொச்சி

15. தொப்புள் — தொப்பூழ்

1. கொப்ளு
2. தொப்புலு
3–6. தொப்புளு

IV விலங்குகள்

16. அணில் — அணில்

1. அண்ணான்
2–3. அணில்
4. அணிலு/அணிப்பிள்ளெ
5. அணியன்
6. அணிலு

17. ஈ — ஈ

1. ஈச்செ
2-6. ஈ

18. கடா — கிடா

1. க்டா
2–5. ஆட்டுக்கெடா
3. ஆட்டுக்டா

4. கெடாகுட்டி
6. கெடா

19. தவகளை — தவளை

1. மாக்ரி
2.3.5. தவளெ
4. தவளெ/தவுக்களெ
6. தவுக்குளெ/மர்க்கான்

20. பட்டாம்பூச்சி — வண்ணாத்திப்பூச்சி

1. பக்கி
2–6. பட்டா(ம்)பூச்சி

V உயிரற்ற பொருள்கள்

21. இறகு — இறக்கை

1. செறவு
2.4.5.6. ரெக்கெ
3. எரெகு

22. ஊராட்சி அலுவலகம் — ஊராட்சி அலுவலகம்

1. பகுதிக்கச்சேரி
2.4. ஊர்(ச்)சாவடி
5–6. ————

23. எல்லை — எல்லை

1.2. எல்கெ
3.6. எல்லெ

24. கனவு — கனவு

1. சொப்பனொம்
2.3. கனவு
4.5. கெனா
6. கனா

25. கயிறு — கயிறு

1. கயறு
2.4. கவுரு
5. கயரு
6. கயிரு

26. கிழமை — கிழமை

1. ஆச்செ/க்ளெமெ
2.5.6. கெளெமெ
3.4. கெழெமெ

27. இலை — இலை/தழை/குலை

1. கொளெ
2.3.5. எலெ
4. எலெ/தழெ
6. எலெ/பத்ரி

28. ஏளனம் செய்தல் — கேலி/கிண்டல்

1. கொமெ
2–4.6. கிண்டலு
5. கேலி

29. சொத்தை — சொத்தை

1. சூத்தெ
2–4. சொத்தை
5. சொள்ளெ
6. கசப்பு

30. சாணம் – சாணி/சாணம்

1. சாணாங்கி
2. சாணம்
3–6. சாணி

31. தினம் தினம் — தினமும்/தினம்தினம்

1.5. நித்தியொம்
2. தெனமும்
3. தெனவும்
4. தெனொம்/நெதொம்
6. தெனம்

32. நீர்த்துளி — துளி

1. துள்ளி
2–6. துளி

33. துளை - துளை/ஓட்டை.

1. தமரு
2,4. தொளெ
3. பொந்து
5. ஓட்டெ / தொள்ளெ
6. ஓட்டெ

34. தேங்காய் ஓடு – கொட்டாஞ்சி

1. செரெட்டெ
2,5. கொட்டாங்குச்சி
3–4. கொட்டாஞ்சி
6. தொட்டி / ஓடு

35. நிழல் – நிழல்

1. எணலு / நெணலு
2.5.6. நெளெலு
3.4. நெழலு / நொழலு

36. பலாப்பழம் – பலாப்பழம்

1. சக்கெ / சக்கெப் பளொம்
2. ப்லாப்பளொம்
3,5,6. பலாப்பளொம்
4. பெலாப்பழொம்

37. பலூன் - பலூன்

1. ஊத்தாம்பெட்டி
2. பலோனு
3.5.6. பலோன்
4. பலூன்

38. பனைமட்டை – பனைமட்டை / ஓலை

1. காவோலெ
2–3. மட்டெ
4.5. பனெமட்டெ
6. ஓலெ

39. பாட்டில் – பாட்டில்

1. குப்பி
2.3.6. சீசா
4. சீஷா, பாட்லு
5. புட்டி, பாட்லு

40. பாத்திரம் – பாத்திரம்

1. குட்டுவொம்
2.5.6. பாத்ரொம்
3.4. ஏனொம் / பாத்ரொம்

41. கீற்று – கீற்று / பாய்

1. கிடுவெ / பா
2. பாய்யி
3. பாய்
4.5. கீத்து
6. தென்னங்கீத்து

42. புளியங்காய் (செங்காய்) – புளியங்காய்

1. ஒரு
2. புளியங்கா
3.4. செங்கா
5–6. புளியங்காயி

43 வேலை – வேலை

1. சோலி
2. ஜோலி
3–6. வோல

VI. வினைச் சொற்கள்

44. இருத்தல் – உட்கார் / இரு

1. இரி
2.3.5.6. ஒக்காரு
4. ஒக்காரு / குந்து
*இரென்

45. எழுந்திரு – எழுந்திரு

1. எந்தி
2. ஏந்திரு
3. ஏந்திரி
4. எழுந்திரு
5.6. எளுந்திரு

46. கொஞ்சுதல் – குலாவு / கொஞ்சு

1. க்லாவு
2–6. கொஞ்சு / கொலாவு

47. அகழ்ந்தெடுத்தல் – கெல்லு

1. கில்லு
2.3.5.6. ————
4. கெல்லு (குழி)

48. அள்ளுதல் – கோரு / மொள்

1. கோரு
2.3. ————
4.5. மொள்ளு (தண்ணீர்)
6. சேந்து

---

* ஒத்தவயதினரை மிக நெருங்கிய உறவில் உள்ளவரை உட்காரும் படிக் கூற இச்சொல்.

49. குதித்தல் – தாண்டு / குதி

1. சாடு
2–6. குதி
4. குதி, தாண்டு

50. தோண்டுதல் – தோண்டு

1. ————
2.3.5.6. தோண்டு
4. நோண்டு (தோண்டு)

சொற்கோவை

அண்ணான் 16
அண்ணி 1
அணிப்பிள்ளை 16
அணியன் 16
அணில் 16
அணிலு 16
அம்பட்டன் 2
அமட்டன் 2
அம்மா 3
அம்மை 3
அய்யரு 9
அனந்தவதி 6
ஆச்செ 25
ஆட்டுக்கெடா 18
ஆட்டுக்டா 18
ஆத்தா 3
ஆயி 3
இரி 44
இரென் 44
ஈ 17
ஈச்செ 17
உருமால் கட்டு 13
உருமாலு 13
உறுமாலு 13
ஊத்தம்பட்டி 37
ஊர்ச்சாவடி 22
எந்தி 45
எணலு 35
எழுந்திரு 45
எரெகு 21
எல்கெ 23
எல்லெ 23
எலெ 27
எளுந்திரு 45
ஏந்திரி 45
ஏந்திரு 45
ஏனொம் 40
ஒக்காரு 44
ஒத்தா ஒப்பிடியா 6
ஒன் தங்கச்சி 5
ஒன் தங்கை 5
ஒடன் பொறப்பு 5
ஒட்டெ 33
ஒப்பிடியா 6

ஓரகத்தி 6
ஓரு 34
ஓலெ 34
க்டா 18
க்லாவு 46
க்ளெமெ 25
கசப்பு 28
கண்ணயா 7
கயரு 25
கயறு 25
கரெயான் 10
கவுரு 25
கனவு 24
கனா 24
காவோலெ 38
கிடுவெ 41
கிண்டலு 28
கில்லு 47
கீத்து 41
குதி 49
குந்து 44
குட்டுவொம் 40
குடிமொவென் 3
குண்டி 14
குப்பி 39
கும்பி 14
குர்யமுண்ணு 11
குருக்கள் 9
கெடா 18
கெல்லு 47
கெழமெ 26
கெளெமெ 26
கெனா 24
கேலி 28
கொஞ்சு 46
கொட்டாங்குச்சி 34
கொட்டாஞ்சி 34
கொப்புளு 15
கொமெ 28
கொளெ 26
கொன்னெயென் 8
கோமணம் 11
கோரு 48
கோவணம் 11
சக்கெ 36
சக்கெபளோம் 36
சாடு 49
சாணம் 30
சாணாங்கி 30
சாணி 30
சாமியாரு 9
சித்தி 4
சின்னம்மா 4
சின்னாயி 4
சீசா 39
சீஷா 39
சீலெ 11, 12
சூத்தாம்பட்டெ 14
சூத்து 14
சூத்தெ 14
செங்கா 42
செம்ப்டெவென் 10
செம்படெலென் 10
செரட்டெ 34
செறவு 21
சேந்து 48
சேலெ 12
சொத்தெ 28

சொப்னொம் 24
சொள்ளெ 28
சோலி 43
ஜோலி 43
தமரு 33
தலகட்டு 13
தலப்பா 13
தலப்பாகட்டு 13
தவளெ 19
தவக்களெ 19
தவக்குளெ 19
தாச்சீலெ 11
தாண்டு 49
தாத்தா 7
திக்குவாயென் 8
துள்ளி 32
துளி 32
தெத்துவாக்காரென் 8
தெத்துவாயென் 8
தென்னங்கீத்து 41
தெனமும் 31
தெனவும் 31
தெனொம் 31
தொட்டி 34
தொண்டு 50
தொத்தா 4
தொப்புலு 15
தொப்புலு 15
தொள்ளெ 33
தொளெ 33
நாசுவென் 2
நாவியென் 2
நித்தியொம் 31
நெணலு 35
நெதொம் 31
நெழெலு 35
நெளெலு 35
நொழலு 35
நோண்டு 50
ப்லாப்பளொம் 36
பக்கி 20
பகுதிக் கச்சேரி 22
பட்ணவென் 10
பட்டான்பூச்சி 20
பத்ரி 27
பரியாரி 2
பலாப்பழொம் 36
பலாப்பளொம் 36
பலூன் 37
பலூனு 37
பலோனு 37
பனெமட்டெ 38
பா 4
பாட்டென் 6
பாட்லு 39
பாத்ரொம் 40
பாய் 41
பாய்யி 41
பாயி 41
புட்டி 39
புளியங்கா 42
புளியங்காயி 42
பூசாரி 9
பூஜாரி 9
பூயாளி 9
பெலாப்பழொம் 36
பொச்சி 14
பொடவெ 12

பொந்து 33	மைனி 2
மட்டெ 38	மொள்ளு 48
மாக்கான் 19	ரெக்கெ 21
மாக்ரி 19	வேலெ 43
மீன்காரென் 10	

மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

சீனிவாசவர்மா, கோ. 1977 **கிளைமொழியியல்** அண்ணாமலை நகர்.

Beschi, J. C. 1880. *Caturakara:ti*

Krishnamurti, Bh. 1962 *A Telugu Dialect Dictionary of Occupational Vocabulary* Vol. I. I. Agriculture.

தமிழ் மொழி வளர்ச்சி

தமிழ் மொழியின் வளர்ச்சி நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு அமையவில்லை. நாகரிக வளர்ச்சியின் விரைவினும் தமிழ் மொழியின் வளர்ச்சி குறைவுபடுதலாலே இரண்டிற்குமுள்ள தூரம் மிகுந்து கொண்டே போகின்றது. இத்தூரம் இனிமேலும் மிகவொட்டாது தடுத்தல் வேண்டும். இதுகாறும் ஏற்பட்டுள்ள தூரத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்தலும் வேண்டும். இவை செய்யாக்கால் தமிழ் மொழி அருகி அஃகுவதாகும். தம் தாய்மொழியாகிய தமிழ் அத் தன்மையான நிலைமையை அடையாது அதனைப் போற்றுதல் தமிழ் வாணராயினார் யாவர்க்கும் உற்ற கடப்பாடன்றோ?

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
தமிழ் மொழியின் வரலாறு, மதுரை.

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

முள்ளுக் குறும்பர்கள் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் தாலுகாவிலும் கேரளத்தில் கள்ளிக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வயநாடு தாலுகாவிலும் வசித்து வருகின்றனர். இவர்களின் தோற்றம், வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, மொழி ஆகியவற்றைப் பார்க்கும்போது மற்ற குறும்பர்களோடு எந்தவித தொடர்பும் இல்லாமல் ஒரு தனித்தன்மை உடையவர்களாகக் காணப் படுகிறார்கள். அவர்களின் பேச்சு வழக்கில் காணப்படும் சில முக்கிய மான உறவுமுறைச் சொற்களைக் கர்ண்க.

அப்பன்	—	தகப்பன்
அம்மெ	—	தாய்
தட்டப்பன்	—	தகப்பனின் தகப்பனின் இளைய சகோதரன்
முத்தியம்மா	—	தகப்பனின் தாய், தாயின் தாய்.
மோப்பமுத்தன்	—	தகப்பனின் தகப்பனின் தகப்பன்
பேப்பன்	—	தகப்பனின் மூத்த சகோதரன்
பேமா	—	தகப்பனின் மூத்த சகோதரனின் மனைவி, தாயின் மூத்த சகோதரி
ஏப்பன்	—	தகப்பனின் இளைய சகோதரன்
அச்சி	—	மூத்த சகோதரி
எனியத்தி	—	இளைய சகோதரி, கணவனின் இளைய சகோதரனின் மனைவி
குறுமன்	—	கணவன்
குறுமாட்டி	—	மனைவி
அம்மமுத்தன்	—	மனைவியின் தகப்பன், கணவனின் தகப்பன்
அம்மாயி முத்தி	—	மனைவியின் தாய், கணவனின் தாய்
அத்தியா	—	கணவனின் இளைய சகோதரி
அளியன்	—	மனைவியின் சகோதரன், சகோதரியின்கணவன்
பெரியவன்	—	கணவனின் மூத்த் சகோதரன்
செறியவன்	—	கணவனின் இளைய சகோரன்
அனந்தரன்	—	மனைவியின் இளைய சகோதரியின் கணவன்

ராபர்ட் சத்திய ஜோசப்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
(கள ஆய்வில் கண்டவை)

மொழியியல் 4.1 & 2 (1980)

வாய்மொழியும் வரைமொழியும்

ஜெ. நீதிவாணன்

மொழியின் துணையின்றி மனிதன் சிந்திக்க முடியுமா என்ற கேள்விக்கு இதுவரையிலும் தெளிவானதொரு பதில் கிடைக்க வில்லை; ஆனால் சிந்திக்க முடியவில்லை என்பது மட்டும் நடை முறையிலிருந்து புலனாகிறது. பிறந்த குழந்தைகள் எங்ஙனம் சிந்திக்கின்றார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. மனித வாழ்க்கை, சமுதாயம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றுக்கும் மொழியின் போக்கிற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருந்து கொண்டே வந்திருக்கிறது. மனித இனத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் மொழியின் பரிணாம வளர்ச்சிக்குமிடையே அழுத்தமானதொரு பிணைப்பு இருந்து வருகிறது. மனிதன், என்று சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டானோ அன்றே மொழியைக் கையாளத் தொடங் கினான் எனலாம். இதனையே மாற்றிக் கூறினால் மொழியைக் கையாளத் தொடங்கிய நாளிலிருந்தே சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்டான் எனலாம். மனித இனம் பிற உயிரினங் களிலிருந்து மாறுபட்டு நிற் ன்றியமையாததொரு அடிப்

படையாக விளங்குவது மொழியேயாகும். இம்மொழியென்னும் கருவியே மனித இனத்தைக் 'கூடி வாழும் விலங்காக' மாற்றியுள்ளது. கூடிவாழும் சமுதாய வாழ்க்கையைப் பின்பற்றும்போது இனக்குழுக் கள் தமக்கிடையே சில வரன்முறைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துக் கொள்கின்றன. எடுத்துக்காட்டாகப் பாலியல் உறவு என்னும் போது, எந்த ஆண் எந்தப் பெண்ணோடு உடலுறவு கொள்ள முடியும் அல்லது முடியாது என்ற வரையறை மனிதச் சமுதாயத்திலேயே காணப்படுவதைச் சுட்டலாம். பெற்றோர்கள் குழந்தையை இளமையில் பேணுவதற்குக் கைம்மாறாக, முதுமையில் பெற்றோர்களை அவர்களது பிள்ளைகள் பேணுவதென்பதும் மனிதச் சமுதாயத்திலேயே காணப்படுவது. 'கற்பு' 'நாணம்' 'அறம்' போன்ற பண்புநலன்களைத் திட்டமிட்ட வரைவிலக்கணங்களுக்கு உட்படுத்தி 'உயரிய' கோட்பாடுகளாக மாற்றியமைப்பதும் மனிதச் சமுதாய இயல்பு மட்டுமே. தனது குடும்பம், தனது நாடு, தனது இனம் என்னும் திண்மையான பிணைப்புக்களை மனித உள்ளத்தில் வேரூன்றச் செய்து கொள்ளும் போக்கும் மனிதச் சமுதாயத்தில் மட்டுமே காணப்படுபவை. எறும்பு, தேனீ போன்ற இனங்களில் இத்தகைய கூடிவாழும் முறை இருப்பதாகக் கூறப்பட்டாலும் மனிதச் சமுதாயத்தின் முழுமையை (perfection) அவை ஒருபோதும் எட்டியதில்லை. இப்படிப்பட்ட வரன்முறைகள், கோட்பாடுகள், பிணைப்புகள் போன்ற சிந்தனைகள் மனித இனத்திற்கு மட்டுமே அமைந்ததற்கு மொழியே காரணமாகிறது. இம்மொழியாகிய கருவியைப் பெற்றிராத ஏனைய உயிரினங்கள் இத்தகைய வரன் முறைகளையும், கோட்பாடு களையும், பிணைப்புகளையும் பெற்றுக் கொள்ளாமலிருப்பதனைக் காணும்போது இவ்வுண்மை தெளிவாகப் புலனாகிறது.

பிறந்த உடனேயே, மனித சமுதாயத்தினின்றும் விலக்கப்பட்டு அடர்ந்த காடுகளில் விலங்குகளோடு வாழ்க்கையை ஆக்கிக்கொண்ட சில மனிதப் பிறவிகள், பேச்சு முறையைப் பழகிக்கொள்ள முடியா மல், மனிதப் பண்புகள் எவையும் இன்றி விலங்குகளைப் போன்றே வாழ்க்கை நடத்துவதைக் கேள்விப்படும்போது மொழியின் இன்றி யமையாத பங்கு வலுப்பெறுகிறது. பல ஆண்டுகட்கு முன், வட மாநிலம் ஒன்றில் காடுகளுக்கிடையே கண்டுபிடிக்கப்பட்ட ஓநாய்ப் பையன் ராமுவின் கதை நல்ல எடுத்துக்காட்டாகும்.

மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியிலும், சமுதாய வடிவமைப் பிலும் மொழியின் பங்கு நாம் எண்ணாத அளவிற்கு விரிந்து காணப் படுகிறது. மொழியின் பரிணாம வளர்ச்சியையறியாமல் மனித இன வளர்ச்சியைப் புரிந்துகொள்வது எளிதல்ல. பிற உயிர்களுக்கு இல்லாமல் மனித இனத்திற்கு மட்டுமே உரிய அறிவு **'sense of discrimination'** எனப்படும் பகுத்தறிவேயாகும். மனித உடற் கூற்றியலார், இவ்வறிவு, படிப்படியாகவே, மூளையில் ஏற்பட்ட சில வடிவ மாற்றம், வேறு சில மாறுதல்களின் விளைவாக வளர்ந்தது என்பர். இவ்வளர்ச்சியும் மொழியின் பரிணாம வளர்ச்சியும் ஒன்றா தல் வேண்டும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காலத்தை நம்மால் கணிக்க இயலவில்லையென்றாலும் மொழி என்னும் கருவி ஒரு பூரணத் தன்மை பெற்ற காலமாக நம்மால் கணிக்க முடிகின்ற காலம் மிகவும் அண்மைக் காலத்ததே ஆகவேண்டும்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த சில குகைகளில் காணப்படுகின்ற சில ஓவியங்கள்—உண்மையில் சில கோடுகள்—மனித இனத்தின் முதற் சிந்தனையோட்டத்தினைக் குறிப்பதாகலாம். இக்கோடுகள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி பெற்று அழகான முழு ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் நிறைவு பெற்றபோது, அவ்வளர்ச்சியோடு மொழியின் வளர்ச்சியும் நிறைவு பெற்றதாகக் கருதலாம். சிந்தனையோட்டத்திற்கு மூலகாரணமாக மொழி இருப்பதனால் அச்சிந்தனையின் விளைவாக எழும் பண் பாட்டு வடிவமைப்பிற்கு மொழியும் காரணமாக அமைவதாலேயே, மொழி, பண்பாட்டினை பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடியாகக் கருதப்படுகிறது. பண்பாட்டு வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் மொழி இன்றியமையாத காரணமாகிறது.

வெறும் சைகைகள், ஒலிகள், சிறுசொற்கள் என்ற முறையிலும் சிறுகோடுகள், சித்திர எழுத்துக்கள், குறியீடுகள், எழுத்துக்கள் என்ற முறையிலும் மொழியின் பரிணாம வளர்ச்சி இருகோணங்களில் நிறைவு பெறுகின்றது. சக்கரத்தைக் கண்டுபிடித்த செயல் தொழிற் புரட்சிக்கு வித்திட்டது போன்று மொழியைக் கண்டு பிடித்த செயல் பண்பாட்டுப்புரட்சிக்கு வித்திட்டது. விலங்குகளைப் போன்று உணவு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 'தான்' எனும் நினைப்பு தவிர வேறெதுவுமில்லாமல் அலைந்து கொண்டிருந்த மனிதன்,

முதன்முதலாகத் தன்னுடைய கருத்தினை வெளியிடத் தொடங்குகிறான். 'வாய்மொழி' எனும் வடிவத்தின் மூலம் 'கருத்து வெளியீடு' என்னும் நோக்கம் நிறைவேறுகிறது. இந்நிலையே இன்னும் வளர்ந்து 'கருத்துப் பரிமாற்றம்' எனும் நோக்கமாக மலருகிறது. வாய்மொழி எனும் வடிவத்தின் மூலம் 'கருத்து வெளியீடு' 'கருத்துப் பரிமாற்றம்' ஆகிய இரு நோக்கங்கள் நிறைவேறுகின்றன. இது மனித இனத்தின் பண்பாட்டு வடிவமைப்பில் இரண்டாவது நிலையாகும். இந்நிலை உலகிலுள்ள அனைத்து மனித இனக்குழுக்களிலும் காணப்படுகின்ற ஒன்றாகும்.

மூன்றாவது நிலையிலேயே 'வரைமொழி' வடிவம் பெறுகிறது. இவ்வடிவத்தின் மூலம் 'கருத்துப்பதிவு' எனும் நோக்கம் நிறைவேறுகிறது. பண்பாட்டு வடிவமைப்பில் இதுவே இன்றியமையாத திருப்புமுனையாகும். வாய்மொழியினை நோக்க வரைமொழி அண்மைக் காலத்ததாகலாம். அதுமட்டுமன்று; இன்றும்கூட உலகின் பெரும்பாலான மொழிகளுக்கு வரைமொழி வடிவம் கிடையாது. அம்மொழிகளிலெல்லாம் கருத்து வெளியீடும் கருத்துப்பரிமாற்றமும் நடைபெறுகின்றனவே தவிர, கருத்துப் பதிவு இல்லை. இக்கருத்துப்பதிவு என்பது உண்மையில் எண்ணங்களின் சேமிப்புக் கிடங்கேயாகும். வாய்மொழி இலக்கியங்கள் மட்டுமே ஓரளவிற்குக் கருத்துப்பதிவாக அமைகின்றன. நினைவாற்றலின் வேலையை எளிதாக்குவதும் ஒரே சிந்தனையோட்டம் மீண்டும் மீண்டும் ஏற்படாமல் ஆக்குவதும் இக்கருத்துப்பதிவேயாகும். வாய்மொழி வடிவில் 'பேசுவோன்' 'கேட்போன்' ஆகிய இருவரும் ஒரே நேரத்தில் இருந்தாக வேண்டும். பேசுவோனது கருத்துக்களைக் கேட்போன் உடனடியாக மறுக்க முடியும்; மறுமொழி கூறமுடியும். இங்கு, சிந்தனை இருவழிப்பயணம் மேற்கொள்கிறது. ஆனால் இச்சிந்தனையோட்டம் அந்த இருவரோடு மட்டும் நின்று விடுகிறது. காலத்தைக் கடந்து ஓட முடிவதில்லை; மூன்றாமவனை எட்டுவதில்லை. எனவே வாய்மொழிச் சிந்தனைகள் சேமித்து வைக்கப்படுவதில்லை. ஒரே இனத்திலுள்ள பல மக்களும் ஒரே கருத்தைப் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் சிந்தித்துத் தமது ஆற்றலை வீணாக்குகின்றனர். ஆனால் வரைமொழியில் கருத்துப் பதிவு நிகழ்வதனால் அது காலத்தைக் கடந்து நிற்கிறது. இதன் காரண

மாக வாய்மொழி வடிவம் மட்டுமே உடைய ஒரு சமுதாயத்தின் பண்பாட்டிற்கும், இருவடிவங்களையும் உடைய சமுதாயப் பண்பாட்டிற்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது.

வாய்மொழியில் 'பேசுவோன்–கேட்போன்' இருவரும் ஒருசேர நிற்பதால், விவாதத்திற்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் இடமுள்ளதால் பொருளற்ற கற்பனை அல்லது செயற்கைத்தன்மை இடம் பெற்றாலும் அது உடனடியாக மறுக்கப்படக் கூடிய வாய்ப்பு அங்கு உண்டு. மனித உணர்ச்சிகள் அங்கு நேரடியாகக் கொட்டப்படுகின்றன. அவை வரைமொழியைப் போன்று அணி செய்யப்படுவதில்லை. சமுதாயம், வரைமொழி வடிவைப் பயன்படுத்தும் போதுதான் செயற்கைப் போர்வையைப் போர்த்திக்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு கருத்தை ஒருவர் பேசும்போது பயன்படுத்துகின்ற மொழியையும் அதனையே அவர் கவிதையாகவோ கதையாகவோ வழங்கும்போது பயன்படுத்தும் மொழியையும் ஒப்பிடுவோமானால் இவ்வேறுபாடு புரியும். வரைமொழிச் செல்வாக்கு மேலோங்கி நிற்கும் சமுதாயத்திலேயே பழம் மரபுகளைப் பற்றிய வரலாற்றுக் கதைகள் அளவிறந்து காணப்படுகின்றன. நமது முச்சங்கங்களைப் பற்றிய வரலாற்றுக்கதை களவியலுரையினுள் வரையப்படாமலிருக்குமானால் இந்த அளவிற்கு அது செல்வாக்குப் பெற்றிருக்குமா என்பது ஐயமே. இங்கும் வாய்மொழி வரைமொழி எனும் வடிவ வேறுபாடு சமுதாயப் பண்பாட்டினைப் பாதிக்கிறது.

முதலாவது சில அடிப்படையான மனித வாழ்வியற் கோட்பாடுகளை நோக்குவோம். 'கற்பு' என்னும் கோட்பாடு எல்லா மனிதச் சமுதாயத்திலும் பேசப்படுகின்ற ஒன்று. ஆனால் அதற்கென கொடுக்கப்படும் விளக்கம் அல்லது இலக்கணம் எல்லாச் சமுதாயத்திலும், எல்லாக் காலங்களிலும் ஒன்றாக இருப்பதில்லை. ஒரே பெண் ஐவரை மணந்து கொள்வதை ஒரு சமுதாயம் கற்புநெறியாகவே ஏற்றுக்கொள்கிறது. 'ஒருவனுக்கு ஒருத்தி வாழ்நாள் முழுதும்' என்கிறது இன்னொன்று. 'வாழ்நாள் முழுதும் கூடி வாழாவிட்டாலும் கூடி வாழ்கின்ற காலத்திலாவது ஒருவனுக்கு ஒருத்தி' என்கிறது மற்றொரு சமுதாயம். 'அடுத்தவன் நினைத்துப் பார்த்தாலே கற்புக் கெடுகிறது' என்கிறது ஒரு காலம்; 'அடுத்தவனை நினைத்துப்

பார்த்தால்தான் கற்பு கெடுகிறது' என்கிறது இன்னொரு காலம். இங்ஙனம், கோட்பாடுகளுக்கான இலக்கணங்கள் மாறிக் கொண்டே வருவதற்குப் பண்பாட்டு வளர்ச்சி மட்டும் காரணம் என்பதனைவிட மொழியும் ஒரு காரணமாக அமைகிறது எனலாம். வாய்மொழி வடிவம் மட்டுமே பெற்றுள்ள ஒரு சமுதாயத்தில் இத்தகு கோட்பாடு களின் இலக்கணங்கள் நெகிழ்விற்காட்படுகின்றன. வரைமொழியாக எழுதப்பட்ட ஒரு இலக்கணம் தலைமுறை தலைமுறையாகப் படிக்கப் படுகின்றது. நேரடிக் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமில்லாமற் போவதால், எழுதப்பட்டது அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதுவே மரபாக மாறுகிறது. பழமை போற்றப்படுகிறது. பழமையாக இருப்பதாலேயே அது மாற்றப்படக் கூடாததாகக் கருதப்படுகிறது. வாய்வழியாக மட்டும் இருக்கும்போது ஒருவரது இலக்கணம் பாது காக்கப்பட முடியாத ஒன்றாக இருப்பதனால் பலரும் பலவிதமாகச் சிந்தனை செய்வதனால் அங்கு நெகிழ்ச்சி காணப்படுகிறது. வரை வடிவங்களைப் பெற்றிராத சில பழங்குடி இனத்தவரது பண் பாட்டினை நோக்குவோமானால் இது தெளிவாகப் புரியும்.

வரைமொழியைப் புனிதமாக ஏற்றுக்கொள்ளாத சமுதாயங்களி லும் இத்தகு நெகிழ்ச்சியே காணப்படுகின்றது. பொதுவாக, வரை மொழியைப் புனிதமாகக் கருதுகின்ற பண்பு இன்று கீழை நாடுகளி லேயே அதிகம் காணப்படுகின்றது. இந்நாட்டுச் சமுதாயங்கள் தம் முடைய வளர்ச்சியில் காட்ட வேண்டிய ஆர்வத்தினைத் தமது வரை வடிவத்தினைக் காப்பதில் செலவிடுகின்றன.

தெய்வீகத் தன்மையுடையனவாகக் கருதப்படும் சில கருத்துக்கள் வரைமொழியினுள் பதிவு செய்யப்படும் போது, அம்மொழியே தெய்வீ கத் தன்மையுடையதாக மாறிவிடுகின்றது. இதன் விளைவாக வரை மொழியே தெய்விகத் தன்மை பெற்றதாகிவிடுகிறது. சங்கிலித்தொடர் போன்று, அதன் விளைவாக வரைமொழியினுள் பதிவுசெய்யப்படும் எதுவுமே புனிதத்தன்மை பெற்றுவிடுகின்றது. சமுதாய வளர்ச்சியில் இது ஒரு இன்றியமையாத திருப்புமுனையாகும். இக்காலகட்டத்தி லேயே பல கோட்பாடுகள் வரைவு செய்யப்படுகின்றன. 'அறம்' என்றால் இன்னதென்று ஒருவர் வரைமொழியில் பதிவு செய்து விடு வாரானால் அக்கோட்பாடு புனிதம் பெற்றுவிடுகின்றது. 'கற்பு' என் பதற்கான இலக்கணம் வரைமொழியினுள் பதிவு செய்யப்பட்டுவிடு

மானால் அதுவே புனிதம் பெற்றுவிடுகிறது. இங்ஙனம் புனிதத் தன்மை ஏற்றப்பட்டுவிடும் கோட்பாட்டை எவரும் மறுக்கத்துணிவ தில்லை. விளைவாக, இக்கோட்பாடுகள் இறுகிய கட்டுப்பாட்டுக் குள்ளாகின்றன. சமுதாயத்தின் போக்கும் வாழ்க்கை நெறிமுறை களும் இதனடிப்படையில் அமைந்துவிடுகின்றன. உதாரணமாகக் 'கற்பு' எனப்படும் ஒரு கோட்பாடு வரைமொழியை உடைய சமுதாயத் திலேயே நெகிழ்விற்குட்படாமல் உள்ளது. ஏனெனில் வரைமொழியி லுள்ள ஒரு காப்பியத்திலோ, அறநூலிலோ அது இன்னதென்று கூறப்பட்டுள்ளது; வரை மொழியிலுள்ளதால் அக்கருத்தே புனித மாகிறது; புனிதமாவதால் எவரும் மறுக்கமுடியவில்லை. 'கற்பு' 'அறம்' 'வீரம்' 'நாணம்' போன்ற பண்புகள் நான்கு சுவர்களுக்குள்ளே அடைக்கப்படுகின்றன. அவையே காலங்காலமாகப் போற்றப்படும் போது, சமுதாயமே 'பழம் மரபு போற்றும் சமுதாயமாக' மாறுகிறது. காலத்திற்குப் பொருந்தாமற் போனாலும் சில கருத்துக்கள் விடாப் பிடியாகப் பின்பற்றப் படுவதனால் சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன. ஆனால் வரைமொழியே இல்லாத சமூகத்தில் இத்தகைய கட்டுப்பாடு கிடையாது. 'கற்பு' போன்ற பண்புகளுக் கான விளக்கங்கள் நெகிழ்ச்சியாக அமைகின்றன. அத்தகைய சமூக வாழ்க்கையில் இத்தகைய சிக்கல்களைக் காணுவதில்லை. வரை மொழியைப் புனிதமாகக் கருதாத சமுதாயங்களிலும் இத்தகு சிக்கல்கள் இல்லை என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

வரைமொழி புனிதமானதாகக் கருதப்படுவதற்கு வேறு காரணங் கள் உண்டா? மனித சமுதாயத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் 'கல்வி' என்பதே ஒரு ஆடம்பரப் பொருளாக இருந்திருக்கவேண்டும். இந்துமதம், சமுதாயத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பிரிவினரே கல்வி கற்பதற்குரியவர் என்று தெளிவாகக் கூறியிருக்கிறது. அதே போல நாட்டை ஆளுகின்ற உரிமையும் ஒரு குறிப்பிட்ட பிரிவினரையே சார்ந்திருக்கின்றது. சிறுபான்மையராக இருந்த இவ்விரு பிரிவினரது கூட்டு முயற்சியே இப்புனிதத்துவம் எனக் கூறலாம். நாட்டை ஆண்டவர்கள் தம்முடைய பதவி நீடித்து நிற்பதற்காக, மக்கள். தம்மை என்றும் தம் தலைவர்களாக ஏற்றுக்கொள்வதற்குக் 'கடவுளின் ஒப்புதலைப்' பெற்றவர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயம் வேண்டியிருந்திருக்கிறது. இந்நிலைமை

உலகெங்குமே காணப்பட்டது. மேலைநாடுகளிலும் தொடக்க கட்டத்தில் கல்வியறிவு மதகுருமார்களையே சார்ந்திருந்தது. ஆண்டவனின் பிரதிநிதிகளாக இந்நிலவுலகில் வாழ்ந்த இம்மத வாதிகளே, ஆண்டவன் பெயரால் எதனையும் பொதுமக்களிடம் அழுத்தமாகக் கூறக்கூடியவர்கள்; எனவேதான், அவர்கள் கூறுகின்ற மதக்கோட்பாடுகள் புனிதத்துவத்தைப் பெற்றன. வரைமொழியே புனிதமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ‘ஏன்’ என்ற கேள்வியைச் சாதாரணக் குடிமகன் எழுப்பாமலிருக்க வேண்டுமென்பதனால் அவனுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. ‘கல்வியறிவு’ வளரவளர, புனிதத்துவம் குறைந்து கொண்டே வரும். புனிதத்துவம் குறைந்தால்தான் சமுதாயத்தில் புதிய வளர்ச்சிகள், சிந்தனைகள் தோன்றமுடியும்.

வாய்மொழியும் வரைமொழியும் சமுதாய வளர்ச்சியில் பல்வேறு நிலைகளில் மாறுபட்ட முடிவுகளுக்குத் துணை நிற்கின்றன. ஒன்று துணை செய்யாத கட்டததில் மற்றது துணைக்கு வந்திருக்கிறது.

அசோகர் புத்த மதத்தை எளிதாக மக்கள் மத்தியில் பரப்பியதற்குக் காரணம், அவர் வரைமொழி வடிவத்திலேயே இருந்த சமஸ்கிருதத்தை விட்டுவிட்டு வாய்மொழி வடிவங்களாக விளங்கிய பிராகிருத மொழிகளைக் கையாண்டதாகும். வரைமொழி, சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளோரையே எட்டுகிறது. வாய்மொழியே அனைவரையும் எட்டுகிறது. நமது சங்க இலக்கியங்கள் எந்த அளவுக்குப் பொதுமக்கள் இலக்கியங்களாக இருந்தன என்பது சிந்தனைக்குரிய ஒன்று.

அதே காலத்தில், சமுதாயத்தில் வாய்மொழியாக விளங்கிய நாட்டுப்புறப் பாடல்கள் எல்லாம் கருத்து வெளிப்பாடுகளேயாம். உணர்ச்சிகள் அப்படியே கொட்டப்படுகின்றன. இங்கு கருத்துப் பதிவிற்கு அதிக இடமில்லை. கோட்பாடுகள், திட்டமிட்ட வரைவிலக்கணங்கள், ஆகியவற்றுக்கு இடமில்லை. நாட்டுப்புற இலக்கியமொன்றில் உயர்ந்த கோட்பாடுகளுக்கான விளக்கத்தைத் தேடி அலைவது வீண் வேலையே. அங்கு ஓசையே முக்கியமானது; சொல் அல்ல. நாட்டுபுற இலக்கியமொன்றில் அணி செய்யப்பட்ட மொழி நடையும் கோட்பாட்டு விளக்கங்களும் முதலிடத்தைப் பெறுவதில்லை. தெருக் கூத்திற்கும் நாடக அரங்குகளில் நடைபெறும் நாடகங்களுக்கு

மிடையே காணப்படும் வேறுபாடும் இதே அடிப்படையில் காணப் படுவதுதான்.

அதே நேரத்தில் அறிவியல் வளர்ச்சி என்ற கோணத்தில் ஒரு சமுதாயத்தை அணுகும்போது, வரைமொழி வடிவமே அங்கு மேலோங்கி நிற்பதைக் காணலாம். வாய்மொழி வடிவம் மட்டும் கொண்டுள்ள ஒரு சமுதாயம் அறிவியல் படைப்புக்களைக் கண்டு பிடித்ததாகச் சான்றுகள் இல்லை. வெறும் கருத்து வெளிப்பாடு மட்டும் அறிவியல் வளர்ச்சிக்குத் துணை செய்யாது. சேமிக்கப்பட்ட கருத்துப் பதிவுதான் துணை செய்யும். அங்கே வரைமொழியே பயன்படுகிறது. கருத்து வெளிப்பாடு. கருத்துப் பரிமாற்றம் ஆகிய இரண்டும் நிகழ்வதற்குத் துணை செய்யும் வாய்மொழி மட்டுமே உள்ள சமுதாயம் அறிவியல் வளர்ச்சியில் பின்தங்கிவிடுகிறது. ஆனால் அங்கு வாழ்க்கையின் அடிப்படையான பண்பு நலன்கள் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகக் கருதப்படுவதில்லை. செயற்கையான கோட்பாடுகள் பிடிவாதமாகப் பின்பற்றப்படுவதில்லை. அதுவே அச் சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது. ‘வெள்ளை உள்ளம் கொண்ட அப்பாவிகள்’ என்று பழங்குடி மக்கள் போற்றப்படுவதன் பொருள் இதுவே.

கருத்துப்பதிவு நிகழ்வதற்குத் துணைசெய்யும் வரைமொழி சமுதாயம் அறிவியல் வளர்ச்சியிலும் ஆன்மிக வளர்ச்சியிலும் முன் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் அங்கு, பிடிவாதமான கோட் பாடுகள் வலிந்து பின்பற்றப்படுகின்றன. செயற்கை நெறிமுறைகள் பாராட்டப்படுகின்றன. இதுவே அச்சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

தமிழ்த்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

பரோக்க, அபரோக்க வினைகள்

வீரசோழியம் சில வினைகளை 'பரோக்க வினைகள்' எனக் கூறும். (பரோக்ஷ = பர 'பிற' + அக்ஷ 'கண்ணில்' = பிறர் நோக்கில், அதாவது பிறர் கூறுகிறபடி) 'நடந்தான்' என்பதை ஒருவன் தான் கண்டபடி தன் பொறுப்பில் கூறலாம். அப்படிப் பொறுப்பேற்க முடியாத நிலையில் பிறர் கூறியதாகக் கூறலாம். இப்படிக் கூறும் போது வரும் வினையே பரோக்க வினை. 'அவன் நடந்தானாம்'; 'அவன் நடந்தான் போலும்' என்று வருகின்றவை பொறுப்பேற்காமல் பிறர் நோக்கில் கூறும் பரோக்க வினைகளாம். இத்தகைய 'ஆம்' 'போலும்' முதலிய பரோக்க விகுதிகள் இல்லாமல் 'நடந்தான், 'வந்தான்' என்று கூறும்போது பேசுபவன் தன் பொறுப்பில் கூறுபவை அபரோக்க வினைகளாம். (அபரோக்கம் = பரோக்கம் அல்லாதது; நேரில் கண்டு கூறுவது) பரோக்க வினையின் பின்னாலும் ராஸ் கொள்கையின்படி 'என்கிறேன்' என்பது வரும். ஆனால் அது பரோக்க நிலைக்குத்தான் பொறுப்பேற்கிறது. இங்கு நாம் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் அபரோக்க வினைகளில் பொறுப்பேற்றுக் கொள்ளும் விகுதிகள் காணப்படாமல் போனாலும் அதைக் குறிக்கும் குறிப்பு ஏதேனும் இருத்தல் வேண்டும் என்பதே. அந்தக் குறிப்போ ஆழ்நிலை அமைப்பில் வெளிப்படையாக இருந்து மேல்நிலை அமைப்பில் தொக்கு மறையும் 'என்கிறேன்' என்பதேயாம். இக் குறிப்பில்லாமல் போனால் அபரோக்கப் பொருள் எப்படி வரும்? அபரோக்கம் பரோக்கம் என வீரசோழியம் பிரித்த பிரிவே ராஸ் கொள்கையை வலியுறுத்தும்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

மொழியியல் விளையாட்டுகள், மதுரை—1977

மொழியியல் 4.1 & 2 (1980)

இ என்ற வினையாக்க விகுதி

பொன். கோதண்டராமன்

வினையாக்க விகுதி என்றால் என்ன?

வினையில் இருந்து உருவாக்கப்பட்ட பெயர்கள் தமிழில் ஏராள மாக உள்ளன. எடுத்துக்காட்டாக ஆட்டம், ஓட்டம், நடிப்பு, படிப்பு முதலானவற்றைக் குறிப்பிடலாம்.[1] வினைகளிலிருந்து பெயர்கள் உருவாக்கப்படுவதைப் போலவே பெயர்களிலிருந்து வினைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வினைகள் மிகச் சிலவே என்பது குறிப்பிடத்தக்கது. பெயர்களிலிருந்து வினைகளை உரு வாக்கிக் கொள்ள 'இ' என்ற விகுதி பயன்பட்டிருக்கிறது. பெயர் களை வினைகளாக ஆக்கிக்கொள்ளப் பயன்படும் விகுதியை வினை யாக்க விகுதி என்று குறிப்பிடுகிறோம். இ என்ற வினையாக்க விகுதியைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.[2]

ஆய்வுக்குரிய சிக்கல்

1.	கொல்	கொலை
2.	வில்	விலை

3. கல் கல்வி
4. கேள் கேள்வி

மேலே காட்டிய சொற்களில் வலப்பக்கம் உள்ள பெயர்ச் சொற்கள் யாவும் இடப்பக்கம் உள்ள வினைகளிலிருந்து வருவிக்கப்பட்டன என்பது நமக்கு நன்கு தெரியும். ஐ, வி முதலாய பெயராக்க விகுதிகள் வினைகளோடு சேர்ந்து பெயர்களை உருவாக்கி இருக்கின்றன. இதே முறையில் அமைந்தனவாகக் கீழ்க்காணும் பெயர்களையும் வினைகளையும் கருத இயலுமா என்று பாருங்கள்.

5, சோதி சோதனை
6, விரோதி விரோதம்
7, ஆசீர்வதி ஆசீர்வாதம்
8, நிருபி நிருபணம்

இடப்பக்கம் உள்ள வினைகளிலிருந்து வலப்பக்கம் உள்ள பெயர்களை உருவாக்கலாமா? வலப்பக்கம் உள்ள பெயர்களிலிருந்து இடப்பக்கம் உள்ள வினைகளை உருவாக்கலாமா? இலக்கண ஆய்வு நோக்கில் எது எளிமையும் பொருத்தமும் ஆகும்? வினைகளோடு அனை, அம், அணம் முதலிய விகுதிகள் சேர்வதால் பெயர்கள் உருவாகின்றன என்று கொள்வது பொருத்தமா? அல்லது இ என்ற விகுதி பெயர்களோடு சேர்ந்து வினைகள் உருவாகின்றன என்று கொள்வது பொருத்தமா? இதைப்பற்றி மேலும் சற்றுத் தெளிவாகச் சிந்திப்போம்.

பெரும்பாலும் வடமொழியிலிருந்து கடன் வாங்கிய சொற்களிலேயே இந்தச் சிக்கல் நமக்கு எழுந்துள்ளது. பிற மொழியிலிருந்து நாம் ஒரு சொல்லை கடன் வாங்கும்பொழுது பெயர் வடிவிலேயே கடன் வாங்குகிறோம்.[3] கடன் வாங்கப்பட்ட சொற்கள் தமிழுக்கு வந்த பொழுது அவை பெயர்களாகக் கொள்ளப்பட்டு இலக்கணச் சூழலுக்கு ஏற்றபடி உரிய விகுதிகள் சேர்க்கப்பட்டுப் பல்வேறு நிலைகளில் ஆளப்படுகின்றன. இந்தப் பொது உண்மையை மனதில் கொண்டு மேலே காட்டிய சிக்கலைப் பற்றி மேலும் சிந்திப்போம்.

சோதனை, விரோதம் முதலாய பெயர்களிலிருந்து வினைகள் பிறந்தன என்று கொண்டால் வினைகளை உருவாக்குவது நமக்கு

எளிமையாகப் படுகிறது. மாறாக சோதி, விரோதி முதலாய வினைகளிலிருந்து பெயர்கள் பிறந்தன என்று கொண்டால் அனை, அம், அணம் முதலாய விகுதிகளில் எந்த வினையோடு எந்த விகுதி சேரும் என்பதை முன்னறிந்து கூற இயலவில்லை.[4] ஆகவே சோதனை, விரோதம் முதலாய பெயர்களோடு இ என்ற வினையாக்க விகுதி சேர்ந்து வினைகள் அமைந்தன என்று கொள்ளுவதே சரி என்று புலப்படுகிறது.

சிக்கலுக்குத் தீர்வு

நாம் மேலே குறிப்பிட்டபடி பெயர்களிலிருந்தே வினைகளை வருவித்துக்கொள்வது எளிது என்பது மீண்டும் வலியுறுத்தத் தக்கது. பெயர்களை அடிநிலைக் கிளவிகளாகக் கொண்டு இ என்ற வினையாக்க விகுதியை அவற்றோடு சேர்த்துப் பொருத்தமான சில சந்தி விதிகளின் துணையால் உரிய வினைகளை உருவாக்கிக்கொள்ளலாம்.[5]

எ.டு. சோதனை + இ → சோதி
விரோதம் + இ → விரோதி

அனை, அம், அணம் முதலாய ஈற்றினையுடைய பெயர்கள் (வடமொழியிலிருந்து கடனாகப் பெற்றவை) இ என்ற வினையாக்க விகுதி தம்மோடு சேரும்பொழுது அனை, அம், அணம் முதலாய ஈற்றினை இழந்து வினைகளை உருவாக்கும். இந்தச் செய்தியை ஒரு சந்தி விதியின் மூலம் தரலாம்.[6]

வினையாக்க விகுதியை இகரம் என்று கொள்ளாமல் இடமாற்று உருபன் (அனை, அம், அணம் முதலாய ஈறுகள் இகர ஈற்றால் மாற்றப்படுதல்) என்றும் கொள்ளலாம். ஆனால் இது தமிழ் இலக்கண மரபுக்கு அவ்வளவு உகந்த முறை என்று கொள்ள இயலாது. இகரத்தை வினையாக்க விகுதியாகக் கொண்டு மேலே காட்டியபடி சந்தி விதிகளின் துணைகொண்டு வினைகளை ஆக்கிக்கொள்வதே பொருத்தம்.

கீழ்க்காணும் சொற்பட்டியலைப் பாருங்கள்.

(அ)	நிருபணம்	நிருபி
	மரணம்	மரி
	சமர்ப்பணம்	சமர்ப்பி

(ஆ)	ஆட்சேபணை	ஆட்சேபி
	விசாரணை	விசாரி
	அனுசரணை	அனுசரி
(இ)	நியமனம்	நியமி
	சேதனம்	சேதி
	வந்தனம்	வந்தி
(ஈ)	சிந்தனை	சிந்தி
	சோதனை	சோதி
	போதனை	போதி
(உ)	யாசகம்	யாசி
	வாசகம்	வாசி
	போஷகம்	போஷி
(ஊ)	அப்பியாசம்	அப்பியசி
	ஆசீர்வாதம்	ஆசீர்வதி
	அலங்காரம்	அலங்கரி
(எ)	விரோதம்	விரோதி
	கோபம்	கோபி
	விவாதம்	விவாதி
(ஏ)	இச்சை	இச்சி
	இம்சை	இம்சி
	நிந்தை	நிந்தி
(ஐ)	உதயம்	உதி
(ஒ)	சம்பாத்யம்	சம்பாதி

மேலே காட்டிய சொற்களில் இடப்பக்கம் உள்ள பெயர்கள் அணம், அணை, அனம், அனை, அகம், அம், ஐ, அயம், யம் முதலாய ஈறுகளைப் பெற்றுள்ளன. இந்தப் பெயர்கள் இங்கே குறிப்பிட்ட ஈறுகளை இழந்து இ என்ற வினையாக்க விகுதியை ஏற்று வலப் பக்கத்தில் கண்டவாறு வினைகளாக மாறி உள்ளன. (ஊ) என்ற குழுவில் உள்ள அப்பியாசம் முதலாய பெயர்கள் வினையாகமாறும் பொழுது அம் ஈற்றை இழந்து இகர விகுதியை ஏற்பதோடு அம்

ஈற்றுக்கு முன் உள்ள நெட்டுயிரும் குறிலாக மாறுகிறது. நெட்டுயிர் குறிலாக மாறுகின்ற இந்த மாற்றத்திற்குத் தனியே ஒரு சந்தி விதி தேவைப்படுகிறது.[7]

பழந்தமிழிலேயே இகரம் வினையாக்க விகுதியாகப் பயன்பட்டுள்ளது என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. காதல் என்ற பெயரோடு இகர விகுதி சேர்ந்து காதலி என்ற வினை பிறந்துள்ளது.[8] துண்டு என்ற பெயரிலிருந்து துண்டி என்ற வினையும், ஒன்று என்ற பெயரிலிருந்து ஒன்றி என்ற வினையும் பிறந்துள்ளன என்ற உண்மையும் இங்கே ஒப்பிட்டுக் காணத்தக்கது. இகரத்தை வினையாக்க விகுதி என்று உறுதி செய்து கொண்டால் வினையாக்க உருபனை இடமாற்றுருபன் என்று கொள்ள வேண்டிய தேவை இல்லை.

வண்ணனை மொழியியலாரில் ஒரு சாராரின் கொள்கைப்படி இங்கே நாம் ஆராய்ந்த வினையாக்க உருபனை ஒரு இடமாற்றுருபனாகக் கொள்ளலாம். இடமாற்றுருபனாகக் கொண்டால் நாம் மேலே குறிப்பிட்ட சந்திவிதிகள் தேவையில்லை.

முடிபு

நாம் இதுகாறும் கூறியவற்றால் நிரூபணம் நிரூபி முதலாய இணைகளின் பெயர்களிலிருந்தே வினைகள் பிறந்துள்ளன என்பதும் பழந்தமிழில் வினையாக்க விகுதியாகச் செயற்படும் இகரமே இங்கும் வினையாக்க விகுதியாகச் செயற்பட்டுள்ளது என்பதும் இங்கே விளக்கப்பட்ட வினையாக்க உருபனை வண்ணனை மொழியியலாரில் ஒரு சாரார் கொள்கைப்படி இடமாற்றுருபனாகக் கொள்ள இடம் உண்டு என்பதும் தமிழ் மொழி அமைப்புக்கும், மரபுக்கும் ஏற்ற முறையில் எண்ணிப் பார்த்தால் இகரத்தை வினையாக்க விகுதியாகக் கொள்ளுவதே பொருத்தம் என்பதும் தெளிவாக விளங்கும்.[10]

தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

குறிப்புகள்

1. மேலும் விளக்கங்களுக்குக் காண்க: இந்தக் கட்டுரையாசிரிய ரின் **இலக்கண உலகில் புதிய பார்வை** ப. ம். 47–59; சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.

2. இந்திய மொழியியல் என்ற இதழில் (Indian Linguistics, 35, 139–141, 1974) முன்பே ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரை இப்போது சில மாற்றங்களுடன் இங்கு வெளியாகி யுள்ளது.

3. பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது பெயர் நிலை யிலேயே அவை தமிழில் ஆளப்படுகின்றன. ரிசர்வு பண்ணு, அலாதியான போக்கு, ஷார்ப்பாக இருக்கிறது முதலாய பேச்சுத் தமிழ் ஆட்சிகள் இக்கருத்தை வலியுறுத்தும். இது பற்றிய விளக்கங்கள் இக்கட்டுரை ஆசிரியரின் கட்டுரை ஒன்றில் இடம்பெறும்.

4. கோபி, சோதி முதலாய வினைகளிலிருந்து பெயர்கள் பிறப் பதாகக் கொண்டால் அம் விகுதி எந்த வினையோடு சேரும் என்பதை விளக்கப் பல்வேறு பட்டியல்களை உருவாக்க வேண்டும். அப்படிப் பட்டியல்கள் உருவாக்குவதைத் தவிர்க்க முடிந்தால் தவிர்ப்பதே முறை.

5. இங்கே குறிப்பிடும் சந்திவிதி கீழ்க்காணும் முறையில் அமைய லாம்.

$$x\text{-}\left\{\begin{array}{l} \text{a\underline{n}ai} \\ \text{am} \\ , \\ ; \end{array}\right\} + i \rightarrow x\text{-}i$$

6. காண்க குறிப்பு 5.

7. இங்கே குறிப்பிட்ட சந்திவிதி கீழ்க்காணும் முறையில் அமைய லாம்.

$$x - \bar{a} - c - + i \rightarrow x - a - ci$$

8. காதலி என்ற பெண்பாற் பெயரும் காதலி என்ற வினையும் உருவால் ஒன்றுபோல் தோன்றினும் அவை வேறுவேறு சொற் கள் என்பதை இங்கே நினைவிற் கொள்ளவேண்டும்.

9. வண்ணனை மொழியியலார் எல்லோரும் இதை இட மாற்றுரு பனாகத்தான் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. மொழியின் அமைப்புக்கும் வரலாற்றுக்கும் ஏற்ப இங்கே காட்டிய வினையாக்க உருபனை இகரமாகவோ இடமாற்றுருப னாகவோ கருதலாம். அனை, அம் முதலாய ஈறுகள் இகரமாக மாறிய மாற்றுருபன் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

10. தொல்காப்பியத்தில் காணும் அடிநிலைக் கிளவிக் கோட் பாட்டையும், தமிழ் மொழியின் சந்தி இலக்கண மரபையும் இ என்ற வினையாக்க விகுதியின் வரலாற்றையும் ஒருங்கு வைத்து எண்ணிப் பார்க்கும்போது இங்கே காணும் வினை யாக்க உருபன் இகரமே என்பது தெளிவாக விளங்குகிறது. இதுபற்றி இன்னும் தெளிவாக ஆராய்ந்து முடிவு செய்வதே நல்லது என்று எண்ணுகிறேன்.

சொல்லாராய்ச்சி

"சொல்லாராய்ச்சி, அறிவுத் துறைகள் பலவற்றுள் மிகச் சிறந்த தொன்றாம். இதனைப் புறக்கணித்தல் தவறாகும். சொற்களின் வரலாறு நாட்டு வரலாற்றினையும், மக்கள் வரலாற்றினையும் உள் ளடக்கி நிற்பது. தத்துவ நூல், உளநூல், மக்கள் வரலாற்று நூல், முதலியவற்றிற்கு *மொழியாராய்ச்சி இன்றியமையாததாகும். இது மொழியின் சரிதத்திற்கு உடலும் உயிருமாய் நிற்பது. இலக்கிய சரிதத்திற்குங்கூட மிகப் பயன்படுவதாகும். ஆனால் இவ்வாராய்ச்சி செவ்வனே நிகழவேண்டுமாயின், பன்மொழிப் பயிற்சி வேண்டும்; சரிதப் பயிற்சி வேண்டும். ஆராய்ச்சி நெறியை நன்குணர்தல் வேண்டும். விருப்பு வெறுப்பின்றி உண்மை நாட்டம் வேண்டும். இவற்றை உடையார் சொல்லாராய்ச்சியை மேற்கொள்வாராயின் பெரிதும் பயன் விளைவதாகும்.

வையாபுரிப் பிள்ளை

"சொற்கலை விருந்து", பக். 80

---

* 'மொழியாராய்ச்சி' என்பது 'சொல்லாராய்ச்சி' என்றிருத்தல் வேண்டும். (ஆ–ர்)

வசனநடை

தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்தது. பல வருஷமாக வில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி. ஒருகதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிக்கை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது.

பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங் களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக் கத்தான் செய்யும். சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக் கும் போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ளவேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மனதில் சரியாகக் கட்டிவைத்துக் கொள்ளவேண்டும். பிறகு கோணல் திருகல் ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்லவேண்டும். முன் யோசனை இல்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால், பின்பு சங்கடமில்லை, ஆரம்பத்திலோ, மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைர்யமுமிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசனநடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தன்மை ஒழுக்கம் இவை நான்குமுடையதாக யிருக்கவேண்டும். ஒழுக்க மாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை, நமது தற்கால வசன நடைபால் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ்நடை எழுதும்.

பாரதியார், "பாரதியார் கட்டுரைகள்"

பூம்புகார் பிரசுரம், சென்னை.

மொழியியல் 4.1 & 2 (1980)

மீனவர் தமிழில் கலைச் சொற்கள்: ஓர் ஒப்பாய்வு

கே. வி. இராஜகுமாரி

சென்னைக் கடற்கரையில் வாழும் மீனவர்கள் தொன்று தொட்டு கட்டுமரத்தில் சென்று மீன் பிடித்து வருகிறார்கள். அது போன்றே கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் மீனவர்களும் கட்டு மரத்தில் சென்றுதான் தொழில் செய்து வருகின்றனர். ஆனாலும் இவ்விரு மக்களின் பேச்சு வழக்கிலுள்ள தொழில் பற்றிய கலைச் சொற்கள் பெருமளவில் வேறுபடுகின்றன. வேற்றுமைக்கான காரணங்கள் பின்வருமாறு.

1. அவர்கள் வாழுமிடங்கள் அடுத்தடுத்து இல்லாமல் நீண்ட நிலப் பரப்பு இடையூறாக இருப்பதால் அன்றாடச் செய்தித் தொடர்பு குறைவு

2. தொழில் செய்யும் இடமான கடலின் ஆழம், நிலத்தின் தன்மை, கடலின் அமைப்பு ஆகியன மாறுபட்டவை.

3. சென்னைக் கடற்கரையில் ஆழமற்ற கரைஓரமும், கடலி னடியில் பலதிறமான சேறும் காணப்படுகின்றது.

4. தெற்குக்கடற்கரை மலைப்பாங்கான இடமாதலால் ஆழ்கடல் அடிமட்டம் தெரியாத அளவு ஆழமாகவும் மூன்றுகடலும் கூடும் இடமாகவும் உள்ளது.

5. கடலின் இந்த மாறுபட்ட அமைப்பின் காரணமாக காற்றின் திசையும் மாறுபடுகிறது.

6. இறுதியாக சென்னை மீனவர் இந்து சமயத்தினராகவும், குமரி மாவட்ட மீனவர் கிறித்துவர்களாகவும் இருப்பதால் பழக்க வழக்க வேறுபாடுகளால் மொழியில் கலைச் சொற்களும் பிறமொழி குறுக்கீடும் காணப்படுகிறது. வேறுபாடுகள், கலைச்சொற்களில் மட்டுமன்றி மொழியின் எல்லா நிலை களிலும்(ஒலியனியல், சொல்லியல், இலக்கணம், சொற்கோவை) காணலாம்.

இக்கட்டுரையில் கலைச்சொற்களை மட்டுமே எடுத்துகொண்டு அவைகளின் வடிவம், பொருள் முதலியவற்றால் ஏற்பட்டுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் ஆராயப்பட்டுள்ளன.

1. கட்டுமரமும் அதன் பாகங்களும்.

1. 1. கட்டுமரம்

	சென்னை	**குமரி**	**பொருள்**
1.	கட்டுமரம்	கட்டுமரம்	கட்டுமரம்
2.	பெரியமரம்	பெரியமரம்	பெரியகட்டுமரம்
3.	குத்ரி	——	சிறியகட்டுமரம்

'குத்ரி என்ற சிறிய கட்டுமரம் பெரிய மரத்திற்குத் துணையாக வலது, இடது பக்கங்களில் செல்லும். குமரிக்கடற்கரையில் இவ் வழக்கம் இல்லை. ஆதலால் அதற்குத் தனி சொல் இல்லை.

1.2. கட்டுமரத்தின் பாகங்கள்

ஒரு பெரிய மரத்திற்கு கன்னியாகுமரியில் நான்கு மரங்களை இணைத்துக் கயிற்றினால் கட்டுவார்கள். சென்னையில் ஐந்து மரங்

களை இணைத்துக் கட்டுவார்கள். அவைகளின் பெயர்கள் முறையே கொடுக்கப்பட்டுள்ளன.

	சென்னை	குமரி	பொருள்
a)	1 நடு இருக்கெ	——	நடுவில் உள்ள ஒரு பெரிய மரம்
b)	——	நடுக்கட்டி	நடுவில் உள்ள இரண்டு பெரிய தடிகள்
c)	2 வல பர்த்து இருக்கெ	1. கச்சான் நடுக்கட்டி	பெரிய தடிகள்
d)	3 எட பர்த்து இருக்கெ	2. கொண்டெ நெடுக்கட்டி	
e)	கொம்பு	தொறொம்	
	4 வலப்பர்த்து கொம்பு	4. கச்சான் தொறொம்	ஓரங்களிலுள்ள இரண்டு சிறிய தடிகள்
	5 எடபர்த்து கொம்பு	5. கொண்டெ தொறொம்	





1. நடு இருக்கெ	1. கொண்டெ நடுக்கட்டி
2. வலபர்த்து இருக்கெ	2. கச்சான் நடுக்கட்டி
3. எடபர்த்து இருக்கெ	3. கொண்டெ தொறொம்
4. வலபர்த்து கொம்பு	4. கக்சான் தொறொம்
5. எடபர்த்து கொம்பு	

குமரி மீனவர்கள் தெற்கு நோக்கி கடலில் செல்வதால் வலது பக்கம் உள்ள மரத்தை 'கச்சான்' என்றும், இடது பக்கம் உள்ளதை 'கொண்டெ' என்றும் கூறுகின்றனர். மேலும் 'கொண்டல்' கிழக்கு 'கச்சான்' மேற்கு ஆகும். இவை திசைகளைக் குறிக்கும் சொற்கள் என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. சென்னை மீனவர்கள் இம்

முறையைப் பின்பற்றவில்லை. வலம், இடம் என்ற சொற்களையே பயன்படுத்துகின்றனர். மேலும் 'கொம்பு' என்ற சொல் குமரியில் வழங்கும் 'தொறொம்' என்ற சொல் குறிக்கும் மரத்தினையே சுட்டுகிறது.

*	சென்னை	குமரி	பொருள்
5	தலெயா/அணியம் (கட்டுமரம்)(படகு)	அணியம் (கட்டுமரம்)	தலைப்பகுதி/ முன்பகுதி
6	கடையா/அமரம் (கட்டுமரம்)(படகு)	கடியா (கட்டுமரம்)	பின்பகுதி/வால்பகுதி
7	தளா	தொளவு/வெ	துடுப்பு
a	—	ஓடுபலவெ/வெ	துடுப்பின் வகைகள்
b	—	ஒட்டுதொளவெ	துடுப்பின் வகைகள்
c	—	போட்டோடு தொளவெ	துடுப்பின் வகைகள்
8	பாய்	பா	பாய்
9	காப்பா(ய்)	—	பாயின் ஒரு பகுதி
10	—	குச்சொம்	கயிறு
11	பலதும்பு கயிறு	—	கயிறு
12	—	ஆஞ்சபெறொம்	கயிறு
13	வாரியங்கயிறு	—	கயிறு
14	—	தலவடொம்	தலைக் கயிறு
15	கீழ்தண்டு கயிறு	—	கயிறு
16	தாம்ணி	தாமான்	பெரிய கயிறு
17	—	வங்கட்டு	இரண்டு பக்கமும் உள்ள கட்டு
18	—	நடுக்கட்டு	நடுவிலுள்ள கட்டு

தொழில் செய்ய மீனவர்கள் இரவில் கடல் மேல் செல்லும் பொழுது விண்மீன்களே நேரத்தையும், திசையையும் அறிய உதவு

* இக்கட்டுரையில் இனி இம்முறையிலேயே எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.

கின்றன. விண்மீன்களை வெள்ளி என்றழைக்கின்றனர். இரு வட்டார மீனவர்களிடமும் வழங்கும் சொற்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, இருவரும் பொதுப்பெயரால் வழங்குவன; இரண்டு, சென்னை மீனவர் மட்டும் வழங்குவன; மூன்று குமரி மீனவர் மட்டும் வழங்குவன.

பொது	பொருள்
ஆராம் வெள்ளி/ஆராமீன்	ஆறு வெள்ளிகளின் கூட்டம்
உச்சி வெள்ளி	தலைக்குமேல் உச்சியில் உள்ளது
ஒலக்கெ வெள்ளி	உலக்கை வடிவானது
கப்ப வெள்ளி	கப்பல் வடிவானது
கூட்டு வெள்ளி	கூட்டமாக இருப்பது
சோத்து வெள்ளி	சோறு சாப்பிடும் நேரத்தில் தோன்றுவது
விடி வெள்ளி	அதிகாலையில் தோன்றுவது

சென்னை மீனவர்களிடையே மட்டும் வழங்குவன

சங்கு வெள்ளி	சங்கு வடிவம்
செட்டிய குடிகெடுத்த வெள்ளி	விடிவெள்ளிபோல நடுஇரவில் தெரிவது
த்ராசு வெள்ளி	தராசு வடிவம் போன்றது
தெக்குத்தி வெள்ளி	தென்திசையில் உள்ளது
நங்கூரவெள்ளி	நங்கூரவடிவம்
பெரிய வெள்ளி	பெரிய வடிவம்
மொத வெள்ளி	முதலில் தெரியும் மீன்
ரெட்ட வெள்ளி	ரோடுபோல தொடர்ச்சியாக உள்ளவை
வடக்கத்தி வெள்ளி	வடதிசையில் உள்ளது.

கன்னியாகுமரி மீனவர்களிடையே சட்டும் வழங்குவன

குர்சு வெள்ளி*	சிலுவை வடிவ மீன்
எரிஞ்சான் வெள்ளி	வால் நட்சத்திரம்

குர்சு வெள்ளி என்பது கிறித்துவ மதத்தினரின் சிலுவை வடிவம் போல உள்ள வெள்ளி மீன்களின் கூட்டம். ஆங்கிலச் சொல்லான 'கிராஸ்' தமிழில் 'குர்சு' என்று குறுக்கீடாக அல்லது கடனாக வந்து வழங்கும் சொல்லாக இருக்கலாம். காற்றின் பெயர்கள் பல இம்

மக்களிடையே பெரிதும் வழக்கில் இருந்துவருகின்றன. கட்டுமரத்தில் பாய் விரித்து காற்றின் உதவியால் கடல்மேல் செல்லவும், கரைக்குத் திரும்பவும் பாய் உதவுகிறது; பாயைத் தள்ள காற்று இன்றியமையாத கருவியாக கட்டுமர வாழ்க்கைக்கு மிகவும் பயன்தரக்கூடியதாக இருந்துவருகிறது. அண்மைக் காலத்தில் விசைப்படகு பயன்படுத்து வோருக்கு இக்காற்று கட்டுமரத்தில் செல்வோர்க்கு பயன்படும் அளவு பயன்படுவதில்லை. அவர்கள் காற்றின் திசையை எதிர்த்தும் செல்ல முடிகின்றது. இதுபோன்றே கடலில் உள்ள நீரோட்டமும் அலை களின் நிலைகளும் இம்மக்களின் தொழிலுக்குத் துணைசெய்கின்றன.

காற்றின் பெயர்கள்	பொருள்
கொண்டல்	கீழ்த்திசையிலிருந்து மேற்கு நோக்கி வீசும் காற்று கடல்காற்று (வங்காள விரிகுடா) நிலத்தை நோக்கி வீசுகிறது.
கோடை	மேற்கு திசையிலிருந்து கிழக்குநோக்கி வீசும் காற்று.
வாடை	வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசும் காற்று, பெரும்பாலும் குளிர்காற்றாக இது அமையும்.
தென்றல் அல்லது சோழகன்	தென் திசையிலிருந்து வடக்குநோக்கி வீசும் காற்று. (சோழ நாட்டிலிருந்து பல்லவ நாட்டிற்கு வீசுவதால், (சென்னை பல்லவநாட்டின் ஓர் பகுதி யாக முன்னர் இருந்தது.) சோழகன் என்று பெயர்பெற்றது. பின்னர் இச் சொல்லை இணைமொழி வழக்கி லிருந்து கடனாகப்பெற்று. குமரி மாவட்டத்தினர் வழங்கியிருக்கக் கூடும்).

வாடை, கோடை, தென்றல், கொண்டல் என்ற நான்கு பெயர் கள் மட்டுமே தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்த சொற்களாகும். மீனவர்களிடையே மேலும் பல கலைச் சொற்களைக் காணலாம்.

கச்சான்	தெற்கிலிருந்து வீசும் உலர்ந்த காற்றினை 'கச்சாங்காத்து' என்பர்
கச்சான் கோடை	தென்மேற்கு திசையிலிருந்து வீசும் காற்று
சோழ கொண்டல்	தென்கிழக்கிலிருந்து வீசும் காற்று
வாட கொண்டல் (அல்லது) ஈராங் காத்து	வடகிழக்கிலிருந்து அப்பருவ மழையின் பொழுது ஈரப்பசையுடன் கூடி வீசுவதால் இப்பெயர் பெற்றது.
வடமறை	வடக்கிலிருந்து விட்டுவிட்டு வீசும் காற்று
குன்னு வாடே	நேர் வடக்கிலிருந்து / அதாவது இமய மலையிலிருந்து வீசுவதாக எண்ணும் கடுங்குளிர் காற்று
வடகோடெ	வடமேற்கு திசையிலிருந்து வீசும் காற்று
சல்வா	நேர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசும் காற்று
மூலச் சல்வா	தென்மேற்கிலிருந்து வீசும் காற்று

கொண்டல், கோடை, வாடை, தென்னெகாத்து, கச்சான், கச்சான் கோடை ஆகியன கன்னியாகுமரி மீனவர்களிடமும் வழங்கி வருகின்றன. இவர்களிடம் சோழகன் > சோளவென் என ளகரம் பெற்றும் ககரம் வகரமாகத் திரிந்தும் வழங்குகிறது. பின் கூறப்படும் நான்கு காற்றின் பெயர்களும் குமரி மீனவர்களிடம் மட்டுமே காணப்படுகிறது.

சுளிக்காத்து	சுழித்துக்கொண்டு அடிக்கும் காற்று—சுழல்காற்று
கொந்தளிப்பு	கடல் கொந்தளிப்பினால் ஏற்படும் காற்று,

எளவல்	மெதுவான காற்று
கஞ்சி கள்ளகாத்து	கஞ்சியை களவுசெய்யும் காற்று.

காற்றின் வேகத்தில் இவர்கள் கொண்டுசெல்லும் உணவு மூட்டையை தூக்கிக்கொண்டு போய்விடும் அளவு வேகமான புயல் காற்று.

நீரோட்டத்தின் பெயர்கள்

சென்னை	குமரி	பொருள்
தென்னி	—	தெற்கிலிருந்து ஓடும் நீர்
சோனிவெள்ளம்	சோனவாடு	தெற்கிலிருந்து ஓடும் நீர்
வன்னிவெள்ளம்	வானவாடு	வடக்கிலிருந்து தெற்கே ஓடும் நீர்
வன்னிமேமுறி	—	வடமேற்கிலிருந்து தென்கிழக்கே ஓடும்நீர்
ஒய்னி	—	மேற்கிலிருந்து கிழக்கே ஓடும் நீர்
தென்னி தெம்மா ஒய்னி	—	தென் கிழக்கிலிருந்து வடமேற்கே ஓடும்நீர்
மேமுறி	—	கிழக்கிலிருந்து மேற்கே ஓடும் நீர்
ஒய்னி	கரைநீரு	கரையை நோக்கி வரும் நீர்
மேமுறி	பொறெநீரு	கடலினுள் செல்லும் நீர்
—	தாந்தனிவாடு	தாழ்ந்த நீரோட்டம்
—	மே நீ(ர்) வாடு	மேல் நீரோட்டம்
—	அடி நீ(ர்) வாடு	அடியிலுள்ள நீரோட்டம்

கல்லுவாடு	—	அலையின்றி இருத்தல்
ஏறிணி / கடல் வெள்ளம்	பொங்கல்	கடல்நீர் மிகுதல்
வத்தம்	வாந்துபோறது	கடல்நீர் வற்றிப் போதல்

மீனவர் பேச்சில் "கவ்ரு" நிறம் "புள்ளிக் கவ்ரு" மாலையில் கடல்நீர் பொன்னிறமாக உள்ள நிறம் "கவ்ரு மாதது" காலையில் கடல்நீர் சூரிய உதயத்தின் பொழுது உள்ள நிறம், ஆகிய மூன்று புதுகலைச் சொற்கள் காணப்படுகின்றன.

அலையின் வகைகளும் பெயர்களும்

சென்னை	குமரி	பொருள்
மத்தெ/ அலெ	அலெ	அலை
சின்ன மத்தெ	எரெச்ச(ல்)	சிறிய அலை
கடல் ஓசப்பு	கடலடி	பெரிய அலைகள் அடித்தல்
கடல் தணிவு	கடலெரச்சல்	சிறிய அலைகள் அடித்தல்
—	ஓய்ப்பு	அலையின் உச்சி
வாங்கியா	—	இரண்டு அலைகளுக்கும் இடையிலுள்ள தாழ்வான பகுதி
வயல்	சேல்	அமைதி
கடல்வெள்ளம் / வெள்ளாப்பு	கடல் வெள்ளம்	கடலில் நீர் அதிகமாக உயர்ந்து இருத்தல்

வலைகளின் பெயர்கள், அளவு ஆகியன வேறுபடுகின்றன. இஃது அவர்கள் வாழுமிடங்களாலும், கிடைக்கும் மீன்களின் வகைகளாலும் வேறுபடுகின்றன எனலாம். அவைகளை அளந்து வலையின் கண்ணின் அளவு, நீளம், அகலம் எந்த வகைக் கயிற்றினால்

உருவாக்கப்பட்டது என்ற செய்திகளைத் தொகுத்தால் வருங்கால தமிழ் சமுதாயத்திற்கு மிகுந்த கலைச் சொற்கள் கிடைக்கும்.

சென்னையில் மீன்பிடி தொழிலுக்குப் பயன்படும் வலைகள்

1. உள்ளா வலெ
2. எடெ வலெ
3. குழிவலெ
4. கோலாவலெ
5. சாதா வலெ
6. சிறுக்கா வலெ
7. சின்னகண்ணு வலெ
8. தூரி
9. நடுத்தெரத்து வலெ
10. பரண்டா வலெ
11. பெரியகண்ணு வலெ
12. மாணிக்க வலெ
13. மோர வலெ
14. வாளா வலெ
15. வெள்ளா வலெ
16. ரெட்ட வலெ
17. றாலு வலெ

கன்னியாகுமரியில் பயன்படும் வலைகள்

1. கச்சா வலெ
2. கோளீயாமுறல் வலெ
3. சாளா வலெ (பெரிய வலெ)
4. தருத்து வலெ (சாளா வலையில் சிறியது)
5. பாச்சு வலெ
6. வளி வலெ
7. வாளா வலெ
8. றாலு வலெ (பொடியான கண்களை உடையது)

வலையின் பாகங்கள்

சென்னை	குமரி	பொருள்
மெலப்பு/கட்டெ ஆக்கெ	மொதப்பை/புளோட்டு (float)	மிதவைக் கட்டை
கல்லு/கல் ஆக்கெ	சிங்கர் (Sinker)	வலையின் அடிப்பக்கம் உள்ள கல்
சீனி	நங்கூரக் கல்லு	கல்நங்கூரம்
நங்கூரொம்	இரும்பு	இரும்பு நங்கூரம்

ஒரு தடவை வலைவீசி, வலையை இழுத்து அதில் கிடைக்கும் மீனை சேகரிப்பர்; இவ்வாறு செய்யும் செயல் ஒருபாடு பார்த்தலாகும்.

'இண்ணெய்க்கி பத்து பாடு பார்த்தேன்' என்பர்.

இதனை குமரி மீனவர்கள்

'இண்ணெய்க்கி பத்து வாடு வளைச்சேன்' என்பர்.

பாடு > வாடு என பகரம் வகரமாக மொழி முதலில் திரிந்துள்ளது. இரண்டு உயிர்களின் நடுவில்தான் பகரம் வகரமாக சென்னை மீனவர் மொழியில் மாறும்.

(எ-டு) கோபம் > கோவொம்
பகல் > பவுலு

துழாவு என்ற சொல்லிலிருந்து ழ > ளகரமாகத் திரிந்து பேச்சுத் தமிழுக்குரிய ஒலி மாற்றங்களின் அடிப்படையில் 'தொளவெ' என்றாயிற்று. சென்னை மீனவர் பேச்சில் ழகரம் கெட்டு உயிர் நீண்டு துழாவு > தாவு என்றாயிற்று.

சென்னை	குமரி	பொருள்
குறுப்பு	கணியம் / கணிசம்	குறிப்பு / கணிசம்
பாரு	பாறு	கல்யுறை
மாப்பு	மண்டல்	மீன்கூட்டம்

குமரி மீனவர் பேச்சில் வேளாமண்டல், வங்கடமண்டல் என அம் மீன் பெயருடன் 'மண்டல்' என்ற சொல் சேர்ந்து கூட்டம் என்ற பொருளில் வழங்குகிறது. வேளா மண்டல் = வேளாமீனின் கூட்டம்; வங்கடமண்டல் = வங்கட மீனின் கூட்டம்.

குமரி மாவட்ட மீனவர்கள் ஓரளவு கல்வியறிவும் கிறிஸ்துவ மதத்தினால் வெளித்தொடர்பும் உள்ளவர்களாக இருப்பதால் சென்னை மீனவர்களைவிட அதிக அளவில் ஆங்கிலக் கலைச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். தாம் பொருள் வாங்கும்பொழுது விற்கின்றவர்கள் கூறும் ஆங்கிலப் பெயரையும் கடன் சொற்களாகப் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர்.

(எ-டு) Float — ஃபுளோட்டு
Sinker — சிங்கர்
Colour — கலர்
Gill net — கில்நட்டு
Season — சீசன்
Anchor — ஆங்கர்

நண்டு, சங்கு, மீன் ஆகியவற்றின் பெயர்கள் விரிவஞ்சி இக் கட்டுரையில் ஒப்பிடவில்லை. மேலும் விசைப்படகினால் செய்யும் தொழில் பற்றிய கலைச் சொற்களும் இடம் பெறவில்லை. தமிழகக் கடற்கரைகளில் தொழில்புரியும் மீனவர் பேச்சுத் தமிழில் வழங்கும் கலைச் சொற்களைச் சேகரித்து வகைப்படுத்தி தமிழ்ப் பேரகராதியில் சேர்த்தால் மொழிவளம் பெருகும் என்பதில் ஐயமில்லை.

மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

சீனிவாசவர்மா, கோ. 1974 'கிளை மொழியியல்: மீனவர் தமிழ்' **ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை,** பக். 780-784, பாண்டிச்சேரி.

Chidambaranathan Pillai V. 1970 Fishermen Dialect of Tamil (Unpublished M.A. Thesis Annamalai Nagar)

Rajakumari K.V. 1980 'Phonological changes in Fishermen dialect' 12th Conference a:yvukko:vai P. 413-418 Tuticorin.

மொழியியல் 4.1 & 2 (1980)

தமிழில் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம்

ப. பத்மநாபபிள்ளை

1. பிரதிப் பெயராக்கம்

வாக்கியங்களில் ஒரே பெயர்த்தொடர் மீண்டும் மீண்டும் வருவதைத் தவிர்ப்பதற்காக பெயர்த்தொடரைப் பிரதிப் பெயராய் மாற்றுவதே பிரதிப் பெயராக்கம் (pronominalization) எனப்படும் மாற்றியம் (transformation) ஆகும். இம் மாற்றியம் எல்லா மொழிகளிலும் காணப்படுகிறது. ஒரு பெயர்த் தொடருக்குப் பதிலாகச் செயல்படும் பிரதிப் பெயர் முதலிலுள்ள பிரதிப்பெயர் (anaphoric pronoun) எனவும், அப்பிரதிப்பெயர் சுட்டி நிற்கும் பெயர்த்தொடர் முதற்பெயர் (antecedent) எனவும் குறிக்கப் பெறுகின்றன. இப்பிரதிப் பெயராக்கத்தை முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் (forward pronominalization), பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் (backward pronominalization) என இருவகையாகப் பிரிக்கலாம். உலக மொழிகள் எல்லாவற்றிலும் முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் காணப்படுகிறது. ஆனால் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் சில மொழிகளில் மட்டுமே காணப்படுகிறது. தமிழில் இருவகைப்பட்ட பிரதிப்

பெயராக்கங்களும் காணப்படுகின்றனவா அல்லது ஒரே வகையான பிரதிப் பெயராக்கம்தான் காணப்படுகிறதா என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

1.1. முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம்

இவ்வகைப் பிரதிப் பெயராக்கத்தில் பிரதிப் பெயர் பின்னரும், அது சுட்டி நிற்கும் பெயர்த் தொடர் முன்னரும் வரும். இதனைக் கீழ்வரும் வாக்கியங்களில் காணலாம்.

1. இராமன் தன் வீட்டிற்குச் சென்றான்
2. சீதா தன் மாமியோடு சென்றாள்
3. சுரேஷ் தன் குடையை எடுத்துக்கொண்டு சென்றான்
4. கண்ணன் தன் கத்தியால் வெட்டினான்

மேற்கண்ட வாக்கியங்களில் முதற் பெடர்களான இராமன், சீதை, சுரேஷ், கண்ணன் ஆகியவை முன்னரும், பிரதிப் பெயரான தன் என்பது பின்னரும் வருகின்றன. ஆகவே, இவ்வாக்கியங்களில் காணப்படுவதை முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் எனலாம்.

1.2. பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம்

இவ்வகைப் பிரதிப்பெயராக்கத்தில் பிரதிப்பெயர் முன்னரும் அது சுட்டிநிற்கும் பெயர்த் தொடர் பின்னரும் வரும். எடுத்துகாட்டாக,

5. தன் வீட்டிற்கு இராமன் சென்றான்
6. தன் மாமியோடு சீதா சென்றாள்
7. தன் குடையை எடுத்துக்கொண்டு சுரேஷ் சென்றான்
8. தன் கத்தியால் கண்ணன் வெட்டினான்

போன்ற வாக்கியங்களைக் கூறலாம். இவ்வாக்கியங்களில் பிரதிப் பெயர் தன் முன்னரும் முதற்பெயர் பின்னரும் வருவதைக் காண லாம். ஆகவே, இதை பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் எனலாம்.

2. பிரதிப் பெயராக்க, இடமாற்று விதிகளின் வரன்முறை

தமிழில் முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் மட்டுமே காணப் படுகிறது என்றும், 1.2ல் காணப்படுவது போன்ற வாக்கியங்களை

(5–9) இடமாற்றுவிதி (permutation) யைப் பயன்படுத்தித் தருவிக்க லாம் என்றும் ஒரு சாரார் கருதலாம். இவ்வகையில் இவ்வாக்கியங் களைத் தருவிக்கையில் 'மாற்று விதிகளின் வரன்முறை (ordering) கீழ் வருமாறு இருக்கும்.

1. பிரதிப் பெயராக்க விதி
2. இடமாற்று விதி.

இந்த வரன் முறையைப் பின் பற்றினால் (5–8) வாக்கியங்களில் காணப்படுவது முன்னோக்குப் பிரதிப் பெயராக்கமே. பிரதிப் பெய ரும், முதற்பெயரும் முறையே முன்பின்னாகக் காணப்படுவது இட மாற்றுவிதியின் காரணமாகத்தான் என்று கருத இடமுண்டாகிறது.

இனி, கீழ்வரும் வாக்கியங்களைக் காண்போம்.

9. இராமன் பக்கததில் அவன் மனைவி இருந்தாள்
10. சீதா பருவமடைந்தபோது அவளுக்கு வயது பதினேழு
11. சுரேஷ் அங்கு போனபோது அவனுக்கு எல்லாம் புரிந்தது
12. கண்ணன் அங்கு வந்தபோது அவன் சகோதரியும் வந் திருந்தாள்

மேலே காணும் வாக்கியங்களின் புதைநிலை அமைப்பு வாக்கியங்கள் கீழ்வருமாறு இருக்கும்.

9. a. இராமன் மனைவி இராமன் பக்கத்தில் இருந்தாள்
       i   i

10. a. சீதாவுக்கு சீதா பருவமடைந்தபோது வயது பதினேழு
       i   i

11. a. சுரேஷிற்கு சுரேஷ் அங்கு போனபோது எல்லாம் புரிந்தது
       i   i

12. a. கண்ணனின் சகோதரியும் கண்ணன் அங்கு வந்தபோது வந்திருந்தாள்
       i   i

இப் புதைநிலை அமைப்பு வாக்கியங்களை மேலே கண்ட வரன் முறையைப் பின்பற்றி புறநிலை வாக்கியங்களாக மாற்றுகையில், முதலில் பெயர்த் தொடர்கள் பிரதிப் பெயர்களாக மாற்றப்படும்.

9. b. இராமன் மனைவி அவன் பக்கத்தில் இருந்தாள்

10. b. சீதாவுக்கு அவள் பருவமடைந்தபோது வயது பதினேழு

11. b. சுரேஷுக்கு அவன் அங்கு போனபோது எல்லாம் புரிந்தது

12. b. கண்ணனின் சகோதரியும் அவன் அங்கு வந்தபோது வந்திருந்தாள்.

பின்னர் கட்டாயமில்லா மாற்றியமான (**optional transformation**) இடமாற்று விதியைப் பயன்படுத்தினால் கீழ்வரும் ஏற்றுக்கொள்ளத் தகாத வாக்கியங்களே கிடைக்கும்.

9. c. *அவன் பக்கத்தில் இராமன் மனைவி இருந்தாள்

10. c. *அவள் பருவமடைந்த போது சீதாவுக்கு வயது பதினேழு

11. c. *அவன் அங்கு போனபோது சுரேஷுக்கு எல்லாம் புரிந்தது

12. c. *அவன் அங்கு வந்தபோது கண்ணனின் சகோதரியும் வந்திருந்தாள்

பிரதிப் பெயர்களான அவன் அவள் ஆகியவை முதற்பெயருக்கு முன்னர் வர இயலாது. இவை எப்போதும் முதற்பெயரை அடுத்தே வரும். ஆகவே மேற்கண்ட வாக்கியங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல.

ஆகவே, (9–12) போன்ற வாக்கியங்களைத் தருவிப்பதற்கு மாற்றுவிதிகளின் வரன்முறையைக் கீழ்வருமாறு அமைக்கவேண்டி உள்ளது.

1. இடமாற்று விதி
2. பிரதிப்பெயராக்க விதி

இந்த வரன்முறையின்படி, முதலில் இடமாற்று விதியைப் பயன் படுத்தி (9a–12a) வாக்கியங்களிலிருந்து கீழ்வரும் வாக்கியங்களைத் தருவிக்கலாம்.

9. d. இராமன் பக்கத்தில் இராமன் மனைவி இருந்தாள்

10. d. சீதா பருவமடைந்தபோது சீதாவுக்கு வயது பதினேழு

11. d. சுரேஷ் அங்கு போனபோது சுரேஷுக்கு எல்லாம் புரிந்தது

12. d. கண்ணன் அங்கு வந்தபோது கண்ணனின் சகோதரியும் வந்திருந்தாள்

இதன் பின்னர் பிரதிப் பெயராக்கம் செயல்படுகையில் நாம் தருவிக்க வேண்டிய (9–12) வாக்கியங்கள் கிடைக்கின்றன. ஆகவே தமிழ் மொழியில் இடமாற்று விதிமுன்னரும், பிரதிப் பெயராக்கம் பின்னரும் செயல்படுவதே சரியான வரன்முறை என்று உறுதியாகின்றது.

3. தமிழில் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம்

இனி, (5–8) போன்ற வாக்கியங்களில் காணப்படுவது முன்னோக்குப் பிரதிப் பெயராக்கமா அல்லது பின்னோக்குப் பிரதிப் பெயராக்கமா என்று காண்போம். இவ்வாக்கியங்களின் புதைநிலை அமைப்பு வாக்கியங்கள் கீழ் வருமாறு இருக்கும்.

5. a. இராமன் இராமன் வீட்டிற்குச் சென்றான்
i i

6. a. சீதா சீதாவின் மாமியோடு சென்றாள்
i

7. a. சுரேஷ் சுரேஷின் குடையை எடுத்துக்கொண்டு சென்றான்
i i

8. a. கண்ணன் கண்ணனின் கத்தியால் வெட்டினான்
i i

முதலில். இடமாற்று விதியைப் பயன்படுத்திக் கீழ்வரும் வாக்கியங்களைத் தருவிக்கலாம்.

5. b. இராமன் வீட்டிற்கு இராமன் சென்றான்

6. b. சீதாவின் மாமியோடு சீதா சென்றாள்

7. b. சுரேஷின் குடையை எடுத்துக் கொண்டு சுரேஷ் சென்றான்

8. b. கண்ணனின் கத்தியால் கண்ணன் வெட்டினான்

பின்னர், பிரதிப்பெயராக்கம் செயல்படுகிறது.

5. c. தன் வீட்டிற்கு இராமன் சென்றான்

6. c. தன் மாமியோடு சீதா சென்றாள்

7. c. தன் குடையை எடுத்துக் கொண்டு சுரேஷ் சென்றான்

8. c. தன் கத்தியால் கண்ணன் வெட்டினான்

இவ்வாக்கியங்களில் காணப்படுவது பின்னோக்குப் பிரதிப்பெயராக்கமே. ஏனெனில் பிரதிப்பெயர் முன்னரும், முதற்பெயர் பின்னரும் வருகின்றன.

தமிழில் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் பிரதிப்பெயர் தான், அதன் வேற்றுமைத் திரிபுச் சொற்கள் ஆகியவற்றில் மட்டுமே காணப்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. படர்க்கைப் பிரதிப் பெயர்களான அவன், அவள், அவர்கள், அது, அவை, ஆகியவை பின்னோக்குப் பிரதிப் பெயராக்கத்தில் காணப்படுவதில்லை.

மேற்கண்ட ஆய்வின் முடிவாக தமிழில் முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் இரண்டுமே காணப்படுகின்றன. எனவும், முன்னோக்குப் பிரதிப் பெயராக்கம் தான், அவன் ஆகிய இரு பிரதிப் பெயர்களிலுமே காணப்படுகிறது எனவும், பின்னோக்குப் பிரதிப் பெயராக்கம் தான் என்ற பிரதிப் பெயரில் மட்டுமே காணப்படுகிறது எனவும் நாம் கொள்ளலாம்.

மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நன்றியுரை :

இக்கட்டுரையை உருவாக்குவதில் ஆலோசனைகள் கூறி உதவி செய்த மொழியியல்துறை ஆராய்ச்சி மாணவி செல்வி எம். சுசீலாவிற்கும், ஆராய்ச்சி மாணவர் திரு எம். ஞானத்திற்கும் என் நன்றி.

சாதிக் கிளை மொழியா? சமூகக் கிளை மொழியா?

ச. மனோகரன்

தாய்மொழியாளராகிய (native speaker) நமக்கு மொழியைப் பற்றிய ஏராளமான உண்மைகள் நம் மனக்கண் முன் உள்ளன. இதனாலேயே நாம் மொழியில் விவரித்துக் கூறவேண்டியது இனி ஒன்றும் இல்லை என்னும் மாயவலையில் விழுந்து விடுகிறோம் என்று கூறுவார் சம்ஸ்கி (Chomsky, 1972). குழந்தைப்பருவம் முதல் நாம் நம்முடைய தாய் மொழியை (mother tongue) பல சந்தர்ப்பங்களில் இடம், பொருள் காலத்திற்குத் தகுந்தவாறு பேசிக் கொண்டிருப்பதால் நாம் மொழியைப் பற்றிச் சிந்திப்பதே கிடையாது. அதே நேரத்தில் மொழியைப் பற்றியும், மொழியின் கண் புதைந்து கிடக்கின்ற சமூக உண்மைகளைப் (social reality) பற்றியும் சிறிது ஆழமாக நோக்கு வோமேயானால் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. மொழியானது சமூக உண்மைகளைக் காட்டும் நண்பன் என்றான் சபீர் (Hoijer, 1962). மொழி என்பது சமூக அடிப்படையில் பயிற்றுவிக்கப்படும் ஒரு பழக்கம் (socially learned habit) என்பார் கேல்கர் (Kelkar,

1969). இவ்வாறு மொழி சமூக அடிப்படையில் தானாகவே பயிற்றுவிக்கப்படுவதால் தாய் மொழியாளர்களும் அவர்களுடைய கலாச்சார பண்பாட்டுக் கூறுகளையும் **(cultural factors)** இடைச் சூழ்நிலைக் கூறுகளையும் **(ecological factors)** தங்களுடைய பேச்சு மொழியில் **(spoken language)** கொண்டுள்ளனர். இந்த அடிப்படையில்தான் எழுத்து வடிவம் பெற்றிருந்ததாக இருந் தாலும் சரி, எழுத்து வடிவம் இல்லாததாக இருந்தாலும் சரி, தற்கால நாகரீகத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நகரங்களில் வாழும் மக்க ளால் பேசப்பட்டாலும் சரி, கற்கால நாகரீகத்திலேயே இன்னும் திளைத்திருக்கும் பழங்குடி மக்களால் **(tribals)** பேசப்பட்டாலும் சரி' பத்துகோடி மக்களால் பேசப்பட்டாலும் சரி, பத்தே பேர்களால் பேசப் பட்டாலும் சரி எந்த ஒரு மொழியும் உயர்ந்த மொழி அல்லது பண்படுத்தப்பட்ட மொழி என்றும், தாழ்ந்த மொழி அல்லது பண் படுத்தப்படாத மொழி என்றும் பாகுபாடு படுத்தப்பட முடியாதது. அதாவது எல்லா மொழிகளும் ஒரே சமமாகவே மதிக்கப்படுகின்றது.

கன்னித் தமிழ் **(virgin Tamil)** என்று தமிழர்கள் தமிழ்மொழியை வர்ணித்தாலும், பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையே எனும் தொல்காப்பியனாரின் கூற்றால், மொழி காலப்போக்கில் மாறிக் கொண்டிருக்குமேயல்லாது ஒருநிலைத் தன்மை **(static)**யைக் கொண்டதல்ல எனும் உண்மை தொல்காப்பியர் காலந்தொட்டே அறிந்ததொன்றாகும். மேலும் ஒரு மொழியானது பிறிதொரு மொழி யோடு, பேசும் மக்களின் மூலமாக, உறவாடும் சந்தர்ப்பம் ஏற்படுமே யானால் அங்கு இரு மொழிகளுக்கும் இடையே கடன் வாங்குதல் **(borrowing)**, நெகிழ்ச்சி **(diffusion)** முதலியன சமுதாயக் கூட் டிணைப்பின் **(social acculturation)** காரணமாக ஏற்படுகின்றன. எனவே சமுதாயக் கூட்டிணைப்பின் காரணமாக மொழியியல் கூட் டிணைப்பும் **(linguistic acculturation)** நிகழ்கின்றது. தொல் காப்பியர் சமஸ்கிருத **(sanskrit)** மொழிச் சொற்களைத் தமிழில் கையாளப்படவேண்டிய விதி முறைகள் பற்றிக் கூறுவதிலிருந்து, மொழியியல் கூட்டிணைப்பு நிகழ்ந்தாலும் அதனால் மொழியின் புனிதத்தன்மை **(purity of language)** மாறிவிடக் கூடாது என்று தமிழர்கள் பழங்காலந்தொட்டே பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து தமிழின் தனித் தன்மைகளைக் காப்பாற்ற முனைந்தனர் என்பது

தெளிவாகின்றது. எந்த ஒரு கலாச்சாரமும் தன்னந்தனியானதாக (isolated), எல்லாம் தன்னகத்தே கொண்டதாக (self contained), தனித் தன்மையுடையதாக (unique) விளங்கியது கிடையாது என்பார் சமூக மானிடவியலார் (social anthropologist) (Hoijer, 1962). அதுபோலவே மனிதனின் கலாச்சாரக் கூறுகளில் முக்கிய அங்கம் வகிக்கும் மொழியும் அதற்குரிய தனித்தன்மைகளை (unique features) சொல் (word), பொருள் (meaning), இலக்கணக் கூறுகள் (grammatical features) போன்றவற்றில் கொண்டுள்ளதாக இருந்தாலும், பிறமொழி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டிருக்க இயல வில்லை. ஆகவேதான் இந்தியத் துணைக்கண்டத்தில் பேசப்படு கின்ற திராவிட (Dravidian), இந்தோ–ஆரியன் (Indo-Aryan), ஆஸ்ட்ரோ–ஆஸியாடிக் (Austro-Asiatic), திபெத்தோ–பெர்மீய (Tibeto-Burman) மொழிக் குடும்பங்களின் கூறுகளில் சில ஒரு மொழிக் குடும்பத்திலிருந்து ஏனைய மொழிக் குடும்பங்களுக்குச் சமுதாயக் கூட்டிணைப்பின் காரணமாகக் கடன் வாங்கப்பட்டிருக் கின்றது, அல்லது நெகிழ்ந்திருக்கின்றது.

இலக்கண இலக்கியப் பாரம்பரியம் கொண்ட மொழிகள் பேச்சு மொழியிலும் (spoken language) எழுத்து மொழியிலும் (written language) வேற்றுமைகள் (variation) கொண்டதாக விளங்குகின்றது. மேலும் பல சாதிகள் (castes), சமயங்களைக் (religion) கொண்ட வர்கள் ஒரே மொழியைப் பேசினாலும் அவர்களுடைய பேச்சு மொழி சில வித்தியாசங்களை சாதிக் கூறுகளாலும் (caste features) சமயக்கூறுகளாலும் (religious features) வேறுபடுத்திக் காண்பிக் கின்றது என்பார் சமூக மொழியியலார் (sociolinguists).

நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கினும் எனும் தொல்காப்பியனாரின் கூற்றால், தமிழில் எழுத்து மொழிக்கும், பேச்சு மொழிக்கும் இடையே வேறுபாடுகள் சங்க காலந்தொட்டே நிலவுகின்றது எனும் உண்மை விளங்கு கின்றது. மேலும் தொல்காப்பியர் சொற்களை இயற்சொல், திரிசொல் திசைச் சொல், வடசொல் என வகைப்படுத்திக் கூறுவதால் திசைச் சொல்லாகிய வட்டாரக் கிளைமொழிக் கூறுகள் (regional dialectal feature) சங்க காலந்தொட்டே அறிந்ததேயாம். மேலும் சமஸ்கிருதச்

சொற்களை ஈங்கு வடசொல் என்று சாதாரணமாகக் கூறுவதால் சமஸ்கிருத மொழிக்குத் தெய்வீகத் தன்மை பிற்காலத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. பழந்தமிழில் பன்னிரண்டு வட்டாரக் கிளைமொழிக் கூறுகள் (regional dialectal features) இருந்ததாக அறிகின்றோம் (தொல் 883). பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் இந்தப் பன்னிரண்டு கிளைமொழி வட்டாரங்கள் எவை எவையென்று தற்காலத் தமிழகத்தில் அடையாளங் காட்டி விளக்கியிருக்கின்றார்கள் (Meenakshisundaran, 1965) தற்கால மொழியியலாளர்கள் (modern linguists) தற்கால மொழியியல் அடிப்படையில் தமிழக வட்டாரக் கிளைமொழிகளைத் தென் கிளைமொழி (southern dialect), மத்தியக் கிளைமொழி (central dialect) அல்லது கிழக்குக்கிளை மொழி (eastern dialect) மேற்குக் கிளைமொழி (western dialect) வடக்குக் கிளைமொழி (northern dialect) என்று நான்கு திசைகளைக் கொண்டு வகைப் படுத்திக் காண்பித்துள்ளார்கள். இவற்றில் இலங்கைத் தமிழைத் தனிக்கிளை மொழியாகவும், சில வட்டாரக்கிளை மொழிகளை உட்கிளை மொழிகளாகவும் பாகுபாடுகாட்டி விளக்கியிருக்கின்றார்கள் (சீனிவாசவர்மா, 1977; Karunakaran, 1970; Sakthivel, 1975).

இவ்வாறான தமிழ்க் கிளைமொழிகள் (Tamil dialects) வட்டார அடிப்படையில் மட்டுமன்றி சமுதாய அடிப்படையிலும் சாதிக்கிளை மொழிகளாகக் (caste dialects) பிரித்துக் காண்பித்துள்ளார்கள். வில்லியம் பிரைட்டும் (William Bright) ராமானுஜமும் (Ramanujan) பிராமணர் தமிழ் (Brahmin Tamil) பிராமணரல்லாதார் தமிழ் (non-Brahmin Tamil) என்று பிரித்துக் காட்டுகின்றார்கள் (1972). சீனிவாசவர்மா (1977), சக்திவேல் (1975) இருவரும் பிராமணர் தமிழ், பிராமணரல்லாதார் தமிழ், தாழ்த்தப்பட்டோர் தமிழ் (Harijan Tamil) என்று பிரித்துக் காட்டுகின்றார்கள். மேலும் மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் வெவ்வேறு உட்பிரிவுகள் இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் காட்டப்பட்டிருக்கின்றது (Manoharan 1976). கள்ளர் தமிழ், படையாச்சி தமிழ் என்று (Srinivasavarma and Sakthivel, 1976) அந்தந்த சாதியின் பெயரால் கிளைமொழி வேற்றுமைகள் காட்டப்பட்டிருப்பதோடு ஒரே சாதியைச் சார்ந்த இருவேறு பிரிவினரின் பேச்சிலும் வேற்றுமைகள் காணப்படுகின்றன (Mano-

haran, 1977). தமிழின் சாதிக்கிளைமொழிகள் பற்றி இவ்வாறு பல வாறாக ஆராயப்பட்டுக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுதாய மொழியியல் வேற்றுமைகளை (sociolinguistic variation) வரலாற்றின் அடிப்படையில் சமுதாயத்தை நோக்கி ஆராய்வது மிகவும் நல்லது. தமிழில் சாதிக் கிளைமொழிகள் உள்ளனவா? என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இங்கு தமிழகத்துச் சாதி வகைகளைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளைப் பின்னணியாகக் கொண்டு தற்கால சாதிவகைகளை ஆராய்ந்து தமிழின் சாதிக் கிளைமொழிச் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அவற்றை சமூகக்கிளை மொழியாகக் கொள்ளலே பொருந்தும் என்று இக்கட்டுரை சுட்டிக்காட்டி நிற்கின்றது.

தமிழர்கள் நிலத்தை இயற்கை அமைப்பின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்து, அந்த ஐந்து நிலங்களில் வாழும் மக்களை வேடர், ஆயர், உழவர், மீனவர், கள்ளர் எனப் போந்தனர். ஆனால் ஒரு நிலத்தில் வாழும் மக்களாகக் குறிக்கப்படுபவர்கள் அந்தப் பகுதியில் மிகுதியாக வாழ்பவர்களாக இருந்திருக்கக் கூடுமேயன்றி, அவர்கள் மட்டுமே தனித்து வாழும் பகுதியாக இருந்திருக்க முடியாது. ஏனெனில் ஐந்துக்கும் மேற்பட்ட சாதியின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. மேலும் பண்டையத் தமிழகச் சமுதாயம் ஒரு பழங்குடி அமைப்புச் (tribal organisation) சமுதாயமாகவே இருந்திருக்கின்றது. சாதியென்னும் பண்பு தனித் தன்மையுடன் விளங்கிய பின்பும் கூட பழங்குடி அமைப்பு தன்மை மாறாமலேயே விளங்கியிருக்கின்றது. ஏனெனில் சங்க இலக்கியங்கள் பழங்குடி மக்களைப் பற்றியும், ஆரிய இந்து சமுதாயத்தின் முக்கிய அம்சமான சாதி அமைப்புப் பற்றியும் பேசி நின்றாலும், பழங்குடி அமைப்புச் சமுதாயப் பண்பாகிய முத்திரை (totem) பற்றியும் பேசுவதால் பழங்குடி அமைப்பு சிறந்து விளங்கியது தெளிவாகின்றது,

தமிழகத்து சாதிகளை வகைப்படுத்தப் போந்த சீனிவாச அய்யங்கார், பிராமணர்கள் ஆரிய இனத்தைச் (Aryan race)

சேர்ந்தவர்கள் என்றும், வேளாளர்கள் திராவிட இனத்தைச் (Dravidian race) சேர்ந்தவர்கள் என்றும், வலயர், பள்ளர், சாணார், இடையர், மறவர், அகம்படியர், பறையர், கைக்கோளர், கம்மாளர், வன்னியர், கள்ளர், அம்பலக்காரர் போன்ற சாதியினர் நாக இனத்தைச் (Naga race) சேர்ந்தவர்கள் என்றும் கூறி தமிழகத்து மக்களை ஆரியர், திராவிடர், நாகர் எனும் மூன்று இனங்களாகப் (race) பகுத்துள்ளார் (Srinivasa Iyangar, 1914). ஆரியர், திராவிடர் எனும் பாகுபாடு மொழியியல் அடிப்படையில் உண்டானதே தவிர, இன அடிப்படையில் உண்டானதொன்றில்லை. மேலும் பிராமணர் எனும் சொல் ஆரியர்களிடமிருந்து திராவிட மொழியைக் கடன் வாங்கிய பிராமணசாதிக் கூற்றோடு கூடிய சொல்லே தவிர தமிழகத்துப் பிராமணர்கள் ஆரியர்கள் அல்ல (Subrahmanian, 1965). ஆகவே சீனிவாச அய்யங்கார் அவர்களின் கூற்று ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

தொல்காப்பியர் நான்கு வகைச் சாதிகள் அந்தணர், அரசர், வைசிகர், வேளாளர் (தொல்–பொருள் 625, 626, 632) என்று கூறி ஒவ்வொருவருக்கும் உரிய முக்கிய பொருட்கள் பற்றியும் பேசுகின்றார். அந்தணர் என்போர் அறவோர் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றவே தவிர, அந்தணர்கள் பிராமணர்களாவார்கள் என்று எந்தவொரு சங்க இலக்கியமும் கூறவில்லை. ஆரியக் கொள்கைகள் தமிழகத்திற்குள் நுழையும் முன்பே தமிழகம் சேரர், சோழர், பாண்டியர் எனும் முப்பெரும் முடிமன்னர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. ஆகையால் இவர்களை ஆரிய வம்சத்தில் வந்த சத்திரிய குலத்தவர்களாகக் கருதமுடியாது. மேலும் பண்டைத் தமிழகத்தில் அரசர்கள், வேளாளர்களோடு திருமண உறவு வைத்துக்கொள்ளும் பழக்கம் இருந்துள்ளது. வேளாளர்கள் அரசர்களாகவும் ஆகமுடியும். சமுதாயச் சட்டப்படி (social rules) வேளாளர்கள் அரசர்களுக்குச் சமமாகவே கருதப்பட்டுள்ளது. எனவே தமிழகத்து வேளாளர்களை ஆரிய வழிச் சூத்திரர்களோடு ஒப்பிட முடியாது. வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் வணிகர்கள் எனும் அமைப்பின்கீழ் அநேகமாக உலகில் உள்ள எல்லாச் சமுதாயத்திலும் காணப்படுவதால் தமிழகத்து வணிகர்கள் ஆரிய முறை வைஸ்யர்களாகார் (Subrahmanian, 1965)

பின்பு தமிழகத்திலேயே சமஸ்கிருத மந்திரங்களைப் படித்து, பிறப்பால் சமுதாயத்தில் உயர்ந்தோர்களாக விளங்கும் இந்தப் பிராமணர்கள் யார் எனும் கேள்வி எழத்தான் செய்கின்றது. தமிழகத்துப் பிராமணர்கள் பண்டையத் தமிழகத்து அறவோர்களாக விளங்கிய ஆசிரியப் பெருமக்களும், பண்டிதர்களும், தத்துவ மேதைகளுமேயன்றி வேறொருவரும் இல்லை. ஆகவேதான் சமுதாயத்தில் தங்களுக்கென ஒரு உயர்ந்த இடம் தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில், ஆரிய மொழியான சமஸ்கிருதத்தைத் தெய்வ மொழியாக்கி அதன்மீது கொண்ட மோகத்தால் ஆரிய சாதிக் கொள்கையைத் தமிழகத்தில் புகவிட்டு, தங்களைச் சமுதாயத்தின் உச்சத்தில் ஏற்றி பிராமணர் எனும் பெயரை ஏற்றுக்கொண்டு மற்றவர்களையும் ஏற்றுக்கொள்ள வைத்தபோது சமுதாயம் அதை எதிர்க்கவில்லை. **(Subrahmanian 1965).** மேலும் இவர்கள் தமிழகத்திலே பிறந்து வளர்ந்த தமிழர்களேயன்றி, ஆரியர்கள் அல்ல. ஆனால் பிற்காலத்தில் ஆரியப் பிராமணர்களும் தமிழகத்தில் குடியேறியுள்ளனர். ஆகவேதான் வடமர், தென்மர் என்ற பாகுபாடு பின்னர் தோன்றியுள்ளது. மேலும் இவர்களிடையே, அய்யர், அய்யங்கார், தீட்சிதர் போன்ற பிரிவுகள் பிற்காலத்தில் இந்து மதத்தைச் சைவம், வைணவம் என்று இரு கூறாகப் பிரிந்து நின்று பரப்பிய காலந்தொட்டு ஏற்பட்டிருக்கக்கூடும். பொதுவாகக் கால அளவில் தமிழகத்தில் உள்ள சாதிகள் மிகப் பெரிய அளவில் பெருகியுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தமட்டில் சாதியென்பது பல சிறுசிறு பிரிவுகளாகப் பிரிந்து பெருகிக்கொண்டிருக்கும் தன்மையுடையதாய் இருப்பது இங்கு நோக்கத்தக்கது.

வாழும் இடத்தின் அடிப்படையில் மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தலே பண்டையத் தமிழகத்தின் மிகப்பழமையான பழக்கமாகும். ஆரிய சாதிக் கொள்கை இந்தப்பிரிவுகளின் மேல் போடப்பட்ட ஒரு போர்வையேயாகும் **(Basham, 1967).** பொதுவாக ஆரிய சாதிக் கொள்கை பிராமணர்களை மையமாகக் வைத்து அமைந்திருப்பதால், தமிழகத்திலும் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்து சாதியினரும், பழங்குடியினரும் பிற்காலத்தில் பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டாலும், ஒரே தொழிலைச் செய்பவர்கள் பல பெயர்களால் குறிக்கப்படுவதாலும், பல பெயர்களைக் கொண்ட

வர்கள் ஒரே தொழிலைச் செய்பவர்களாகப் பேசப்படுவதாலும், சாதியின் பெயர்களிலும், உயர்ந்தோர் — தாழ்ந்தோர் எனும் பாகுபாட்டிலும் ஒரு குழப்பம் இருப்பதைச் சங்க காலந்தொட்டே காணமுடிகின்றது. தொல்காப்பியர் அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் எனும் சாதிப் பிரிவுகளைத் தவிர ஏனைய இலக்கியங்களில் பேசப்படுகின்ற பிற பழங்குடி மக்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆயர்களும், வேட்டுவர்களும் மட்டுமே குறிக்கப்படுகின்றனர். ஆனால் இவர்கள் சாதியின் கீழ் கொண்டு வரப்படவில்லை (தொல். பொருள். 21). நச்சினார்க்கினியர் வேளாளரை உயர்ந்தோர் - தாழ்ந்தோர் என இரு பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றார். இதில் குறுநில மன்னர்கள் உயர்ந்த வேளாளர் குடியினராகக் கருதப்படுகின்றனர். மாங்குடிக் கிழார் (புறம், 335) துடியர், பாணர், பறையர், கடம்பர் எனும் நான்கு குடியினர் தவிர வேறு குடியினர் கிடையாது என்கின்றார். இங்கு குடி என்பது பழங்குடியினரைக் குறித்து நிற்கின்றது. வாணிபம் செய்யக் கூடிய செட்டியார் எனும் சமூகம் தமிழகத்தில் சங்க காலந்தொட்டே இருந்தது சங்க இலக்கியத்தில் காணக் கிடக்கின்றது (சிலப்பதிகாரம், xxiii - 129; மணிமேகலை, xvi - 107). இவ்வாறு பல சாதியினரும், பல பழங்குடியினரும் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டாலும் சாதியால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் பண்பு சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் வரைபறுக்கப்பட்டு விட்ட ஒன்றாகும். எனவேதான் கம்மாள வகுப்பைச் சார்ந்த பொற்கொல்லன் தாழ்ந்த சாதிக்காரனாகையால் உயர்ந்த சாதிக்காரர்கள் நடந்து சென்றுகொண்டிருக்கும் தெருவில் அவர்களிடமிருந்து விலகித் தள்ளியே நடந்து சென்றான் என்கிறார் இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம், xvi-107). சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள சாதியினரல்லாத பிற மக்களின் பெயர்களும் அவர்களுடைய தொழிலும் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

குடிப் பெயர்	செய்யும் தொழில்
வேடர்	வேட்டையாடுதல்
குறவர்	குன்றுகளில் விளையும் பொருட்களைச் சேகரித்தல்
உமணர்	உப்பு பயிரிட்டு விற்றல்

உழவர், வேளாளர்	உழவுத் தொழில்
கொல்லன்	இரும்பு வேலை
பொற்கொல்லன், கம்மாளன்	தங்கவேலை
பரதவர், மீனவர், வலைஞர், வலையர்	மீன் பிடித்தல்
பாணர் (சிறுபாணன், பெரும் பாணன், விறலி)	பாடிப் பரிசில் பெறுதல்
துடியர், பறையர்	கொட்டடித்து அரசனின் ஆணையைத் தெரிவித்தல்
கடம்பர், கள்ளர், எயினர்	கொள்ளையடித்தல்
மறவர்	போரிடுதல்
கூத்தர், கலைக்கூத்தர்	நடனமாடுதல்
ஆரியக் கூத்தர்	ஆரிய நடனமாடுதல்
தச்சன்	மரவேலை
துன்னக்காரர்	தையல்வேலை
நெசவாளி	நெய்தல்
ஆயர்	ஆடுமாடு மேய்த்தல்
செட்டியார்	வியாபாரம்
புலயர்	தூக்கிலிடுதல்
சக்கிலியர்	தோல்வேலை

இங்கு கண்டுள்ள சாதியினர்களை தற்கால சாதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. தற்பொழுது சாதிகள் எந்த அளவுக்குப் பெருகியுள்ளது என்பதைத் தமிழ்நாடு பொதுத் தேர்வு (Tamil Nadu Public Service Commission) விண்ணப்ப பாரத்துடன் அனுப்பப்படும் குறிப் ுக்களைப் பார்த்தால் எளிதில் புரிந்துவிடும்.

ஆரியர்களின் வர்ணக் கொள்கையை (Varṇa concept) யும், அதை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சாதிக் கொள்கையையும் ஒன்றாகக் கருதமுடியாது. ஆரியர்களின் வர்ணக் கொள்கை செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் சாதி என்பது அப்படியல்ல. அது செய்யும் தொழிலை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மக்களின் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக்கொண்டது. உதாரணமாக ஒவ்வொரு சாதியினருக்கும் பெண் தெய்வங்கள் (Mother Goddess) தனித்தனியாக இருப்பதையும்,[1]

கிராமப் பஞ்சாயத்து (caste association) ஒவ்வொரு சாதியினரிடமும் தனித்தனியாக அவர்களுக்கென உள்ளதையும் நம்முடைய கிராம அமைப்பில் காணலாம். மேலும் ஒவ்வொரு சாதியினரும் பிறப்பு முதல் இறப்பு வரை செய்யும் சடங்குகளில், செய்யும் முறையிலோ அல்லது கொண்டுள்ள சடங்குகளிலோ வேறுபாடுகள் உள்ளன. ஆகவே தொழில் என்பது சாதியைக் குறித்து நிற்கும் கூறுகளில் ஒன்றாக உள்ளதேயன்றி, அதுவே சாதியை நிர்ணயிக்கும் கூறாகக் கருதமுடியாது. ஏனென்றால் சில சாதியினர்க்கு அவர்களுக்கென்று தனித் தொழிலொன்றும் இல்லை. மேலும் ஒரே தொழிலைப் பல சாதியினர் மேற்கொண்டுள்ளதையும் பார்க்கலாம். உதாரணமாக விவசாயத் தொழிலை பள்ளர், நாடார், ரெட்டியார், தேவர், பிள்ளை, வேளாளர், உடையார், படையாச்சி என்று பல சாதியினர்கள் மேற்கொண்டுள்ளதை நாம் காணலாம். வியாபாரம் என்பது இன்று நாடார், முதலியார், செட்டியார் போன்ற பல சாதியினர்கள் செய்யும் தொழிலாக மாறியுள்ளது. ஆகவே சாதியை குறிப்பிலக்கணச் சாதிகள் (definable caste – குறிப்பிட்ட தொழிலை உடையவர்கள்) என்றும் பொதுவிலக்கணச் சாதிகள் (general caste– குறிப்பிட்ட தொழில் இல்லாதவர்கள்) என்றும் பிரிக்கலாம். மேலும் ஒருவன் எந்தவொரு தொழிலை மேற்கொண்டாலும் சாதி உயர்மட்ட (vertical classification) அளவில் அந்தச் சாதிக்குரிய நிலையிலேயே கருதப்படுகின்றான் என்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

மேலும் தமிழகத்தில் ஒரே சாதியினர் பல மொழிகளைப் பேசுவதைப் பார்க்கலாம். பிராமணர்களில் தமிழ் பிராமணர், தெலுங்கு பிராமணர், கன்னட பிராமனர், துளு பிராமணர் எனப் பிரிவுகள் உள்ளன. ரெட்டியாரில் தமிழ் பேசும் ரெட்டியார்களும், தெலுங்கு பேசும் ரெட்டியார்களும் உள்ளனர். கவுண்டர்களில் தமிழ் பேசும் கவுண்டர்களும், கன்னடம் பேசும் கவுண்டர்களும் உள்ளனர். நாயக்கர் அல்லது நாயுடு சாதியிலும் தமிழ் பேசுபவர்களும், தெலுங்கு பேசுபவர்களும் உள்ளனர். மேலும் தமிழல்லாத பிறமொழியைத் தாய்மொழி (mother tongue) யாகக் கொண்டுள்ள ஒட்டர், சக்கிலியர், கம்மாளத்து நாயக்கர் போன்ற இனத்தவர்களும் உள்ளனர். சமுதாயப் படிநிலை அமைப்பில் மொழியால் வேறுபட்டுள்ள இவர்களின் பங்கு என்ன? இவர்களின் பிரிவுகள் தமிழ் பேசும் சாதியின்

பிரிவுக்குள் அடங்குகின்றதா அல்லது தனியாக ஒவ்வொரு மொழியினர்கட்கும் தனித்தனி உயர்மட்டப் பிரிவுகள் உள்ளனவா? போன்ற கேள்விகளுக்குரிய விடைகள் ஆராய்ச்சிக்குரியது.

தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள சக்கிலியர்கள் தோல்வேலை செய்பவர்களாக இருப்பினும், தமிழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள செம்மான் என்பார்களும் தோல்வேலை செய்பவர்களாக விளங்குகின்றனர். ஆனால் இந்த இருவரும் சமுதாய நிலையில் ஒரே நிலையில் சரிசமமாகக் கருதப்படவில்லை என்பது இங்கு நோக்கத் தக்கது. ஆக ஒரே தொழிலைச் செய்பவர்கள் பேசும் மொழியாலும் மாறுபடுகின்றனர். இனி ஏற்றுக் கொண்ட மதத்தாலும் வேறுபடுகின்றனர் என்பதைக் காண்போம்.

தமிழகத்து மக்களை இந்துக்கள், கிருத்துவர்கள், முஸ்லீம்கள் என மூன்று பெரும் பிரிவுகளாக மதத்தின் அடிப்படையில் பிரிக்கலாம். மேலும் ஒவ்வொரு மதத்தினரும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளனர். இந்துக்களில் சைவ, வைணவப் பிரிவுகள், கிருத்துவர்களில் ரோமன் கத்தோலிக்கர், சிலோன் பெந்தோய கோஸ்த், பிராட்டஸ்டண்ட் போன்ற பிரிவுகள். முஸ்லீம்களில் சாபி பள்ளியைச் சார்ந்த சுன்னைட் முஸ்லீம்கள் (sunnites of Shafi school), கனாபி பள்ளியைச் சார்ந்த சுன்னைட் முஸ்லீம்கள் (sunnites of Hanafi school) எனும் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாட்டு முஸ்லீம்கள் ராவுத்தர் (Rawther), லப்பை (Labbai), மரைக்காயர் (Marakayar), கயலர் (Kayalar) எனும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றனர். இவர்களில் கயலர்களும், மரைக்காயர்களும், தமிழர்களுக்கும் அரேபிய வியாபாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட திருமண உறவால் தோன்றிய சமூகத்தினர்களாகக் கருதப்படுகின்றனர். தமிழ் நாட்டு முஸ்லீம்கள் தங்களைக் கலாச்சார அடிப்படையில் தமிழர்களாகவே கருதுகின்றனர் (Mattison 1973). மேலும் முஸ்லீம்களின் ராவுத்தர், லப்பை, மரைக்காயர், கயலர் எனும் சமூக வேறுபாடுகளுக்கும், இந்துக்களின் சாதிப் பிரிவுகளுக்கும் ஏராளமான வேற்றுமைகள் உள்ளன. இந்துக்களின் சாதிப் பிரிவு சுத்தமான ரத்தம் (purity of blood) எனும் கொள்கையின் அடிப்படையில் பலவாறாகச் செயல்படுகின்றது. முஸ்லீம்கள் பல சமூகப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தாலும் அந்தப் பிரிவுகளிடையே உயர்மட்ட

வேறுபாடுகள் இல்லை என்று கருதப்படுகின்றது. வடஇந்திய முஸ்லீம்களும், தக்காண முஸ்லீம்களும் சமூகப் படிநிலை அமைப்பில் வேறுபாடுகள் கொண்டுள்ளனர். அதே நேரத்தில் தமிழ்நாட்டு முஸ்லீம்களில் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் பிற சமூகத்தோடு திருமண உறவு வைத்துக்கொள்வது இல்லை (Mattison, 1973).[8] தமிழகக் கிருத்துவர்களும் கலாச்சார அடிப்படையில் தமிழர்களே. தமிழகக் கிருத்துவர்களிடமும் தமிழக முஸ்லீம்களைப் போன்று சமூக உயர்மட்ட வேறுபாடுகள் மதத்தின் கொள்கையளவில் வகுக்கப்படவில்லை. இருப்பினும் திருமண உறவு ஒரே சமூகத்திற்குள்தான் இருக்கும். இந்த இரு மதங்களும் பிறப்பால் ஏற்றத்தாழ்வு பார்க்கும் கொள்கையைத் தழுவாமல் இருந்தாலும் - பிறப்பால் ஏற்றத்தாழ்வு பார்க்கும் இந்து மதத்தவர்களாயிருந்த பலதரப்பட்ட சாதியினர்களால் கிருத்தவ மதம் தழுவப்பட்டமையால் திருமண உறவு சாதியின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இப்படியொரு சூழ்நிலையில் முஸ்லீம்கள் இருப்பதாலும், முஸ்லீம் மதத்தைத் தழுவிய தமிழர்களாய் விளங்குவதாலும், பல சமூகப் பிரிவுகளாகப் பிரிந்து வாழும் முஸ்லீம்களிடையேயும் திருமண உறவு சமூகப் பிரிவு அடிப்படையிலேயே அமைந்துவிட்டது.

இவ்வாறு சாதியாலும், தழுவிய மதத்தாலும், மதத்தின்கண் காணப்படும் பிரிவுகளாலும் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழும் தமிழ் மக்களின் பேச்சு மொழி (spoken language) அவர்களது சாதி சமய வேற்றுமைகளால் வேறுபடுவது மொழியின் வேற்றுமைகளால் (linguistic variation) உணர்த்தப்படுகின்றது. ஆனால் இந்த வேறுபாடுகள் சாதிக் கிளைமொழிகள் (caste dialects) என்று பகுக்கப்பட வேண்டுமா அல்லது சமூகக் கிளைமொழிகள் (social dialects) என்று பகுக்கப்பட வேண்டுமா என்பதே கேள்வி. இதுவரை இந்த வேறுபாடுகள் சாதிக் கிளைமொழி வேறுபாடாகக் (caste dialect's variation) கருதப்பட்டு வந்துள்ளதை முன்னமேயே கண்டோம். இந்தக் கட்டுரையில் இவைகள் சமூக வேறுபாடு (social variation) களாகக் கருதப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

மொழி என்பது சமூகத்தை அடையாளங் கண்டுகொள்ள உதவும் ஒரு வலிமைமிக்க குணப்பாங்காகும் (trait) என்பதில் சிறிதளவும்

ஐயமில்லை. ஆனால் அது எந்த வடிவத்தில் சமூகத்தை அடையாளங் காட்டி நிற்கின்றது என்பதில்தான் சர்ச்சை எழுகின்றது. பட்ட நாயக் (1975) மொழியில் வேற்றுமைகளை தனி நபர்களோடும் (individuals) சாதிப் பிரிவுகளோடும் ஒப்பிட்டுக் காணமுடியாது என்றும், மொழியியல் வேற்றுமைகள் பலதரப்பட்ட சமூக இடச் சூழ்நிலைகளின் (social context) அடிப்படையில் எழுவதாகும் என்றும கூறுகிறார். பிராமணர், பிராமணரல்லாதோர் என்றோ, பிராமணரல்லாதோர், தாழ்த்தப்பட்டோர் என்றோ சமூகத்தை மொழியியல் வேற்றுமைகளின் அடிப்படையில் பிரிக்கின்றபொழுது நாம் ஒரு சாதியினரைப் பற்றிக் கூறவில்லை, ஒரு சாதிக் கூட்டத்தைப் (cluster of castes) பற்றியே கூறுகின்றோம் என்பது இவருடைய வாதமாகும். சீனிவாசவர்மாவும், சக்திவேலும் தங்களுடைய தமிழ்க் கிளைமொழிகள் (Tamil Dialects, 1976) எனும் கட்டுரையில் "சில சாதிகள் தங்களுடைய எண்ணிக்கை அளவாலும் (size) சமூகப் பழக்கங்களாலும் (social customs) மற்றைய சாதிகளிடமிருந்து தனித்திருத்தலினாலும், தங்களுடைய அடையாளத்தை (identity) சாதிக் கிளைமொழி (caste dialects) மூலமாகக் காத்து வைத்திருக்கின்றன. ஆனால் சமூகப் படிநிலை அமைப்பின் கீழ் மட்டத்தில் பல சாதிகள் ஒரே கிளைமொழியைக் (dialect) காட்டுகின்றன. இவர்களிடம் தனித் தனிச் சாதிக் கிளைமொழியை அவ்வளவு எளிதாகக் காணமுடியாது" என்று கூறுகின்றனர். மேலும் இவர்கள் தற்கால சமூக மொழியியலாளர்கள் மொழியியல் வேற்றுமைகள் சமூக அமைப்பில் மாறுபடுகின்றதேயல்லாது சாதி அமைப்பில் அல்ல எனும் கூற்றை மறுத்து மொழியியல் வேற்றுமைகள் தமிழில் சாதி அடிப்படையில்தான் உள்ளது என்று கூறுகின்றனர்.

ஆனால் கிருத்தவர் தமிழ், முஸ்லீம் தமிழ் என்று நாம் வேறுபடுத்திக் காட்டுகின்றபொழுது அவைகள் சாதியின் அடிப்படையில் அல்ல. ஏனெனில் கிருத்தவர்களை நாடார், பள்ளர், படையாச்சி, கள்ளர், முக்குகர் எனப் பல சாதிகளாக, இந்து சாதியமைப்பினை ஒட்டிச் செல்வனவாகப் பிரிக்கலாம். ஒரே சாதிக்குள் இந்துவுக்கும், கிருத்தவருக்கும் மதம் மாறி திருமண உறவு வைத்துக்கொள்ள முடியும். அதுபோல் முஸ்லீம்களை மரைக்காயர், கயலர், ராவுத்தர், லப்பை என்று பிரிக்கலாம். இவ்வகையான மொழியியல் வேற்றுமைகள்

இலக்கண அளவில் இல்லாவிட்டாலும் (இலக்கணம் உள்ளதா என்பது ஆராயப்படவேண்டியது) சொல்லளவில் உள்ளது என்பது ஏற்கனவே காட்டப்பட்டுள்ளது. (Sakthivel 1979) பிராமணர் என்ற சொல் ஒரு சாதியைக் குறிக்காமல் ஒரு சமூகத்தையும், இனத்தாரையும் குறிக்கப் பயன்பட்டு வரும் சொல்லாகும் எனக்கூறும் சீனிவாசவர்மா அவர்கள் அய்யர் தமிழுக்கும், அய்யங்கார் தமிழுக்கும் இடையே வேற்றுமைகள் காட்டுகின்றார் (1977). மேலும் இவர் தொழில் கிளைமொழிகள் என்ற அமைப்பின்கீழ் மீனவர் பேச்சுமொழி, உப்பளத் தொழிலாளி பேச்சுமொழி, குயவர் பேச்சுமொழி எனப் பாகுபடுத்திக் காட்டு கின்றார் (பக். 117). ஆனால் சாதிக் கிளைமொழிகள் பற்றிப் பேசும் பொழுது பிராமணர் பேச்சுமொழி (அய்யர்—அய்யங்கார் வேறுபாடு களில்லாது ஒட்டு மொத்தமாக) ஒரு சாதிக் கிளை மொழிக்கு உதாரணங் காட்டி நிற்கின்றார். ஆனால் பிராமணர் என்பது ஒரு சாதியினரல்ல என்பதும் அவருடைய கூற்றே (பக். 166). ஆக தமிழ்க் கிளைமொழி ஆய்வாளர்களிடம் சாதிக் கிளை மொழிக் கும், சாதிக்கும் உள்ள தொடர்புகள் சிறிது குழப்பமானதாகவே உள்ளது. மேலும் மீனவர். குயவர் என்போர்கள் மீன் பிடிப்ப வர்களாகவும் பானை செய்பவர்களாகவும் உள்ள தமிழ் குறிப் பிலக்கண சாதி (definable caste) வகையைச் சேர்ந்த சாதி யினர். ஆகையால் இவர்களுடைய கிளை மொழியைச் சாதிக் கிளை மொழியில் அடக்கவேண்டுமா? அல்லது தொழில் கிளை மொழியின் கீழ் கொண்டுவர வேண்டுமா? எனும் ஐயம் எழவே செய்கின்றது. உப்பளத் தொழிலாளர்கள் என்பவர்கள் பல சாதியைச் சேர்ந்தவர்கள்; சங்ககால உமணர்கள் அல்ல. இங்கு பல சாதியைச் சேர்ந்தவர்கள் உப்பளத் தொழிலாளர் எனும் அடிப்படையில் ஒரே கூட்டத்தைச் (group) சார்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆக இது பல சாதியினர்களின் பொதுக் கிளைமொழி (common dialect) ஆகிவிடுகின்றது.

இனி, தமிழ் மொழி பேசும் பழங்குடியினர்களாகக் கருதப்படும் நீலகிரி மாவட்டத்து இருளர்கள், மதுரை மாவட்டத்துப் பழியர்கள், புலையர்கள், மேலும் கல்வராயன் மலைப் பகுதியில் வாழ்பவர்கள் போன்றோர்களின் கிளைமொழி வேற்றுமைகளை சாதிக் கிளை மொழியின்கீழ் கொண்டுவர வேண்டுமா வாழும் பகுதியால் தனித்து விடப்பட்டுவிட்டதால் வட்டாரக் கிளை மொழிக்குள் (regiona

dialect) அடங்கும் உட்கிளை மொழி (sub dialect) யாகக் கருத வேண்டுமா? இல்லை பழங்குடிக் கிளைமொழிகள் (tribal dialect) என்று தனியாகக் குறிப்பிட வேண்டுமா? இல்லை சாதியினருடன் ஒன்று சேர்த்துவிடவேண்டுமா? அவ்வாறு ஒன்று சேர்த்தால் சமூக உயர்மட்டப் பிரிவில் இவர்களுடைய இடம் எது? போன்ற கேள்விகள் எழுகின்றன. பழங்குடிக் கிளை மொழியாக ஆராய்ந்தால் பலதரப்பட்ட பழங்குடியினர்களாகப் பல இடங்களில் பரந்து வாழும் இவர்களின் சமூகத் தரப் பிரிவுகள் (social stratification) என்ன?

ஆக ஒரே மொழியைப் பேசும் மக்களை கிளைமொழி வேற்றுமைகளின் (dialectal variation) அடிப்படையில் பல வட்டாரத்தினராகக் கொண்டு, பல சாதியின் கீழும், பழங்குடியமைப்பின் (tribal organisation) கீழும் வேறுபாடு காட்டி, பின்பு ஒரு சாதியினரில் உட்சாதிப் (subcaste) பிரிவில் வேறுபாடுகள்காட்டி, உட்சாதிகளை மத அடிப்படையில் வேறுபடுத்தி, பின்பு குறிப்பிட்ட மதத்தில் எந்தப் பிரிவு என்ற ஒரு கேள்வியை எழுப்பிப் பாகுபாடுபடுத்திக் காட்டி நிற்கையில் செய்யும் தொழிலால் பலர் வேறு படவும் செய்கின்றனர், ஒன்று படவும் செய்கின்றனர். மேற் கூறிய பாகுபாடுகளைக் கீழ்க் கண்டவாறு ஒரு குறிப்பிட்ட சாதியின் பெயரால் உதாரணங்காட்டி இப்படியொரு படத்தின் மூலம் விளக்கலாம். இங்கு முஸ்லீம்கள் தனித்து நிற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் (தமிழ்நாடு)
|
வட்டாரக் கிளைமொழி (தென் கிளைமொழி, ...)
|
சாதிக் கிளைமொழி (நாடார், ...)
|
உட்சாதிக் கிளைமொழி (நாடார், சாணார், ...)
|
மதக் கிளைமொழி (இந்து நாடார், கிருத்தவ நாடார்,...)
|
உட்மதக் கிளைமொழி (கிருத்தவ ரோமன் கத்தோலிக்க நாடார், கிருத்தவ பிராட்டஸ்டண்ட் நாடார், ...)

இவ்வளவு வேறுபாடுகளைக் காட்டிய பின்பு தொழில் என்ற ஒன்றைக் காரணங் காட்டிவிட்டால் பனை ஏறுபவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் எனும் மூன்று பெரும் பிரிவில் அடக்கி விடலாம். குடிமகன் (barbers),, குயவர் (potters) போன்ற சாதியினரைத் தொழில் அடிப்படையில் அந்தந்த சாதிக்குரிய தொழிலால் ஒரு பிரிவின் கீழ் கொண்டு வந்துவிடலாம். எனவே சாதியின் அடிப்படையில் நாம் கிளை மொழிகளை ஆராய்ந்தால் மொழியின் கண் காணப்படும் வேற்றுமைகளை ஒரு சீராகக் கோர்வையாகச் சமுதாயப் பின்னணியில் கூற முடியாது. மேலும் சாதிக்குச் சாதி பண்பாட்டுக் கூறுகள் (cultural features) வேறுபடுவதால் கலாச்சாரக் கிளை மொழி (cultural dialect) யாக ஆராயலாம். இப்படி ஆராயும் பொழுது சாதிக்குரிய தொழிலைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை, ஏனைய கூறுகளை எடுத்துக் கொள்ளலாம். பொதுவாகச் சாதியென்பது இன உறவால் (kinrelation) ஒன்றுபடும், ஒன்றுபடக் கூடிய மக்களின் கூட்டமேயாகும் (Baily, 1963) என்பது இங்கு நோக்கத் தக்கது. மேலும் வாழும் இடத்தாலும், பொருளாதாரமுறையினாலும் (economic system) ஒரே மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும், பழியர், புலையர் போன்றோர்கள் பழங்குடிகளாகக் கருதப்படுகின்றனர். கலாச்சார அடிப்படையில் கிளைமொழிகள் பாகுபடுத்தப்பட்டால் இவர்களுடைய கிளைமொழிகளும் சாதியமைப் பின் கீழ் கொண்டு வரப்படும் கிளைமொழிகளும் ஒன்று சேர்த்து ஆராயப்படும். ஆனால் சமுதாய உயர்மட்டப் பிரிவில் பழங்குடியினரது இடம் என்ன என்பது ஆராய்ச்சிக்குரியது. மேலும் தனித்தனி மொழிகளைப் பேசக்கூடிய வேறுபட்ட கலாச்சாரங்களையுடையவர்கள் ஒரே இடத்தில் வாழ்ந்தாலும், அவர்களுக்குள்ளும் ஒரு உயர் மட்டப் பிரிவு உள்ளது. ஆனால் ஒரே சாதியினர் இருவேறு மொழிகளைப் பேசும் பொழுது இந்த இரு சமூகத்தினர்க்குள் உயர்மட்டப் பிரிவு உள்ளதா என்பது ஆராயப்படவேண்டும். பல சாதியினர்கள் ஒரு தொழிலை மேற்கொள்ளும் பொழுது அவர்கள் தொழிலால் ஒன்றுபட்டாலும், கலாச்சாரத்தால் மாறுபட்டவர்களாக உள்ளனர். இங்குக் காணப்படும் தொழில் கிளைமொழி வேற்றுமைகளை அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள சாதியினர்களின் பொது முறைமை (common code) யாகக் கொள்ளவேண்டும்.

இவ்வாறாகத் தமிழ்க் கிளைமொழி ஆராய்ச்சியின் சாதிக்கிளை மொழி ஆராய்ச்சியில் ஒரு அடிப்படைத் திருப்பம் ஏற்றுக் கொள்ளப் பட வேண்டியதாய் உள்ளது. சாதிக் கிளைமொழி என்பது மேம் போக்காக ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால் சமுதாயத்தின் மொழி யியல் வேற்றுமைகளை மக்களின் கலாச்சார வேறுபாடுகளோடு இணைத்துப் பார்த்தால் இன்னும் பல சமூக உண்மைகள் வெளிப் படும். இவ்வாறாக வெளிக்கொண்டுவரப்படும் கிளைமொழிகளைச் சமூகக் கிளைமொழிகள் **(social dialects)** என அழைக்கலாம். ஏனெனில் சமூகம் **(society)** என்பதை நாம் நம்முடைய வசதிக் கேற்ப பிரித்து வகுத்துக் கொள்ளலாம். ஆனால் சாதி யென்பதை அவ்வாறு செய்யமுடியாது.

இந்திய மானிடவியல் ஆய்வு
கல்கத்தா

அடிக் குறிப்புகள்

1. உதாரணத்திற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குளத்தூர் எனும் கிராமத்தில் சாதியடிப்படையில் உள்ள பெண் தெய்வங் கள் **(mother goddess)** பின் வருமாறு:

நாடார்	—	பத்திரகாளியம்மன்
ஆசாரி, பிள்ளை	—	துர்க்கையம்மன்
செட்டியார்	—	காளியம்மன்
பள்ளர்	—	முத்துமாலையம்மன்
பறையர்	—	மாரியம்மன்

ஆசாரி, பிள்ளை சாதியினர்கள் குறைந்த அளவில் உள்ளதால் இருவரும் சேர்ந்து ஒரே தெய்வத்தை வழிபடுகின்றனர். இது போக குலதெய்வம் என்ற பெயரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி தெய்வங்களும், எல்லாச் சாதிக்கும் பொதுவாக உள்ள இந்து சமயக் கடவுள்களும் சமூகத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

2. The identity of Hindu castes rest on purity of blood. Members of a Hindu caste are all said to share the

same blood line and hence in this sense all are equal. If intercaste marriages occur, purity of blood is lost and the children of such unions are out caste–Barnett, 1968 quoted by Mattison, 1969.

3. Most marriages are between persons of the same subdivision. And most Muslim Tamils consider subdivision identity to be an important factor in selecting a spouse–Mattison, 1969.

4. A caste is a group of actual or potential kinsmen — Bailey, 1963.

5. நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோடர்கள் (Todas), கோத்தர்கள் (Kotas), படகர்கள் (Badagas) தனித்தனித் தாய் மொழியைக் கொண்டவர்களாக இருப்பினும் அவர்கள் ஒரு சமுதாய அமைப்பில் தோடருக்குக் கீழ் கோத்தரும், படகரும், கோத்தருக்குக் கீழ் படகர் எனும் உயர் மட்டப் பிரிவில் வாழ்கின்றனர் — Emeneau, 1969.

துணை நூல்கள்

சீனிவாசவர்மா, கோ. 1977 கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர்.

Bailey, F. G. 1963, Politics and social change: Orissa in 1959, University of California press, Berkeley.

Basham, A. L. 1967 The Wonder that was India, Rupa & Co.

Bright, W. & Ramanujam, A. K. 1972, Sociolinguistic Variation and Language change, in J B. Pride and Janet Holmes (ed.) "Sociolinguistics" penguin, Reprinted 1974

Chomsky, Noam. 1972, Language and Mind, Harcourt, Brace Jovanovich, New York.

Harry Hoijer T. 1962, The Sapir-Whorf Hypothesis, in Readings in Anthropology Vol. 1 (Morton H Fried ed.) New York

Karunakaran, K. 1970 Tamil Dialects — A Classification, Second AIUTTA, Tiruchirapalli

Kelkar, A. R. 1969 Language-Linguistics: The applications in Languages and Society in India, Indian Institute of Advanced study, Simla.

Manoharan, S. 1976, Social Hierarchy and Verbal Behaviour — A Case study of Tirunelveli District, TamilNadu, Indian Journal of Linguistics. Vol. 3-1

——— 1977 Nāṭār and cāṇār dialect of Tamil, Ninth AIUTTA Vol. 2., Madurai.

Mattison Mines 1973 Social Stratification among Muslim Tamils in Tamil Nadu — South India; in caste and Social stratif cation among the Muslims (Imtiaz Ahmad ed.), Manohar Book Service, New Delhi.

Meenakshisundaran, T, P. 1965 A History of Tamil Language, Linguistic Society of India, Poona,

Pattanayak, D. P. 1975 Caste and Language, International Journal of Dravidian Linguistics, Vol. 4-1

Sakthivel, S, 1975 A Historical Sketch of Tamil, Indian Journal of Linguistics, Vol. 2-1.

——— 1979 Muslim Tamil Dialects Eleventh AIUTTA Vol. 2, Hyderabad.

Srinivasa Varm , G. & Sakthivel, S. 1976 Tamil Dialects, Indian Journal of Linguistics, Vol. 3-1.

Srinivasa Iyengar, M. 1914 Tamil Studies, Madras.

Subrahmanian, N. 1966 Sangam Polity, Asia Publishing House, Madras.

இலக்கியமும் மொழியியலும்

இலக்கிய வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்கு மொழியியல் அறிவு இன்றியமையாதது. நமது இலக்கியங்களின் காலத்தைப் பற்றியும், இலக்கியங்களில் காணப்படுகின்ற பாடபேதங்களைப் பற்றியும் தெளிவான முடிவான கருத்துக்களைப் பெற்றுவிட்டோம் என்று கூறமுடியாது. கால ஆராய்ச்சியே இலக்கிய ஆராய்ச்சி எனத் தமிழில் ஒரு காலத்தில் கருதப்பட்டு வந்தது. மொழியையே அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் காண மொழியியலார் ஒரு கோட்பாட்டை வகுத்தனர். அதனை கிளாட்டா கிரொனாலஜி, அகராதி ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எனக் கூறுவர். நூல்களை ஏட்டிலிருந்து படி எடுத்து அச்சேற்றுவது ஒரு கலை. ஒவ்வொரு ஏட்டிலும் ஒவ்வொரு பாடம் காணப்படுகிறது. எந்தப் பாடத்தைக் கொள்வது? இதற்கு மொழியியல் அறிவு மிகவும் பயன்படுகிறது. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் சில இடங்களில் **ஆங்ஙனம்** என்ற ஒரு சொல் காணப்படுகிறது. இதற்கு ஆங்கனம் என்ற பாடமும் ஏட்டில் காணப்படுகிறது. இரண்டில் எந்தப் பாடத்தைக் கொள்வது? தமிழ் மொழியின் அமைதியைக் கண்டால் இதற்கு எளிதில் விடை கூறிவிடலாம். தமிழில் பழங்காலத்திலும், இக்காலத்திலும் நெட்டுயிரை அடுத்து மெல்லினம் இரட்டித்து வராது. லகரம், ளகரம் போன்றவைகளும் வாரா. ஆங்ஙனம் என்று பாடம் கொண்டால் நெட்டுயிரை அடுத்து மெல்லினம் இரட்டித்து வருகிறது. நெட்டுயிரை அடுத்து மெல்லினமும் வல்லினமும் மயங்கி வரலாம். இதனால் ஆங்கனம் என்ற பாடமே பொருந்தும் என்பது பெறப்படுகின்றது. அப்படியாயின் ஆங்ஙனம் என்ற பாடம் எவ்வாறு வந்தது? மூல திராவிட மொழியில் *ங்க என்றிருந்தது. மலையாளத்தில் ங்ங என்றாயிற்று. இம்மாற்றம் நெட்டுயிரை அடுத்தும் நிகழ்ந்தது. மாங்காய், மாங்ஙாய் ஆயிற்று; தேங்காய், தேங்ஙாய் ஆயிற்று. இவ்வழக்கு மலையாளத்தை அடுத்து தென்தமிழ் நாட்டிலும் புகுந்தது. இதன் பின்புதான் இவ்வேடுகளில் ஆங்ஙனம் என்ற பாடம் புகுந்திருக்கவேண்டும். ஒருவேளை இப்பாடம் காணப்படுகின்ற ஏடுகள் தென் தமிழ்நாட்டைச் சார்ந்தவைகளாகக் கூட இருக்கலாம். இவ்வாறு மொழியியல் அடிப்படையில் பல சிக்கல்களுக்கு முடிவு காணமுடியும்.

டாக்டர் **முத்துச்சண்முகன்**

இக்கால மொழியியல், மதுரை, 1980.

மொழியியல் 4.1 & 2 (1980)

சமூகத் தொடர்பும் மரியாதையும் — நடத்துநர்களின் மொழிப்பயன்பாடு

மு. ஆனந்தராசன்

அ. மொழி உருவாகப் பல காரணங்கள் தரப்படுகின்றன. இரு குழுக்களிடையே அல்லது குறைந்த பட்சம் இருவரிடையே எண்ணப் பரிமாற்றங்களை, கருத்து வேறுபாடுகளைச் சிறந்த வகையில் தெரிவித்துக் கொள்ள மொழி உதவியது. இது மொழி உருவாகவும், வளர்ச்சியுறவும் உதவும் தலையான காரணங்களில் ஒன்றாம். மொழியின் பயன் பல நிலைகளில் வேறுபடுகின்றது. இன்றைய சமுதாயத்தில் மொழி, அதனைப் பயன்படுத்தும் மக்களின் சமூக நிலையை, ஓரளவு சீர்தூக்கிப் பார்க்கவும் அவர்களின் பண்பாட்டின் வளர்ச்சியை அறியவும் நாகரிகம் செல்லும் வேகம், இலக்கு முதலியவற்றைப் பற்றி ஆராயவும் பெரிதும் துணை புரிகின்றது.

மொழியினை அளவுகோளாகக் கொண்டு ஒரு சமுதாயத்தின் நிறை குறைகளை அறிய வேண்டுமெனில், அதற்கு முன்னோடியாக அம்மொழியினைக் குறிப்பிட்ட சமூகத்தினர் எங்ஙனம் பயன்படுத்துகின்றனர் என்பதை ஆராய வேண்டும். பலரும் இம்முறையில்

தமிழை ஆராய்ந்துள்ளனர். (பிரைட் &ராமானுஜன் 1964; சண்முகம் பிள்ளை 1965, 1968; ஞானசுந்தரம் 1979)

தமிழ் மொழியைக் கீழ்க் கண்டவாறு பல கூறுகளாகப் பிரிக்கின்றனர்.

1. தமிழ் < 1. எழுத்துத் தமிழ்
2. பேச்சுத் தமிழ்

2. தமிழ் < 1. வட்டாரக் கிளைமொழி
2. சமூகக் கிளைமொழி

3. தமிழ் — 1. தொழில் நடைத் தமிழ்

இத்தகைய கூறுகள் பல சமயங்களில் ஒன்றுடன் ஒன்றாகப் பிணைக்கப் பட்டிருப்பதால், அவைகளைத் தனிக் கூறுகளாகப் பிரிப்பது இயலாத செயலாகி விடுகிறது. இத்தகைய தனிப்பட்ட கூறுகளைத் தவிர்த்து யாவருக்கும் பொதுவாக, ஒரு வட்டாரத்தினர் மற்றொரு வட்டாரத்தினரோடு பேச, ஓர் இனத்தார் மற்றொரு இனத்தாருடன் பேச, பழக, ஒரு தொழில் புரிபவர் மற்றொரு தொழில் புரிபவருடன் பேச, பொதுப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்துகின்றனர்.

கன்னட சமூகக் கிளை மொழியினைக் குறித்தும், வட்டார மொழிகளைக் குறித்தும், பேச்சு மொழியினைப் பற்றியும் பல ஆய்வுக் கட்டுரைகள், பல நூல்கள் வெளிவந்துள்ளன. (ஆச்சாரியா 1967 & 1971; பிரைட் 1958 & 1960; கு. கௌடா 1970; உபாத்தியாயா 1968 & 1971; மகாதேவன் 1968; மேக்கர் மாக்; 1966; நாயக் 1967; ஷிஃப்மேன் 1979).

இக்கட்டுரைகளில், ஒரு மொழி பயன்படும் வகையைக் கொண்டு ஒரு சமுதாயத்தை சமூக, வட்டார, தொழில் பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்ற எண்ணம் வெளிப்படுகின்றது. இதற்குத் துணையாக இருப்பவை அம்மொழி பேசுகின்றவர்களின் பேச்சில் காணப்படும் வட்டார, சமூகக் குறியீடுகள் ஆகும்.

சான்றாகத் தமிழில், பிராமண வகுப்பினர் பயன்படுத்தும் சில சொற்களைப் பிற வகுப்பினர் பயன்படுத்துவதில்லை. பிராமணர்கள் "பூசைக்குகந்த நீரை 'தீர்த்தம்' எனவும், குடிப்பதற்கானதை 'ஜலம்'

எனவும், மற்றவைகளுக்குப் பயன்படுத்தும் நீரை, 'தண்ணீர்' எனவும் குறிப்பிடுகின்றனர். ஆனால், பிற வகுப்பினர் புனித நீரை மட்டும் 'தீர்த்தம்' எனவும், மற்ற விதங்களில் பயன்படுத்தப்படும் நீரைத் தண்ணீர் எனவும் கூறுகின்றனர். (பிரைட் & இராமானுஜம் 1964: 160) சில இடங்களில் தீர்த்தம், ஜலம் என்னும் இரு சொற்களுமே குடி நீரைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வண்ணமே உறவுமுறைகளைக் கூறும்போதும், பிராமணர்கள் மற்றவர்களிலிருந்து வேறுபடுகின்றனர்.

ஆம்படையான்	—	கணவன்
அத்திம்பேர்	—	அக்காவின் கணவர்
ஆத்துக்காரி	—	மனைவி
ஆத்துக்காரர்	—	கணவர்
மாட்டுப்பெண்	—	மருமகள், மகனின் மனைவி

(சண்முகம் பிள்ளை, 1965 : 60)

பிற வகுப்பினரின் உறவு முறைச் சொற்களான ஆச்சி, அம்மாச்சி, அப்பத்தா, பாட்டியம்மா, ஆயா, அம்மம்மா, அப்பம்மா, பேராண்டி போன்றவை பிராமணர் பேச்சில் வழங்கப்பட மாட்டா.

சில சொற்களின் குறிப்பைக் கொண்டு அவரவர் சமயங்களையும் அறியலாம். சான்றாக, தமிழ் பேசும் மகமதியர்களின் உறவுமுறைச் சொற்கள் மற்றவர்களின் உறவுமுறைச் சொற்களினின்றும் பெரிதும் வேறுபடுகின்றன.

உம்மா	—	அம்மா
உம்மம்மா	—	அம்மாவின் அம்மா
வாப்பா	—	அப்பா
நாண	—	அண்ணன்
பூவா	—	அக்கா

(சண்முகம் பிள்ளை, 1965:60)

மேலும் தொழுகை, பள்ளி, நிக்காஹ் போன்ற சொற்கள் அவர்களால் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன.

தமிழ் வட்டாரக் கிளைமொழிகளைக் குறித்து எண்ணிறந்த கட்டுரைகள் வந்துள்ளன. கன்னியாகுமரி வட்டாரக் கிளைமொழி, தர்ம

புரி மாவட்டக் கிளைமொழியிலிருந்து வேறுபடுகின்றது. சொற்கள் அளவில் வேறுபாடுகள் தொல்காப்பியர் காலத்திலேயே காணப்பட்ட தால்தான், தொல்காப்பியரும் அதனைத் 'திசைச் சொற்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஞானசுந்தரம் (1979) வட்டாரக் குறிப்பீட்டுக் கூறுகள் (Marked Features) கொண்டு பொதுப் பேச்சுத் தமிழின் இரு வழக்கு நிலையை ஆய்ந்துள்ளார்.

ஒருவர் மொழியைப் பயன்படுத்துவதின் அடிப்படையில் அவர் கல்வி பெற்றவரா, அல்லவா என்பதையும் ஊகிக்கலாம். கிருஷ்ண மூர்த்தி (1978) தெலுங்கு மக்கள் பேசும் பேச்சில், ஒலியனியல் மாற் றத்தை அளவு கோலாகக் கொண்டு கற்றவர் கிளைமொழி, கல்லாத வர் கிளைமொழி என்று தெலுங்கைப் பிரிக்கிறார். இத்தகைய வேறு பாடுகளினால் இந்தி, வங்காளம், சிங்களம் ஆகிய மொழிகளில் கிளை மொழிகள் மறைந்து துறைவழக்கு (Register) உருவாகிக் கொண் டிருக்கிறது என மலொநேய் (1978 : 22) கூறுகின்றார். மேலும், நகர்ப்புற மக்களின் பேச்சில் காணப்படுகின்ற ஆங்கிலப் பாதிப்பை விட கிராமப்புற மக்களின் பேச்சில் ஆங்கிலத் தாக்கம் குறைவாகவே இருக்கும்.

சீனிவாசவர்மா (1979), ராஜகுமாரி (1979) ஆகியோரின் ஆய்வு முடிவுகளை நோக்குகையில் ஒரு வகுப்பினரின் தொழிலைக் கூட அவர்கள் பேசும் பேச்சினால் அறியலாம்போல் உள்ளது.

இக்கட்டுரை மேற்கூறியவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நோக்கில் மொழிப்பயன்பாட்டை ஆராய்கிறது.

ஆ. முதல் பகுதியில் மக்கள் தொடர்பினால் ஏற்படும் உற வாடல்களில் (Interaction) உருவாகும் பேச்சினால், அவர்கள் எந்த வட்டார, சமூக, தொழில், கல்விப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதை அறியலாம் என்பதைக் கண்டோம்.

இப்பகுதியில் மக்களைப் பிரித்து இனம் காண மொழியை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதைக் காண்போம்.

மொழியானது பலரால், பல நிலைகளில் பல நோக்கங்களில் பயன்படுத்தப் படுகின்றது. அங்ஙனம் பயன்படுத்தப்படும் பொழுது

தான் மொழி வளர்ச்சி அடைகின்றது. இவ்வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது மக்கள் தொடர்பேயாகும்.

தனிமனிதன் மொழியைக் கையாளும்போது அதை இடத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்துகின்றான். அவன் பணிபுரியும் இடத்தில் சிறப்பு வழக்கிலும் (formal variety) நண்பர்களிடமும், குடும்பத்தினருடனும் பேசும்போது இயல்பு வழக்கிலும் (informal variety) பேசுகின்றான்.

இப்படியே குறிப்பிட்ட மக்கள் தொடர்புப் பணியாளர்களும் மொழியைக் கையாண்டு வருகின்றனர். அணைகட்டும் பொறியியலாளர் ஒருவர் தொழிலாளிகளிடம் ஒருவிதமாகவும் மேல் அதிகாரிகளிடம் மற்றொரு விதமாகவும் பேச வேண்டியுள்ளது. பல சமயங்களில் மேல் அதிகாரிகளிடம் உரையாடும் போதும், திட்டம் வகுக்கும் போதும் ஆங்கில மொழியைப் பயன்படுத்துகின்றார். இதைப் போலவே, குறிப்பாக, மருத்துவ மனை, அஞ்சல் துறை, வணிகம், வங்கி, பள்ளிக்கூடம் போன்ற பொது நோக்குப் பிரிவுகளில் (Public Relation offices) வேலை செய்கிறவர்கள் வெவ்வேறு விதமான மொழிநடை மாற்றத்தைக் (language style) கையாளுகின்றனர். பள்ளியில் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் புத்தகப் பாடத்தை (எழுத்துத் தமிழில் உள்ள) உரக்கப் படித்துவிட்டுப் பின் மாணவர்களுக்கு அதைப் பொதுப் பேச்சுத் தமிழில் விளக்க முற்படுவார். மருத்துவர்களிடம் வரும் நோயாளிகளின் பேச்சு வழக்கிலேயே மருத்துவர்கள் பேசினால் அம்மருத்துவர்களுக்கு நன்மதிப்பு ஏற்படுவது கண்கூடு.

இந்தியர்களிடம், குறிப்பாக, தமிழ், கன்னடம் பேசும் மொழியினர்களிடம் மரியாதை தரும் பண்பு மிகுந்து காணப்படுகின்றது. குருகுல நாட்களிலிருந்து இன்று வரை ஆசிரியரைக் கண்டால் மாணவன் எழுந்து நிற்பதின் மூலம் தன் மரியாதை உணர்வை வெளிப்படுத்துகின்றான். பெரியோர்களைக் கண்டால் சிறியவர்கள் கை கூப்புவதும் ஒதுங்கி நிற்பதும் இதன் பொருட்டே. கீழ்ப்படிதல், குரல் தாழ்த்திப் பேசுதல், கிராமத்திலே மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொள்ளல் போன்றவைகள் எல்லாம் மரியாதை உணர்ச்சியின் வெவ்வேறு வெளிப்பாடுகளே. இத்தகைய உணர்ச்சி செயலில்

மட்டுமின்றி மொழியிலும் சில சொற்களின் மூலம் இடம் பிடித்துள்ளன. தமிழில் முன்னே இருப்பவரிடம் முன்னிலைப் பன்மைப் பெயர்களான நீர், நீங்கள் (சில சமயங்களில் தாங்கள்) போன்றவைகளைப் பயன் படுத்திப் பேசுவர். இங்ஙனம் குறிக்கப்படுபவர் பேசுபவரை விட சமூக நிலையிலோ படிப்பு, வயது, அனுபவம், இனம், பொருளாதார நிலை போன்றவைகளிலோ மேம்பட்டவராக இருப்பார். அறிமுக மில்லாதவர்களும், இப்பெயர்களின் துணை கொண்டே அழைக்கப் பெறுகின்றார்கள். செய்யும் தொழில்கூட மரியாதை தருவதை நிலைப் படுத்துகிறது. சான்றாக, ஒரு நடிகனை அவன், இவன் என்று சொல்லுகிறவர்கள் அந்த நடிகன் அமைச்சர் பதவி ஏற்றவுடன் அவர் இவர் என்று அழைப்பார்கள்.

இக் கட்டுரையில் போக்குவரத்து நடத்துநர்கள் பயணிகளுக்கு எதை மனதில்கொண்டு மரியாதைத் தருகின்றனர் என்பதனைப் பற்றி ஆராயப்படுகின்றது.

வேறு எந்தப் பணி புரிகின்றவர்களையும் விட நகர்ப்புறப் போக்குவரத்துப் பேருந்துகளில் பணிபுரியும் நடத்துநர்கள் அதிகமாக மக்களுடன் தொடர்பு கொள்கின்றனர். ஆனால், இவர்கள் செய்யும் தொழிலினால் இவர்கள் பேச்சில் எந்தச் சொற்களும் குறிப்பீட்டுக் கூறுடைய சொற்களாக – இத் துறைக்கே உரிய சிறப்புச் சொற்களாக மாறுவதில்லை.

இக்கட்டுரைக்காக கர்னாடக மாநில போக்குவரத்துக் கழகத் தைச் சார்ந்த மைசூர் நகர்ப்புறப் பேருந்துகளில் பணிபுரியும் நடத்து நர்களின் மொழிப்பயன்பாடு ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக, மைசூர் நடுவண் பேருந்து நிலையத்திலிருந்து கிளம்பி, நடுவண் பேருந்து நிலையத்திற்கே வரும் 14A, 14B, 14C, 14D, 14F, 14S ஆகிய பேருந்து நடத்துநர்களின் மொழிப்பயன்பாடு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

மைசூர் பேருந்து நடத்துநர்கள் இரண்டு பணிமுறைகளில் (shifts) பணிபுரிகின்றனர். முதல் பணிமுறை 06–30 மணி முதல் 14.00 மணி வரையிலும், இரண்டாவது 14.00 துவங்கி 22.30 மணி வரையும் செயல்படும். தடம் எண் 14–இல் காலை 08–30 வரை

கூட்டம் குறைவாக இருக்கும். மைசூர் நகரத்திலே இத்தடம் அதிக தூரத்தைக் கடப்பதாலும் பல முக்கிய இடங்களைத் தொட்டுச் செல்வதாலும் 08.30-க்குப் பிறகு இரவு கடைசிப் பயணம் வரை கூட்டம் குறையாமலே இருக்கும். சென்னை நகரத்தைப் போல் வசூல்படி **(collection batta)** முறை மைசூரில் இல்லை.

நடத்துநர்கள் தேவைப்பட்டால் அவர்களுடைய மொழிப்பயனை குறிப்பிட்ட அளவிற்குள்ளேயே அடக்கிவிடலாம். அவர்கள் அதிகமாய்ப் பயன்படுத்தும் சொற்கள் பெரும்பான்மையும் ஆங்கிலச் சொற்களாகவே இருக்கும்.

sta:p, (h) o:lD - a:n	'நிறுத்து'
raiT	'சரி, புறப்படு, ஓட்டு'
STa:P	'நிறுத்து'
Tiket	'பயணச் சீட்டு'

ஆகிய வார்த்தைகள்தான் அதிகமாக வழக்கில் உள்ளன. இவை தமிழ்நாட்டிற்கும் பொருந்தும்.

மை. பே. ந. ஓட்டச் சொல்லவோ நிறுத்தச் சொல்லவோ ஓட்டுநருக்கு மூன்று வகையில் குறிப்புக்களைத் தருகின்றனர்.

1. மொழியால்
2. வாயால் (கை வைத்தோ வைக்காமலோ அல்லது ஊதலின் துணை கொண்டோ சீழ்க்கை அடித்தல்)
3. பேருந்தின் மேற்புறத்தையோ, பக்கவாட்டையோ ஓங்கித் தட்டுதல் (ஒரு முறை தட்டினால் நிறுத்தக் கூறும் குறிப்பு; இருமுறை தட்டினால் புறப்படச் சொல்லும் குறிப்பு)

தசரா நாட்களில் மட்டுமின்றி எல்லாக் காலங்களிலும் மைசூருக்குப் பல காரணங்களைக் கொண்டு பல மாநிலத்தாரும் வருவதால் ஒவ்வொரு நிறுத்தத்தையும் **(bus stop)** குறிப்பிட்டுக் கூவுவார்கள். அவர்கள் அடையாளமாக ஒரு பெரிய கட்டிடத்தையோ, திரை அரங்குகளின் பெயரையோ கல்லூரியையோ மருத்துவமனையின் பெயரையோ கூறுவர். சென்னையிலும் இதே மாதிரியான அறிவிப்பு

களைக் கேட்கலாம். சான்றாக, டி. வி. எஸ், ஆனந்த், ஸ்பென்சர்ஸ், சாந்தி, அண்ணா சதுக்கம்.

நடத்துநர்கள் பலதரப்பட்ட சமூக, கல்வி மட்டங்களைச் சார்ந்த பயணிகளிடத்தில் பொதுப் பேச்சுக் கன்னடத்திலேயே பேசுகின்றனர். (இதைப்போலவே சிறிது வேறுபாடு இருப்பினும் சென்னையைத் தவிர்த்த பிற இடங்களிலும் பொதுப்பேச்சுத் தமிழின் துணையையே நாடுகின்றனர்). பொதுப் பேச்சு மொழி என்பது கற்றவர்கள் பேசும் மொழியே எனப் பலர் கூறியுள்ளனர். (இராசாராம், 1974; வசந்த குமாரி, 1976; அண்ணாமலை, 1976; இராமசாமி, 1979) நடத்துநர்கள் அனைவரும் ஓரளவிற்காவது கல்வி பெற்றவர்கள். ஆதலால் இவர்கள் கூற்று சரியானதே.

இடம், மொழி தெரியாத புதியவர்கள் (தமிழிலோ, ஆங்கிலத்திலோ இந்தியிலோ அவர்கள் போகவேண்டிய இடத்தைக் கேட்டால் மை. பே. ந. குறிப்பிட்ட இடம் வந்ததும் தமிழிலோ ஆங்கிலத்திலோ இந்தியிலோ (அரைகுறையாக இருப்பினும்) அவர்களை இறங்கச் சொல்வர்.

மை. பே. ந. பயணிகளை ஆண்கள், பெண்கள் என இரு விதமாகப் பிரித்து மரியாதை காட்டுகின்றனர்.

ஆண்களை, வயது, உடையலங்காரம், போகும் இடம், கையில் வைத்திருக்கும் பொருள்கள் இவைகளைக் கொண்டு கணிக்கின்றனர். அதன் பின் இந்நடத்துநர்கள் பயணிகள் எங்கே செல்லவேண்டும் என்ற கேள்வியை மதிப்புக் கலந்த மரியாதையாகவோ, அல்லது மதிப்பு அல்லது மரியாதை தரும் சொற்களை நீக்கிவிட்டோ கேட்பார்கள்.

ஆனால் பெண்களை பொதுவாக மரியாதையுடனேயே கேட்பார்கள்.

இக்கட்டுரையில் நடத்துநர்கள் பயன்படுத்தும் ஒரே ஒரு கேள்வி மட்டுமே ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

'elli ho:g be:kku?' 'எங்கே போக வேண்டும்?'

இந்த வினாவினை எங்ஙனம் மரியாதை கலந்தும் கலக்காமலும் ஆட்களுக்குத் தகுந்தவாறு பயன்படுத்துகின்றனர் என்பதைக் காணலாம்.

'elli ho:g be:kku?' 'எங்கே போக வேண்டும்?'

என்ற கேள்வியை (ஆண்களிடம்) கேட்கும் போது பல விதமாகக் கேட்கலாம்.

1. 'e:n sa:r elli ho:g be:kku?'
   'ஏன் சார் எங்கே போக வேண்டும்?'

2. 'sa:r, elli ho:g be:kku?'
   'சார் எங்கே போக வேண்டும்?'

3. 'elli sa:r ho:g be:kku?'
   'எங்கே சார் போக வேண்டும்?'

4. 'elli ho:g be:kku sa:r?'
   'எங்கே போக வேண்டும் சார்?'

5. 'elri sa:r ho:g be:kku?'
   'எங்கேங்க சார் போக வேண்டும்?'

இதில் 'சார்' என்பதனை உருபனாக (morpheme) எடுத்துக் கொண்டால் சமூக, சுற்றுப்புற நிலைகளினால் கட்டுப்படுத்தப்பட்டு a) Sva;mi, b) gavDre, என்பவைகளை மாற்றுருபன்களாக எடுத்துக் கொள்ளலாம். ஒரு மாற்றுருபன் வரும் இடத்தில் மற்ற மாற்றுருபன்கள் வாரா.

"ஸ்வாமி" என்பதை வயது முதிர்ந்த கிராமத்தாருக்கோ, கல்வியறிவு இல்லாத பெரியவருக்கோ பயன்படுத்துவார்கள். பூசை செய்யும் அர்ச்சகர்கருக்கும் "ஸ்வாமி" உபயோகிக்கப் படுகின்றது. இதற்கு ஈடாகத் தமிழகத்தில் 'ஐயா' என்பது வழங்கப்படுகின்றது. சில சமயங்களில் 'பெரியவரே' என்பதும் பயன்படுத்தப்படுகிறது.

கன்னடம்: elli sva:mi ho:g be:kku?

தமிழ்: எங்கேங்க போகணும்

மேற்கூறிய ஐந்து விதங்களிலும் இதனைப் பயன்படுத்தலாம்.

'கௌடரே' என்பது ஓர் இனத்தினரைக் குறிக்கும் விளியாகும். மைசூரில் இவர்கள் அதிக அளவில் இருப்பதால் பேருந்துகளில் பெரியோர்களை (அப்பிரிவினைச் சேராதவராயிருப்பினும்) இவ் விளியினைப் பயன்படுத்தி அழைப்பார்கள். தமிழ் நாட்டில், குறிப்பாக, கோயம்புத்தூரில் முதியோர், மதிப்பிற்குரியவர்கள் 'கவுண்டரே' என அழைக்கப்படுகிறார்கள்.

'சார்' என்பது பொதுவாக அனைவருக்கும், குறிப்பாகத் தெரிந்தவர்களிடமும், படித்தவர்களிடமும், கல்லூரி மாணவர்களிடமும், நன்றாக உடை உடுத்தியவர்களிடமும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டிலும் இதே முறை கையாளப்படுவதைக் காணலாம்.

'அப்பா' என்பது தனித்து இயங்கும் போது தந்தையைக் குறிக்கும் உறவுச் சொல்லாக விளங்குகிறது. இது தனித்து இயங்காத பொழுது மரியாதைச் சொல்லாக இல்லாமல் பொதுவான விளிக் கூறாக விளங்குகிறது. பள்ளிச் சிறுவர்கள், படிக்காதவர்கள், அழுக்கு உடையுடன் இருப்பவர்கள் முதலியவர்களை அழைக்கப் பயன்படும். இத்துடன் '–ரி' சேர்ந்து வர வேண்டிய அவசியமில்லாவிட்டாலும் சில சமயங்களில் இதுவும் சேர்ந்து வரும்.

'elliyappa ho:g be:kku?'
'elrappa ho:g be;kku?'
'எங்கேயப்பா போக வேண்டும்?'

சிறுவர்கள், கொத்துவேலைக்காரச் சிறுவர்கள், அழுக்கு உடையுடன் செல்லும் சிறுவர்கள் ஆகியோரிடம் 'mari','magu' 'குழந்தை' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். பல சமயங்களில் இவர்கள் முற்றும் மரியாதை இல்லாமல் 'டேய்' என அழைக்கப்படுகின்றனர்.

"elli mari ho:g be:kku?"
"elli magu ho:g be:kku?"
"elligo ho:g be:kku?"
'எங்கே பையா போகவேண்டும்?'
'எங்கேடா போக வேண்டும்?'

இத்துடன் –ரி' மரியாதை உருபைச் சேர்க்க முடியாது.

'மிஸ்டர்' என்பது எப்பொழுதாவது படித்தவர்களிடம் பயன் படுத்தப்படும்.

பெண்களுக்குரிய உருபனாக 'அம்மா' என்பதை எடுத்துக் கொள்ளலாம். இதுவும் 'அப்பாவைப்' போன்றதே. இதற்கு மாற்றுரு பன்களாக "அவ்வா, தாயி" இவைகளை எடுத்துக் கொள்ளலாம்.

'அம்மா' என்பது சாதாரணமாகக் குடும்பப் பெண்களுக்கும் படித்தவர்களுக்கும் கல்லூரிப் பெண்களுக்கும் பயன்படுத்தப்படு கின்றது. இது '–ரி' என்பதுடன் சேர்ந்து இயங்கும். 'அம்மா' என்பது மற்றப்படி எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும். தமிழகத்தில் இந்த வார்த்தையையே பெண்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

'elramma ho:g be:kku?'
'elri amma ho:g be:kku?'
'ellamma ho:g be:kku?'
'எங்கேயம்மா போக வேண்டும்?'

'அவ்வா, தாயி' இரண்டும் கிராமத்துப் பெண்களுக்குரியது. காய் கறிக் கூடையுடன் ஏறும் வியாபாரப் பெண்மணிகளிடமும் இவையே உபயோகிக்கப்படுகின்றன.

'elli gavva: ho;g be:kku?'
'elli ta;yi ho:g be:kku?'
'எங்கேயம்மா போக வேண்டும்?'

'அஜ்ஜி' என்பது தனியாக ஏறும் வயதான பெண்மணியிடம் பயன்படுத்தப்படுகிறது.

'elli gajji ho:g be:kku?'
'எங்கே பாட்டி போக வேண்டும்?'

சிறுமிகளை, சிறுபையன்களை

'elligo ho:g be:kku?'
'எங்கேடா போக வேண்டும்?'

என்று கேட்பதுபோல் கேட்காமல் 'அம்மா','அவ்வா', தாயி' போன்ற வைகளைக் கொண்டே அழைக்கின்றனர்.

இரு பாலாருக்கும் பொதுவான கேள்விகள் மரியாதையுடனோ தவிர்த்தோ கேட்கப்படுகின்றன.

மரியாதையோடு

'elri ho:g be:kku?'

'எங்கேங்க போக வேண்டும்?'

மரியாதை உருபுகள் தவிர்த்து

'elli ho:g be:kku?'

'எங்கே போக வேண்டும்?'

மைசூர் நகரப் பேருந்துக்கு இருவாயில்கள் உண்டு. முன் வாயில் பெண்கள் ஏறவும் இறங்கவும் உரியது. பின் வாயில் ஆண் ளுக்குரியது. கூட்டம் அதிகமாக இருக்கும் போது ஆண்களை முன்னே போகவும் பெண்களைப் பின்னே போகவும் அனுமதிப்பர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூற வேண்டியிருப்பதால் 'சார்', 'அம்மா' பயன்படும். சில சமயங்களில் இரண்டும் இல்லாமல் அதி காரம் மட்டும் குரலில் காணப்படும்.

ஆண்களுக்கு

munde {banni / ho:gi} (ri) sa:r

பெண்களுக்கு

hinde {banni / ho:gi} (ri) amma

அதிகாரம்

{munde / hinde} {banni / ho:gi} (ri)

'banni', 'ho:gi' என்பது நடத்துநர் எந்த வாயிலில் நிற்கிறார் என்பதைப் பொறுத்து அமையும்.

இத் தொழிலில் விரைவில் கோபம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு. பயணிகள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முதலில் கைவிடுவது நடத்துநர்களுக்குக் காட்ட வேண்டிய மரியாதையையே. ஆனால் மைசூர் பேருந்து நடத்துநர்கள் பயணிகளுக்குக் காட்ட வேண்டிய மரியாதையை அவ்வளவு எளிதில் கைவிடுவதில்லை. இதற்கு மாறாக சென்னையில் நடத்துநர்கள் பலர் விரைவில் மரியாதையைக் கைவிட்டுவிடுவதைக் காணலாம்.

பயணிகளை நடத்துநர்கள் எங்ஙனம் கணித்து அவர்களுக்குரிய மரியாதையை மொழியின் மூலம் தெரிவிக்கின்றனர் என்பதைக் கண்டோம். இத்தகைய ஆராய்ச்சிகள் மற்ற துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்.

நன்றி: கட்டுரை எழுத முழு ஆதரவையும், உற்சாகத்தையும் நல்கி பிழைகளைத் திருத்தி, மொழியை செவ்வைப்படுத்தி, தட்டச்சு செய்து தந்த திரு. நடராசபிள்ளைக்கும், திருமதி விமலா நடராசப் பிள்ளைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவிய கட்டுரைகள், நூல்கள்

சீனிவாசவர்மா, கோ. 1976. "வட்டார வழக்கில் வேளாண் கலைச் சொற்கள்" **மொழியியல்** 3:2-3. பக். 231–241.

ஞானசுந்தரம், வ. 1979 "பொதுப் பேச்சுத்தமிழ்: அதில் இரு நிலையின் பங்கு" **மொழியியல்** 3:2-3. 53–104.

ராஜகுமாரி, கே. வி. 1979 "சென்னை மீனவர் கிளை மொழியில் வேற்றுமை உருபுகள்" **மொழியியல்** 3:2–3. 221–229.

Acharya, A.S. 1967 *Halakki Kannada* Xoona. Deccan College.

——— 1971 *Barkur Kannada* Poona. Deccan College.

Annamalai, E. 1976. "Standard Spoken Tamil – Some Observations" *Studies in Dialectology*. Vol. 1. No. 2. 266-268

Bright, William 1958 *An Outline of Colloquial Kannada*. Poona. Deccan College.

——— 1960 "A Study of Caste and Dialect in Mysore". *Indian Linguistics*. 21. 45–50

——— & Ramanujan, A.K. 1964 "Sociolinguistic Variation and Language Change". in: *Sociolinguistics* Pride J. B. & Holmes J. Ed.) Penguin Books 1972. 157-166.

Gowda, K. Kushalappa 1970 *Gowda Kannada*, Annamalai University, Annamalainagar.

Krishnamurthi, Bh. 1978. Language Planning and Development: The case of Telugu". *Contribution to Asian Studies* Vol. II: 37–56.

Kumari T. Vasantha 1976, "The Standard Spoken Tamil". *Studies in Dialectology*. Vol. 1 No. 1 110–118.

Maloney, Clarence, 1978. Language and Modern Civilization in South Asia" *Coutribution to Asian Studies* Vol. II 3–36.

McCormack, William, 1966. *Kannada* Madison, The University of Wisconsin Press.

Nayak, H.M. 1967. *Kannada: Literary and Colloquial: A Study of Two Styles*. Mysore. Rao & Raghavan.

Pillai, M. Shanmugam 1965 "Caste Isoglosses in Kinship Terms" *Anthropological Linguistics*. Vol. 7. No. 3. Part. II 59–66

——— 1968 "Fishermen Tamil of Kanyakumari". *Anthropological Linguistics* Vol. 10. No. 4. 1–11.

Rajaram, S. 1974 *A Contrastive Analysis of Tamil and Kannada* (Unpublished Ph. D., Dissertation) Annamalai University, Annamalainagar.

Ramaswamy, N. 1979 *Formal and Informal Tamil* (Unpublished Ph.D. Dissertation) University of Kerala.

Schiffman, Harola 1979. *A Reference Grammar of Spoken Kannada*. Seattle. University of Washington.

Upadhyaya, U.P. 1968 *Nanjangud Kannada*, Poona. Deccan College.

——— 1971 "Effects of Bilingualism on Bidar Kannada". *Indian Linguistics*. Vol. 32. No. 2 132–138.

மொழி கற்பித்தலும் மொழியியலும்

மொழியைக் கற்பிக்கும்பொழுது, நமது விருப்பு வெறுப்பு இவைகளை ஒருபக்கம் ஒதுக்கிவிட்டு, கற்பவன் எதற்காகக் கற்கிறான், அவனுக்குத் தேவை எது என்பதைத் தெரிந்து கற்றுக்கொடுக்க வேண்டும். இது மொழியியலார் பின்பற்றும் முதல் நோக்கம்.

எந்த மொழியையும் பேசக் கற்றுக்கொள்ளும்பொழுது தாய்மொழியாளனைப் போலப் பேசப் பழகுதல் வேண்டும். ஒவ்வொரு மொழிக்கும் தாய்மொழியாளன் பேசும் பேச்சே தகுதிப்பேச்சு. அவனையே பின்பற்றவேண்டும். அவனைப் போலப் பேசவேண்டும். இது இரண்டாவது நோக்கம்.

மொழியைக் கற்பது ஒரு பழக்கம். பழக்கத்தைத் திரும்பத் திரும்பச் செய்துதான் பழகுதல் வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது மொழியை எவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டும் என்பதையே கூறுகிறது. எனவே மொழியைக் கற்றுக் கொடுக்கும்பொழுது பழக்கப் பயிற்சிக்கு மொழியியலார் அதிக இடம் கொடுக்கின்றனர். இப்படிப் பயிற்சிக்குத் தக்கவாறு,

உச்சரிப்பு, வாக்கியம் ஆகிய பல நிலைகளிலும் பொருத்தமான பாடங்களை வகுத்துக்கொள்கின்றனர்.

மொழி, அம்மொழியைப் பேசுகின்றவர்களுடைய பண்பாட்டில் ஒரு கூறு. மொழியை அப்பண்பாட்டிலிருந்து பிரிக்கமுடியாது. எனவே மொழியை அதற்குரிய பண்பாட்டோடு இணைத்தே கற்றுக்கொடுக்க வேண்டும்.

பிறமொழியைக் கற்கும்பொழுது, தாய்மொழியின் குறுக்கீடு ஒரு பெரிய சிக்கல். உச்சரிப்பிலும் இலக்கியத்திலும் தாய்மொழியின் சாயல் இரண்டாம் மொழியில் புகுந்து, அம்மொழியின் இயல்பைக் கெடுக்கும். இதனால் மொழியைக் கற்பிக்கின்றவன் கற்பவனுடைய தாய்மொழியின் இலக்கண அமைதியையும் தெரிந்து, எங்கெல்லாம் இக்குறுக்கீடு வரும் எனக் கண்டு, முதலிலிருந்தே இக்குறுக்கீட்டைத் தடுத்துவிடுகின்றான்.

மொழியைக் கற்பதில், நமது மாணவர்களுக்கு எவ்வாறு விரைவில் செம்மையாக ஆங்கிலத்தைக் கற்பிக்கலாம் என்பது ஒரு பிரச்சனை. இன்று நமது மாணவர்கள் மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்கின்றார்கள். அவர்கள் பி. ஏ. வகுப்பு முடிந்து வெளியேறும் பொழுதும் ஆங்கிலத்தை சரிவரப் பேசவும் முடியவில்லை. எழுதவும் முடியவில்லை. மாணவன் தனது கல்வியாண்டில் பெரும் பகுதியை ஆங்கில மொழிக்கே செலவு செய்கிறான். உயர்நிலைப் பள்ளி முடியும் பொழுது மட்டும் சுமார் ஓராயிரம் வகுப்பு மணிகள் ஆங்கிலத்திற்கெனச் செலவு செய்கிறான். வீட்டிலும், மற்ற பாடங்களைவிட ஆங்கிலம் கற்பதற்கே அதிக நேரம் செலவு செய்கிறான். இருந்தும் அவனுடைய ஆங்கில அறிவு அவ்வளவுதான். இதைவிடக் கல்வித்துறையில் வேறு என்ன கொடுமை வேண்டும்? ஆங்கிலத்தைக் கற்பிக்கும் முறையை மாற்றினால் இதே கால அளவில் செம்மையாக ஆங்கிலத்தைக் கற்கமுடியும். மொழியியல் வல்லுநர் நுழைந்தபின்பு, இந்தியாவில் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்பிக்கும் முறையில் முன்னேற்றம் கண்டு வருகிறோம்.

டாக்டர் **முத்துச்சண்முகன்**
இக்கால மொழியியல், மதுரை, 1980.

மொழியியல் 4,1 & 2 (1980)

பயனிலை : அகமும் புறமும்

இரா. கோதண்டராமன்

1. 1. தமிழ்ப்பயனிலையின் அமைப்புப்பற்றி ஓரளவு இந்த ஆய்வுரையில் சிந்திக்கப்படுகிறது. இந்தச் சிந்தனை வினைப் பயனிலையையே மையமாகக் கொண்டதாயினும், இதன் முடிவுகள் பெயர்ப்பயனிலைக்கும் பொருந்தும். வினையடிகள் அனைத்தும் பெயராகக் கருதத்தக்கவை என்பது நமது கொள்கை (Kothandaraman, R. 47-53 : 1978, கோதண்டராமன், இரா: 39:1979b). ஆதலின் வினைப்பயனிலைகள் என்பனவும் பெயர்ப்பயனிலைகளாகக் குறிக்கத்தக்கனவேயாகும். வினையென்பது பெயரில் ஒருவகை யாதலின் வினைப்பயனிலைகளை வினைப்பெயர்ப்பயனிலைகள் எனக் கொள்வது மிகவும் பொருத்தமாகும். இக்கட்டுரையில் **வினைப்பய னிலைகள்** என்ற ஆட்சி **வினைப்பெயர்ப்பயனிலைகள்** என்ற பொருளிலேயே கொள்ளப்படுகின்றது. இவ்வாறே முற்றெச்சங் களாகிய **வினைமுற்றுக்கள்** என்பனவும் வினைப்பெயரின் வகைகளுள் ஒன்றாக இக்கட்டுரையில் கருதப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தமிழில் அமைந்த பயனிலைகள் யாவும் பெயர்ப்பயனிலைகளாகக் கொள்ளத்தக்கவை என்பதும், வினைப்பயனிலைகள் அவற்றுள் ஒரு

வகை என்பதும் பெறப்படும். இதனைப் பின்புலமாகக் கொண்டு பின்வரும் வாக்கிய வகைகளைச் சற்று கவனத்தில் கொள்ளவும்.

1 (1) முருகன் வள்ளியைக் கண்டான்

(2) முருகன் கண்டது வள்ளியை ஆகும்

(3) முருகன் கண்டதாவது வள்ளியை

மேலே (1)-இல் நிகழும் மூன்று வாக்கியங்களும் பொருண்மைத் தொடர்புடையனவாகும். இவற்றுள் 1 (2), (3)-இல் உள்ள வாக்கியங்களில் நிகழும் **ஆகும், ஆவது,** ஆகிய உறுப்புக்கள் சிதறிய வழக்கினவாகும். இதன் மூலம் 1(3)-இல் நிகழும் **ஆவது,** என்னும் உறுப்பு, 1(2)-இல் நிகழும் **ஆகும்,** என்னும் உறுப்பு உணர்த்தும் இருப்புப் பொருண்மைக்கும், அதன் இலக்கணச் செயற்பாட்டிற்கும் உரியது என்பது தெளிவாகின்றது. **ஆகும், ஆவது,** ஆகிய இரண்டு உறுப்புக்களும் சிதறிய வழக்கினவாதலின் பின்வரும் வாக்கியம் இலக்கணத்தன்மை அற்றதாகின்றது.

1 (4) * முருகன் கண்டதாவது வள்ளியை ஆகும்

இந்த வாக்கியத்தின் அடியாகத் தோன்றும் பெயரெச்சத்தொடர் பின் வருமாறு இருக்கும்.

(2) * முருகன் கண்டதாவதாகிய வள்ளி.

இப்பெயரெச்சத் தொடர் ஏற்புடையதல்லவாகலின் 1(4)-இல்அமைந்த வாக்கியமும் ஏற்புடையதல்லவாகின்றது. இதன் மூலம் **ஆகும், ஆவது,** ஆகிய இரண்டு உறுப்புக்களும் ஒரே வாக்கியத்தில் நிகழும் பெற்றியன அல்ல என்பது தெளிவாகின்றது.

1.2. **ஆகும், ஆவது,** ஆகிய இரண்டு உறுப்புக்களும் வாக்கியங்கள் 1(2), (3)-இல் சிதறிய வழக்கினவாதல் கண்டோம். இந்த இரண்டு வாக்கியங்களையும் பெயரெச்சத் தொடராக மாற்றுகையில் இரண்டுக்கும் பொதுவாகப் பின்வரும் ஒன்றே பெயரெச்சத்தொடராயமைகின்றது.

(3) முருகன் **கண்டதாகிய** வள்ளி

வாக்கியம் 1(2)-இல் **கண்டது** என்னும் உறுப்பும் **ஆகும்** என்னும் உறுப்பும் விலகிக் கிடந்தாலும், பெயரெச்சத்தொடரில் அவை இரண்டும் அண்மை உறுப்புக்களாய் அமைவதைக் காண்கிறோம்.[1] இதன் மூலம் வாக்கியம் 1(2)-இல் நிகழும் **கண்டது** என்பதும் **ஆகும்** என்பதும் அண்மை உறுப்புக்களாகக் கருதத் தக்கவை என்பதும், அவை ஓர் உயிர்நிலை (obligatory) விகாரத்தின் மூலம் மேற்படி வாக்கியத்தில் பிரிக்கப்பட்டுள்ளன என்பதும் தெளிவா கின்றது. வாக்கியம் 1(3)-ஐப் பொறுத்தவரை சிக்கல் ஏதும் இல்லை. இங்கே **கண்டது** என்பதும் **ஆவது** என்பதும் அண்மை உறுப்புக் களாகவே நிகழ்கின்றன. இந்த நிலை பெயரெச்சத்தொடரிலும் போற்றப்படுகின்றது. (3)-இல் அமைந்த பெயரெச்சத்தொடரைக் கருத்தில் கொண்டால் கீழே (4)-இல் குறிக்கப்பெற்றுள்ளது போன்ற ஓர் வாக்கிய வகையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியது இன்றியமையாத தாகின்றது.

(4) * முருகன் வள்ளியைக் கண்டதாகும்.

ஓர் உயிர்நிலை விகாரத்தின் மூலம் வாக்கியம் (4), 1(2) இல் உள்ளது போல் **முருகன் கண்டது வள்ளியை ஆகும்** என்று மாற்றப்படு கின்றது. ஆயினும் (3)-ல் உள்ள **முருகன் கண்டதாகிய வள்ளி** என்ற பெயரெச்சத் தொடரைப் பொறுத்தவரையில் அதனுடைய மிக நெருங்கிய மூல வாக்கியம் (4)-இல் உள்ளதாகத்தான் இருக்குமே யொழிய, 1(2)-இல் உள்ளதாக இருக்கமுடியாது. காரணம், (3)-இல் உள்ள **கண்டது, ஆகிய** இவற்றுக்கிடையில் இயல்பாக அமைந்த அண்மை உறுப்பு நிலையானது. (4)-இல் சிறப்பாகப் போற்றப் படுகின்றது.

1.3. **ஆகும், ஆவது** இரண்டும் **கண்டது** என்பதன் அண்மை யுறுப்புக்கள் ஆகும் நிலையை மேலே கண்டோம். இதனைக் கருத் தில் கொண்டு நோக்குகையில் இந்த இரண்டு உறுப்புக்களுக்கு நிகராக வாக்கியம் 1(1)-இலும் ஓர் உறுப்பு **கண்டான்** என்பதை அடுத்து குறிக்கப்பெற வேண்டும் என்பது புலனாகிறது. இது ஒரு சிக்கலான நிலை. இதை இரண்டு வகைகளில் தீர்க்க முற்படலாம். முதல்வகைத் தீர்வு **கண்டான்** என்ற பயனிலைக்குள்ளேயே **ஆகும், ஆவது** என்பவற்றுக்கு நிகரான ஓர் உறுப்பைச் சுட்டுவதாகும்.

இரண்டாம் வகைத் தீர்வு, மேற்படி பயனிலையை அடுத்து **ஆகும், ஆவது, ஆவான்** ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் குறிப்பதாகும்.[2] இந்த இரண்டுவகைத் தீர்வுகளில் எது சிறப்பானது? எது தவிர்க்கற் பாலது? இரண்டுமே சிறப்பான தீர்வுகளாகத்தான் நமக்குத் தோன்று கிறது. ஆகவே இந்தச் சிக்கலை இரண்டு வகைகளில் நாம் தீர்க்க முற்படலாம்.

1·3 முதல்வகைத் தீர்வை முதலில் கருத்தில் கொள்ளலாம். எடுத்துக்காட்டு (1)–இல் நிகழும் வாக்கியங்களுக்கு நிகராகப் பின் வரும் பெயரெச்சத் தொடர்கள் அமையும்.

5 (1) முருகன் கண்ட வள்ளி(<== 1(1))
(2) முருகன் கண்டதாகிய வள்ளி (<==1(2),(3))

இந்தப் பெயரெச்சத் தொடர்களில் நிகழும் **கண்ட, கண்டதாகிய** ஆகிய இரண்டு அமைப்புக்களையும் சற்று சிந்தித்துப் பார்க்கலாம். இவ்விரு அமைப்புக்களுமே ஒரே பொருண்மையினவாகும். **கண்ட தாகிய** என்பதில் நிகழும் ஆகிய என்னும் உறுப்புக்கு நிகராக **கண்ட** என்பதில் நிகழும் அகரக்கிளவி அமைகின்றது. அதாவது இவ்விரு அமைப்புக்களிலும் **ஆகிய** என்பது **கண்டது** என்பதை அடுத்தும், அகரக் கிளவியானது **கண்டு** என்பதை அடுத்தும் சிதறிய வழக்கினவாகின்றன.[3] **கண்ட, கண்டதாகிய** ஆகிய இரண்டும் முறையே **கண்டான், *கண்டதாகும் / கண்டதாவது** ஆகியவற்றின் விகார வடிவங்களாகும். **கண்ட** என்பதில் உள்ள அகரக் கிளவியானது **கண்டான்** என்பதில் உள்ள **ஆன்** என்பதன் விகாரக் கிளவியாகவும், **கண்டதாகிய** என்பதில் உள்ள **ஆகிய** என்பது **ஆகும்/ஆவது/ஆவான்** என்பதன் விகார உறுப்பா கவும் அமைவனவாகின்றன. இதன் மூலம் **கண்டான்** என்பதில் நிகழும் **ஆன்** என்னும் உறுப்பு, **ஆகும்/ஆவது/ஆவான்** என்பத னுடன் தொடர்புடையதாதல் புலனாகின்றது. சற்று விளக்கமாகக் கூறவேண்டுமாயின், **கண்ட** என்பதில் உள்ள அகரக் கிளவியும், **கண்டதாகிய** என்பதில் உள்ள **ஆகிய** என்னும் உறுப்பும் சிதறிய வழக்கினவாதல் போன்றே **கண்டான்** என்பதில் நிகழும் **ஆன்** என்னும் உறுப்பும், **ஆகும்/ஆவது/ஆவான்** என்பதும் சிதறிய வழக் கினவாகின்றன. இந்த வழக்குநிலையானது **ஆன்** என்னும் முற்று

விகுதியானது **ஆகும்/ஆவது/ஆவான்** என்பதன் செயற்பாட்டுடன் பொருந்தியது என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

1.4. இனி இரண்டாம் வகைத் தீர்வினைக் காண்போம். 1(1)-இல் உள்ள **முருகன் வள்ளியைக் கண்டான்** என்னும் வாக்கியம் பின்வருமாறு மீட்டுருவாக்கம் செய்யப்படும்.

6(1) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும்
(2) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது
(3) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆவான்

இந்த மீட்டுருவாக்கம் 1(2),(3)-இல் நிகழும் **ஆகும், ஆவது** ஆகிய வற்றின் நிகழ்ச்சியைப் பின்புலமாகக் கொண்டதாகும். 6(3)-இல் அமைந்த மீட்டுருவாக்கம் இயைபு கருதி அமைந்த ஒன்றாகும். இந்த மீட்டுருவாக்கத்துக்கு வைகச்செய்வது பின்வரும் வாக்கிய வகையாகும்.

7) வள்ளியைக் கண்டவன் முருகன் ஆவான். (= 1(1))

இந்த வாக்கியத்தில் நிகழும் **கண்டவன்** என்பது **கண்டான்** என்பதன் மாற்றுவடிவமாகும். இந்த மாற்றுவடிவத்துக்கு இயைபாகி நிற்பது **ஆவான்** என்னும் வினை.[4] மீண்டும் இங்கே **கண்டவன், ஆவான்** ஆகியவை அண்மை உறுப்புக்களாகக் கொள்ளத்தக்கவையாகும். காரணம் **கண்டவன்** என்பதும், **ஆவான்** என்பதன் விகாரவடிவ மாகிய **ஆகிய** என்பதும் பின்வரும் பெயரெச்சத்தொடரில் அண்மை யுறுப்புக்களாகின்றன.

8) வள்ளியைக் **கண்டவனாகிய** முருகன்

வாக்கியம் (7)-உடன் தொடர்புடையதாகும் இப்பெயரெச்சத்தொடர். இதனைக் கருத்தில் கொண்டு (7)-இல் உள்ள வாக்கியம் பின் வரும் வாக்கியத்தின் திரிபாகக் கருதத்தக்கதாகின்றது.

9) *வள்ளியை முருகன் கண்டவன் ஆவான்.

மேலே (9)-இல் குறிக்கப்பெற்றுள்ள வாக்கியம், 6(3)-இல் அமைந்த *** முருகன் வள்ளியைக் கண்டான் ஆவான்** என்ற வாக்கிய வகையை மீட்டுருவாக்கம் செய்ய வகைசெய்கின்றது.[5]

***முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும்** (6 (1)). ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** (6(2)) ஆகிய மீட்டுருவாக்கங்களை நியாயப்படுத்துவதற்குப் போதுமான தடயங்கள் தமிழில் தென்படுகின்றன. இந்தத் தடயங்கள் எத்தகையன என்பது பற்றி இனி சிந்திக்கலாம்.

1.5. **ஆகும்** என்னும் பொதுவினை **ஆம்** என்று ஒடுங்கி சிறப்பு வினைமுற்றுக்களை அடுத்து நிகழும் போக்கு பழந்தமிழிலும் உரையாசிரியர்கள் தமிழிலும் இயல்பாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் தெளிவுபடுத்தும்.

10) புணராத முன் சொல் நிகழும் என்பாரை **மறுத்தாராம்** (இறையனார் அகப்பொருள். நூற்பா. 15, உரை)

11) தலைமகன் ———— ஆற்றாமை வாயிலாற் **கூடினான் ஆம்** (இறையனார் அகப்பொருள், நூற்பா. 4, உரை)

12) தலைமகன் கேட்பின் வரைவானாம் (இறையனார் அகப்பொருள், நூற்பா. 30 உரை)

13) **பணியுமாம்** என்னும் பெருமை (குறள் 978)

14) இவை முதலாயின் நினைந்து ஆற்றானாம் (இறையனார்) அகப்பொருள், நூற்பா 3. உரை)

15) தலைமகள் **ஆற்றாளாம்** என்று தோழி **ஆற்றாளாம்** (இறையனார் அகப்பொருள், நூற்பா. 14. உரை)

1.6. இக்காலத்தமிழில் இத்தகைய வாக்கிய அமைப்புக்கள் அறிவிப்புச் சூழலில் இயல்பாக நிகழ்கின்றன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் அறியலாம்.

16 1) மாதவி (மல்லிகாவிடம்) : முருகன் வள்ளியைக் **கண்டான்**

2) மல்லிகா (உமாவிடம்) : முருகன் வள்ளியைக் **கண்டானாம்**

3) உமா (மல்லிகாவிடம்) : யார் சொன்னது?

4) மல்லிகா (உமாவிடம்) : மாதவி சொன்னாள்.

மேலே (16)-அல் அமைந்த வாக்கியங்கள் உரையாடற்சூழலில் அமைந்தவையாகும். இச்சூழலில் ஓர் வாக்கியம் அல்லது அந்த வாக்கியம் உணர்த்தும் செய்தி 16(2)-இல் உள்ளதுபோல் இரண்டாம் கூற்றாக அமைகையில் **ஆம்** என்னும் உறுப்பு பயனிலையை அடுத்து நிகழ்கின்றது. இவ்வாறு இரண்டாம் கூற்று வாக்கியம் பின்வரும் மீட்டுருவாக்க அமைப்பின் திரிபாக அல்லது அதனுடன் பொருந்திய ஒன்றாகக் கொள்ளத்தக்கதாகும்.

17) *எழுவாய் + ——— + பயனிலை-ஆகும்

(17)-இல் உள்ள இந்த அமைப்பானது இரண்டாம் கூற்றுத்தன்மை யற்றனவாய் (10) முதல் (15) வரையுள்ள வாக்கிய அமைப்புக்களுக் கும் பொருந்தும். இதனைக் கருத்தில் கொண்டு 6(1)-இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும்** என்ற வாக்கிய அமைப்பை ஏற்றுக்கொள்வதில் தடையொன்றும் இருக்கமுடியாது. இவ்வாக்கிய அமைப்பின் ஏற்புடைமையைப் பின்வரும் வாக்கிய நிகழ்ச்சிகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

18) (அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றான் என்பது கேட்டுச் செல்லா நின்றது உணர்ந்து) நம் பெருமான் **அருளிச் செய்தான் ஆகும்** (இறையனார் அகப்பொருள். நூற்பா. 1. உரை)

19(1) முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி
(தொல். சொல். சேனா. 226)

(2) நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யொற்றினும் **வாடா தாகும்**
(குறுந்தொகை 388.1-2)

இவ்வெடுத்துக் காட்டுக்களில் **ஆகும்** என்னும் உறுப்பு **அருளிச் செய்தான், மன்னாது, வாடாது** ஆகிய வினைமுற்றுளையடுத்து நிகழ்ந்து, 6(1)-இல் அமைந்த ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும்** என மீட்டுருவாக்கத்தை நியாயப்படுத்துவதைக் காணலாம்.

1.7. இனி 6(2)-இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** என்ற மீட்டுருவாக்கத்தின் ஏற்புடைமையை ஆராயலாம்.

இது உள்ளபடியே சற்று நெருடலான மீட்டுருவாக்கம் தான். இந்த மீட்டுருவாக்கத்துக்கு உந்துதலாக நமக்கு அமைந்தது 1(3)-இல் உள்ள **முருகன் கண்டதாவது வள்ளியை** என்ற வாக்கிய அமைப் பாகும். (6)-இல் நிகழும் ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும். *முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** ஆகிய மீட்டுவாக்கங்க ளின் ஏற்புடைமையைக் கருதுகையில் 6(2)-இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** என்ற மீட்டுருவாக்கமும் ஏற்புடைய தாகவே தோன்றுகிறது. ஆயினும் இந்த மீட்டுருவாக்கத்தினை ஏற்றுக்கொள்ள (6)-இல் நிகழும் ஏனைய இரண்டு மீட்டுருவாக்கங் களை நாம் சார்ந்திருக்க முடியாது. ***முருகன் வள்ளியைக் கண்டா னாவது** போன்ற வாக்கிய அமைப்புக்களைச் செல்லுபடியாக்குவதற்கு முன் தமிழில் வாக்கிய நிகழ்ச்சிகளின் சூழல்களை நாம் ஓரளவுக்குப் புரிந்து கொள்ளவேண்டும்.

1.8. தமிழில் அமையும் வாக்கியங்களைத் **தனிநிலை வாக்கி யங்கள் (free sentences)** எனவும் **பிணைநிலைவாக்கியங்கள் (bound sentences)** எனவும் இருவகையாகக் கொள்ளலாம். தனி நிலை வாக்கியங்கள் எந்தச் சூழலிலும் நிகழ வல்லனவாகும். எடுத் துக்காட்டாக, **முருகன் வந்தான், வள்ளி பாடினாள்** முதலான வாக் கியங்கள் எந்தச் சூழலிலும் நிகழ்வனவாகும். அதுமட்டுமல்ல; இவற் றின் பொருண்மை விளக்கம் எந்தச் சூழலுக்கும் கட்டுப்பட்டதும் அல்ல. அதாவது, எல்லாச் சூழல்களிலும் தனிநிலை வாக்கியங்கள் உணர்த்தும் பொருண்மை மாறாத ஒன்றாகும். பிணைநிலை வாக் கியங்களின் போக்கு வித்தியாசமானது. இவற்றின் நிகழ்ச்சி குறிப் பிட்ட சூழல்களால் கட்டுப்படுத்தப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, **முருகன் வந்தான் என்று வள்ளி சொன்னாள்** என்ற வாக்கியத்தில் நிகழும் **முருகன் வந்தான் என்று** என்பது ஓர் பிணை நிலை வாக் கியமாகும். இது குறிப்பிட்ட சூழலில் மட்டுமே நிகழவல்லது. இவ் வாறே 16 (2)-இல் உள்ள **முருகன் வள்ளியைக் கண்டானாம்** என் பதும் ஓர் பிணைநிலை வாக்கியமாகும். இதன் பொருண்மை விளக் கமும் கூட (16)-இல் குறிக்கப்பெற்றுள்ளது போன்ற ஓர் சூழலுக்குக் கட்டுப்பட்டதாகின்றது. பிணை நிலை வாக்கியங்கள் மொழிவளர்ச்சி யில் நேர்ந்த விளைவுகளாகும். உண்மையில் இந்த வாக்கியங்களும் மொழி வரலாற்றின் ஒரு கட்டத்தில் தனி நிலை வாக்கியங்களே.

மொழியின் வளர்ச்சியானது முனைப்பாகும்போது, சில தனி நிலை வாக்கியங்கள் புதிய மொழியியற் சூழலில் இயங்கமுடியாமற் போகின்றன. மொழியானது இதனால் அத்தகைய வாக்கியங்களைத் தனது கட்டுக் கோப்பினின்றும் ஒட்டு மொத்தமாகத் தவிர்த்து விடுவதில்லை, சில குறிப்பிட்ட மொழியியற் சூழல்களில் இயங்குமாறு அவற்றுக்கு வாழ்வளித்து அவற்றைப் பிணை நிலை வாக்கியங்களாக மொழி ஏற்றுக்கொள்கிறது. இந்தப் பின்னணியில்தான் 6 (2)–இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டானாவது** என்ற மீட்டுருவாக்கத்தினை நாம் அணுகவேண்டும். இந்த வகையில் பின்வரும் உரையாடற் சூழலில் **ஆவது** என்னும் உறுப்புடன் பொருந்திய வாக்கிய அமைப்புகளைக் கருத்தில் கொள்ளலாம்.

20. (1) மாதவன் : அனுமன் இலங்கைக்குச் சென்றானா?

(2) மாதவி : (அனுமன் இலங்கைக்குச்) **சென்றானாவது**. சென்று இலங்கையையே கலக்கிவிட்டல்லவா வந்திருக்கிறான்.

(3) மாதவன் : போன காரியம் என்னவாயிற்று, சீதையைக் கண்டானா?

(4) மாதவி : (சீதையைக்) **கண்டானாவது**. தான் ராம தூதன் என்பதை மெய்ப்பித்துவிட்டு அல்லவா வந்திருக்கிறான்.

மேலே (20)–இல் நிகழும் **அனுமன் இலங்கைக்குச் சென்றானாவது** (அனுமன் சீதையைக்) **கண்டானாவது** ஆகியவை வினவுதற் பொருண்மையினவாய் அமைந்த பிணை நிலை வாக்கியங்களாகும். பிணை நிலைவாக்கியங்களானவை தனி நிலை வாக்கியங்கள் என்ற நிலையைக் கடந்து வந்தவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் (20 –இல் உள்ள **சென்றானாவது, கண்டானாவது** ஆகியவை அமைந்த பிணை நிலை வாக்கியங்களுக்கு முன்னோடியாய் அமைந்தவை 6(2)–இல் நிகழும் ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** போன்ற வாக்கிய அமைப்புக்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் 6(2)–இல் உள்ள இந்த வாக்கியம் வினவற் பொருண்மையை உணர்த்துவதன்று. 6(2)–இல் உள்ளது

போன்ற தனிநிலை வாக்கிய வகைகளுக்கு மொழியில் இடமில்லையென்றால், (20)–இல் நிகழும் **(அனுமன் இலங்கைக்குச்) சென்றானாவது, (அனுமன் சீதையைக்) கண்டானாவது** போன்ற வினவற் பொருண்மையை உணர்த்தும் பிணைநிலை வாக்கியங்களின் நிகழ்ச்சிக்கு மொழியில் இடமில்லாமல் போய்விடும். ஆகவே 6(2)–இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** என்ற மீட்டுருவாக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. இது பிணைநிலை வாக்கியக் கோட்பாட்டின் மீது அமைந்த முடிபாகும். இதனைத் தவிர வேறொரு வகையிலும் 6(2)–இல் உள்ள மீட்டுருவாக்கத்தினை ஏற்புடையதாக்கலாம். இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கவனத்தில் கொள்ளலாம்.

21) பாங்கன்... அவன் சொன்ன இடம் நோக்கி **செல்வான் ஆவது**
(இறையனார் அகப்பொருள். நூற்பா. 3 உரை),

22) நகா நின்றன்றே சொல்லியது. அந்நகை ஒன்றுடைத்து என **ஆற்றுவான் ஆவது**
(இறையனார் அகப்பொருள், நூற்பா, 12. உரை)

23) தலைமகன் மாட்டுச் சென்று இக்குறை முடிக்கும் உபாயம் **ஆராய்வான் ஆவது**
(இறையனார் அகப்பொருள். நூற்பா. 9 உரை)

24) இக்குலத்துக்கு வடுவுண்டு போலும் என **உணர்வார் ஆவது** (இறையனார் அகப்பொருள்.நூற்பா 28 உரை)

25) அவர் குறித்த திங்களது வரவுகண்ட தாம் எடுத்துக் கொண்ட பெர்ருள் முடியாது பெயர்வர் கொல்லே என **ஆற்றேன் ஆவது**
(இறையனார் அகப்பொருள் நூற்பா, 41 உரை)

இந்த ஐந்து எடுத்துக்காட்டுக்களில் முதல் நான்கும் உடன்பாட்டு வாக்கியங்களாயும், ஐந்தாவது எதிர்மறை வாக்கியமாயும் அமைந்தவையாகும். இவ்விருவகை வாக்கிய வகைகளையும் கருத்தில்கொண்டு பின்வரும் வாக்கிய வகைகளை நாம் படைத்துக்கொள்ளலாம்.

(26) ***முருகன் வள்ளியைக் காண்பான்** ஆவது

(27) ***முருகன் வள்ளியைக் காணான் ஆவது**

இவற்றுடன் தொடர்புடையனவாகும் கீழே குறிக்கப்பெற்றுள்ள வாக்கியங்கள்.

(28) முருகன் காண்பதாவது வள்ளியை

(29) முருகன் {காணாமை / காணாதது} ஆவது வள்ளியை

இவற்றுள் (28)-இல் உள்ளது நிகழ்வுப் பொருண்மையையும் உணர்த்தவல்லது. இது நமது ஆய்வுக்கு ஒரு பிரச்னையல்ல. (29)-இல் உள்ள வாக்கிய அமைப்பு இறப்பு, எதிர்வு இரண்டுக்கும் பொதுவானது. (28)-இல் உள்ளதை (26)-உடன் தொடர்புபடுத்த முடியுமென்றால் 1 (3)-இல் உள்ள **முருகன் கண்டதாவது வள்ளியை** என்ற வாக்கிய அமைப்பையும் 6 (2)-இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** என்ற வாக்கிய அமைப்புடன் தொடர்புபடுத்தமுடியும். இதன் மூலம் 6(2) இல் உள்ள இந்த மீட்டுருவாக்கம் நேரியது என்பது பெறப்படுகின்றது. மீண்டும் பார்ப்போம். (29)-இல் உள்ள அமைப்பு இறப்பு, எதிர்வு இரண்டுக்கும் பொதுவானது என்று கண்டோம். இதன் மூலம் (27)-இல் உள்ள வாக்கியத்துக்கு மட்டுமல்லாமல் பின் வரும் வாக்கிய அமைப்புக்கும் (29)-இல் உள்ள வாக்கியம் உரிமையுடைய எதிர்மறையாகின்றது.

(30) *முருகன் வள்ளியைக் கண்டிலன் ஆவது.

எடுத்துக்காட்டு (27)-இல் உள்ள எதிர்மறைக்கு (26)-இல் உள்ள உடன்பாட்டு வாக்கியம் பொருந்துவது போல் (30)-இல் உள்ள எதிர் மறைக்கும் இணையான ஓர் உடன்பாட்டு வாக்கியம் வேண்டியதாகின்றது. இந்த உடன்பாட்டு வாக்கியம் எத்தகைய அமைப்பினதாயிருக்கும்? நிச்சயமாக அது 6 (2)-இல் உள்ள வாக்கிய அமைப்பினதாகத்தான் இருக்கும். இந்த சிந்தனைப்போக்கு 6(2)-இல் உள்ள ***முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது** என்ற மீட்டுருவாக்கத்தை ஏற்புடையதாக்குகின்றது.

1.9. இரண்டாம்வகைத் தீர்வின் அடிப்படையிலான ஆய்வு இத்துடன் முடிகின்றது. இந்த ஆய்வு (6)-இல் குறிக்கப்பெற்றுள்ள

மீட்டுருவாக்கங்கள் அனைத்தையும் ஏற்புடையனவாக்குகின்றது. (6)-இல் குறிக்கப்பெற்றுள்ள வாக்கிய அமைப்புகளை மேலும் ஆய்வு வசதிக்காக மீண்டும் இங்கே குறித்துக் கொள்ளலாம்.

6(1) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆகும்

(2) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆவது

(3) *முருகன் வள்ளியைக் கண்டான் ஆவான்

மேலே (6)-இல் நிகழும் வாக்கிய வகைகளில் **கண்டான் ஆகும், கண்டான் ஆவது. கண்டான் ஆவான்** ஆகியவை பயனிலைகளாகும். இப்பயனிலைகள் ஒவ்வொன்றும் இரண்டு உறுப்புக்களால் அமைந்திருத்தலைக் காணலாம். இதனைக் கருத்தில் கொண்டு பயனிலையின் அமைப்பினை **பயனிலைப் பகுதி + பயனிலை விகுதி** என்று வரையறை செய்து கொள்ளலாம். இங்கு குறிக்கப்படும் பகுதி, விகுதி என்ற சொற்கள் மரபிலக்கணங்களும், அமைப்பிலக்கணங்களும் குறிக்கும் பகுதி விகுதியினின்றும் முற்றிலும் மாறுபட்டவையாகும். சுருக்கம் கருதி **பயனிலைப் பகுதியைப் பப்பகுதி** என்றும் **பயனிலை விகுதியை பவ்விகுதி** என்றும் குறிக்கலாம். ஆக, (6)-இல் உள்ள பயனிலைகள் **பப்பகுதி + பவ்விகுதி** என்ற அமைப்பினவாகும். இவ்வமைப்பில் **கண்டான்** என்பது பப்பகுதியாகவும், **ஆகும், ஆவது, ஆவான்** என்பவை பவ்விகுதிகளாகவும் குறிக்கப்பெறும். பப்பகுதிகள் வினைமுற்றுக்களாயின் அவை பொது வினைமுற்றுக்களாகவோ, சிறப்பு வினைமுற்றுக்களாகவோ அமையலாம். **முருகன் கண்டது வள்ளியை ஆகும்.** 13)) **முருகன் கண்டதாவது வள்ளியை** (1( ) ஆகிய வாக்கிய வகைகளில் நிகழும் **கண்டது** என்னும் பப்பகுதியானது சிறப்பு வினைமுற்றின் பாற்படும். பப்பகுதிகளைப்போலவே பவ்விகுதிகளும் பொது, சிறப்பு என இருவகைப்படும். 6(1), (1)-இல் காணப்படும் **ஆகும், ஆவது** ஆகிய பவ்விகுதிகள் பொதுவின்பாற்படும். 6(3)-இல் உள்ள **ஆவான்** என்னும் பவ்விகுதி சிறப்பின்பாற்படும். பயனிலையின் அமைப்பு பற்றி இந்தப் புதிய சிந்தனை 1(1)-இல் உள்ள **முருகன் வள்ளியைக் கண்டான்** என்ற வாக்கியத்தில் நிகழும் **கண்டான்** என்ற பயனிலைக்கும் பொருந்தும். இப்பயனிலையில் **கண்டு** என்பது பொதுப் பகுதியாகவும், அதனையடுத்து நிகழும் **அன்** என்பது சிறப்புப் பவ்விகுதியாகவும் குறிக்கப்பெறும். முதல் வகைத் தீர்வின் மீது அமைந்த ஆய்வினை நினைவு கூர்ந்தால் 1(1)

-இல் நிகழும் **கண்டான்** என்பதும் **பப்பகுதி + பவ்விகுதி** என்ற அமைப்பினது என்பது தெளிவாகும். **செய்கு** மற்றும் **செய்யும்** வாய்பாட்டுப் பயனிலைகளைப் பொறுத்தவரையில் **செய்** என்பது பப்பகுதியாகவும், **கு** மற்றும் **உம்** ஆகியவை பவ்விகுதிகளாகவும் கொள்ளத் தக்கனவாகும்.

1.10. பவ்விகுதிகள் பப்பகுதியுடன் பொருந்துமாற்றினைக்' கருத்தில் கொண்டு அவற்றைப் **புறநிலைப் பவ்விகுதிகள்** எனவும் **அகநிலைப் பவ்விகுதிகள்** எனவும் இரண்டு பிரிவினவாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டுக்கள் (6)-இல் உள்ளது போன்ற **ஆவான், ஆவது, ஆகும்** முதலிய பவ்விகுதிகள் புறநிலைப்பவ்விகுதிகளாகக் கருதத்தக்கனவாகும். இத்தகைய பவ்விகுதிகள் பொதுவாக அசைநிலை (optional) உறுப்புக்களாய் அமையும். இவற்றுடன் பொருந்தும் பப்பகுதிகள் இவையின்றியும் இயங்கவல்லனவாகும். புறநிலைப் பவ்விகுதிகளுடன் பொருந்தும் பப்பகுதிகளில் நிகழும் வினைமுற்றுக்களில் பவ்விகுதிகட்கு இடமில்லை. ஆகவே அத்தகையவினைமுற்றுக்களில் அமைந்த முற்றுவிகுதிகளை இருப்புப் பொருண்மைக்கு உரியனவாகக் கருத முடியாது.

1.11. அகநிலைப் பவ்விகுதிகள் என்பவை வினைமுற்றினின்றும் பிரிக்க முடியாத உயிர்நிலை (obligatory) உறுப்புக்களாகும். எடுத்துக்காட்டாக, **முருகன் வந்தான்** என்ற வாக்கியத்தில் உள்ள வந்தான் என்னும் பயனிலையில் நிகழும் **ஆன்** என்னும் பவ்விகுதி ஓர் உயிர்நிலை உறுப்பாகும். இத்தகைய பவ்விகுதிகள் இருப்புப் பொருண்மைக்கு உரியனவாகும். ஆக, முற்றுவினைகளில் நிகழும் முற்று விகுதிகளானவை அகநிலைப் பவ்விகுதிகளாக நிகழ்கையில் இயைபுப்பொருண்மையுடன் இருப்புப்பொருண்மையை உணர்த்தியும், புறநிலைப் பவ்விகுதிகளின் முன் நிகழ்கையில் இருப்புப் பொருண்மையை இழந்த இயைபுப் பொருண்மையை மட்டுமே உணர்த்தியும் நிகழும் என்பது தெளிவாகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கருதுகோளினை நாம் அமைத்துக்கொள்ளலாம்.

> 31) **இருப்பு வினைகளானவை தமக்குரிய இருப்புப் பொருண்மையை இழந்தும், இழக்காமலும் பிற பொருண்மைகளை உணர்த்தும் திறத்தனவாகும்.**

புறநிலைப்பவ்விகுதிகள் இருப்புப்பொருண்மையை அடிப்படையாகக் கொண்டவையாகும். இப்பவ்விகுதிகள் அசைநிலை உறுப்புக்களாய் நிகழும் பான்மையின எனக்குறித்தோம். இதனைக் கருத்தில் கொண்டு மேலும் ஓர் கருதுகோளை உருவாக்கிக் கொள்ளலாம்.

32) இருப்பு வினைகள் அசைநிலை உறுப்புக்களாயும் நிகழும் திறத்தினவாகும்

புறநிலைப் பவ்விகுதிகளின் இயல்புபற்றி மேலும் சிறிது பேச வேண்டியுள்ளது. இன்னும் சற்று தொலைவு சென்ற பிறகு இதனைப் பற்றிச் சிந்திக்கலாம். இப்போது பெயர்ப் பயனிலையில் அமையும் பவ்விகுதிகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கலாம்.

பகுதி – 2

2.1. பெயர்ப் பயனிலைகளிலும் அகநிலை மற்றும் புறநிலைப் பவ்விகுதிகளின் நிகழ்ச்சியைச் சுட்டலாம். பெயர்ப் பயனிலைகளில் அமையும் பவ்விகுதிகளை இருவகையினவாகக் கொள்ளலாம். முதல் வகைப் பவ்விகுதிகள் எழுவாயைக் குறித்துநிற்கும் பப்பகுதிகளை அடுத்து நிகழ்வனவாகும். இந்தப் பப்பகுதிகள் வேற்றுமை உருபு ஏலாதவை. இத்தகைய பப்பகுதிகளை அடுத்து நிகழும் பவ்விகுதி களை **அல்வழிப் பவ்விகுதிகள்** எனக் குறிப்பிடலாம். அல்வழிப் பவ்விகுதிகள் அசைநிலை உறுப்புக்களாய் நிகழும் பெற்றியனவாகும். இரண்டாம் வகைப் பவ்விகுதிகள் இடப்பெயர்களை அடுத்தும் உடைமை அல்லது உரிமைப் பெயர்களையடுத்தும் நிகழ்வனவாகும். இப்பகுதிகளை **வேற்றுமைப் பவ்விகுதிகள்** எனக் குறிப்பிடலாம். வேற்றுமைப் பவ்விகுதிகளானவை பப்பகுதியினின்றும் தவிர்க்க முடியாத உயிர்நிலை உறுப்புக்களாகும். வேற்றுமைப் பவ்விகுதிகள் இடவேற்றுமையை அடுத்தும், ஐ வேற்றுமையை யடுத்தும் நிகழ்வன வாகும். அல்வழிப் பவ்விகுதிகளும் இடவேற்றுமையை அடுத்து நிகழும் பவ்விகுதிகளும் இருப்புப் பொருண்மையையும் இயைபுப் பொருண்மையையும் குறித்து நிற்க, ஐ வேற்றுமையை அடுத்து நிகழும் பவ்விகுதிகளானவை **உடைமை, இருப்பு, இயைபு** ஆகிய பொருண்மைகளை உணர்த்துவனவாய் அமையும். இதனைக் கருத்தில்

கொண்டு வேற்றுமைப் பவ்விகுதிகளை **இடப்பவ்விகுதிகள்** (Locative Predicate Markers) எனவும் **கிழமைப் பவ்விகுதிகள்** (Possessive Predicate Markers) எனவும் இரண்டு தனிவகைகளாகக் கொள்ள லாம். இக்காலத் தமிழில் அல்வழிப் பவ்விகுதிக்கு **முருகன் ஒரு மாணவன்** (ஆவான்) என்பதையும், இடப்பவ்விகுதிக்கு **முருகன் மதுரையில் இருக்கிறான்** என்பதையும், கிழமைப் பவ்விகுதிக்கு **முருகன் வேலினை உடையவன்** என்பதையும் எடுத்துக்காட்டுக் களாகக் கொள்ளலாம். இனி பழந்தமிழில் இம்மூன்று வகையான பவ்விகுதிகளும் பொருந்திய பயனிலைகளுக்கு உரிய எடுத்துக்காட்டு களைக் காண்போம்.

2.2. அல்வழிப் பவ்விகுதிகள் அமைந்த பயனிலைகள்

33(1) நீயும் தாயை (= தாயாவாய்) இவற்கு (அகம் 16.13)

(2) நீயே, தண்புனற் காவிரிக் **கிழவனை** (= கிழவனா வாய்) (புறம் 58.1)

(3) **யாரை** (= யாராவாய்) எலுவ யாரே நீயெமக்கு யாரையும் அல்லை நொதும லாளனை (= நொதும லாளன் ஆவாய்) (நற்றிணை. 395.1&2)

(4) **யாரீரோ** (= யாராவீரோ) எம்விலங்கியீர் (அகம் 390.14)

(5) எல்லுறு மௌவனாறும்

பல்லிருங் கூந்தல் யாரளோ (= யார் ஆவாளோ) நமக்கே (குறுந்தொகை 19.4&5)

2.2.1. அல்வழிப் பவ்விகுதிகள் பொருந்திய பயனிலைகள் எழுவாயாகவும் வேற்றுமை உருபேற்று நிகழும் பெற்றியனவுமாகும். இவ்வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்ள லாம்.

(6) இருவேம் (= இருவர் ஆவேம்) ஆய்ந்த மன்றல் இது (பத்துப்பாட்டு, 8.21)

(7) இருவேம் (= இருவர் ஆவேம்) நீந்தும் பருவரல் வெள்ளம் அறிந்தனள் போலும் அன்னை (நற்றிணை, 339.4S5)

(8) ஒருவீர் (= ஒருவராவீர்) ஒருவீர்க்கு (= ஒருவராவீர்க்கு) ஆற்றுதிர் இருவீரும் (= இருவராவீரும்) உடநிலை திரியீர் ஆயின்... புறம் 58,20&21)

இந்த முன்று எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **இருவேம், ஒருவீர், இருவீர்** ஆகிய தொடர்களை முறையே ***யாம் இருவேம், *நீர் ஒருவீர், *நீர் இருவீர்** என எழுவாய் பெய்தும் விளக்கலாம். இவ்வாறே **அரசனேன் (= அரசன் ஆவேன்) வந்தேன்** என்னும் வாக்கியத்தில் நிகழும் **அரசனேன்** என்பது ***யான் அரசனேன்** என்ற வாக்கியத்தில் பயனிலையாய் நிகழ்தலைக் காணகிறோம். **அரசனேன்** என்பது பயனிலை தவிர ஏனைய இலக்கணச் செயற்பாடுகளை மேற்கொள்கையில் அதனை **அரசன் ஆவேன்** என விரிப்பதுடன் **அரசன் ஆகிய யான்** எனவும் விரிக்கலாம். **இருவேம், ஒருவீர், இருவீர்** ஆகியவற்றையும் இத்தகைய விரிவுகளால் விளக்கலாம்.

2.2.3. அல்வழிப் பவ்விகுதிகள் அசைநிலை உறுப்புக்களாகும் தன்மையன என முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தோம். இக்குறிப்பு (33)-இல் உள்ள முதல் ஐந்து எடுத்துக்காட்டுக்களுக்கு மட்டுமே பொருந்தும். இறுதியில் அமைந்த **இருவேம், ஒருவீர், இருவீர்** ஆகியவற்றுக்கு இது பொருந்துமாறில்லை. காரணம், இவற்றில் அமைந்த பப்பகுதிகள் சிறப்பின்பாற் பட்டனவாய் அமையவில்லை. ***இருவேரம், *ஒருவரீர், *இருவரீர்** ஆகிய அமைப்புக்களில் பப்பகுதிகள் சிறப்பின்பாற் பட்டனவாய் உள்ளன. இத்தகைய அமைப்புக்களில் மட்டுமே பவ்விகுதிகள் அசைநிலைக் கிளவிகளாய் நிகழும் பெற்றியனவாகின்றன. அல்வழிப் பவ்விகுதிகள் சிறப்பில்லாத பப்பகுதிகளையடுத்து நிகழ்கையில் அவை உயிர்நிலை உறுப்புக்களாகவே நிகழும்.

2 3. இடப்பவ்விகுதிகள் அமைந்த பயனிலைகள்

34(1) யானே **ஈண்டை யேனே** யென்னலனே
ஆளு நோயொடு **கான லஃதே**
துறைவன் **நம்மூ ரானே**

மறையல ராகி **மன்றத் தஃதே** (குறுந்தொகை 97)
ஈண்டையேன் = ஈண்டு உள்ளேன்; கானலஃது = கானலில் உள்ளது; (தம்) ஊரான் = (தம்) ஊரில் உள்ளான்; மன்றத் தஃது = மன்றத்தில் உள்ளது. இவ்வெடுத்துக்காட்டில் பவ்விகுதிகளாய் அமைந்தவை **-என் -அஃது -ஆன்** ஆகியனவாகும். இவ்வாறே பின்வரும் ஒவ்வோர் எடுத்துக்காட்டிலும் கண்டுகொள்ளவும்.

(2) ...யாமே, ...துணையிலேம் தமியேம் **பாசறை யேமே** (நற்றிணை 34. 6&10)

(3) ஆயமும் யானும் அறியாது **அவணம்** (நற்றிணை 323.3)

(4) இன்றே **இவணம்** ஆகி (அகம். 225. 4)

(5) அவ்வாய்த் தட்டையொடு **அவணை** யாகென (நற்றிணை 134.5)

(6) இன்று நீ **இவணை** யாகி (நற்றிணை 215.8)

(7) நீர் **அவணிர்** ஆகி (அகம். 271.9)

(8) நெல்லும் உப்பும் நேரே **ஊரீர்**
கொள்ளீ ரோவென... (அகம் 390. 8-9)

(9) நெருநலும் **இவணர்** மன்னே (நற்றிணை 84.3)

(10) இவணும் வாரார் **எவணரோ** (குறுந்தொகை 126.2)

(11) மலையிடை யிட்ட **நாட்டரும்** அல்லர்
மரந்தலை தோன்றா **ஊரரும்** அல்லர்
(குறுந்தொகை 203.1-2)

(12) நோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் தோழி சேய்நாட் டோரே
(குறுந்தொகை 64.4&5)

(13) ... இருள் **யாவண** தோநின் நிழல்வாழ் வோர்க்கே (புறம் 102.7&8)

இந்த எடுத்துக்காட்டுக்களில் நிகழும் **-ஏம்** (பாசறையேம்), **-அம்** (அவணம்/இவணம்), **-ஐ** (அவணை/இவணை), **-இர்** (அவணிர்),

-ஈர் (ஊரீர்), **-அர்** (இவணர்/எவணர்/நாட்டார்/ஊரார்/சேயர்), **-அது** (யாவணது) ஆகியவை இடப்பவ்விகுதிகளாய் அமைகின்றன. இவற்றின்முன் நிகழும் பப்பகுதிகள் இடவேற்றுமைப் பெயர்களாகும், முன்னர்க்குறித்தவாறு இடப்பவ்விகுதிகள் உயிர்நிலை உறுப்புக்களாகும்.

2.4. கிழமைப்பவ்விகுதிகள் அமைந்த பயனிலைகள்

35(1) **மடவை** மன்ற நீ (குறுந்தொகை 252.5)

(2) **நோயை** நெஞ்சே (குறுந்தொகை 128.5)

(3) தவிர்த்த **தேரை** விளர்த்த **கண்ணை** (புறம் 353.5)

(4) பெருவரை யடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்றை யன்ன **நட்பினன்**
புதுவோர்த்து அம்மஇவ் விழுங்க லூரே
(குறுந்தொகை 385,5,7)

(5) கவவுக் கடுங்குரையள் காமர் **வனப்பினள்**
குவவுமென் **முலையள்** கொடிக் **கூந்தலளே**
(குறுந்தொகை 132.1&2)

(6) **இளையள்** முளைவா **ளெயிற்றள்**
விளையுடைக் **கையள்** எம் அணங்கி யோளே
(குறுந்தொகை 119. 3 & 4)

இவ்வெடுத்துக்காட்டுகளில் கிழமைப்பவ்விகுதிகள் அமைந்த பயனிலைகள் பின்வருமாறு விரிக்கற்பாலானவாகும்.

36(1) மடவை = மடத்தினை/மடப்பத்தினை உடையை
(2) நோயை = நோயை உடையை ஆவாய்
(3) தேரை = தேரை உடையை ஆவாய்
(4) கண்ணை = கண்ணை உடையை ஆவாய்
(5) நட்பினன் = நட்பை உடையன் ஆவான்
(6) புதுவோர்த்து = புதுவோரை உடைத்து ஆகும்
(7) வனப்பினள் = வனப்பை உடையள் ஆவாள்
(8) முலையள் = முலையை உடையள் ஆவாள்
(9) கூந்தலள் = கூந்தலை உடையவள் ஆவாள்
(10) இளையள் = இளமையை உடையவள் ஆவாள்

(11) எயிற்றள் = எயிற்றினை உடையவள் ஆவாள்
(12) கையள் = கையை உடையவள் ஆவாள்

மேலே (36)இல் அமைந்த விரிவுகள் கிழமைப் பவ்விகுதிகளை [உடைமை + இருப்பு + இயைபு] என்ற பொருண்மையமைப்புக்கு உரியவையாக்குகின்றன. (36)–இல் பயனிலைகள் **மடவை ஆவாய் நோயை ஆவாய்** என்பது போலவும் விரிக்கற்பாலனாகும். இத்தகைய விரிவுகள் அமைகையில் **மடவை, நோயை** ஆகியவற்றினுள் உள்ள ஐயென்னும் கிழமைப் பவ்விகுதி [உடைமை + இயைபு] என்ற பொருண்மையமைப்புக்கு மட்டுமே உரியதாகும். காரணம், இருப்புப் பொருண்மையானது **ஆவாய்** என்பதில் நிகழும் **ஆகு** என்னும் கிளவியால் குறிக்கப்பட்டு விடுகின்றது. இந்த விளக்கத்துக்கு மாறாக இருப்புப்பொருண்மையை **மடவை ஆவாய்** என்பதில் உள்ள ஐயென் கிளவிக்குச் சேர்ப்போமாயின் மேற்படி தொடரானது ***மடத்தினை உடையயை ஆவாய் ஆவாய்** என விரிக்கற்பாலதாகி விடும். இதனைத் தவிர்க்கும் வகையில் **மடவை ஆவாய்** என்பதில் அமைந்த ஐயென் கிளவிக்கு [உடைமை + இயைபு] என்ற பொருண்மையமைப்பை மட்டுமே உரியதாக்கப்படுகின்றது.

2.4.1. கிழமைப்பவ்விகுதிகள் அமைந்த பயனிலைகள் பற்றிய சிந்தனையானது தமிழில் அமைந்த ஒருசார் உயர்திணைப்பெயர்களை ஒருபுதிய கோணத்தில் பார்க்க வகை செய்கின்றது. **நண்பன், பகைவன், கிழவன், புலவன், துறைவன், வீரன், துணைவன்** முதலான உயர்திணைப்பெயர்கள் அடிப்படையில் கிழமைப்பவ்விகுதி களைக் கொண்ட அமைப்பினவாகக் கருதத்தோன்றுகின்றது. காரணம் இவை பின்வரும் அமைப்புக்களுடன் பொருண்மையில் ஒன்றுபடுகின்றன.

37(1) (அ) நண்பன்
(ஆ) நண்பினன் (= நண்பு உடையன்/உள்ளான்
(2) (அ) பகைவன்
(ஆ) பகையினன் (= பகை உடையன்/உள்ளான்
(3) (அ) கிழவன்
(ஆ) கிழமையன் (= கிழமை உடையன்/உள்ளான்

(4) (அ) புலவன்

(ஆ) புலமையன் (= புலமை உடையன்/உள்ளான்

(5) (அ) துறைவன்

(ஆ) துறையினன் / துறையன் (= துறை உடையன்/உள்ளான்)

(6) (அ) வீரன்

(ஆ) வீரத்தினன் (= வீரம் உடையன்/உள்ளான்

(7) (அ) துணைவன்

(ஆ) துணைமையன் (= துணைமை உடையன்/ உள்ளான்)

மேலே (37)-இல் (ஆ)-வில் குறிக்கப்பெற்றுள்ள அமைப்புக்களைக் கருதுகையில் (அ)-வில் குறிக்கப்பெற்றுள்ள **நண்பன் பகைவன்** முதலான பெயர்கள் தொடக்கத்தில் பயனிலைகளாய்ச் செயற்பட்டவை என்பது புலனாகின்றது. இத்தகைய பெயர்கள் மேலும் ஓர் பவ்விகுதியை ஏற்று அல்வழிப் பயனிலைகளாகவும் செயல்படவல்லனவாகும். (அல்வழிப் பயனிலை எனக் குறிப்பதன் காரணம் இரண்டாவதாக அமையும் பவ்விகுதியானது அல்வழிப்பவ்விகுதியாகும்.) பின்வரும் எடுத்துக் காட்டுக்களைக் காணவும்.

38(1) யான் **நண்பனேன்** (= நண்பன் ஆவேன்)

(2) நீ **பகைவனை** (= பகைவன் ஆவாய்)

(3) யான் **கிழவனேன்** (= கிழவன் ஆவேன்)

(4) யாம் **புலவரேம்** (= புலவர் ஆவேம்)

(5) நீ **துறைவனை** (= துறைவன் ஆவாய்)

(6) யான் **வீரனேன்** (வீரன் ஆவேன்)

(7) நீ **துணைவனை** (= துணைவன் ஆவாய்)

மேலே (38)-இல் அமைந்த **நண்பனேன், பகைவனை** முதலான பயனிலைகள் (36)-இல் இடப்புறம் குறிக்கப்பெற்றுள்ள **மடவை, நோயை** முதலான பயனிலைகளுக்கு ஒப்பானதாகும். ஆயினும் ஒரு சிறு வேறுபாடு உண்டு. **மடவை, நோயை** போன்றவற்றில் அவை இன்ன பாலுக்கு உரியன என்ற குறிப்பு காணப்படவில்லை. காரணம் இவை ***மடவு, நோய்** போன்ற பால்குறிக்கப்பெறாத பெயர்

களைப் பப்பகுதிகளாய்க் கொண்டுள்ளன. இவற்றை முறையே ***மடவன், *நோயன்** என ஒரு குறிப்பிட்ட பாலுக்கு உரியனவாய் அமைத்தால் (38)–இல் உள்ளது போன்ற பாணியில் ***மடவனேன்** (= மடவன் ஆவேன்). ***நோயனை** (= நோயன் ஆவாய்) போன்ற பயனிலைகள் நமக்குக் கிடைக்கும். இப்பயனிலைகள் முற்றிலும் இலக்கணத்தன்மை பொருந்தியனவாகும். இதில் குறிப்பிடத்தகுந்த செய்தி யாதெனில் ***மடவனேன், *நோயனை** ஆகிய பயனிலைகளின் பப்பகுதிகளாகிய ***மடவன், *நோயன்** ஆகியவை, (38)–இல் நிகழும் **நண்பனேன், பகைவனை** ஆகிய பயனிலைகளின் பப்பகுதிகளாகிய **நண்பன், பகைவன்** ஆகியவற்றுடன் பொருந்துவனவாகின்றன. **மடவை, நோயை** ஆகியவை எங்ஙனம் முன்னிலைக்கு உரிய பயனிலைகளாய் அமைகின்றனவோ, அங்ஙனமே ***மடவன் *நோயன்** ஆகியவை ஆண்பாற்குரிய பயனிலைகளாய் அமைகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு **நண்பனேன், பகைவனை** ஆகியவற்றில் நிகழும் **நண்பன், பகைவன்** ஆகியவற்றையும் ஆண்பாற்குரிய பயனிலைகளாகக் கொள்ளலாம். வளர்ச்சி நிலையில் **நண்பன், பகைவன்** முதலான பயனிலைகளை முந்தியனவாகவும் ***மடவன், *நோயை** முதலானவற்றைப் பிந்தியனவாகவும் துணியலாம். காரணம் ***மடவு** என்பதன் அடியான **மடவம்** (குறுந்தொகை 20.4), **மடவை** (குறுந்தொகை 252.5) என்ற பயனிலைகள் அமைவதுபோல், **நண்பு** என்பதனடியாக ***நண்பேன், *நண்பம்/ *நண்பேம், *நண்பை** போன்ற பயனிலைகள் அமைவதில்லை. இவ்வாறே ***பகைவன் *பகைவம்/*பகைவேம்** போன்ற பயனிலைகளும் மொழியில் அமைவதாகத் தோன்றவில்லை. இவ்வாறு அமையாமைக்குக் காரணம் **நண்பனேன், நண்பனை, பகைவனேன், பகைவனை** ஆகிய பயனிலைகள் நமக்கு இயல்பாகத் தோன்றுகின்றன. ***மடவன், *நோயை** ஆகியவற்றுக்கு ***மடவு, *நோய்** ஆகியவை இயல்பான பப்பகுதிகளாய் அமைவதுபோல், **நண்பனேன், பகைவனை** ஆகியபயனிலைகளுக்கு **நண்பன், பகைவன்** ஆகியவை இயல்பான பப்பகுதிகளாய் அமைகின்றன. இதன் மூலம் பால்குறித்த கிழமைப் பவ்விகுதிகள் பொருந்திய பயனிலைகள் காலத்தால் முந்தியவை, பிந்தியவை என இருவகையினவாய்க் கொள்ளத்தக்கனவாகின்றன. **நண்பன், தோழன்** முதலானவை காலத்தால் முந்தியவையாகும். **தேரன், கரியன்** முதலானவை

காலத்தால் பிந்தியவையாகும். மீண்டும் நினைவில் கொள்ளவும். **தீயன் ஆவேன்**, **தீயன் ஆவாய்** ஆகியவற்றை முறையே **தீயனேன்/ தீயேன், தீயனை/தீயை** என இருவகையாக ஒடுக்குவதைப் போல **நண்பன் ஆவேன், நண்பன் ஆவாய்** ஆகியவற்றை ஒடுக்க முடிவதில்லை. இவற்றை முறையே *நண்பனேன், *நண்பனை, என ஒடுக்கமுடியுமே தவிர ***நண்பேன், *நண்பை** என ஒடுக்கமுடியாது. காரணம், **நண்பன்** என்ற சொல்லும் **தீயன்** என்ற சொல்லும் சமகாலத் தோற்றம் கொண்டவையல்ல.

2.5. அல்வழி, இடம், கிழமை ஆகிய பவ்விகுதிகளைக் கொண்ட பயனிலைகள் பற்றிய ஆய்வு மரபிலக்கணப் புலவர்களால் **குறிப்புவினை** என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும். ஆயினும் அவர்களுக்கும் நமக்கும் பார்வையில் வித்தியாசமுண்டு. பவ்விகுதிகளை இருப்புப் பொருண்மைக்கு உரியனவாக நாம் கருதுகிறோம். இருப்புப்பொருண்மையை உணர்த்தும் பவ்விகுதிகள் கிழமைப்பயனிலைகளில் நிகழ்கையில் கிழமைப் பொருண்மையையும் சேர்த்து உணர்த்துவனவாகின்றன. அல்வழிப் பயனிலைகளில் (பார்க்கவும்: எடுத்துக்காட்டு (33)) பவ்விகுதியானது ஒரு சாரனவற்றில் அசைநிலை உறுப்புக்களாயும், இன்னொரு சாரனவற்றில் உயிர்நிலை உறுப்புக்களாகவும் நிகழும் என்று கண்டோம். இவையெல்லாம் குறிப்பு வினை பற்றிய நமது பார்வை மரபிலக்கணப் புலவர்களின் பார்வையினின்றும் மாறுபட்டது என்பதை உணத்துவனவாகும். அல்வழி, இடம், கிழமை ஆகிய பவ்விகுதிகள் பயனிலையாக்கத்தில் மேற்கொள்ளும் செயற்பாட்டினைக் கூர்ந்து நோக்கினால் வினை விகுதிகளையும் பெயர் விகுதிகளையும் ஏற்கும் சொற்கள் அனைத்தும் அடிப்படையில் **பப்பகுதி+பவ்விகுதி** என்ற அமைப்புக்கு உரியனவாக இருக்குமே என்று கருதத் தோன்றுகிறது. **நண்பன், பகைவன்** முதலான சொற்களின் மீது நாம் நிகழ்த்திய ஆய்வு இந்தக் கருதுகோளுக்கு வித்திடுகின்றது. பவ்விகுதிகளுக்கு நாம் சுட்டும் பண்புகளின் அடிப்படையில் இந்தக் கருதுகோளை ஓர் கோட்பாடாக நாம் மாற்றமுடியும். பவ்விகுதிகளின் பண்புகளை விட்டேற்றியாக நாம் இதுவரை பேசிவந்துள்ளோம். இனி இப்பண்புகளைக் கருதுகோள்களாகப் பின்வருமாறு அமைத்துக்கொள்ளலாம். இரண்டு கருதுகோள்கள் ஏற்கனவே (31),(32)-இல் சுட்டப்பெற்றுள்ளன. இவையும் இங்கே கருத்தில் கொள்ளப்படுகின்றன.

39(1) பவ்விகுதிகள் அடிப்படையில் இருப்பு வினைகளாகும்.

(2) பவ்விகுதிகள் அசைநிலை உறுப்புக்களாயும் உயிர் நிலை உறுப்புக்களாயும் நிகழவல்லனவாகும்.

(3) பவ்விகுதிகள் தமக்குரிய இருப்புப்பொருண்மையை இழந்தும் இழக்காமலும் பிற பொருண்மைகளை உணர்த்த வல்லனவாகும்.

(4) பவ்விகுதிகள் இருப்புப்பொருண்மையை இழந்து வெற்றுறுப்புக்களாய் அமைகையில் பப்பகுதிகளுடன் ஒருங்கிணைந்து அவற்றை ஒரு சொல் நீர்மையன வாக்குகின்றன. (பார்க்கவும் 41))

மேலே (39)-இல் குறிக்கப்பெற்றுள்ள நான்கு கருதுகோள்களில் முதல் மூன்றிற்கான தடயங்களை இதுகாறும் நிகழ்த்திய ஆய்வில் கண்டோம். இறுதியில் உள்ள கருதுகோள் பற்றி நாம் ஏற்கனவே ஒரு தனி ஆய்வில் சிந்தித்துள்ளோம். (Kothandaraman R. 207-112, 1979) இந்தக் கருதுகோள் ஓரசைச் சொற்கள் அல்லாதவற்றின் உள்ளமைப்பை ஆராயத் துணைபுரியும். இதற்கான ஓர் நெறி முறையை நாம் இப்படி அமைத்துக்கொள்ளலாம்.

2.6. தமிழில் நடப்பு (synchronic) நிலையில் உள்ள பல்வேறு விகுதிகளை முதலில் தொகுத்துக்கொள்ள வேண்டும். உயிர் மற்றும் மெய்ம் முதல் விகுதிகளாகிய இவை இயைபு, காலம், பன்மை, வேற்றுமை, ஆகிய பொருண்மைகளை உணர்த்துவனவாயும் எச்சநிலைகளில் நிகழ்வனவாயும் அமையும். இவ்விகுதிகள் அனைத்தையும் 39(1)-இல் உள்ள கருதுகோள்படி இருப்பு வினைகளாகக் கொள்வோம். பின்னர் இந்த இருப்பு வினைகளை (39)2,(3)-இல் குறிக்கப்பெற்றுள்ள கருதுகோள்களின் பண்புகளுக்கு உரியனவாக்குவோம். ஒரு குறிப்பிட்ட விகுதி இந்த இரண்டு கருதுகோள்கட்கும் இணங்காமல் தனித்து நிற்குமாயின் அதனை 39(4)-இல் உள்ள கருதுகோளுக்கு உட்படுத்தலாம். எடுத்துக்காட்டாக **நண்பன்** என்ற சொல்லில் அமைந்த **நண்பு** என்னும் வடிவத்தைக் கருத்தில் கொள்வோம். இந்த வடிவம் **நண்+பு** என்ற அமைப்பினதாகும். இவ்வமைப்பில் நிகழும் புகரக் கிளவியானது **செய்பு** வாய்பாட்டு வினைகளில் நிகழும் ஒன்றாகும்.

உண்பான், காண்பான் முதலான வினைகளில் அது கால இடைநிலையாகவும் நிகழ்கின்றது. ஆனால் **நண்பு** என்ற வடிவத்தில் அதன் பொருண்மையையும் செயற்பாட்டினையும் சுட்டமுடியவில்லை. இந்த நிலையில் 39(4) ஈஇல் உள்ள கருதுகோள் இதன்மீது செயற்படும். அதாவது **நண்பு** என்பதில் நிகழும் புகரக் கிளவி தனது இருப்புப்பொருண்மையை இழந்து **நண்** என்னும் பகுதியுடன் இணைந்துவிட்டது. இவ்வாறு **ஏழை** என்ற சொல்லையும் நாம் ஆராயலாம். **ஏழ்+ஐ** என்ற அமைப்பையுடைய இந்த சொல்லில் நிகழும் ஐகாரம் முன்னிலை விகுதியாகவும், வேற்றுமை உருபாகவும் நிகழ்கின்றது. ஆனால் **ஏழை** என்னும் வடிவத்தில் அதன் இலக்கணப்பொருண்மையையும், செயற்பாட்டினையும் அட்டமுடியவில்லை. இவ்வாறு இலக்கணப்பொருண்மையும், செயற்பாடும் இன்னதென்று அறியமுடியாத நிலையில் அமையும் விகுதிகளை 39(4)-இல் உள்ள கருதுகோளில் கவனத்துக்கு விட்டு விடலாம். இதில் முக்கியமான வரையறை என்னவெனில், 39(4)-இல் உள்ள கருதுகோளுக்கு இலக்காகும் விகுதிகள் நடப்பில் ஏதாவது ஓர் அமைப்பில் நிகழ்வதாக இருக்கவேண்டும். இந்த ஆய்வு **நண்பு ஏழை** ஆகியவற்றை வரலாற்று நிலையில் **பப்பகுதி+பவ்விகுதி** என்ற அமைப்பிலான பயனிலைகளாகக் கொள்ளும். மேலும் ஈரசை மற்றும் மூவசைச் சொற்களை இந்த ஆய்வானது துளைத்துச்சென்று அவை தோன்றுவதற்கு நிலைக்களனாய் அமைந்த ஓரசைச் சொற்கள் யாவை என்பதைச் சுட்டும். இத்தகைய ஆய்வில் நாம் பல இடர்பாடுகளைச் சந்தித்தாக வேண்டித்தான் இருக்கும். நடைமுறையில் உள்ள மீட்டுருவாக்கக் கோட்பாடுகள் ஓரளவுக்குத்தான் நமக்குத் துணை புரியும். ஆகவே புதிய சிந்தனைகளின் அடிப்படையில் மேலும் தேவையான கருதுகோள்களை உருவாக்கிக் கொண்டாலொழிய நமது சிந்தனையில் தென்பட்ட இந்த ஆய்வு முறையைச் செயல்படுத்த முடியாது.

2.7. இனி, பெயர்ப் பயனிலைகளில் நிகழும் பப்பகுதிகள் அமைப்பைப்பற்றிச் சற்று சிந்திப்போம். **நாயினேன், பகையினேம்** ஆகிய பயனிலைக்கள் **நாயேன், பகையேம்** எனவும் அமையற்பாலன வாகும். **நாயினேன் பகையினேம்** ஆகியவற்றில் நிகழும் **இன்** என்னும் உறுப்பு **நாயேன் பகையேம்** ஆகியவற்றில் இடம்பெறவில்லை.

இப்போது சிக்கல் என்னவெனில் **நாயினேன், பகையினேம்** இவற்றில் நிகழும் இன்னென் கிளவி பப்பகுதிக்குரியதா, பவ்விகுதிக்குரியதா என்பதாகும். மரபிலக்கணங்கள் இக்கிளவியைச் சாரியையாகக் குறிக்கும். சாரியை பொருண்மையிழந்த ஓர் உறுப்பாகும். 39(4)-இல் உள்ள கருதுகோளின்படி இன்னென் சாரியை இருப்புக் கிளவியாய் அமைந்து பொருண்மையிழந்த வடிவமாகும். ஆனால் இந்தக் கருதுகோளின்படி இவ்வுறுப்பானது **நாய், பகை** ஆகியவற்றுடன் இணைந்து முறையே ***நாயின், *பகையின்** என ஒரு சொல் நீர்மையனவாய் அமைய வேண்டும். ஆனால் அவ்வாறு நேரவில்லை. **நாயேன், பகையேன்** ஆகியவற்றில் இவ்வுறுப்பின் நிகழ்ச்சியே காணப்படவில்லை. இதன் மூலம் இந்த உறுப்பானது அசைநிலைக் கிளவி என்பது பெறப்படுகின்றது. 39(2)-இல் உள்ள கருதுகோள் மூலம் பவ்விகுதிகள் அசைநிலை உறுப்புக்களாகவும் நிகழவல்லவை என்பது பெறப்படுகின்றது இன்னென்கிளவி **நாயேன் பகையேம்** ஆகியவற்றுள் நிகழாமையைக் கருதுகையில் ஓர் அசைநிலைப் பவ்விகுதியின் பண்புக்கு அது உரியதாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு இன்னென்கிளவியை **நாய், பகை** ஆகியவற்றுக்குரியதாக்கி ***நாயின் *பகையின்** என்ற வடிவங்களை அமைத்துக்கொள்ளலாம். இத்தகைய வடிவங்களை வரலாற்று நிலையில் அமைந்த பயனிலைகளாகக் கருதலாம். மரபிலக்கணச் சிந்தனையை ஒட்டி இவற்றில் நிகழும் இன்னென் கிளவியைப் **பகுதிப்பொருள் விகுதியாகச்** சுட்டலாம். பகுதிப்பொருள் விகுதிகள் வரலாற்று நிலையில் இருப்புப் பொருண்மையை உணர்த்திய பொதுப்பவ்விகுதிகளாகக் கருதத்தக்கனவாகும். பொருண்மையை இழந்து பகுதிப்பொருள் விகுதியாகிய இன்னென் கிளவியின் நிகழ்ச்சியைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பாவில் காணலாம்.

(40) **இறப்பின் நிகழ்வின் எதிர்வின்** என்றா
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்நிலை யுடைய தோன்ற லாறே
(சொல். சேனா். 200)

இந்நூற்பாவில் நிகழும் **இறப்பின், நிகழ்வின், எதிர்வின்** ஆகியவற்றில் அமைந்த இன்னென் கிளவியின் நிகழ்ச்சியை எப்படி விளக்குவது?[6] (39)-இல் அமைந்த கருதுகோளின் துணையின்றி

இதனை விளக்கமுடியாது. **இறப்பின், நிகழ்வின், எதிர்வின்** ஆகியவற்றில் நிகழும் இன்னென்கிளவி **நாயினேன், பகையினேம்** என்பவற்றுள் உள்ள இன்னென் கிளவியைப் போன்றே ஓர் அசைநிலை உறுப்பாகும். ( ) பொருண்மையை இழந்தும் இவ்வுறுப்பு தான்சார்ந்த பகுதியுடன் ஒன்றுபடாமல் சாரியையாகத் தனித்து நிற்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 39(4)-இல் உள்ள கருதுகோளைப் பின்வருமாறு செப்பம் செய்துகொள்ளலாம்.

(41) **பவ்விகுதிகள் இருப்புப்பொருண்மையை இழந்து வெற்றுறுப்புக்களாய் அமைகையில் இவை பப்பகுதிகளுடன் இணைந்து புதிய பப்பகுதிகளை உருவாக்கவோ அல்லது அசைநிலைத் தன்மையனவாகிய பகுதிப்பொருள் விகுதிகளாய் அமையவோ செய்யும்.**

இக்கருதுகோள்படி **நாயினேன், பகையினேம்** ஆகிய பயனிலைகள் தமக்குள் ***நாயின் *பகையின்** என்ற அல்வழித்தன்மையனவாகிய வரலாற்றுப் பயனிலைகளைக் கொண்டுள்ளனவாகக் கருதப்படும். இத்தகைய வடிவங்கள் வேற்றுமை உருபுகளின் முன்னரும் நிகழற்பாலனவாகும். எ.டு: **நாயினை, பகையினால்** (41)-இல் உள்ள கருதுகோள் **குன்றம், மார்பு, வளையல்** ஆகியவற்றில் நிகழும் **-அம் -பு -அல்** ஆகிய பகுதிப் பொருள் விகுதிகளையும் தழுவவல்லதாகும்.

***நாயின் *பகையின்** போன்ற வரலாற்றுப் பயனிலைகள் நடைமுறையில் வேற்றுமையுருபுகளின் முன்னரும், இயைபுப் பண்புகளைக் குறிக்கும் அகநிலைப்பவ்விகுதிகளின் முன்னரும் மட்டுமே நிகழும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய பயனிலைகளைக் கருத்தில் கொண்டு ***அது நாயின்** 'அது நாய்', ***நாயின் வரும் 'நாய்வரும்'** என்பன போன்ற வாக்கியவகைகளை வரலாற்று நிலையில் மீட்டுருவாக்கம் செய்யமுடியும். இந்த வாக்கியங்களுக்கு நிகரான இக்கால வாக்கியங்களாக **அது நாய் ஆகும், நாயானது வரும்** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

உலக திராவிட மொழியியல் நிறுவனம்,
திருவனந்தபுரம்.

அடிக் குறிப்புகள்

1 **முருகன் கண்டதாகிய வள்ளி** என்னும் பெயரெச்சத் தொடரில் காணப்படும் ஆகிய என்னும் உறுப்பு, **முருகன் கண்டது வள்ளியை ஆகும்** என்ற வாக்கியத்தில் நிகழும் **ஆகும்** என்னும் உறுப்பின் விகார வடிவமாகும். இந்த இரண்டு உறுப்புகளின் நிகழ்ச்சியும் மொழியில் வரையறுக்கப்பட்ட சூழல்களில் அமைந்ததாகும். ஆகவே இவ்விரண்டினையும் மாற்றுவடிவங்களாகக் கொள்வது பொருத்தமாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே **ஆகிய** என்பதைப் போல் **ஆகும்** என்பதும் **கண்டது** என்னும் உறுப்பின் அண்மைக் கிளவியாகக் கொள்ளத்தக்கது என்று நாம் வாதிடுகிறோம்.

2 **ஆகும், ஆவது** இரண்டும் பொதுவினைகளாகவும், **ஆவான்** எனபது சிறப்பு வினையாகவும் கொள்ளத்தக்கவையாகும். **முருகன் வள்ளியைக் கண்டான்** என்ற வாக்கியத்தில் **கண்டான்** என்பது ஓர் சிறப்பு வினையாதலின், இதனையடுத்து **ஆவான்** என்னும் சிறப்பு வினை நிகழ்தல் இலக்கணத் தன்மையதாகவே கொள்ளப்படும்.

3 இந்த வழக்கு நிலையானது. **கண்டு** என்பதனை வினைமுற்றாகக் கொள்வதற்கு வகைசெய்கின்றது. ஏனெனில் இது **கண்டது** என்னும் ஒரு பொதுவினைமுற்றுடன் சிதறிய வழக்கில் நிகழ்கின்றது. இதன் மூலம் **செய்து** வாய்பாட்டு வினைகள் பொது வினைமுற்றுகளுள் ஒருவகையாகக் கொள்ளத்தக்கன என்பது தெளிவாகின்றது.

4 **வள்ளியைக் கண்டவன் முருகன் ஆவான்** என்ற வாக்கியமும் **வள்ளியைக் கண்டது முருகன் ஆகும்** என்ற வாக்கியமும் ஒரே செய்தியை உணர்த்துவனவாகும். இவ்வாக்கியங்களில் அமைந்த **ஆவான், ஆகும்** உறுப்புக்களின் நிகழ்ச்சி முறையே **கண்டவன்** என்னும் சிறப்புவினையாலும் **கண்டது** என்னும் பொதுவினையாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

5 இதனை அடிப்படையாகக் கொண்டு கீழே உள்ள வாக்கிய

அமைப்பினை அதனை அடுத்து உள்ளதுபோல் மாற்றியமைக்க கலாம்.

அ) (உப்பூரிகுடி கிழார் மகனாவான்) உருத்திரசன்மன் ஆவான் செய்தது இந்நூற்கு உரை (இறையனார் அகப்பொருள், நூற்பா. 1. உரை)

ஆ) *(உப்பூரிகுடி கிழார் மகனாவான்) உருத்திரசன்மன் இந் நூற்கு **உரைசெய்தான் ஆவான்**

மேலே(ஆ)-வில் நிகழும் மாற்றியமைக்கப்பட்ட வாக்கியத்தினை நியாயப்படுத்துவதற்கு இதன் அடியாகத் தோன்றிய **இந்நூற்கு உரை செய்தவன் ஆகிய (உப்பூரிகுடிகிழார் மகனாவான்) உருத்திரசன்மன்** என்ற பெயரெச்சத் தொடரும் ஒரு காரண மாகின்றது. இப்பெயரெச்சத் தொடரில் **ஆவான்** என்பதன் விகார வடிவமாகிய **ஆகிய** என்பது **உரை செய்தவன்** என்ப தற்கு அண்மை உறுப்பாக நிகழ்வதைக் காணலாம். (அ)-வில் உள்ள **உருத்திரசன்மன் ஆவான்** என்பதில் நிகழும் **ஆவான்** என்பது **ஆனவன்** என்பதற்கு நிகரானதாயின் (அ)-வில் காணப்படும் வாக்கிய மாற்றம் அடிபட்டுப் போய்விடும்.

6 தற்செயலாக **நாயது வந்தது** என்ற வாக்கியவகை நமக்கு நடைமுறையில் கிடைக்கின்றது. இவ்வாக்கியத்தில் நிகழும் **நாயது** என்னும் தொடர் **நாயானது** என்பதுடன் பொருந்திய யதாகும். **நாயானது** என்பதில் நிகழும் **ஆனது** என்னும் உறுப்பு **ஆகு** என்னும் இருப்பு வினையடியாகத் தோன்றியதாக லின் **ஆனது** என்பதைப் பப்பகுதியாகக் கொள்ள வழி பிறக் கின்றது. **நாயது** என்பதில் உள்ள அதுவென் கிளவி நாயானது என்பதில் உள்ள **ஆனது** என்பதுடன் பொருந்துதலின் அதுவும் பப்பகுதியாகக் கொள்ளத்தக்கதாகின்றது. **நாயது** என்னும் தொடர் வேற்றுமையுருபுகளின் முன்னரும் நிகழவல்லது. எ_டு. **நாயதை. நாயதை** என்னும் வேற்றுமைத் தொடருடன் **நாயினை** என்பதும் பொருட் பொருத்தமுடையதாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டால் **நாயதை** என்பதில் நிகழும் அதுவென் கிளவியைப் போல் **நாயினை** என்பதில் நிகழும் இன்னென் கிளவியும் பப்பகுதியாகக் கொள்ளத்தக்கதாகின்றது.

சுருக்கவிளக்கம்

அகம்: அகநானூறு; இளம்: இளம் பூரணர்; எழுத்து: எழுத்ததிகாரம்; கலி: கலித்தொகை; குறள்: திருக்குறள்; சிலம்பு: சிலப்பதிகாரம்; சேனா: சேனாவரையர்; சொல்லதிகாரம்; தொல்: தொல்காப்பியர்; நச்: நச்சினார்க்கினியர்; புறம்: புறநானூறு; பொருள்: பொருளதிகாரம்.

மேற்கோள் நூல்களும் பதிப்பாளர்களும்

உ. வே. சாமிநாதையர் பதிப்பு,
குறுந்தொகை, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, புறநானூறு.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
அகநானூறு, கலித்தொகை, களவியல் என்ற இறையனார் அகப்பொருள், திருக்குறள், தொல்காப்பியம்.

க. நாராயணசாமி ஐயர் பதிப்பு.
நற்றிணை.

ஆறுமுக நாவலர் பதிப்பு
இலக்கணக்கொத்து.

துணைபுரிந்த கட்டுரைகள் (சிறப்பு)

கோதண்டராமன், இரா. 1979 'மன்னர் கையதை சூர்வாள்' **மொழியியல்** 2.4. அண்ணாமலைநகர்.

Kothandaraman, R. 1978 'Verbal Bases in Thamil: A New Look', *Journal of Madurai Kamaraj University* Vol. 10-11. No. 2. Madurai.

——— 1979 'Sedimentation Hypothesis' *Pulamai* Vol. 5 Part 1, Madras.

துணைபுரிந்த கட்டுரைகள் (பொது)

கோதண்டராமன், இரா. 1979-80. 'அறிந்த முகங்களில் அறியாத முகங்கள்', **மொழியியல்** 3.2&3. அண்ணாமலைநகர்.

Kothandaraman, R. 1979 'Agreement Markers in K-Verbals' *Ayvukovai* II. Vol. 2.

———1990, Agreement Markers in T Verbals' *IJDL* Vol. IX No. 1 Trivandram.

———1980 'A brief on K. Adjectivals in Tamil' *Pulamai* Vol 6, part 1, Madras.

———1980 'The Ins and Outs of **In** in Tamil', *Journal of Madurai Kamaraj University*, Madurai.

* இந்த ஆய்வுக் கட்டுரையில் குறிக்கப்பெறாத ஆனால் கருத்துப் பின்னணியாய் அமைந்த கட்டுரைகள்.

புதிய சொல்லெழுத்துகள்

இன்றைய எழுத்துமொழியில் பழைய இலக்கிய வழக்கிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றனவற்றை எல்லாம் பிழைகள் என்று கருதக்கூடாது. வேறுபாட்டின் சரியான காரணத்தையும் இன்றைய பேச்சுமொழியின் அடிப்படையையும் புரிந்து விளக்க முற்பட்டால் சில கிளைமொழித்தமிழின் நேரடிச்செல்வாக்கு என்றும் (கடைசி–கடோசி–கடசி; வாழ்வரசி – வாவரசி; அன்றைக்கு – அன்னைக்கு – அண்ணக்கி), சில பேச்சுமொழியை ஒட்டி எழுத்துமொழியில் ஏற்பட்ட மாறுபாடு என்றும் உணர்ந்துகொள்ள முடியும். அப்படி இல்லாமல் நம்முடைய இலக்கண அறிவைக் காட்டுவதற்காகவே பழைய இலக்கிய மேற்கோள் காட்டிப் புதிய சொல்லெழுத்துக்களைத் தவறு என்பது மேலே சொன்ன அதே இலக்கிய மரபுக்கே எதிரானது. ஏனெனில், அந்த இலக்கியத்திலும் கூட அதற்கு முன்னால் இருந்த இலக்கண இலக்கியத்திலிருந்து மாறுபட்ட வழக்குகளைச் சந்திக்க முடியும். பழைய இலக்கிய வழக்குகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, இன்றைய எழுத்துமொழி வழக்குகளைப் புறக்கணிக்காமல் பேச்சுமொழியின் தன்மை, உண்மையான வரலாறு, அவற்றின் சிறப்பு முதலியவற்றைக் கவனித்தே முடிவு செய்யவேண்டும்.

டாக்டர் **செ. வை. சண்முகம்**
எழுத்துச்சீர்திருத்தம், அண்ணாமலைநகர், 1978.

உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
டாக்டர் சு. சக்திவேல்

இந்திய நாடு மிகப்பழமையான நாடு. இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென ஒரு வாழ்வையும் வரலாற்றையும் வகுத்துக் கொண்ட பெருமை கொண்டது இந்நாடு. இலக்கணத்திலும் தனக்கென தனியொரு பாரம்பரியத்தைக் கொண்டு வாழ்ந்தது இந்நாடு. தொல்காப்பியம் முதல் இன்றுவரை எத்தனையோ இலக்கண அறிஞர்களைப் பெற்றெடுத்த பெருமை கொண்டது தமிழகம். இன்றைய உலகமொழியாகிய ஆங்கிலம் பிறப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே சிறந்ததோர் இலக்கியப் பரப்பினையும் இலக்கண வரம்பினையும் கொண்டு வாழ்ந்த மொழி தமிழ் மொழி. இன்று வாழும் இந்திய மொழிகளில் மிகப்பழமையான இலக்கியத்தைக் கொண்டுள்ள மொழி தமிழ் என்பதும் அது ஒரு உயர்திண்ணிய செம்மொழியென்பதும் நாம் அறிந்ததொன்றாகும். நீண்டதோர் வரலாற்றையும் நெடியதோர் வாழ்வையும் கொண்டது தமிழ்மொழி. எத்தனையோ இலக்கண

அறிஞர்களையும் இலக்கியக் கவிஞர்களையும் கொண்டு வாழும் மொழி தமிழ் மொழி. இத்தகைய தமிழ்மொழி இன்று பிற உலக மொழிகள் வாழ்ந்து நிற்கின்ற அளவுக்கு வளரவில்லையே என்ற ஏக்கம் நம்மில் சிலரிடையே இல்லாமல் இல்லை. தமிழன் வாழ்ந்தால் தான் தமிழ்மொழி வாழும் என்ற அடிப்படைத் தத்துவம் தெரியாமல் இல்லை. எனவே தமிழ்மொழி வாழவேண்டுமானால் தமிழ் மக்களும் நன்றாக வாழவேண்டுமென வேண்டுகிறோம்.

கிரேக்கமொழி வாழ்விற்கு வளர்ச்சிக்கு அலெக்சாண்டர் போன்ற மாபெரும் வீரர்களின் வாழ்வுதான் அடிப்படைக் காரணம் என்பதை நாம் அறிவோம். கிரேக்க நாட்டில் மட்டும் இன்றி ஐரோப்பாக் கண்டம் முழுதும் மத்திய ஆசியா முழுதும் இம்மொழி வளர்ந்து நின்றதற்குக் காரணம் கிரேக்க மக்களின் அரசியல் வளர்ச்சியும் நாகரிக முதிர்ச்சியும் அவற்றின் அடிப்படையில் எழுந்த கிரேக்க இலக்கியங்களின் சிறந்த நிலையும் என்பதை நாம் நன்கு அறிவோம். இந்நிலையில்தான் அது உலக அரங்கில் தலைநிமிர்ந்து நின்று உலக மொழியாக வளர்ந்தது. இன்றுகூட எத்தனையோ மொழிகளுக்கு வாழ்வுதரும்நிலையில் அது உள்ளது. இதைப் போன்றுதான் இலத்தீன் மொழியும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நின்றது. ரோம் நாட்டுப் பேரரசின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அம் மொழியின் வாழ்வு அடங்கிக் கிடந்தது. உலகெங்கும் பரந்து நாகரிக மொழியாக வளர்ந்து உலக மொழியாக நின்று நிலவுவதற்குக் காரணம் மக்களின் அன்றைய வாழ்வும் வளர்ச்சியும்தான். இத்தகைய ஒரு நிலையினை இன்று உலக மொழியாக விளங்கும் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், ரஷ்யன் போன்ற மொழிகளிலும் காண்கிறோம்.

மக்கள் தொகையின் அடிப்படையில் பார்த்தால், உலக அரங்கில் இன்று முதல் மொழியாக விளங்குவது சீனமொழி. மக்கள் தொகுப்பில் இந்தியா இரண்டாவதாகவும் ரஷ்யா மூன்றாவதாகவும் உள்ளது. தமிழ் மொழி பேசுவோர் மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நோக்கும்பொழுது, மிகக் குறைவாகயிருப்பினும் அன்றைய தமிழ் மக்களின் வாழ்வும் வளர்ச்சியும் சிறந்த நிலையில் இருந்தது என் பதைக் காண்கின்ற போதுதான், தமிழ் இலக்கியமும் தமிழ் மொழியும் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'என்பதற்கேற்பத் தமிழர்கள் உலகின் பல்வேறு முனைகளுக்குச்

சென்று வாழத் தலைப்பட்ட நிலையில்தான் தமிழ் மொழி இன்று பல்வேறு நாடுகளில் பேசப்படுகின்ற மொழியாக பரந்து நிற்கிறது. பல நூற்றாண்டுகட்கு முன்பே தமிழர்கள் கடல்கடந்து சென்றுள்ளமையை 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும் 'கடாரம் வென்ற சோழன்' என்பதினின்றும் அறிகிறோம். முப்புறமும் கடல்சூழ்ந்த நிலத்தில் நெடுங்காலமாக வாழ்வதன் விளைவாகத் தமிழ் மக்கள், கலம் செலுத்தி கடல் கடந்து செல்வதில்–திரவியம் தேடுவதில்–இயல்பான ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தனர். கடலோடும் கலையில் தமிழர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரிதி, வாரணம், பவ்வம், பரவை, புணரி, கடல் என்று கடலைக் குறிப்பதற்குப் பல சொற்களும் கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, திமில், அம்பி, வங்கம், மிதவை என்று நீரில் செல்லும் ஊர்திகளைப் பற்றிய பல சொற்களும் தமிழில் உள்ளன என்பதை அறியலாம். தமிழ் மகனின் முத்தும் பவளமும் எத்தனையோ நாடுகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்றதைக் காண்கிறோம். தமிழ் நாட்டின் தேக்கு மரங்கள் மத்தியகிழக்கு ஆசியாவில் வீடுகளைத் தாங்கும் தூண்களாகவும் கதவுகளாகவும் பயன்பட்டன என்பதை அறியும் போது பிறருக்கு வீடு அளித்த பெருமை நமக்கு உண்டு என்ற எண்ணம் நம்மிடையே வளரத் தலைப்பட்டது. இவன் கண்ட அகிலும் மிளகும் அயல்நாடுகளுக்குச் சென்று அணிவகுத்து நின்றன. இங்கே கிடைத்த தோகை, மணிகள், மேலைநாட்டுக்கு ஏற்றுமதியான வரலாற்றுச் செய்தியையும் அறிகிறோம். இதுமட்டுமன்றி கிழக்கு நாடுகளில் எல்லாம் தமிழனுடைய பெருமைபேசும் சின்னங்களை இன்றும் காண்கிறோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்கப் புலவரின் கருத்துகளுக்கு ஏற்பவும் 'யாதானும் நாடாமல் ஊராமல்' என்ற வள்ளுவனின் கல்வி பற்றி கூறும் பொது நோக்கத்திற்காகவும் தமிழ் மக்கள் உலகநாடுகள் எங்கிலும் உலாவி வருகின்றனர். முப்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் குடியேறி அந்தந்த நாட்டுமக்களாக ஆகியிருக்கின்றனர்.

தமிழ்மொழி இன்று தமிழ்நாட்டில் மட்டுமின்றி எத்தனையோ நாடுகளில் வாழும் மொழியாக இருக்கக் காண்கிறோம். இன்றைய உலகமொழிகளில் ஆங்கிலம் தனி ஒரு சிறந்த உலகமொழியாகக்

கருதப்படுவதற்கு முக்கிய காரணம் அது இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளில் தாய்மொழி, தேசியமொழி, ஆட்சி மொழி, கல்விமொழி ஆகிய நிலைகளில் பயன்படுவதோடு பல்வேறு நாடுகளில் துணை ஆட்சிமொழி, கல்விமொழி ஆகிய நிலைகளிலும் பயன்படுத்தப்படுவதுதான். தமிழ் இப்படிப்பட்ட உலகமொழியாக இல்லாவிட்டாலும் ஒரு பன்னாட்டு மொழியாக வழங்கிவருவதும், வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச்சிறப்பு ஆகியவற்றால் பலநாடுகள் தமிழ் மொழிக் கல்வியில் ஆர்வம் காட்டுவதும் உலக அரங்கில் தமிழ்மொழி வளர்ச்சியும் பயிற்சியும் பெற்றுள்ளதைக் காட்டுகிறது.

தமிழ் மொழி தமிழகத்தில் மட்டுமின்றி மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், பீஜி, மொரிசியர்ஸ், பர்மா, இந்தோனேசியா, தென் ஆப்ரிக்கா, வியட்நாம் ஆகிய நாடுகளிலும் பேசப்படுகின்றது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தாய்மொழியாக, கல்வி மொழியாக, துணை ஆட்சிமொழியாக, செய்திப்பரவல் தொடர்பு மொழியாக, இலக்கிய மொழியாகப் பயன்பட்டு வருகிறது. அங்கெல்லாம் புதிய இலக்கியங்களும் நாளும் தோன்றி வருகின்றன. மேலும் இந்தோனேஷியா, மொரிஷியஸ், டிரினிடாட் போன்ற நாடுகளில் எல்லாம் தாய்மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. அமெரிக்கா இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, போலந்து, செக்கஸ்லோவிகியா போன்ற நாடுகளில் தமிழ் மொழி பல்கலைக்கழகங்களில் அறிஞர்கள் விரும்பிப்பயிலும் மொழியாக அமைந்துள்ளது. தமிழர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்வதால் தமிழ்மொழி உலக மொழிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. 'தமிழ் இந்திய நாட்டில் மட்டும் வாழ்கிற மொழி அன்று; பல்வேறு நாடுகளில் பேசப்படுகிற நிலையில் உள்ள உலகமொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி திகழ்கின்றது' எனச் செக் நாட்டு மொழியியல் பேரறிஞர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கலையின் பெயராலும் கலாச்சாரத்தின் பெயராலும் நாகரிகத்தின் பெயராலும் இது உலக மொழியாக உள்ள நிலையை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். இதனால்தான் யுனெஸ்கோ நிறுவனம் வெளியிடும் 'கூரியர்' என்ற இதழ் தமிழ் மொழியிலும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இதனை உலக மொழி அரங்கில் ஓரளவுக்கேனும் ஒப்பவைத்து எண்ணமுடிகிறது. மதுரையில் ஐந்தாவது

உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற இந்நேரத்தில் உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும் பற்றி ஆராய்வது மிகமிக இன்றியமையாதது என எண்ணுகிறோம். உலகெங்கிலுமுள்ள பல்துறை அறிஞர்கள் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறக்கலை, மொழிபெயர்ப்பு, தொல்பொருளாய்வு, மதம் பற்றி ஆராய்கின்ற இந்நேரத்தில், உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும் பற்றி ஆராய்வது உலக அரங்கில் தமிழும் செம்மாந்து வாழ்வதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கேயாகும்.

ஈழநாடு தமிழர்களுக்குப் புதிய நாடு அன்று. எத்தனையோ நூற்றாண்டு காலமாகத் தமிழ்மொழி அங்கு பயின்று வருகின்ற ஒரு மொழியாகும். 25 சதவீதத்துக்குமேல் இலங்கையில் தமிழ்ப்பெருங்குடி மக்கள் வாழ்கின்றனர். கண்ணகி வழிபாட்டிற்கு முக்கிய இடமாகத் திகழ்கின்றது. திரிகோணமலையும் திருக்கேதீச்சரமும் தேவாரம் பெற்ற கோயில்கள். கதிர்காமம் அருட்பாசுரங்களுக்கு இலக்கானது. இக்கோயில்கள் வளர்க்கும் தெய்வத்தமிழ் நம் சிந்தையை உருக வைக்கும் நிலையில் உள்ளது. தமிழிலுள்ள இரகுவமிச காவியம் இலங்கைத் தமிழரசர் மொழி பெயர்த்ததே. சிங்களவர்கள் பின் பற்றும் புத்தமதத்தினை தமிழர்கள் வளர்த்த கதையையும் மறந்து விடுவதற்கில்லை. சிங்களச் செய்யுள் அமைப்பும் தமிழ் யாப்பை யொட்டி வளர்ந்த நிலையைக் காணலாம். ஆறுமுக நாவலர், தாமோதரம்பிள்ளை, விபுலானந்த அடிகள் போன்ற தமிழ்ப்பேரறிஞர்களை ஈன்ற பெருமை ஈழத்துக்கு உண்டு. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கொழும்பு, பெரதேனியா, கெவானியா, நுகேதா, யாழ்ப்பாணம் ஆகியவிடங்களிலுள்ள பல்கலைக்கழக இருப்புகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. எத்தனையோ இலக்கிய அறிஞர்களைப் பெற்றுள்ளன இப்பல்கலைக் கழகங்கள். இதுமட்டுமின்றி சிறந்த மொழியியல் பேரறிஞர்களையும் கொண்டிருக்கின்ற பெருமைகொண்டது இப்பல்கலைக்கழகம். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களைப் போன்று, இப்பல்கலைக் கழகங்களும் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றி வருகின்றன. தேவார திருவாசகங்கள், பிற பக்திப் பாடல்கள், இலக்கணங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், தற்காலக் கவிதைகள் போன்ற இன்னோரன்ன துறைகளில் இவர்கள் ஆராய்ந்து வருகின்

றனர். படைப்பிலக்கியத் துறைகளிலும் இவர்கள் முன்னணியில் உள்ளனர். இலக்கியத் திறனாய்வுத் துறையிலும் முன்னேறி வருகின்றனர். திறனாய்வுக் கலை ஈழத்தில் முக்கியமான ஒரு கட்டத்தை வந்தடைந்துள்ளது. பல்துறை வல்லுநர்களும் இதில் ஈடுபடுகின்றனர். புதியபுதிய அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளும் இவர்களை எதிர்நோக்கியுள்ளன. உலக இலக்கியத்தின் உயர்ந்த குறிக்கோள்களைத் தழுவி இலக்கிய ஆக்கம் நடைபெறவேண்டிய நிலை உள்ளது. இங்கேயுள்ள தமிழ்ப் பேராசிரியர்கள் முதல் தரமான அறிஞர்கள். நித்தியானந்தம், சதாசிவம், கைலாசபதி, வேலுப் பிள்ளை, கந்தையா, சுசீந்திரராஜா போன்ற அறிஞர்கள் தமிழுக்குச் செய்துவரும் தொண்டு மிகச்சிறந்த தொண்டுகளாகும். சிறந்த இலக்கிய ஆராய்ச்சிகளைப் படைத்த பெருமை நித்தியானந்தத்திற்கு உண்டு. சிறந்த ஆராய்ச்சி நூல்களை, சிறப்பாக, இலக்கியத் திற னாய்வு நூல்களைப் படைத்த பெருமை கைலாசபதிக்கு உண்டு. தமிழிலும் மொழியியலிலும் சிறந்த நூல்களை ஆக்கிப் பெருமை கொண்டார் சதாசிவம். இவரைப் போன்றே வேலுப்பிள்ளையும் கந்தையாவும் சுசீந்திர ராஜாவும் தமிழுக்குச் செய்துவரும் தொண்டு சிறந்த தொண்டாகும். இலக்கியத்தில் மட்டுமின்றி இலக்கணத்திலும் மொழியியலிலும் இவர்கள் நல்ல பணியாற்றி வருகிறார்கள். மேல் நாட்டில் தமிழ் வளர்வதற்கும் இவர்கள் காரணமாக இருக்கிறார்கள். மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சிறப்புப் பேராசிரியர்களாகச் சென்று தமிழ் வளர்த்த பெருமையும் இவர்களுக்கு உண்டு. இவர்கள் கைவண்ணத்தில் பிறந்த நூல்களும் கட்டுரைகளும் மேலைநாட்டு அறிஞர்களால் பாராட்டப்பெற்ற நிலையினை நாம் அறிவோம். இந் நிலையில் இலங்கையில் தமிழ் வளர்த்த வளர்க்கின்ற பெருமை இவர் களுக்கு உண்டு. எத்தனையோ தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் தமிழ் மொழியைப் பயிற்றுவித்து அதனை வாழவும் வளரவும் செய்கின்ற பெருமை இவர்களுக்கு உண்டு. இங்கு அஞ்சல் தலையிலும் தமிழ் எழுத்துக்களைக் காணலாம். நான்காவது உலகத் தமிழ் மாநாடும் இங்குதான் நடைபெற்றது.

இலங்கையை அடுத்து, தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு மலேசியா. மலேசியாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு காலத் தொடர்பிருப்பதாக வரலாற்

றாசிரியர்கள் கணிக்கின்றனர். 1840 ஆம் ஆண்டில் கெடா, வெல்லெஸ்லி ஆகிய மாநிலங்களில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட ஜேம்ஸ் லோ (James Low), பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் இந்தியர் குடியேறி வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கண்டறிந்துள்ளார். டாக்டர் குவாட்ச்வேல்ஸ் (Quaritch Waes) அவர்கள் மேற்கண்ட ஆராய்ச்சியை உறுதி செய்கின்றார். கடாரத்தோடு சோழ மன்னர்களுக்கு இருந்த தொடர்பைக் 'கடாரம் கொண்டான்' என்ற இராஜேந்திர சோழனின் பட்டப்பெயரே உறுதிப்படுத்துகின்றது. 1970 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கட் தொகைப்படி (census) இந்தியர்களின் எண்ணிக்கை 754, 256. மலேசியப் பல்கலைக்கழகத்திலுள்ள இந்தியத்துறை தமிழ் மொழிப் பயிற்சியில் மிகச்சிறந்த பங்கு வகிக்கின்றது. இத்துறை உலகப் பெருமைபெற்ற துறையாகும். கோலாலம்பூரில் உள்ள இப்பல்கலைக் கழகம்தான் முதன் முதலில் அனைத்து உலகத் தமிழ் மாநாட்டினைக் கூட்டியது என்பதனைப் பெருமையோடு இங்குக் குறிப்பிட விரும்புகிறோம். இத்துறையின் தலைவராயிருந்த தவத்திரு தனிநாயக அடிகள் மிகச்சிறந்த பணிகள் ஆற்றியுள்ளார். இத்துறையின் தலைவராயிருக்கும் திரு சிங்காரவேலும் நம்முடைய பாராட்டுக்குரியவர். மறைந்த இராம சுப்பையா அவர்களும் தமிழ்க் கிளைமொழிகள் பற்றி ஆராய்ந்து நூல் எழுதியுள்ளார். நண்பர் அருணாசலம் எழுதிய நூல்களும் பாராட்டுக்குரியவைகளாகும். தண்டாயுதம் ஆக்கிய நூல் இந்திய சாகித்திய அகாடமியின் பரிசு பெற்ற நூலாகும். தமிழ் இலக்கியம், இலக்கணம், தத்துவம் போன்ற பல துறைகளிலும் பாடுபட்டு வருகின்றனர். மொழியியல் துறையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. மலேசியப் பல்கலைக் கழத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழத்திற்கு வந்த செல்வி திலகவதி தொல்காப்பியத் தொடரியல் பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்ட ஆய்வேட்டைச் சமர்ப்பித்துள்ளார்கள். இந்தியத் தமிழ்ப் பேராசிரியர்களை பலரைச் சிறப்புப் பேராசிரியர்களாக அடிக்கடி அழைத்து தமிழைக் கற்பிக்க வைக்கின்ற பெருமை இத்துறைக்கு உண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற டாக்டர் சோ.ந. கந்தசாமியும் டாக்டர் சுப. திண்ணப்பனும் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியில் மலேசியா மொழியின் செல்வாக்கு குறித்து ஆராய்ந்து வருகின்றனர். தமிழ் நாகரிகத்தின்

செல்வாக்கு கிழக்கு நாடுகளில் எத்துணை அளவிற்குப் பரவியுள்ளது என்பதையும் முக்கியமாகக் கருத்தில்கொண்டு ஆராய்ந்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சி வெளிவரும்போது தமிழ் நாகரிகத்தின், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையும் செல்வாக்கும் உயர்ந்துநிற்கும். சிவன் கோவில்கள், முருகன் கோவில்கள், மாரியம்மன் கோவில்கள் மிகச் சிறப்பாக விளங்குகின்றன. அங்கே பழைய சிவன் கோவில் ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் அமைச்சர்களாகவும் பணியாற்றுகின்றனர். மலாய்ப் பள்ளிகள் தேசியப் பள்ளிகள் என்றும் தமிழ், சீனப்பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. மலேசிய தமிழ்ப் பத்திரிகைகள் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றன. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிட வேண்டிய ஒன்று 'மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்'. மலேசியத் தமிழ் இலக்கியத்தில் மரபுக் கவிதையோடு புதுக் கவிதை முயற்சியும் அண்மைக் காலத்தில் பெருகிவருகின்றது. நாவல், சிறு கதைகளும் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளன. இலக்கியக் கட்டுரைகள், அறிவியல் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் பத்திரிகை வாயிலாக வளர்ந்துள்ளன. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தமிழுக்குச் சிறந்த இடமுண்டு என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்நிலையில் தமிழ் மொழிப் பயிற்சி மிகச் சிறந்த ஒன்றாக உள்ளது.

இதே போன்று சிங்கப்பூரிலும் தமிழ் வளர்ந்த நிலையைக் காண்கிறோம். மூன்று தேசிய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இங்கு பள்ளிக்கூடங்களில் எல்லாம் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுவதை நாம் நன்கு அறிவோம். தொலைக்காட்சி போன்ற நிலையங்களிலும் தமிழ் மொழி முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் மொழியில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளையும் காணலாம். சிங்கப்பூர் அரசும் தமிழ் மொழிக்கே ஆதரவு அளித்து வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கீழைநாடுகளில் மட்டுமின்றி மேலைநாடுகளிலும் தமிழ்மொழிப் பயிற்சி மிகச் சிறந்து விளங்கக் காணலாம். குறிப்பாக அமெரிக்க நாட்டில் இன்று தமிழ்ப் பயிற்சி நன்கு விரிந்து இருக்கிறது. வட மொழிக்கு எத்தனை முக்கியத்துவம் உள்ளதோ அத்தனை முக்கியத்

துவம் தமிழுக்கும் இன்று உள்ளமை காணலாம். சிக்காகோ பல்கலைக்கழகத்திலும் இதாகாவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்திலும் பிலடெல்பியாவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்திலும் பெர்க்கிலியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் சியாட்டிலுள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும் ஹோனலூலுவிலுள்ள ஹவாய் பல்கலைக்கழகத்திலும் ஆஸ்டினிலுள்ள டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க் கல்விக்கும் தமிழாய்வுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராயிருந்த டாக்டர் எமனோ **(M.B. Emeneau)** அவர்களின் பணியைப் பற்றி நாம் நன்கு அறிவோம். சமஸ்கிருதப் பேராசிரியராக யிருந்த இவர் சமஸ்கிருதத்தின் வாயிலாக தமிழ்மொழியின் சிறப்பை அறிந்து திராவிட மொழி ஆராய்ச்சியில் ஈடுபடலானார். திராவிட மொழியியல் உலகுக்கு அவர் செய்த தொண்டு ஏட்டில் எழுதினும் அடங்காது. திராவிட மொழிகள் வடமொழியின் பெருமைக்கும் சிறப்புக்கும் எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பது இவருடைய திட்டவட்டமான எண்ணம். பல்வேறு திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ந்து நூல்கள் பலவற்றை எழுதிய பெருமை இவருக்குண்டு. எத்தனையோ ஆராய்ச்சிக் கட்டுரைகளை அற்புதமாக ஆக்கிய சிறப்பு இவருக்கு உண்டு. மேல்நாட்டில் திராவிடமொழி ஆராய்ச்சி வளர்வதற்கு வித்திட்டவர்களில் இவரும் ஒருவர் என்பதை நாம் பெருமையோடு குறிப்பிடவேண்டும். இவர்தான் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியின் பயிற்சிக்கு வித்திட்டவர். இந்நிலையில் இன்று அப்பல்கலைக்கழகம் தமிழ் மொழியின் ஆராய்ச்சியிலும் பயிற்சியிலும் மிகச் சிறந்து விளங்கக் காணலாம். இங்கு தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் ஜியார்ஜ் ஹார்ட் (**George Hart**) தமிழில் மிகச் சிறந்த அறிஞராகக் கருதப்படுகிறார். இவர் சங்கப்பாடல்களைப் பற்றி எழுதிய நூல் **'The Poetry of Ancient Tamil'** என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு போன்ற நூல்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றில் காணப்படும் இலக்கியக் கோட்பாடுகள், நாகரிகக் கருத்துக்கள், கலை பற்றிய எண்ணங்கள் இவற்றையெல்லாம் குறிப்பிட்டு எழுதிய பெருமை யுடையவர். நாட்டுப்புறப் பாடல்கள், கம்ப இராமாயணம், சித்தர் பாடல்கள் இவற்றிலெல்லாம் மிகப் பற்றுடையவர். கம்ப இராமாயண[illegible] சில பகுதிகளை இவர் மொழிபெயர்த்துக் கொண்

டிருக்கிறார். புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றை மொழிபெயர்த்து உள்ளார். தமிழ்ப் படிக்கவரும் மாணவர்களுக்குக் கற்பிக்கும்பொருட்டு 'தமிழ் பிரைமர்' என்ற நூலை மிக ஆழமாக ஆக்கியுள்ளார். அமெரிக்க மாணவர்களைக் கருத்தில் கொண்டு இந்நூல் அமைந் துள்ளது. தமிழ் மொழியின் இலக்கணம் இவருடைய கைவண்ணத் தில் சிறந்து நிற்கக் காணலாம்.

இங்கு பயிலும் மாணவர்கள் தமிழ் இலக்கியம் மட்டுமின்றி நாட்டுப்புறப் பாடல்களையும் மிக அக்கரையோடு படித்து வருகிறார் கள். தமிழிலுள்ள பாவைக்கூத்து, ஏற்றப்பாடல்கள் போன்றவற்றை யெல்லாம் இவர்கள் அக்கரையோடு படித்து ஆராய்ச்சி செய்து வரு கிறார்கள். தமிழ்மொழி மட்டுமின்றி தமிழ்க்கலை, தமிழ் இசை, தமிழ் நாடகம் போன்றவற்றில் எல்லாம் இவர்கள் அக்கறை செலுத்தி வருகிறார்கள். கௌசல்யா, ஜியார்ஜ் ஹார்ட், குமாரசாமி ராஜா போன்றவர்கள் இவர்களுக்குத் தமிழ் பயிற்றுவித்த பெருமை கொண் டவர்கள். குமாரசாமிராஜா அவர்கள் மூன்றாண்டு காலம் இப்பல் கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்தார். அவர்கள் இவர்களுக்காக எழுதிய நூலை இன்று உலகு எங்கிலும் பயன்படுத்துவதைக் காண்கி றோம். பேராசிரியர் சண்முகம் பிள்ளையும் முதன் முதலில் இப்பல் கலைக் கழகத்தில் இருந்தவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைப் போன்றே சிக்காகோ பல் கலைக் கழகமும் தமிழ்ப்படிப்பிற்கு மிகச் சிறந்து விளங்குகின்ற ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழகம். 1960 முதலே இங்கு தமிழ்ப்படிப்பு மிக முக்கியத்துவத்தை அடைந்து இருக்கிறது. பேராசிரியர் மில்டன் சிங்கர் என்பவர் தமிழ்ப் படிப்பில் மிக அக்கறை காட்டியதன் விளைவாகத்தான் இங்கு தமிழ்ப் படிப்பு தோன்றியது எனக் கூறலாம். மானிடவியல் பேராசிரியராகயிருக்கும் இவர் தமிழ் நாட்டிற்கு அடிக் கடி வந்து தமிழ்மக்களின் வாழ்க்கை முறையினை நன்கு அறிந்து வந்திருக்கிறார். இவரின் பெருமுயற்சியால்தான் இங்கு தமிழ்ப் படிப்பு தோன்றியது. 'முதன் முதலில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அங்குச் சிறப்புப் பேராசிரியராய்ச் சென்று தமிழ்க் கல்வியைத் துவக்கி வைத்து தமிழ் மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு குறித்து சிறப்புச் சொற்பொழிவு செய்துவந்தார்கள். இன்று அமெரிக்க நாட்டிலேயே தமிழ்ப் படிப்புக்கு சிறந்த இடமாக விளங்கு கிறது இது. பேராசிரியர் டாக்டர் இராமானுஜம் இப்பல்கலைக்கழகத்

தில்தான் தமிழ்ப் பேராசிரியராகவும் திராவிட மொழிப் பேராசிரிய ராகவும் பணியாற்றிவருகிறார். இவர் பல்வேறு இலக்கியங்களை யாத்தவர். இவரால் மொழி பெயர்க்கப்பட்ட சங்கப் பாடல்கள் அறிஞர் பெருமக்களால் பாராட்டப்படுகிற பாக்களாகும். நல்ல கவிதை உணர்வு கொண்ட இவரின் கை வண்ணத்தில் எத்த னையோ பாடல்கள் உலக அரங்கிற்குத் தெரிய வந்திருப்பதைக் காணலாம். மேலும் மொழியியல் பேராசிரியராக விளங்குகின்ற நிலையில் தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சி இங்கு தலைசிறந்து விளங்கக் காணலாம். இங்கு பணிபுரிந்த பெருமை அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், பேராசிரியர் அகத்தியலிங்கம், பேராசிரியர் ஈ. அண்ணாமலை பேராசிரியர் கு. பரமசிவம், பேராசிரியர் லிண்ட்ஹோம், திருமதி கௌசல்யா போன்ற பலருக்கும் உண்டு. அமெரிக்கர்களுக்குத் தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பதற்காக இவர்களால் ஆக்கப்பட்ட நூல்கள் பல இன்றும் ஏற்கத்தக்கனவாக உள்ளன. மேலும் பல மாணவர்கள் இங்கு மொழிபற்றி ஆராய்ச்சி ஏடுகளை டாக்டர் பட்டத்திற்காக செய்துள்ளனர். டாக்டர் அண்ணாமலை, டாக்டர் லிண்ட்ஹோம், டாக்டர் பரமசிவம் போன்றவர்கள் இங்குதான் டாக்டர் பட்டங்களைப் பெற்றனர். தமிழ்த் தொடரியல் பற்றி இவர்கள் நன்கு ஆராய்ந்து இருக்கின்றனர். மேலும் அமெரிக்க மாணவர்களும் தமிழ் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். தமிழ் இலக்கியம், தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு போன்ற பல துறைகளில் இங்குள்ள மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றியும் ஆராய் கின்ற நிலை இங்கு உண்டு. டாக்டர் ஆஷர் போன்ற இங்கிலாந்து நாட்டுப் பேராசிரியர்கள் இங்கு வந்து பணியாற்றித் தமிழ் மொழிப் பயிற்சிக்கு வித்திட்டுள்ளனர்.

அடுத்துக் குறிப்பிடவேண்டிய பல்கலைக்கழகம் பென்சில்வேனியா பல்கலைக்கழகம். முதன்முதலாக அமெரிக்க நாட்டில் தமிழ் கற்பித்த பெருமை இப்பல்கலைக் கழகத்திற்கு உண்டு. 1950 முதலே இவர் கள் தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர். பேரா சிரியர் நார்மன் ப்ரௌன் என்பாரின் முயற்சியில்தான் இங்கு தமிழ் மொழி பயிற்சி தொடங்கிற்று. பேராசிரியர் லிஸ்கர் என்பவர் இங்கு தமிழ் மொழியைப் பயிற்றுவித்து இருக்கிறார். பேராசிரியர் டாக்டர்

சண்முகம் பிள்ளை, டாக்டர் குமாரசாமி ராஜா, டாக்டர் ஆண்டியப்பன், டாக்டர் வைத்தியநாதன் போன்றவர்கள் இங்கு தமிழ்க் கற்பித்து வந்தனர். இங்கு இப்போது தமிழ்க் கற்பித்துவரும் டாக்டர் மெக்கால்பின் முன்னுக்கு வருகின்ற சிறந்த இளைஞர். திராவிட மொழிகளுக்கும் மத்திய ஆசியாவில் பேசப்பட்ட ஏலமைட் மொழிகளுக்குமிடையே உள்ள உறவினைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். திராவிட ஒப்பு மொழியியல் பற்றியும் பரக்க ஆராய்ந்து வருகிறார். இங்குள்ள நூல் நிலையத்தில் ஏராளமான தமிழ் நூல்கள் உள்ளன. இங்கிருந்து வெளியேறும் மாணவர்கள் தமிழ்மொழி ஆராய்ச்சிக்குத் தூண் போன்றவர்கள்.

அடுத்துக் குறிப்பிடவேண்டிய பல்கலைக்கழகம் சியாட்டில் நகரத்தில் இருக்கும் வாஷிங்டன் பல்கலைக்கழகம். கடந்த 10 ஆண்டுகளாக இங்கு தமிழ்மொழி வரன்முறையாகப் பயிற்றுவிக்கப் படுகிறது. சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் படித்த பேராசிரியர் ஷிப்மென் என்பவர் இங்கு பேராசிரியராக உள்ளார். பல சிறந்த மாணவர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. தமிழ் மொழியோடு கன்னட மொழியும் இவருக்கு நன்கு தெரியும். தற் போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற ஆரோக்கிய நாதன் தமிழ் கற்பித்து வருகின்றார். இவர்களது முயற்சியால் அமெரிக்க நாட்டின் வடகோடிப் பகுதியில் தமிழ் வாழ்கிற ஒருநிலை உருவாகி வருகிறது. இப்பல்கலைக்கழக நூலகத்தில் ஏறத்தாழ 2500 நூல்கள் உள்ளன. தமிழ் வார, மாத இதழ்களும் இந்நூலகத் திற்கு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பல்கலைக் கழகங்களைப் போன்றே டெக்ஸாஸ் பல்கலைக் கழகமும் குறிப்பிடவேண்டிய ஒரு பல்கலைக்கழகமாகும். இங்கு தமிழ் மொழி பயிற்றுவிக்கும் ஆந்திரே ஜுசேபர்க் (Andre Sjoberg) என்னும் அம்மையார் தமிழ் இலக்கியத்தில் நல்ல ஈடுபாடு கொண்டவர். முதலில் தெலுங்கு மொழி கற்பித்த இவர், தற்பொழுது தெலுங்கும் தமிழும் கற்பித்து வருகின்ற நிலையைக் காண்கிறோம். சங்க இலக் கியங்களை மொழிபெயர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளார்கள். மொழி இயல் துறையிலும், துறைபோகிய இவர் திராவிடமொழி இயல் பற்றியும் ஆராய்ந்து வருகிறார். இவரைப் போன்றே ஊஸ்டன் பல்கலைக்

கழகத்தில் பணிபுரியும் அம்மையார் ஒருவரும் தமிழ்மொழி படிப்பில் அக்கறை செலுத்தி வருகிறார். மானிடவியல் பேராசிரியராகயிருக்கும் பாலின் கொண்டா என்னும் இவ்வம்மையார் நாகர்கோவில் மக்களின் வாழ்க்கை முறையினை அலசி ஆராய்ந்து வருகின்றார். கார்னல் பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி நன்கு பயிற்றுவிக்கப்படுகிறது. ஜேம்ஸ் கேர் என்னும் பேராசிரியர் தமிழ்மொழி பயிற்சியில் நல்ல ஈடுபாடு கொண்டவர். சிங்கள மொழியையும் இலங்கைத் தமிழையும் ஆராய்ந்து வருகின்ற இவர் தமிழ் நாட்டிற்கு அடிக்கடி வந்து ஆராய்ச்சி செய்கிறார். இத்தகைய ஒரு நிலை அமெரிக்க நாட்டில் உருவாகியிருப்பது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மிகுந்த துணை புரியும். திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று கூறிய கவி பாரதியின் வாக்கு இன்று பலித்து நிற்கக் காணலாம். கன்னித்தமிழ் என்றும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ் என்றும் தமிழர்கள் பேசுவது மட்டுமின்றி மேல்நாட்டார்களும் தமிழ் மொழியின் அமைப்பு, அதன் இலக்கிய வளர்ச்சி, இலக்கண அரண் இவற்றையெல்லாம் பற்றிப் பேசுவது நமக்குப் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது. செம்மொழி இரண்டு என்றும் அவற்றில் ஒன்று சமஸ்கிருதம் மற்றொன்று தமிழ் என்றும் பேசுகின்ற நிலை இன்று மேலைநாடுகளில் உருவாகியிருக்கக் காண்கிறோம். வடஇந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சமஸ்கிருத மொழியையும் தென்னிந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமானால் தமிழ் மொழி பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்நிலையில்தான் இன்று விஸ்கான்சின், மிச்சிகன் போன்ற பல பல்கலைக்கழகங்கள் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக விஸ்கான்சின்ஸில் தமிழ்மொழிப் பயிற்சி மிக வேகத்தில் முன்னேறிவரக் காணலாம். இதற்கு அடிப்படைக் காரணமாயிருந்தவர் மதுரைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த திரு விஜயவேணுகோபால் ஆவார். இரண்டு ஆண்டு தமிழ் இலக்கியத்தையும் நாகரிகத்தையும் கற்பித்து வந்தார். மிச்சிகன் பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி ஓர்அளவுக்குத் தெரிந்த நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் பேராசிரியர் டாக்டர் அகத்தியலிங்கம் அவர்களே. இவற்றையெல்லாம் காணும் போது தமிழ்மொழி அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்

பட்ட ஒரு மொழியாக, ஆராய்ச்சிக்குரிய மொழியாக, கற்பிப்பதற்கு உரிய ஒரு மொழியாக ஆகிவிட்ட நிலையைக் காண்கிறோம்.

பிரிட்டனுக்கும் இந்திய நாட்டிற்குமிடையே உள்ள தொடர்பை நாம் நன்கு அறிவோம். இந்நிலையில் இங்கிலாந்து நாட்டிலும் தமிழ் ஆராய்ச்சியும் தமிழ்ப் படிப்பும் வேரூன்றி நிற்கின்றது. ஐரோப்பாவிலே தொடக்கத்திலிருந்தே தமிழில் பட்டப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பு வசதியும் உள்ளது பிரிட்டன்தான் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்து நாட்டையும் தமிழையும் தொடர்புபடுத்திக் காணும்போதெல்லாம் டாக்டர் ஜி. யு. போப்பின் நினைவு நம் மனக்கண் முன் வருகிறது. இவர் கைவண்ணத்தில் தமிழ் வளர்ந்ததை நாம் நன்கு அறிவோம். தன்னைத் தமிழ்மகன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டவர் இவர் என்பதை நாம் நன்கு அறிவோம். இவருக்குப் பின்னர் இலக்கியத் துறையில் ஈடுபாடும் அக்கறையும் கொண்டு நின்றவர் திரு தாம்ப்சன் என்பவராகும். School of Oriental and African Studies என்ற நிறுவனத்தில் பணிபுரிந்த இவர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யரிடம் தமிழ் பயின்றவர். தமிழ்க் கல்விக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் சிறப்பான இடமளித்திருப்பது இலண்டன் பல்கலைக்கழகத்திலுள்ள கீழைநாட்டு ஆப்ரிக்க கலைக்கழகம்தான் என்றாலும் ஆக்ஸ்போர்டு, பர்மிங்ஹாம் மான்செஸ்டர், எடின்பரோ முதலிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் தமிழில் ஆய்வு செய்ய வாய்ப்பிருப்பது இங்கு குறிப் பிடத் தக்கது. அடுத்து தமிழ்ப்பணி புரிந்தவர் டாக்டர் ஆஷர் அவர்கள். தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சியில் தலைசிறந்தவர். ஆங்கில மாணவர்களுக்காகத் தமிழ் பயிற்றுவிக்கும் பொருட்டுத் தனி ஒரு நூலை எழுதி வெளியிட்டவர். தமிழ் இலக்கியம், தமிழ் இலக் கணம், தமிழ்ப் புதினங்கள் போன்ற பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர். தமிழுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் என்று சொன்னால் அது மிகையாகாது. செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற் கேற்ப தமிழிலேயே உரையாட விரும்புபவர் இவர். இன்று எடின் பரோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராக இருந்துவரும் இவர் தமிழ் மாணவர்களை உற்பத்தி செய்வதிலும் தமிழ் இலக்கிய, இலக்கணம் பற்றி ஆராய்வதிலும் தன்னுடைய நாட்களைக் கழித்து வருபவர். எடின்பரோ செல்லும் மாணவர்கட்கு உறுதுணையாக

யிருந்து அவர்களின் வாழ்விற்கும் பெருமைக்கும் அடிப்படையாக இருப்பவர். அவருடைய கைவண்ணத்தில் மலர்ந்த மாணவர்கள் பலர். இவரைப் போன்றே கீழை ஆப்பிரிக்கக் கலைக்கழகத்தில் பணி யாற்றி வரும் டாக்டர் மார் என்பவரும் குறிப்பிடத்தக்கவர். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்த டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரின் கீழ் ஆராய்ச்சிகளை நடத்தி யவர். இப்பல்கலைக் கழகத்தில்தான் டாக்டர் பொற்கோ போன்றவர் கள் தமிழ் கற்பித்து வந்தார்கள். இரண்டு ஆண்டுகள் அங்கு தமிழ் கற்பித்த பெருமை இவருக்குண்டு. டாக்டர் மார் அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் மட்டுமின்றித் தமிழ் பண்பாட்டிலும் நாட்டம் கொண்டவர். இவரைப் போன்றே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த டாக்டர் பர்ரோ அவர்களும் குறிப் பிடத்தக்கவர்கள். இவர்கள் திராவிட மொழியியல் உலகுக்குச் செய்த தொண்டு ஏட்டில் அடங்காது. டாக்டர் விட்லி, டாக்டர் லாஸ், டாக்டர் கூர்மன், திருமதி கௌசர் போன்றவர்கள் எல்லாம் தமிழ் மொழியியலில் நாட்டம் கொண்டவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அடிக்கடி வந்து ஆலோசனை கூறியவர்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழுக்கு என்ன செய்யவேண்டுமோ அதனைச் செய் பவர்கள். தமிழ் ஆராய்ச்சி எந்தக்கோணத்தில் போகவேண்டுமோ அந்தக் கோணத்தில் போகவேண்டும் என விரும்புபவர்கள். மேல் நாட்டு அறிஞர்களால்தான் தமிழ்மொழி உலக அரங்கில் நல்ல நிலையில் உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

பிரிட்டிஷ் நூலகத்தில் பல அரிய நூல்களும் கையெழுத்துப் படி களும் உள்ளன. ஏறத்தாழ 20,000 தமிழ் நூல்களும் 300க்கு மேற் பட்ட கையெழுத்துப் படிகளும் உள்ளன. பிரிட்டிஷ் நூலகத்திற்கு அடுத்தபடியாக இந்தியா ஆபீஸ் நூலகத்திலும் 16,000 நூல்களும் 34 கையெழுத்துப் படிகளும் உள்ளன. பல அரிய நூல்கள் இவ் விரண்டு நூலகத்திலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கீழைநாட்டு ஆப்பிரிக்கக் கலைக்கழக நூலகத்தில் 2500 தமிழ் நூல்களும் 20 தமிழ்க் கையெழுத்துப் படி களும் உள்ளன. மேலும் லண்டனிலுள்ள பைபிள் சொசைட்டியிலும் ஆக்ஸ்போர்டிலுள்ள போட்லியன் நூலகத்திலும் கேம்பிரிட்ஜ் பல் கலைக்கழக நூலகத்திலும் லண்டனிலுள்ள ராயல் ஆசிய மன்ற

நூலகத்திலும் நிறைய தமிழ் நூல்கள் உள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இலண்டன் தமிழ்ச் சங்கமும் சிறந்த பணியாற்றி வருகின்றது. பி. பி. சி. வானொலி நிலையமும் தமிழ்ச் செய்திகளை ஒலி பரப்புகின்றது. லண்டன் முரசு என்ற பெயரில் தமிழ் மாத இதழ் ஒன்றையும் நடத்தி வருகின்றனர். உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பணியில் சிறந்த தொண்டாற்றி வருகின்றது. பிரித்தானிய சைவ மாமன்றம் சமயப் பணி ஆற்றிவருவதும் குறிப்பிடத்தக்கது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் பர்ரோ (T. Burrow) அவர்களும் கலிபோர்னிய பல்கலைக்கழகப் பேராசிரியர் எமனோ (M.B. Emeneau) அவர்களும் இணைந்து 'திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி'யும் (Dravidian Etymological Dictionary 1961) அதன் பிற்சேர்க்கைத் தொகுப்பும் (Dravidian Etymological Dictionary: Suppelment 1968) வெளியிட்டனர். திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியின் தோற்றம் திராவிட ஒப்பியல் ஆய்வில் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கம் என்றும் திராவிட மொழியியல் வரலாற்றின் ஒரு திருப்பு மையம் என்றும் அறிஞர் கூறுவர். இவ்விரண்டு அறிஞர்களின் கூட்டு முயற்சியின் விளைவாக இவ்வகராதி தோன்றியது. இவ்வகராதியை அடியொற்றிக் குறுகிய காலத்திலேயே நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளமை இதன் பயனுக்கும் சிறப்புக்கும் ஏற்ற சான்றாக உள்ளது.

அமெரிக்காவை அடுத்து சோவியத் நாட்டிலும் தமிழ் மொழி வளரக் காண்கிறோம். தமிழ்மொழிப் பயிற்சி சிறக்கக் காண்கிறோம். மாஸ்கோவிலுள்ள கீழைக் கலையியல் நிறுவனத்திலும் ஆசிய ஆப்பிரிக்கக் கலையியல் நிறுவனத்திலும் உலக நாடுகளின் தொடர்பியல் நிறுவனத்திலும் லெனின்கிராட் பல்கலைக்கழகத்திலும் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு உண்டு. டாக்டர் ஆந்திரனோவ் (Andronov) அவர்கள் தமிழியல் துறையில் நூல்களும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்கள். உலகிலுள்ள திராவிட இயல் வல்லுநர்களில் அவரும் ஒருவர் எனின் மிகையாகாது. மொழியியல் துறையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். தமிழ் இலக்கியங்களும் 20ஆம் நூற்றாண்டு கதை, நாவல், சிறுகதைகளும் இரஷ்ய மொழியில் மொழி

பெயர்க்கப்படுகின்றது. இப்ராகிமோவ் என்பவர் திருக்குறளை ஈரடிச் செய்யுளிலேயே மொழிபெயர்த்துள்ளார். ஸ்மிர்னோவா பாரதியார் பாடல்களை மொழிபெயர்த்துள்ளார்கள். ஜெயகாந்தன், புதுமைப் பித்தன், லக்ஷ்மி முதலிய நாவல் ஆசிரியர்களைப் பற்றி மகரென்கோ ஆராய்ந்துள்ளார். ரோஷன்ஸ்கி 'கல்கி'யின் பார்த்திபன் கனவை ஆராய்ந்துள்ளார். புதுமைப் பித்தன் சிறுகதையைப் பற்றி பிசிகினா ஆராய்ந்துள்ளார். விபர்னிகா ஜெயகாந்தன் படைப்புக்களை ஆராய்ந்து கொண்டுள்ளார். துப்பான்ஸ்கி 'முல்லைப் பாட்டை' ரஷ்யர்கட்கு அறிமுகப் படுத்தினார். பியாத்திகோர்ஸ்கி தத்துவ இயல் அறிஞர்; பல மொழிகளைக் கற்ற பன்மொழிப் புலவர். ஸ்லாவிய மொழிகளில் முதன்முதலாக வெளியான தமிழ்—ருசிய அகராதியின் பெரும்பகுதியைத் தொகுத்தவரும் இவரே. அவருடைய நினைவாற்றல் வியப்பிற்குரியது. அகராதி மட்டுமின்றி 'தமிழ் இலக்கியத்தில் காணும் தத்துவக் கூறுகள்' என்ற தலைப்பில் நூலும் எழுதியுள்ளார் கள். சங்க காலம் முதல் வள்ளலார் காலம் வரை தமிழ் இலக்கியத் தில் வழங்கி வந்துள்ள தத்துவ மரபுகளை மேற்கோள்களுடன் விவரித்திருக்கிறார். தமிழர்கள் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் சோவியத் தமிழர் செம்பியன் எனும் ரூதின் அவர்களை இங்கு நினைவுகூர வேண்டும். சோவியத் நாட்டில் தமிழ் பரவுவதற்கு இவரும் ஒரு காரணகர்த்தாவாக யிருந்தவர் என்றால் மிகையாகாது. இன்று சோவியத் நாட்டில் தமிழ் பரப்பும் சோவியத் தமிழர்கள் பெரும்பாலும் இவரின் மாணவர்களே எனின் அவரது சிறப்பு நன்கு விளங்கும். நல்ல தமிழில் பழகு தமிழில் பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர். 'செம்பியன்' என்ற தமிழ்ப் புனைப் பெயரையும் கொண்டிருந்த ரூதின் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியது மட்டுமின்றி சிறுகதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். இவரது மறைவு தமிழ்க் கல்விக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இப்ரகீமவ் கல்கியின் 'அலை ஓசை' முதலியவற்றை ரஷ்ய மொழியில் ஆக்கினார். இவருடைய மொழிபெயர்ப்புக்கு ரஷ்ய நாட்டில் நல்ல வரவேற்பு உண்டு. தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, சிதம்பர ரகுநாதன், ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களை ரஷ்ய வாசகர்களுக்கு வழங்கி வருகிறார். மாஸ்கோ பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவைச் சார்ந்த அலெக்சாந்தர் துபியாஸ்கி அவர்களும் பல சோவியத் தமிழர்களை உருவாக்கி வருகின்றார்கள்.

லியூபாபிக்னா புதுமைப் பித்தனின் படைப்புக்கள் பற்றி ஆய்வுரை எழுதி பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்வெத்லானா த்ருப்கினா, ஆருலா ரோதவ்த்ஸவா தமிழ் மாணவர்களுக்குப் பயிற்சி யளித்து வருகிறார்கள். வித்தாலி புர்னிக்கா என்பவர் தமிழர் விழாக்க ளைப் பற்றிப் பத்திரிகை வாயிலாக சோவியத் மக்களுக்கு வழங்கு கிறார். ஜெயகாந்தன் கதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள் ளார்கள். சோவியத் நாட்டில் பண்டை இலக்கியம், இலக்கணம், தற்கால இலக்கியம் என்னும் மூன்று துறைகளிலும் தமிழ் ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடந்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி யாகும். மாஸ்கோ வானொலியில் தமிழ் ஒலிபரப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. நாகர்கோவில் பகுதியைச் சார்ந்த ஜூன்ஸ்மானி மாஸ்கோ வானொலியில் தமிழ் முழக்கம் செய்து வருகின்றார்கள். சென்னையிலுள்ள நியூசெஞ்சுரி புத்தக நிலையம் வழியாக இருமொழி இணைவுக்கான தொண்டுகள் நடைபெறுவது இங்குக் குறிப்பிடத் தக்க தொன்றாகும்.

செக்கோஸ்லவாக்கியா நாட்டிலுள்ள பிராகில் தி ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட் நிறுவனத்தில் தென் - தென்கிழக்காசியப் பிரிவில் திராவிட மொழிக் கல்விக்கு வாய்ப்புள்ளது. டாக்டர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) இங்கே பணியாற்றியபொழுது தமிழ் இலக்கியங் களைச் செக்கோஸ்லாவக்கிய மக்களுக்கு மொழி பெயர்த்து வழங்கி யுள்ளார். கமில் சுவலபிலைப் பற்றித் தெரியாத தமிழ் அறிஞர்கள் இருக்கமுடியாது. தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழி இயலில் ஒன்றி விட்டவர் இவர். நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். எத்தனையோ நூல்களை எழுதியிருக்கிறார். இவர் The smile of Muruga, Tamil literature போன்ற பல நூல்களை இயற்றி தமிழ் மணம் பரப்பி வருகிறார். எத்தனையோ தமிழ்ப் பாடல்களை மொழி பெயர்த்து இருக்கிறார். செக் மொழியில் மட்டு மின்றி ஆங்கில மொழியிலும் இவர் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். சங்ககால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். மொழி இயலிலும் சிறந்த பணியாற்றியுள்ளார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வெளிவரும் The Journal of Tamil Studies என்ற இதழில் தொல்காப்பியம் பற்றிய ஆய்வு

வெளிவருவது தமிழ் அறிஞர் உலகம் நன்கு அறியும். சார்லஸ் பல்கலைக்கழகத்தில் டாக்டர் வாசக் என்பவர் தமிழ் மொழியை நன்கு அறிந்தவர். பேசும் திறன் படைத்தவர். செக் நாட்டிற்குச் சென்று தமிழ் மணம் பரப்பிய பெருமை அங்கே மறைந்துவிட்ட பேராசிரியர் திருமதி தியாகராசனுக்கு உண்டு. பல தடைகளுக் கிடையே பல நூல்களைச் செக் மொழியில் மொழிபெயர்ப்பதற்கு உதவியாக இருந்தார் இவர். இவரின் நினைவுக்குத் தமிழ் அன்னை யின் சார்பாக நம் அஞ்சலி உரித்தாகுக.

செக் நாட்டைப் போலவே மேற்கு ஜெர்மானிய பல்கலைக்கழகங் களிலும் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. கொய்லோன் பல்கலைக்கழகத்திலும் ஹைடல்பர்க்கிலுள்ள தெற்கு ஆசியக் கலைக் கழகத்திலும் ஹேம்பர்க் பல்கலைக்கழகத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. வடமொழி ஆராய்ச்சிக்குப் பெயர் பெற்றிருந்த பல்கலைக்கழகங்கள் ஜெர்மனிப் பல்கலைக்கழகங்கள் என்பதை நாடு நன்கு அறியும். வடமொழி, மேல்நாட்டுப் பல்கலைக்கழகங் களில் காலூன்றுவதற்குக் காரணம் ஜெர்மானியப் பல்கலைக்கழகங் களாகும். இங்குதான் மேல்நாட்டில் முதன்முதலாக வடமொழி பயிற்றுவிக்கப்பட்டது. தமிழ் மொழியும் வடமொழிக்கு ஒப்பப் பயிற்று விக்கப்படுகிறது. ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்தில் டாக்டர் தாமோ தரன் அவர்கள் பணியாற்றுகின்றார். தமிழ் மொழி பயிற்றுவிப்பதிலும் அதுபற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொண்டுள்ளார். இவரைப் போலவே டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் அவர்கள் கோலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைப் பயிற்றுவித்து வருகிறார். ஹேம்பர்க்கில் டாக்டர் ஆண்டோன், டாக்டர் சீனிவாசன் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

பிரான்ஸ் நாட்டிலும் தமிழ் மொழிப் பயிற்சி வளர்ந்துவரக் காண்கிறோம். பாண்டிச்சேரி பிரான்சு பேரரசுக்கு உட்பட்டு இருந் ததை நாம் அறிவோம். எனவே பிரான்ஸ் நாட்டிற்குத் தமிழ் ஆராய்ச்சி புதியதல்ல. பாண்டிச்சேரியில் இருக்கும் இந்தியப் படிப்பு நிறுவனம் தமிழ் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருக் கின்றது. டாக்டர் பிலியோசா, டாக்டர் க்ரோ ஆகியோரின் மேற் பார்வையில் நடந்துவரும் இவ்வாராய்ச்சி நிறுவனம் பல்வேறு நிலை

களில் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகிறது. சங்கத் தமிழ்ச் சொற்களின் அகராதி, தமிழ்நாட்டு ஆகமங்கள், தமிழ்நாட்டுச் செடி வகைகள், பரிபாடலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு முதலியன இந்த ஆராய்ச்சியில் கனிந்த கனிகள். இதை அடியொற்றி பிரான்சு நாட்டிலும் தமிழ் மொழியின் பயிற்சியும் தமிழ் ஆராய்ச்சியும் தலை நிமிர்ந்து நிற்கக் காண்கிறோம். மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பிரான்சு நாட்டில்தான் நடைபெற்றது. பிலியோசா அவர்களே அனைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராவார். பாரீசில் காசி என்பவர் தமிழ் கற்பிக்கின்றார். ஜூலியன் வின்சன் சிலம்பு, மணிமேகலை, ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு போன்றவற்றை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். ஜூல்ஸ் பிளாக் **(Jules Block)** திராவிட மொழிகளின் மொழியமைப்பை ஆராய்ந்து, நூல் வெளியிட்டுள்ளார்கள். டாக்டர் பிலியோசா, 'கோலேஜ்–து–ப்ரான்ஸ்' என்ற பாரிஸ் நிலையத்தில் தமிழும் தமிழ் நாட்டுப் பண்பாடும் கற்பிப்பவர். பாரிஸில் பிப்லியோதெக் நாகிய னேவ் என்ற பெரிய நூல் நிலையம் உள்ளது. அங்கே தமிழ்ச் சுவடி களைச் சேமித்து வைத்துள்ளனர். ஜூலியன் வின்ஸன் என்பவர் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பித்து வந்தார். அவர் பிரெஞ்சு மொழியில் காமத்துப்பாலை மொழிபெயர்த்துள்ளார். தமிழ் ஏட்டுச் சுவடிகளும் பழைய காலத்தில் அச்சேறிய தமிழ் நூல்களும் பிரெஞ்சில் மொழிபெயர்த்த தமிழ் நூல்களும் பிப்லியோ தெக் நாகியனேல் என்ற நூல் நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ளன. இலத்தீன் மொழியில் பெயர்த்து வடித்த தமிழ் நூல்களின் பட்டியலையும் இலத்தீனிலுள்ள தமிழ் இலக்கணத்தையும் **(Grammatica Damulica)** அங்கே காணலாம். 1845ஆம் ஆண்டு வெளியான தமிழ்–லத்தீன் அகராதியும் 1815ஆம் ஆண்டில் அச்சான இராமாயண உத்தர காண்டத்தையும் அங்கே காணலாம். இந்நிலையில் பிரான்ஸ் நாட்டில் தமிழ் வாழ்வதும் வளர்வதும் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் ஒன்றாகும்.

போலந்து நாட்டில் வார்சா பல்கலைக் கழகத்தில் இந்திய இய லுக்கென தனியொரு துறை உண்டு. இதில் தமிழ் மொழிக்கென ஒரு பகுதியும் உண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர் இராம. சுந்தரம் ஏழு ஆண்டுகள் இங்கு தமிழைக்

கற்பித்துள்ளார். இவர் தயாரித்த தமிழ்ப் பாடநூல் விரைவில் வார்சா பல்கலைக் கழகத்தின் மூலம் வெளிவர உள்ளது. 1972-ல் தொடங்கப்பட்ட இக்கல்வி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருதல் காணலாம். திருக்குறள் போலிஷ் மொழியில் வெளி வந்துள்ளது. இப்பல்கலைக் கழக நூலகம் விரிந்துபட்டது. தமிழைப் பற்றி நூற்றுக் கணக்கான நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன. தமிழ் ஆய்வு இதழ்களும் மாத இதழ்களும் இந்நூல் நிலையத்தில் கிடைக்கின்றன. இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் படித்துவரும் காதர்சினா வித்கோல்வ்ஸ்கா என்பவர் தமிழ்ப் புணரியல் பற்றி ஆராய்ந்து வருகிறார். இவரைப் போன்றே தமிழ் வரலாறு பயிலும் ஜெர்சி தார் கோலிஸ்கி 'இந்தியப் பண்பாடு பற்றி ஆராய்பவர்கள் சிந்து சமவெளி நாகரிகம், பண்பாடுகள் பற்றி முறையாக ஆராய்வது இன்றியமையாதது' எனக் குறிப்பிடுகிறார்.

பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம் முதலிய மொழிகளோடு தமிழ் மொழியும் இந்தியவியல் துறையில் கற்பிக்கப்படுகின்றது. டாக்டர் பன்னீர்செல்வம் அவர்கள் ஓராண்டு தமிழ் கற்பித்தார். இங்குள்ள நூலகத்தில் தமிழ்பற்றி நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. பேராசிரியர் பெண்டி ஆல் தோவும், ஆஸ்கோ பார்ப்போலாவும் சிந்துவெளி எழுத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டமையால், திராவிட மொழியியல் துறையிலும் ஆர்வம் உண்டாயிற்று. ஹாலந்து நாட்டில், லெய்டன் பல்கலைக் கழகத்திலுள்ள கெர்ன் நிறுவனத்தில் (Kern Institute, University of Leiden) டாக்டர் கோவிந்தன்குட்டி அவர்கள் தமிழும் மலையாளமும் கற்பித்து வருகின்றார்கள். யூட்ரெஹ் பல்கலைக்கழகத்தில் (State University of Utrecht) திராவிட மொழியியல் பாடங்களுடன் தமிழும் போதிக்கப்படுகின்றது. முன்பு குறிப்பிட்ட செக் நாட்டு அறிஞர் கமில் சுவலபில் இங்கு தமிழ் கற்பித்து வருகிறார். இவர் சிக்காகோ, ஹைடல்பர்க், காலேஜ் ஆப் பிரான்ஸ் போன்ற இடங்களில் எல்லாம் தமிழ் மொழியைக் கற்பித்தார்.

ஹங்கேரி நாட்டு பாலிண்ட் அவர்கள் பன்மொழிப் புலவர். இவர் தமிழ் - திராவிடம் (Tamil Dravidian Studies) என்ற நூலை 1897-ல் வெளியிட்டார். ஹங்கேரியிலுள்ள மற்றொரு பேரறிஞர் டாக்டர் சார்வஸ் பேப்ரி, மகாபலிபுர சிற்பங்களை

ஆராய்ந்த அறிஞர். ஸ்விட்சர்லாந்து நாட்டில் தமிழுக்கு வாய்ப்பில்லையெனினும் பேராசிரியர் கார்ல்கெல்லர் தமிழ், மலையாளம் ஆகிய இருமொழிகளிலும் பயிற்சி உள்ளவர்.

ஸ்வீடன் நாட்டிலுள்ள ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் துறையில் தமிழுக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் வாய்ப்புண்டு. ஸ்டிக் விக்கந்தர், கார்ல் குஸ்தாவ் டையேல், சீக்ஃபிரிட் லியென்டார்ட், வால்டன் ஆகியோர் தமிழ்ப்பயிற்சி பெற்றவர்கள்.

டிரினிடாட்டில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் கற்க வாய்ப்பில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. டென்மார்க்கின் தலைநகரான ஹோபன்ஹேகனில் ஸ்காண்டிநேவியன் ஆசிய ஆராய்ச்சி நிலையம் (Scandinavian Institute of Asian Studies) என்று ஒன்று உள்ளது. சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆய்வு இங்கு நடைபெறுகின்றது. இவ்வாய்வுக்கு உறுதுணையாக டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் அங்கு பணியாற்றுகின்றார்கள். ஹோபன்ஹேகனில் ராயல் லைப்ரரி என்ற பெயரில் பெரிய நூல் நிலையம் உள்ளது. கீழைநாட்டுமொழிகளைச் சேர்ந்த நூல்கள் 2,75,000 உள்ளன. அவற்றில் தமிழ் நூல்களும் இருக்கின்றன.

பதினாறாவது நூற்றாண்டிலேயே தமிழ் நூல்களை அச்சிட்ட பெருமை போர்த்துக்கீசியரையே சாரும். லிஸ்பனிலுள்ள டாரிடாஸ் டோம்மோஸ் நூலகத்தில் பல தமிழ்க் கையெழுத்துப்படிகள் உள்ளதாக தனிநாயக அடிகள் குறிப்பிடுகின்றார்கள்.

பிளினி, மார்க்கோபோலா போன்றவர்களின் குறிப்புக்களிலிருந்து ரோமுக்கும் பழந்தமிழகத்திற்குமிடையே இருந்த தொடர்பை நன்கு அறிவோம். வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி இலக்கிய, இலக்கணத் துறையில் ஆற்றியுள்ள பணி தமிழரனைவரும் மனதாரப் பாராட்டிப் புகழவேண்டிய தொன்றாகும். ரோமாபுரி வீதிகளின் பெயரும் மதுரை மாநகர வீதிகளின் பெயரும் மாதங்களின் பெயராகயிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மற்ற நாட்டோடு ஒப்பிடுமிடத்து கனடா நாட்டில் தமிழ் படிக்க எந்த கல்வி நிலையத்திலும் சிறப்பான வாய்ப்பு வசதிகள் இல்லையென்றே கூறலாம். பிரிட்டீஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தி

லுள்ள நூல்நிலையத்தில் தமிழிலும் தமிழைப் பற்றி ஆங்கிலத்திலும் ஏறக்குறைய ஆயிரம் நூல்கள் உள்ளன. பிரெண்டா இ. எப். பெக் எனும் அம்மையார் 'தமிழ் நாட்டின் பண்பாடு' என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். கனடா நாட்டில் தமிழ்ப் பயிற்சிக்கு வாய்ப்பு இல்லையெனினும், கனடா நாட்டைச் சார்ந்த தமிழில் ஆர்வம் உள்ளோர்கள் நமது நாட்டிற்கு வந்து மதுரையிலும் சென்னையிலும் தங்கித் தமிழ் படித்துச் செல்கின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. வருங்காலத்தில் இந்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு நிச்சயம் வாய்ப்பு இருக்குமென நம்புகிறோம். அந்நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதையும் உணரமுடிகிறது.

மொரிஷியஸ் நாட்டில் வாழும் ஒன்பது இலட்சம் மக்களில் ஒரு இலட்சம் பேர் தமிழர்கள். 200 ஆண்டுகளுக்கு முன் அங்கு குடியேறினார்கள். தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 275 தமிழாசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இரண்டு கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. நூற்றுக்கணக்கான கோயில்களும் உண்டு. அங்கு வாழும் தமிழர்கள் தமிழை மறவாது காப்பதற்குத் தமிழக அரசு தமிழ் நூல்களையும் தமிழ் ஆசிரியர்களையும் அனுப்பி ஆவன செய்வதாக அண்மையில் அங்கு சென்ற கல்வி அமைச்சர் அரங்கநாயகம் குறிப்பிட்டுள்ளார்கள். 1868-ம் ஆண்டு தமிழிலேயே செய்தித்தாள் வெளிவந்ததாக தனிநாயக அடிகள் குறிப்பிடுகின்றார்கள். ஒரு காலத்தில் மொரிஷியஸ் தீவில் தமிழர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்ததாக நாம் அறிகிறோம்.

பீஜித் தீவில் ஏறத்தாழ 70,000 தமிழர்கள் வாழ்கின்றனர். ஆறு பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் நடத்தும் நூலகத்தில் இரண்டாயிரம் தமிழ் நூல்கள் இருக்கின்றன. தமிழர்களது விழாக்களை பீஜித் தமிழர்களும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தீமிதி விழாவும் நடைபெறுகின்றது. திருக்குறளை பீஜி மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். பீஜித் தீவில் வாழும் தமிழர்கள் தமிழை மறவாது காக்க, தமிழக அரசு தமிழ் நூல்களையும் தமிழாசிரியர்களையும் அனுப்பி ஆவன செய்ய வேண்டும். பீஜித் தமிழர்கள் பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றில் காட்டும் அக்கறையை மொழியில் காட்டவில்லை என வருந்த வேண்டி உள்ளது.

செனகல் நாட்டின் தலைநகரான டாக்கரில் திராவிட இயல் கல்வியை டாக்டர் உபாத்தியாயா என்பவர் கற்பிக்கின்றார். அண்மைக் காலமாக திராவிட மொழிகளுக்கும் ஆப்பிரிக்க மொழிகளுக்கும் உள்ள வரலாற்று மொழியியல் தொடர்புகளை ஆராய முற்பட்டுள்ளனர். செனகல் நாட்டைச் சார்ந்த இரு ஆராய்ச்சியாளர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் திராவிட மொழிகளுக்கும் ஆப்பிரிக்க மொழிகளான உலோப் (Wolot), புலார் (Pular) மொழிகளுக்குமிடையே உள்ள உறவை ஆராய்ந்து, டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். ஆப்பிரிக்க மக்களின் பண்பாட்டிற்கும் திராவிட மக்களின் பண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாமென இனவியலாளர்கள் கருதுகின்றனர். சமூக-பண்பாட்டு-மொழியியல்-வரலாறு-தொல்பொருளாய்வு ஒன்றை பரந்த அளவில் மேற்கொண்டால், இரு நாட்டினர்க்குமிடையே உள்ள அனைத்து உறவுகளையும் அறுதியிடலாம். டாக்டர் அறவாணன் அவர்கள் இரு நாட்டினர்க்கும் இடையே உள்ள சில ஒற்றுமைக் கூறுகள் குறித்துக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அந்நாட்டின் அதிபராயிருந்த செங்கோர் அவர்களே இத்துறையில் முனைந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். அவரது ஆய்வு வெளிவரின் பல உண்மைகள் வெளிஉலகுக்குத் தெரியவரும். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடே அங்குதான் நடப்பதாக இருந்தது. பல்வேறு சூழ்நிலை காரணமாக அஃது தமிழகத்திலேயே நடைபெற வேண்டியதாயிற்று. ஆப்பிரிக்க நாட்டு இளைஞர்கள் இத்துறையில் ஆர்வத்தோடு ஆய்வு செய்துவருகின்றார்கள் என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

சென்ற நூற்றாண்டில் தமிழர்கள் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார்கள், குழந்தைகளுக்கு வீட்டிலேயே தமிழ் கற்றுக் கொடுத்தனர். பல அமைப்புக்களின் சார்பாக தமிழ்ப் பள்ளிகள் உருவாயின. தமிழ் நாட்டிலிருந்து தமிழ் நூல்களை வரவழைத்து கல்வி கற்பிக்கத் தொடங்கினார்கள். தமிழர்களுக்குச் செய்தி வழங்க சி. விருத்தாசலம் பிள்ளை என்பவர் 'விவேகபானு' என்ற பத்திரிகையைத் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வந்தார். அவர் பத்திரிகை நடத்தியதோடு தமிழர்களுக்கு தமிழும் கற்பித்து வந்தார். பின்னர் இப்பத்திரிகை நின்ற பிறகு இராமசாமி, முனுசாமிப்பிள்ளை ஆகியவர்கள் இணைந்து 'செந்தமிழ்ச் செல்வன்' என்ற இதழை நடத்

தினர். தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் தெருக்கூத்து போன்றவற்றையும் நடத்திக்கொண்டு வருகின்றனர். தமிழ் கற்பதில் ஆர்வமும் பெருகி வருகின்றது. தமிழ் மாநாடு நடத்துவதன் மூலம் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சியையும் தமிழுக்கு மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி வருகின்றனர். டர்பன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியலுக்கென தனியொரு துறை உண்டு. தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் அண்ணல் காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்ததையும் தில்லையாடி வள்ளியம்மை போன்ற மங்கையர் திலகங்கள் அங்கே இந்தியருக்காக உரிமைக்குரல் எழுப்பியதையும் நாம் எண்ணி எண்ணி இன்னும் இறும்பூது எய்துகின்றோம்.

ஜப்பான் நாட்டுத் தலைநகரான டோக்கியோவில் கிழக்காசியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் (Centre of East Asian Cultural Studies) தமிழ்க் கல்விக்கு மிகுந்த வாய்ப்புண்டு. இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் நொபுருகரஷிமா என்பவர் சோழ வரலாற்றை ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் க்யோடா பல்கலைக்கழகத்துடனும் தொடர்பு கொண்டு பணியாற்றுகின்றார். தமிழ் தெலுங்குமொழி அறிந்த சுப்பராயலு தென்கிழக்காசிய நிறுவனத்தில் ஆய்வாளராகப் பணியாற்றுகிறார். தென்னிந்தியத் தத்துவம், தென்னிந்திய வரலாறு குறித்த ஆய்வுகள் க்யோடா பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றன. இலங்கைத் தமிழ் இலக்கியம் குறித்து திருமதி கதிர்காமர் இங்கு ஆய்வு நிகழ்த்துகிறார். டோக்கியோ பல்கலைக்கழகத்திலும் க்யோடா பல்கலைக்கழகத்திலும் உள்ள நூலகங்களில் தமிழில் நிறைய நூல்கள் உள்ளன. தமிழ்பற்றிய நூல்களும் உள்ளன. ஓரியண்டல் லைப்ரரி என்ற நூலகத்திலும் தமிழ்நூல்கள் உள்ளன. அண்மையில் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் ஜப்பான் நாட்டு பேரறிஞர் ஒருவர் ஜப்பான் மொழிக்கும் தமிழ்மொழிக்குமுள்ள உறவினைச் சுட்டிக்காட்டி, ஆய்வுக்கட்டுரையொன்று படித்தார். இவரது ஆராய்ச்சியைக் குறித்து மொழியியல் பேரறிஞர்கள் இத்துறையில் மேலும் ஈடுபட்டால், மொழியியல் உண்மைகள் பல வெளிவர வாய்ப்பிருக்கும். அந்நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதையும் உணர்கிறோம்.

கயானா நாட்டில் வாழும் தமிழர்கள் தமிழர் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். வளர்ந்துவரும் இளைய சமுதாயம் தாய்மொழி யான தமிழைக் கற்றுக்கொள்ள விரும்புகின்றனர். அவ்விருப்பத்தை நிறைவேற்றுவது தமிழக அரசினரது கடமையாகும். தென் வியட் நாமிலும் தமிழ் முஸ்லீம்களும் செட்டியார்களும் தமிழ் பேசுகின்றனர். இவர்களுக்கென வெவ்வேறு கோயில்களும் உண்டு. இங்கே பல தமிழ்ச் சங்கங்களும் உண்டு. மார்ட்டினிக் தீவில் வாழும் தமிழர்கள் காரைக்கால், பாண்டிச்சேரியிலிருந்து சென்றவர்கள். இங்கே வாழும் தமிழர்கட்கு தமிழ்க்கல்விக்கு வாய்ப்பளிக்காவிட்டால், தமிழர் தமிழ் என்ற உணர்வையே மறந்துவிடுவார்கள் போலும். கயானா, தென் வியட்நாம், மார்ட்டினிக் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கட்கு தமிழ் கற்கும் வாய்ப்புக்களை உருவாக்குவது மிக இன்றியமையாதது. உலகில் வாழும் மனித இனத்துக்கு தனது தாய்மொழியைப் படித்து தாய்மொழியில் அறிவுபெற வாய்ப்பும் உரிமையும் இருக்கவேண்டும். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழையே மறந்துவிடும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சவேண்டி உள்ளது. இவர்களுக் கெல்லாம் தமிழ்க் கல்வி வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல் நமது கடனாகும்.

பர்மாவிலும் சென்ற நூற்றாண்டே தமிழர்கள் குடியேறினர். பர்மாவில் சிவன் கோயில்கள், முருகன் கோயில்களைக் காணலாம். அந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தமிழ் மக்கள் உழைத்த உழைப்பு கொஞ்சநஞ்சமல்ல. ரங்கூனிலுள்ள தாகூர் கல்லூரியில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. பர்மாவையே வளங்கொழிக்கும் நாடாக் கிய தமிழினம் உலகப்போரின்போது தாயகத்திற்கு அகதிகளாகத் திரும்பவேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

தாய்லாந்து நாட்டிற்கும் தமிழகத்திற்கும் மிகநீண்ட காலமாகவே தொடர்புண்டு. சோழ மன்னர் காலத்தில், தமிழரசர்களின் செல் வாக்கு இங்கு ஓங்கியிருந்தது. மன்னர்களின் முடிசூட்டு விழாவின் போது தமிழ்ப் பாடல்களைப் பாடுவது ஒரு வழக்கமாகயிருந்தது தேசீய ஊஞ்சல் திருவிழா திருப்பாவை - திருவெம்பாவை பாடலுடன் கொண்டாடப்பெற்றது. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் எழுதிய'சயாமில்

திருவெம்பாவை திருப்பாவை’ என்ற நூலில் இதனைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்கள். ஸோங்க்ரான் என்ற அறுவடைத் திருவிழா நடைபெறுகின்றது. தமிழிலேயே மந்திரங்கள் ஓதப்படுகின்றன. மணிமேகலைத் தெய்வ வழிபாடு தாய்நாட்டில் இருந்ததாக தனிநாயக அடிகளார் குறிப்பிடுகின்றார்கள். வட்ஃபிராகீயோ ஆலயத்தைச் சுற்றியுள்ள இராமாயணக் காட்சிகள் இந்தியாவுக்கும் தாய்லாந்திற்கும் உள்ள பண்பாட்டு உறவை எடுத்துக் காட்டுகின்றன. தமிழோடும் தமிழரோடும் தமிழ்ப் பண்பாட்டோடும் தொடர்புடைய இந்நாட்டில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு ஏற்படுத்தினால் இன்னும் பல உண்மைகள் வெளி உலகுக்குத் தெரியவரும்.

இந்தோனேஷியாவுக்கும் தமிழகத்திற்கும் நீண்ட காலமாகவே தொடர்பு உண்டு. இந்தோனேஷியாவிலுள்ள சாவகம் தமிழகத்தோடு நெடுங்காலமாகவே தொடர்பு கொண்டிருந்த தீவு. அங்கு வாழும் காரோபட்டக் இனத்தவர்களின் உட்பிரிவுகள் சேர, சோழ, பாண்டியர், கலிங்கர், மலையாளியர் என்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுமத்திராவிலுள்ள லாராயொங்ராங் எனுமிடத்திலுள்ள ஆலயச் சிற்பங்கள் குறிப்பாக அகத்தியர், சிவன், நந்தி முதலியன தமிழ் நாட்டிற்கும் இந்தோனேஷியாவுக்குமிடையேயுள்ள பண்பாட்டை உறவை பறைசாற்றுகின்றன. இந்தோனேஷிய மொழியில் காவலர், தோழன் முதலான தமிழ்ச் சொற்களைக் காணலாம். சாவகத் தீவிலுள்ள மிகப் பழைய எழுத்துச் சான்று சிறந்த எழுத்துக்களால் எழுதப்பட்ட கல்வெட்டுக்களாகும். சிறந்த எழுத்துக்கள் தென்னிந்தியாவிலிருந்தே இந்தோனேஷியாவிற்குச் சென்றன என்பதை வரலாற்றாசிரியர்கள் ஒத்துக்கொள்கின்றனர். பல வடமொழிச் சொற்கள் கூட தமிழ் மொழிமூலமே இந்தோனேஷிய மொழியில் நுழைந்திருக்க வேண்டுமென மொழியியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சுமத்திரா தீவின் வடபகுதியில் மெடான் என்ற நகரைச் சுற்றி தமிழர்கள் வாழ்கின்றனர். மாரியம்மன் கோவில் சார்பில் தமிழ்ப் பள்ளியும் நடத்தி வருகின்றனர். தேவார, திருவாசகங்களைப் பாடி வழிபாடு நடத்துகின்றனர். இந்தோனேஷியாவின் தலைநகரான ஜாகர்த்தாவிலுள்ள மத்தியப் பல்கலைக்கழகமான இந்தோனேஷியப் பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை பேராசிரியர் பதவி ஒன்று உள்ளது. அந்தப் பதவியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச்

சார்ந்த டாக்டர் செ. வை. சண்முகம் அவர்கள் இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி தமிழ் கற்பித்தார்கள். தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் மூலம் தமிழ் பற்றிய அறிவை ஓரளவு ஊட்டினார். பல தமிழ் நூல்களும் தமிழ் பற்றிய ஆங்கில நூல்களும் இப்பல்கலைக்கழக நூல் நிலையத்தில் உள்ளது. அங்குள்ள வரலாற்றுத்துறை, இலக்கியத்துறை ஆசிரியர்கள் தமிழ் இலக்கியங் களைக் கற்றுக்கொள்ளவும் தெரிந்துகொள்ளவும் ஆர்வம் உடைய வராக இருக்கின்றனர். நிரந்தரமாகத் தமிழ்ப் பேராசிரியரை அங்கு நியமிக்க மத்திய அரசு ஆவன செய்யவேண்டும். இந்தோனேஷிய மொழியில் தமிழ்ச் சொற்கள் பற்றியும் 'Indonesian Studies' என்ற நூலில் செ. வை. சண்முகம் அவர்கள் விரிவாக எழுதியுள்ளார்கள். இந்தோனேஷியாவில் தமிழோடு ஒப்புநோக்கி ஆராயத்தக்க மொழிக் கூறுகளையும் தமிழகப் பண்பாட்டோடு ஒப்புநோக்கி ஆராயத்தக்க பண்பாட்டுக் கூறுகளையும் ஏராளமாகக் காணலாம். இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டால் நமது பழைய வரலாறுகள் மேலும் விளக்கம் பெறும் என நம்புகிறோம்.

மேலை நாடுகள் தமிழ் மொழி படிப்பிலும் தமிழ் இலக்கியப் படிப்பிலும் தமிழ் இலக்கணப் படிப்பிலும் தமிழ்நாட்டு வரலாற்றுப் படிப்பிலும் அக்கறை காட்டி வருவதைக் காண்கிறோம். அயல் நாடு களில் வாழும் தமிழர்கள் தாங்கள் வாழும் நாட்டையே தாயகமாகக் கருதி, தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மறவாதவர்களாக வாழ் வதோடு அந்தந்த நாட்டு மக்களோடு ஒன்றி ஒத்துழைக்கும் மக்களாகவும் இருக்கவேண்டும். இந்திய நாட்டைப் பற்றி அறிந்து கொள்வதற்கு சமஸ்கிருதம் மட்டும் பயின்றால் போதாது என்ற பெரியதோர் உண்மையை மேலை நாட்டினர் இன்று கண்டுள்ளனர். இந்திய நாகரிகத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமானால் அதிலும் குறிப்பாகத் தென்னிந்திய நாகரிகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் தமிழைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை உருவாகி உள்ளது. தெலுங்கு மலையாளம் போன்ற மொழிகளைப் படிக்கின்ற நேரத்திலும்கூட வடமொழியின் செல்வாக் கினை உணர்ந்து நிற்கின்ற அதே நேரத்தில் தமிழ் மொழியின் தனிப் பண்பை உணர்ந்து வடமொழியும் தமழ் மொழியும் இந்திய நாட்டின் இரு கண்கள் எனக் கருதுகின்ற நிலையினை நாம் காண்

கிறோம். இந்நிலையில் தமிழ் அறிஞர்களின் ஆராய்ச்சிகளையும் தமிழ் மொழிப் படிப்பை எவ்வாறு பிற நாடுகளில் வாழவைப்பது, வளரவைப்பது என்ற நிலையில் கடைப்பிடிக்க வேண்டும். தமிழியல் பற்றிப் பிற மொழிகளிலுள்ள நூல்களெல்லாம் தொகுக்கப்பட வேண்டும். பிறநாட்டு நூலகங்களில் உள்ள சில அரிய நூல்களை மீண்டும் வெளியிடவேண்டும். சிறந்த தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். இருமொழி அகராதிகளை உருவாக்க முயலவேண்டும். இஃது தமிழ் கற்கும் பிற மொழியாளர் களுக்குப் பெருந்துணையாக இருக்கும். மேலை நாட்டில் வாழும் தமிழ் படிக்க வாய்ப்பில்லாத தமிழர்களுக்கு தமிழ் படிக்கும் வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும். அண்மையில் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில், இப்பொறுப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்ள இருப்பதாக அறிவிக்கப் பட்டது. உண்மையிலேயே இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தமிழோடும் தமிழகத்தோடும் தொடர்புடைய பண்பாட்டுக் கூறுகளை யும் இலக்கிய இயல்புகளையும் ஆராய்வதற்கான ஆர்வம் உலக அறிஞர்களிடையே பொங்கி வழிவதை மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் கண்டோம். அந்த ஆர்வத்தை செயல் திட்டமாக உருவாக்கவேண்டும்.

ஆங்கில மொழி தெரிந்தவர்களுக்கும் பிறமொழி தெரிந்தவர்களுக் கும் தமிழ் மொழி கற்பிப்பதற்குரிய பாடநூல்கள் எழுதப்பட வேண்டும். அம்மொழிகளுக்கும் தமிழ் மொழிக்குமிடையே உள்ள வேற்றுமையை உணர்ந்து அதை நெஞ்சில் நிறுத்திப் பாடப் புத்தகங் களை அமைத்து வேற்றுமை ஒற்றுமைகளை எளிதிலே கற்பிப்பதற் குரிய வழிமுறைகளை ஆராய்தல் வேண்டும். தமிழைப் பற்றியும் தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றியும் மேலை நாட்டார் அறிந்துகொள்ளும் முறையில் பாடப் புத்தகங்கள் அமைய வேண்டும். அவர்களது சிந்தனையை வளர்க்கும் விதத்தில் அமைந் தால் நல்லதோர் எதிர்காலத்தை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு நடந்த இவ்வாண்டில்

'தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'

என்ற பாரதியின் கனவு நனவாகி வருவதைக் காண்கிறோம். அன்னை தமிழ், தமிழ் நாட்டில் மட்டுமின்றி பிற நாடுகளிலும் பரந்து வாழ்தல் வேண்டும் என்ற சித்தாந்தம் நம் அறிஞர்களிடையே வளரவேண்டும். எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் தமிழ் என்ற நிலை உருவாகவேண்டும். உலகு நோக்குடைய தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து பண்பாட்டுத் தூதர்களாக மேலைநாட்டிற்குச் சென்று உழைக்க முன்வரவேண்டும். அவர்களின் அயராத உழைப்பில்தான் அன்னை தமிழுக்கு அரியாசனம் ஏற்படமுடியும்.

மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

கோதண்டராமன், பொன். 1976 **உலகில் தமிழும் தமிழரும்**, சென்னை.

சுப்பிரமணியன், ச. வே. 1978 'அயல் நாடுகளில் தமிழ் வளர்ச்சி' **சுடர்மலர்**, 19, 26, தில்லித் தமிழ்ச்சங்கம் மலர் 23, புதுடெல்லி.

தனிநாயகம், எஸ். 1974 **ஒன்றே உலகம்.** சென்னை.

மீனாட்சிசுந்தரனார், தொ. பொ. 1971 'தமிழகத்திற்கு அப்பால் தமிழின் செல்வாக்கு' தில்லித் தமிழ்ச்சங்கம் வெள்ளிவிழா மலர் 33-38, புதுடெல்லி.

——— 1973 **தமிழும் பிற பண்பாடும்**, சென்னை.

Thaninayakam, S. 1968 *Tamil Studies Abroad,* Kualalumpur.

மொழியியல் 4.1 & 2 (1980)

தக்கனி உருதில் தமிழின் செல்வாக்கு

எஸ். காதிர்மொஹிதீன்

0. 'தக்கனி' என்றால் தமிழில் தென் திசையைக் குறிக்கும். தென்மாநிலங்களாகிய தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, கர்நாடகா மக்களால் பேசப்படும் உருதுமொழி 'தக்கனி உருது' என வழங்கப் படுகிறது. இம்மாநிலங்களில் உள்ள முஸ்லீம் மக்களாலேயே பெரும் பாலும் இம்மொழி பேசப்படுகின்றது.

'தக்கனி உருது' இந்தோ-ஆரிய இனக்குழுவைச் சார்ந்ததாக இருப்பினும், இதனைப் பேசும் மக்கள், தென்திராவிட மொழிகளில் தலையாய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி பேசும் மக்களுடனேயே சூழப்பட்டுள்ளனர். எனவே, இம்மக்கள் இருமொழியாளராகவோ (Bilingual) அல்லது பன்மொழியாளராகவோ (Multilinguals) உள்ளனர். "வேறு ஒரு மொழியோடு தொடர்பு கொண்டுள்ள இருமொழியாளரது பேச்சு வழக்கில் உள்ள, அவ்விரு மொழிகளது விதிகளினின்றும் மாறுபட்ட வழக்காறுகளைத் தலை யீட்டுக் கொள்கையின் (Interference phenomenon) விளைவாகக் கருதலாம். என வேன்ரீச் (Uriel Weinreich, 1963, பக். 1) என்பார்

குறிப்பிடுவார். தக்கனி உருதில் சொல் அளவிலும் இலக்கண அளவிலும் தமிழின் செல்வாக்கினால் ஏற்பட்ட சில கூறுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

1. சொற்கள்

வேற்றுமொழித் தொடர்பினால் ஏற்படுகின்ற பல்வேறு விளைவுகளில் மிகவும் வழக்கில் வருவனவும் எளிதில் உணரக்கூடியவையுமாக இருப்பவை வேற்றுமொழிச் சொற்களே ஆகும். பல வழிகளில் நுழையும் இச்சொற்கள் தனித்தும், கூட்டுச் சொற்களாகவும் இருக்கும்.

1.1. தனிநிலைச் சொற்கள்

ஒரு மொழியின் சொல் இன்னொரு மொழியில் அப்படியே வழங்கப்படுதல் உண்டு. தமிழ்ச் சொற்கள் மாறுபாடின்றி தக்கனி உருதில் அப்படியே வழங்கப்படுதலைக் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகள் விளக்கும்.

தமிழ் [த]	தக்கனிஉருது [த.உ.]	உருது [உ]	பொருள்
புள்ளி puḷḷi	புள்ளி puḷḷi:	நொஹதா noxta:	'புள்ளி'
தோட்டி to:ṭṭi	தோட்டி to:ṭṭi	கலாலஹோர் hala:lxo:r	'கழிவறையைச் சுத்தம் செய்யும் தொழிலாளி'
காயலா ka:yala	காயலா ka:yla	பீமாரி bi:ma:ri	'நோய்'
சுத்தி sutti	சுத்தி sutti:	ஹத்வடி hatvadi:	'சுத்தியல்'

கீழ்வரும் தமிழ்ச் சொற்கள் தக்கனி உருதில் நுழையும்பொழுது சொற்கடை உயிரொலியை இழக்கின்றன; அல்லது அவ்வுயிரொலி 'அ'வாக மாறுகிறது.

தமிழ்	தக்கனிஉருது	உருது	பொருள்
சில்லரை cillaray	சில்லர் cillar	ச்சுத்தா chuṭṭa	நாணயமாற்று

காசு	காஸ்	பைசா	நாணயம்
ka:su	ka:s	puysa:	
குப்பெ	குப்பா	த்தேர்	குப்பை
kuppe	kuppa:	ḍhe:r	
வடெ vaḍe	வடா vaḍa:	படா baḍa:	வடை
மூடெ mu:ṭe	மூடா mu:ṭa:	போரா bo:ra:	சாக்கு மூட்டை

1.2. மொழிபெயர்ப்புக் கடன்

ma:mbu	a:mka:	phu:l	bavr	
மாம்பூ	ஆம்கா	ப்பூல்	பவர்	மாமரப்பூ
va:lmiḷaku	dumki:	kaba:bci:ni:		
வால்மிளகு	ka:limirci;	கபாப்சீனீ	வால்மிளகு	
	தும்கீ காலிமிர்சி			
niccaya	ra:zi:ke:pa:n	maṅgni:		
ta:mbu:lam	ராஜீ கே பான்	மாங்னீ	மணவினை உறுதிப்பாடு	
நிச்சயதாம்பூலம்				
ti:ppeṭṭi	aṅga:rḍabba:	diya:sala:yi:		
திப்பெட்டி	அங்கார்தப்பா	தியாசலாயி	நெருப்புப்பெட்டி	
periyappa	ba:ḍe:ba:	ta:ya:		
பெரியப்பா	படே பா	தாயா	பெரியப்பா	

உருது மொழியில், ஆறாம் வேற்றுமை தனக்குப் பின்னே வரும் சொல்லின் பால், எண் இவற்றை ஏற்கும். எனவே ஆம்கா ப்பூல் a:mka: phu:l என்பதில் ப்பூல் (பூ) phu:l ஆண்பாலாதலால், ஆம்காவில் கா a:mka: - ka: என்ற ஆறாம் வேற்றுமை உருபு [ஆண்பால்] ஏற்பட்டது. இதனைப் போன்றே காலிமிர்சீ பெண் பாலாதலால் இதற்கு முன்வந்த சொல்லில் 'கீ' ki: [தும்கீ ki] என்ற ஆறாம் வேற்றுமைப் பெண்பால் விகுதி வந்துள்ளது. பான் pa:n ஆண்பால் பன்மை; எனவே முன்சொல்லில் 'கே' ke:' என்ற ஆண்பால் பன்மை விகுதி ஆறாம் வேற்றுமையில் வந்துள்ளது.

1.3. கலப்புக் கடன் (loan blend)

கீழ்க்கண்ட தமிழ்ச் சொற்களின் முன்பகுதி தக்கனி உருதில் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றின் பிறபகுதிகளுக்கு ஏற்ற உருதுச் சொற்கள் சேர்க்கப்படுகின்றன.

த	த.உ.	பொருள்
அகத்திக்கீரை akattiki:re	அக்தி கீ பாஜீ akti: ki: bha:ji:	அகத்திக்கீரை
முருங்கைக்காய் muruṅkaikka:y	முங்கி கீ ப்பல்லி muṅgi ki: phalli:	முருங்கைக்காய்

கீழேவரும் எடுத்துக்காட்டிகளிலே, தமிழ்ச்சொற்களின் பிறபகுதி 'ம்' கெட்டு, அ, ஆவாக மாற, ஏற்றுக்கொள்ளப்பட்டு, முற்பகுதி கட்கு ஏற்ற உருதுச் சொற்கள் சேர்க்கப்படுகின்றன.

த	த.உ.
kuḷir ka:lam குளிர்காலம்	t^haṇka:la தண் காலா
veyil ka:lam வெயில்காலம்	d^hupka:la த்துப் காலா

2. இலக்கணத்தில்

2.1. முதல் வேற்றுமை உருபு இழத்தல்

உருது மொழியில் இறந்த காலத்தில் செயப்படுபொருள் குன்றா வினை **(transitive verb)** வந்தால் எழுவாய் வேற்றுமையில் பெயர்ச் சொற்கள் 'நே' **ne:** என்ற உருபை ஏற்கும். இச்சூழலில் வரும் வினைகள் பால், எண்ணில் செயப்படுபொருளோடு இணங்கிவரும். எழுவாயோடு இணங்கி வாரா.

எ. கு: உ

ra:mne: ro:ṭi k^ha:yi:
ராம்னே ரோட்டி காயீ — இராமன் ரொட்டி சாப்பிட்டான்

ra:mne: a:m k^ha:ya:
ராம்னே ஆம் காயா — இராமன் மாம்பழம் சாப்பிட்டான்.

ஆனால், தக்கனி உருதில் இந்த அமைப்பு முறை அப்படியே மாறி விடுகிறது. தக்கனி உருதில் செயப்படுபொருள் குன்றாவினை எந்தக்காலத்தில் வந்தாலும் திணை, பால், எண் – குறிப்பதில் எழுவாயுடன்தான் பொருந்துகிறது; செயப்படுபொருளோடு பொருந்துவதில்லை. இந்த அமைப்பு முறை திராவிடமொழி அமைப்பு முறையோடு ஒட்டியது. தமிழின் தாக்குதலினால் விளைந்த விளைவு இது.

த.உ

ra:m ro:ṭi: kʰa:ya:
ராம் ரோட்டி காயா — இராமன் ரொட்டி சாப்பிட்டான்.

ra:m a:m kʰa:ya:
ராம் ஆம் காயா — இராமன் மாம்பழம் சாப்பிட்டான்.

2.2. நான்காம் வேற்றுமை: திசைப் பொருள்

திசையைக் குறிக்க பெயர்ச்சொல்லுடன் எவ்வித உருபையும் உருது மொழியில் இணைப்பதில்லை; ஆனால், தக்கனி உருதில் இணைக்கப்படுகிறது. தமிழின் நான்காம் வேற்றுமை உருபாகிய –கு– ku: தக்கனி உருதின் திசைச் சொற்களுடன் இணைக்கப்படுகின்றது. இது தமிழின் தொடர்பால் ஏற்பட்ட விளைவாகும்.

உருது

vo: gʰar gaya:
வோ கர் கயா — அவன் வீட்டிற்குச் சென்றான்

vo: madra:s gaya:
வோ மத்ராஸ் கயா — அவன் மதராசுக்குச் சென்றான்

த.உருது

un gʰarku: gaya:
உன் கர்கு கயா — அவன் வீட்டிற்குச் சென்றான்

un madra:sku: gaya:
உன் மத்ராஸ்கு கயா — அவன் மதராசுக்குச் சென்றான்

2.3. நான்காம் வேற்றுமை: உதவிப் பொருள்

உருது மொழியில் உதவியைக் குறிக்க, மதத்கர் உதவி செய் என்ற வினைக்கு முன்னர் பெயர்ச் சொல்லுடன் ஆறாம் வேற்றுமை உருபு வருகிறது. ஆனால் தக்கனி உருதில் இச்சூழலில், நான்காம் வேற்றுமை உருபு வருகிறது. இதுவும், தமிழின் செல்வாக்கினால் எழுந்த விளைவு ஆகும்.

உருது

tu:	uski:	madad kar	நீ அவனுக்கு உதவி செய்
தூ	உஸ்கீ	மதத் கர்	

நீ+அவன்+ஆறாம் வேற்றுமை உருபு உதவிசெய்

த.உருது

தூ	உஸே	மதத்கர்	நீ அவனுக்கு உதவிசெய்

நீ+அவன்+ நான்காம் வேற்றுமை உருபு உதவி செய்

2.4. எதிர்மறை ஏவல்

உருது மொழியில், ஏவல் வினைக்கு முன்னர், எதிர்மறையைக் குறிக்கும் 'மத்' mat உருபு வருகிறது. ஆனால் தக்கனி உருதில் 'நகோ' nako: என்ற எதிர்மறை உருபு ஏவல் வினைக்குப் பின்னர் வருகிறது. இம்முறை திராவிடமொழி அமைப்போடு இயைந்தது. இதனால், தக்கனி உருதில் சொல்லமைப்பு மாறிவிடுகிறது.

உருது:

tum	mat	ja:vo:	
தும்	மத்	ஜாவோ	— நீ போகாதே

த உருது:

tu:	ja:	nako:	
	ஜா	நகோ	— நீ போகாதே

2.5. வினையெச்சம்

ஒருவரிடமிருந்து விடைபெறும் பொழுது, உருது மொழியில் 'சல்தா ஹூ(ம்) – நான் போகிறேன், கியா ஹம் சலே(ம்)' – நாங்கள் போகலாமா?, 'பிதா லூ(ம்)'– போக அனுமதியுங்கள் போன்ற வழங்

குகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தக்கனி உருதில் 'நான் விடைபெறுகிறேன்' என்ற பொருளில் வரும் 'மை(ம்) mãy, ஜாகோ ja:ko:, ஆதூ(ம்) a:tu: என்ற வழக்கு 'நான் போய்வருகிறேன்' என்ற பொருளைத் தரும். இதில் 'ja:ko: 'ஜாகோ' வினையெச்ச மாகவும், 'ஆதூ(ம்)' - இறந்தகாலம் அல்லாத காலத்தைக் குறிக்கும் வினையாகவும் நிற்கின்றன. இத்தொடர் தமிழ் அல்லது தெலுங்கின் மொழி பெயர்ப்பாக இருப்பதைக் காணலாம்.

தமிழ்:

போயி வருகிரேன் / போயிட்டு வருகிறேன்.

திராவிட மொழி மக்களோடு ஏற்பட்ட பண்பாட்டுறவின் அடிப்படையில் இத்தொடர் அமைந்திருத்தலையும், தூய உருது மொழித் தொடரோடு தக்கனி உருதுவின் தொடர் மாறியிருத்தலையும் காணலாம்.

2.6 பெயரெச்சம்

உருது மொழியில் 'யார், எது, என்ன' என்ற பெர்ருள்களில் வரும் "ஜோ" jo: என்ற சார்பிடப் பெயர் (relative pronoun) எச்சத் தொடர்களில் [suordinate clause] வரும். இந்த எச்சத் தொடர்களில் வரும் 'ஜோ' jo: முற்றுத் தொடர்களில் (main clause) அவன், அவள், அது—என்ற பொருள்களில் வரும் "வோ vo:' என்ற சார்பிடப் பெயருடன் தொடர்ந்து செல்லும். கீழ்வரும் எடுத்துக்காட்டு இதனை நன்கு விளக்கும்,

1) kal	e:k	laḍka:	a:ya	நேற்று ஒரு பையன்
கல்	ஏக்	லட்கா	ஆயா	வந்தான்
2) vo:	me:ra	do:st	hay	அவன் என் நண்பன்
வோ	மேரா	தோஸ்த்	ஹை	

இவ்விரு தொடர்களையும் 'ஜோ' jo: என்ற சார்பிடப் பெயர் இணைத்து ஒரு தொடராக்குகிறது.

3) kal jo; laḍka: a:ya: vo: me:ra: do:st hay
கல் **ஜோ** லட்கா ஆயா **வோ** மேரா தோஸ்த் ஹை
= நேற்று **எந்த** பையன் வந்தானோ **அவன்** என்னுடைய நண்பன்

தக்கனி உருதில், பெயரெச்சமும் முற்று வினையும் அமைந்த தொடர்களில் உள்ள இறந்தகாலம் அல்லது இறப்பில்லா காலத்தைக் குறிக்கின்ற பெயரெச்சங்களில், தமிழில் வருவதைப் போல, இரண்டு காலங்களையும் குறிக்கின்ற "சோ" so என்ற பெயரெச்ச உருபு வருகிறது.

a:ya: so; admi:

a:ya:so:un } → ஆயா சோ அத்மீ — வந்த மனிதன்-இறந்தகாலம்
வந்தவன் } a:ta: so: admi:

ஆதா **சோ** அத்மீ — வருகின்ற மனிதன் – நிகழ்காலம்

இத்தொடர்களை, தமிழில் வருகின்ற பெயரெச்சத் தொடர்களோடு ஒப்பிட்டு நோக்குக.

வந்த பையன் — இறந்த காலம்
போகின்ற பையன் — நிகழ் காலம்

இறந்த காலத்திலும், நிகழ் காலத்திலும் வரும் இந்த இரண்டு தொடர்களிலும், 'அ' என்ற ஒரே பெயரெச்ச விகுதி இருத்தலைப் போலவே, தக்கனி உருதிலும் 'சோ' so: என்ற ஒரே பெயரெச்ச விகுதி இருத்தலைக் காணலாம். தூய உருது மொழியில் இல்லாத இத்தன்மை தக்கனி உருதில் இருப்பது தமிழ் போன்ற திராவிட மொழிகளின் செல்வாக்கினால்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

2.7. மேற்கோள் ஆட்சி

உருது மொழியில் முற்று வினையையும் எச்ச வினையையும் இணைக்கும் உருபாகிய 'கி' (complementizer) எச்ச வினைக்கு முன்னர் வரும். ஆனால் தக்கனி உருதில் karko: அல்லது kako: என்ற உருபு தமிழில் வரும் 'என்று' என்பதைப் போல, முற்று வினைக்கு முன்னரும் தொடருக்குப் பின்னரும் வருகிறது.

உருது:

ra:mne: kaha;ki vo: kal a:ye:ga:
ராம்னே ககா கி வோ கல் ஆயேஹா
= ராமன் நாளை வருவதாகச் சொன்னான்,

த.உருது:

ra:m sab:ã a:tũ: karko:. bo:lya:
ராம் சபா(ம்) ஆதூ(ம்) கர்கோ போல்யா
= ராமன் நாளை வருகிறேன் என்று சொன்னான்

தமிழிலும், தக்கனி உருதிலும் உள்ள எச்சத் தொடர்களில் "நாளை வருகிறேன்" — போன்ற மேற்கோள் தொடர் (Quotative sentence) அல்லது நேர்த்தொடர் (direct speech) இருத்தலைப் பார்க்கலாம். தமிழின் தொடர்பால் இத்தகைய மாற்றங்கள் உருது மொழியில் ஏற்பட்டு தக்கனி உருதுவாக மாறியுள்ளது.

2.8. கட்டுப்பாட்டு வினை

உருது மொழியில், கட்டுப்பாட்டு உருபு 'தோ' என்பதை எச்சத் தொடரில் சேர்ப்பதனால் கட்டுப்பாட்டுச் சொற்றொடர் (conditional sentence) உருவாக்கப்படுகிறது.

உருது

tu: a:ye:ga: to: mãy b^hi: a;vũ:ga:
தூ ஆயேஹா தோமை(ம்) பீ ஆவூங்ஹா
= நீ வந்தால் நானும் வருவேன்

ஆனால் தக்கனி உருதில் கட்டுப்பாட்டு உருபு 'கதோ' kato: என்பதைச் சேர்ப்பதனால் கட்டுப்பாட்டு வினை அமைக்கப்படுகிறது. இந்த 'கதோ' kato: என்பது தமிழில் உள்ள 'என்றால்' என்பதின் அப்பட்டமான மொழிபெயர்ப்பு ஆகும்.

த.உருது

tu: a:tu: kato: mãy bi: a:tũ
தூ ஆதூ(ம்)கதோ மை(ம்) பீ ஆதூ(ம்)
தமிழ்: நீ வருகிறேன் என்றால் நானும் வருகிறேன்.

முடிவுரை

தமிழ், தெலுங்கு போன்ற தென் திராவிட மொழிகளின் கூட்டுற வினால், மேலே குறிப்பிட்ட பல்வேறு வகை மாற்றங்கள் உருது

மொழியில் ஏற்பட்டு, 'தக்கனி உருது' என்று பெயரிட்டு அழைக்கும் அளவிற்கு உருதுமொழி பிரிந்து நிற்கிறது. ஆழ்ந்து நோக்கினால், இதனைப் போன்ற இன்னும் பல மாற்றங்களை நாம் காணக்கூடும்.

ஹிந்தித்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இக் கட்டுரையைத் தமிழாக்கம் செய்து உதவி செய்த திரு மா. அய்யாச்சாமி அவர்களுக்கும், திரு எம். ஞானம் அவர்களுக்கும் என் உளங் கனிந்த நன்றி.

தமிழ் ஆட்சிச் சொற்கள்

நம் பழைய இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் கணக்கற்ற ஆட்சிச் சொற்கள் காணக்கிடக்கின்றன. அவற்றை எடுத்துப் பயன் படுத்த வேண்டும். இல்லாத இடங்களில் புதியசொற்களை உருவாக்க வேண்டும். நமக்கு இது மிகவும் எளிது. அதுவும் இயலாத இடங்களில் பிறமொழி சொற்களைச் சில காலத்திற்கு ஏற்று பயன்படுத்திக் கொள்ளலாம். காலப்போக்கில் அவற்றையும் மாற்றிவிடவேண்டும். ஏனென்றால் ஆட்சிமொழி நமக்குத் தெரிந்த மொழி; பன்னெடுங் காலம் பழகிய மொழி.

கோ. முத்துப்பிள்ளை
அரியண்ணையில் அழகு தமிழ், சென்னை, 1974.

மொழியியல் 4.1 & 2 (1980)

இளம்பூரணர் உரை நுணுக்கம்

கே. வி. தாட்சாயணி

இளம்பூரணர் பண்டைத் தமிழிலக்கண நூலாகிய ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியப் பெருங்கடல் முற்றிலும் தம் அறிவாம் மத்திட்டுக் கடைந்து முற்பட இலக்கண வமுதம் ஈந்த பெருந்தகையாளர். இவர் இத்தகையரென்பது வேறு உரைகாரர் எவரையும் எடுத்துக் கூறாமை யானும், ஓரிடத்தும் பிறர் மதம் எடுத்துக் காட்டாமையானும் உறுதிப் படுகின்றது. இதுபற்றியே, இவரை '**உரையாசிரியர்**' என்று சிறப்புப் பெயரிட்டு வழங்குவர். பின்வந்த சேனாவரையர் நச்சினார்க்கினியர் போன்றவர்கள் இந்த இளம்பூரணர் கொள்கைகளை மறுத்துப் பேசுமவற்றில் சிற்சில அமைவுடையவாயினும், அவை "கட்டின வீட்டுக்குப் பணிக்குச் சொல்வார் பலர்" என்ற முறைமை பற்றியனவே.

இனி, சிலப்பதிகாரத்து வேனிற்காதை உரைத் தொடக்கத்து அடியார்க்கு நல்லார் "உரையாசிரியராகிய இளம்பூரண **அடிகள்**" என இவரைப் பேசியிருத்தலானும், அந்நூற்பதிகத் தொடக்கத்து உரையில் "அடிகள் என்றது துறத்தலின்" என அவரே எழுதி

யிருத்தலானும், இளம்பூரணவடிகள் துறவறம் பூண்ட செம்மலோர் என்பது பெறப்படும். இளம்பூரணர் என்ற இப்பெயர் இடுகுறி யன்றி காரணத்தால் வந்த பெயர் எனத் தோன்றுகிறது. இவர் பெயரை நோக்குமளவில் இவர் இளமையிலேயே பரிபூரண நிலையைப் பெற்றுப் பல கலைகளிலும் நுண்மாண் நுழைபுலமெய்தி ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராயிருந்தவரென்பதும் பெறப்படுகிறது. இளமையிலேயே தகுதி மிக்காரை அவர் பெயரோடு 'இள' என்ற அடைகொடுத்து வழங்குதல் பண்டைய மரபு என்பதை இளந்தத்தனார், இளவேட்டனார், இளம் பொன்வணிகனார் சாத்தன் கொற்றனார் முதலியவற்றால் உணரலாம். மற்றும் 'பூரணர்' என்பது 'நம்பி' என்றதன் பரியாயமாகும். இதனை 'என்னை விடான் நம்பி நம்பியே' (திரு. மொழி 1.10.8) என்பதற்கு அருளியுள்ள ஈடு கண்டு தெளியலாம்.

இனி இவரது காலத்தைப் பற்றி பல வகையாகக் கூறுவர் எனினும் சூளாமணியினின்று சில பாடல்களை இவர் உரையிற் காட்டிப் போந்தமையானும், இவர் உரையைத் தழுவியே பவணந்தியார் சில சூத்திரங்களைப் பார்த்துள்ளமையானும், சூளாமணியாசிரியராகிய தோலா மொழித் தேவர்க்குப் பின்னும் நன்னூல் யாத்த பவணந்தியார்க்கு முன்னும் இவரது காலம் என்பது பெறப்படுகின்றது. தோலா மொழித் தேவர் காலம் இன்றைக்கு ஆயிரம் யாண்டுகட்கு முன்னராகும். பவணந்தியார் காலம் அமராபரணம் சீயகங்கன் காலமாகிய கி.பி. 1210 ச் சார்ந்ததாகும். எனவே கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 12-ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தே இளம்பூரணர் வாழ்ந்தவர் என்பதை உணரலாம். இதற்கேற்ப, பதினோராம் திருமுறையைச் சார்ந்த மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலைப் பாட்டொன்று இவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. எனினும் இதற்குட்பட்டுள்ள இன்ன காலத்தினரென அறுதியிட்டு வரையறுத்துப் பேசுதற்குத் தக்க சான்று ஒன்றும் கிடைக்கவில்லை.

இனி, உரையாசிரியர் வகுத்த தொல்காப்பிய எழுத்ததிகார உரை நயத்தினைக் காணலாம். அந்நயங்களின் ஆழ் பொருளினை அனுபவித்துக் கொண்டு போவது தவிர போக்கிச் சொல்லப் போகாது என்பது தெளிவு. ஒருசில சான்றுகளால் இதனைக் காணலாம்.

தொடக்கத்தில் அவர் காட்டும் **முறையழகு** காணலாம். (1) முதலாவது **நூன்மரபிற்** கூறும் இலக்கணம் "மொழியிடை எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க" என்று கூறிய உரையாசிரியர் **மொழி மரபிற்** கூறுகின்றது "தனிநின்ற எழுத்திற்கன்றி மொழியிடை எழுத்திற்கென உணர்க" எனத் தெள்ளிதின் கூறியுள்ளார். இங்ஙனம் ஆசிரியர் உள்ளமறிந்து உரை வகுக்குங்கால் இவர் பிரித்துக் காட்டாதிருப்பின், இவ்வுண்மையறிவார் எவருமிலர்.

இரண்டாவதாக மொழிமரபின் முதற்கண் சார்பெழுத்துக்களைக் கூறத் தொடங்கும் சூத்திரங்கள் ஆறன் முகப்பிலும் இவர் திறம்படக் காட்டும் நிறுத்த முறை ஆசிரியர் உள்ளத்தை ஆடியிற் காட்டுவது போல் அமைந்துள்ளது. அஃதாவது குற்றியலிகரம் தனிமொழிக் கண் வருவதை முதற் சூத்திரத்திலும், புணர் மொழிக்கண் வருவதை 2-ம் சூத்திரத்திலும், குற்றியலுகரம் தனிமொழிக்கண் வருவதை 3-ம் சூத்திரத்திலும் புணர்மொழிக்கண் வருவதை 4-ம் சூத்திரத்திலும், ஆய்தம் தனிமொழிக்கண் வருவதை 5-ம் சூத்திரத்திலும், புணர் மொழிக்கண் வருவதை 6-ம் சூத்திரத்திலும் ஆசிரியர் தெளிவு படக் கூறியுள்ளார் என்பதாகும்.

இவ்வாறாக தொல்காப்பியச் சூத்திரங்களின் நிறுத்த முறையை இன்றியமையாவிடத்துப் படமெடுத்துக் காட்டுவதுபோல் காட்டிச் செல்லுங்கால், யாதேனும் தடை ஏற்படுவதுபோல் தோன்றினால் ஆங்குச் செப்பம் செய்து காட்டும் தகுதியழகு சொல்லுந்தரமன்று. உதாரணமாக:—

1) "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்" (மொழிமரபு-13)

அண்மையின் நூன் மரபின் வைக்க எனில் தன்னை யுணர்த்தாது வேறு பொருள் உணர்த்தும் சொல்நிலை போல 'ட ற ல ள' என்றது உயிர்மெய்யை யுணர்த்தாது தனி மெய்யை யுணர்த்தலானும், ஒற்றினை உயிர்போலச் சொல்லுகின்ற வழுவமைதியிலக்கணத் தானும் மொழிமரபின் கண்ணதாயிற்றென உணர்க" எனக் கூறிய தனால் உணரலாம். மற்றும்

"நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப" (தொகைமரபு-13)

என்ற சூத்திரத்தையடுத்து,

'ஆறனுருபினும் நான்கனுருபினும்' என்ற சூத்திரம் அமைக்கப் பட்டுள்ளது. ஈண்டு 'நான்கன்' உருபினை முற்கூறிப் பின்னரன்றோ ஆறனுருபு கூறுவது முறையாகும்; அங்ஙனமில்லையே என்ற வினா எழுதல் இயல்பு. ஆனால் தொல்காப்பியர் இப்படி அமைத்ததற்கு ஓர் உண்மையிருத்தல் வேண்டுமென்பதைத் தம் நுண்ணறிவால் உணர்ந்த இளம்பூரணர், காரணத்தை வெகு திறம்பட முற்சூத்திரத்து உரையிற் காட்டுகிறார்; அதாவது, மேலைச் சூத்திரத்து ஆறனுருபிற் கூறியதனால் ஒற்று இரட்டுதல் **'உயிர் முதன் மொழிக்கண்ண தென்று** கொள்க' என்று இங்ஙனம் வரும் உரை நயங்கள் கூர்ந்தறியும் புலவர் பெருமக்கட்கு அருவிருந்தாகும். அடுத்து உருபியல் தொடக்கத்தின்கண் முதலாவது சூத்திரங்களிலே சாரியைப் பேற்றைப் பற்றிப் பேசி 8-ம் சூத்திரத்திலேயும் 'ஓகார விறுதிக்கு ஒன்னே சாரியை' எனப்பேசி இடையே '7-ஆம் சூத்திரத்து 'நீ யென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்', ஆவயின் னகரம் ஒற்றாக் கும்மே'' — என எழுத்துப் பேற்றைக் கூறியது அடைவுக்குப் பொருந்துமா எனிற் ஐயம் தோன்றுகிறது. அதனை நீக்க இளம் பூரணர் "சாரியைப் பேற்றிடை எழுத்துப் பேறு கூறியது, மூன்றாம் உருபின்கண் சாரியை பெற்றே வந்த அதிகாரம் மாற்றி நின்றது'' என்று கூறியது கற்றோர்க்குக் கழிபேருவகை தரும்.

இனி, சூத்திரப் பொருளினை முன்பின் ஆய்ந்து உரைவகுக்கும் பெற்றிமையையும் நம் உரையாசிரியர்பாற் காணலாம். எடுத்துக் காட்டாக புணரியலில்

> 'ஆறனுருபின் அகரக் கிளவி
> ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்'' (13)

என்ற சூத்திரத்து 'இஃது ஆறாவதற்குத் தொகைமரபினை நோக்கிய தோர் கருவி கூறுதல் நுதலிற்று' என எழுதியுள்ளதைக் காணலாம். இங்ஙனம் மாட்டேறு பூட்டியிருப்பதை நோக்குங்கால், இளம்பூரணர் முன்பின் சூத்திரங்களில் ஆழ ஆழச் சிந்தனை செய்து பின்னரே இவ்வுரையினைத் தெள்ளிதின் வரைந்திருத்தல் வேண்டுமென்பது தெரிகின்றது.

இளம்பூரண ருரையை யொட்டியும், வெட்டியும் பேசும் உரை களும், ஆராய்ச்சியுரைகளும் பலவுள. ஆதலின் அவையனைத்தையும் பன்னியுரைப்பின் பாரதமாம் என ஒருசிலவற்றால் அறியலாம்.

1) குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்னும் தொடர்க்கு இளம்பூரணர் உரை இப்போது வழங்கும் (வ. உ. சி. - 1936) அச்சுப் பதிப்பில் பின்வருமாறு காண் கின்றது:— "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும்'' என்றபடி. ஆனால் பின்வரும் விளக்கவுரையில் "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என் னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன" எனவே உள்ளது. ஈண்டு ஆய்தத்தையும் சேர்த்து "எண்ணும்மை விகாரத்தால் தொக்கன'' என இருத்தல் வேண்டும். அப்படி இல்லாமலிருத்தலால் முரண் ஏற்படுகின்றது; இம்முரணுக்குக் காரணம் ஏடுபார்த்து எழுதி யவர் குற்றமேயாகும். இப்படியிருக்கச் சில ஆய்வாளர் அடிகளைக் குறை கூறுதல் வருந்தத்தக்கதாகும். அடிகளுக்கு அறியாமைப் பட்டங்கட்ட என் சிறு செந்நா கூசுகிறது. இனி

"யாமரக் கிளவியும் பிடாவுந்தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே''

என்று சூத்திரங் கூறி, அடுத்து "வல்லெழுத்து மிகினும் மானமில்லை'' என இறந்தது காத்தல், நுதலிய பெற்றிமை கூறிய இளம்பூரணர் அப்பிற் சூத்திரவுரையில் "இன்னும் அதனானே யா அத்துக்கோடு எனச் சிறுபான்மை அத்துப் பேறுண்டேனும் கொள்க'' என முதலாகக் கூறியிருத்தல் வலிந்து புகுத்துவதுபோல் தோன்றுகிறது என ஒரு சாரார் கூறி "யாமரக் கிளவிக்கு'' முற்சூத்திரத்து "நிலா வென்கிளவி அத்தொடு சிவணும்'' என்று அச்சொற்கு அத்துச் சாரியை விதித்த ஆசிரியர், யாமரக் கிளவிக்கும் அங்ஙனம் பொது விதியாக விதித்திருப் பார் எனக் காரணங் காட்டுவார்: ஆனால் ஒன்று மட்டும் கூறலாம். தாம் வாழுங்காலத்து வழக்காறிற் பயிலும் இலக்கணத்திற்கொத்த எப்பொருளையும் தத்தம் உரையில் எங்கெங்கு எவ்வெவ்வாறு அமைக்க முடியுமோ அங்கங்கு அவ்வவ்வாறு அமைத்துக் கோடல் உரையாசிரியர்கள் அனைவர்க்கும் பொதுப்பட்டதோர் மரபு என்ப தைப் பரக்க இலக்கணநூல் உரைகளில் காணலாம்.

"எழுத்திற்கு இளம்பூரணம்" என்று அனைவராலும் பாராட்டப் பெறும் உரையாசிரியரின் சிறப்பு இவற்றால் ஒருவாறு விளங்கும்.

காயிதே மில்லத் கலைக் கல்லூரி,
சென்னை.

மொழியியல் காட்டும் மொழிநடைச் சிறப்பு

மொழியியலார் மொழியின் அமைப்பில் ஒரு பொதுமையை அமைத்துக்கொண்டு அந்தப் பொதுமையிலிருந்து ஓர் ஆசிரியன் எவ்வளவு வேறுபடுகிறானோ அது அவனுடைய மொழிநடையின் சிறப்பு எனக் கூறுவர். இதனை மேலும் கொஞ்சம் தெளிவாகக் காண்போம். குறிப்பிட்ட ஒரு காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அத்தனையும் எடுத்துக்கொள்வோம். அவற்றில் குறிப்பிட்ட ஒரு சொல் எத்தனை தடவை வந்திருக்கிறது என்று கண்டு, மொத்த சொற்களின் வருகையில் இச்சொல்லின் சராசரி விழுக்காடு எவ்வளவு என அறுதியிடுகிறோம். உதாரணமாக 15-ம் நூற்றாண்டு இலக்கியங் களில், காதல் என்ற சொல்லின் இத்தகைய சராசரி வருகை 2விழுக் காடு என்று வைத்துக்கொள்வோம். இது 15-ம் நூற்றாண்டில் அச் சொல்லின் பொதுமை. அக்காலத்தில் தோன்றிய வேறொரு இலக்கியத்தில், இச்சொல் 5 விழுக்காடு வருகிறது என்றிருக்குமானால் இவ்விலக்கியம் அப்பொதுமையிலிருந்து வேறுபடுகிறது. இவ்வேறு பாடே அவ்விலக்கிய நடையின் சிறப்பியல்பு. இதற்குமேல் இந்த விழுக்காட்டிற்குரிய காரணங்கள், அதற்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு இவைகளை ஆராய்கின்றோம். இன்னொரு இலக்கியத்தில் அச்சொல் 3 விழுக்காடுதான் வந்திருக்கிறது என்றிருக்குமானால், இவ்விரண்டு ஆசிரியர்களையும் இதன் அடிப்படையில் ஒப்பிட்டு ஆராயலாம். இத்தகைய முறை சொல்லை மட்டும் பொறுத்ததன்று, மொழியில் எந்த உறுப்பையும் இவ்வாறு ஆராயலாம். ஒலியன்கள், உருபன்கள், சொற்கள், வாக்கியங்கள் என்று ஒவ்வொரு உறுப்பையும் இந்த முறையில் ஆராய்ந்து அவ்வாசிரியனுடைய மொழிநடையின் சிறப்பியல்பைக் காணுதல் வேண்டும்.

டாக்டர் முத்துச்சண்முகன்
இக்கால மொழியியல், மதுரை, 1980.

மொழியியல் 4.1 & 2 (1980)

தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள்

என். இராமசாமி

ஒலியானது பிரிக்கமுடியாத ஒரு அமைப்பு அன்று. ஒலியானது தன்னுள்ளே பல இயல்புகளைக் கொண்டுள்ளது. இவ்வியல்புகளின் உதவியால் ஒலிகளுக்கிடையிலுள்ள உண்மையான ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறலாம். ஒரு குறிப்பிட்ட ஒலியின் ஒலியளவை (phonetic value) ஒரு குறிப்பிட்ட இயல்பு அவ்வொலியில் உள்ளதா, இல்லையா என்பதைக்கொண்டு முடிவுசெய்யப்படுகின்றது.

முக்கிய இயல்புகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவன: 1. மெய் 2. நெகிழ்வு 3. உயிர். எல்லா ஒலிகளையும் இம் மூன்று பெரும் பிரிவிற்குள் அடக்கலாம். அதாவது அடைப்பொலிகள், அடைப்புரசாலிகள், உரசொலிகள், மூக்கொலிகள், விளிம்பொலிகள் ஆகியவை (+மெய்) ஒலிகளாகும். உயிர் ஒலிகளும் உடம்படு மெய்யொலிகளும் (—மெய்) ஒலிகளாகும். உயிர் ஒலிகள், உடம்படு மெய்யொலிகள், மூக்கொலிகள், விளிம்பொலிகள் ஆகியவை (+நெகிழ்வு) ஒலிகளாகும். அடைப்பொலிகள், அடைப்புரசொலிகள், உரசொலிகள், ஆகியவை (—நெகிழ்வு) ஒலிகளாகும், அதாவது (—நெகிழ்வு) தடை

யொலிகளைக் குறிக்கும். இதுவரைக் கூறப்பட்ட முக்கிய இயல்பு களையும் அவை குறிப்பிடும் ஒலிகளின் பிரிவுகளையும் கீழே காணலாம்.

	உயிர் ஒலிகள்	உடம்படு மெய்	விளிம்பு ஒலிகள்	மூக்கு ஒலிகள்	தடை யொலிகள்
உயிர்	+	—	—	—	—
மெய்	—	—	+	+	+
நெகிழ்வு	+	+	+	+	—

அடைப்பொலிகள், அடைப்புரசொலிகள், உரசொலிகள் ஆகியவை (+தடை) அல்லது (—நெகிழ்வு) என்று முன்பு சொல்லப்பட்டது. இதைப்போன்றே உயிர் ஒலிகள், உடம்படுமெய் யொலிகள், விளிம் பொலிகள் மூக்கொலிகள் ஆகியவற்றை (+நெகிழ்வு) ஒலிகள் அல்லது (—தடை) ஒலிகள் என்று சொல்லலாம்; உயிர் ஒலிகளை (+உயிர்) அல்லது (—மெய்) என்று குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட மொழியிலுள்ள ஒலிகளை இயல்புகளின் உதவியால் பிரித்தறிய மேலே குறிப்பிட்ட மூன்று முக்கிய இயல்புகளையுமே எடுத்தாள வேண்டுமென்பதில்லை. அம்மொழியிலுள்ள ஒலிகளின் தன்மைக் கேற்ப முக்கிய இயல்புகளை எடுத்துக்கொள்ளலாம். முக்கிய இயல்பு களையும் அவை குறிப்பிடும் ஒலிகளின் பிரிவுகளையும் கீழ்வரும் வரைபடத்தின் மூலமும் காட்டலாம்.



இப்பொழுது தமிழிலுள்ள உயிர் ஒலிகளையும் அவைகளுக்கு உண்டான இயல்புகளையும் காணலாம். (மேல்), (கீழ்), (பின்) எனும் நாவின் இயல்புகள் உயிர் ஒலிகளைப் பிரித்தறிய உதவுகின்றன. உயிர் ஒலிகள் பிறக்கும்பொழுது நாவானது அடையும் மாற்றங்களை மூன்றாகச் சொல்லலாம். அவை மேல், இடை, கீழ் என்பனவாகும். இ, ஈ, உ, ஊ, ஆகிய உயிர் ஒலிகள் பிறக்கும் பொழுது நாவானது மேல் உயர்ந்து பிறக்கின்றன. அ, ஆ, ஆகிய உயிர் ஒலிகள் நாவானது தாழ்ந்து பிறக்கின்றன. ஆனால் எ, ஏ, ஒ, ஓ ஆகிய உயிர் ஒலிகள் நாவானது மேலே உயர்ந்து இல்லாமலும் கீழே தாழ்ந்து இல்லாமலும் இவை இரண்டிற்குமிடையில் உள்ளபொழுது பிறக்கின்றன. உயிர் ஒலிகள் நாவானது மூன்று நிலைகளில் உள்ளபொழுது பிறந்தாலும் மூன்றையும் எடுத்துக் கொள்ளாமல் இரு உயர்மட்டங்களை எடுத்துக்கொண்டு மேலே கூறப்பட்ட மேல், இடை, கீழ் என்ற நிலைகளில் பிறக்கும் ஒலிகளைப் பிரித்துக் காட்டலாம். எடுத்துக்காட்டாக இ, ஈ, உ, ஊ ஆகியவை (+மேல்) என்றும் அ, ஆ ஆகியவை (+கீழ்) என்றும் சொன்னால் எ, ஏ, ஒ, ஓ ஆகியவை [—மேல் —கீழ்] என்று சொல்லலாம்,

இ, ஈ, எ, ஏ போன்ற உயிர் ஒலிகள் பிறக்கும் பொழுது நாவானது முன்னால் செல்கின்றது. உ, ஊ, ஒ, ஓ போன்ற ஒலிகள் பிறக்கும் பொழுது நாவானது பின்னால் செல்கின்றது. இவ்வுயிர் ஒலிகளை [பின்] என்ற இயல்பைக் கொண்டு உ, ஊ, ஒ, ஓ ஆகிய உயிர் ஒலிகளை [+பின்] என்றும் மற்ற உயிர் ஒலிகளை [—பின்] என்றும் கூறலாம். உ, ஊ போன்ற உயிர் ஒலிகள் பிறக்கும்பொழுது இதழ் குவிவதைக் காணலாம், எனவே இவ்வுயிர் ஒலிகளை [குவி] உயிர் ஒலிகள் என்று சொல்லலாம். மற்ற இதழ் குவியாமல் பிறக்கும் உயிர் ஒலிகளை [—குவி] உயிர் ஒலிகள் என்று சொல்லலாம். மேலும் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகிய உயிர் ஒலிகளை அ, இ, உ, எ ஒ என்ற உயிர் ஒலிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது முன்னர் கூறப்பட்ட ஒலிகள் நீண்டு ஒலிப்பதையும் பின்னர் கூறப்பட்ட ஒலிகள் குறுகி ஒலிப்பதையும் காணலாம். எனவே [நீள்][2] என்ற இயல்பைக்கொண்டு நீண்டு ஒலிப்பவற்றை [+நீள்] என்றும் மற்ற ஒலிகளை [— நீள்] என்றும் கூறலாம். இதுவரை கூறப்பட்ட இயல்புகளின் உதவியால் உயிர் ஒலிகளை ஒன்றிலிருந்து மற்

றொன்றை வேறு பிரித்தறியலாம். இதனைக் கீழ்வரும் அமைப்பில் காணலாம்.

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ
உயிர்.	+	+	+	+	+	+	+	+	+	+
நெகிழ்.	+	+	+	+	+	+	+	+	+	+
மேல்.	—	—	+	+	+	+	—	—	—	—
கீழ்.	+	+	—	—	—	—	—	—	—	—
பின்.	+	+	—	—	+	+	—	—	+	+
குவி.	—	—	—	—	+	+	—	—	+	+
நீள்.	—	+	—	+	—	+	—	+	—	+

இதனைக் கீழ்வருமாறு வரை படத்தின் மூலமும் காட்டலாம். இங்கு இயல்புகள் உயர் மட்டத்தில் (hierarchy) வைக்கப்பட்டுள்ளன.



இதுவரை தமிழிலுள்ள உயிர் ஒலிகளைப் பற்றியும் அவைகளுக்குண்டான இயல்புகளையும் பார்த்தோம். இப்பொழுது தமிழிலுள்ள மெய்யொலிகளையும் அவைகளுக்குண்டான இயல்புகளைப் பற்றியும் பார்க்கலாம். தமிழில் அடைப்பொலிகள், அடைப்புரசொலிகள், உரசொலிகள் ஆகியவை உள்ளனவென்றும் இவையெல்லாம் தடையொலிகள் என்று சொல்லப்படும் என்றும் முன்பு கூறப்பட்டது. இவையெல்லாம் தடையொலிகள் என்றாலும் அவைகளின் பிறப்பில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. அதாவது அடைப்பொலிகள் வாயில் அடைபட்ட காற்றுத் திடீரென விலகுவதால் (abrupt release) பிறக்கின்றன. வாயில் ஏற்பட்ட அடைப்புச் சுணங்கி விலகுவதால் (delayed release) அடைப்புரசொலிகள் பிறக்கின்றன; முழு அடைப்பு ஏற்படாமல் மிகக் குறுகிய இடைவெளியில் காற்றுச் செல்லும்பொழுது உரசொலிகள் பிறக்கின்றன. உரசொலிகள், மற்ற இரு பிரிவுகளான அடைப்பொலிகளிலும் அடைப்புரசொலிகளிலும் ஏற்படுவதுபோல் அடைபேற்படாமல் தொடர்ந்து ஒலிப்பதால் இவைகளைத் தொடர் ஒலிகள் என்று சொல்லப்படும். இம்மூன்று இயல்புகளையும் பயன்படுத்தி இவ்வொலிகளை ஒன்றிலிருந்து ஒன்றைப்பிரித்துக் காட்டலாம்.

	ப்	த்	ட்	ச்	க்	ஷ்
திடீர்நீக்கம்	+	+	+	—	+	—
சுணக்கு	—	—	—	+	—	—
தொடர்	—	—	—	—	—	+

இவ்வியல்புகள் தடையொலிகளின் மூன்று பிரிவுகளை மட்டுமே பிரித்தறிய உதவும். ஆனால் ஒவ்வொரு ஒலிக்கும் உள்ள இயல்புகள் என்னவென்று நமக்குத் தெரியாது. எனவே இன்னும் சில இயல்புகள் தேவைப்படுகின்றன. இப்பொழுது ஒவ்வொரு ஒலியும் பிறக்கும் இடங்களைக்கொண்டு ஒலிகளைப் பிரிக்க முடியுமா என்று பார்க்கலாம். முதலில் வாயின் அமைப்பை முன்பகுதி என்றும் பின்பகுதியென்றும் இரண்டாகப் பிரிக்கலாம். வாயின் முன்பகுதியில் பிறக்கும் ஒலிகளை [+முன்][3] ஒலிகள் என்றும் பின்பகுதியில் பிறக்கும் ஒலிகளை [-முன்] ஒலிகள் என்றும் சொல்லலாம். வாயின் முன்பகுதியில் பல ஒலிகளும் பின்பகுதியில் பல ஒலிகளும் பிறக்கின்றன எனவே இவைகளையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து உணரவேண்டும். சில மெய்யொலிகள் நாநுனி(blade) மேலெழுந்து

பிறக்கின்றன. சில மெய்யொலிகள் நாநுனி மேலெழாமலே பிறக்கின்றன. எனவே நாநுனி மேலெழுந்து பிறக்கும் ஒலிகளை [+அணரி] என்றும் மற்ற ஒலிகளை [—அணரி] என்றும் சொல்லப்படுகின்றது. [முன்] [அணரி] என்ற இரு இயல்புகளும் தடையொலிகளுக்குமட்டுமல்லாது மெய்யொலிகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும். இவ்விரு இயல்புகளையும் இவை குறிப்பிடும் ஒலிகளையும் கீழே காணலாம்.

	ப்	த்	ட்	ச்	க்	ஷ்	ம்	ந்	ண்	ஞ்
முன் :	+	+	—	—	—	—	+	+	—	—
அணரி :	—	+	+	+	—	+	—	+	+	+

	ல்	ள்	ழ்	ர்	வ்	ய்
முன் :	+	—	—	+	+	—
அணரி :	+	+	+	+	—	+

[மேல்], [கீழ்] [பின்] ஆகிய இயல்புகள் உயிர் ஒலிகளைப் பிரித்துணர உதவும் இயல்புகள் என்று முன்னர் சொல்லப்பட்டது. [மேல்], [பின்] ஆகிய இயல்புகள் சில மெய்யொலிகளிலும் அமைந்துள்ளன. 'ச்', 'ஞ்', என்ற மெய்யொலிகள் நாவின் முன்பகுதி உயர்ந்து பிறக்கின்றன. எனவே இவைகளை [+மேல்], [—பின்] என்று சொல்லப்படும். 'க்' என்ற மெய்யொலியானது நாவின் பின் பகுதி உயர்ந்து பிறக்கின்றது. எனவே இது [+மேல்], [+பின்] என்று சொல்லப்படும்.

மூக்கொலிகள், விளிம்பொலிகள் ஆகிய மெய்யொலிகளை மற்ற மெய்யொலிகளிலிருந்து பிரித்துணர [மூக்கு] [விளிம்பு] என்ற இயல்புகள் தேவைப்படுகின்றன. [ல்], [ள்] என்ற இரு மெய்யொலிகளிலும் [+விளிம்பு] ஒலிகளாகும்; [ர்], [ழ்] என்ற இரு மெய்யொலிகளும் [—விளிம்பு / —மூக்கு] இயல்புகளாகும். மேலும் தமிழில் [b] [d] [ḍ] போன்ற ஒலிப்புள்ள ஒலிகளும் [p], [t], [ṭ] ஒலிப்பிலா ஒலிகளும் உள்ளன. எனவே [ஒலிப்பு] என்ற இயல்பைக் கொண்டு ஒலிப்புள்ள ஒலிகளை [+ ஒலிப்பு] என்றும் ஒலிப்பிலா ஒலிகளை [— ஒலிப்பு] என்றும் சொல்லலாம். இதுவரை சொல்லப்பட்ட இயல்பு

களின் உதவியால் தமிழிலுள்ள மெய்யொலிகளைப் பிரித்துணர முடியும். இதனைக் கீழேயுள்ள கிளை வரைபடத்தில் காணலாம்.



இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

அடிக்குறிப்பு

1 இவ்வாசிரியரின் பிறப்பொலியனியல் என்ற கட்டுரையில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

2 உயிர் ஒலிகள் நீண்டு ஒலிக்கும்பொழுது வாயுறுப்புக்கள் விறைத்துக் காணப்படும். மொழியியலார்கள் இந்த விறைப்பு

(stiff or tense) என்ற இயல்பைக்கொண்டு நீண்டு ஒலிக்கும் உயிர் ஒலிகளை மற்ற உயிர் ஒலிகளினின்றும் வேறுபிரித்துக் காட்டுவர்.

3 முன்னண்ணத்திலும் அதற்கு முன் பதிவிலுள்ள இடங்களிலும் பிறக்கும் ஒலிகள் [+முன்] ஒலிகள் என்றும் (non-anterior sounds) ஒலிகள் என்றும் சொல்லப்படும்.

References

1 Chomsky, N. and Halle, M. 1968 *The Sound Pattern of English* New York. Harper and Row.

2 Ramaswamy N. 1977. 'பிறப்பொலியனியல்' **புலமை**, தொகுதி 3, பகுதி 4. 273-300.

3 ——— 1979. Formal and Informal Tamil, Ph D. Thesis submitted to the Unizersity of Kerala, Trivandrum.

4 Schane, Sanford A. 1973. *Generative Phonology* Prentice -Hail, INC., Englewood Cliffs, New Jersey.

தமிழில் சொல்லாக்கம்

பிறமொழிச் சொற்களை மக்கள் தம் மொழி வாயிலாக அறிந்து கொள்வதற்காகவே சொல்லாக்கம் நிகழ்கின்றது. தமது மொழி தமிழாயின் தமிழ் மக்கள் தமிழிலேயே — தனித் தமிழிலேயே சொல்லாக்கம் செய்தல் வேண்டும். பிறமொழிச் சொற்கள் புகுந்துவர புத்தொலிகளும் புதுப்புணர்ச்சி வகைகளும் தமிழ்மொழியிற் புகும். புத்தொலிகளுக்காகப் புதிய எழுத்துக்களைப் புகுத்துதல் வேண்டும் என்ற வெற்றாரவாரம் எழும். அதனால் மொழிக்கும் நாட்டுக்கும் குழப்பமும் இன்னலும் ஏற்படும். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் தனித்தமிழில் சொல்லாக்கம் நிகழ்தல் வேண்டும் என்று கூறாமலே அமையும்.

தெ. மு. கணபதிப்பிள்ளை

மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், சென்னை 1967.

மொழியியல் 4,1 & 2 (1980)

தமிழில் நேர்கூற்றும் அயற்கூற்றும்

க. சுசீலாபாய்

மனிதர்கள் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் இளம் வயதிலேயே தங்களுடைய கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள். அப்படிக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்போது ஒருவர் தம்மைப் பற்றியோ, கேட்டுகொண்டிருப்பவரைப் பற்றியோ, அயலாரைப் பற்றியோ முதலில் என்ன சொன்னார் என்பதைத் திருப்பியும் சொல்லவேண்டிய தேவை ஏற்படுகிறது. அதை அவர் இரண்டுவிதமாக, அதாவது நேர் கூற்றிலோ (**Direct report**) அயற் கூற்றிலோ (**Indirect report**) சொல்லலாம்.

ஒருவர் மற்றொருவரிடம் ஒருமுறை சொன்ன வாக்கியத்தில் அல்லது வாக்கியங்களில் ஒரு சொல்லிலும் எந்த மாற்றமும் ஏற்படுத்தாமல் தாம் கூறியதை அப்படியே எடுத்தாண்டால் அது நேர்கூற்று ஆகும். ஆனால் அதே கருத்தை சூழ்நிலைக்குத் தக சொற்களை மாற்றியமைத்துக் கூறினால் அது அயற்கூற்று ஆகும்.

உதாரணம்.

நான் உன்னிடம், "நான் வந்தேன்" என்று சொன்னேன்.

இதில் "நான் வந்தேன்" என்பது நேர்கூற்று ஆகும்.

நான் உன்னிடம் நான் வந்ததாகச் சொன்னேன்

இதில் 'நான் வந்ததாக' என்பது அயற்கூற்று ஆகும்.

மேற்கூறப்பட்ட 'நான் வந்தேன்' என்ற நேர் கூற்றில் 'நான்' என்பது இடப்பெயரும் (Pronoun), 'என்று' என்பது 'நான் வந்தேன்' என்ற வாக்கியத்தையும், 'நான் உன்னிடம் சொன்னேன்' என்ற வாக்கியத்தையும் ஒன்றாக இணைக்க வந்த நிரப்புவானும் (Complementizer) ஆகும்.

ராமாராவ்[1] அவர்கள் கூறியதுபோல நேர்கூற்று 1) பொருள் உடைய சொற்களைக் கொண்டதாகவும், 2) அதைத் தெரிவிப்பவருடைய மொழியில் அமைந்ததாகவும், 3) இலக்கணம் அமைந்ததாகவும் இருந்தால்தான் அதை அயற்கூற்றாக மாற்றமுடியும். நேர்கூற்றிற்கும் அயற் கூற்றிற்கும் மொழிநடையில் வேறுபாடு இருக்கலாமேயொழிய மற்ற எல்லாவிதத்திலும் ஒற்றுமை காணப்படுகிறது.

நேர்கூற்றையும் அயற்கூற்றையும் ஒரே அக அமைப்பிலிருந்து பெறலாம். ஓர் அக அமைப்பிலிருந்து நேர்கூற்றையும் அயற்கூற்றையும் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1) அக அமைப்பிலிருந்து மாறுபட்ட நேர்கூற்றையும் அயற்கூற்றையும் பெறுதல் ஒருவகை.

2) அகஅமைப்பிலிருந்து மாறுபடாத நேர்கூற்றையும் மாறுபடும் அயற்கூற்றையும் பெறுதல் இன்னொரு வகை.

இக்கட்டுரையில் இரண்டாவது வகையானது கையாளப்பட்டுள்ளது. இவ்வகையில் நேர்கூற்றிற்கும் அக அமைப்பிற்கும் எந்த

1 C. Rama Rao, 1968 "Direct and Indirect Reports: A Hypothesis concerning the Universals of Language, *Pakha Sanjam*, 1, 1.

மாறுதலும் இல்லாத காரணத்தால் இங்கு அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறுவதைக் காண்போம்.

அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெற கீழ்க்காணும் மாற்று விதிகள் (**transformational rules**) தேவைப்படுகின்றன.

1) இடப்பெயர் மாற்றும் விதிகளை உபயோகித்து ஒரு இடப் பெயரை இன்னொரு இடப்பெயராக மாற்றுதல்.

2) இடப்பெயர் அல்லாத மற்ற சுட்டு வடிவங்களில் (**demonstrative forms**) மாற்றங்கள் ஏற்படுத்துதல்.

(அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறும்போது அக அமைப்பிலுள்ள 'முந்தாநாள்', 'நேற்று', 'இன்று', 'நாளை' ஆகிய சுட்டு வடிவங்கள் அயற்கூற்றில் 'முந்தாநாள்' ஆகவோ, 'நேற்று' ஆகவோ, 'இன்று' ஆகவோ, 'நாளை' ஆகவோ அந்த கூற்று முதலில் உச்சரிக்கப்பட்ட நாளை ஒட்டி மாறும்.)

3) நிரப்புவானில் மாற்றங்கள் ஏற்படுத்துதல்.

(அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறும்பொழுது அக அமைப்பில் உள்ள 'என்று' என்ற நிரப்புவான் 'ஆக', 'ஆறு' அல்லது 'படி' ஆக மாறும் அல்லது தன் உருவத்தை இழக்கும். அல்லது எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே நிலைத்திருக்கும்.)

அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறும்பொழுது ஒவ்வொரு இடப்பெயரும் எந்தெந்த இடங்களில் எவ்வெவ்வாறு மாறுகிறது என்பதைப் பற்றி மட்டும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழில் உள்ள எல்லா இடப்பெயர்களையும் (நான், நாம் நாங்கள், நீ, நீங்கள், அவன், அவள், அவர், அது, அவர்கள், அவைகள்)[2] ஒருமை, பன்மை என்ற பிரிவுக்குள் கொண்டுவரலாம். அவைகளைப் பற்றிய விதிகளாவன:

---

2 இக்கட்டுரையில் எளிமை கருதி எல்லா படர்க்கை ஒருமை இடப்பெயர்களுக்கும் பதில் 'அவள்' என்ற இடப்பெயரும் எல்லா படர்க்கை பன்மை இடப்பெயர்களுக்கும் பதில் 'அவர்கள்' என்ற இடப்பெயரும் எடுத்தாளப்பட்டுள்ளது.

அகஅமைப்பு அயற்கூற்று

1) இ.ஒ. → [நான் / நீ / நீங்கள்(ம.ஒ.) / அவன் / அவர்(கள்) (ம.ஒ.)] / பேசப்படுவோர் [த.ஒ. பில் / மு.ஒ. யில் / மு.ம.ஒ. யில் / பட.ஒ. யில் / பட.ம.ஒ. யில்] இருந்தால்.

அகஅமைப்பு அயற்கூற்று

2) இ.ப. → [நாம் / நாங்கள் / நீங்கள் / அவர்கள்] / பேசப்படுவோர் [த + மு.(+ பட)யில் / {த.+ பட, த.பன்} யில் / {மு.+ பட, மு.பன்} யில் / {பப + பட, பப.பன்} யில்] இருந்தால்³

பேசப்படுபவராவது நாம் யாரைப்பற்றிப் பேசுகிறோமோ அந்த ஆள் அல்லது ஆட்கள். அதாவது பேசப்படுபவர் இடப்பெயர்களுள் ஒன்றைச் சார்ந்தவர்களாகவோ பலவற்றைச் சார்ந்தவராகவோ இருக்கலாம். இறுதியில் அந்த நேர்கூற்றைபோ, அயற்கூற்றையோ முதலில் பேசியவருடனும் கேட்டுக்கொண்டு இருந்தவருடனும் எடுத்தாள்பவர் தன்மை இடத்தையும், கேட்டுக்கொண்டிருப்பவர் முன்னிலை இடத்தையும் சார்ந்தவராவர். இறுதியில் எடுத்தாள்பவருக்கு பேசப்படுபவர் எந்த இடத்தைச் சார்ந்தவராக இருக்கிறாரோ, அதுவே பேசப்படுபவருடைய இடமாகும்.

இங்கு ஒவ்வொரு விதியின் விளக்கத்தையும், விரிவையும் உதாரணங்களுடன் காண்போம்.

---

3 இங்கு,

இ = இடப்பெயர்; ஒ = ஒற்றுமை; பன் = பன்மை

த = தன்மை; மு = முன்னிலை பட = படர்க்கை

பப = மூவிடங்களிலும் உட்படாத ஒரு இடப்பெயர்

ம = மரியாதை (honorific)

விதி (1)-ன் விளக்கம்

அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறும்போது அகஅமைப்பில் பேசப்படுபவர் தன்மை ஒருமையில் இருந்தால் அந்த இடப் பெயர் அயற்கூற்றில் 'நான்' ஆகவும், முன்னிலை ஒருமையில் இருந்தால் 'நீ' ஆகவும், முன்னிலை மரியாதை ஒருமையில் இருந்தால் 'நீங்கள்' ஆகவும், படர்க்கை ஒருமையில் இருந்தால் 'அவர்(கள்)' ஆகவும் மாறும். விதி (1)-ன் விரிவும் உதாரணங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அகஅமைப்பு அயற்கூற்று

1·1· நான் →	நான்	//	பேசப்	த.ஒ. யில்	இருந்தால்
	நீ		படுபவர்	மு.ஒ. யில்	
	நீங்கள்(ம.ஒ.)			மு.ம.ஒ. யில்	
	அவன்			பட.ஒ. யில்	
	அவர்(கள்)(ம.ஒ)			பட.ம.ஒ. யில்	

உதாரணங்கள்

1. நான் உன்னிடம் "நான் வந்தேன்" என்று சொன்னேன்.
   நான் உன்னிடம் நான் வந்ததாகச் சொன்னேன்
2. நீ என்னிடம், "நான் வந்தேன்" என்று சொன்னாய்
   நீ என்னிடம் நீ வந்ததாகச் சொன்னாய்
3. நீங்கள் (ம.ஒ.) என்னிடம், "நான் வந்தேன்" என்று சொன்னீர்கள்
   நீங்கள் என்னிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னீர்கள்
4. அவன் என்னிடம், "நான் வந்தேன்" என்று சொன்னான்
   அவன் என்னிடம் தான்/அவன் வந்ததாகச் சொன்னான்
5. அவர்(கள்) (ம.ஒ.) என்னிடம், "நான் வந்தேன்" என்று சொன்னார்(கள்).
   அவர்(கள்) என்னிடம் தாங்கள்/அவர்(கள்) வந்ததாகச் சொன்னார்(கள்).

அகஅமைப்பு அயற்கூற்று

1.2. நீ →	நான் நீ நீங்கள்(ம.ஓ.) அவன் அவர்(கள்)(ம.ஓ.)	// பேசப்படுபவர்	த.ஓ. யில் ஓ. யில் மு.ம.ஓ. யில் பட.ஓ. யில் பட.ம.ஓ. யில் இருந்தால்

உதாரணங்கள்

6. நீ என்னிடம், "நீ வந்தாய்" என்று சொன்னாய்.
நீ என்னிடம் நான் வந்ததாகச் சொன்னாய்

7. நான் உன்னிடம், "நீ வந்தாய்" என்று சொன்னேன்
நான் உன்னிடம் நீ வந்ததாகச் சொன்னேன்.

8. அவன் உங்களிடம் (ம.ஓ.), "நீ வந்தாய்" என்று சொன்னான்.
அவன் உங்களிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னான்.

9. நான் அவனிடம், "நீ வந்தாய்" என்று சொன்னேன்.
நான் அவனிடம் அவன் வந்ததாகச் சொன்னேன்.

10. நீ அவர்களிடம் (ம. ஓ.), "நீ வந்தாய்" என்று சொன்னாய்.
நீ அவர்களிடம் அவர்(கள்) வந்ததாகச் சொன்னாய்.

அகஅமைப்பு அயற்கூற்று

1.3. நீங்கள் →	நான் நீ நீங்கள் (ம. ஓ.) அவன் அவர்(கள்)(ம.ஓ.)	// பேசப்படுபவர்	த.ஓ.யில் மு.ஓ.யில் மு.ம.ஓ.யில் பட.ஓ.யில் பட.ம.ஓ.யில் இருந்தால்

உதாரணங்கள்

11. நீ என்னிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னாய்.
நீ என்னிடம் நான் வந்ததாகச் சொன்னாய்.

12. அவன் உன்னிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னான்.
அவன் உன்னிடம் நீ வந்ததாகச் சொன்னான்.

13. அவன் உங்களிடம் (ம. ஒ.), "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னான்.

அவன் உங்களிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னான்.

14. நீ அவனிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னாய்.

நீ அவனிடம் அவன் வந்ததாகச் சொன்னாய்.

15. நீங்கள் அவர்களிடம் (ம. ஒ.), "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னீர்கள்.

நீங்கள் அவர்களிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னீர்கள்.

அகஅமைப்பு அயற்கூற்று

1.4 அவன்→	நான்	/	பேசப் படுபவர்	த.ஒ. யில்	இருந்தால்
	நீ			மு.ஒ. யில்	
	நீங்கள்(ம.ஒ.)			த.ம,ஒ. யில்	
	அவன்			பட.ஒ. யில்	
	அவர்(கள்)(ம.ஒ.)			பட.ம.ஒ. யில்	

உதாரணங்கள்

16. நீ அவனிடம், "அவன் வந்தான்" என்று சொன்னாய்

நீ அவனிடம் நான் வந்ததாகச் சொன்னாய்.

17. நான் அவனிடம், "அவன் வந்தான்" என்று சொன்னேன்

நான் அவனிடம் நீ வந்ததாகச் சொன்னேன்

18. அவன் என்னிடம், "அவன் வந்தான்" என்று சொன்னான்

அவன் என்னிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னான்

19. நான் உன்னிடம் "அவன் வந்தான்" என்று சொன்னேன்

நான் உன்னிடம் அவன் வந்ததாகச் சொன்னேன்.

20. நீ என்னிடம் "அவன் வந்தான்" என்று சொன்னாய்

நீ என்னிடம் அவர்(கள்) வந்ததாகச் சொன்னாய்

அகஅமைப்பு அயற்கூற்று

1.5. அவர்(கள்) → (ம.ஒ)	நான்	/	பேசப்படுபவர்	த.ஒ.யில்	இருந்தால்
	நீ			மு.ஒ.யில்	
	நீங்கள்(ம.ஒ)			மு.ம.ஒ.யில்	
	அவன்			பட.ஒ.யில்	
	அவர்(கள்)(ம.ஒ.)			பட.மஒயில்	

உதாரணங்கள்

21. நீ அவனிடம், "அவர்(கள்) வந்தார்(கள்)" என்று சொன்னாய்.

    நீ அவனிடம் நான் வந்ததாகச் சொன்னாய்.

22. அவன் என்னிடம் "அவர்(கள்) வந்தார்(கள்)" என்று சொன்னான்.

    அவன் என்னிடம் நீ வந்ததாகச் சொன்னான்.

23. நான் அவனிடம், "அவர்(கள்) வந்தார்(கள்)" என்று சொன்னேன்.

    நான் அவனிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னேன்.

24. நீ என்னிடம், "அவர்(கள்) வந்தார்(கள்)" என்று சொன்னாய்

    நீ என்னிடம் அவன் வந்ததாகச் சொன்னாய்.

25. நான் உன்னிடம், "அவர்(கள்) வந்தார்(கள்)" என்று சொன்னேன்.

    நான் உன்னிடம் அவர்(கள்) வந்ததாகச் சொன்னேன்.

விதி (2)ன் விளக்கம்

அக அமைப்பிலிருந்து அயற்கூற்றைப் பெறும்போது அகஅமைப்பில் பேசப்படுபவர் த+மு (+பட)-யில் இருந்தால் அயற்கூற்றில் 'நாம்' ஆகவும், (த+பட) அல்லது த.பன்-யில் இருந்தால் 'நாங்கள்' ஆகவும், (மு+பட) அல்லது மு.பன்-யில் இருந்தால் 'நீங்கள்' ஆகவும், (பட+பட) அல்லது பட. பன்-யில் இருந்தால் 'அவர்கள்'

ஆகவும் மாறும். விதி (2)-ன் விரிவும் உதாரணங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2.1. நாங்கள் →

	பேசப்படுபவர் … இருந்தால்
நாம்	த + மு (+பட) யில்
நாங்கள்	த + பட / த.பன்
நீங்கள்	மு + பட / மு.பன்
அவர்கள்	பட + பட / பட.பன்

உதாரணங்கள்

26. நான் அவனிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னேன்
நான் அவனிடம் நாம் வந்ததாகச் சொன்னேன்

27. நாங்கள் அவனிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னேன்.
நாங்கள் அவனிடம் நாம் வந்ததாகச் சொன்னோம்

28. நான் உன்னிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னேன்
நான் உன்னிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னேன்

29. நாங்கள் உன்னிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னோம்
நாங்கள் உன்னிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னோம்

30. நீ என்னிடம் "நாங்கள் வந்தோம்" என்று சொன்னாய்
நீ என்னிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னாய்

31. நீங்கள் என்னிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னீர்கள்
நீங்கள் என்னிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னீர்கள்

32. அவன் என்னிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னான்
அவன் என்னிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னான்

33. அவர்கள் என்னிடம், "நாங்கள் வந்தோம்" என்று சொன்னார்கள்.

அவர்கள் என்னிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னார்கள்.

அகஅமைப்பு அயற்கூற்று

2.2. நீங்கள்→ [நாம் / நாங்கள் / நீங்கள் / அவர்கள்] / பேசப்படுபவர் [த + மு(+பட) யில் ; {த+பட / த.பன்} – யில் ; {மு + பட / மு. பன்} – யில் ; {பப+பட / பட. பன்}] இருந்தால்

உதாரணங்கள்

34. அவன் என்னிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னான்.

அவன் என்னிடம் நாம் வந்ததாகச் சொன்னான்.

35. குமார் என்னிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னான்.

குமார் என்னிடம் நாம் வந்ததாகச் சொன்னான்.

36. நீ என்னிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னாய்.
நீ என்னிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னாய்.

37. நீ எங்களிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னாய்.
நீ எங்களிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னாய்.

38. நான் உன்னிடம், "நீங்கள் வந்தீர்கள்"என்று சொன்னேன்.
நான் உன்னிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னேன்.

39. நான் உங்களிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னேன்.

நான் உங்களிடம், நீங்கள் வந்ததாகச் சொன்னேன்.

40. நான் அவனிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னேன்.

நான் அவனிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னேன்.

41. நான் அவர்களிடம், "நீங்கள் வந்தீர்கள்" என்று சொன்னேன்

நான் அவர்களிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னேன்.

அகஅமைப்பு அயற்கூற்று

2.3. அவர்கள் → [நாம் / நாங்கள் / நீங்கள் / அவர்கள்] / பேசப்படுபவர் [த + மு(+பட)யில் / {த+பட / த.பன்} / {மு+பட / மு.பன்} / {பப+பட / பட.பன்}] இருந்தால்

உதாரணங்கள்

42. கலா மாலாவிடம் "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னாள்

கலா மாலாவிடம் நாம் வந்ததாகச் சொன்னாள்

43. நீ அவனிடம், "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னாய்

நீ அவனிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னாய்

44. நீங்கள் அவனிடம், "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னீர்கள்

நீங்கள் அவனிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னீர்கள்

45. நான் அவனிடம், "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னேன்.

நான் அவனிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னேன்.

46. நாங்கள், "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னோம்.

நாங்கள் அவனிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னோம்.

47. நான் உன்னிடம், "அவர்கள் வந்தார்கள்" என்று சொன்னேன்.

நான் உன்னிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னேன்

அகஅமைப்பு அயற்கூற்று

2.4. நாம்→ [நாம் / நாங்கள் / நீங்கள் / அவர்கள்] பேசப் படுபவர் [த+மு(+பட) யில் / த+பட. யில் / மு+பட. யில் / பப+பட. யில்] இருந்தால்.

உதாரணங்கள்

48. நான் உன்னிடம், "நாம் வந்தோம்" என்று சொன்னேன்.
நான் உன்னிடம் நாம் வந்ததாகச் சொன்னேன்.

49. நான் அவனிடம், "நாம் வந்தோம்" என்று சொன்னேன்.
நான் அவனிடம் நாம் வந்ததாகச் சொன்னேன்.

50. அவன் என்னிடம், "நாம் வந்நோம்" என்று சொன்னான்.
அவன் என்னிடம் நாங்கள் வந்ததாகச் சொன்னான்.

51. நீ அவனிடம், "நாம் வந்தோம்" என்று சொன்னாய்.
நீ அவனிடம் நீங்கள் வந்ததாகச் சொன்னாய்.

52. அவன் குமாரிடம், "நாம் வந்தோம்" என்று சொன்னான்.
அவன் குமாரிடம் அவர்கள் வந்ததாகச் சொன்னான்.

மேலே எடுத்தாளப்பட்டுள்ள விதியில் (2.4) ஒரு விதிவிலக்கு உட்பட்டுள்ளது. அது என்னவென்றால் அகஅமைப்பில் 'நாம்' என்ற இடப்பெயர் இருந்தால் பேசப்படுபவர் தன்மைப் பன்மை இடப் பெயராக மட்டுமோ, முன்னிலைப் பன்மை இடப்பெயராக மட்டுமோ, படர்க்கைப் பன்மை இடப்பெயராக மட்டுமோ இருக்க முடியாது.

மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நன்றியுரை

இக்கட்டுரையைப் படித்து பல திருத்தங்களும் கூறிய என் ஆசிரியர் டாக்டர் குமாரசுவாமி ராஜா அவர்களுக்கு என்னுள்ளம் கனிந்த நன்றி.

துணை நூல்கள்

1 Kumaraswami Raja, N. 1979 "Language Created Me" Unpublished seminar paper, Annamalai University Annamalai Nagar.

2 Rama Rao, C. 1968. "Direct and Indirect Reports, A Hypothesis concerning the Universals of Language" *Pakha Sanjam*,".

3 Suseela Bai, K. 1968 *Direct and Indirect Reports in Tamil*, Unpublished M.Phil Dissertation, Annamalai University, Annamalai Nagar.

இலக்கண உலகில் மறுமலர்ச்சி

மொழியைப் பற்றிய ஏராளமான செய்திகள் இன்னும் நமக்குக் கிடைக்க வேண்டும். அவற்றின் அடிப்படையில் இலக்கண உலகி லேயே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுப் புதிய புதிய கொள்கைகள் தோன்றி உயர்தனிச் செந்தமிழுக்கு இன்றைய தேவைக்கேற்ப ஒரு முழுமையான சிறந்த இலக்கணமும் தோன்றவேண்டும். உலக அரங்கில் தமிழும் ஒரு உயர்தனிச் செம்மொழியாக — எல்லாம் வல்ல மொழியாகத் திகழவும் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவும், நாம் முறையாகக் காணவேண்டிய பல்வேறு வழிவகை களில் மொழியியல் நோக்கில் இலக்கண உலகில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதும் ஒன்று. மொழி வளர்ச்சியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்த பேரறிஞர்களுக்கு இந்த உண்மை தெளிவாக விளங்கும். இருக்கிற இலக்கணங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு இன்றைய வழக்கிலுள்ள செந்தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உற்று நோக்கிக் கண்டுணர்ந்து நடுநிலை நோக்கில் நமது மொழிக்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்து ஒரு சிறந்த இலக்கணத்தை அமைத்தால்தான் மொழியில் இதுவரை ஏற்பட்டுள்ள மாற்றங்கட்கு

நிலைபேறு கிடைக்கும். அதன் பிறகுதான் புதிய வளர்ச்சிக் கூறு கட்குக் காலூன்ற இடம் கிடைக்கும்.

தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலத்துக்கென்று ஒரு தனியான இடைநிலை இல்லை. நன்னூலார் காலத்தில் கிறு, கின்று என்ற நிகழ்கால இடைநிலை மொழியில் இடம்பெற்றுவிட்டது. இதற்குத் தம் இலக்கணத்தில் இடம் அளித்து நிலைபேறு தந்தார் நன்னூலார். இன்றைய வழக்கிலுள்ள செந்தமிழில் வந்திருந்தார், வந்திருக்கிறார் வந்திருப்பார், எனவும் வந்துவிட்டார், வந்துவிடுகிறார், வந்துவிடுவார் எனவும் வாங்கிக்கொண்டார், வாங்கிக்கொள்கிறார், வாங்கிக்கொள் வார் எனவும் வரக்கூடும், வரவேண்டும், வரலாம் எனவும் பலவேறு வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. இப்படிப்பட்ட புதிய வளர்ச்சிக் கூறுகட்கு இலக்கண உலகம் நிலைபேறளிக்கும் போதுதான் மொழியில் புதிய வளர்ச்சிக்கு இடம் ஏற்படும்.

நாம் இப்படியெல்லாம் கூறுவதால் இலக்கணமும் மொழியியலுமே மொழிவளர்ச்சிக்கு வேண்டிய எல்லாப் பணிகளையும் செய்துவிடும் என்று பொருளல்ல. ஆனால் இன்றைய நிலையில் — இன்றைய உலகப் போக்கில் — இலக்கணத்தையும் தன்னுள் ஒரு அங்கமாகக் கொண்ட மொழியியல் என்பது மொழிவளர்ச்சிப் பணிகளுக்கு மிகவும் பயன்படுகின்ற ஒரு இன்றியமையாத தலைசிறந்த துறை என்பது நாம் தெளிவாகக் கண்டுகொள்ளவேண்டிய ஒரு உண்மை. அந்த மொழியியல் துறையின் பிறப்பிடமே இலக்கணந்தான். இலக்கண உலகில் நமக்கு மிக நீண்ட வரலாறும் தலைசிறந்த பாரம்பரியமும் உண்டு. இந்தத் துறையில் நாம் ஈடுபட்டுப் பாடுபட்டால் உலகுக்கே வழிகாட்டுகிற அளவுக்குக்கூட நாம் வளரமுடியும். வளரவேண்டிய நாட்டில் வளர்க்கவேண்டிய இன்றியமையாத துறைகளில் இதுவும் ஒன்று,

டாக்டர் பொற்கோ

இலக்கண உலகில் புதிய பார்வை, சென்னை, 1973.

மொழியியல் 4.1 & 2 (1980)

தொல்காப்பியம் எழுந்ததின் நோக்கம் (வரலாற்றுப்பின்னணியில் ஒரு ஆய்வு)

கு. மீனாட்சி

ஒரு மொழியில் இலக்கணம் தோன்றுவதற்குப் பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. பொதுவாக, ஒரு மொழி பேசும் மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது அந்த இரு மொழிகளிலுமே மற்ற மொழியின் தாக்கமேற்படுகிறது. இத்தொடர்பு, ஒருகுறிப்பிட்ட காலத்திற்கு மேல் நீடிக்குமேயானால் அந்த மொழிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு நாளடைவில் அம்மொழிகள் வெவ்வேறு கிளை மொழிகளாகப் பிரிகின்றன. கிளைமொழிகள், பின்னர், ஒரு தனி மொழியாக உருவாவதும் உண்டு. ஒரு மொழி இவ்வாறு மாற்ற மடையுந் தருணத்தில், அம்மொழியை விதிகளின் மூலம் தொகுக்க வேண்டிய (Codification) அவசியம் ஏற்படுகிறது. அச்சமயம் அம் மொழிக்கு ஒரு சிறந்த இலக்கணம் தோன்றுகிறது. அல்லது ஒரு மொழியில் சிறந்த இலக்கணம் உருவாகியிருப்பதைக்காண நேர்ந் தால் தங்கள் மொழிக்கும் அத்தகைய இலக்கணம் வகுக்கவேண்டு மென்ற ஆர்வத்தினால், இலக்கணங்கள் உருவாகலாம். அல்லது, இருவேறு இனத்தவர், மதம், வாணிகம் காரணமாக ஒருவரோ

டொருவர் தொடர்பு கொள்ளும்போது மற்றவருடைய மொழியைப் புரிந்துகொள்ள அம்மொழியைப் பயிலவேண்டிய அவசியம் நேர்கிறது. அப்போது, இருமொழிகளிலுமே தேர்ச்சி பெற்றவர்கள் மொழிகளுக்கு இலக்கணம் வகுத்து, இந்தத் தேவையை நிறைவேற்றுகிறார்கள். மொழிகளின் இலக்கணத்தின் தோற்றத்திற்கு இவ்வாறாகப் பலவித நோக்கங்கள் பின்னணியாக அமைகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தின் பழமையான மொழிகளாகக் கருதப்படுவன, ஸம்ஸ்கிருதமும் தமிழும். முதலில், ஸம்ஸ்கிருதத்தின் இலக்கணம் தோன்றியதின் நோக்கங்களை, வரலாற்றுப் பின்னணியில் ஆய்ந்து, பின்னர் தமிழில் இலக்கணம் தோன்றியதை அத்தோடு ஒப்பிட்டு ஆராய்வோம். ஒரு நாட்டின் வரலாற்றோடு, அந்நாட்டு மொழியின் வரலாறும் பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதை பல இடங்களில் காணலாம்.

ஹாரப்பா, மெஹெஞ்ஜோதாரோ என்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளிலுள்ள மொழிதான், நம் நாட்டின் பழமையான மொழியாகக் கருதப்படுகிறது. இம்மொழி, எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று, இன்னும் முடிவாகவில்லையென்ற போதிலும் இது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியாக இருக்கமுடியாதென்றும், திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியாக இருக்கக்கூடுமென்றும் பரவலான கருத்து நிலவுகிறது. (குராவ்: 1979; மகாதேவன்: 1979).

இந்திய ஆரியர்களின் வரலாற்றின் காலம் அவர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குடியேறியதிலிருந்து தொடங்குகிறது. இது கி.மு. 1500-ம் ஆண்டு. இந்தோ-ஆரியமொழியின், இலக்கிய வரலாறும், இதே காலத்தில்தான் தொடங்குகிறது. அவர்களுடைய முதல் இலக்கியம் இருக்குவேதம். இந்தோ-ஆரிய மொழி, மொழியினடிப்படையில், பழைய இந்தோ ஆரியம் (Old Indo - Aryan), இடைக்கால இந்தோ ஆரியம் (Middle Indo - Aryan), தற்கால இந்தோ ஆரியம் (Modern Indo - Aryan) என்று மூவகையாகப் பிரிக்கப்படுகிறது. பழைய இந்தோ ஆரியத்தைச்சேர்ந்த இருக்குவேதத்திலேயே, ஆரிய மல்லாத மொழிச் சொற்களின் கலப்பு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

அம்மொழி யமைப்பில் கூட வேற்று மொழியமைப்பின் தாக்கம் இருப்பதாகக் கூறுவர் (பர்ரோ: 1955). எமனோ 1967; குயிப்பர்: 1967.)

வேத காலத்தில் வேத மந்திரங்களை செவி வழியாகப் பரப்பினார்கள் (Oral Tradition). வேள்வியில் மந்திரங்களை சரியான முறையில் உச்சரித்தால்தான் அதற்குரிய பலன் கிட்டும். வேற்று மொழிச் சொற்கள் வேத மந்திரங்களோடு கலக்கும் போது அம் மந்திரங்களின் வடிவம் காலப் போக்கில் மாறுகிறது. அதனால். வேள்வியின் பயன் கிட்டாமல் போய்விடுமோவென்ற அச்சத்தில், அம்மொழியின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க பல முயற்சிகள் எடுத்துக்கொண்டனர். இம்முயற்சிகள் தான் ஆரியர்களின் முதன் முதலாகத் தோன்றிய இலக்கணச் சிந்தனைகள். இதன் விளைவாக பிராதி சாக்கியங்களென்றழைக்கப்பட்ட நூல்கள் தோன்றின. இந்நூல்கள் பெரும்பாலும் ஒலியியலையும், புணர்ச்சி மாற்றங்களையும் மட்டுமே ஆராய்கின்றன. இந்நூல்கள் ஒவ்வொரு வேதத்திற்கும் கிளைகளாக அமைந்துள்ளன. இதைத் தொடர்ந்து யாஸ்கரின் நிருக்தம் போன்ற நூல்கள் எழுந்தன. இந்நூல் சொற்பிறப்பைப் (etymology) பற்றி ஆராய்கிறது. சொல்லியல், பொருளியல் பற்றிய ஆய்வு, முதல் முதலாகப் பாணினியின் இலக்கணத்தில் தான் காண்கிறோம்.

ஆரியர்கள் வடமேற்குப் பகுதியிலிருந்து, கிழக்குத் திசையில். குடிபெயர்ந்தபோது, அவர்களுடைய நாகரீகத்தின் நடுநாயகமாக விளங்கியது மகதம் என்ற நாடு. இங்கு, குடி பெயர்ந்தபோது ஆரியர்களுக்கு வழியிலேயே, வேறு இனத்தவர்களுடன் அதிகமான தொடர்பு ஏற்பட்டது. வேள்வியை முக்கியமாகக் கருதப்படும் பிராம் மணர்களுடைய மதத்திற்கு எதிராக புத்தம், சமணம், ஆஜீவிகம் என்ற பல புது மதக்கோட்பாடுகள் எழுந்தன. இக்காலத்தில் பழைய இந்தோ ஆரிய மொழியிலும் பல மாற்றங்களேற்பட்டு, பல கிளை மொழிகளாக அது பிரிந்து இருந்தது. பிராகிருதம் பாலி போன்ற கிளைமொழிகளைக் கொண்ட இடைக்கால இந்தோ-ஆரிய மொழிகள் ஏற்கெனவே உருப்பெற்று விட்டிருந்தன. இம்மொழிகள்தான் பெரும்பாலான மக்களின் பேச்சு மொழியாக இருந்தன. அதனால், புதிய மதத்தலைவர்கள் மக்களின் பேச்சுமொழியான பாலி பிராகிருதம்

போன்ற மொழிகளில் தங்கள் மதப் பிரச்சாரங்களைச் செய்யத் துவங்கினார்கள். அசோகன் போன்ற அன்றைய அரசர்களும் தங்களாணைகளை (**Edict**) இம் மொழிகளில் தான் பொறித்து வைத்தார்கள். மதத்தலைவர்கள், அரசர்கள் முதலியவர்களினாதரவினால், இம் மொழிகள் நன்கு வளர்ச்சியுற்றன. இது ஸம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கே ஒரு தடையாக நின்றது. தங்கள் மொழி வழக்கிழந்து விடுமோவென்ற அச்சம் அக்காலத்தில் எழுந்திருக்க வேண்டும். அதனால், தங்கள் மொழியைப் பாதுகாக்க வேண்டி, யாகம் பண்ணும் போது, வேறு மொழிக்கலப்பில்லாத, வேத மந்திரங்களை உச்சரித்தால் தான் யாகத்தின் முழுமையான பலனும் கிட்டும் என்று அம்மொழிக்கு ஒரு உயர்ந்த நிலையைக் கொடுத்தார்கள். இக்காலத்திலெழுந்த இலக்கணங்களின் அடிப்படையான நோக்கம், வேதமந்திரங்கள் புனிதத் தன்மை கெடாமலிருக்கவும், மற்ற மொழிகளோடு ஏற்பட்ட போட்டியில், தங்கள் மொழி வழக்கிழந்துவிடாமலிருக்கவும் எடுத்துக் கொண்ட பாதுகாப்பு முறைகள்தான்.

மேனாட்டினரால், மிகச் சிறந்த இலக்கணமாகப் பாராட்டப்பட்ட அஷ்டாத்தியாயிதான் ஸம்ஸ்கிருத மொழியில் நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழமையான இலக்கண நூல். பாணினி இந்த இலக்கணம் எழுதியதின் நோக்கம் சரிவரத் தெளிவாகவில்லை. அவர் பேசும் மொழியை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதற்கு விதிகளமைத்து, மற்றக் கிளைமொழிகளான வேதம், பிராம்மணம், கிழக்கே பேசும் மொழி முதலியவற்றோடு ஒப்பிட்டு அவைகள் மாறுபடுமிடங்களைக் குறிப்பிடுகிறார். அஷ்டாத்தியாயி ஒரு சிறந்த வண்ணனை இலக்கணம். மேற் கூறிய காரணங்களெதுவுமே, அஷ்டாத்தியாயி எழுந்ததின் நோக்கமாகத் தெரியவில்லை. வரலாற்றுப் படி, அவ்வித அச்சம் பாணினியின் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அதன் உள்ளடக்கமும் இந்நோக்கத்தில் அந்த இலக்கணம் எழுதியதை நிரூபிக்கவில்லை. பாணினிக்குப் பின்னால் வந்த இலக்கண ஆசிரியர்கள், குறிப்பாக காத்யாயனர், பதஞ்ஜலி காலத்தில்தான் இவ்விதமான அச்சம் அம்மொழிக்கு ஏற்பட்டது என்பது வரலாற்றிலிருந்தும், அவர்களுடைய உரைகளிலிருந்தும் தெளிவாகிறது. பாணினிக்குப் பின்னால் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் அவர்கள் மொழி அழிந்து விடாமல் பாது

காக்க வேண்டுமென்ற ஒரு கட்டாயச் சூழ்நிலை எழுந்தது. அந்த நிலைக்கேற்ப, வண்ணனை இலக்கணமாக இருந்த அஷ்டாத்தியாயியில், பாணினியின் காலத்திற்குப்பின் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் விதிகளை யமைத்து, இணைத்து அதை ஒரு நிலை இலக்கணமாக (**Prescriptive grammar**) உருவாக்கினார்கள். அப்போதுதான், இந்தோ–ஆரிய மொழி ஸம்ஸ்கிருதம் என்ற பெயர் பெற்றதாகத் தெரிகிறது. இவ்வாறு அந்த மொழி வரையளவு படுத்தப்பட்டு (**Standardization**) இலக்கிய மொழியாக நின்று விட்டது. பாணினியின் காலத்திற்குப் பிறபட்ட இலக்கிய ஆசிரியர்களும், பாணினியின் இலக்கணவிதிகளை அனுசரித்தே, இலக்கியங்களைத் தோற்றுவித்தார்கள். அக்காலத்தில் மக்களின் பேச்சு மொழியாக இருந்த பிராகிருதம் பாலிபோன்ற மொழிகளுக்கும், பாணினியின் இலக்கணத்தை முன்மாதிரியாகக் கொண்டுதான், இலக்கணங்களை எழுதினார்கள்.

வரலாற்றில் நிகழும் நிகழ்ச்சிகளால் ஒரு மொழியானது எவ்வாறு பாதிக்கப்படுகிறது, அதனால் அம்மொழியில் ஏற்படும் மாற்றங்கள், அவைகளிலிருந்து தங்கள் மொழியைப் பாதுகாக்க அம்மொழி பேசும் மக்கள் மேற்கொண்ட முயற்சிகள், இவற்றின் விளைவாக எழுந்த இலக்கண மரபு – வடமொழி இலக்கண நூல்களின் வரலாற்றுக்குப் பின்னணி இவைகள்தான்.

மற்றொரு பழமையான மொழியான தமிழில் இலக்கணம் தோன்றியதின் நோக்கம் என்ன என்பதை இப்போது ஆராய்வோம். தமிழிலக்கண மரபு வேறுவிதமான வரலாற்றுப் பின்னணியில் அமைந்திருக்கின்றது. ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் தொடர்பிருந்ததற்குச் சான்றுகள் அசோகன் காலத்துக் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கின்றன. ஆனால் இத்தொடர்பு எத்தகையது என்பது தெளிவாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டில் சில பாகங்களின் குகைகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்து, சமண, புத்தமதத்தைச் சார்ந்த துறவிகள் அந்தக்குகைகளில் வசித்து வந்ததாகத்தெரிகிறது. அந்தக் குகைகளில் பொறிக்கப்பட்ட தமிழ்தான், தமிழின் மிகப்பழமையான சான்றாகக் கருதப்படுகிறது. தமிழ்–பிராம்மி என்றழைக்கப்பட்ட, இதனுடைய மொழி சங்ககால மொழியினின்று மிகப்பெரிய அளவில் மாறுபடவில்லை யென்பது அறிஞர்களின் கருத்து. இக்கல்வெட்டுக்

களின் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு. இம்மொழியில் பல பிராகிருதச் சொற்கள் கலந்திருப்பதாகவும், இதைப் பொறித்தவர்கள், தமிழிலும் பிராகிருதம் பாலி மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற புத்த, சமண மதத்துறவிகள் என்றும் கருதுகின்றனர். (மகாதேவன்: 1968).

நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியந்தான். தொல்காப்பியத்திற்கு முன்பும் சிலதமிழ் நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவு. ஏனென்றால், இலக்கியம் காணாத ஒருமொழிக்கு, இலக்கணம் வகுப்பதென்பது பண்டைய நாட்களில் காணப்படாத ஒன்று. தொல்காப்பியம் போன்ற ஒரு சிறந்த இலக்கணம் தோன்ற வேண்டுமென்றால், அதற்கு முன்பு ஒரு இலக்கிய பரம்பரை இருந்திருக்கவேண்டும். மேலும் தொல்காப்பிய நூற்பாக்களில் காணப்படும் "என்ப", "என்மனார் புலவர்" என்ற சொற்கள் அதற்கு முன்பிருந்த இலக்கண நூல்களைத் தான் குறிக்கின்றன.

தொல்காப்பியத்தின் அகச் சான்றுகளிலிருந்து தொல்காப்பியம் பல அடுக்குகளை (layers)க் கொண்டதாகவும், ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டதாகவும் கருதுகிறார்கள் (மீனாட்சி சுந்தரம்: 1965 : 17). இதன் மையக்கரு கி.மு. 2-1 ம் நூற்றாண்டுகளில் உருவாகியிருக்க வேண்டுமென்றும், கி. பி. 5ம் நூற்றாண்டுக்குள் இந்த நூல் முழுமையான வடிவம் பெற்றிருக்கலாமென்றும் சிலர் கருதுகிறார்கள் (ஜ்வெலபில். 1973).

தொல்காப்பியம் எதற்காக எழுதப்பட்டதென்று, தொல்காப்பியரோ அல்லது அவருக்குப் பின்னால் வந்த ஆசிரியர்களோ எதுவும் கூறவில்லை. ஏற்கெனவே கூறியபடி ஒரு மொழியில் இலக்கணம் தோன்றுவதற்கு (அ) அம்மொழி பேசும் மக்கள் வேறு மொழிபேசும் மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் (ஆ) வேற்று மொழியில் சிறந்த இலக்கணம் இருப்பதைக் கண்டு, தங்கள் மொழிக்கும் அம்மாதிரியான இலக்கணம் உருவாக்க வேண்டுமென்ற ஆவல். (இ) வேறு மொழிபேசும் மக்களுக்குத் தங்கள் மொழியைக் கற்பிப்பதற்காக அம்மொழி இலக்கணத்தின் தேவை போன்றவைகள் நோக்கமாக கூறப்படுகின்றன.

அ) வேறு மொழிபேசும் இனத்தவருடன் தொடர்பு

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் மக்களுக்கு, இந்தோ ஆரிய மொழிபேசும் இனத்தவருடன் தொடர்பிருந்தது என்பதற்கு அசோகன் காலத்துக் கல்வெட்டுக்கள் சான்றாக அமைகின்றன. இத்தகைய தொடர்பினால் பல வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்திருந்தாலும் அம்மொழியில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அதனால், தங்கள் மொழி வழக்கிழந்து விடும் அல்லது புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மாற்றமடைந்து விடும் என்ற அச்சம், ஒருநாளும் ஏற்படவில்லை. வடமொழிக்கேற்பட்ட ஒருநிலை, தமிழ் மொழிக்கு ஏற்படாததால் தமிழிலக்கணம் ஒரு பாதுகாப்பு மனப்பான்மையின் காரணமாகத் தோன்றியிருக்க முடியாது.

ஆ) வேறுமொழியிலுள்ள சிறந்த இலக்கணங்கள்

வேறு மொழியில் ஒரு சிறந்த இலக்கணமிருப்பதை அறிந்து அதைப்போன்ற ஒரு இலக்கணம் தங்கள் மொழிக்கும் வேண்டுமென்ற ஒரு ஆவலினால், மொழிகளின் இலக்கணங்கள் தோன்றலாம். வடமொழியில் சிறந்த இலக்கணங்கள் இருந்ததென்றும், அவைகளில் தொல்காப்பியர் தேர்ச்சியுற்றிருந்தாரென்றும் அவருடைய நூலிலிருந்தே நாமறியலாம். எழுத்துக்கள் பிறக்கும் முறையைப் பற்றிக் கூறும் போது வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கூறுவது தனக்கு உடன்பாடில்லையென்று அவர் கூறுகிறார் (எழுத்து 102-103). ஸம்ஸ்கிருத, பிராகிருதச் சொற்களைத் தமிழில் பயன்படுத்தும்போது அவைகளைத் தமிழ் மொழி ஒலியன்களுக்கேற்ப எவ்வாறு மாற்றவேண்டுமென்பதற்கு, அவர் விதி அமைக்கிறார். (சொல் 401-402) மேலும் வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு நூல்களை மொழி பெயர்க்கும் போது, பின்பற்ற வேண்டிய கொள்கைகளையும் குறிப்பிடுகிறார். அந்த மேற்கோள்களிலிருந்து தொல்காப்பியர், வடமொழி இலக்கணங்களை நன்கு கற்றுத்தேர்ச்சியுற்றிருந்தாரென்பது தெளிவு. ஆனால், இவைகளிலிருந்து, தொல்காப்பியர், வடமொழியிலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு, தொல்காப்பியத்தை ஆக்கினாரென்று கூறுவது பொருந்தாது. ஏனென்றால், அடிப்படைக் கொள்கைகளிலேயே பலஇடங்களில், தொல்காப்பியர் வட

மொழி இலக்கணங்களிலிருந்து மாறுபடுகிறார். சான்றாக, வேற்றுமைகளைப் பற்றிக் கூறும்போது, வடமொழி இலக்கணங்களில், காரகம், விபக்தியென்ற இருவகைப் பாகுபாடுகளைக் காண்கிறோம். ஆனால் தொல்காப்பியத்தில் அவ்வகையான பிரிவுகள் காணப்படவில்லை. தொகைகளிலும், அவர் வடமொழி சமாசங்களை விவரித்திருக்கும் முறையிலிருந்து மாறுபடுகிறார். (மீனாட்சி : 1972). புணர்ச்சி விதிகளைப் பற்றிப் பேசும்போது அவர், வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சியென்ற இருவகைப் புணர்ச்சிகளைப் பற்றி விளக்குகிறார். வடமொழியில், அகச் சந்தி (internal sandi), புறச்சந்தி (external sandhi) என்ற இருவகைப் பாகுபாடு காணப்படுகிறது. சிற்சில இடங்களில் வடமொழி இலக்கணங்களின் தாக்கம், தொல்காப்பியத்தில் காணப்படலாம். ஆனால், அவர், அவைகளை முன்மாதிரியாகக் கொண்டு தொல்காப்பியத்தை உருவாக்கினார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

தொல்காப்பியர் காலத்திலும், அவருக்கு முற்பட்ட காலத்திலும் சில இலக்கண ஆசிரியர்கள் வடமொழி இலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு தமிழ் இலக்கணங்களை ஆக்கியிருந்திருப்பார்கள். தொல்காப்பியர் இவ்விரு மொழிகளிலுமே நன்கு தேர்ச்சியுற்றிருந்ததால் அவருக்கு இது உடன்பாடில்லை. தமிழின் தனித்தன்மையைப் புரிந்து கொண்டு, அதற்கென ஒரு சிறந்த இலக்கணத்தைப் படைத்திருக்கிறார். சான்றாக,[1] அவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்ற ஐவகையாக தமிழின் இலக்கணத்தை விளக்குகிறார். இது வடமொழி இலக்கணங்களில் காணப்படாதது. வடமொழி இலக்கணங்களிலெல்லாம், எழுத்தும், சொல்லுந்தான் பேசப்படுகின்றன. (2) வடமொழி இலக்கணங்களில் காரகங்கள் ஆறு என்று கூறுகிறார்கள். விபக்தி (வேற்றுமையுருபுகள்) ஏழாகப் பிரிக்கப் படுகிறது. வேற்றுமையுருபுகள் எந்தெந்த இடங்களில் வருமென்று விவரிக்கும் போது ஸம்போதனமென்ற எட்டாவது வேற்றுமை விளிப்பொருளில் வருமென்று கூறுகிறார். எட்டாவது வேற்றுமைக்குத் தனியுருபுகள் கிடையாது. முதல் வேற்றுமை உருபுகள்தான் எட்டாவது வேற்றுமைக்கும் இணைக்கப்படுகின்றன. அதனால் எட்டாவது வேற்றுமையென்று

தனியாக ஒரு வேற்றுமை, வடமொழியில் குறிப்பிடுவதில்லை. தொல்காப்பியர், வேற்றுமையைப்பற்றிப் பேசும்போது, முதல் சூத்திரத்தில் "வேற்றுமைதானேயேழென மொழிப" என்று கூறி, அதற்கடுத்த சூத்திரத்தில், "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" என்று எட்டாவது வேற்றுமையைத் தனியாகக் கூறுகிறார். அவர் முதல் சூத்திரத்திலேயே, தமிழில் எட்டு வேற்றுமைகள் உள்ளனவென்று கூறியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் முதலில் ஏழு வேற்றுமையென்று கூறி, விளியைச்சேர்த்து வேற்றுமைகள் எட்டு என்கிறார். மேலும், முதல் சூத்திரத்தில் "ஏழென மொழிப" என்பதிலிருந்து ஏழு வேற்றுமைகளென்பது அக்கால இலக்கண ஆசிரியர்களின் கருத்து என்பது தெளிவு. ஆனால் வடமொழியைப் போலல்லாமல், தமிழில், விளி வேற்றுமையில், பெயரினிறுதியில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதை நன்குணர்ந்த தொல்காப்பியர், விளி வேற்றுமையைத் தனியாக எட்டாவது வேற்றுமையென்று முன்னோர்களின் கருத்தைக் கூறிய பிறகு, அவைகளுடனிணைத்து விட்டு, அதற்குத் தனியாகவே ஒரு பிரிவு ஏற்படுத்தி, விளி வேற்றுமையை மிகவிவரமாகக் கூறுகிறார். இவ்வாறு அவர் பல இடங்களில் தமிழின் தனிச்சிறப்பைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இவைகளிலிருந்து, அவர், வேறுமொழி இலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழில் இலக்கணங்கள் எழுதினால், தமிழின் சிறப்புத்தன்மையை, வெளிக்கொணர முடியாது என்பதை உணர்த்த வேண்டும், அதே சமயம் அதற்கென ஒரு சிறந்த இலக்கணம், வேறுவிதமான அடிப்படையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கங்களில், தொல்காப்பியத்தை உருவாக்கியிருப்பாரென்பது தெளிவாகப் புலனாகிறது.

இ) தமிழறியாதவர்களுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டிய அவசியம்

புத்தசமண மதத்துறவிகள், கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே, தென்னிந்தியாவில் வந்து குடியேறியதற்குக் கல்வெட்டுக்களிலிருந்து சான்றுகள் கிடைக்கின்றன. தொல் காப்பியரே சமண மதத்தைச் சார்ந்தவரென்று கருதுவோரும் உண்டு. புத்த, சமண மதத்துறவிகள் தென்னிந்தியாவில் குடிபுகுந்ததின் முக்கிய நோக்கம் மதப்பிரச்சாரம். அதற்கு அந்த நாட்டு மக்களின் மொழியைப்பயில வேண்டிய அவசியம் நேர்கிறது. மொழி பயில்வதற்கு, அம்

மொழியின் இலக்கணம் தேவை. அந்த இருமொழிகளிலுமே தேர்ச்சிபெற்ற ஒருவர், அந்த நாட்டுமொழிக்கு இலக்கணம் வகுப்பது இயல்பு. தொல்காப்பியர், இவ்விரு மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்ததால், இத்தேவையை நன்குணர்ந்து கொண்டு, தமிழிலக்கணத்தை அவர் ஆக்கியிருக்கிறார். எழுத்ததிகாரம் இதற்கு ஒரு நல்ல சான்று.

வேற்றுமொழி பேசும் மக்களுக்கு, மொழியைக் கற்பிக்கும்போது, பொதுவாக அம்மொழியின் எழுத்துக்கள், அவைகளை எழுதும் விதம், உச்சரிக்கும் முறை போன்றவற்றை நுணுக்கமாக விளக்குவது வழக்கம். எழுத்ததிகாரத்தை ஊன்றிப் படிக்கும்போது இதே நோக்கத்துடன் தான் அவர் அதை எழுதியிருப்பாரென்ற உணர்வு ஏற்படுகிறது. தமிழ் எழுத்துக்களின் வகை, அவைகளை உச்சரிக்கும்முறை அவைகள் நிற்குமிடம், அவைகளை எழுதும் முறை போன்றவற்றை வெகு நுட்பமாக ஆய்ந்து எழுதியிருக்கிறார்.

எழுதும் முறையைப் பற்றி, தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தில் ஏழு நூற்பாக்களில் குறிப்பிடுகிறார் (2, 14, 15, 16, 17, 104, 105). தமிழ் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிக் கூறும்போது புள்ளி எந்த இடத்தில் நிற்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். மெய்யெழுத்துக்கள் புள்ளியோடுதான் வரும் (15); உயிர்மெய்யெழுத்திற்குப் புள்ளி கிடையாது. அதனால் அந்த எழுத்து 'அ'வுடன் சேர்ந்து ஒலிக்கும் (17); மெய்யை ஈறாகக் கொண்டவைகள் புள்ளியோடு முடியும் (ஏகார, ஓகாரங்கள், புள்ளிபெற்று, எகார, ஒகாரங்களாக மாறுகின்றன. (16)

பொதுவாக, குற்றுயிரின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு அத்துடன் ஒரு கோடோ அல்லது வேறு குறியீடோ இணைத்து அவற்றின் நெடிலைப்பெறுவது வழக்கம். இந்தமுறை பண்டைய காலக் கல்வெட்டுக்களிலும் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். காட்டாக, பண்டைய எழுத்தான பிராம்மி எழுத்துக்கள் இம்முறையில்தான் பொறிக்கப்பட்டிருக்கின்றன.



அ ஆ ஊ

ஆனால், தொல்காப்பியர், நெட்டெழுத்தான ஏ, ஓ, வின் வடிவத்தில் ஒரு புள்ளியிட்டு அவைகளின் குறிலைப்பெறலாமென்று கூறுகிறார் (16). இம்முறை, பொதுவாகக் கடைபிடிக்கும் முறைக்கு முரணாகத் தோன்றுகிறது. இவ்விதியையமைப்பதற்கு ஆசிரியர்க்கு ஒரு உள்நோக்கம் இருந்திருக்கவேண்டும்.

மேலும், தமிழ் எழுத்துக்களின் வைப்பு முறையைப் பார்க்கும் போதும் சில மாறுபாடுகளைக் காணலாம். முதல், சூத்திரத்தில் தமிழ் எழுத்துக்கள் 'அ' வில் தொடங்கி, 'ன' வை ஈராகக் கொண்டுள்ளன என்று கூறுகிறார் ஆசிரியர். உயிரெழுத்துக்களைக் குறிப்பிடும் போது, குறிலையடுத்து, அவைகளின் நெடிலைக் கூறுகிறார். இது பொதுவாகக் கடைப் பிடிக்கும் முறை. ஆனால் மெய்யெழுத்துக்களில் அண்பல் மூக்கொலியான (alveolar nasal) 'ன்'-க் கடைசியில் வைக்கிறார். பொதுவாக, எழுத்துக்களை பின்அண்ண ஒலி (velar), அண்ண ஒலி (palatal), நாமடியன் (retroflex), அண்பல் ஒலி (alveolar), பல் அண்ண ஒலி (dental) இதழொலி (labial), அரை உயிர் (semi Vowel) என்ற வரிசையில் கூறுவது தான் வழக்கம்.

மேலும் மற்ற மொழிகளில், அரை உயிர்களான ய, ர, ல, வ, என்ற எழுத்துக்களோடு, அம்மொழிகளின் எழுத்துக்களின் வரிசை முடிவடைகின்றது. ஆனால் தமிழெழுத்துக்களில், அரை உயிரைத் தொடர்ந்து, தமிழின் சிறப்பெழுத்துக்களான, ழ, ள, ற, ன வைக் கப்பட்டிருக்கின்றன். இங்கேயும், வழக்கத்திற்கு மாறுபட்ட ஒரு முறையைக் காண்கிறோம். இந்த முறைப்படி எழுத்துக்களை வைப்பதற்கும் ஒரு உள் நோக்கம் இருந்தேயாக வேண்டும். வேற்று மொழி பேசும் மக்களுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டிய அவசிய மேற்பட்ட போது ஆசிரியர், பொதுவான முறையில் சில மாற்றங்களைப் புகுத்தி, இம்மொழிக்கு இலக்கணத்தையமைக்கிறார். இவ்வாறு இலக்கணம் அமைவதால், அவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொள்வதோ அல்லது கற்பிப்பதோ எளிதென உணர்ந்து ஆசிரியர் செயல்பட்டிருக்கிறார். அக்காலத்தில், வேற்று மொழியான பிராகிருதம், பாலி மொழிகளைப் பேசும் சமண, புத்தமதத்துறவிகள்தான் தமிழ் நாட்டிலிருந்தனர். அவர்களுடைய மொழியில், குற்றியல் 'எ' யோ

'ஓ' வோ இல்லை. ஆனால், அவர்களுடைய எழுத்தான பிராம்மியில் ஏகார, ஓகாரங்களுக்கு ஒருவடிவம் இருந்தது. அந்த வடிவத்தோடு, ஒருகுறியீடை இணைத்து, அவைகளின் குறிலைப்பெறக் கற்றுக்கொடுத்தால், அந்த முறையில் அவர்கள் கற்றுக்கொள்வது எளிது. இம்முறையில் தற்காலத்தில் கூட, புதுமொழியின் உச்சரிப்பைக் கற்றுக்கொள்வதற்கு, ஆங்கில எழுத்துக்களின் உச்சரிப்பின் மூலம் கற்றுக்கொடுப்பதை நாம் பார்க்கிறோம். எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் போது ஒரு எழுத்தின் வடிவத்திலிருந்து, அதற்குத் தொடர்புடைய எழுத்துக்களுக்கு வடிவம் அமைப்பது, அசோகன் பிராம்மியில் காணலாம். அதில், 'ஏ', 'ஓ' என்ற என்ற எழுத்துக்களின் வடிவங்களிலிருந்து, 'ஐ', 'ஔ' என்ற எழுத்துக்களின் வடிவம் பெறப்படுகின்றன.



ஏ, ஐ, ஓ, ஔ

எழுத்துக்களின் வைப்பு முறையிலும் இரண்டு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களை முதலில் கூறிவிட்டு, அந்த மொழியில்லாத, தமிழின் சிறப்பெழுத்துக்களான ழ, ள, ற, ன இவைகளை இறுதியில் வைக்கிறார். இங்கேயும், ஆசிரியர் வழக்கிற்கு மாறான ஒரு முறையைக் கடைப்பிடித்திருக்கிறாரென்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். தமிழ் பிராம்மி எழுத்துக்களில் கூட, இந்நாலு எழுத்துக்களின் வடிவமும் அசோகன் பிராம்மி எழுத்துக்களிலிருந்துதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் 'ழ' பிராம்மி ட (ḍ) விலிருந்தும் 'ள' 'ல' விலிருந்தும், 'ற' ட (ṭ) விலிருந்தும் 'ன' 'ந' விலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன (மகாதேவன்: 1970).

வேற்றுமொழி பேசும் மக்களுடைய மொழியில், எந்தெந்த எழுத்துக்கள் இருக்கின்றனவோ, அவைகளோடு உருவத்திலோ, உச்சரிப்பிலோ ஒத்த புதியமொழியின் எழுத்துக்களை ஒப்பிட்டுக் காட்டி, மொழியைப் பயிற்றுவித்தால், அம்மொழியைப் பயில்வது மற்றவர்களுக்கு எளிது. இதை நன்றாக உணர்ந்து கொண்ட தொல்காப்பியர், இம்முறையில் எழுத்ததிகாரத்தை உருவாக்கியிருக்

கிறார். அதனால்தான் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, சில இடங்களில் முரண்பாடிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் ஊன்றிப் பார்க்கும்போது, அவருடைய நோக்கம் தெளிவாகிறது.

தமிழொலி, ஒலியன், உருபொலியன் இவைகளைத் தொல்காப்பியர், மிக நுட்பமாக ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். இத்துடன், வடமொழியிலுள்ள பிராதிசாக்கியங்கள், சிக்ஷா முதலிய நூல்களை ஒப்பிடலாம். அவைகளெல்லாம் மொழியின் புனிதத்தன்மையை காக்க வேண்டுமென்ற ஒருபாதுகாப்பு உணர்ச்சியில் எழுதப்பட்டன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஆனால் வடமொழிக் கேற்பட்ட ஒரு சூழ்நிலை தமிழுக்கு எழவேயில்லை. மேலும் தமிழ் ஒரு மக்கள் பேசும் மொழியாகத்தானிருந்து வருகிறது. அதற்கு ஒரு புனிதத்தன்மை இருந்ததாக, வரலாற்றில் ஒரு குறிப்பும் காணப் படவில்லை. ஆகவே, தொல்காப்பியம் எழ, பாதுகாப்பு உணர்ச்சி காரணமாக இருந்திருக்க முடியாது. வரலாற்றுப் பின்னணியில், இந்த நூலை ஆராயும்போது, வேற்றுமொழியாளர்களுக்கு எளிதாகத் தமிழ் கற்பிக்கும் நோக்கத்துடன்தான், இந்த இலக்கணத்தை எழுதி யிருப்பார். எழுத்ததிகாரத்திலிருந்து பல மேற்கோள்கள், மேலே காட்டப்பட்டிருக்கிறது. சொல்லதிகாரத்தைப்பார்க்கும் போது தமி ழுக்கும், வடமொழிக்கும் ஒரேமாதிரியான அடிப்படையில் இலக் கணம் அமைக்க முடியாது என்று நிறுவி, தமிழின் தனித்தன்மையை எடுத்துக்காட்டி, ஒரு சிறந்த இலக்கணத்தை உருவாக்கியிருக்கிறார். பல அறிஞர்களின் கருத்துப்படி, இந்த இரண்டு அதிகாரங்களும், இருவேறு தொல்காப்பியரால் எழுதப்பட்டிருக்கலாம். அதனால்தான் இவ்விரண்டின் நோக்கங்களும் வெவ்வேறாக இருக்கின்றன.

ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம்,
புதுடில்லி.

துணை நூல்கள்

Emeneau, M.B. 1967: " India as a linguistic area " in *Dravidian Linguistics, Ethnology and folktales*. Collected Papers. Annamalai Nagar.

Burrow. T: 1955: *The Sanskrit Language*, London.

Gurov, N.V. 1979 *Prospects for the Linguistic Interpretation of the proto - Dravidian Texts* (on the Basis of the Dravidian Languages pp. 118–140. in Ed. Gregory L Possehl. Delhi.

Kuiper, F.B.J. 1967: "The Genesis of a Linguistic Area," *Indo-Iranian Journal* 10-81-102

Mahadavan, Iravatham: 1966: "Corpus of the Tamil Brahmi Inscription''. *Seminar on Inscriptions* in (Ed) Nagaswamy, Madras

Mahadavan, Iravatham: 1968: "Tamil Brahmi Inscriptions of the Sangam Age". Proceedings of the Second International Conference of Tamil Studies, Madras.

Mahadavan, Iravatham: 1970: *Tamil Brahmi Inscriptions*, Madras.

Mahadavan, Iravatham: 1979: "Study of the Indus Script through Bilingual Parallels" pp. 260–267. in (ed.) Possehl.

Meenakshi, K. 1972: "Treatment of noun in Astadhyayi and Tolkappiyam", Unpublished Post - Doctoral Research Work, Annamalai Nagar.

Meenakshisundaram: T.P. 1965 *A History of Tamil Literature* Annamalainagar.

Nagaswamy, R, (Ed:) 1966 *Seminar on Inscritpions* Madras

Possehl, G, L. (Ed); 1979 *Ancient Cities of The Indus* New Delhi.

Tolkappiyam: 1966 *Eluttatikaram. Naccinarkkiniyam*. Tirunelveli.

Zvelebil, K. 1973: *Smile of Murugan*, Leiden.

Zvelebil, K. 1675: *Tamil Literature*, Leiden.

மொழியியல் 4,1 & 2 (1980

" தமிழ்த் துணைவினைகள் முதல் வினைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன " என்னும் கூற்றிற்கு ஒரு சான்று

க. திலகவதி

1. கொள் என்னும் வினை

1.1 தமிழ்த் துணைவினைகள் முதல் வினைகளிலிருந்தே தோன்றுகின்றன எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. தமிழில் துணைவினைகளாகப் பயன்படுபவை பெரும்பாலும் முதல் வினைகளாகவும் பயன்படுகின்றன. காலமுன்னேற்றத்துடன் துணைவினைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. தொல்காப்பிய மொழியிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கும் **கொள்** என்னும் துணைவினை (திண்ணப்பன், 1976), தமிழில் காணப்படும் மிகப் பழமையானதொரு துணைவினையாகும்; இருப்பினும், இன்றும் அது ஒரு முதல் வினையாகப் பயன்படுத்தப்படுகிறது.

1. இந்தப் பாத்திரம் எட்டு லிட்டர் நீரைக் கொள்ளும்
2. அவன் காந்தியைத் தன் வழிகாட்டியாகக் கொண்டான்.

'துணைவினைகள் முதல் வினைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன' என்னும் கூற்றை உறுதிப்படுத்துதற்கு, இந்த **கொள்** என்னும் வினையே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 'துணைவினைகளும் முதல் வினைகளும்' என்னும் தன் கட்டுரையில் அகஸ்தியலிங்கம் (1976) பின்வருமாறு கூறுகிறார்: துணைவினைகள் பெரும்பாலும் ஒரு வகையான இலக்கணப் பொருளை உணர்த்துபவையாக இருப்பினும், முதல் வினையின் சொற்பொருளுக்கும், துணைவினையின் இலக்கணப் பொருள் என்று கூறப்படுவதற்கும் இடையில் ஏதோ ஒரு வகைத் தொடர்பு இருக்கப் பெரும் வாய்ப்பு உள்ளது."[1] **கொள்** என்னும் துணைவினை இக்கூற்றுக்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்கு முதலில் **கொள்** என்னும் துணைவினையின் வேறுபட்ட பொருள்கள் எல்லாம் ஆராயப்பட வேண்டும்; மேலும், **கொள்** எனப்படும் முதல் வினையின் பல்வகைப் பொருள்களும் ஒருவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். முதல் வினைகளின் பொருள்கள் தரப்பட்டால் துணைவினைகளின் இலக்கணப் பொருள்களை அப்பொருள்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்க வசதியாய் இருக்கும்.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேரகராதி **கொள்** என்னும் வினைச் சொல்லுக்குப் பதினாறு செயப்படுபொருள் குன்றாப் பொருள்களையும் (transitive meanings), இரண்டு செயப்படு பொருள் குன்றிய பொருள்களையும் (intransitive meanings) தந்துள்ளது.

செயப்படுபொருள் குன்றாப் பொருள்

1. கையால் எடுத்துக்கொள்ளுதல்

இவ்வூர்ப் பலி நீ பெறாஅமல் **கொள்வேன்**

(கலித்தொகை, 65-18)

2. பெறுதல்

நல்லாறெனினும் **கொளல்** தீது (குறள். 222)

3. விலைக்கு வாங்குதல்

விற்குங் கோங்க மலர் சண்பகமென் கோதையினுங் **கொள்வார்**
(நைடதம், நகரப்படலம்; 18)

4. உரிமையாகக் கொள்ளுதல்

விடலையைக் காணவோடி ——— விதி **கொண்டார்**
(சீவகசிந்தாமணி, 457)

5. விவாகம் செய்தல்

தற் **கொண்டான்** பேணி (குறள், 56)

6. கவர்தல்

தாம் கொண்ட மனையாளை மாற்றார் **கொள** (நாலடியார், 3)

7. தன்னுட் கொள்ளுதல்

இந்த அறை நூறு மேஜைகளைக் **கொள்ளும்**

8. முகத்தல்

குணக்கடல் **கொண்டு** குடக்கடல் முற்றி (மதுரைக்காஞ்சி, 238)

9. கற்றுக் கொள்ளுதல்

குறித்தது கூறாமைக் **கொள்வாரொடு** (குறள், 704)

10. கருதுதல்

பனைத் துணையாக் **கொள்வர்** (குறள், 104)

11. நன்கு மதித்தல்

கொளப்பட்டேம் என்றெண்ணி (குறள், 699)

12. கொண்டாடுதல்

தண்பதங் **கொள்ளும்** தலைநாள் (சிலப்பதிகார 6130)

13. அங்கீகரித்தல்

குறை பெறின் பெரியார் பணிந்து **கொள்வர்** (குறள், 680)

14. மேற்கொள்ளுதல்

குடிப் பிறந்தார் குன்றா வொழுக்கமாகக் **கொண்டார்**
(நாலடியார், 143)

15. மனம் பொறுத்தல்

ஊர் பொறை **கொள்ளாத** (பரிபாடல், 7:2)

16. ஒத்தல்

பூ ஊது வண்டினம் யாழ் **கொண்ட** கொளை

(பரிபாடல்: 11-125)

செயப்படுபொருள் குன்றிய பொருள்

1. பொருந்துதல்

தம்மொடு **கொள்ளாத** கொள்ளாது உலகு (குறள், 470)

2. உடலிற் காயம் படுதல்

கல்லுக் காலிற் **கொண்டது**

1.2. இன்றைய தமிழில் **கொள்** ஒரு முதல் வினையாகவும் பயன்படுத்தப் பட்டாலும், பெரும்பாலும் அது ஒரு துணைவினை யாகவே பயன்படுத்தப்படுகிறது. **கொள்** என்பது ஒரு தற்சுட்டு வினையாகவே (Reflexive verb) பெருமளவில் கருதப்படுகிறது. ஆனால், இப்பொருள் **கொள்** என்னும் துணைவினையின் பல பொருள்களில் ஒன்றாகவே உள்ளது. இவ்வினையின் பல்வகைப் பொருள்களையும் அறிவதற்குச் சிறந்த வழி அது வினைமுற்றாக வரும்போது அடையும் பொருள்களையும், வினையெச்ச வடிவில் வரும்போது அடையும் பொருள்களையும் தனித் தனியே காண்பதே யாகும்; ஏனெனில் சில பொருள்களுக்கு வினையெச்ச வடிவம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் **கொள்** என்னும் வினை, **இரு** என்னும் வினையுடன் சேர்ந்து, ஒரு வினையின் தொடர்ந்தியங்கும் வினைமையைக் (Progressive Aspect of a verb) குறிக்கும் போது, அது எப்போதும் வினை யெச்ச வடிவிலேயே இயங்குகிறது.

3. அவன் படித்துக் கொண்டிருந்தான்

இவ்வினையெச்ச வடிவம் இணைநிகழ்ப் பொருளைக் (Simultaneous meaning) குறிப்பதற்கும் பயன்படுகிறது. மேலும், முற்று வடி

விற்குப் பதிலாக வினையெச்ச வடிவைப் பயன்படுத்தும் போது, வினையெச்சத்திற்குப் பொதுவாய் உள்ள பொருளையும் பெறுகிறது.

4. அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள்

5. அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு பேசினாள்.

வாக்கியம் 5-ல் **கொண்டு** என்னும் வினையெச்சம் அவள் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு **பிறகு** பேசினாள் என்பதையும் குறிக்கிறது. அதாவது பேசுவதாகிய செயல் சமாதானப்படுத்துதல் ஆகிய செயலுக்குப்பின் நடைபெறுகிறது என்பதைக் காட்டுகிறது. எனவே, 5-ஆம் வாக்கியத்தில் அது தற்சுட்டுப் பொருளுடன் சீரலைப் பொருளையும், (Sequential meaning)[2] பெறுகிறது; குறிப்பாக இவ் வாக்கியத்தில் இரண்டாவது பொருளே சிறந்து நிற்கிறது. எனவே கொள் என்னும் வினையின் முற்று வடிவத்தையும் எச்ச வடிவத்தையும் தனித்தனியே ஆராய்ந்தறிவது, குழப்பத்தைத் தவிர்க்க உதவும்.

2. கொள் என்னும் துணைவினையின் பொருள்

கொள் என்னும் துணைவினையின் பொருள்களை ஆராயுமிடத்து மூன்று பெரும் பகுப்புக்களைக் காணமுடிகிறது.

அ. வினைமுற்றின் பொருள்கள்

2.1 தன்வழிப் பொருள் (The Ego-directional[3] meaning)

2.1.1 தற்சுட்டுப் பொருள் (Reflexive meaning)

2.1.2 அரைதற்சுட்டு / தற்சுட்டின்மை (Quasi - reflexive/ non-reflexive).

2.1.2.1 கருதிச் செய்தல் + உறுதிப்பாடான பயன் பெறுதல் (Intentive + Positive Resultative)

2.1.2.2 தன்முயற்சி (Self-endeavour)

2.2 எதிர் இயக்கப் பொருள்/இரட்டைத் தற்சுட்டு (Reciprocative/Dual reflexive)

ஆ. வினையெச்ச வடிவின் பொருள்கள்

2.3 தொடர்ந்தியங்கல் **(Progressive)**

2.4 இணை நிகழ்வு **(Simultaneous)**

2.5 கருவி **(Instrumental)**

இ. 2.6. கூட்டு வினையில் இடம் பெறுதல்
(Occurrence in Compound Verbs)

2,1 தன்வழிப் பொருள்

Ego-directional என்னும் பெயர் குமாரசாமி ராஜாவால் (1976) பொருத்தமாக வழங்கப்பட்டுள்ளது. **கொள்** முற்று வடிவில் இடம் பெறும் போது அதன் முதன்மையான பொருள் தன்வழிப் பொருளாகவே உள்ளது. மேற்குறிப்பிடப்பட்டிருப்பது போல், அதன் மற்றைய பொருள் எதிர் இயக்கப் பொருளாகும். அதிகமாக வழக்கிலுள்ள தற்சுட்டுப்பொருளும் ஒருவகையில் தன்வழிப் பொருளைச் சார்ந்ததே. எனவே தன்வழிப் பொருள் பின்வரும் முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்சுட்டுப்பொருள், கருதிச் செய்தல் + உறுதிப்பாடான பயன் பெறுதல், தன்முயற்சிப் பொருள். பின்னிரு பொருள்களிலும் **கொள்** என்னும் சொல் சில சமயங்களில் தற்சுட்டற்ற பொருளையும் பெறுகின்றது.

2.1.1 தற்சுட்டுப் பொருள்

தற்சுட்டுப் பொருளில் **கொள்** அவசியம் பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு சொல்லாகிறது.

6. அவன் தன்னைப் பாராட்டிக் கொண்டான்.

மேலும் தொடர்வதற்கு முன் தற்சுட்டுப் பொருள் என்றால் என்னவென்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். கூர்ம் **(Curme, 1931:100)** என்பவர் ஆங்கிலத் தற்சுட்டுப் பொருளைப் பின் வருமாறு விளக்குகின்றார். "வினைமுதல் தன்மேலேயே ஒரு வினையைச் செய்கிறான் என்பதைக் காட்டுவதற்குப் பெரும்பாலும் ஒரு தற்சுட்டுப் பதிற்பெயர் செயப்படுபொருள் குன்றா வினைகளுடன் சேர்க்கப்படும். **'He dressed himself quickly'** (அவன் விரைவில் ஆடைகளை அணிந்து கொண்டான்)."[4] தற்சுட்டு மாற்றுவிதி பின்

வருமாறு விளக்கப்படுகிறது. "Huck stretched Huck out on the raft" => Huck stretched himself out on the raft' (ஹக் கட்டு மரத்தில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டான்) என்பதிலுள்ளது போல் வினை முதலாக வரும் பெயர்த்தொடருடன் ஒத்திருக்கும் செயப்படுபொருளான பெயர்த் தொடருக்கு ஒரு தற்சுட்டு அங்கத்தையும் (Reflexive feature) பதிற் பெயர் அங்கத்தையும் Pronoun feature) இணைக்கும் ஒரு மாற்று விதியாகும்"[5] (Palmatier, 1972: 144). "ஒரே தனி வாக்கியத்தில் இரு பெயர்த் தொடர்கள் ஒன்றை யொன்று ஒத்திருக்கும் போதெல்லாம்"[6] (Jocobs & Rosenbaum, 1976: 31) தற்சுட்டு மாற்றுவிதி செயல்படும். இந்த விளக்கங்களி லிருந்து, ஒரு தெளிவான, திட்டவட்டமான விளக்கத்தைப் பெறலாம். தற்சுட்டுப் பொருளில் வினைமுதலே தன் செயலின் விளைவுக்கு ஆளாவான்; எனவே செய்வோனும் வினையின் விளைவை அனுப விப்போனும் ஒருவனாகவே இருக்க வேண்டியது அவசியமாகிறது; மேலும் செய்வோனும் அநுபவிப்போனும் ஒரே தனிவாக்கியத்தில் இடம்பெறுதலும், வாக்கியத்தின் வினை செயப்படுபொருள் குன்றா வினையாக இருக்க வேண்டுவதும் அவசியமாகின்றன.

7. ராதை, ராதையைத் திட்டினாள் =>
ராதை தன்னைத் திட்டிக்கொண்டாள்

தமிழில் ஒரு வாக்கியம் தற்சுட்டுப் பொருளில் வரும்போது, அதன் அகவாக்கியத்தின் மீது இரண்டு மாற்று விதிகள் செயல்படுகின்றன: 1. செய்வோனோடு ஒத்திருக்கும் அநுபவிப்போனைக் குறிக்கும் பெயர்த்தொடர் குறிப்பிட்ட பதிற்பெயரின் வேற்றுமைத் திரிபு வடிவத் தால் (oblique form) மாற்றியமைக்கப்படும்; 2. **கொள்** என்னும் துணைவினை வாக்கியத்தின் வினையுடன் சேர்க்கப்படும்.

கொள்ளின் தற்சுட்டுப் பொருளை, அதன் முதல் வினைக்குரிய பொருள்களுடன் தொடர்புபடுத்திக் காட்டுவதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. **கொள்** என்னும் முதல் வினைக்கு **பெறுதல்** என்னும் பொருளும் உண்டு. இந்தப் பொருளே தற்சுட்டுப் பொருளுக்கு அடிப் படையாக இருந்திருக்கலாம். 'அவன் தன்னைப் பாராட்டிக் கொண் டான்' என்னும்போது 'அவன் பாராட்டுதலால் ஆகிய விளைவைப் பெற்றான்' என்றே பொருள்படும். மேலும் **கொள்** என்னும்

வினைக்குச் செயப்படுபொருள் குன்றா பொருளாகக் கொடுக்கப் பட்டிருக்கும் பொருள்களில் பெரும்பாலானவை ஒருவகையில் தன்வழிப் பொருளைத் தம்முள் கொண்டே உள்ளன: பெறுதல், கையால் எடுத்துக்கொள்ளுதல், விவாகம் செய்தல், கவர்தல், தன்னுட் கொள்ளுதல், முகத்தல், கற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல்.

2.1.2. தன்வழிப் பொருளைச் சார்ந்த 2-ம் 3-ம் உட்பிரிவுகள் தம்முள் தன்வழிப் பொருளைக் கொண்டுள்ளன என்னும் கூற்றின் உறுதிப்பாடு

கொள் என்னும் துணைவினையின் 'கருதிச் செய்தல் + உறுதிப்பாடான பயன்பெறுதல்', 'தன்முயற்சி' ஆகிய பொருள்களைப் பற்றி ஆராயுமுன், இப்பொருள்களின் அடிப்படையில் தன்வழிப் பொருள் அமைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த இரு பொருள்களையுமுடைய வாக்கியங்களில் **கொள்** கட்டாயமாக இடம் பெற வேண்டுமென்பதில்லை. சில வாக்கியங்களில் காணப்படுவதை விடச் சில வாக்கியங்களில் தன்வழிப் பொருண்மை அதிகமாகக் காணப்படுகிறது; எனவே, அவை முறையே தற்சுட்டில்லா வாக்கியம், அரை தற்சுட்டில்லா வாக்கியம் என அழைக்கப்பட்டுள்ளன.

அரை தற்சுட்டுப் பொருள்

இந்தப் பொருளில் **கொள்** இடம்பெறும்போது, பின்வரும் சிறப்புப் பொருள்களை அது குறிக்கும்: 'தனக்காகச் செய்யப்படும் செயல்' (deed for the self), 'தன்னுடைய உடலங்கமொன்றின் மேல் செய்யப்படும் செயல்' (deed on one part of ones own body), 'தனக்குள் இடம்பெறும் செயல்' (deed within the self).

8. அவள் தன் கண்ணுக்கு மை இட்டுக் கொண்டாள் (தனக்காகச் செய்யப்படும் செயல்)

9. அந்த வலியில் நான் என் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டேன். (தன்னுடைய உடல் அங்கமொன்றின்மேல் செய்யப்படும் செயல்.)

10. காரணத்தைக் காசிம் தெளிவாகவே அனுமானித்துக் கொண்டான். (தனக்குள் இடம்பெறும் செயல்)

இம்மாதிரி வாக்கியங்களில் **கொள்** இடம்பெறும் போது, அது வினை முதலுக்கேற்ற பதிற் பெயரின் உட்செருகலையே (insertion) அநுமதிக்கும்; வினைமுதலுடன் மாறுபடும் பதிற்பெயர்களின் உட்செருகலை அநுமதிக்காது. எடுத்துக்காட்டாக, *'நான் அவள் கையைக் கடித்துக் கொண்டேன்' என்று எழுத முடியாது.

8–10 வரை உள்ள வாக்கியங்கள் முழுமையான தற்சுட்டு வாக்கியங்களாகும் தகுதியைப் பெறாவிடினும், அவற்றில் ஓரளவு தற்சுட்டு இயல்பு காணப்படுகிறது. குறிப்பாக 'தன்னுடைய உடலங்கமொன்றின்மேல் செய்யப்படும் செயலைக்', குறிக்கும் வாக்கியம்–9 ஒரு தற்சுட்டு வாக்கியம் போலவே உள்ளது. இவ்வாக்கியம் ஏன் ஒரு தற்சுட்டு வாக்கியமாகவே இருக்கக் கூடாது என்னும் ஓர் ஐயப்பாடு தோன்றலாம். ஆனால் தற்சுட்டுப் பொருளுக்குத் தரப்பட்டுள்ள விளக்கத்தின்படி, இது ஒரு நூற்றுக்கு நூறு தற்சுட்டு வாக்கியமாக இருந்தால், இதில் வரும் செய்வோனும் அநுபவிப்போனும் ஒத்திருக்க வேண்டும். ஆனால் வாக்கியம் 9–ல் இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், தற்சுட்டுப் பொருளுக்கான விளக்கத்தின்படி, செய்வோனும் அநுபவிப்போனும் தனி வாக்கியத்தில் இடம்பெற வேண்டும். வாக்கியம் 9–ல் வரும் பதிற்பெயர் அவ்வாக்கியத்திள்ள செயப்படுபொருளின் அடையாக வருகின்றது; எனவே, அப்பதிற்பெயர் இன்னுமொரு வாக்கியத்தில் இடம்பெறும் பெயராகும்.

11. நான் என் கையைக் கடித்துக்கொண்டேன் >
நான் கையைக் கடித்தேன்; எனக்குக் கை இருக்கிறது/கை என்னுடையது.

தற்சுட்டுப் பொருளின்மை

ஒரு வாக்கியத்தில் வரும் பதிற்பெயர் 'தனக்காக', 'தானே, என்னும் வடிவத்தைப் பெற்று வரும்போது இப்பொருள் இடம்பெறும்.

12. அவள் தனக்காக ஒரு புத்தகம் வாங்கிக்கொண்டாள்

13. அவள் தானே தன் துணிகளைத் துவைத்துக்கொண்டாள்
இவ்வாக்கியங்களில், செய்வோனே தன் செயலின்

விளைவை அநுபவிப்பவனாக இருக்கவேண்டிய அவசிய மில்லை. எடுத்துக்காட்டாக, பின்வரும் வாக்கியங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகும்.

14. அவள் தன் தோழிக்காக ஒரு புத்தகம் வாங்கிக் கொண்டாள்.

15. அவள் தன் குழந்தையின் துணிகளைத் தானே துவைத்துக் கொண்டாள்.

வாக்கியம் 14-ல், பயன்பெறுபவர் தோழியாக இருப்பினும், வாக்கியம் கூறப்படும் நேரத்தில் புத்தகம் வினைமுதலாகிய 'அவளி'ன் கை களையே வந்தடைகிறது. வாக்கியம் 15-ல் வினைமுதல் வேலையைத் தானே செய்கிறாள்; எனவே இங்கு ஒருவித தன்முனைப்பினைக் காணமுடிகிறது. 14-ம், 15-ம் வாக்கியங்கள் தற்சுட்டு வாக்கியங் களாக இல்லாவிடினும், இவற்றில் தன்வழிப் பொருளைக் காண முடிகிறது. அரை தற்சுட்டுப் பொருள் தன்வழிப் பொருளைச் சார்ந்தது என்பதில் ஐயமேயில்லை.

தன்வழிப் பொருள், தற்சுட்டு, அரைதற்சுட்டு, தற்சுட்டின்மை ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் பொதுவானதொரு பொருளாக உள்ளது. இந்நிலையில் சில கேள்விகள் எழுவது இயல்பு. அரை தற்சுட்டு, தற்சுட்டற்ற வாக்கியங்களில் **கொள்** பயன்படுத்தப்படுவதன் காரணம் என்ன? இவ்வகையான வாக்கியங்களில் **கொள்** என்னும் துணைவினையால் குறிக்கப்படும் சிறப்புப் பொருள்தான் என்ன? **கொள்**-ளுடன் சேர்ந்து வரும் ஒரு வினைக்கும், அதனுடன் சேர்ந்து வராத அதே வினைக்குமிடையில் பொருள் வேறுபாடு உண்டா? இத்தகைய பொருள் வேறுபாட்டை எளிதில் காணமுடியாவிட்டாலும், இத்தகைய வினைகள் சில சூழ்நிலைகளில் வரும்போது அவற்றிற் கிடையே நுண்ணியதொரு வேறுபாட்டைக் காணமுடிகிறது.

2.1.2.1 கருதிச் செய்தல் + உறுதிப்பாடான பயன் பெறுதல்

கீழ்வரும் வாக்கியங்களில் **கொள்** 'கருதிச் செய்தல்' என்னும் பொருளைத் தெளிவாகக் காட்டுகிறது.

16. அவன் விரைந்து வரும் காரில் அடிபடாமலிருக்க

{ ஒதுங்கிக் கொண்டான் / *ஒதுங்கினான் }

17. அவன் தன்னை நோக்கி வரும் துப்பாக்கி ரவையிலிருந்து தப்பிப்பதற்காக தரையில் { படுத்துக்கொண்டான் / *படுத்தான் }

18. அவள் வருவதையறிந்து நான் { ஒளிந்து கொண்டேன் / *ஒளிந்தேன் }

இம்மூன்று எடுத்துக் காட்டுக்களிலும், **வினை + கொள்**, **வினை** ஆகியவற்றின் பயன்பாட்டில் ஒரு கட்டுப்பாட்டைக் காண முடிகிறது. இம்மூன்று வாக்கியங்களிலும் 'கருதிச் செய்தல்' என்னும் **கொள்**-ளின் பொருளைத் தெளிவாக உணரமுடிகிறது.

கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து மற்றுமொரு வேறுபாட்டையும் அறியலாம்.

19. அவன் விரைந்து வரும் காரில் அடிபடாமலிருக்க { *ஒதுங்கிக்கொண்டான் / ஒதுங்கினான் }; ஆனால் கார் அவனை மோதிவிட்டது.[7]

20. அவள் நீண்டநேர சிந்தனைக்குப் பிறகு அந்தப் புத்தகத்தை { *எடுத்துக்கொண்டாள் / எடுத்தாள் } ; ஆனால் அதற்குள் திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

இந்த இரு வாக்கியங்களிலும், வெற்றிகரமாய் ஒரு செயலை முடிக்குந் தன்மையைக் **கொள்** சுட்டுகின்றது; **கொள்**-ளுடன் சேர்ந்து வரும் வினையின் விளைவைப் பற்றிய ஐயப்பாடு எழுவதற்கு இடமில்லை 'ஒதுங்கிக் கொண்டான்' 'எடுத்துக்கொண்டாள்' ஆகிய இரு வினைகளிலும் அவற்றின் உறுதிப்பாடான பயன் காணப் படுகிறது; அதனாற்றான், ஆனால்' என்று ஆரம்பிக்கும் வாக்கியங் கள் அவ்விரு வினைகளையும் தொடர்ந்து வரமுடியவில்லை. இவ் வாக்கியங்களில் **கொள்** 'கருதிச் செய்தல்', 'உறுதிப்பாடான பயன் பெறுதல்' ஆகிய பொருள்களைக் குறிக்கிறது.

இப்பொருள்கள் **கொள்** என்னும் முதல் வினையின் பொருள் களுடன் தொடர்புடையனவா? **கொள்**-ளின் பத்தாவது பொருள் 'கருதுதல்' என்பதாகும். இப்பொருள் 'கருதிச் செய்தல்' என்னும் பொருளுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. 'உறுதிப் பாடான பயன் பெறுதல்' என்னும் பொருளின் நிலை என்ன? **கொள்** என்னும் வினைக்குரிய பொருள் எதுவும் 'உறுதிப்பாடான பயன்' என்னும் பொருளுடன் தொடர்புடையதாகத் தோன்றவில்லை. குறள் 1009-ல், **கொள்** 'பயன் அடைதல்' என்னும் பொருளில் பயன்படுத் தப் பட்டுள்ளது. அந்தக் குறள் பின் வருமாறு:

அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

'ஒண்பொருள் கொள்வார் பிறர்' என்றால் 'மற்றவர் (அப்)பெரும் செல்வத்தின் பயனை அடைவர்' என்று பொருள். இப்பொருள் 'உறுதிப்பாடான பயன் பெறுதல்' என்னும் பொருளுடன் ஓரளவு தொடர்புடையதாக இருக்கிறது. 19-ம், 20-ம் வாக்கியங்களில், **கொள்** என்னும் துணைவினை இடம் பெறும்போது, வினையைச் செய்தவர்கள் அவ்வினையைச் செய்ததற்கான குறிக்கோளை முழு மையாக அடைகிறார்கள்; அதாவது அவர்கள் அவ்வினையின் முழு மையான பயனைப் பெறுகிறார்கள்.

2.1.2.2 தன்முயற்சிப் பொருள்[3]

ஒரு வாக்கியத்தில் புகுத்தப்படும் பதிற்பெயர் 'தானே' என்னும் வாய்பாட்டில் அமையும்போது **கொள்** செய்பவனது 'தன்முயற்சியைச்' சுட்டுவதாக உள்ளது.

21. மாலா தானே தன் சட்டையைத் தைத்துக் கொண்டாள்

22. மாலா தன் குழந்தையின் சட்டையைத் தானே தைத்துக் கொண்டாள்

23. அந்தக் குழந்தை தானே சாப்பிட்டுக் கொண்டது.

இந்தப் பொருள் **கொள்**-ளின் 15-வது பொருளுடன் தொடர்புடைய தாக இருக்கலாம். 15-வது பொருளாவது, 'மனம் பொறுத்தல்'/ 'தாங்கிக் கொள்ளுதல்' என்பதாகும். 'தன் முயற்சி', 'தாங்கிக்

கொள்ளுதல்' ஆகிய இரு பொருள்களுக்கும் ஒரு பொதுவான அடிப்படை காணப்படுகிறது. ஒருவர் ஒரு துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் போது, அவர் அத்துன்பத்தைத் தாங்குவதற்கு மௌனமாகப் பெருமுயற்சியில் ஈடுபடுகிறார். ஒருவர் ஒரு செயலை நிறைவேற்ற எண்ணும்போது, வெளிப்படையாக பெருமுயற்சியுடன் அச்செயலில் ஈடுபடுகிறார்.

தன்வழிப் பொருளில் வரும் **கொள்**-ளினது இரண்டாவது, மூன்றாவது பொருள்களைப் பற்றிய விளக்கங்களிலிருந்து, இடம் பெறும் சூழ்நிலைக்கேற்ப **கொள்**-ளினுடன் வரும் வினைகள் கருதிச் செய்தல் + உறுதிப்பாடான பயன் பெறுதல்' என்னும் பொருளையோ 'தன்முயற்சி' என்னும் பொருளையோ பெறும் என்னும் ஒரு பொது விதியைக் கூறலாம். எடுத்துக்காட்டாக, 16-ம் வாக்கியத்தில் 'கருதிச் செய்தல்' என்னும் பொருளில் வந்துள்ள 'ஓதுங்கிக்கொண்டான்' என்னும் வினை 'தன் முயற்சி'ப் பொருளிலும் வரக்கூடும்.

24. அவர்கள் இயல்பை அறிந்து அவன் தானே ஒதுங்கிக் கொண்டான்.

சில வினைகளைப் பொருத்தமட்டில் **கொள்** என்னும் வினையின் தற்சுட்டுப் பொருள் கூட சூழ்நிலையைப் பொருத்தே அமைகிறது. வாக்கியம் 4-ல் 'சமாதானப்படுத்திக் கொண்டாள்' என்னும் வினை தற்சுட்டுப் பொருளைக் குறிக்கின்றது; பின்வரும் வாக்கியத்தில் அது 'தன்முயற்சி'யைக் குறிக்கின்றது.

25. நான் அவளை எப்படியாவது சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

வாக்கியம் 25 பேசுபவரின் தளர்ச்சியடையா இயல்பைக் காட்டுகிறது; அவரின் பெருமுயற்சியையும் அது காட்டுகிறது. எனவே இடம்பெறும் சூழ்நிலைக்கேற்ப, **கொள்** தன்வழிப் பொருளின்பாற்பட்ட மூன்று பொருள்களில் ஒன்றினைப் பெறுகிறது. இவ்விதி **கொள்**-ளுடன் சேரும் எல்லா செயப்படு பொருள் குன்றா வினைகளுக்கும் ஏற்புடைத்தாகுமா என்பதை இன்னும் நுண்ணியதாக ஆராய்ந்தறிய வேண்டும்; செயப்படுபொருள் குன்றிய வினைகள் தற்சுட்டுப் பொருளில் வருவதில்லை என்பது யாவருமறிந்த செய்தியாகும்.

2.2 எதிர் இயக்கப் பொருள் / இரட்டைத் தற்சுட்டுப் பொருள்

இந்தப் பொருள் தற்சுட்டுப் பொருளிலிருந்து விரிவடைந்த ஒரு பொருளாகும். இரண்டு வினைமுதல்களை ஏற்கும் 'ஒப்பந்தம் செய்' 'பேசு' போன்ற வினைகளுடன் சேரும்போது **கொள்** இப்பொருளைப் பெறுகிறது.

26. ஒவ்வோர் ஆண்டும் பணியாட்களுடன் அவர்கள் புதிய ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்.

27. ராதையும் சீதையும் பேசிக் கொண்டார்கள்

'பார்', 'உணர்' போன்ற வினைகள் இரண்டு வினைமுதல்களைக் கொண்டிருக்கும்போது எதிர் இயக்கப் பொருளைத் தருகின்றன. அவ்வாறில்லாமல் ஒரே வினைமுதலை ஏற்கும்போது தற்சுட்டுப் பொருளையோ மற்றப் பொருள்களையோ தருகின்றன.

28. அவள் ஒரு சோக சித்திரம் என்பதை அவனும், அவன் ஒரு சுமைதாங்கி என்பதை அவளும் உணர்ந்து கொண்டாயிற்று.

29, அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மேற்கூறியது போல், 'எதிர் இயக்கப் பொருள்' தற்சுட்டுப் பொருளினின்றும் விரிவடைந்ததொரு பொருளாகும். 'அ', 'ஆ' மீது செய்த செயல் 'ஆ' வால் 'அ' மீது திரும்பச் செய்யப்படுவதே எதிர் இயக்கப் பொருளாகும். இந்நிலை மாறியமைந்தாலும் (vice versa) அதே பொருளே பெறப்படும். 'அ', 'ஆ'வை அடித்தான்', 'ஆ' 'அ'வை அடித்தான்' என்னும் இரண்டு வாக்கியங்கள் உள்ளபோது தான் எதிர் இயக்கப் பொருள் உண்டாகும்,

எதிர் இயக்கப் பொருள் பன்மையில் வரும் தற்சுட்டு/அரை தற்சுட்டு/ தற்சுட்டின்மை ஆகிய பொருள்களிலிருந்து வேறுபடுத்தி அறியப்பட வேண்டும். பின் வருபவை முறையே பன்மைப் பொரு

ளில் அமைந்த தற்சுட்டு, அரைதற்சுட்டு, தற்சுட்டின்மை ஆகிய பொருள்களை உடைய வாக்கியங்களாகும்.

30. அவர்கள் தங்களை உணர்ந்து கொண்டார்கள்

31. அவர்கள் தங்களுக்குள் எண்ணிக் கொண்டார்கள்

32. அவர்கள் தங்களுக்காக ஒரு வீட்டை வாங்கிக் கொண்டார்கள்.

இவற்றிற்கான விளக்கம் ஒருமையில் வந்த இப்பொருள்களின் விளக்கத்தைப் போலவே அமையும். 'தங்களை', 'தங்களுக்குள்' போன்ற சொற்களுக்குப் பதிலாக எதிர் இயக்கப் பொருளுடைய வாக்கியங்களில் 'ஒருவரை யொருவர்', 'ஒருவரோடு ஒருவர்' போன்ற சொற்களைப் புகுத்தலாம்.

2.3. 'தொடர்ந்தியங்கல்' பொருள்

இப்பொருள் **கொண்டு+இரு** என்கிற கூட்டுச் சொல்லை முதல் வினையுடன் இணைப்பதால் பெறப்படுகிறது.

33. அவன் புத்தகம் படித்துக்கொண்டிருந்தான்.

34. நான் போனபோது அவள் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள்

ஒரு வினையுடன் **இரு** என்னும் வினை மட்டும் சேரும்போது ஒரு செயல் முற்றுபெற்ற நிலையையும் (perfective aspect), அவ்வினையுடன் **கொண்டு+இரு** ஆகிய இரு துணைவினைகளும் சேரும் போது அச்செயல் தொடர்ந்தியங்கும் நிலையையும் காணமுடிகிறது. எனவே, **கொள்** இடம்பெறுதலும் இடம்பெறாமையுமே ஒரு வினையின் தொடர்ந்தியங்கும் நிலையையும் முற்றுப்பெற்ற நிலையையும் நிர்ணயிக்கின்றது. எனவே, **கொண்டு** என்னும் துணைவினையே ஒரு வினையின் தொடர்ந்தியங்கும் நிலையினைக் குறிப்பதில் முக்கிய பங்கு ஆற்றுகிறது என்று கூறலாம்.

கொள் என்னும் துணைவினை எங்கிருந்து 'தொடர்ந்தியங்குதல்' என்னும் பொருளைப் பெறுகின்றது? 1183-ஆம் குறள் இப்பிரச்சனையை ஓரளவு தீர்த்துவைப்பதாக உள்ளது.

சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து

'கொண்டார்' என்னும் "சொல் எடுத்துச் சென்று விட்டார்' என்னும் பொருளைக் கொண்டுள்ளது. எனவே **கொள்,** இங்கு 'கூட எடுத்துச் செல்லுதல்' என்னும் பொருளில் வந்துள்ளது. இக்குறளில், குறிக்கப்பட்ட பொருள்கள் (அதாவது, சாயலும் நாணும்) அவர் போகும் போது அவருடன் 'தொடர்ந்து சென்றன' என்னும் பொருளைக் **கொள்** குறிக்கின்றது. அதேபோல், 'தொடர்ந்தியங்கல்' பொருளை உடைய வாக்கியங்களில் வரும் **கொண்டு** என்னும் சொல் முதல் வினையால் குறிக்கப்பட்ட செயல் வாக்கியம் ஒலிக்கும் நேரத்திலும் தொடர்ந்தியங்குவதைக் குறிக்கின்றது.

2.5 இணை நிகழ்வுப் பொருள்

கொண்டு என்னும் வினையெச்சம் ஒரே சமயத்தில் இரு நிகழ்ச்சிகள் நிகழ்வதைக் குறிக்கவும் பயன்படுகிறது.

35. 'நாட் அட் ஆல்'... என்று சொல்லிக் கொண்டே கையில் இருந்த பேனாவை மூடி வைத்தேன்.

36. கபூர் 'சேரி'ல் சாய்ந்து கொண்டு, தன் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

35-ம், 36-ம் வாக்கியங்களில் ஒரே சமயத்தில் இரு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போது மற்றொரு நிகழ்ச்சியும் அதனுடன் சேர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு நிகழ்ச்சி நடைபெறும் நேரத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் 'தொடருகிறது'. எனவே இப்பொருளுக்கும் 'தொடர்ந்தியங்கல்' பொருளுக்குக் கொடுத்த, காரணத்தையும் விளக்கத்தையும் கொடுக்கலாம்,

ஒரு வினை அடுத்த வினை நடைபெறும்போதும் தொடருகிறது என்பதை மட்டுமல்லாமல், முதல் வினையையடுத்து இரண்டாவது வினை தொடருகிறது என்கிற சீரலைப் பொருளையும் சில சமயங் களில் **கொள்** தருகிறது.

37. அவன் சோபாவில் சாய்ந்துகொண்டு, காலை மேசையில் தூக்கிப்போட்டான்.

38. கடிதங்களை எடுத்துக்கொண்டு அவள் உள்ளே வந்தாள்.

37–ம் 38–ம் வாக்கியங்களைப் பின்வருமாறு விரிவாக மாற்றி எழுதலாம்.

39. அவன் சோபாவில் சாய்ந்துகொண்டான்; பின் காலை சோபாவில் தூக்கிப்போட்டான்.

40. (அவள்) கடிதங்களை எடுத்துக்கொண்டாள்;
பின் அவள் உள்ளே வந்தாள்.

37–ம், 38–ம் வாக்கியங்களில் **கொண்டு** ஓர் இணைப்பு உருபு போலவே செயல்படுகிறது. சில மொழியியலாளர் வினையெச்சங் களுக்கு இணைப்புப் பொருளைத் தரும் ஓர் இயல்பு **உ**ண்டு என்னும் கருத்தைக் கொண்டுள்ளார்கள் (மீனாட்சி சுந்தரம், 1965 : 79 – 80). 'அவன் வந்து சாப்பிட்டான்' > 'அவன் வந்தான்; அதன்பின் அவன் சாப்பிட்டான்'. எனவே இந்தச் சீரலைப் பொருளுக்கான காரணத்தை வினையெச்சங்களுக்கே உரிய தொரு இயல்பின் அடிப்படையை வைத்தே விளக்கலாம். ஆகவே இம்மாதிரி வாக்கியங்களில் **கொள்** என்பது முக்கியமாக முதல் வினை அடுத்த வினை நடைபெறும்போது தொடருவதையே குறிக் கிறது.

கொண்டு என்னும் வினையெச்சம் இணைநிகழ்வுப் பொருளை யோ சீரலைப் பொருளையோ பெறுவது, ஒரு வாக்கியத்தில் இடம் பெறும் இரண்டு வினைகளின் இயல்பைப் பொருத்தே உள்ளது. 'பேசுவதும்', 'பேனாவை மூடுவது' மான செயல்கள் ஒரே சமயத்தில் செய்யக் கூடியவை; ஏனெனில் அந்த இரண்டு செயல்களும் உடலின் இரு வேறு அங்கங்களால் செய்யப்படுவன. ஆனால் ஒருவர் உட்

சார்ந்த பின்தான், தனது கால்களை எதிரில் உள்ள மேஜைமீது நீட்டமுடியும். எனவே, இம்மாதிரியான இடங்களில் **கொள்**-ளினது முக்கிய பொருள் இணைநிகழ்வுப் பொருளேயாகும்.

2.5. கருவிப் பொருள்

கொள் இப்பொருளில் வரும்போது, **கொண்டு** என்பது ஒரு கருவி வேற்றுமை யுருபாக கொள்ளப்படுகிறது.

41. லீலா கத்தியைக் கொண்டு பழத்தை வெட்டினாள்

42. அவன் பேனாவைக் கொண்டு எழுதினான்.

'உறுதிப்பாடான பயன் பெறுதல்' என்ற பொருளுக்குக் கூறிய காரணத்தையே இப்பொருளுக்கும் கூறலாம். அப்பொருளுக்கான காரணத்தை ஆராய்ந்தபோது, **கொள்** என்பது 'பயன் பெறுதல்' என்னும் பொருளில் வந்துள்ள ஒரு குறட்பா குறிப்பிடப்பட்டது. கருவிப்பொருளையும் இப்பொருளிலிருந்தே பெறலாம். 41-ம், 42-ம் வாக்கியங்களைப் பின்வருமாறு மாற்றியெழுதலாம்.

43. லீலா கத்தியைப் பயன்படுத்திப் பழத்தை வெட்டினாள்

44. அவன் பேனாவைப் பயன்படுத்தி எழுதினான்.

2 6 கூட்டு வினைகள்

'ஒப்புக் கொள்', 'புரிந்து கொள்', 'நொந்து கொள்', 'ஏற்றுக் கொள்', 'நடந்து கொள்', 'கொண்டு வா', 'கொண்டு போ' போன்றவையெல்லாம் கூட்டு வினைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஏவல் வினைகளாக வரும்போது இவையெல்லாம் ஒரே தனிச்சொல் போல் பயன்படுவதால் இவை கூட்டு வினைகளெனக் கருதப்பட்டுள்ளன. *ஒப்பு, *புரி, *நோ, *ஏல் போன்ற வடிவங்கள் ஏவல் வினை வடிவங்களாகத் தனித்து வருவதேயில்லை. 'நடந்து கொள் என்னும் வினை 'நட' என்னும் வினையினின்றும் வேறுபட்ட பொருளையுடையது.

ஒருவனுள் நடைபெறும் நிகழ்ச்சியையோ, ஒருவனுக்குப் பயனளிக்கும் நிகழ்ச்சியையோ குறிக்கும் வினைகளுடனேயே **கொள்**

சேர்ந்து வருவதால், இங்கும் அதன் தன் வழிப் பொருளைக் காண முடிகிறது.

'கொண்டு வா', 'கொண்டு போ', 'கொண்டு சேர்' போன்ற வினைகளில் **கொள்**-ளினது இணை நிகழ்வுப் பொருண்மை காணப் படுகிறது.

கொள் சில பெயர்ச் சொற்களுடன் சேர்ந்து, சம்பந்தப்பட்ட வினையை உருவாக்கித் தரவும் பயன்படுகிறது:

பங்குகொள், தொடர்புகொள், ஆட்கொள்

இவற்றில் **கொள்** ஒரு வினையாக்கச் சொல்லாகப் (verbaliser) பயன் படுகிறது. இவற்றில் **கொள்** என்னும் வினையை முதல் வினையாகக் கொள்ளலாம். இந்த மூன்று சொற்களையும் பின்வருமாறு விரிவாய் எழுதலாம்.

பங்கைக் கொள், தொடர்பைக் கொள், ஆளைக் கொள்.

இத்தொடர்கள் முறையே, 'ஒரு பங்கை உரிமையாகக் கொள்ளுதல்', 'தொடர்பைப் பெறுதல்', 'ஓர் ஆளை உரிமையாகக் கொள்ளுதல்' என்று பொருள்படும்.

3. முடிவுரை

கொள் என்னும் துணைவினையைப் பற்றிய இச்சிற்றாய்வு துணைவினைகளின் இலக்கணப் பொருள்கள் சம்பந்தப்பட்ட முதல் வினைகளின் சொற்பொருள்களுடன் தொடர்புடையன என்னும் கூற்றை ஆதரிப்பதாக அமைந்துள்ளது. இது ஒரு முழுமை பெற்ற ஆய்வு என்று கூறுவதற்கில்லை; ஆனால் இந்தக் கட்டுரை இத் துணைவினையோடு மட்டுமல்லாமல் மற்ற துணை வினைகளையும் பற்றிய விரிவான ஆராய்ச்சியை நிகழ்த்துவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தால் அதுவே இக்கட்டுரையின் பயனாகும்.

குறிப்புக்கள்

1 'Though the auxiliaries, in majority of the cases, denote some kind of grammatical meaning there is every possibility of having a kind of connection between the

lexical meaning of the main verb and the so called grammatical meaning of the auxiliary." (Agesthialingom 1976).

2 சீரலைப் பொருள் வினையெச்சங்களின் பொதுவானதொரு இயல்பு என்பது இக்கட்டுரையின் பிறிதோரிடத்தில் விளக்கப் படும். (§ 2.4)

3 'Ego-directional' என்னும் சொல் டாக்டர் குமாரசாமி ராஜா அவர்களின் கட்டுரையிலிருந்து எடுத்தாளப் பட்டிருக்கிறது. (Kumaraswami Raja, 1976) இக்கட்டுரையில் இச்சொல் பின் வரும் சிறப்புப் பொருள்களைத் தன்னுள் கொண்டுள்ளது. தன் மேல் செய்யப்படும் செயல், தனக்காகச் செய்யப்படும் செயல், தனக்குள் இடம்பெறும் செயல், தன் சொந்தமாகவே செய்யப் படும் செயல், தன் நன்மைக்காகச் செய்யப்படும் செயல்.

4 "A reflexive pronoun is often added to transitive verbs to indicate that the subject acts upon himself. 'He dressed himself quickly'. " (Curme, 1931:100)

5 "... the transformation which adds a pronoun feature and a reflexive feature to a noun phrase object which is identical to the noun phrase subject of the same verb as when: 'Huck stretched Huck out on the raft' => 'Huck stretched himself out on the raft.' " (Palmatier, 1972 : 144)

6 "...applies whenever two noun phrases appearing in the same simple sentence are identical". (Jacobs & Rosenbaum, 1976 : 31)

7 'வினை + கொள்' என்னும் வினையினை முற்றாகக் கொண்ட வாக்கியங்களுக்குப் பின், 'ஆனால்' என்று தொடங்கும் வாக்கியங்கள் வரமாட்டா என்று சுட்டிக்காட்டிய அண்ணா மலைப் பல்கலைக்கழக மொழியியல் ஆராய்ச்சி மாணவி, செல்வி எம். சுசீலாவிற்கு நன்றி,

8 யெஸ்பெர்ஸன், கூர்ம் ஆகியோரும் ஆங்கிலத் தற்சுட்டு உருபான 'ஸெல்ஃப்' (self) என்னும் சொல் 'தன்முயற்சி' (self-endurance) என்னும் ஒரு பொருளைக் கொண்டுள்ளதை உணர்ந்துள்ளார்கள்.

i) (Jespersen, 1974:112). Sometimes there is an element of exertion in the reflexive use: 'we kept ourselves warm by walking to and fro' is more delibrate than 'we kept warm' etc.; cf. 'The soup did not keep warm very long'. 'He proved himself a fine fellow' emphasizes his endeavours while 'he proved a fine fellow' merely means the people saw that he was."

(சில சமயங்களில் தற்சுட்டுப் பிரயோகத்தில் ஒருவகைப் பெரு முயற்சி காணப்படுகிறது: 'நாங்கள் மேலும் கீழும் நடந்து எங்களை வெதுவெதுப்பாக வைத்துக் கொண்டோம்' என்பதில் 'நாங்கள் வெதுவெதுப்புடன் இருந்தோம்', 'சூப் அதிக நேரம் சூடாக இருக்கவில்லை' போன்றவற்றில் உள்ளதைவிட வேண்டு மென்று செய்யும் ஒரு நிலையினைத் தெளிவாகக் காணமுடி கிறது. 'அவன் தன்னை நல்லவனென்று நிலை நிறுத்திக் கொண்டான்' என்பது அவனுடைய முயற்சியைக் காட்டுகிறது; ஆனால் அவன், நல்லவனாகத் தோன்றினான்' என்பது மக்கள் அவனைப் பற்றிக் கொண்ட எண்ணத்தைச் சுட்டுகின்றது.)

ii) (Curme, 1931 : 259) "In connection with a verb, ***own*** preceded by a possessive adjective often emphasizes the idea of independent action on the part of the subject: She makes ***her own*** dresses' = 'She makes her dresses herself' ... In the predicate after a copula, ***own*** preceded by a possessive adjective often emphasizes the idea of independence on the part of the subject: 'I am my own master.' "

('ஓன்'(own)னுக்கு முன் உடைமைப் பதிற்பெயர் அடையாக அமைந்து அத்தொடர் ஒரு வினையுடன் தொடர்பு கொண்டுள்ள போது, அத்தொடர் வினைமுதலின் சுயேச்சையான (கட்டுப்

பாடற்ற) செய்கையை அறுதியிட்டுக் காட்டுகிறது: 'அவள் சொந்தமாகத் தன் சட்டைகளை தைத்துக் கொள்கிறாள்' => 'அவள் தானே தன் சட்டைகளைத் தைத்துக் கொள்கிறாள்'. ... கூட்டிடைச்சொல் ('am' என்னும் சொல்)லுக்குப் பின்வரும் பயனிலைத் தொடரில் உடைமைப் பதிற்பெயருடன் வரும் 'ஓன்' வினை முதலின் சுதந்திரத் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது: 'நானே என் எஜமான்'.

9 'சாய்ந்து கொண்டு' என்பது இணை நிகழ்வுப் பொருளைவிட, ஒரு செயல் எப்படி செய்யப்படுகிறது என்பதைக் காட்டுகிறது என்று சிலருக்குத் தோன்றலாம். கொண்டு என்பது இணை நிகழ்வுப் பொருளைக் குறிக்கும் போதெல்லாம், ஒரு வினையைச் செய்பவன் அதனை எவ்விதம் செய்கிறான் என்பதையும் காட்டவே செய்கிறது.

35-ம், 36-ம் வாக்கியங்களில் உள்ள 'சொல்லிக் கொண்டே', 'சாய்ந்து கொண்டு' ஆகியவற்றிற்குப் பதிலாக முறையே 'சொல்லியபடியே' / 'சொல்லியவாறே', 'சாய்ந்தபடி' / 'சாய்ந்த வாறு' ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்; ஆனால் குறிப்பிட்ட வினை எப்படி செய்யப்படுகின்றது என்பதை 37-ம் வாக்கியத்தைக் காட்டிலும் 38-ம் வாக்கியத்திலேயே அதிகமாகக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் 'சாய்ந்து' என்பது ஒரு இயங்கா வினை (stative verb) யாக இருப்பதாக இருக்கலாம். இவ்வகை வினைகளுடன் **கொண்டு** என்னும் வினையெச்சம் வரும்போது, அதன் பொருள் உண்மையில் இணை நிகழ்வுப் பொருளாக இருப்பினும் அது வினை செயல்படும் வகையைக் காட்டுவது போலவே தோன்றும்.

இணைப்புப் பொருளில் பயன்படும் வினையெச்சங்கள், வினை செய்யப்படும் வகையினைக் காட்டும் வினையடைகளாகவும் பயன்படுகின்றன. எனவே **கொண்டு** என்னும் வினையெச்சமும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது.

இந்திய மொழிகள் துறை
மலாயா பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

1 Agesthialingom, S. 1976 'Auxiliaries and main Verbs', Seminar on Auxiliaries in Dravidian, Annamalainagar (mimeo. copy).

2 Curme, George O. 1931 *Syntax*, D.C. Heath & Company, Boston.

3 Jacobs, Roderick A. & Rosenbaum, Peter S. 1976 *English Transformational Grammar*, Wiley Eastern University Edition, Wiley Eastern Limited, New Delhi.

4 Jespersen, Otto 1974 *Essentials of English Grammar*, George Allen & Union Ltd., Ruskin House museum Street, London (19th edition).

5. Kumaraswami Raja, 1976 'The Benefactive voice in Tamil' Seminar on Auxiliaries in Dravidian, Annamalainagar, (mimeo. copy).

6. Meenakshisundaram, T. P. 1965 *A History of Tamil Language*, Deccan College, Poona.

7. Palmatier, Robart A. 1972 *A Glossary for English Transformational Grammar*, Appleton - Century - Crafts, Educational Division, Meredith Corporation, 440 Park Avenue South, New York 10016, U.S.A.

8. Thinnappan, SP. 1976 'Auxiliary verbs in Tolk:appiyam', Seminar on Auxiliaries in Dravidian, Annamalainagar.

அறிவியல் தமிழின் தந்தை

'அமெரிக்க அகத்தியர்' எனப் போற்றப்படும் சாமுயல்கிறீன் என்பார் யாழ்ப்பாணத்துக்கு வந்து மானிப்பாயில் வைத்தியராயிருக்கும் பொழுது, பல மாணவர்களுக்குத் தமிழிலே வைத்திய சாத்திரத்தைக் கற்பிக்க முயன்றார். தம் முயற்சி நற்பயனளிப்பதற்குத் தமிழிலே பல நூற்கள் வேண்டும் என்றுணர்ந்தார். ஆங்கில மொழியிலே உள்ள பல வைத்திய நூற்களையும் பிற சாத்திர நூற்களையும் தம்முடைய மாணவர்களுடைய உதவியுடன் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்து செயற்கருஞ் செயல் செய்த பெருமையினைக் கொண்டார்; என்றுமழியாப் புகழ்பெற்றார். அங்காதிபாத சுகரணவாத ஹபாலன நூல், இரண வைத்தியம், வைத்தியாகரம், கெமிஸ்தம், மனுஷ சுகரணம், இந்து பதார்த்தசாரம் முதலியன இவர் பதிப்பித்த நூல்களாகும். வைத்தியக் கலைச்சொற் கோவைகளையும் இவர் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

— **கா. பொ. இரத்தினம்**

'இலங்கையில் இன்பத்தமிழ்' யாழ்ப்பாணம், 1959.

(நன்றி: சு. சக்திவேல்)

மொழிபெயர்ப்பும் மொழியியலும்

இருமொழி இலக்கணத்தின் (**Bilingual Grammar**) செயற்பாடே மொழிபெயர்ப்பு. இரண்டாவது ஒரு மொழியைக் கற்கும்பொழுது, முதன் மொழியின் தறுக்கீடு எப்பொழுதும் இருக்கும். இருமொழி இலக்கணத்தையும் நன்கு தெரிந்து எங்கெல்லாம் குறுக்கீடு வரும் எனக் கண்டு, முன்பே அதற்குத்தகப் பாடங்களை வகுத்துக் கற்பிக்க வேண்டும். இதைப்போலவே மொழிபெயர்க்கும்பொழுதும் சிக்கல்கள் ஏற்படும். இருமொழியமைப்பும் செம்மையாகத் தெரிந்தால் ஒழிய மொழிபெயர்ப்பு வேலையைச் செய்தல் இயலாது.

இந்தியாவில் மொழிபெயர்ப்புக்குச் சிறந்த வாய்ப்பு இருக்கிறது. அரசியல் சட்டத்தில் ஒத்துக்கொண்ட மொழிகளுக்குமேல் பலமொழிகள் இருக்கின்றன. ஒரு மொழியில் தோன்றிய சிறந்த இலக்கியங்களை மற்ற இந்திய மொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்க வேண்டும். பல்வேறு துறைகளில் உள்ள ஆங்கில நூற்களை, ஒவ்வொரு இந்திய மொழியிலும் மொழிபெயர்க்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் வேண்டும்.

— **டாக்டர் முத்துச்சண்முகம்**

இக்கால மொழியியல், 1980 மதுரை.

தமிழ் ஆய்வேடுகளில் காணும் சில குறைகள்

மா. சு. திருமலை

1. தமிழிலக்கண நூல்களில் குறிக்கப்படும் அழகுகளையும் குற்றங்களையும் உத்திகளையும் கருத்தில் கொண்டு நடையியலாய் வும் **சொலல் வன்மை ஆய்வும்** (rhetoric analysis) தமிழில் செய்யப் பட வேண்டும் என்னும் என் கொள்கையைச் சில இடங்களில் குறித் துள்ளேன். (திருமலை, 1976, 1979) இவ்வழகுகளும் குற்றங்களும் உத்திகளும் பெரும்பாலும் ஆய்வினால் கண்ட முடிபுகளை எவ்வாறு பிறர்க்குப் புரியும் வண்ணம் தெரிவிப்பது என்பதில் கவனம் செலுத் துவதே போன்று முடிபுகளை அடைவதற்குரிய வழிகளையோ முடி புக்கு அடிப்படையாய் அமைந்த காரணங்களை எப்படி அடையாளம் காண்பதென்றோ அதிக அளவு கூறுவதில்லை. இது தவிர்க்க முடியாத நிலை. தொன்றுதொட்டுத் தத்துவ இயலில் பேசப்படும் பிரச்சினை. இருப்பினும் ஒருவர் தரும் காரணங்களின் அடிப்படை யில் முடிபு அமையும் விதத்திலும் காரணங்கள் போதுமானவையா சரியானவையா என்று கணிப்பதின் அடிப்படையிலும், காரணங்களை

அவர் அடையாளம் கண்டுகொள்ளும் முறையையும் முடிபுக்கு வருவதையும் காணமுடியும். தமிழாராய்ச்சி ஆய்வேடுகளில் பல குறைபாடுகளை மேற்கண்ட முறை வெளிப்படுத்துகிறது. இக்குறைகளை இலக்கிய ஆராய்ச்சியின் கீழும் மொழியாராய்ச்சியின் கீழும் பார்க்கலாம்.

2. கவிதைகளையும் கவிஞர்களையும் ஆய்ந்துள்ள சில ஏடுகள் பொழிப்புரையை ஆய்வென்றும் நூலக அட்டவணை அமைப்பே ஆய்வென்றும் கருதுவது போலக் காட்சியளிக்கின்றன. தமிழிலே இலக்கியத்தைப் புரிந்துகொள்ளவோ உணர்ந்து இன்பமடையவோ எவ்வளவோ இலக்கிய இலக்கணக்கருவிகள் உண்டு. யாப்பிலக்கணங்கள் கூறும் உத்திகள் பழைய இலக்கியங்களில் கவிஞர்கள் கையாண்டுள்ள, ஆனால் இலக்கணங்களில் பேசப்படா உத்திகள். உரைகாரர்கள் கையாண்டுள்ள உத்திகள் சாமிநாதய்யர், தெ.பொ.மீ. போன்ற பெரும்புலவர்களுடைய எழுத்தில் காணப்படும் உத்திகள் ரசிகமணி டி, கே. சியின் எழுத்தில் காணப்படும் உத்திகள் முதலியவை ஒரு கவிஞரின் இலக்கியநயத்தை அளவிடப்பயன்படும். இதனை உணர்ந்து எழுதப்பட்டுள்ள ஆய்வேடுகள் குறைந்தே உள்ளன.

பண்பும் பயனும் என்ற தொடர், அடிக்கடி ஆய்வேடுகளில் காணப்பட்ட போதிலும் பண்பென்றால் என்ன பயனென்றால் என்ன என்பதற்கு விளக்கம் இல்லை. பண்பையும் பயனையும் பொழிப்புரையில் காணமுயலாமல் குறைந்தஅளவு கவிதையின் வடிவத்திலிருந்து தொடங்கி அது என்ன **ஊடுருவு** (medium) வழியாக வெளிப்படுகிறது என்பதைக் காட்டி, அந்த **ஊடுரு வு** (medium) வடிவத்திற்கும் பொருளுக்கும் எவ்வாறு துணையாகவோ இடையூறாகவோ இருக்கிறது என்பதைக் காட்டவேண்டும். ஆராயும் போது, பாடுவோர், படிப்போர், கேட்போர், சமூக விளைவுகள் என்றவாறு கருதப்படலாம். இவற்றையெல்லாம் மொத்தமாகச் சொல்லிவிட்டு, அதன்பின் ஆழமற்று !ஒவ்வொன்றையும் தனியே சொல்வதைப் பல ஏடுகளில் பார்க்கிறோம்.

சில ஆய்வேடுகளில் "என்று அறிஞர் கருதுகின்றனர்" என்ற தொடர் பயன்படுகிறது. யார் இவ்வறிஞர் என்பது தெளிவாக்கப்

படுவதில்லை. தொல்காப்பியத்திலும் பழைய இலக்கண இலக்கியங்களிலும் உரைகளிலும் வருகின்ற "என்மனார் புலவர்", "என்றிசினார் புலவர், என்ப" போன்ற சொற்கள் பயன்படும் இடங்களுக்கும் "என்று அறிஞர் கருதுகின்றனர்" என்று இக்காலத்தில் சகட்டுமேனிக்கு எழுதுவதற்கும் நிறைய வேறுபாடு. சில ஆய்வேடுகளில் பன்மை போன்று ஒலிக்கும் இத்தொடருக்குப் பின்னால் ஒரே ஒரு விமரிசகரின், ஆராய்ச்சியாளரின் கருத்துமட்டும் மேற்கோளாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஐயத்திற்கும் – கருத்துவேற்றுமைக்கும் கட்டாயம் இடம்தரக்கூடிய கருத்துக்களை "என்று அறிஞர் கருதுகின்றனர்" என்னும் போர்வையால் முடிந்த முடிபு என்று ஒலிக்குமாறு சொல்கிறார்கள். என்றிசினார் புலவர், என்மனார் புலவர் என்று தொல்காப்பியத்தில் வரும் பலவிதிகளுக்கு இன்றைய தமிழில்கூட ஆதாரம் காணமுடிகிறது. அதாவது என்றிசினார் புலவர், என்மனார் புலவர் என்று முற்றுந்துறந்த முடிபுகளைப் பிறர்மேல் ஏற்றுவது. "என்று அறிஞர் கருதுகின்றனர்" என்பதோ ஆழமற்ற சொற்றொடர்.

கவிதையை ஆராயும் ஏடுகள் அக்கவிதை எந்தக்காலத்தில், எந்த ஆண்டில் எழுதப்பட்டது என்பதைக்கூறி அக்கால கட்டத்தில் அக்கவிதை அமையும் பாங்கைக் கூறவேண்டும். ஒரு கவிதை பாடப்பட்ட ஆண்டு தெரியாவிட்டாலும் அக்கவிதை தோன்றும் தொகுதியின் காலத்தையாவது கூறவேண்டும். யாருடைய மதிப்பு என்பதையும் அடையாளம் காட்டவேண்டும். இவைகூட இல்லாது ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(பெரியார் ராமசாமி நாத்திகரான பின்னும் தன்பெயரை மாற்றிக் கொள்ளாததால்) பெரியார் ராமசாமி ராமனிடம் கொண்ட ஈடுபாட்டினை அவர் பெயர் வெளிப்படுத்துகிறது! இதுபோன்ற காரண காரியத்தொடர்புகள் ஏராளம். ஆய்வேடுகள் கவிதையில் அதிக ஆதாயம் இல்லாது தத்தம் கருத்துக்களைக் கவிதையில் திணிக்க முயல்கின்றன. வாக்கியத்தில் முன்சொன்ன காரணத்திற்கும், பின் சொல்கிற முடிவுக்கும் தொடர்பற்றுக் காணப்படும் முடிவுகள் எண்ணிறந்தன. எடுத்துக்காட்டு "அன்பு வடிவாகிய இறைவனைக் காண்பதற்கு அன்பு இன்றியமையாதது என்று வலியுறுத்துவதனால் அன்பே கடவுள் என்ற தத்துவம் கவிஞரின் கவிதையால் மேலும் உறுதி

யாகிறது.'' அன்பு இங்கே கடவுளாகிவிடுகிறது என்று சொல்வதற்கு சரியான காரணகாரியத் தொடர்பு சொல்லப்படுகிறதா?

எவை முடிபுகளாகச் சொல்லப்படவேண்டும் என்று கணிப்பதில் நிறைய ஆய்வேடுகள் தடுமாறுகின்றன. "உயிரிழப்பாலும் உடமைகள் இழப்பாலும் பிற அவலங்களாலும் அழுகை பிறக்கும் என்று கண்ணதாசன் கவிதைகள் காட்டுகின்றன'' என்கிற முடிவைத் தெரிவிக்கிறது ஓர் ஆய்வேடு. இன்னொரு முடிவையும் பார்க்கலாம். "கவலைகள் தீரல், உளம் மென்மையுறல் முதலியவற்றை அழுகையின் பயன்கள் எனக் கவிஞரின் கவிதைகள் கூறுவதை நோக்க, அவருடைய கையறு நிலைக் கவிதைகளின் உயர்வும் உன்னதமும் தெற்றெனப் புலனாதல் அறிகிறோம்.'' முன்னதற்கும் பின்னதற்கும் இவ்வாக்கியத்தில் என்ன தொடர்பு? வாக்கிய அமைப்பு சரியாய் இருக்க உள்ளீட்டுப் பொருள் பொருத்தமற்று இருப்பதற்கு அடிப்படையான காரணத்தைக் கணிக்கும் திறனில் குறைவைச் சொல்வதா? அன்றி ஆராய்ச்சியை எளிதென்று எண்ணிச் சொற்களைப் புனைவதே ஆராய்ச்சி என்று காண்பதால் இது ஏற்படுகிறது என்று சொல்வதா?

இலக்கிய ஆய்வேடுகள் சில "கருவில் திருவுடையார்'' என்னும் கருத்தை வலிந்து திணிக்க முயல்கின்றன. வயதுக்கு வந்தபின் படைக்கப்படும் கவிதைகளின் அடிப்படையில் கருவில் திருவுடையார் என்று பார்ப்பது, இளவயதில் கவிதை எழுதியதால் (அக்கவிதை சிறப்பாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) கருவில் திருவுடையார் என்ற முடிவுக்கு வருவது இன்னோரன்ன பிறவும் இலக்கிய ஆராய்ச்சிக்கு எந்த வகையில் உதவும் என்பது தெளிவில்லை.

3. இனி மொழியை ஆராயும் ஏடுகளில் காணப்படும் சில குறைகளைப் பார்ப்போம். இவ்வாய்வேடுகள் அறிவியல் அடிப்படையில் எழுதப்படுகின்றன என்று பலர் நினைக்கிறார்கள். ஆயின் இவ்வேடுகளின் அறிவியல் முறைகளில் சில குறைகளையாவது எளிதில் காணலாம். இவ்வேடுகளின் முக்கியமான குறை, காரணங்களைக் காண முயலாததும், சிலவிடங்களில் காரணங்களைச் சொல்லும்போது தவறான காரணத்தைச் சொல்லி தவறான முடிவுக்கு வருவதுமாகும். நாவுக்கரசர் தேவாரத்தில் அளபெடை வடிவச்

செய்தென் எச்சம் ஒன்றுகூட ஆளப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது'' என்று சொல்வதோடு நின்றுவிடாமல் ஏன் ஆளப்படவில்லை என்பதில் கண்செலுத்தியிருக்க வேண்டும். யாப்பினால் மாற்றமா? தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பட்ட யாப்பு வகையால் இது ஏற்பட்டதா? புதிய மரபினால் மாற்றமா? நடையினால் மாற்றமா? இசையால் மாற்றமா? இசையை எழுத்தில் வடிக்கும்போது உள்ள மரபில் மாற்றமா?

காரணங்களைக் காண முயலாதது போலவே சில ஏடுகள் அவசர முடிவுக்கும் ஆதாரமில்லாது வந்துவிடுகின்றன. "வெளிநாட்டவரான வீரமாமுனிவர் தமிழிலக்கியங்களில் செயவென் எச்சங்களின் அமைப்பு நிலையைத் தவறாகப் புரிந்துகொண்டு இத்தகு வினையெச்சச் சொற்களை [எழுக = எழும்படி, ஆடுக = ஆட போன்றவை] படைத்திருக்கலாம் என்று ஓர் ஆய்வேடு சொல்கிறது.'' வெளிநாட்டவர் என்பதால் என்று சொல்வது அவசரமுடிவு. வீரமாமுனிவர் வினையெச்ச அமைப்பைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தால் அவர் சரியாகப் பயன்படுத்துகிற மற்ற வினையெச்சப் பிரயோகங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றன அல்லவா? மேலும் தவறென்று இங்கே சொல்லப்படும் எல்லா எடுத்துக்காட்டுகளுக்கு மிடையே ஓர் ஒப்புமை இருப்பதுபோல் தெரிகிறது. மேலும் நாமே (தமிழைத் தாய்மொழியாய் எழுதப்படிக்கக் கற்றவாறே) பிறரிடம் காட்டித் திருத்திக்கொள்ளும்போது, வீரமாமுனிவர் அக்காலப் பண்டிதரிடம் காட்டாமலா இருந்திருப்பார்? பண்டிதர்கள் இப்பிரயோகம் ஏதோ ஒரு காரணத்தினால் சரியில்லை என்றால் சுட்டிக் காட்டியிருக்கமாட்டார்களா? அவர்களும் வீரமாமுனிவரும் இவ்வழக்கு தவறென்றிருந்தாலும் புதியதென்றிருந்தாலும் தக்கவைத்துக்கொண்டதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கவேண்டும். க்க/க வென்னும் செயவென் எச்ச உருபோடு இவற்றிற்கு இருக்கும் ஒலிவடிவ ஒற்றுமைதான் காரணமா? அன்றி தமிழ்க்கிளை மொழிகள்/பேச்சுத்தமிழ் ஏதாவதொன்றில் இவ்வுருபுகள் பயன்படுகின்றனவா, அன்றி இவ்வுருபுகளுக்கும் மலையாளத்திற்கும் தொடர்புகள் உண்டா? அன்றி யாப்பின் சீர், தொடை போன்றவற்றிற்காகக் கையாளப்பட்டுள்ளனவா, அன்றி வெறுமனே **கவிஞரின் உரிமை (Poetic licence)** ஆகக் கையாளப் பட்டுள்ளனவா, அன்றி **பண்டை** மற்றும் **தமக்கு முந்திய**

இலக்கிய வடிவம் மொழிநடை பொருள் போன்றமைவதின் (Process of clssification) காரணமாகப் பிரயோகம் வழக்கில் வருகிறதா என்பதையெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டும். இவற்றை யெல்லாம் உற்று நோக்கினால் ஆராய்ச்சி ஆழமுடையதாகவும் பொருள் நிறைந்ததாகவும் இருக்கும்.

மேற் சொன்ன உருபுப் பிரயோகத்தையும் அது குறித்து ஓர் ஆய்வேடு கூறியதையும் இன்னும் உற்றுநோக்கினால் வளர்ச்சி என்பது என்ன என்பதற்குச் சில விளக்கம் கிடைக்கும். தொல் காப்பியத்தினின்று சங்கவழக்கு மாறுபடுவதை ஒத்துக்கொள்கிறோம். இயல்பென்றும், வளர்ச்சியென்றும் ஒத்துக்கொள்கிறோம். பிற காலங்களைப் பற்றியும் அதே மனநிலையைக் காட்டுகிறோம். அதே அடிப்படையில் பார்த்தால் ஏன் தேம்பாவணி ஆசிரியர் மட்டும் தவறு செய்கிறார் என்று சொல்லவேண்டும்? சில உருபுகள் இலக்கணங் களில் மட்டும் வருகின்றன. சில உருபுகளை ஒரு சில ஆசிரியர்கள் மட்டும் கையாளுகிறார்கள். புதிதாகத் தோன்றும் உருபுகளை முதலில் ஓர் ஆசிரியர் மட்டும் பயன்படுத்தியிருக்கலாம். அதன்பின் ஒருசிலர் பின்பற்றியிருக்கலாம். அதாவது பேச்சுத் தமிழிலோ எழுத்துத் தமிழிலோ செய்யுள் வழக்கிலோ வழக்கிலில்லா உருபை ஓர் ஆசிரியர் தன்னிச்சையாக ஏதாவதொரு காரணத்திற்காக முதலில் பயன் படுத்தியதின் விளைவாகவும் ஒரு காலத்தின் உருபுகளிலிருந்து மற்றொரு காலத்தின் உருபுகள் மாறி நிற்கலாம். தன்னிச்சையான பிரயோகம் மொழியின் பொதுவிதிகளுக்குட்பட்டுச் செல்லும் இப் பொது விதிகளுள் ஒரு சில தன்னிச்சையான பிரயோகத்திற்கு இடம் தருவதுபோல பிறவிதிகள் இடம் தரா. முந்தியதற்குச் சொல்லாக்கங் களையும் பிந்தியதற்குத் **தொடரியல் சொற்களின் பயன்படுவிதி (inflexional morphology)** யையும் எடுத்துக்காட்டலாம். அருகிக் காணப்படும் சிலவழக்குகளின் அடிப்படையில் பிரயோகங்கள் வரும்போது அவை புதியன, மரபுக்கு மாறுபட்டு நிற்பன என்ற உணர்ச்சியைத் தோற்றுவிக்கும்.

இன்னொரு முடிவைப் பார்க்கலாம். "இவ்விருபதாம் நூற்றாண்டில் மொழி எளிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உரைநடையின் வளர்ச்சியால் செய்யுள் வழக்கினவாய வான், பான்,

இயர், இய ஈற்று வினையெச்சங்கள் வழக்கு வீழ்ந்துவிட்டன.'' என்ற முடிவுக்கு வருமுன் மொழி எளிமை என்றால் என்ன என்பதையும் அதை எவ்வாறு எவற்றில் அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்பதையும் முற்கால அறிஞர் கருத்தில் மொழி எளிமை என்றால் என்ன என்பதையும் நாம் காண வேண்டும். அதன்பின் முந்திய பிந்திய இலக்கியத் தொடர்பு களை – வான், – பான் எச்சங்கள் குறித்து நோக்க வேண்டும். உரைநடை வளர்ச்சியால் மேற்கூறிய எச்சஈற்றுக்களின் வழக்கு குறைந்துவிட்டது என்று சொல்வதைவிட உரைநடை அதிக இடங் களில் (domains) பயன்படுவதும், யாப்பிலும் செய்யுளிலும் பயிற்சி குறைந்து காணப்படுவதும், **பண்டை அன்றித் தமக்கு முந்திய இலக்கிய வடிவம் மொழிநடை பொருள்** (classicalization trend) வேறுவகைபாகப் பரிணமித்திருப்பதாலும் என்ற பல காரணங்களில் வழக்கு வீழ்ச்சியின் காரணத்தைக் காணலாம். செய்யுள் வழக்கின வாய, வான், பான், இயர், இய ஈற்று வினையெச்சங்கள் வழக்கு வீழ்ந்துவிட்டன என்று செய்யுள் வழக்கே இவ்வீழ்ச்சிக்குக் காரண மென்பது போலச் சொன்னால் ஏன் மற்ற செய்யுள்வழக்கு வினை யெச்சங்கள் வழக்கு இழக்கவில்லை? பேச்சு வழக்குக்கும் செய்யுள் வழக்குக்கும் பொதுவான வினையெச்சங்கள் வழக்கில் இருக்கின்றன. செய்யுளுக்கே உரியவை தனிநடையைக் குறிக்கும் சிறப்புக் குறிகளாகவும் **பண்டை அன்றித் தமக்கு முந்திய இலக்கியவடிவம் மொழிநடை பொருள் ஆகியவற்றை மதிக்கும்** அறிகுறியாகவும் ஆகிவிட்டன.

இன்னுமொரு முடிவு! "சங்க காலத்தே மிக்கிருந்த வியங்கோட் பொருளுண்மையின் காரணத்தால் 'க்க' விகுதியினும் 'ப்ப' விகுதியே அதிக அளவில் செயவென் எச்சவிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் இன்றோ வியங்கோள் மிக அருகியே காணப்படுவதால் 'க்க' விகுதியே செயவென் எச்ச விகுதியாகக் கையாளப்படுகின்றது. வியங்கோள் வினையின் வடிவங்களையும் பண்புகளையும் பயன்களையும் இதுவரை வெளியிடப்பெறாத டாக்டர் பன்னீர்செல்வத்தின் கட்டுரையில் காணலாம். அவருடைய முடிவு களுள் ஒன்றான ஈற்றினடிப்படையில் வியங்கோளை அடையாளம்

கண்டுகொள்வது சிரமம் என்பது மேற்சொன்ன முடிபை மறுக்கும். அது மட்டுமன்று. இரு விகுதிகளுக்கும் இடையே இருக்கும் **நிகழ்ச்சி அளவை (frequency)** வேற்றுமையை வியங்கோள் வினையும் செயவென் எச்சவினையும் எழுத்து/ஒலியமைப்பில் மயங்க வழியுண்டு என்ற அடிப்படையில் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது தவறு. இவ்வாறு வருவது அத் தொடர்களின் இலக்கண அமைப்புக்கு மாறானது. அதோடு பெருமாள் என்ற சொல்லைப் பெண்பால் என்று சொல்வதற்கு ஒப்பாகும். மேலும் "சங்க காலத்தே மிக்கிருந்த வியங்கோள் பொருண்மை" என்று சொல்வதற்கு ஆதாரம் என்ன? "இன்றோ வியங்கோள் அருகியே காணப்படுவதால்" என்று சொல்வதற்கு என்ன ஆதாரம்? சங்க இலக்கியத்தில் பயிற்சி மிகுந்து காணப்படுவதால் ஓர் உருபு சங்ககால வழக்கிலும் வழக்கு மிகுந்தே இருந்திருக்கவேண்டும் என்று சொல்வது தவறு. மேலும் சங்க இலக்கியத்தில் ஓர் உருபு பயிற்சி மிகுந்து காணப்பட்டால், எப்பொருளைக் கவிதையில் எந்த வடிவத் தில் வடிக்கும்போது அவ்வுருபு அதிகமாய் பயிலப்பட்டுள்ளது என் பதைக் கவனிக்கவேணடும். வியங்கோள் பொருண்மை நேருக்குநேர் உரையாடல்களிலும், உரையாடல்களைக் கவிதைக்குள் உள்ளடக்கி நடந்ததைச் சொல்லும்போதும் என்றவாறு பல இடங்களில் வழக் கிலுள்ளது. வியங்கோள் வாழ்த்துதற்பொருட்டு மட்டும் பயன்பட வில்லை என்பதை நன்னூல் உரைகளும் தொல்காப்பிய உரைகளும் தெளிவாக்குகின்றனவே! மேலும் இக்காலத்தில் வாழ்த்துதல் குறைந்தாபோய்விட்டது?

வழக்கு வீழ்ச்சிக்கான காரணத்தைக் குழப்பங்களைத் தவிர்ப் பதற்கான சூழ்நிலைகளில் மட்டுமே காணக்கூடாது. கவிதை எழுதுபவருக்கு முந்திய காலக் கவிதைகளிலுள்ள பயிற்சி, அவருக்குத் தம் காலக் கவிதைகளிலுள்ள ஆசிரியர்களில் யார் மேல் மதிப்பு, பிரியம் போன்றவை, பேச்சு வழக்கிற்கும், செய்யுள் வழக்கிற்கும் இடையேயுள்ள தொடர்பு, பிறமொழிக் கலப்பும் தொடர்பும், **முந்திய காலப்போக்கு (classicalization)** தமக்கேயுரிய நடையை நிலை நிறுத்துவதற்கான முயற்சி, முன்பு அவ்வுருபுக்கு இருந்த பொருள், இன்று அவ்வுருபுக்குள்ள பொருள், யாப்பில் சீர், தொடை போன்ற

வற்றில் வசதி, மற்றும் சமகாலக் கவிஞர்களில் யார் சொல்லுக்கும் கருத்துக்கும் நடைக்கும் உயரிய பீடம் என்பவற்றில் காணவேண்டும்.

அடிக்கடி ஆய்வேடுகள் அதுவும் புதியகால மொழியியலை பின்பற்றுவதாகச் சொல்லும் ஆய்வேடுகள்—இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பல் என்ற கோட்பாட்டைத் தவறாகப் புரிந்துகொண்டு தவறாகப் பொருள் கொள்கின்றன. இலக்கியத்தில் வழக்கிலுள்ள ஒரு சில உருபுகளைப் பிற கால இலக்கணங்கள் உள்ளடக்காவிட்டால் அவ்விலக்கணங்கள் இலக்கியத்தினின்று எடுபடுவது இலக்கணம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமையவில்லை என்ற முடிவுக்கு ஆய்வேடுகள் வந்துவிடுகின்றன. உருபுகளைமட்டும் சொல்லுதல், பொருண்மையைக் கூறி அப்பொருண்மையின் கீழே வரும் உருபுகளில் பலவற்றையோ சிலவற்றையோ கூறிப் பிறவற்றைத் தொக்கி நிற்க வைத்தல் என்ற முறைகளில் கடைசிமுறையை இலக்கணங்கள் பின்பற்றுகின்றன. ஆகவே உருபுகள் எல்லாவற்றையும் இலக்கண நூற்பாக்களில் கூறியே ஆகவேண்டும் என்பதற்கு முகாந்திரம் இல்லை. உருபுகளை எல்லாம் கூறுவது அல்லது அவற்றுள் புதியனவற்றைக் குறிப்பது அல்லது அவற்றுள் எவை முக்கியமோ அவற்றைக் குறிப்பது உரைகாரரின் தொழில். மேலும் தமிழிலக்கணங்கள் நிகண்டுகள் அன்று. அவை கொள்ளும் வடிவங்களும் கவனிக்கற்பாலன. அவ்வடிவங்களும் ஒரு சில நிபந்தனைகளை உண்டு பண்ணுகின்றன. மனப்பாடம், ஒன்றிரண்டு உருபுகளே வாய்பாடாக (mnemonic) இயங்குதல் முதலியன. ஒலியனியலில் எப்படிப் பொதுவிதிகளைக் காண்கிறோமோ அதுபோன்று பொருளடிப்படையில் சொல்லியலில் பொதுவிதிகளைக் கண்டால் உருபுகளை எல்லாம் கூறுவதற்கு முகாந்திரம் இல்லை. மேலும் வழக்கிலிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய்த் தெற்றென விளங்குவதால் அவற்றைக் குறிப்பிடத் தேவையில்லை என்றும் நினைத்திருக்கலாம். இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் இடையேயுள்ள உறவு இன்னும் ஆழமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. புதிய காலத்தில் கூறப்படும் descriptive மற்றும் prescriptive என்பதற்குள் மட்டும் வைத்து அலசப்பட முடியாதது. இலக்கியத்தினின்றே இலக்கணம் என்பதை இலக்கணக்காரர்கள் அவர்கள் காலத்துத் தமிழுக்கே இலக்கணம் அமைக்கவேண்டும் என்று ஆக்கிவிடக்கூடாது. எந்தவொரு தமிழிலக்

கணமும் அது எழுதப்பட்ட காலத்திற்கு மட்டும் உரிய தமிழைச் சொல்ல அலசப்படவில்லை. எழுதப்பட்ட காலத்தை அதற்கு முந்திய காலத்தோடு சேர்த்தே சொல்கிறது.

ஆய்வேடுகள் அடிக்கடி "நோக்கத்தக்கது", "எண்ணத் தக்கது" "குறிப்பிடத்தக்கது" என்று சொல்வதால் முடிபு ஆகி விட்டது என்று கொள்வதுபோல் தோன்றுகின்றன. இது தவிர்க்கப் பட வேண்டும்

4. சொல்லும் முறைகளிலுள்ள குறைபாடுகளை ஓரளவு எளிதில் நீக்கிவிடலாம். ஆனால் காரணங்களைக் காணும் திறனை அவ்வளவு எளிதிலே வளர்த்துக்கொள்ள முடியாது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பல கோணங்களிலும் பார்க்கிற திறன் படிப் பாழத்தையும் பொறுத்து அமையும். பல கோணங்களில் பார்ப்பவர்கள் கூட நவக்கிரகங்கள் கோயிலினுள் அமையும் அமைப்புப்படிப் பாரா மல் அவை ஒன்றையொன்று இணையும் விதத்தைக் காணவேண்டும். வினையெஞ்சு கிளவியின் வாய்பாடுகளில் பல சொல்லதிகாரத்திலும் சில எழுத்ததிகாரத்திலும் கூறப்படுவதே இதற்கு முன் மாதிரியும் சவாலும் ஆகும். மூழ்கிவிடாமல் மிதக்கக்கூடிய ஆய்வேடுகள் அருகிக் காணப்படுவதில் தவறில்லை. ஆனால் அவை இல்லா மலேயே போய்விடக்கூடிய நிலைக்குப் போய்க்கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

துணை நூல்கள்

பன்னீர்செல்வம் இரா. 1980 வியஙகோள் வினையின் வடிவம், பண்பு மற்றும் பயன் (இன்னும் வெளிவராதது)

Thirumalai, M. S. 1976 *Stylistics – A Linguistic Approach* University of Madras.

Thirumalai, M.S. 1976 *Language in Science* Geetha Book House Mysore.

மொழியியல் 4,1 & 2 (1980

தமிழ் வினாக்களின் ஒலியேற்றம்

க. இரவிசங்கர்

1. முன்னுரை

பேச்சொலியே மனித மொழியின் அடிப்படை அலகாகும். பேச்சொலிகளின் கோவையே சொற்களாகின்றன. சொற்கள் இணைந்து தொடராகின்றன. தொடர்கள் பெருகியே மொழியைத் தோற்றுவிக்கின்றன. எனவே, மொழிக்கு சொல்தான் அடிப்படை என்பது வெளிப்படை. பேச்சொலிகள் மனிதனின் பேச்சுப்பொறியால் உருவாக்கப்படுகின்றன. இவ்வொலிகள் தொடர் இணைப்பகுப்புக் கூறுகள் (segmental feature), மீப்பகுப்புக் கூறுகள் (suprasegmental feature) என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன ஒலி உறுப்புக்களின் இயக்கத்தால் பிறக்கும் உயிர், மெய் போன்றவை தொடர் இணைப் பகுப்புக் கூறுகளாகும். ஒரு மொழியின் பெருவாரியான சொற்பொருள்கள் தொடர் இணைப் பகுப்புக் கூறுகளைக் கொண்டே விளக்கமுறுகின்றன. மனிதன் உணர்ச்சிவயப்பட்டவன் ஆதலினால் அவனது பேச்சும் உணர்ச்சி வயப்பட்டுத் தோன்றுகிறது. இவ்வுணர்ச்சிகள் பெரும்பாலும் தொடர் இணைப்பகுப்புக் கூறுகளால்

உணர்த்தப்படுவதில்லை. மாறாக, மீப்பகுப்புக் கூறுகளாலேயே குறிக்கப்படுகின்றன. கோபம், வியப்பு, இகழ்ச்சி, தயக்கம் போன்ற உணர்ச்சிகளைக் குறிக்க பெரும்பாலும் தனிச் சொற்கள் இல்லை. இவை மீப்பகுப்புக் கூறுகளாலேயே உணர்த்தப்படுகின்றன. இவ்வுணர்ச்சிகள் பெரும்பாலும் பேச்சுவழக்கிலேயே பெரிதும் காணப்படுகின்றன. இம்மீப்பகுப்புக் கூறுகள் தொடர் முழுதும் நிலவி அத்தொடருக்கு ஓசை நயம் (melody) அளிக்கின்றன. இதனையே நாம் ஒலியேற்றம் (intonation) என்கின்றோம். இந்த ஒலியேற்றமே மனிதனின் உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு மொழியில் மனிதனுடைய பல்வேறுபட்ட உணர்ச்சிகளைத் தகுந்த ஒலியேற்றங்களின் மூலம் நாம் உணர்த்துகிறோம். இந்த ஒலியேற்றம் இசை (pitch), உரப்பு (loudness, மாத்திரை (duration), கால இடைவெளி அல்லது விட்டிசை (silence) ஆகியவற்றின்மூலம் அமைகின்றது. இசை என்பது பேசும்போது ஏற்படும் குரல்வளை மடல்களின் (Vocal Cord) அதிர்வால் விளையும் ஒலியாகும். உரப்பு ஒலிகளின் பலம் அதாவது எடுத்தல், படுத்தல், நலிதல் ஆகிய தன்மைகளைக் குறிக்கும். மாத்திரை ஒலிகள் உச்சரிக்கப்படும் கால அளவைக் குறிக்கும். விட்டிசை என்பது சொற்கள் அல்லது தொடர்களுக்கு நடுவில் ஏற்படும் காலயிடையீட்டைக் குறிக்கும்.

2. வாக்கிய வகைகள் (Sentence Types)

சொற்கள் தனித்தோ அல்லது தொடர்ந்தோ நின்று முழுப் பொருளைத் தருமாயின் அத்தொடரை வாக்கியம் என்று கூறுகின்றோம். வாக்கியங்களை நாம் அவை வெளிப்படுத்தும் கருத்துகளையொட்டி நான்கு வகையாகப் பிரிக்கின்றோம். அவை 1. செய்தி வாக்கியம், 2. வினாவாக்கியம் 3. விழைவு வாக்கியம், 4. உணர்ச்சி வாக்கியம் ஆகும்.

எ.கா.

1. அவன் பாடம் படிச்சான் — செய்தி வாக்கியம்
2. அண்ணன் இங்க வந்தானா? — வினாவாக்கியம்
3. நீ வாழ்க! — விழைவு வாக்கியம்
4. எவ்வளவு ஒயரமான மனிதன் — உணர்ச்சி வாக்கியம்.

செய்தி வாக்கியம் 1. உடன்பாட்டு வாக்கியம், 2. எதிர்மறை வாக்கியம் என இரு உட்பிரிவுகளைக் கொண்டது.

எ.கா.

5. அவன் போனான் — உடன்பாட்டு வாக்கியம்

6. அவன் போவல்ல — எதிர்மறை வாக்கியம்

விழைவு வாக்கியம் வாழ்த்து, கட்டளை, வேண்டுகோள், சபித்தல் போன்ற விருப்பங்களைத் தெரிவிக்கின்றது.

7. இராணி வாழ்க! — வாழ்த்து

8. பாடம் படி! — கட்டளை

9. எனக்குப் பணம் தா! — வேண்டுகோள்

10. தீமை ஒழியட்டும்! — சபித்தல்

வினா வாக்கியத்தில் அவ்வாக்கியத்தில் உள்ள எந்த சொல்லையும் வினாவாக மாற்றலாம்.

எ.கா.

11. தம்பி இங்க **வந்தானா?**

12. தம்பி **இங்கா** வந்தான்?

13. **தம்பியா** இங்கு வந்தான்?

அடிக்கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளவை வினவுச் சொற்களாகும்.

உணர்ச்சி வாக்கியத்தில் நாம் வியப்பு, மகிழ்ச்சி, வருத்தம், திகைப்பு முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கின்றோம்.

எ-கா:

14. எவ்வளவு பெரிய மலை! – வியப்பு

15. ஆகா! ஜெயிச்சிட்டான்! – மகிழ்ச்சி

16. அய்யோ! புத்தி கெட்டுப் போயிட்டேனே! – வருத்தம்

17. அய்யோ! நான் என்ன செய்யறது! – திகைப்பு

2.1. வாக்கியங்கள் பெரும்பாலும் அவை வெளிப்படுத்தும் கருத்தையொட்டி வகைப்படுத்தப்படுவதை மேலே கண்டோம். சில வாக்கியங்களில் இக்கருத்துக்களை வெளிப்படுத்தும் உருபன்கள் இருக்கின்றன. இவ்வுருபன்கள் தனிச்சொல்லாகவோ அல்லது விகுதியாகவோ வருகின்றன. இப்பொருள் வேறுபாட்டினை உருபன்களைக் கொண்டு குறிப்பதோடு அல்லாமல் நிறுத்தக்குறியீடுகளைக் கொண்டும் குறிக்கின்றோம். உதாரணமாக முற்றுப்புள்ளியை செய்திவாக்கியத்திற்கும், வினாக்குறியை வினாவாக்கியத்திற்கும், உணர்ச்சிக்குறியை உணர்ச்சி வாக்கியத்திற்கும் பயன்படுத்துகின்றோம். இவ்வுருபன்களும், நிறுத்தக்குறியீடுகளும் தொடர் இணைக்கூறுகளாகும்.

எ—கா:

18. அய்யோ! அவன் வருவானா?!

19. ஓ! அவன் சாப்புடுறானா?!

இவ்வாக்கியங்களில் வியப்பு, வினா ஆகிய இரண்டு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை அவ்வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி, வியப்புக்குறி இரண்டையும் இட்டுக் காட்டுகின்றோம். ஆனால்,

'அவன் ஒன்ன அடிச்சான்'

என்ற வாக்கியத்தை கோபம், வினா இரண்டையும் கலந்து கூறலாம். அதைப்போன்றே, **நீ அவனப்பாத்தே''** என்ற வாக்கியத்தை வியப்புணர்ச்சியுடனோ, வினாவாகவோ, இவ்விரண்டையும் உணர்த்தும் வாக்கியமாகவோ கூறலாம். மேலே கூறப்பட்ட பொருள் வேறுபாட்டினை தற்போதுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதிக் காட்ட முடியாது. **'அவன் ஒன்ன அடிச்சான்'** என்று கோபமாக வினவினான் என்றோ, **'நீ அவனெப் பாத்தே'** என்று வியப்புடன் கேட்டான் என்றோ அவ்வாக்கியங்களைத் தொடர்ந்து எழுதப்படும் விளக்கத் தொடர்கள் அவசியமாகின்றன. ஆனால், பேச்சுவழக்கில் இப்பொருள் வேறுபாட்டினை ஒலிகளைக் கொண்டே வெளிப்படுத்துகின்றோம். இவ்வொலிகளை நாம் எழுத்துக்களால் குறிப்பதில்லை. ஆகவே,

மேற்கண்டவற்றை முழுமையாக எடுத்துக்காட்ட தொடர் இணைக் கூறுகளையும், நிறுத்தக் குறியீடுகளையும் தவிர மற்றும் ஒரு அமைப்புத் தேவைப்படுகின்றது. இவ்வமைப்பே மீப்பகுப்புக் கூறுகளாகும். இம்மீப் பகுப்புக் கூறுகள் தொடர் இணைக் கூறுகளுடன் இணைந்து தொடர்முழுதுமாக ஒழுகி ஒலிக்கின்றன. இவ்வமைப்பு வாக்கியங்களுக்கு பொருள் வேறுபாட்டினைத் தருவதோடு, ஒலிநயத்திற்கும் காரணமாகின்றது. மீப்பகுப்புக் கூறுகள் வாக்கியங்களில் வேறுவேறு முறையில் மாறி அமைவது ஒலியேற்றம் ஆகும்.

3. ஒலியேற்ற வகைகள் [Types of Intonation]

ஒலியேற்ற அமைப்பைப் பொறுத்து, ஒலியேற்றம்

அ) எழு ஒலியேற்றம் (rising intonation),

ஆ) வீழ் ஒலியேற்றம் (falling intonation)

இ) எழு வீழ் ஒலியேற்றம் (rising - falling intonarion)

ஈ) வீழ் எழு ஒலியேற்றம் (falling-rising intonation)

உ) எழு வீழ் எழு ஒலியேற்றம் (rising - falling - rising intonatien)

ஊ) வீழ் எழு வீழ் ஒலியேற்றம் (falling-rising-falting intonation)

எ) சம ஒலியேற்றம் (level intonation)

என வகைப்படுத்தப்படுகின்றது. இசையில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையில் மேற்கண்ட ஒலியேற்ற வகைகள் அமைகின்றன.

4. சுரத்தொகுதி (Tone-unit)

வாக்கியங்களின் ஒலியேற்ற அமைப்பு இசை, உரப்பு, மாத்திரை, விட்டிசை ஆகியவற்றின் அடிப்படையில் அமைவதாகப்பார்த்தோம். (1) ஆனால் வாக்கியங்களின் ஒலியேற்ற அமைப்பை பொருளை யொட்டி வரன்முறைப்படுத்த மேலும் ஒரு அலகு தேவைப்படுகின்றது. பொருள் மாற்றத்திற்கான இந்நுண்ணிய அலகு **சுரத்தொகுதி (tone-unit)** ஆகும். ஒரு வாக்கியத்தில் இவற்றின் இணைந்த அமைப்பே ஒலியேற்றத்தை முழுமையாக்குகின்றது. ஒரு வாக்கியத்

தில் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சுரத்தொகுதிகள் இருக்கும். ஒரு சுரத்தொகுதியில் பல உள்ளுறுப்புகள் உள்ளன. அவை (அ) **முன்னி** (மு) (prehead), (ஆ) **தலை** (த) (head), (இ) **கரு** (க) (nucleus), (ஈ) **பின்னி** (பி) (tail) ஆகும். இவற்றில் தலையும், கருவும் இன்றியமையாத உறுப்புகள் ஆகும்.

4.1, கரு (Nucleus)

சுரத்தொகுதி பல அசைகள் கொண்ட தொடரின் ஒலியேற்றத் திற்கு ஏற்ப அமையும். ஒலியேற்றத்துடன் கூடிய தொடர்களில் உள்ள அசைகளில் இசை வேறுபாடு இருக்கும். இவ்விசை வேறு பாட்டின் போக்கில் திடீரென்று மாற்றத்தை விளைவிக்கும் இசையை அச்சுரத்தொகுதியின் **கரு** என்கின்றோம்.

4.2. தலை (Head)

சுரத்தொகுதி பல அசைகளால் இயங்கும். இவ்வசைகள் இசை வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவ்விசை வேறுபாடுகளைக் கொண்ட அசைகளில் ஏதேனும் ஒன்று எடுத்துச் சொல்லப்படுவதால் அழுத்தம் (stress) பெறும். இவ்வழுத்தம் பெற்ற அசையே சுரத் தொகுதியின் **தலை** யை ஆரம்பிக்கின்றது. இத்தலை அழுத்தம் பெற்ற அசையிலிருந்து கரு அசை வரை உள்ள அசைகளைக்கொண் டுள்ளது.

4,3. முன்னி (Prehead)

தொடரில் தலைக்கு அதாவது அழுத்தம் பெற்ற அசைக்கு முன் உள்ள அனைத்து அசைகளும் **முன்னி**யாகும். சில மொழிகளில் அவை சிறிது அழுத்தம் பெற்றுக் காணப்பட்டாலும், அவ்வழுத் தத்தை விட தலையில் உள்ள அழுத்தம் மிக்கு ஒலிக்கும்.

4.4. பின்னி (Tail)

கருவிற்குப்பின் வரும் அசைகள் **பின்னி** ஆகும். **பின்னி**யின் அசைகள் கருவில் ஏற்படும் இசைமாற்றத்தை நீட்டிச்செல்கின்றன.

5. முடிவுநிலை (Terminal contour)

சுரத்தொகுதியின் ஒலியேற்றம் முடியும் தன்மையை **முடிவுநிலை** என்கின்றோம். இது இறுதி அசையின் இசைமுடியும் தன்மையைக் குறிக்கும். தொடரின் ஒலியேற்ற அமைப்பிற்கு ஏற்றவாறு இது அமைகின்றது. முடிவுநிலை அது அமையும் தன்மையைப் பொறுத்து

அ) **எழு முடிவுநிலை** (raising terminal contour)

ஆ) **வீழ் முடிவுநிலை** (falling terminal conteur)

இ) **வழுகு முடிவுநிலை** (gliding terminal contour)

ஈ) **சாய்ந்து எழு முடிவுநிலை** (slant rising terminal contour)

உ) **சீர் எழு முடிவுநிலை** (gradual rising terminal contour)

என வகைப்படுத்தப்படுகின்றது. முடிவுநிலை (முநி) என சுருக்கமாகக் குறிக்கப்படுகின்றது.

6. அளவுகள் (Parametres)

இதுவரை ஒலியேற்றம் என்றால் என்ன, அதன் வகைபாடுகள் எவை, ஒலியேற்றத்திற்கான அளவீடுகள் என்ன, பொருள் வேறுபாட்டினுக்கு ஒலியேற்றம் எவ்வாறு உதவுகின்றது என்று பார்த்தோம். இனி, ஒலியேற்றத்தை அளப்பதற்கான அளவுகள் பற்றிப் பார்ப்போம்.

வினாவாக்கியங்களின் ஒலியேற்றத்தை இசைஅளவு (pitch scale) களால் குறிக்கின்றோம். தமிழ்மொழியில் உள்ள ஒலியேற்றத்தைக் குறிக்க ஐந்து இசை அளவுகள் தேவைப்படுகின்றன. இவை மேலிருந்து கீழாக ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று குறிப்பிடப்படுகின்றன. ஒன்று மேல்இசை (high pitch) யையும், ஐந்து கீழ்இசை (low pitch) யையும், இரண்டு மேல்-நடு இசையை (high - mid pitch) யையும், நான்கு கீழ்-நடு இசை (low-mid pitch) யையும், மூன்று நடு இசை (mid pitch) யையும் குறிக்கின்றன. இவை ஐந்தும் இசைஅளவில் ஐந்து இடங்களைக் குறிக்கும். இவ்விசைகளுக்கு இடையில் உள்ள தூரம் ஒரே மாதிரியானவை அல்ல. அதாவது, இவை ஐந்தும் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமானவையே தவிர ஒரே மாதிரியான இடைவெளியை

உடையன அல்ல. இவ்விசைகள் ஒல்வொன்றிற்கும் நிலையான மதிப்பு கிடையாது. எனினும், செயல்முறை எளிமைக்காக ஒவ்வொரு இசைஅளவும் அதனோடு ஒத்த மற்றொரு இசை அளவுடன் ஒத்த மதிப்பு உடையது என்று எடுத்துக்கொள்கின்றோம். அழுத்தம் |'| என்ற குறியால் குறிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அசையும் — என்ற குறியால் குறிக்கப்படுகின்றது.

7. வினா வகைகள் (Question Types)

தமிழ் மொழியில் உள்ள வினாக்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை; (அ) வினா உருபன் உள்ளன. (ஆ) வினா உருபன் இல்லாதன, (இ) ஒட்டு வினா ஆகும். மேலும், வினா உருபன் உள்ள வினாவை, (i) **-ஆ** வகை வினா, (ii) **எ, ஏ, யா** வகை வினா என இருவகையாகப் பிரிக்கலாம்.

7.1 **-ஆ** வகை வினாக்கள் **-ஆ** என்ற வினா உருபன் கொண்டு முடிப்பவை இவை 'உண்டு, இல்லை' என்ற பதிலைப் பெறும். ஆகவே, இவ்வினாவை 'உண்டு - இல்லை' வகை வினா **(yes-no type Question)** என்றும் அழைப்பர்.

எ-கா.

20. அவன் இங்க 'வந்தானா?
21. 'தம்பி சாப்பிட்டானா?
22. நீ பாடம் 'படிச்சியா?

7.2. **எ, ஏ, யா** வகை வினாக்களில் இவ்வுருபன்கள் ஒரு சொல்லின் முதலில் வந்து அதனை வினாவாக்கும். அச்சொற்கள், 1. எது, 2. என்ன, 3. எந்த, 4. எப்ப, 5. எப்படி, 6. எதுக்கு, 7. எதுலே, 8. எதாலே, 9. எங்கே, 10. எது, 11. எவ்வளவு, 12. எதுக்காக, 13. ஏன், 14. யாரு, 15. யாராலே 16. யாருக்காக என்பவை ஆகும். இவ்வினவுச்சொற்கள் வினாவாக்கியத்தின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ வரும். பொதுவான ஒரு பதிலைப்பெற இவ்வினா பயன்படுவதால், இவ்வினா பொதுவினா எனப்படும்.

எ.கா:

23. அவன் 'என்ன செய்றான்?

24. 'ஏன் அவள் வரலே?

25. இந்த துணி 'யாருக்கு?

7.3. ஒரு வாக்கியத்திற்குத் தகுந்த ஒலியேற்றம் தருவதன் மூலம் வினாஉருபன் இல்லாமலேயே அவ்வாக்கியத்தை வினாவாக்கிய மாக மாற்றலாம். எந்த சொல்லையும் வினவுச்சொல்லாக மாற்றி அவ்வாக்கியத்தை வினாவாக்கியமாக்கலாம்.

எ.கா.

26. நீ அக்காவைப் '**பாத்தே**?

27. நீ '**அக்காவைப்** பாத்தே?

28. '**நீ** அக்காவைப் பாத்தே?

மேற்கண்ட எல்லா வாக்கியங்களும் வினாவாக்கியத்திற்கான ஒலியேற்றத்துடன் ஒலிக்கப்படுவதாகக் கொள்வோம். இவ்வாறு ஒலிக்கப்படும்போது அவ்வாக்கியந்தில் உள்ள ஒவ்வொரு சொல் லையும் வினவுச்சொல்லாக மாற்றலாம். அடிக்கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளவை வினவுச்சொற்களாகும்.

7.4. செய்திவாக்கியத்தைத் தொடர்ந்து 'இல்லே', 'இல்லெயா' 'அப்புடியா' போன்ற சொற்கள் அதை ஒட்டி அமையும்போது ஒட்டுவினா உண்டாகின்றது. இவ்வாறு ஒட்டிவரும் சொல் வினா உருபன் பெற்றோ அல்லது வினவுதற்கான ஒலியேற்றம் பெற்றோ இருக்கும். இச்சொல் அவ்வாக்கியத்தை ஒட்டுவினா வாக்கியமாக மாற்றுகின்றது. இவ்வொட்டுச்சொல் அவ்வாக்கியத்தின் இறுதியில் வரும். 'இல்லே', 'இல்லெயா', 'அப்புடியா', 'அப்புடிதானே', போன்றவை ஒட்டுவினாச்சொற்களாகும். சிலபோது செய்தி வாக்கியத்தின் வினைச்சொல் ஒலியேற்றம் பெற்று ஒட்டு வினாச் சொல்லாக மாறி, அச்செய்திவாக்கியத்தின் இறுதியில் ஒட்டிவரும் (எ.கா. 31, 32).

எ.கா.

29. நீ தம்பியைப் பாத்தே, **அப்புடிதானே?**

30. நான் சொன்னா தப்பு, **இல்லே?**

31. அவன் வருவான்னியே, **வருவான்?**

32. கொழந்தே நடக்கும்ன்னியே, **நடக்கும்?**

8. வினா வாக்கியங்களின் ஒலியேற்ற அமைப்பு (Intonation Pattern of Question sentences)

இனி வினா வாக்கியங்களின் ஒலியேற்றம், சுரத்தொகுதி, இசை அளவு ஆகியவற்றைப் பார்ப்போம்.

8.1. -ஆ வகை வினா

இவ்வினா வாக்கியங்களின் சுரத்தொகுதியின் அமைப்பு பெரும் பாலும் முன்னி, தலை, கரு, பின்னி என்ற உறுப்புக்களைக் கொண்டுள்ளது. சிலபோது பின்னி இல்லாமலும் வரும். இவ்வினாக் கள் மூன்றிலிருந்து நான்கு வரை இசை அளவுகளைக் கொண் டுள்ளன. இவ்வகை வினாக்களின் ஒலியேற்றம் எழு ஒலியேற்றம் ஆகும்.

எ.கா.

33. பணம் **தரமாட்டியா?**

34. எனக்கு **தருவியா?**

ஆகிய இரண்டு வாக்கியங்களும் வினா வாக்கியங்களுக்கு எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுள்ளன. இவற்றில் முறையே தரமாட்டியா, தருவியா என்ற வினைகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. அதாவது வினவுபவர் தனக்குப் பணம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஐயத்தோடு இவ்வினாக்களை எழுப்புகின்றார். எனவே, இவ்வினைச் சொற்களை அழுத்தி ஒலித்து உரப்புடைச் சொற் களாக ஆக்குகின்றார். இவ்வுரப்போடன்றி இவ்வினா வாக்கியங் களில் அசைகளின் இசையும், இவ்வினாக்களை எழுப்புபவரின் உணர்ச்சிக்கு ஏற்ப வேறுபடுகின்றது. பொருளைத் தருவதற்கு

தொடர்இணைக் கூறுகள் எப்படி இணைந்து சொற்கள் அமை கின்றனவோ, அவ்வாறே மீப்பகுப்புக் கூறுகள் கோபம், வியப்பு, இகழ்ச்சி, தயக்கம் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு ஒலியேற்ற அமைப்பும் வாக்கிய அமைப்பு, உணர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்ப முடிவுறும். இம்முடிவுகள் ஐந்து வகைப்படும். அவை ஒவ்வொரு வாக்கிய இறுதியிலும் தக்க குறியிட்டுக் காட்டப் பட்டுள்ளன. தமிழில் உள்ள வினா வாக்கியங்களை கோபம், வியப்பு இகழ்ச்சி, தயக்கம் ஆகிய உணர்ச்சிகளுக்கு ஏற்ப ஒலிக்கும்போது ஐந்து இசை நிலைகள் தேவைப்படுகின்றன. இந்த ஐந்தையும் பயன்படுத்தி வினா வாக்கியங்களை ஆய்ந்து அலகிடுதல் எவ்வாறு என இங்கே காண்போம்.

பணம் 'தரமாட்டியா?'

—
— ↑
'—
— —

எனக்கு 'தருவியா?

—
— ↑
'—
— — —

'பணம் தரமாட்டியா' என்ற வாக்கியத்தில் 'பணம்' என்ற சொல் குறைந்த இசையில் ஒலிக்கப்படுகின்றது. 'தரமாட்டியா' என்ற சொல்லில் த என்ற அசை இந்த வாக்கியத்தில் உள்ள மற்ற அனைத்து அசைகளையும்விட அதிக ஓசையுடன் ஒலிக்கப் பெறு கின்றது. இதுவே இந்த வாக்கியத்தின் உரப்பு பெற்ற இடமாகும். இதனையடுத்து வரும் மூன்று அசையும் முறையாக ஒன்றுக்கு ஒன்று அதிகமாக ஒலிக்கப்பெறுகின்றன. இவ்வாக்கியத்தின் இசையமைப்பை நோக்கும்போது உரப்பிற்கு முன் உள்ள சொல்லின் இசை மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. உரப்பிற்குப் பின் உள்ள இசைகள் முறையே ஒன்றிற்கொன்று உயர்ந்து அமைந்துள்ளன. உரப்புப்பெற்ற அசை த இவ்வாக்கியத்தின் ஒலியேற்றத்தின் முக்கியப்பகுதி ஆகும்.

எனவே, இது தலை என்று அழைக்கப்படுகின்றது தலையை அடுத்து குறிப்பிடத்தக்க வகையில் ஏற்படும் இசை மாற்றமே கரு ஆகும். இக்கருவே வாக்கியத்தில் அமைந்துள்ள உணர்ச்சியை இனம் கண்டுகொள்ள உதவும். இசை (toneme)யின் கருவை அடுத்து வரும் இசைத்தொடர்பு எழுந்தோ, வளைந்தோ அமையும். அது பின்னி என்று குறிப்பிடப்படுகின்றது. உரப்பிற்கு முன் உள்ள இசைத்தொடர் முன்னி என்று குறிப்பிடப்படுகின்றது. முன்னி எப்போதும் கீழ் இசையிலேயே அமைந்து இருக்கும். பொதுவாக முன்னி சொல்லப்படஇருக்கும் பொருளுக்கு ஒரு முன்னோடியாக அமையும். இவ்வினா வாக்கியத்தின் இறுதி அசையின் இசை உயர்ந்து காணப்படுகின்றது. ஆகவே, இவ்வினா வாக்கியத்தின் முடிவு நிலை எழு முடிவுநிலையாக காணப்படுகின்றது.

"எனக்குத்தருவியா" என்ற வினாவாக்கியத்தில் பின்னி இல்லை. ஏனைய உறுப்புக்கள் 'பணம் தரமாட்டியா' என்ற வினாவாக்கியத்தில் உள்ளது போன்றே காணப்படுகின்றன. இசை அளவுகளின் அமைப்பும் உயர்வும் அவ்வினாவாக்கியத்தில் உள்ளது போன்றே காணப்படுகின்றன.

8.2. **எ, ஏ, யா** வகை வினா

இவ்வினாவாக்கியங்களின் சுரத்தொகுதி அமைப்பு பெரும்பாலும் முன்னி, தலை, கரு, பின்னி என்றவாறு உள்ளது. சில சமயங்களில் முன்னியோ, பின்னியோ இல்லாதிருக்கும். இவ்வினாக்கள் இரண்டு இசை அளவுகளைக் கொண்டுள்ளன. இவ்வினாக்களின் ஒலி யேற்றம் எழு ஒலியேற்றமாகும்.

35. அவன் 'எப்ப இருப்பான்?



36. 'எங்கே இருந்து வரே?

37. அவன் கடை 'எது?



எ, ஏ, யா வகை வினாக்கள் இவ்வுருபன்களைக் கொண்ட தனி வினவுச்சொற்களைக் கொண்டுள்ளன என்றும் அவ்வினவுச்சொற்கள் வினாவாக்கியங்களின் முதலிலோ இடையிலோ இறுதியிலோ வரும் என்றும் முன்னரே கண்டோம். (7.2.)

எ.கா. 35, 36, 37 ல் **எப்ப, எங்கே எது** ஆகிய வினவுச் சொற்களில் உள்ள வினாவுருபன்களில் உள்ள அசைகள் அவ் வாக்கியங்களின் ஏனைய அசைகளைவிட அதிக ஓசையுடன் ஒலிக்கின்றன. இவை அவ்வாக்கியங்களின் உரப்புப்பெற்ற அசை களாகும். அதாவது வினாவுருபன்களான எ. ஏ, யா வைக்கொண்ட சொற்களில் உள்ள அசைகள் அதிக உரப்புடன் ஒலிக்கப்பெறுகின்றன. உரப்பிற்கு முன் உள்ள அசைகள் தாழ்ந்த நிலையில் ஒலிக்கப் பெறுகின்றன. உரப்பிற்குப்பின் உள்ள அசைகளும் தாழ்ந்த நிலையில் ஒலிக்கப்பெற்றாலும் இசைநிலையைப் பொறுத்தவரை படிப்படியாக உயர்ந்து செல்கின்றன. உரப்புப்பெற்ற வினாவுருபனை உடைய அசை அவ்வாக்கியத்தின் முக்கிய பகுதி ஆகும். இது கேட் பவரின் கவனத்தை முக்கியமாக ஈர்க்க வேண்டியுள்ளது. எனவே தான் இது உரத்து ஒலிக்கப்படும் அசையாகும். இது அவ்வாக்கியத் தினுடைய ஒலியேற்றத்தின் தலை ஆகும். தலைக்குப்பின் வரும் அசைகளின் இசை எழுந்தோ, வீழ்ந்தோ அமையும். இவ்விசை மாற்றம் அவ்வொலியேற்றத்தின் கரு ஆகும். கருவிற்குப்பின்வரும் அசைகள் கருவில் மாற்றத்தை விளைவிக்கும் இசையின் ஏறும் திசைக்கோ, இறங்கும் திசைக்கோ ஏற்ப ஒரே சீராக ஏறியோ இறங்கியோ அமையும். கருவிற்குப்பின் உள்ள இசைத்தொடர் அவ்வொலியேற்றத்தின் பின்னி ஆகும். உரப்பிற்கு முன் உள்ள இசைத்தொடர் அவ்வொலியேற்றத்தின் முன்னி ஆகும், ஒவ்வொரு வாக்கியத்தின் ஒலியேற்றமும் அவ்வவ்வாக்கியத்தின் உணர்ச்சிக்கு ஏற்ப ஒலி முடிவுபெறும். இம்முடிவுகள் தகுந்த குறியீட்டுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன.

8.3. வினாவுருபன் இல்லா வினா

இவ்வினாவாக்கியங்களின் சுரத்தொகுதி அமைப்பு எ, ஏ, யா வகை வினாவாக்கியங்களின் சுரத்தொகுதியின் அமைப்பைப் போன்றே உள்ளது. இவ்வினாவாக்கியங்கள் குறைந்த அளவு

இரண்டு, அதிக அளவு நான்கு இசை அளவுகளைப் பயன்படுத்துகின்றன. இவ்வகை வினாக்களின் ஒலியேற்றம் எழு ஒலியேற்றமாகும்.

38. 'நீ தம்பியே அடிச்சே?



39. நீ 'தம்பிய அடிச்சே?

40. நீ தம்பிய 'அடிச்சே?



இவ்வகை வினாவாக்கியங்களில் எந்த ஒரு சொல்லையும் அதற்குத் தகுந்த ஒலியேற்றம் கொடுப்பதன்மூலம் வினவுச்சொல்லாக மாற்றலாம் என முன்னரே கண்டோம் (7.3.). எ.கா. 38ல் உள்ள **நீ** என்ற அசை எடுத்துச் சொல்லப்படுவதால் ஏனைய அசைகளைக் காட்டிலும் அதிக ஓசைபெற்று ஒலிக்கின்றது. இதுபோன்றே எ.கா 39,40 ஆகியவற்றில் முறையே **தம்பியே** என்ற சொல்லில் உள்ள **தம்** என்ற அசையும் **அடிச்சே** என்ற சொல்லில் உள்ள **அ** என்ற அசையும் அதிக ஓசைப்பெற்று ஒலிக்கின்றன. இவை அவ்வவ்வாக்கியங்களின் உரப்புப் பெற்ற இடங்களாகும். ஆகவே இவை கேட்பவரின் கவனத்தை ஈர்க்குமாறு அமைந்துள்ளன. இவை அவ்வாக்கியங்களின் ஒலியேற்றத்தினுடைய தலை ஆகும், தலையை அடுத்துவரும் அசைகளின் இசை திடீரென்று மாற்றம் பெற்று தன் நிலையிலிருந்து எழுந்து செல்கின்றது. இவ்விசைமாற்றம் அவ்வாக்கியத்தின் உணர்ச்சியைப் புரிந்துகொள்ள உதவுகின்றது. இவ்விசைமாற்றமானது அவ்வாக்கியத்தினுடைய கரு ஆகும். எ,கா.

38ல தலையை அடுத்துவரும் **தம்பிய** என்ற சொல்லில் உள்ள **பி** என்ற அசை தன் இசை நிலையிலிருந்து திடீரென்று உயர்ந்து எழுகின்றது. இதைப்போன்றே எ.கா 39,40 ஆகியவற்றில் முறையே **தம்பிய** என்ற சொல்லில் உள்ள **பி** என்ற அசையும், **அடிச்சே** என்ற சொல்லில் உள்ள **சே** என்ற அசையும் தம் இசை நிலையிலிருந்து உயர்ந்து எழுகின்றன. இவை அவ்வவ் வாக்கியங் களின் ஒலியேற்றத்தினுடைய கரு ஆகும். தலைக்கு முன் அமைந் துள்ள இசைத்தொடர் முன்னி என்றும், கருவிற்குப்பின் அமைமந் துள்ள இசைத்தொடர் பின்னி என்றும் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு வாக்கியத்தின் ஒலியேற்ற முடிவுநிலையும் அவ்வாக்கியத் தின் உணர்ச்சிக்கு ஏற்ப முடிவுறும். இம்முடிவுகள் ஏற்ற குறி யீட்டால் குறிப்பிடப்பட்டுள்ளன.

8.4. ஒட்டுவினா

இவ்வினா வாக்கியங்களின் சுரத்தொகுதியின் அமைப்பு முன்னி தலை, கரு ஆகியவற்றைப் பெற்றுள்ளது. பின்னி இவ்வினாக்களின் சுரத்தொகுதியில் இல்லை. தலை, கரு இரண்டும் ஒட்டு வினவுச் சொல்லிலேயே உள்ளன. இவ்வினாவாக்கியங்கள் இரண்டு அல்லது மூன்று இசை அளவுகளைக் கொண்டுள்ளன. இவ்வினாக்களின் ஒலியேற்றம் எழு ஒலியேற்றமாகும்.

41. அவன் சொன்னாதான் கேப்பே, ‘இல்லே?

42. அக்கா வரலேன்னியே, ‘அப்புடியா?

43. கொழந்தே நடக்கும்ன்னியே, ‘நடக்கும்?



இவ்வினாவாக்கியங்களில் ஒருசெய்தி வாக்கியத்தைத் தொடர்ந்து ஒட்டுவினவுச் சொல் வரும் என்று முன்னர் பார்த்தோம் (7.4.).

இவ்வொட்டு வினவுச் சொல்லில் தலை, கரு இரண்டும் அமைந் துள்ளன. எ.கா. 41ல் **இல்லே** என்ற ஒட்டு வினவுச் சொல்லின் முதலில் உள்ள **இல்** என்ற அசை அதிக ஓசை பெற்று ஒலிக்கின்றது. இது அச் சொல்லின் உரப்புப் பெற்ற இடமாகும். உரப்புப் பெற்ற இவ்வசை அவ்வாக்கியத்தினுடைய ஒலியேற்றத்தின் தலை ஆகும். இதைப்போன்றே எ.கா. 42ல் **அப்புடியா** என்ற ஒட்டு வினவுச் சொல்லின் முதலில் உள்ள **அ** என்ற அசையும், எ.கா. 43ல் **நடக்கும்** என்ற ஒட்டு வினவுச் சொல்லின் முதலில் உள்ள **ந** என்ற அசையும் அதிக ஓசை பெற்று கேட்பவரின் கவனத்தை ஈர்க்குமாறு அமைந் துள்ளன. இவை அவ்வவ்வினாவினுடைய ஒலியேற்றத்தின் தலை ஆகும். தலையை அடுத்துவரும் அசைகளின் இசை தன் இசை நிலையிலிருந்து திடீரென்று மாற்றம் அடைகின்றது. இவ்விசை மாற்றம் அவ்வினாவாக்கியத்தின் உணர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகின்றது. எ. கா. 41, 42, 43 ஆகியவற்றில் முறையே **-லே, -யா, -கும்** ஆகிய அசைகள் தங்கள் இசைநிலையில் தெளிவாக மாற்றம் பெற்று அவ்வினா வாக்கியங்களுடைய ஒலியேற்றத்தின் கருவைக் குறிக்கின்றன. ஒட்டுவினவுச் சொல்லுக்கு முன் அமைந் துள்ள நீண்ட தொடர் முன்னி ஆகும். பின்னி இவ்வகை வினா வாக்கியங்களின் ஒலியேற்றத்தில் இல்லை. இவ்வினா வாக்கியங்க ளுடைய ஒலியேற்றத்தின் முடிவு நிலைகள் குறியிட்டுக் காட்டப்பட் டுள்ளன.

9. ஆய்வு முடிவு

தமிழ் மொழியில் நான்கு வகையான வாக்கியங்கள் உள்ளன. அவை 1. செய்தி வாக்கியம், 2. வினா வாக்கியம், 3. விழைவு வாக்கியம், 4. உணர்ச்சி வாக்கியம் ஆகும் (2.). இப்பாகுபாடு வாக்கியங்களின் கருத்தடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மொழியில் நான்கு வகையான வினாக்களைக் காணலாம் அவை 1. **-ஆ** வகை வினா, 2. **எ, ஏ, யா** வகை வினா, 3. வினா உருபன் இல்லா வினா, 4. ஒட்டுவினா ஆகும் (7.).

நம் கருத்துக்களை எழுத்து வழக்கில் குறிப்பிடுவதற்கு அதற் கென உள்ள எழுத்துக்களை பயன்படுத்துகின்றோம். அவ்வுருபன் களைக் குறிப்பிடுவதற்கென தனிவுருபன்கள் உள்ளன: அவை

தொடரிணைக் கூறுகள் ஆகும். மொழியின் சொற்பொருள்கள் பெரும் பாலும் தொடரிணைக் கூறு(1)களால் பெறப்படுகின்றன. ஆனால் பேச்சுவழக்கில் நம் உணர்ச்சிகளை முழுமையாக வெளிக்காட்டுவ தற்கு இவை மட்டும் போதுமானவை அல்ல. அதாவது, பேசுபவரின் உணர்ச்சிகளை உணர்த்த மற்றொரு அமைப்பு தேவை. அவ்வமைப்பே மீப்பகுப்புக் கூறுகள். பேச்சுத்தொடர் முழுதும் நிலவி அத்தொடருக்கு ஓசைநயம் (1) அளிக்கின்றன. இசை, உரப்பு, மாத்திரை, கால இடைவெளி ஆகியவை ஓசை நயத்திற்கான அடிப்படையாகும். இவை தம்முள் இணைந்து உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு ஏற்பப் பின் வரும் தொகுதிகளை உண்டாக்குகின்றன. அவை தலை, கரு, முன்னி, பின்னி ஆகியவை (4). இவற்றின் தொகுப்பே சுரத்தொகுதி ஆகும். சுரத்தொகுதியின் அமைப்பே வாக்கியத்தின் ஒலியேற்றமாகும். வாக்கியத்தின் ஒலியேற்றம் தக்க முடிவுநிலை(5)களைக் கொண் டுள்ளது.

இக்கட்டுரையில் ஏழுவகை ஒலியேற்ற அமைப்பு நிறுவப் பட்டுள்ளது(3). பொதுவாக அனைத்து வினாக்களும் இரண்டிலிருந்து நான்கு வரையிலான இசை அளவுகளைக் கொண்டுள்ளன. மேலும் அனைத்து வினாக்களின் ஒலியேற்றமும் எழு ஒலியேற்றமாகவே அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு

1 ஒலியேற்றம் பேச்சு வழக்கிலேயே காணப்படுகின்றது. ஆகவே இக்கட்டுரையின்கண் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் அனைத்தும் பேச்சுத்தமிழிலிருந்தே கொடுக்கப்பட்டுள்ளன.

மொழியியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

1. Armstrong and Ward, I. C. 1926 ***A Hand book of Intonation*** cambridge. London.

2. Bolinger, D. L. 1972 ***Intonation,*** [ed.] D. L. Bolinger Penguin Books. England.

3. Crystal, C. F. 1969 *Prosodic Systems and Intonation in English* CUP London.

4. Fries. C. F, 1952 "On the intonation of yes/no question in English" *In honour of Daniel Jones*: [ed.] D. Abercrombie. etal. Longmans, London.

5. O'connor and Arnold 1955 "Intonation of tag questions in English", *English Studies*, vol. 35 pp 97-105. Amsterdam.

6. ——— ——— 1973 *Intonation of Colloqulal English* London.

7. Pike K. L. 1945 "General characteristics of Intonation" in *Intonation* (1972) [ed.] D. L. Bolinger. Penguin Boods. London.

8. Prabhakar Babu, B. A. 1976 *Intonation of Colloqulal Telugu in IJDL* Vol VIII No. 2 June, 1978. D. L. A. Trivandrum.

9. Roger kingdon 1959 *Ground work of English Intonation* Longmans. London.

10. Ravisankar, G. 1980 Intonation Pattern of Question in Tamil, unpublished M.Phil thesis Annamalai university, Annamalainagar.

பழந்தமிழில் உந்நீறு

தி. முருகரத்தனம்

1. உந்து என்னும் இடைச்சொல் ஒன்று பற்றித் தொல்காப்பியர் இடையியலில் கூறியிருக்கின்றார். தொல்காப்பியர், ''உம்மை எண்ணின் உருபு தொகல் வரையார்'' (தொல். சொல். 291) என எண்ணும்மைக்குச் சிறப்பிலக்கணம் தருகின்றபோது, ''உம் உந்தாகும் இடனுமாருண்டே'' (தொல். சொல். 291) என உந்து பற்றி விளக்குகிறார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இவ் உம் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு பெயரெச்சத்தில் வரும் உம் எனவும் அவ் உம்மே உந்தாகத் திரிகிறது எனவும் குறிப்பிட்டு இருக்கின்றனர். 'இடனுமாருண்டே என்றதனால் இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க' என்கின்றனர் அவர்கள். பின்னர் வந்த பவணந்தியார் தம் நன்னூலில்

''செய்யும்என் எச்சவீற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந்து ஆதலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே'' (நன். 341)

எனத் தொல்காப்பியரைப் பின்பற்றியே தம் கருத்தை வழங்குகிறார்.

2. இவ் **உந்து** என்னும் இடைச்சொல் புறநானூற்றில் 27 இடங்களில் ஆளப்பெற்றிருக்கிறது; புறநானூறு தவிர ஏனைய சங்கத் தொகை நூல்களில் அவை காணப்படவில்லை. ஆதலால் இவ்விடைச் சொல்லின் ஆட்சிபற்றிப் பல்வேறு சிந்தனைகள் அறிஞரிடையே எழுகின்றன. ஏறத்தாழ 50 ஆண்டுகளாக இதுபற்றி ஆராய்ச்சி நிகழ்ந்துகொண்டு இருக்கிறது.[1] புறநானூற்றின் பழைய உரைகாரர், தொல்காப்பிய உரையாசிரியர்களைப் போலவே இச் **செய்யுந்து** என்னும் வடிவம் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் திரிபு எனவே குறிப்பிட்டுச் செல்கின்றார்.[2] இவ் விடைச் சொல் பற்றி ஆராய்கின்ற இன்றைய அறிஞர்கள் **உந்து** வடிவம் பெயரெச்சத்திற்குரியதாக இருக்காது எனவும் கருது கின்றனர் டாக்டர் மு. வ. பல காரணங்கள் காட்டிச் **செய்யுந்து** வடிவத்தை வினையாலணையும் பெயராக நிறுவுகின்றார். பல காலங்களிலும் பல இடங்களிலும் வாழ்ந்த புலவர்களால் ஆளப் பட்டுள்ள காரணத்தால் அது ஒரு கிளைமொழிக்கு (dialect உரியதல்ல என்றும் அவர் நிறுவுகின்றார். அதனை **உம்** என்னும் காலக்கிளவியும் **'து'** என்னும் ஒன்றன்பால் விகுதியும் சேர்ந் தமைந்த வடிவம் எனவும் அவர் பிரித்து அமைத்துக் காட்டுகிறார்.

திரு. கே. என். சிவராசபிள்ளை, இந்த, அந்த என்பதற்கு இணையான **உந்த** என்னும் சுட்டுச் சொல்லிலிருந்து அமைந்ததே இவ் **உந்து** என்னும் வடிவம் எனவும் அது வினைமுற்று எனவும் மலையாள மொழியில் வழங்கும் நிகழ்கால வினைமுற்றான **செய்யுந்நு** என்னும் சொல்லே **செய்யுந்து** எனவும் வாதமிடுகின்றார். அது ஒரு நிகழ்கால வினை எச்சமாகவும் இருக்கலாம் என்பதும் அவர்கருத்து. டாக்டர் கோதண்டராமன் **செய்யுந்து** வடிவத்தை இன்றைப் பேச்சுத்தமிழின் **செய்யுது** என்னும் ஒன்றன்பால் வினை முற்றுடன் இணைத்து ஆராய்கிறார்.

3. தொல்காப்பியத்திற்கு உரைவகுத்த உரையாசிரியர்களும் புறநானூற்றின் பழைய உரைகாரரும் **செய்யுந்து** வாய்ப்பாட்டு வினைவடிவத்தைப் பெயரெச்சமாக கருதியது தவறே ஆகிறது. உந்தீற்றுச்சொல் புறநானூற்றில் ஆளப்பெற்ற ஆட்சியினைக்

காணும்போது அது பெயரெச்சமாக வழங்குவதாகத் தோன்ற வில்லை டாக்டர் மு. வ. போன்ற இன்றைய அறிஞர்கள் பெய ரெச்சம் என்னும் கருத்தை மறுத்து அதை ஒன்றன்பால் வினை யாலணையும்பெயராகக்கொள்வது மிகவும் பொருத்தமான முடிவே. ஆனால் அதனை வினையாலணையும் பெயராக நிறுவுதல் பொருட்டு அவரும் பிறரும் மேற்கொள்ளும் ஆராய்ச்சி மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது போன்ற பெருமுயற்சியாக அமைந் திருக்கிறது. உந்தீற்றுச் சொற்கள் வழங்கும் புறநானூற்றுப் பாடல்களை மட்டும் வைத்துக்கொண்டு அ ற்றின் இயல்பினைக் காண அவர்கள் முயல்கின்றனர். தட்டுத் தடுமாறி அவை வினை யாலணையும் பெயர்கள் என்ற உண்மையினை அவர்கள் நிறுவி யிருக்கின்றனர் அவ்வாறு அவர்கள் ஒருசில பாடல்களை மட்டும் ஆராய்ந்து உந்திற்றுச் சொற்களின் இயல்பினை வரையறுக்க முயன்றதால் அவற்றின் முழுஇயல்பினையும் கண்டுகொள்ளத் தவறிவிட்டனர் என்றே தோன்றுகிறது. அவ்வாறு புறப்பாடல்களை மட்டும் கொண்டு ஆராய்வதைவிடச் சங்கத் தமிழ்மொழி முழுவது மாக ஆராய்ந்து அதனமைப்பில் உந்தீற்றுச் சொற்களுக்குரிய இடத்தைக் காண முயன்றிருந்தால் அவற்றிற்குரிய இடத்தைக் கண்டுகொண்டு இருந்திருக்க முடியும், உந்தீற்றுச் சொற்கள் பழந்தமிழ் மொழியின் அமைப்பிற்கு ஒத்தனவாகவே இருந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம். உந்தீற்றுச் சொற்களுக்கு இனமான சொற்கள் எவைஎவை என்று கண்டு அவற்றோடு ஒருங்குவைத்து ஆராய்ந்திருந்தால் உண்மை புலப்பட்டிருக்கும்.

4. உண்மையில் சங்கத்தமிழ்மொழியில் உந்தீற்றுச் சொற் களுக்கு இனமான சொற்கள் வழங்குகின்றன. அவை இவ் வுந்தீற்றுச் சொற்களின் இயல்பினை எடுத்துக்காட்டுகின்றன. பழந்தமிழில் பரவலாக வழங்கும் சில வினைவடிவங்களை இங்குக் காணலாம்:

பிரியுநள்	இகழுநர்
	காணுநர்
என்னுநள்	தகைக்குநர்
கேட்குநள்	உள்ளுநர்

பெறுகுநள் போக்குநர்
வைகுநர்

இவ்வினைகள் அகநானூற்றில் வழங்குகின்றன. அத்தொகை நூலில் பலர்பாலுக்குரியனவாகிய இத்தகைய வடிவங்கள் 23 கிடைக்கின்றன. **சொல்லுந, கேட்குந** ஆகியவடிவங்கள் தொல் காப்பியத்தில் கிடைக்கின்றன (தொல். பொருள் 501). **அறியுநர், அறியுநள், அறியுநன், ஆற்றுநர்** எனவாகப் பலவடிவங்கள் புறநானூற்றில் கிடைக்கின்றன. இத்தகைய வடிவங்கள் சங்கப் பழந்தமிழில் பரவலாக வழங்குவதை எல்லாரும் அறிவர். இத் தகைய சொற்களின் அமைப்பினை

வினைப்பகுதி + உந் + பாலறிகிளவி

என உறுப்புக்களாகப் பிரித்துக் காணலாம். பழந்தமிழை ஆராய் கின்றபோது இத்தகைய வடிவங்கள் ஆண், பெண், பலர், பல என்னும் நான்குபால்களுக்கும் மிகுதியாக வழங்குவதைக் காணமுடி கிறது. இவற்றை வாய்பாடுகளாக அமைத்துக் கீழ்க்காணுமாறு மாலை (paradigm) யாக்கிக் காணலாம்.

1. ஆண் : செய்யுநன்
2. பெண் : செய்யுநள்
3. பலர் : செய்யுநர்
4. ஒன்று : ?
5. பல : செய்யுந

படர்க்கை நாற்பால்களுக்கும் வடிவங்கள் அமைந்திருக்கின்றபோது படர்க்கை ஒன்றன்பாலுக்கு இத்தகைய வடிவம் இல்லாமல் இருப்பது சிந்திப்பதற்குரியது. இல்லாமலிருக்கின்றது என்று சொல்வதைவிட அதுவும் இருத்தல் வேண்டும் எனத் தேடிக் காணமுயலவேண்டும். அந்த முயற்சி வீண்போகவில்லை. **செய்யுந்து** என்னும் வாய் பாட்டு வடிவம் இந்த மாலை (paradigm) யில் பொருத்தமாக அமர்கிறது:

1. செய்யுநன்
2. செய்யுநள்
3. செய்யுநர்
4. செய்யுந்து
5. செய்யுந

ஆதலால் செய்யுந்து என்னும் வடிவம் செய்யுநன், செய்யுநள் செய்யுநர், செய்யுந என்னும் படர்க்கை வடிவங்களுக்கு இனமான வடிவமாக அமைந்துள்ளது என்பதை இம்மாலை தெளிவாக்குகிறது. உந்தீற்று வினைச்சொற்களின் இயல்பினைக் காணுதலில் ஏ பட்ட குழப்பத்தையும் தடுமாற்றத்தையுல் மேற்கண்ட மாலைச் சொற்கள் (Paradigmatic words) எளிதிலே போக்கிவிடுகின்றன. இம்மாலை வடிவங்கள் எல்லாம் ஒருவகை வினையாலணையும் பெயர் என்பது தெளிவு.[3] ஆனால் இவ்வினையாலணையும் பெயர் காலம் காட்டுதல் இல்லை எனலாம்; அல்லது காலப் பொதுமையுடையவை எனலாம். உந்து என்பதன் ஈற்றில் அமைந்த 'து' ஒன்றன்பால் விகுதி (டாக்டர் மு. வ. குறித்ததுபோல). உந் ஓர் இடைநிலை. ஆனுல் பிறகால இடைநிலைகளுக்கும் இதற்கும் உள்ள தொடர்பு இன்னது என்பது தெளிவுபடவில்லை. இது ஆராய்ச்சிக்குரியது.

5. மேற்கண்ட வடிவங்கள் எல்லாம் படர்க்கைக்கு உரியன என்பது எடுத்துக்காட்டப்பட்டது. தன்மை முன்னிலைக்கும் இவ் வடிவங்கள் இருக்கும் என எதிர்பார்க்கலாம். மொழியின் அமைப்பு அத்தகையது. எதிர்பார்த்தல் வீண்போகவில்லை.

அறியுநம் (புறம் 381:6)
அடுநை, விடுநை (புறம் 33:1)

ஆகிய வடிவங்களைப் புறநானூறு தருகிறது. இப்போது இவை எல்லாவற்றையும் ஒரு வாய்பாட்டு மாலையாக அமைத்துக் காணலாம்.

தன்மை	முன்னிலை	படர்க்கை	
1. ?	3. செய்யுநை	5. செய்யுநன்	8 செய்யுந்து
2. செய்யுநம்	4. ?	6. செய்யுநள்	9. செய்யுந
		7. செய்யுநர்	

இவ்வாய்பாட்டு மாலையில் தன்மை ஒருமைக்கும், முன்னிலைப் பன்மைக்கும் வடிவங்கள் (இக்கட்டுரையாசிரியர்க்கு) தென்படவில்லை. சங்கத்தமிழ் முழுவதையும் ஆராய்ந்தால் ஒருக்கால் இவற்றுக்குரிய வடிவங்கள் கிடைக்கலாம். வடிவங்கள் கிடைக்கத்

தான் வேண்டும் எனவும் எதிர்பார்க்கலாம். அவ்வாறாயின் இவ் வடிவங்கள் இடையீடு இல்லாது முழுமையான ஒரு சொல்மாலை யாக (paradigm) அமைவதைக் காணலாம்.

6. சங்கப் பழந்தமிழில் கீழ்க்காணும் வடிவங்கள் பல வழங்குகின்றன:

பொருநன்	உறுநர்	பகர்நர்	அறிஞர்
மகிழ்நன்	உறைநர்	வாழ்நர்	எறிஞர்
விடுநள்	அரிநர்	வீழ்நர்	கிளைஞர்
	வருநர்		

இந்த வடிவங்கள் அகநானூற்றில் வழங்குகின்றன. இவற்றையும் மேலே தொகுத்துக் கண்ட வினைவடிவங்களுக்கு இனமான வடிவங்களாகவே கொள்ளவேண்டும். காரணம் இவை எல்லாம் பெயர்களே; உந் என்பதன் நகரம் இவற்றில் வழங்குவதையும் காணலாம். இவை அகநானூற்று மொழிக்கு மட்டும் உரியவை அல்ல. சங்கத் தமிழ்மொழிக்கும் உரியவை: இவற்றில் காணப் படும் ஞகர இடைநிலை முன்னண்ண உயிர்களை அடுத்து வழங்குகின்றது; நகர இடைநிலை முற்றுகர ஈற்று வினைப் பகுதிகளை அடுத்து வழங்குகிறது. சிலபோது மெய்யீற்று வினைப் பகுதிகளை அடுத்தும் நகரம் வழங்குகிறது. இங்கெல்லாம் நகர ஞகர இடைநிலைகள் உந் என்னும் இடைநிலையின் திரிபுகளே என்பதில் ஐயம் இல்லை. இவை உகரத்தை இழந்துவிட்டன.

7. உந் இடைநிலை வினைவடிவங்கள் பற்றியும் அவை மாலையாக (paradigmatic) வழங்குதல் பற்றியும் அவற்றின் உறுப்புக்கள் பற்றியும் அவ்வுறுப்புக்களின் திரிபுகள் பற்றியும் மேலும் விரிவாக இனி ஆராய்தல் வேண்டும்.

குறிப்புக்கள்

1. உந்தீறு பற்றி முதன் முதல் கே. என். சிவராசப்பிள்ளை ஆராய்ந்தனர். புறநானூற்றின் பழமை அல்லது உந்து என்னும்

இடைச் சொற்பிரயோகம் (சென்னைப் பல்கலைக்கழகம், 1929) என்னும் சிறு வெளியீட்டில் அவர் கருத்துக்கள் உள்ளன. பின்னர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் **பரணர்** என்னும் தம் நூலில் இதுபற்றிக் குறிப்பு வரைந்தனர். அதன் பின்னர் டாக்டர் மு. வ. வரைந்த மொழியியற் கட்டுரைகள் (1954) என்னும் நூலில் **பெரியோர் சிறுபிழை** என்னும் கட்டுரையில் இடம்பெற்ற **பாயுந்து** பற்றிய பகுதி சிறப்பாகக் குறிக்கத்தக்கது. அதில் அவர் 10 பக்கங்கள் **செய்யுந்து** வாய்பாட்டு வினை வடிவம் பற்றி விரிவாக ஆராய்கிறார்கள். இதன் பின்னர் டாக்டர் இசரயேல் **உந்தீற்று வினைச்சொற்கள்** என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை மு. வ வின் கருத்துக்களையே வற்புறுத்தித் தன் கட்டுரைத் தொகை நூலிலும் (இடையும் உரியும், 1977) பேர் சுப்புரெட்டியாரது Studies in Arts and Sciences 1978) என்னும் தொகை நூலிலும் வெளியிட்டிருக்கின்றார். டாக்டர் ஆர். கோதண்டராமன் **உந்தீற்றின்** வரலாறு பற்றி ஒரு புதுச் சிந்தனை செய்கிறார். (**திராவிட மொழிகளில் செய்யுந்து வினைகள்** செந்தமிழ்ச்செல்வி, 47.4, 1972) டாக்டர் ஆதித்தன் **இன்னிலை** என்னும் நூலில் உந்திறு ஓரிடத்தில் ஆளப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார், (தமிழ்ப்பொழில் 54, 1, 1980). மு.வ. வின் கருத்துக்களுக்குப் பின்னர் உந்திறு பற்றிக் கருத்துக்கள் வளர்ந்ததாகத் தெரியவில்லை.

இக்கட்டுரையில் இவ்வறிஞர்கள் கருத்துக்களாக எடுத்துக் காட்டப்படுபவை இங்குச் சுட்டிய அன்னார் கட்டுரைகளிலிருந்தே எடுக்கப்பட்டவை.

2. 'மேல் எண்ணப்பட்ட பெயரெச்சம் மூன்றும் (பாயுந்து, தூக்குந்து, தருஉந்து) மிழலை என்னும் பெயர் கொண்டன, அவை உம் உந்தாய் நின்றன' (புறம் 137 உரை). இவ்வாறே பிற இடங்களிலும் இவ்வுரையாசிரியர் குறிப்பு எழுதுகிறார்.

3. இவ்வினை வடிவங்களை அறிஞர்கள் பலர் வினையாலணையும் பெயர்களாகக் கருதுகின்றனர். இதன் உண்மையில் ஐயம் உண்டு. பொதுவாக வினையாலணையும் பெயர்களுக்கு

இன்றைய ஆராய்ச்சி அறிஞர்கள் சிலர் புதுவிளக்கங்கள் தருகின்றனர் (டாக்டர் அண்ணாமலை, திராவிடமொழியியல், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) இவ்விளக்கத்தில் கருத்துவேறுபாடுகள் எழுகின்றன. ஆதலால் இதுபற்றிய ஆராய்ச்சியும் தனியே மேற்கொள்ளத்தக்கது

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தமிழ்ச் சொற் பரப்பு

தமிழ்ச் சொற்பரப்பு ஒரு பெருங்கடல் போல் விளங்குகின்றது. தமிழ்ச் சொற்கள் அனைத்தையும் கோவை செய்து வகுத்த நிகண்டு களும் அகராதிகளும் குறைபாடுடையனவாய் நிற்கின்றன. ஒரு நூலேனும் சொற்பொருளாராய்ச்சி செய்து கூறவில்லை. யாவும் சொற்பொருள் மட்டில் கூறுகின்றன; சொல்லின் பகுதிகளாவன இவையென்றும் சுட்டிற்றில. ஆதித்தமிழர்க்கு ஒன்றுமுதல் நூறாயிரங் காறும் எண்ணத் தெரிந்திருந்தது. ஏனெனில் இவற்றைக் குறிக்கும் சொற்கள் எல்லால் தனித்தமிழ்ச் சொற்களாகும். ஆழாக்கு, உழக்கு, தாழி, குறுணி, பதக்கு, தூணி, கலன் என்ற முகத்தலளவைக் கணக்கும், சாண், அடி, முழம் என்ற நீட்டலளவைக் கணக்கும், பலம், வீசை, மணங்கு என்ற எடுத்தலளவைக் கணக்கும், கால், அரைக்கால், மாகாணி, மா, அரைமா, காணி, முந்திரி, இம்மி, என்ற கீழ்வாய்க் கணக்கும் அவற்றின் குறியீடுகளும் தமிழரது கணக் கறிவின் உயர்வை விளக்குகின்றன.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
தமிழ் மொழியின் வரலாறு, மதுரை.

மேடைப்பேச்சில் பொருள் விளக்கம்

மா. கணேசன்

மனிதன் தன் கருத்தை வெளிப்படுத்த மொழியையே கருவியாகக் கொண்டுள்ளான். மொழியாகிய இக்கருவியின் பயன்பாட்டுமுறை காலத்திற்குக் காலம், மொழிக்கு மொழி, ஆளுக்கு ஆள் மாறு படுகின்றது. தொடக்க காலத்தில் கருத்தும் அது சொல்லப்படுகின்ற முறையும் வேறுவேறாகக் கருதப்பட்டன. ஆனால் இன்று அத்தகைய நிலை இல்லை. சொல்லப்படுகின்ற முறையானது கேட்போரின் மனதில் கருத்தை ஆழமாக பதியச்செய்கிறது. இம் முறையே 'மொழி வடிவமாகும்'. இம் மொழியை அன்றாட வாழ்வில் ஒரு மனிதன் பயன்படுத்தும் முறைக்கும், ஒரு மேடைப் பேச்சாளி பயன்படுத்தும் முறைக்கும், ஒரு இலக்கியப்படைப்பாளி பயன்படுத்தும் முறைக்கும் வேறுபாடுகள் உண்டு. மேலும் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்தும் மொழியிலும் சமுதாயச் சூழல் (social context) பேச்சுத்தலைப்பு (topic of speech) போன்றவற்றால் மொழியில் மாற்றங்களை காணலாம். ஆக, ஒரு கருத்து. முறைச் சூழல் நிலை (formal situation) க் கென்றும் அன்முறைச் சூழல்

நிலை (informal situation) க் கென்றும் தனித்தனி உருவம் பெறுகிறது என்பது திண்ணம். மொழி செயற்பாட்டின் அடிப்படையில், வகுப்பறை விரிவுரை, மேடைப்பேச்சு, வானொலி, தொலைக் காட்சி பேச்சுகள் போன்றவை முறைச்சூழல் நிலை என்று பகுக்கப் படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படும் நடையில் (style) வேறுபாடு இருப்பதை நாம் அறிவோம்.

0.1 மேடைப்பேச்சு

மேடைப்பேச்சு என்பது ஒரு முறைச்சூழல் நிலைப்பேச்சாகும் என்று மேலே குறிப்பிட்டுள்ளோம். மேடையில் ஒரு பேச்சாளர் தனது கருத்தை விளக்குவதற்கு மொழி வகைகளில் (language variety) ஒன்றான சிறப்பு வழக்கு (formal variety) கொண்டே விளக்குகிறார்கள் என்பது மொழியியலாளர்கள் (K.Zvelabil, 1960: 231, Shanmugam pillai, 1970:27) துணிவு. ஆனால் மேடையில் ஒரு குறிப்பிட்ட மொழிவகை மட்டும் பயன்படுத்துவதில்லை; தலைப்பு (topic) சமுதாயச் சூழ்நிலை (social context) பேசுவோர்-கேட்போர் தொடர்பு முறை (speaker audience role relationship) போன்றவைகள் காரணமாக மொழிவகைகள் கலந்து வருகின்றன. இம்மேடைப் பேச்சை தலைப்பின் அடிப்படையில், அரசியல், சொற் பொழிவு, சமயச் சொற்பொழிவு, இலக்கியச் சொற்பொழிவு, பண்பாடு, கலாச்சாரம், விளக்கச் சொற்பொழிவு என்று வகைப்படுத்தலாம். இவை ஒவ்வொன்றிலும் கருத்து விளக்கும் முறையும் மொழிநடையும் பேச்சாளருக்கு பேச்சாளர் மாறுபடுகின்றன. பொதுவாக, மொழி நடையும் விளக்கமுறையும் மாறுபடுவதால் பொருள் விளக்கத்திலும் வேறு பாடுகள் காணப்படுகின்றன எனலாம்.

0.2. எழுத்து முறையில் பொருள் விளக்கம்

நூல்கள், குறிப்பாகச் சிறுகதைகள், நாவல்கள் போன்றவைகள் எழுதப்படும்போது கருத்தின் தன்மைக்கேற்பவும் ஆசிரியரின் விருப்பத்திற்கேற்பவும் பலவகை நடைகளில் அமையும். அவை யாவன: 1. விளக்க நடை. அதாவது ஒரு நிகழ்ச்சியை உவமை, உருவகம் கொண்டு விளக்கிச் சொல்வது. 2 விவரிப்பு நடை. அதா

வது ஆசிரியர் கூற்றாகவோ அல்லது கதையின் ஒரு பாத்திரத்தின் கூற்றாகவோ கதையைக் கூறி கருத்தோட்டத்தை அமைப்பது. 3. நாடக நடை. அதாவது கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் உரையாடுவது போன்று எழுதுவது. நூல்கள் ஆக்கும்பொழுது நூலாசிரியர்கள் கதைப்பாத்திரங்கள் அல்லது சொல்லப்படுகின்ற கருத்துக்களுக்கேற்ப சொற்கள் தேர்வு செய்யவும் நடையை அமைக்கவும் கருத்துக்களைத் தொடர்புடையதாகப் படைக்கவும், பொருளை எளிதில் தெளிவுபடுத்தத் தேவைப்பட்ட இடங்களில் துணைக் கருத்துக்களை முறையாக அமைக்கவும் வாய்ப்பும் காலமும் உண்டு ஆகவே நூல்கள் மொழி நடையிலும் விளக்கமுறையிலும் செம்மைப் பட்டுப் பொருள் விளக்கம் சிறப்புப்பெறுகிறது.

0.3. மேடைப் பேச்சில் பொருள் விளக்கம்

மேடையில் பொருள் விளக்கம் செய்வது நூல்களில் விளக்கப் படுவதிலிருந்து சற்று மாறுபட்டே காணப்படுகிறது. மேடையில் பேச்சாளர் தனது மனதிலுள்ள கருத்துக்களை அவ்வப்போது மொழிவதால் இலக்கணக் குறைபாடுகள் அமைந்த வாக்கியங்களும், முற்றுப் பெறாத வாக்கியங்களும் எழுவாய் பயனிலை இயைபுஅற்ற வாக்கியங்களும் அமைவது இயல்பு. கருத்துக்கள் விட்டுவிட்டுத் தொடர்ச்சியின்றி அமையவும் வாய்ப்புகள் உண்டு. மேடைப் பேச்சாளர்கள் தலைப்பை ஒட்டிய கருத்துக்களை மட்டும் தொடர்ந்து அடுக்கிக் கொண்டு செல்லாமல், கருத்துக்களைத் தெளிவுபடுத்த துணைநிற்கும் பல வகைப்பட்ட சிறுகதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள், நகைச்சுவைப் பகுதிகள், அன்றாட வாழ்க்கைச் சம்பவங்கள் போன்றவற்றை ஆங்காங்கே இணைத்து விளக்குவது இயல்பு. இவைகளை பொருள் விளக்கத்திற்கு உதவும் உத்திகளாகக் கருதலாம். இவ்வுத்திகளின் தேர்வு பேச்சாளரின் அனுபவம், விருப்பம், சொல்லப்படுகிறகருத்து ஆகியவற்றைப் பொருத்து அமைகிறது. கருத்துக்கள் வலியுறுத்தும் முறை மேடைப்பேச்சு எழுத்துமுறையை விட சிறப்புக் கொண்டு விளங்குகிறது. ஒரு நூலின் படைப்பாளி தனது மனதில் தோன்றும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மொழியின் வாயிலாக மட்டுமே வெளிப்படுத்த முடிகிறது. சில சமயங்களில் ஒரு சில உணர்ச்சிகள் முழு விழுக்காடும் பிரதிபலிப்பதில்லை. ஆனால் மேடையில் மொழியுடன் மொழியல்லாத ஒலி ஏற்றம்,

அங்க அசைவு போன்ற அம்சங்கள் இணைந்து கேட்போரிடத்து அதே உணர்ச்சியை எழுப்ப முடிகிறது.

இங்கு மேடையில் பொருள் விளக்கம் செய்யும்போது மொழி நடையிலும் விளக்கமுறையிலும் எந்தெந்த வழிமுறைகளும் உத்திகளும் கொண்டு அணுகுகிறார்கள் என்பதை இரண்டு சமயச் சொற்பொழிவுகள் துணைகொண்டு ஆராயப்படுகிறது. இங்கு எடுத்துக் கொண்ட இரண்டு பேச்சாளர்கள் திருமுருக. கிருபானந்த வாரியார், மங்கள முடையார் (விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) ஆகியோர் முறையே 'மகாபாரதம்','சேந்தனார் செய்த செயல்கள்' என்ற தலைப்புகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் ஒவ்வொன்றிலும் முதல் இருபது நிமிடப்பேச்சே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1.0 வாரியார் சொற்பொழிவின் கரு

கிருஷ்ணன் தூதுவனாக துரியோதனனிடம் வரும்பகுதியே இங்கு விளக்கப்படுகிறது. தர்மம்தான் வெல்லும் அதர்மம் அழியும் என்று கிருஷ்ணனுக்கு அறிவுரை கூறி பாண்டவர்கள்மேல் உள்ள பகையை விட்டுவிடும்படி கூறுவது, அதனை ஏற்காத துரியோதனனை போர்க்களத்தில் சந்திப்பதாகக் கிருஷ்ணன் கூறிச் செல்வது துரியோதனனைப் பாண்டவர்கள் வெல்வதற்காக துரியோதனன் பக்கமுள்ள அஸ்வத்தாமா கர்ணன் ஆகியோரை துரியோதனனிடமிருந்து பிரிக்கக் கிருஷ்ணன் செய்யும் சூழ்ச்சி அஸ்வத்தாமாவைத் தனியே சந்தித்து உரையாடும்போது தனது மோதிரத்தைக் கழட்டிவிட்டு அதை அஸ்வத்தாமா எடுத்துக் கொடுத்தபோது பெற்றுக்கொள்ளாமல் அவரை வைத்துக் கொள்ளும்படி கூறுவது, இதனை அறிந்த துரியோதனன் அஸ்வத்தாமா மீது அவநம்பிக்கை கொள்வது, அடுத்து கர்ணனை சந்தித்து கர்ணனிடம் அவனது பிறப்பு வரலாற்றைக் கூறி பாண்டவர்கள் அவனது சகோதரர்கள் என்ற உண்மையை விளக்கி பாண்டவர்கள் பக்கம் வரவழைக்க முயற்சிப்பது ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.

1.1 வாரியார் சொற்பொழிவில் பொருள் விளக்கம்

இப்பேச்சாளர் தனது கருத்துக்களை பெரும்பாலும் விளக்க நடையிலேயே விளக்கிச்செல்கிறார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பல

உபகதைகள் கொண்டு விளக்கப்படுகிறது. உண்மைக் கருவின் குறைவான பாகமே குறிப்பிட்ட நேரத்தில் விளக்கம் பெறுகிறது, இவருடைய பேச்சில் சிறுபகுதி கேட்காமல் விட்டுவிட்டாலும் கருத்தோட்டம் தடைபடுவதில்லை. இவர் தனது கருத்துக்களை விளக்க மொழிநடையிலும் விளக்க முறையிலும் கீழ்வரும் உத்திகளை கையாண்டுள்ளார்.

1.1.1 மொழிநடை

இவர் தன்னுடைய சொற்பொழிவை கருத்தின் தன்மைக்கேற்ப விளக்க நடையிலும் நாடக நடையிலும் நிகழ்த்தியுள்ளார்.

1.1.1.1 விளக்க நடை உத்தி

இவர் விளக்க நடையையே பெருமளவு கையாண்டுள்ளார் என்பதற்குக் கீழ்வரும் அவருடைய சொற்பொழிவின் சிறுபகுதி சான்றாக அமைகின்றது.

i) 'சிறிது தூரம்(ம்). ஒரு எரநூறு கெஜ(ம்) போனார் கிருஷ்ணர். எரநூறு கெஜம்ன்னு வெச்சுக்குங்க. அந்த மண்டபம் அவ்வளவு தூரம்னு வெச்சகோ'.*

இங்கு 'சிறிது தூரம்' என்பது எவ்வளவு தூரம் என்பதைக் கேட்போருக்கு தெளிவுபடுத்தவே தனக்கு முன்னால் அமைந்துள்ள மண்டபத்தை கைகாட்டி அந்தச் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

ii) "இப்ப நா(ன்) இருக்கிறபோது ஏதாவது **சாமாணம்** விழுந்தா அருகிலே இருப்பவங்க எடுத்துக் கொடுப்பாங்க மரியாதைக்கு. இந்த விபூதியே விழுந்தா இது எடுத்துக்கொடுக்கும். அஸ்வத்தாமா குனிஞ்சு அந்த திருவாலி மோதிரத்தை மெல்ல எடுத்தா(ன்).

இங்கு அஸ்வத்தாமா கிருஷ்ணன்மேல் உள்ள மரியாதையின் காரணமாக கீழே விழுந்த மோதிரத்தை எடுத்தார். இந்நிகழ்ச்சியை

* சொற்பொழிவில் முக்கிய உயிராக உச்சரிக்கப்பட்டுள்ளதைக் மூக்கொலியை பிறை அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக உரைக்காது மரியாதை என்பது எவ்வகைப்பட்டது என்பதை விளக்க ஒரு உதாரணம் கொடுத்து விளக்கியுள்ளார். மேலும் இங்கு உண்மை நிகழ்ச்சி விளக்கப்படும்முன் சான்றாகக் கூறப்பட்ட நிகழ்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அஸ்வத்தாமாவை துரியோதனன் சந்தேகப்படும் நிகழ்ச்சி பின்னால் உரைக்கப்படுவதை மனதில் கொண்ட பேச்சாளர், அஸ்வத்தாமா மோதிரத்தை எடுத்தது உண்மையிலுமே மரியாதையின் நோக்கம் தான் என்பதைத் தெளிவுபடுத்தவே இவ்வாறு சான்றுக்கு முதலிடம் கொடுத்துப் பேசியுள்ளார் எனலாம்.

1.1.1.2 நாடக நடை உத்தி

தலைப்பு சம்மந்தப்பட்ட கருத்துக்களும் உபகதைகளும் பெரும்பாலும் நேர்க்கூற்று வாக்கியங்கள் கொண்டே விளக்கப்பட்டிருக்கிறது. பேச்சாளர் கூற்றாகவோ அல்லது படர்க்கை கூற்றாகவோ விளக்கப்படுவது இவருடைய பேச்சில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. உரையாடல் பகுதிகள் அயல் கூற்றில் பேசி நாடக வடிவில் அமைப்பதால் கருத்துக்கள் எளிதில் தெளிவுபடும் என்ற எண்ணமே இதற்குக் காரணமாக அமையலாம். உதாரணமாக,

'எங்கம்மா குந்தியா?'

'ஆம்'

'பாண்டவர்கள் எனக்குத் துணைவர்களா?'

'சந்தேகம் இல்லை'

இப்பகுதியை பேச்சாளர் ஓரங்க நாடகமாக அமைத்துப் பேசியுள்ளார். கர்ணன் கேட்பதாக அமைந்துள்ளை கேள்விகள் பணிவுடன் கேட்பதுபோல் தாழ்ந்த குரலிலும் கிருஷ்ணனின் பதில்களை கம்பீரமாக உயர்ந்த குரலிலும் பேசி இயற்கையான உரையாடலை உருவாக்குகிறார்.

உபகதைகளும் பல இடங்களில் நாடக நடையைப் பயன்படுத்திப் பேசியுள்ளார். எடுத்துக்காட்டாக,

ர ஜா: 'ஏய்! ஒ(ன்) பேரு என்ன?'

'பிரபு'

'கல்லெ விட்டெறிஞ்சயா'

'நீங்க இருக்றது தெரியாம. ஏழைங்க. மாங்கா சாப்படலாம்னு'

'இம். முதலமைச்சரே'

'வணக்கங்க'

'இவனுக்கு தகுந்த தண்டனை கொடுக்கணும்'

இக்கதையில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் பேசுவது இயற்கையாக அமைந்துள்ளது. இங்கு அரசன் கேட்பதாக அமைந்துள்ள கேள்விகள் கம்பீரமாக உரத்த குரலிலும் ஏழையின் பதில்கள் பணிவாக, நடுங்கிக்கொண்டு கூறுவதுபோல் தாழ்ந்த குரலிலும் அமைத்துப் பேசப்பட்டுள்ளது. இதில் 'கல்லெ விட்டெறிஞ்சயா' என்ற கேள்விக்கு ஏழையின் கூற்றாக வரும் பதில்கள் பதற்ற நிலையில் உள்ளவன் பேசுவது போலவே முற்றுப் பெறாத வாக்கியங்கள் கொண்டு அமைந்துள்ளன. இப்பகுதியை இவ்வாறு நாடக நடையில் அமைக்காது விவரிப்பு நடையில் கூறியிருந்தால் கேட்போரிடம் இதிலுள்ள ஆர்வம் குன்றியே காணப்படும். மேலும் விளக்க நடை அல்லது விவரிப்பு நடையிலேயே கதை கூறுவதுபோல் பேசிக் கொண்டிருந்தால் ஏற்படும் சலிப்புத் தன்மையை அகற்றவே இவ்வுத்தியைக் கையாண்டிருக்கலாம். அடுத்து, கதாபாத்திரங்கள் உரையாடும்பொழுது யார் யாரிடம் பேசுகிறார்கள் என்பதை பெரும்பாலான இடங்களில் பேச்சாளர் குறிப்பிடாமலேயே உரையாடலைத் துவங்கி விடுகிறார். சூழ்நிலை கொண்டே புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

'துரியோதனா! கிருஷ்ணரு சொன்னாரு. ஒங்க அன்பும் ஆதரவும் பாண்டவர்... நா(ன்) ஒன்னொ(ம்) சொல்லலப்பா. நீங்கதா(ன்) இப்படின்னு அப்படின்னு அப்படினீங்க. கீழே மோதிரம் விழுந்தது.'

'ஏ(ன்) சாமி புளுகறீங்க'

'என்னதா(ன்) அஸ்வத்தாமா சொன்னாலும் அதை நம்பலெ'.

இங்கு துரியோதணன் கூற்றாக நேர்க்கூற்றில் அமைக்கப் பட்டிருக்கும் ‘ஏ(ன்) சாமி புளுகறீங்க’ என்ற வாக்கியம் உரையாடலில் யாரால் சொல்லப்படுகிறது என்பதைப் பேச்சாளர் குறிப்பிடவில்லை. மேலும் அஸ்வத்தாமா கூற்றாக இவ்வாக்கியத்தைப் பேசியுள்ளார். இவ்வகைப்பட்ட உரையாடலில் தனது கூற்றாக ஏதாவது கூறப்பட்டால் நாடக அமைப்பு கெட்டுவிடும்; இயற்கையாகத் தோன்றாது; கேட்போருக்கு கதையில் தீவிரம் குறையும்; என்ற எண்ணமே இதற்குக் காரணமாக அமையலாம்.

மேலும் கதாபாத்திரம் கேட்போரிடம் உரையாடுவது போன்று ஒரு இடத்தில் அமைத்துப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

துரியோதனன் ‘கேட்டீங்களாயா! இந்த ஐயமார்களை நம்பலாமா’

துரியோதனன் மனதில் எண்ணும் எண்ணத்தையே துரியோதனன் கூற்றாகவே கேட்போரிடம் நேரடியாகக் கூறுவதுபோல் அமைத்திருப்பது அவர்களின் கவனத்தை தன் சொற்பொழிவின்பால் ஈர்ப்பதற்காக இருக்கலாம்.

உரையாடலின்போது யாருடைய கூற்றாக சொல்லப்போகிறார் என்பதை பெயரை மட்டும் கூறிச் செல்கிறார். இது எழுத்துநடையில் பயன்படுத்தும் ஒரு உத்தியாகும்.

i) துரியோதனன்: ‘கேட்டீங்களாயா! இந்த ஐயமார்களை நம்பலாமா?

ii) ராஜா: ‘ஏய்! ஒ(ம்) பேரு என்ன?’

இவ்வுதாரணங்களில் நேர்க்கூற்றில் வரும் வாக்கியங்களை முறையே துரியோதனன், ராஜா ஆகியோரின் கூற்றாகக் கூறியுள்ளார் அல்லது ராஜா கேட்டார் என்று ஒரு வாக்கியத்தை அமைக்காது எழுத்து நடையில் கையாளப்படுவதுபோல் பெயர்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

இப்பேச்சாளர் இவ்வாறான நாடக நடைக்கே முக்கியத்துவம் கொடுத்து தனது சொற்பொழிவின் பெரும்பகுதியை நேர்க்கூற்றில்

பேசியுள்ளார். அயல் கூற்றில் பேசுவதால் ஏற்படும் தெளிவின்மையையும் புரிந்து கொள்வதில் ஏற்படும் கடினத்தையும் குறைக்கவும், சொற்பொழிவில் சுவை உண்டாக்கி சலிப்புத்தன்மையை அகற்றவும் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார்.

1.1.2 விளக்கமுறை

பேச்சாளர்கள் தமது கருத்துக்களைப் பலமுறைகளில் விளக்குகிறார்கள். இவை பேச்சாளருக்கு பேச்சாளர் மாறுபடுகின்றன. இப் பேச்சாளர், வரலாற்று நிகழ்ச்சி, தற்கால அரசியல், குடும்ப நிகழ்ச்சி, உபகதைகள் போன்றவற்றைக் கூறிக் கருத்துகளை விளக்கியுள்ளார்.

1.1.2 1 தற்கால நிகழ்ச்சி இணைப்பு

சமயச் சொற்பொழிவுகளில் வரலாற்று நிகழ்ச்சிகள் மிகுதியாக இடம்பெற வாப்ப்புகள் உண்டு. ஆனால் இவருடைய சொற்பொழிவில் இன்றைய அரசியல் நிகழ்ச்சிகளும், குடும்ப நிகழ்ச்சிகளும் நிறைந்திருப்பதைக் காணலாம். வரலாற்று நிகழ்ச்சிகளும் கதைகளும் கொண்டு தனது கருத்தை விளக்குவதைவிட காலத்திற்கேற்ற புதிய நிகழ்ச்சிகளை உபகதைகளாக அமைப்பதால் கருத்திற்கு சுவையும் கேட்போர்க்கு ஆர்வமும் உண்டாகும் என்று கருதுவதே இதற்குக் காரணமாகலாம்.

(அ) அரசியல் நிகழ்ச்சி

'கிருஷ்ணா! இந்த அடிக்கடிக்கு கட்சி மாறர வழக்க(ம்) என்னிடொ(ம்) இல்லெ. இன்னெக்கொரு கச்சி, நாளைக்கொரு கச்சி நாளெ மறுநா... அங்கே போனாதா(ன்) ஏதாவது பதவி கெடைக்கும்னு சிலபேரு கச்சி மாறராங்களே அந்த இடத்திலே நாமும் ஒருவராகலாமா',

கர்ணனை துரியோதனனிடமிருந்து பாண்டவர்கள் பக்கம் வரும்படி கிருஷ்ணன் கூறியதற்கு கர்ணன் கூற்றாக இவ்வாறு பேசியுள்ளார். இங்கு கர்ணன் வரவில்லை என்ற கருத்தை இன்றைய அரசியல் சூழ்நிலையில் அமைத்துப் பேசுவது, கர்ணனின் மனப்

போக்கை விளக்குவதோடு இன்றைய அரசியலைச் சாடும் வகையில் நகைச்சுவையாகவும் அமைந்துள்ளது,

(ஆ) குடும்ப நிகழ்ச்சி

மற்றொரு இடத்தில் இலங்கைக்குள் எமனே நுழையமுடியாது என்றால் அப்பாவி தேவர்கள் நுழையமுடியாது என கூறத்தேவை யில்லை என்ற கருத்தை இன்றைய குடும்ப சம்பவம் ஒன்றின் துணைகொண்டு தெளிவுபடுத்துகிறார்.

'அந்தமாவுக்கு மாமனார் அடங்கி நடக்கறார்; மாமியார் அடங்கி நடக்கறா; தாலி கட்டின புருஷனே அடங்கி நடக்றான்னா வேலைக்காரனுக்கு சொல்லனுமா'

எமனின் ஆற்றல், ஒரு மனைவிக்கு அவள் கணவன் அதிகாரம் எப்படிப்பட்டதோ அந்த அளவு வலிமையுடையது என்றும் தேவர்கள் அவனுக்கு வேலைக்காரனின் பயந்த சுபாவம் எப்படிப் பட்டதோ, அந்த அளவு சாதுவானவர்கள் என்றும் ஒப்பிட்டுக்காட்டி கருத்தினைவிளக்கியுள்ளார். மேலும் இவ்வாறு வரும் உபகதைகளை கருத்து விளக்கத்திற்குத் தேவையானதோடு நிறுத்தாமல் அவற் றைத் தொடர்ந்து நகைச்சுவை அமைத்துப் பேசுகிறார் என்பதைக் கீழ்வரும் பகுதியால் அறியலாம்.

> "அந்த வீராதிவீரனே வேட்டியெ இடுப்லெ கட்டி மார்கெட்டுக்கு போகட்டுமா?"
>
> 'உட்கார் அப்டிரொ(ம்)'
>
> 'எப்ப போகட்டும்'
>
> 'சொல்ரெ(ன்) உட்காறே(ன்). ஏ(ன்) அவசரப்படர'

இப்பகுதியில் பேச்சாளர் எந்தவிதக் கருத்தையும் விளக்கு வதாகத் தெரியவில்லை. இதை ஒரு நகைச்சுவைப் பகுதியாகவே இணைத்துள்ளார். கேட்போரின் கவனத்தை ஈர்க்கவும் சலிப்புத் தன்மையை அகற்றவும் இம்மாதிரியான நகைச்சுவைப் பகுதிகளை இடையிடையே சேர்க்கிறார் எனலாம்.

தமிழ் இலக்கணத்தில் வரும் "இறைச்சிப் பொருள்" என்ற பதத்தின் பொருள் கேட்போர் அனைவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. ஆகவே அதன் தன்மையையும் பொருளையும் விளக்கக் கீழ்வரும் குடும்ப நிகழ்ச்சியை விவரித்துள்ளார்.

நூதனமா கல்யாணம் ஆனவ(ன்) அடிக்கடிக்கு தண்ணி தண்ணின்னு அடுப்பாண்டெ போவான். அவனுக்குத் தண்ணித் தாகம்னு டாக்டரெ கூப்பிட படாது. அவ(ன்) தண்ணீர் விடாய் லாலே அடுப்பாண்டெ போகலெ. நீங்கௌெலா(ம்) தெரிஞ்சிக்கனு(ம்) ஏ(ன்) தண்ணி தண்ணின்னு அடிக்கடி அடுப்பாண்டெ வர்ரா(ன்)?

'மனெவியெ பார்க்க'

இறைச்சி என்பது சொல்லப்படுகின்ற வாக்கியங்களால் நேரடியாகப் பொருளை உணர்த்தாது மறைமுகமாக உரைப்பது. அதாவது ஒன்றை வெளிப்படையாகக் கூறி அவற்றின்மூலம் மற்றொன்றை விளக்குவது. இதனை எந்த வாக்கியங்களால் விவரித்தாலும் கூட்டத்திலிருக்கும் ஒரு சிலருக்குப் புரியாமல் போய்விடும் என்று கருதியே ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக்கொண்டு தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே தற்கால நிகழ்ச்சிகள் இணைப்பைக் கருத்து விளக்கத்திற்கு ஒரு உத்தியாகவே கொண்டு தனது கருத்துகளை விளக்கியுள்ளார்.

1.1.2.2. வினா-விடை முறை இணைப்பு

மேடைப் பொழிவில் எழுப்பப்படும் வினாக்கள் பயன்பாட்டு முறையில் இரண்டு வகைப்படும். ஒன்று கருத்தின் அழுத்தத்தை வெளிப்படுத்த அமைக்கப்படும் வினா வாக்கியங்கள். மற்றொன்று கேட்போரிடமிருந்து பதிலை எதிர்நோக்கி எழுப்புவது. இப்பேச்சாளர் இதில் இரண்டாவது நோக்கத்துடன் கேள்விகள் கேட்டு பேசியுள்ளார் என்பதை அவருடைய கேள்விகளும் கேட்போரின் பதிலும் தெளிவுபடுத்துகிறது.

i) 'என்ன தம்பிக! அந்தம்மாவுக்கு யாராரு அடங்குனது?'
'மாமனார், மாமியார், கணவன்'

ii) 'யாருக்கு பயந்து நிக்கரா(ன்)?'
'மனைவிக்கு'

iii) 'வருஷத்துக்கு நூத்தம்பது வருமா?'
'எரநூத்து நாப்பது வரும்'

இப்பேச்சாளர் தனக்கும் கேட்போருக்கும் இடையே உள்ள தொடர்பு நெருக்கத்தை வெளிப்படுத்தும் நோக்கத்தில் கேட்போரிடம் கேள்விகள் கேட்டு பதிலை எதிர்பார்க்கிறார். இம்மாதிரியான பேசுவோர்—கேட்போர் உரையாடல்முறை சூழல் நிலையை ஒரு அன்முறை சூழலாக மாற்றுவதோடு கேட்போரின் கவனத்தை தன்வயப் படுத்திப் பொருள் விளக்கத்தை எளிதாக்க ஒரு உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது.

2.0 மங்களமுடையார் சொற்பொழிவின் கரு

இறை அனுபவம் எவ்வகைப்பட்டது என்பதுபற்றி பொதுவாக சில கருத்துக்கள் சொல்லப்படுகிறது. சேந்தனார் வரலாறு தில்லை வரலாற்றோடு தொடர்புடையது என விளக்கி சேந்தனார் செய்த செயல்கள் ஒவ்வொன்றும் சிறுசிறு தலைப்புகளாகக் கொண்டு வரிசையாக விளக்கப்படுகிறது. நடராஜப் பெருமானுக்கு களி உணவு அளித்ததை முதலாவது செயலாக மொழியப்படுகிறது. மற்ற சில பக்தர்களுக்கு ஆண்டவன் காட்சி அளித்ததைவிட இவருக்குத் தோன்றி அருளிய சிறப்புபற்றி கூறப்படுகிறது. நம்பியாண்டார் நம்பி படைத்த நைவேத்தியத்தை விநாயகர் உண்ட வரலாற்றையும் வள்ளி நாயகி அளித்த உணவை முருகப்பெருமான் உட்கொண்டதை யும் விவரித்து, இதுபோலவே சேந்தனார் இல்லத்தில் நடராஜர் உணவருந்தினார் என காட்டப்படுகிறது. சேந்தனாரின் இறை அனுபவம், பிறப்பு, தொழில் முதலியவற்றை சுருக்கமாக விவரித்து சேந்தனார் சிதம்பரம் வந்த கதையினைக் கூறி சேந்தனார் வரலாறு சிதம்பர வரலாற்றோடு தொடர்புடையது என்று கூறப்படுகிறது அடுத்து சேந்தனார் குறிக்கோள் பற்றிப் பேசும்போது பொதுவாக வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் கொண்டுள்ள குறிக்கோளைக் கூறி குறிக்கோளின் இன்றியமையாமை விளக்கப்படுகிறது. சேந்தனாரின் குறிக்கோளுக்கு இறைவன் ஏற்படுத்திய சோதனையும் இறைவன் அவர் குடிசைக்கே சென்று உணவருந்தி வரும் நிகழ்ச்சியும் விளக்கப்பட்டு, இறைவன் இம்மாதிரி பக்தர்களுக்குத் தோன்றி அருளக்கூடியவர் என்பது மற்ற வரலாற்றுக் கதைகள் மூலம்

விளக்கப்படுகிறது. தில்லையில் திருப்பல்லாண்டு பாடி தேரை ஓடச்செய்தது சேந்தனாரின் இரண்டாவது செயலாக விவரிக்கப் படுகிறது. தில்லைவாழ் அந்தணர்கள் பெருமையை உலகுக்குக் காட்டச்செய்தது சேந்தனாரின் மூன்றாவது செயலாக விளக்கப் படுகிறது. இதற்கு வரலாற்று ஆதாரங்கள் கூறும்போது திருப்புகழின் பெருமை பேசப்படுகிறது. சேந்தனாரின் மற்றொரு செயல் சிவனே முருகம், முருகனே சிவன், என்று காட்டியது நான்காவதாகக் கூறப்படுகிறது.

2.1. மங்களமுடையார் சொற்பொழிவில் பொருள் விளக்கம்

இப்பேச்சாளர் முறைசூழல் நிலைக்கு ஏற்பத் தனது பேச்சை ஒரு வரன்முறையோடு அமைத்துப் பேசியுள்ளார். இவருடைய பேச்சில் கருவின் கருத்துக்களே பெரும்பான்மையான நேரம் விளக்கம் பெறுகிறது. கருவிற்குத் தொடர்புடைய வரலாற்றுக் கருத்துக்களே சான்றுகளாக அமைக்கப்பட்டுள்ளது. தற்கால நிகழ்ச்சிகளும் நகைச் சுவைப் பகுதிகளும் மிகவும் குறைந்தே அமைந்துள்ளன. இப் பேச்சாளர் தனது கருத்துக்களைப் படர்க்கைக் கூற்றில் விவரிப்பு நடையிலேயே அமைத்து கருத்தோட்டத்தைக் கொண்டு செல்கிறார். இவருடைய சொற்பொழிவில் எழுத்து முறையில் கையாண்டுள்ள உத்திகளே பெரும்பாலும் பொதிந்திருக்கின்றன என்பதற்கு கீழ்வரும் பகுதிகளே சான்றாக அமைந்துள்ளன.

2.1.1. பெயர்த்தொடர் அமைப்பு

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல்வேறு காலங்களிலும் காணப் படுகின்ற ஓர் உத்தி பெயர்த் தொடர்களை அடுக்கி ஒரு குறிப்பிட்ட சூழல்களில் பயன்படுத்தலாகும். தலைவன் தலைவியர் வர்ணிக்கப் படும்போதும் சில பொருட்களை நிரல்படுத்தி அடுக்கிச் செல்லும் போதும் பெரும்பாலும் பெயர்த்தொடர்களே பயன்படுத்தப்படுகின்றன. (நீதிவாணன்; 1978) இதுபோன்றே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இப்பேச்சாளரும் பெயர்த்தொடர்களை அடுக்கி அமைத்துப் பேசி யுள்ளார்.

> "சோதனை. தொடர்ந்து மழை. வரலாறு காணாத புயல். ஊழிக்காற்று. வெளியே செல்லமுடியாத நிலை.

சேந்தனாருக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை உவமையோ உபகதையோ இன்றி விவரிப்பு முறையில் அடுக்கிப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

2.1.2. வினா-விடை முறை இணைப்பு

இப்பேச்சாளர் தனது சொற்பொழிவில் ஐந்து வினாக்களை எழுப்பி அவைகளுக்கு அவரே பதில்களை விளக்கியுள்ளார். இவருடைய கேள்விகள் வாரியாரின் கேள்விகள் போல் அல்லாமல் கேட்போரின் கவனத்தை ஈர்க்கவும், சொற்பொழிவின் கருத்துக் களை சிறு சிறு தலைப்புக்களாக பிரித்து அமைக்கப்பயன்படும் வகை யிலும் எழுப்பப்பட்டுள்ளது.

i. சேந்தனார் செய்த செயல் என்ன?

ii. சேந்தனாருக்கு ஒரு குறிக்கோள். அது என்ன?

iii. என்ன செய்தார் சேந்தனார்?

iv. இவ்வாறு நடைபெற்ற நிகழ்ச்சி நமக்கு எவ்வாறு தெரிய வந்தது?

v. சேந்தனார் செய்த செயல் இரண்டாவது என்ன?

இவைகளில் முதல் வினா, சொற்பொழிவின் தலைப்பு ஆகும். இப்பேச்சாளர் சொற்பொழிவின் முன்னுரையாக இறைவன் அருள் பற்றியும் சேந்தனார் வரலாறு சிதம்பர வரலாற்றோடு தொடர் புடையது என்பதையும் விளக்கிவிட்டுத் தலைப்புக்கு வரும்போது இவ்வினாவை எழுப்பியுள்ளார். இவ்வினாவிற்கு அடுத்துப்பேசிய வாக்கியத்திலேயே பதிலை தானே விளக்கியுள்ளார்.

"தலையாய செயல் தில்லைவாழ் நடராஜருக்கு
களி உணவு அளித்தார்."

மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகளில் இரண்டும் ஐந்தும் சொற் பொழிவின் உட்பிரிவு தலைப்புக்கள் போன்று அமைந்துள்ளது. சேந்தனாரின் வரலாற்றில் உள்ள சில முக்கியமான நிகழ்ச்சிகளை விவரிக்கும்போது, சேந்தனாரின் குறிக்கோள் பற்றிப் பேசமுற் படுகிறார். அதற்காக மனிதன் ஒவ்வொருவனும் கொண்டிருக்க வேண்டிய குறிக்கோளின் இன்றியமையாமையை விளக்கிவிட்டு

சேந்தனாருக்கு ஒரு குறிக்கோள். அது என்ன? என்ற வினா எழுப்பப்படுகிறது. இவ்வினாவிற்கும் பதிலை அடுத்துவரும் வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார். "நாள்தோறும் ஒரு சிவனடியாருக்காவது அமுது படைத்திட்டு அந்த சிவனடியார் உண்டபிறகுதான் உண்ண வேண்டும் என்ற நீதியை, குறிக்கோளை, கோட்பாட்டை உடையவர்" என்பதே அது. இதேபோல் சேந்தனாரின் முதல் செயல் என்ன என்று விளக்கிய பிறகு, தனது பேச்சை இரண்டாவது செயலுக்கு மாற்றும்பொழுது கீழ்வரும் கேள்வியை எழுப்பியுள்ளார்.

'சேந்தனார் செய்தசெயல் இரண்டாவது என்ன?

மேலும் மூன்றாவது நான்காவது கேள்விகள் கேட்போரின் கவனத்தைத் தனது சொற்பொழிவின் பால் ஈர்க்க உதவும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இப்பேச்சாளர் கேள்விகளை எழுப்பிப் பேசுவதை ஒரு உத்தியாகவே கையாண்டுள்ளார் எனலாம். எழுத்துமுறையில் ஒரு தலைப்பின் கீழ்வரும் பல சிறுசிறு கருத்துக்களை சிறுசிறு தலைப்புக்களாக பிரித்து ஒரு முறையோடு எழுதுவது போல், இப்பேச்சாளரும் கருத்துக்களை சிறுசிறு தலைப்புக்களாகக் கொண்டு ஒவ்வொரு சிறுதலைப்பையும் வினாக்களாக அமைத்துப்பேசியுள்ளார். சொல்லப் போகின்ற கருத்து என்ன என்ற ஆர்வம் கேட்போரிடம் எழ வேண்டும் என்ற நோக்கத்திலேயே இம்மாதியான வினாத்தொடரியல் அமைக்கப்பட்டுள்ளது எனலாம். ஆகவே, பொருள் விளக்கத்தை எளிமைப்படுத்த ஒரு உத்தியாகக் கையாண்டுள்ளார் எனலாம்.

2.1.3 ஒரு பொருள் பன்மொழி அமைப்பு

எழுத்து முறையில் ஒரு படைப்பாளி தான் எண்ணிய கருத்தையும் உணர்ச்சியையும் படிப்பாளியின் உள்ளத்தில் உண்டாக்கும் வகையில் ஒரு பொருளைக் குறிக்க அதே பொருளுடைய அல்லது பொருளுக்குத் தொடர்புடைய சொற்களை அடுக்கிச் சொல்வது இயல்பு. இதேபோல் மேடைப்பேச்சிலும் இப்பேச்சாளர் பல இடங்களில் ஒரு பொருளைக் குறிக்க பல தொடர்புடைய சொற்களை அடுக்கிப்பேசியுள்ளார். உதாரணமாக,

i) ஆக, சேந்தனார் செய்த செயல் தலையானது, சிறந்தது, உத்தமமானது, தொன்மையானது, முதலானது, எம்பெருமானுக்குக் களி உணவு அளித்து அருள் பெற்றார்.

இங்கு **தலையானது, தொன்மையானது, முதலானது** ஆகிய மூன்று வார்த்தைகளும் முதல் என்ற ஒரு பொருளைக் குறிக்கவே பயன்படுத்தப் பட்டுள்ளன. இதேபோல் **சிறந்தது உத்தமமானது** என்ற வார்த்தைகள் சிறந்தது என்ற பொருளை உணர்த்த கையாளப்பட்டுள்ளன.

2. "நாள்தோறும் ஒரு சிவனடியாருக்காவது அமுது படைத்திட்டு அந்த சிவனடியார் உண்டபிறகுதான் உண்ணவேண்டும் என்ற நீதியை, குறிக்கோளை, கோட்பாட்டை உடையவர்."

இதில் **நீதி, குறிக்கோள், கோட்பாடு** ஆகிய வார்த்தைகள் குறிக்கோள் என்ற பொருளை உணர்த்தவே பயன்படுத்தப் பட்டுள்ளன.

ஆக, தனது கருத்துக்களின் தன்மை குறையாது உணர்ச்சி குன்றாது அவற்றின் முக்கியத்துவத்தை படம்பிடித்துக் காட்டுவது போல் அமைக்க மேடைப் பேச்சிலும் இந்தப் பேச்சாளர் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை அடுக்கி பேசியுள்ளார். பொதுவாக பேச்சு வழக்கில் இதுபோன்று சொற்கள் அதிகம் இடம்பெறுவதில்லை. இச்சூழ்நிலைகள் குரல் மாற்றங்கள், அங்க அசைவுகள், முகபாவங்கள் ஆகியவையின் துணைகொண்டும், வியப்பு வினைச் சொற்கள் (பயங்கரம், ரொம்ப, போன்றவை) துணைகொண்டும் விளக்கம் பெறுகின்றன.

2.1.4 விவரிப்பு நடை

இப்பேச்சாளர் தனது கருத்துக்களை உதாரணங்களின்றி உபகதைகளின்றி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மிக நுண்மையாக விவரித்துப் பேசியுள்ளார். உதாரணமாக,

"மன்னன் மனம் சோர்ந்து, மெய் விதிர்த்து, திகைத்து, தடுமாறி சிக்குண்டு, ஏதோ தவறு செய்துவிட்டோம் என்று வருந்தி, அழுது, தொழுது, உருகி, பூஜை அறையிலேயே தங்கினார்"

இங்கு மன்னனுடைய மனநிலையை கேட்போரின் மனதில் தெளிவாக உணரவைக்கும் வகையில் மன்னனின் ஒவ்வொரு சிறு செயலையும் வரிசையாக அடுக்கிப் பேசப்பட்டுள்ளது. தவறு செய்து விட்டவன் மனதில் ஏற்படும் கலக்க நிலையை வேறொன்றை உவமை காட்டாமல் வார்த்தைகளை அடுக்கி விவரித்துள்ளார். இதுபோன்று விவரிப்பதும் பேச்சு வழக்கில் அதிகம் இடம் பெறுவதில்லை. எழுத்து முறையில் பயன் படுத்தும் ஒரு உத்தியே ஆகும்.

1.2.5 நாடக நடை

நாடக நடையை ஒரு உத்தியாக குறைந்த இடங்களிலேயே உபயோகப் படுத்தியுள்ளார். இவருடைய பேச்சில் அயற் கூற்று வாக்கியங்களே நிறைந்து காணப்படுகிறது. கீழ்வரும் நான்கு இடங்களில் மட்டும் நேர்க்கூற்று வாக்கியங்கள் கொண்டு பேசியுள்ளார்.

i) கோயிலுக்கு போயி சிவபெருமாங்கிட்டெ "என்ன சமாச்சாரம்? சேந்தனார் எங்கே? கொண்டுவா? என்று வேண்டினார்.

ii) சிறிய குழந்தைகள் தும்மினா "தீர்க்காயுசா இரு. நூறு வயசு இரு' என்று ஆசீர்வதிப்பது மரபு.

iii) 'மன்னனே வருந்தற்க! இன்று நாம் சேந்தன் இல்லத்திற்கு சென்றிருந்தோம்' என்பதாக மன்னனுக்கு கனா குறிப்பு ஏற்பட்டது.

iv) ஒரு அசரீரி 'சேந்தனே! பாடுக!'

இவ்வுதாரணங்களில் வரும் நேர்கூற்று வாக்கியங்கள் முதல் இரண்டு பேச்சுத் தமிழிலும் இறுதி இரண்டு இலக்கியத் தமிழிலும் பேசப்பட்டுள்ளன. இவ்வேறுபாடுகள் பாத்திரங்களின் தன்மை, சூழ்நிலை ஆகியவற்றின் வேறுபாட்டின் காரணமாகவே அமைந்துள்ளன எனலாம். இறைவன் கூற்றாக வரும் பதங்கள் பேச்சுத் தமிழிலும் மன்னன் கூற்றாக வரும் பதங்கள் இலக்கியத் தமிழிலும் மாற்றி உரைத்திருந்தால் அவை இயற்கையாகத் தோன்றாது; கேட்போருக்கு சொற்பொழிவு இயல்பாக தோன்றாது; என்பதே காரணமாகலாம்.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள இரு பேச்சாளர்களும் ஒரே வகையைச் சார்ந்த சமயச் சொற்பொழிவை ஒரே இடத்தில் ஆற்றியிருந்தாலும் அவர்கள் பொருள் விளக்கத்திற்கு கையாண்டுள்ள உத்திகளும் விளக்க முறைகளும் ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டிருக்கின்றன. அவர்களின் மொழிவகைகளும் வித்தியாசப் பட்டே இருக்கின்றன. வாரியார் பேச்சு வழக்கிலும் மங்களமுடையார் சிறப்புப் பேச்சு வழக்கிலும் (Formal spoken variety) சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளனர். முன்னவர் உண்மைத் தலைப்புக்கு ஒதுக்கும் நேரத்தைவிட உபகதைகளுக்கும் அன்றாட குடும்ப நிகழ்ச்சிகளுக்கும் நகைச்சுவைகளுக்கும் அதிக நேரம் ஒதுக்கி, அவற்றின் துணை கொண்டு சொல்லும் கருத்தை தெளிவுபடச் செய்கிறார். ஆகவே உபகதைகள் முதலிடம் பெறுவதால்தான் பேச்சு வழக்கு மிகுந்து காணப்படுகிறது. ஆனால் பின்னவர் தலைப்புக்குத் தொடர்புடைய இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் கொண்டு கருத்தைத் தெளிவு படுத்துவதால் சிறப்புப் பேச்சு வழக்கு சொற்பொழிவில் அதிகம் இடம்பெறுகிறது. மேலும் வாரியார் மேடைப்பேச்சில் பேசுவோர், கேட்போர் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து நேரடியாக கேட்போரிடம் உரையாடி ஒரு அன்முறைச் சூழல் நிலையை ஏற்படுத்திப் பேசியுள்ளார். ஆகவே அன்முறைச் சூழலுக்கு உரிய பேச்சு வழக்கு இடம்பெற இதுவும் ஒரு காரணமாகும். ஆனால் மங்களமுடையார் மேடைப் பேச்சுக்குரிய இலக்கண வரன்முறையோடு ஒரு சிறப்புச் சூழலாகவே கொண்டு பேசியுள்ளதால் சிறப்புப் பேச்சு வழக்கே சொற்பொழிவில் இடம் பெறுகிறது. எனவே மேடையில் சொற்பொழிவின் கருத்துக்களின் காரணமாகவும் விளக்க முறை காரணமாகவும் கையாளுகின்ற உத்திகளின் காரணமாகவும் பயன்படுத்தும் மொழி நடையில் மாற்றம் ஏற்படுகிறது எனலாம்.

மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

குமரி அனந்தன் 1977 **நீங்களும் பேச்சாளர் ஆகலாம்**, பூம்புகார் அச்சகம், சென்னை—13

நீதிவாணன் 1978 **நடையியல்,** முல்லைப் பதிப்பகம், மதுரை.

Ganesan, M. 1980 "A Sociolinguistic study of platform speech in Tamil (with reference to religious speech)" Unpublished M. Phill. dissertation, Annamalainagar.

Gnanam, M. 1977 Style: Its Classification and Elicitation" (mimeo) seminar on sociolinguistics and Dialectology, Annamalainagar.

Jaganathan, V. R 1977 "Language variation and Language Use" Seminar on sociolinguistics, Telugu Akademi, Hydrabad: 35-44.

Shanmugam Pillai, M. 1960 "Tamil-Literary and colloquial" IJAL, 26:3, 27-42

Zvelebil. kamil 1960 "Spoken language of Tamilnadu" Archieve Orientalni, 32 237-264.

கல்வராயன் மலையாளி பேச்சு வழக்கில் கலைச் சொற்கள்

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய கல்வராயன் மலையில் காராளக் கவுண்டர் என்னும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் மலையாளிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பேசுகின்ற தமிழ் மொழி வழக்கில் காணப்படுகின்ற சில கலைச் சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

காவுடு	கூரை (காவட்டம் புல்)
கிண்ணி	தட்டு
கூசொம்	தூண்
கேலெ	மான்குட்டி (கேழல்)

கொட்டுமாடு	வரட்டுமாடு (கொட்டு)
சலிக்கி	மண்வெட்டி (சலி)
சிப்பி	வடித்தட்டு
சில்லி	முட்டி (வட்டம்)
சியான்	தாத்தா
செருக்கு	மயக்கம் (மயங்குதல்)
சோமம்	ஆடை (சோமன்)
தவுசம்	வரி (தானியம்)
தடம்	பாதை (வழி)
தாசெ(ல்)	கோவனம் (தாய்ச்சீலை)
தொகாயி	துப்பாக்கி (தொக்கம்)
நங்கா	அண்ணி
நரக்குலு	அசுத்தம் (நரகல்)
நெச்சேரி	சீழ் (நெய்த்தோர்)
நோனி	மயிர் (யோனி)
பட்டி	பசுக் கொட்டில்
பல்லா	பானை
பளுகுச்சி	விலா எலும்பு (பழு)
பாரி	சடுகுடு (பாரிக்கோடு)
மச்சி	மேகம் (மஞ்சு)
மர்சி	வரப்பு
மோலி	கலப்பை (மேழி)
வட்டி	தட்டு
வாரி	மடை
வெள்ளாமெ	விவசாயம்
வெலிச்சி	மூங்கில் (வேலி)

கு. அண்ணாதுரை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
(கள ஆய்வில் கண்டவை)

மொழியியல் 4,1 & 2 (1980)

கல்லாதவர்களின் பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் நிலை

ச. இராதாகிருட்டிணன்

தமிழ் மொழியில் ஆங்கிலச் சொற்களின் நிலை என்பது தமிழ் வரலாற்றில் ஒரு கூறாக விளங்குகிறது. தமிழ் மொழியில் ஆங்கிலச் சொற்களைக் கடன் வாங்குவது மனமறிந்தும், மனமறியாமலும் பல்வேறு வழிகளில் பல்வேறு நிலைகளில் நிகழும் நிகழ்ச்சியாக உள்ளது. பெருமளவில் ஆங்கிலச் சொற்கள் தமிழில் கையாளப்படுவதைக் கொண்டு தமிழில் ஆங்கில மொழியின் செல்வாக்கையும் அதன் பின்னணியையும் அறியலாம். கடனாளப்படும் ஆங்கிலச் சொற்கள் தமிழ் மொழியின் ஒலிமுறைக்கு ஏற்றவாறு தம் உச்சரிப்பில் மாறியமைகிறது என்பது எளிதில் உணரவல்லதாக உள்ளது. தமிழ் மொழியின் எல்லா நிலைகளிலும் எல்லா குழுமங்களிலும் **(domains)** ஆங்கில மொழியின் செல்வாக்கை உணர முடிகிறது. தமிழ்மொழி மட்டுமே பேசும் மக்களின் மொழித் தகவலுக்கு தமிழில் நிகரான சொற்கள் கிடைக்காத நிலையில் சில ஆங்கிலச் சொற்களைக் கையாளுவது இன்றியமையாததாகிறது. அவ்

வாறு கையாளப்படும் ஆங்கிலச் சொற்கள் காரணமின்றி பேச்சில் வராமல் செயலோடும் பொருளோடும் பொருந்தியதாகவே உள்ளது.

தமிழ் மொழியை மொழியியல் அறிஞர்கள், வேறுபாடுகள் காரண மாக பேச்சுத் தமிழ் என்றும், எழுத்துத் தமிழ் என்றும் இரண்டு வகைகளாகப் பிரிப்பர். பழமையில் மிகுந்த நாட்டம் கொண்ட படித்த அறிஞர் பெருமக்கள் செந்தமிழையே பெரிதும் விரும்பிப் போற்றுகின்றனர். எனினும் இக்கால நிலையில் பேச்சுத் தமிழ் இலக்கிய உலகில் தென்றலாக வீசுகிறது என்பதை மறுக்க இயலாது. இயற்கை, செயற்கைச் செயல்களினால் உலகச் சூழலில் பல மாற்றங் கள் நிகழ்வது போல மாறிவரும் நாகரீகத்தாலும் விரைந்து ஏற்படும் விஞ்ஞானப் புதுமைகளாலும் மொழிச் சூழலிலும், அதன் அமைப்பி லும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. உலகில் ஒரு பகுதியில் நிகழும் புதுமை நிகழ்ச்சியை உலகின் பிற பகுதிகளுக்கு எடுத்துச் செ(ா)ல் லும் போது அந்தப் புதுமை நிகழ்ச்சியின் செல்வாக்கு பிற மொழி யில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக அமைந்து விடுகிறது. பேச்சுத் தமிழானாலும் சரி, இலக்கியத் தமிழானாலும் சரி இவை இரண்டுமே பிறமொழிச் சொற்களின் கலப்பிற்கு உள்ளாகிவிடுகிறது. பேச்சுத் தமிழிலேயே கற்றவர்களின் பேச்சிற்கும் கல்லாதவர் களின் பேச்சிற்கும், அவைகளின் அமைப்பிற்கும் துல்லியமான வேறுபாடுகள் இருப்பதை எளிதில் உணரலாம். கற்றவர்களின் பேச்சுத்தமிழில் பிறமொழிச் சொற்கள் அதிக அளவு கலந்திருப்பதை யும் அவை சில சமயம் இயற்கையாக வருவதையும் சில சமயம் வேண்டுமென்றே புகுத்தப்படுவதையும் அறியலாம். கல்லாத வர்கள் தங்களின் பேச்சில் கற்றவர்கள் புகுத்துவதுபோல் இல்லா விட்டாலும் விருந்தினர்களிடமும் வெளியார்களிடமும் பேசும்போது ஓரளவிற்குப் பிறமொழிச் சொற்களைப் புகுத்துவது காணப்படுகிறது. தாய்மொழியில் தேர்ச்சி உடையவர்களாலும் இருமொழி அல்லது பல்மொழி அறிஞர்களாலும் மட்டுமே பேச்சுத்தமிழில் கலந்துவரும் பிறமொழிச் சொற்களைக் கண்காணிக்கமுடிகிறது. தமிழில் கலந்து வரும் ஆங்கிலச் சொற்கள் தமிழ்ச் சொற்களைப் போல் முன் பின் உருபன்களை ஏற்றுவருவதை அறியலாம். மேலும் அந்த ஆங்கிலச் சொற்களில் பல தமிழ் மொழியின் ஒலிமுறைக்குத் தகுந்தாற்போலத் தன் ஒலி **உருவத்தினை** அமைப்பினை மாற்றிக்கொண்டும் இருக்கின்றன.

கிராமச் சூழலில் கல்லாதவர்களின் பேச்சுத்தமிழில் பயின்று வரும் ஆங்கிலச் சொற்களின் நிலைப்பற்றி கடந்த ஆண்டு கள ஆய்வு நடத்தப்பட்டது. அதில் கீழ்க்காணும் உண்மைகள் தெரிய வந்தன. ஆயிரத்து இருநூற்று முப்பத்தாறு ஆங்கிலச் சொற்கள் பரவலாகப் பழக்கத்தில் இருந்தது. ஒருவர் அதிக அளவு ஆயிரத்து நூற்றுப் பதினைந்து ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறார். ஒருவருக்கு நானூற்று எழுபத்து ஏழு ஆங்கிலச் சொற்கள் மட்டுமே தெரிந்திருக்கிறது. ஒருவர் சராசரியாக எண்ணூற்று எழுபத்து எட்டு ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதாகக் கணக்கிடப்பட்டது. மேற்கூறிய சொற்களில் தொழில் சிறப்புச் சொற்களும் **(professional terms)** அலுவலகச் சிறப்புச் சொற்களும் **(official terms)** இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிராமச் சூழலிலேயே இவ்வளவு சொற்கள் இடம்பெற்றால் நவநாகரீகத்தின் உறைவிடமாகவும் பலவித உலகத் தொடர்புகள் 'குவியும் இடமுமாகவும் உள்ள நகரச் சூழலிலும், பெருநகரச் சூழலிலும் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருக்கும் என்பது எதிர்கால மொழியியல் ஆய்வு முடிவுசெய்யும்

2. ஆங்கிலச்சொற்கள் தமிழில் கலக்கக் காரணங்கள்

கிழக்கிந்தியக் கம்பெனியின் வருகையால் தமிழ் மண்ணில் ஆங்கிலமொழியின் செல்வாக்கு ஏற்பட்டது. இவர்கள் தமிழகத்தை ஆட்சிசெலுத்தியபோது அலுவல் மூலமாகவும், கிருத்துவ மதப் பிரச்சார சபைமூலமாகவும் கல்வி நிலையங்களின் மூலமாகவும் ஆங்கில மொழியைப் பரப்பினார்கள். தற்பொழுதுள்ள காலகட்டத்தில் உலகத்தில் நிகழும் தொழில்கள், விஞ்ஞானச் செயல்கள் பற்றிய தகவல்களை ஆங்கிலத்தின் மூலம்தான் பெறவேண்டியுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி அகன்றாலும் ஆங்கிலத்தின் தாக்கத்திலிருந்து தமிழகம் இன்னும் விடுபடவில்லை. இந்தியாவில் அதன் மாநில மொழிகளைக் காட்டிலும் ஆங்கிலம் அரியதோர் செல்வாக்குடன் கிராமங்களில் கூடத் திகழ்கிறது. இக்காலச் சூழலில் மக்களிடையே ஆங்கிலம் கற்றவர்கள் அரியபெரிய பதவிகளை வகிப்பதாலும் அவர்கள் அதிக அளவு ஆங்கிலத்திலேயே கலந்துரையாடுவதாலு ஆங்கிலம் படிக்காத பாமர மக்களுக்கு மொழித் தகவலில் இது ஒ இடையீடாகவே அமைகிறது. தாய்மொழி பற்றிய தாழ்வு

மனப்பான்மையிம் ஆங்கிலமொழிக்கு அதிக செல்வாக்கு இருக்கிறது என்ற எண்ணமும் ஆங்கிலச் சொற்களை அதிகம் கையாளச் செய்கிறது. சில சமயங்களில் மொழிபெயர்ப்பாளரின் சிந்தனைச் சோம்பலாலும் தமிழ்மொழிச் சொல்லின் மறதியாலும் ஆங்கிலச் சொல்லின் இடையீடு அமைய வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழில் புகும் ஆங்கிலச் சொற்களை இரண்டுவகைகளாகப் பிரிக்கலாம்.

1. தமிழ் மொழியில் இக்கால விஞ்ஞானப்புதுமை நிகழ்ச்சிகளை விவரிக்க இல்லாச் சொற்களுக்கு இணைச்சொல்லாகப்புகும் ஆங்கிலச் சொற்கள்.

2. தமிழ் மொழியிலிருக்கும் சொற்களைக் கையாளாமல் எடுக்கும் ஆங்கிலச் சொற்கள்.

2.1. உலகின் புதுமை செயல்களுக்குத் தமிழ் மொழியில் தேவை கருதி பிறமொழியிலிருந்து செயலோடும், பொருளோடும் எடுக்கப் படும் சொற்கள் இவை. இச் சொற்கள் பிற மொழிக் கூறின் ஒலி பெயர்ப்பாகவோ அல்லது மொழிப் பெயர்ப்பாகவோ இருக்கலாம். கீழ்க் காணும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில் ஏற்கனவே சொல் லில்லாமலிருப்பதனால் அவைகளை அப்படியே கடனாளுவதைக் காணலாம்.

அமோனியா	ammonia	பல்பு	bulb
அல்லர்	huller	பிஸ்கட்	biscuit
அவுன்ஸ்	ounce	பிடில்	fiddle
இஞ்சினியர்	engineer	பிரிவீல்	freewheel
எக்ஸ்ரே	x-ray	பீஸ்	fuse
எஸ்ஸென்ஸ்	essence	பென்சிலின் ஆயின்மென்ட்	pencillin oinment
ஒயர்	wire	பேரிங்	bearing
ஒல்ட்டு	volt	பொட்டாஷ்	potash
ஓர்ஸ்பயிப்	hosepipe	நைலான்	nylon
கார்டு	card	நெகட்டிவ்	negative
கிராம்	gram	மான்டில்	mantle

கிளாரினெட்	clarinet	மிசா	misa
குளுக்கோஸ்	glucose	மோட்டார்பைக்	motarbike
கேமரா	camera	ரம்மி	rummy
சுட்சு	switch	ரேஷன்	ration
சோடா	soda	லவ்	love
டயர்	tire	வால்வு	value
டிஞ்சர்	tincture	வாஷர்	washer
டீ. டீ. ஆர்.	T. T. R.	வைட்டமின்	vitamin
டீசல்	diesel	ஸ்டேரிங்	steering
		ஜியாமென் டரி பாக்ஸ்	geometry box

2.2. தமிழில் இருக்கும் சொற்களைக் கையாளாமல் எடுக்கும் ஆங்கிலச் சொற்கள்

சொற்களை அது குறிக்கும் பொருளை உணர்த்தவல்ல தகைமை வாய்ந்த தமிழ்ச் சொற்கள் இருந்தும் அவைகளை நினைவுகூர்ந்து உபயோகிக்காமல் ஆங்கிலச் சொற்களைக் கடன் வாங்குகிறார்கள். கல்லாதவர்கள் பயன்படுத்தும்போது இச்சொற்களின் பொருளும் மதிப்பும், கற்றவர்கள் பயன்படுத்தும்போது இருப்பதுபோல் இல்லாமல், அவைகளின் பொருளும் மதிப்பும் கூடியோ அல்லது குறைந்தோ உணர்த்தப்படுவதை காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக எடை அதிகமுள்ள பொருட்களை மனிதன் தலையில் அல்லது வண்டியின் மூலம் இடம் மாற்றினால் சுமை அதிகமாக இருக்கிறது அல்லது பாரம் அதிகமாக இருக்கிறது என்றும் சு(ை)ம ஏத்துகிறான் அல்லது பாரம் ஏத்துகிறான் அல்லது சுமை அடிக்கிறான் அல்லது பாரம் அடிக்கிறான் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அதே எடையை அல்லது சுமையை அல்லது பாரத்தை நவீன போக்குவரத்து சாதனங்களின் மூலம் இடம் மாற்றினால் லோடு **(load)** அடிக்கிறான் அல்லது ஏற்றுகிறான் என்று கூறுகிறார்கள். மதுவருந்தி நிலை தடுமாறி இருப்பவரைக் குறிப்பிடும்போது அவர் புல் லோடுலெ **(full load)** இருக்கிறார் என்று கூறுகிறார்கள். ஊதாரித்தனமாக செலவு செய்து வீண் பொழுதுபோக்கி பாமர மக்களை பயமுறுத்தி சுற்றித் திரியும் ஆளை இவர்கள் லீடர் **(leader)** என அழைக்கிறார்கள். இவர்கள் பேச்சில் எஸ்டேட் **(estate)** என்ற சொல் இடத்தைக்

குறிப்பதற்குப் பதிலாக அதிக நிலபுலன் உடைய ஒரு நபரைக் குறிக்கிறது. நவீன சாதனங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய் மட்டும் ஆயில் (oil) என்று இவர்களால் அழைக்கப்படுகிறது. வீட்டில் சமையலுக்குப் பயன்படுவதை எண்ணெய் என்றுதான் கூறு கிறார்கள். இரண்டு நபர்களுக்கிடையே பொருள் கடனாளுவது நிகழ்ந்தால் அதற்கு கடன் என்றும் ஆனால் ஒரு குடும்பத்திற்கும் அல்லது நபருக்கும் இடையே அரசாங்கத்திலோ அல்லது கூட்டுறவு இயக்கத்திலோ கடனாளுவது நிகழ்ந்தால் அதற்கு லோன் (loan) என்றும் பெயரிட்டு அழைக்கிறார்கள். இவ்வாறே கல்லாதவர்களின் தமிழ்ப்பேச்சில் இடம்பெறும் ஆங்கிலச் சொற்கள் ஒரு குறிப்பிட்ட வரையறையுடையதாக அமைகிறது. இன்னும் சில எடுத்துக்காட்டுகள்

இணைப்பு	(joint)	நடனம்	(dance)
கலவை	(mixture)	நிறம்	(colour)
கிண்ணம்	(cup)	நிறைவு	(full)
கைப்பிடி	(handle)	மோதல்	(dash)
தோல்	(leather)	விபத்து	(accident)
பயிற்சி	(training)	வியாபாரம்	(businss)

தற்பொழுது இந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. இருந்தும் அவைகள் பயன்படவில்லை. மாறாக ஜாயின்ட், மிக்சர், கப்பு, கேன்டில், லெதர், ட்ரெயினிங், டான்ஸ்சு, கலர், புல்லா, டேஷ், ஆக்ஸென்ட், பிஸ்னஸ் போன்ற ஆங்கிலச் சொற்கள் வழக்கிலுள்ளன.

கடன் கூட்டு (loan blend)

இருமொழித்தொடர்பால் ஒரு பொருளை அல்லது ஒரு செயலை உணர்த்தவேண்டி இருமொழிக்கூறுகளின் பகுதிக் கூட்டால் ஒரு புதிய சொல்லோ அல்லது சொற்றொடரோ ஏற்படுமானால் அதைக் கடன் கூட்டு என்று சொல்லலாம். இவ்வாறு நிகழும் கூட்டில் கடன் பெயற்சியையும் (loan shift) கடன் சொல்லையும் (loan word) இணைத்து ஒரு பொருளை அல்லது ஒரு செயலைக் குறிக்கும் ஒரு சொல்லையோ அல்லது தொடரையோ ஏற்படுத்து கிறார்கள். பிறமொழிக் கூற்றைத் தமிழில் எடுப்பவர்கள் பிற மொழிக் கூறின் ஒரு பகுதியை அப்படியே எடுத்துக் கொண்டும்

பிற பகுதிக்கு தமிழிலே முன்பே வழங்கிவரும் ஒரு மொழிக் கூற்றைப் பொருத்தியும் கடன் கூட்டை ஏற்படுத்துகின்றார்கள். இவ்வாறு கடன் கூட்டிற்கு உள்ளாகும் மொழிகளின் கூறுகள் பெயர்ச்சொல்லும் அதன் பகுதியும் கூடியதாகவோ அல்லது வினைச் சொல்லும் வினைச்சொல்லின் பகுதியும் கூடியதாகவோ இருக்கலாம். இவ்வாறு அமையும் கடன் கூட்டில் இடம்பெறும் மொழி உருபன் களின் அடிப்படையில் கடன் கூட்டை இருவிதமாகப் பிரிக்கலாம்.

1. தமிழ் ஆங்கில மொழிக்கூறுகள் சேர்ந்தவை

2. ஆங்கிலத் தமிழ் மொழிக்கூறுகள் சேர்ந்தவை

தமிழ் ஆங்கில மொழிக்கூறுகள் சேர்ந்தவை

தமிழ் ஆங்கில மொழிக்கூறுகள் சேர்ந்த கடன் கூட்டு வகை கல்லாதவர்கள் பேச்சிலும் காணக்கிடக்கிறது. கற்றவர்கள் பயன் படுத்தும் ஆங்கிலத் தொடரை கல்லாதவர்கள் பயன்படுத்த எத்தனிக் கும் போது அதன் முழுஉருவம் தம் மனத்திரையிலிருந்தும் அப்படியே நினைவுக்குக் கொண்டுவந்து வெளிப்படுத்த முடியாத நிலையில் நினைவுக்கு வரும் ஒரு பகுதியை அப்படியே வைத்தும் மறு பகுதிக்குத் தமிழ்க் கூற்றை இணைத்தும் சொற்றொடரை வெளிப் படுத்துகிறார்கள். கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளில் இரு சொற்கள் அடங்கிய ஆங்கிலத்தொடர்கள் மாதிரியாக அமைவதையும் அவை களிலுள்ள முதற்சொற்களுக்குத் தமிழில் பெயர்ச்சி செய்தும் பின் சொற்களை அப்படியே கடன் வாங்கியும் கடன் கூட்டு அமைவதை அறியலாம். கூறவேண்டியதை பொதுப்படையாகக் கூறாமல் குறிப்பிட்டுக் கூறவேண்டும் என்ற நோக்கத்தின் பின்னணியும் இக்கடன் கூட்டுகளை அமைப்பதற்குக் காரணமாக அமையலாம்.

மருந்து ஸ்டோரு	மெடிக்கல் ஸ்டோரு	**medical shop**
ஆயுள் இன்சூர்	லைப் இன்சூரன்ஸ்	**life insurence**
தந்தி மணியாட்ரு	டெலெகிராபிக் மணியார்டரு	**telegraphic money order**

ஆங்கிலத் தமிழ்மொழிக் கூறுகள் சேர்ந்த கடன் கூட்டு

இவ்வகையிலும் ஆங்கிலத்தொடரை அவர்கள் பயன்படுத்த எத்தனிக்கும்போது அந்த ஆங்கிலத் தொடரின் முற்பகுதி நினைவுக்கு வர அது அப்படியே (ஆங்கிலமாகவே) இருக்க பிற்பகுதியை தமிழ்ப்படுத்தியோ அல்லது தமிழ்ச் சொல்லைச் சேர்த்தோ இவ்வகைக் கடன் கூட்டை ஏற்படுத்துகிறார்கள். கீழ்க்காணும் எடுத்துக் காட்டுகள் மேற்கூறிய கூற்றை மெய்ப்பிக்கும்.

பிளாஸ்டிக் வாளி	பிளாஸ்டிக் பக்கெட்	plastic bucket
ஓல் சேர் கட ஓர் சேல் கட	(க்) ஓல்சேல் ஷாப்	whole sale shop
சைடூசி	சைடுபின்	side pin
மைனர் சங்கிலி	மைனர் செயின்	minor chain

கீழ்க்காணும் எடுத்துக் காட்டுகளைக் கல்லாதவர்கள் மட்டு ல்லாது கற்றவர்களும் கூட ஒரே மாதிரியாகப் பயன்படுத்துவதை அறியமுடிகிறது. இந்த எடுத்துக் காட்டுகள் இரண்டும் ஒரு வாக்கியத்திற்குப் பதிலாக ஒரு சொல்லாக மாறி பேச்சுத் தமிழில் கடன் கூட்டாக இடம் பெறுகிறது.

(பஸ்) மிஸ்ஸாயிட்டுது	ஐ மிஸ்டு தி பஸ்	I missed the bus
(ட்ரெயின்) மூவாயிட்டுது	தி ட்ரெயின் மூவ்டு ஆல்ரெடி	The train moved already

இதுவரை இரண்டு சொற்களும், தொடர்களும் கடன் கூட்டாக மாறியமைந்ததைப் பார்த்தோம். இனி வரும் எடுத்துக் காட்டுகள் ஒரு சொல்லாக உள்ளதையும் அதன் பகுதிகளே கடன் கூட்டிற்கு உள்ளாகியுள்ளதையும் காணலாம். அந்த ஒரு சொல்லின் முதல் (வேர்) பகுதிச் சொல் ஆங்கிலமாகவும் அதனுடன் சேரும் பின்னொட்டு தமிழாகவும் அமைவதைக் காணலாம். இப் பின்னொட்டு பெரும்பாலும் ஒரு சொல்லாகவே உள்ளது.

எடுத்துக்காட்டு:

a)	பேஸ்மட்டம்	பேஸ்மென்ட்	basement
b)	பார்லி மன்றம்	பார்லிமென்ட்	parliament
c)	பேட் பந்து	பேட்மின்டன்	bad minton

இந்த எடுத்துக் காட்டுகளில் அவைகளின் அமைப்பிற்கு காரணம் நாடாளுமன்றம், பாராளுமன்றம், பார்லிமெண்ட், எலெக்ஷன் போன்ற சொற்கள் தேர்தல் நேரங்களில் எங்கும் மிகப் பரவலாகக் கேட்கப்படுகிறது. "பார்லி"(barley) என்ற உணவுப்பொருளும் அதன் சொல்லும் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஒன்று. இந்நிலையில் "பார்லிமெண்ட்" என்ற முழுச்சொல் நினைவுக்கு வராவிட்டாலும் பார்லி நினைவுக்கு வருகிறது. பாராளுமன்றம், நாடாளுமன்றம் என்ற பொருள் தொடர்புடைய சொற்களில் உள்ள "மன்றம்" நினைவுக்கு வருகிறது போலும். ஒரே காலத்தில் ஒரே பொருளுடையதைக் குறிக்க இந்தச் சொற்கள் பயன்படுவதால் இரண்டையும் பார்லி + மன்றம் = பார்லிமன்றம் (Parliament) என்று குறிப்பிடுகிறார்கள் போல் உள்ளது.

"பேட்மின்டன்" (batminton) என்பதில் உள்ள மின்டன் (minton) என்ற உருபனின் ஒலிப்பு தமிழ் மக்களின் பேச்சில் பழக்கப்பட்ட ஒன்றல்ல. எனவே பேட் (bat) என்ற ஒரு கூறுமட்டும் நினைவுக்கு வருகிறது. மேலும் bat என்பது கையில் வைத்திருக்கும் மட்டையைக் குறிக்கிறது என்பது தெரிகிறது. உருண்டை வடிவான மிருதுவான பந்து இந்த விளையாட்டில் பயன்படுவதால் இவ்விரண்டும் தெரிவதனால் இவைகளை சேர்த்து ஆட்டப் பெயரையே பேட்+பந்து=பேட்பந்து என்று அழைக்கிறார்கள் போலுள்ளது.

ஒரே பொருளுடைய இருவேறு மொழிச்சொற்களை ஒரு பொருளைக் குறிக்கும் முகத்தான் இரண்டு மொழிச் சொற்களும் இரட்டைக்கிளவிபோல் விரவி வருவதைக் கல்லாதவர்களின் பேச்சில் காணலாம். இதில் பிறமொழிக் கூற்றை கடன் வாங்குவதோடு அதே பொருளுடைய தமிழ்ச்சொல்லையும் சேர்த்துப் பேசுகிறார்கள்,

போஸ்டுமரம்	போஸ்டு	**Post**
ஷாப்பு க(ை)ட	ஷாப்பு	**Shop**

மின்சாரக் கம்பங்களுக்கு போஸ்டுமரம் என்று கூறுகிறார்கள். அவைகள் நேரே செங்குத்தாக நிற்பதாலும், கிளைகள் இல்லாததாலும் மரம் என்றால் பொருள் வேறுபடும் என்பதாலும் போஸ்டு என்று சொன்னால் பொருள் நிறைவுறாது என்று நினைத்து கிளைகளை

யுடைய மரத்திலிருந்து வேறுபடுத்தி போஸ்டுமரம் என்று கூறுகிறார்கள்.

கடைக்குச் செல்கிறேன் என்று கூறினால் அதன் பொருள் பொதுப்படையாக இருப்பதாலும் எந்தக் கடைக்கு என்ற வினா எழுமாதலாலும் அவைகளைத் தவிர்க்கவேண்டி ஷாப்புக் கடைக்குப் போகிறேன் என்று கூறுகிறார்கள். 'ஷாப்புகடை' என்பது ஆடம்பரப் பொருள்கள் விற்கும் கடை என்ற பொருளைத் தருகிறது. கடன் கூட்டு அமைப்பில் தமிழ் வினைச் சொல்லில் ஆரம்பித்து ஆங்கிலச்சொல் பின்னொட்டுடன் கூடியதாக அமையும் எடுத்துக் காட்டு கல்லாதவர்களின் பேச்சுச் சூழலில் காணப்படவில்லை.

ஒப்பாக்கச் சமைப்பு அல்லது ஒப்புமையாக்கம் (analogical creation)

ஒருசில வரையறைக்கு உட்பட்டுப் பேசப்படும் மொழி பொரு திறனுடன் **(competence)** ஒப்பாக்கச்சமைப்பை ஏற்கும்போது சிறப்புறுகிறது. மொழியில் புதுமையாக ஒப்பாக்கச் சமைப்பை படித் தவர்களால் மட்டும்தான் புகுத்தமுடியும் என்பதில்லை, படிக்காத பாமர மக்களாலும் பேச்சுத் தமிழில் ஒப்பாக்கச் சமைப்பைப் புகுத்த முடியும், புகுத்துகிறார்கள் என்பதறிய வியப்புண்டாகிறது. படிக் காதவர்களாகிய இவர்கள் தங்களின் தாய்மொழியின் விதிமுறைக்கு ஏற்றாற்போல் தம் மொழியில் பிறமொழிச் சொற்களுக்கு ஒப்பாக்கச் சமைப்பு சமைக்கிறார்கள்.

பிறமொழிச் சொல்லைத் தமிழில் கலந்து பேசும்போது சில சமயங்களில் வேற்றுமொழிச் சொல் நினைவுக்கு வராத நிலையிலும் பேசுவோருக்குப் புரியாத உச்சரிக்க முடியாத சொல்லை ஆளும் போதும் அச்சொல் குறிக்கும் பொருளை, அது பயன்படும் தன்மையை நினைவு கூர்ந்து ஒப்பாக்கச் சமைப்பு முறைப்படி வேறு சொல்லைச் சேர்த்து புதுச் சொல்லால் நிறைவுசெய்கிறார்கள். பெரும்பாலும் அவ்வாறு சேர்க்கும் புதுச்சொல் தமிழ்ச் சொல்லாகவும், சில சமயங் களில் வேறு மொழிச் சொல்லாகவும் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டு

ரூல்தடி	ரூலர்	**ruler**
ரூல்ஸ்பாக்ஸ்	ஜியோமெட்ரி	**geometry**

டீப் மாத்தெரெ	கேப்சூல்	capsule
குக்கர்	குக்	cook

கோடுபோட பயன்படும் மரத்தாலான தடித்த உருண்டையான கருவியை ரூல்தடி என்று கூறுகிறார்கள். ரூலர் (ruler) ரூல்தடியாக மாறியுள்ளது.

கோடுகள் போடப் பயன்படும் கருவிகள் அடங்கிய பெட்டி ஜியோமெட்ரிபாக்ஸ் என்று அழைக்கப்பட்டாலும் அந்தச் சொல்லின் ஒலியமைப்பு உச்சரித்துப் பழக்கப்படாத காரணத்தால் இச்சொல்லை அவர்களால் அப்படியே கையாளமுடியவில்லை. கோடுகள் (rules) போடும் கருவிகளும் அதன் பெட்டியும் (box) சேர்ந்து ரூல்ஸ் பாக்ஸ் (rules box) என்று பெயரிடப்பட்டுள்ளது.

கேப்சூல் (capsule) என்னும் மருந்து உருவத்தால் குழாய் (tube) வடிவமாகவும், நோய் தீர்க்கும் மாத்திரையாகப் பயன்படுவதாலும் அதன் பெயர் டீப்மாத்தெரெ எனப்பெயர் பெற்றுள்ளது. இதில் "டியூப்" (tube) என்பது "டீப்" என பேச்சில் மாறியுள்ளது. குக் (cook) என்றால் ஆங்கிலத்தில் சமையல் வேலைசெய்யும் ஒரு நபரை குறிக்கும். கல்லாதவர் தம் பேச்சில் இதை எடுத்தாளும் போது, இது ஒரு நபரைக் குறிக்க வேண்டுமெனில் தமிழ் மொழியின் விதிப்படி "அர்" விகுதியை ஏற்றுவரவேண்டும் என எண்ணுகிறார்கள் போலுள்ளது. அதன்படி குக் (cook) + அர் = குக்கர் எனப்படுகிறது.

பல்பொருள் ஒருசொல் (Homonym)

எம்மொழியிலும் ஒரு பொருளுக்குப் பல பெயர்களும் பல பொருள்களுக்கு ஒரு சொல்லிருப்பதும் இயற்கையே ஆகும். ஆங்கில மொழித் தொடர்பால் தமிழில் பல பல்பொருள் - ஒரு சொற்கள் பழக்கத்திலுள்ளது. ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சொல்லோ அமைப்பில் ஒத்த வடிவமுடையதாகவும் பொருளில் வேறுபட்டனவாகவும் இருப்பின் அதை பல்பொருள் ஒருசொல் என அழைப்பர். ஒரே சொல் பல பொருளைத் தந்தாலும் அதன் பொருளை உணர்த்துவதில் குழப்பம் மேலிடுவதில்லை. அச்சொல் வரும் முன்பின் சொற்களின் அமைப்புச் சூழலால் அந்த ஒருசொல் குறிப்பிட்ட ஒரு பொருளைத் தருகிறது என்பதை நன்கு தெளிய

வாய்ப்புள்ளது. போர் அடிக்கிறான் என்று கூறுவதில் மூன்று வகையான பொருள் அமைந்துகிடக்கிறது. 1. தண்ணீர் எடுக்கக் குழாய்களை பூமியில் இறக்குகிறான் என்றும், (make a hole digging by a pointed instrument) 2. சலிப்பு ஏற்படுத்துகிறான் என்றும் (make uninteresting talk) 3. தானியப் பயிர்களின் சக்கையை மாடுகொண்டு துவைக்கிறான் என்றும் (to thrash grains stack) பொருளுடையதாக இருக்கிறது. "கேட்லாக்கு" என்றால் கல்லாதவர்களின் தமிழ்ப் பேச்சில் இரு பொருள்படுகிறது. 1. பெயர்ப் பட்டியல் (catalogue) 2. கொண்டிப் பூட்டு (pad lock). பாட்லாக் (pad lock) கேட்லாக் ஆக மாறியுள்ளது.

தமிழில் ஆங்கிலச் சொற்களின் பொருள் நீட்டம் (Semantic Expansion)

சில ஆங்கிலச் சொற்களைத் தமிழில் அப்படியே கடனாளும் போது ஆங்கிலமொழியில் அச்சொல்லுக்கு இருந்த பொருளோடு தமிழில் பிறிதொரு பொருளை ஏற்றியும் வழங்கப்படுகிறது. இச்சொற்களில் வெளிப்படையாக, தெளிவாக வேறுபாடுகள் காணப்பட்டாலும் நுண்ணோக்கிப் பார்த்தால் இச்சொற்களிடையே சில பொருள் ஒற்றுமையும் இருப்பதை உணரலாம். கான்சல் (Cancel) என்னும் ஆங்கிலச் சொல் தமிழில் கீழ்க்கண்டவாறு பொருள் கொடுக்கிறது. "ஆள் கான்சலாயிட்டான்" என்னும்போது அந்த ஆள் இறந்துவிட்டான் என்னும் பொருளிலும், அந்தக் கூட்டம் கான்சலாயிட்டது என்னும்போது அந்தக் கூட்டம் கைவிடப்பட்டது என்னும் பொருளிலும் வருகிறது. இங்கு கான்சல் என்னும் சொல்லுக்கு "இறப்பு" என்ற பொருள் தமிழில் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற இன்னும் சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காணலாம்.

a) கேஸ் (case) 1. நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு 2. விபச்சாரி என்னும் இரு பொருள்பட வழக்கிலுள்ளது.

b) டோஸ் (dose) 1. ஒருவேளைக்கு எடுக்கும் மருந்தின் அளவு. 2. ஏய்ச்சு.

c) கீப்பர் (keeper) 1. பொருளை வைத்து காக்கும் ஆள். 2. வைப்பாட்டி,

d) மைனர் (minor) 1. சட்டப்படி வயதிற்கு வராதார். 2. சுகபோகத்தில் பொருளை வீணடித்து சுற்றித் திரியும் ஊதாரி.

சொல்லும் அதன் பயனும் (Words and their uses)

தமிழகத்தில் ஆங்கிலத் தொடர்பால் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவ்விரு மொழியும் தெரிந்தவர்தம் பேச்சில் மாறிமாறிப் பேசுவது போல் கல்லாத மக்களால் வாக்கிய அளவில் பேச முடியாவிட்டாலும் சொற்கள் அளவில் ஆங்கிலச் சொற்களைச் சேர்த்துக்கொள்ள இயலுகிறது. அச்சொற்களில் பல அவர்கள் மனமறியாமலும், சில மனமறிந்தும் தம்தம் பேச்சில் கலப்பதாகவே தெரியவருகிறது. கல்லாதவர்களை நீங்கள் உணவு விடுதியில் சாப்பிட்டிருக்கிறீர்களா? என்று கேட்டு என்ன என்ன தெரிந்தவைகளைக் கூறுங்கள் என்று கேட்டபோது விடுதியில் கிடைப்பவைகளை எல்லாம் சொல்கிறார்கள். அவைகளில் பல ஆங்கிலச் சொற்களாக இருப்பதைக் கண்டு 'சிக்கன்' சாப்பிட்டிருக்கிறேன் என்று கூறினீரே அப்படி என்றால் தமிழில் என்ன என்று கேட்டால் அது என்னவோ தெரியாது ஏதோ ஒன்று என்று கூறுகிறார்கள். கோழி என்பதைத்தான் உணவு விடுதியில் சிக்கன் என்று கூறுகிறார்கள் என்று அவர்கட்கு தெரியவில்லை. இதுபோன்று பல ஆங்கிலச் சொற்களுக்கு தமிழாக்கம்தான் இது எனப் பிரித்து வெளிப்படையாக சொல்லத் தெரியவில்லை. இது போலவே இன்னும் பல சொற்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரே பொருளுடையவைகளை ஒரு சிறப்பிடத்தில் ஒரு மொழிச் சொல்லையும் பிறிதொரு இடத்தில் வேறு மொழிச் சொல்லையும் எப்பொழுதும் மாறாமல் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக "பெட்" என்னும் ஆங்கிலச் சொல் நகரத்தின் உறைவிடமாகிய லாட்ஜிலும், மருத்துவ மனையிலும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அதே தன்மையை, பொருளை வீட்டில் குறிப்பிடும் போது அதற்கு படுக்கை அல்லது மெத்தை என்னும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒரே சொல் இருவேறு பொருளைக் குறித்தால் அதில் வேறுபாடு இருக்கவேண்டுமெனக் கருதி ஒரு பொருளைக் குறிக்கும்போது அச்சொல்லை ஒருவிதமாக உச்சரித்தும் அச்சொல் பிறிதொரு பொருளைக் குறிப்பிடும்போது உச்சரிப்பை முன்னதிலிருந்து மாற்றி ஒலிக்கவும் காணலாம். எடுத்துக்

காட்டாக டெலிவரி (delivery) என்ற சொல் விவசாயக் குழுமத்தில் தண்ணீர் இறைக்கும் குழாயைக் குறிப்பிடுகையில் "டெலெவெரி" என்றும், மருத்துவமனையில் குழந்தை பிறத்தலைக் குறிப்பிடுகையில் "டெலிவெரி" என்றும் ஒன்றை குரல் நிறையோசையுடையதாகவும் (voiced) பிறிதொன்றில் குரல் குறையோசையுடையதாகவும் உச்சரிப்பதைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இதுபோன்ற இன்னும் சில எடுத்துக்காட்டுகளாவன:-

புரோக்கர் (broker)	:	நகரத்தில் பொருள்களை வாங்கத் துணை நிற்கும் நபரையும், திருமணம் முடித்து வைக்கும் நபரையும் குறிக்கும்.
தரகர் (broker)	:	கிராமத்தில் பொருள்கள் வாங்க, மாடு ஆடு வாங்கப் பேசி முடிக்கும் நபரைக் குறிக்கும்.
லேடிஸ் (ladies)	:	பெண்கள்: பேருந்து, திரையரங்கம் போன்ற இடங்களிலும் மேலும் படிப்பாலும் நாகரீகத்தாலும் முன்னேறியவர்களை குறிக்கும் போதும்
பொம்பள, பொம்மனாட்டி (ladies)	:	பெண்கள்; வீடுகளிலும், கிராமங்களிலும் நாகரீகத்தாலும் படிப்பாலும் பின்னுள்ளவர்களைக் குறிப்பிடும்போது
லீவு (leave)	:	குறிப்பிட்ட மணிநேரம் அலுவலக வேலை பார்ப்பவர்கள் வீட்டிலிருக்கும்போது
வேலைக்கு வரவில்லை சோம்பல் (leave)	:	கிராமத்தில் வீட்டு வேலை செய்பவன் வேலை செய்ய வராமல் இருக்கும்போது
செயின் (chain)	:	விலையுயர்ந்த உலோகத்தாலானது, உருவத்தால் சிறியது
சங்கிலி (chain)	:	இரும்பினால் ஆனது, உருவத்தால் பெரியது
பிரண்ட் (friend)	:	நாகரீகத்தாலும் படிப்பாலும் முன்னேறியவர்கள் நண்பனை அழைப்பது

கூட்டாளி சேத்தாளி (friend)	நாகரீகத்தாலும், படிப்பாலும் பின்னுள்ளவர்கள் நண்பனை அழைப்பது
கீ (key)	கடிகாரம், பேருந்து போன்றவைகளில் பயன்படும் விசைத் திறப்பான்
சாவி (key)	வீட்டு பூட்டிற்குடைய விசைத்திறப்பான்
பேப்பர் (paper)	எழுதுவதற்கு பயன்படும் காகிதம், சில சமயம் காகிதம் போலுள்ள விடுதித் தோசைக்கும் இப்பெயர் உண்டு.
தாள் (paper)	பொட்டலம் மடிக்கவும் இன்னபிற அலுவல்களுக்கும் பயன்படும் காகிதம்
பார்சல் (parcel)	உணவு விடுதியில் உணவைக் கட்டுதல்
பொட்டலம் (parcel)	வீட்டில் உணவுப் பொருள்கள் போன்றவைகளைக் கட்டுதல்
சர்வண்ட் (servant)	அலுவலக கடைநிலை ஊழியர்களை அழைப்பது
வேலைக்காரன் (servant)	வீட்டிலும் இன்னபிற இடங்களிலும் குறிப்பிட்ட சில வேலைகள் செய்பவர்களுக்கு

இதுகாறும் கண்டது போல் தமிழில் ஆங்கிலத் தொடர்பால், கடன் கூட்டு, ஒப்பாக்கச்சமைப்பு, பல் பொருள் ஒரு சொல், தமிழில் ஆங்கிலச் சொற்களின் பொருள் நீட்டம் போன்றவை புதிதாக ஏற்படுகின்றன. ஆங்கிலக் கலப்பால் தமிழ்ச் சொல்லின் பயன் ஒரு வரையறைக்கு உட்பட்டு தமிழ் சொற்களின் எண்ணிக்கை பேச்சுத் தமிழில் குறைகிறது. ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதனால் தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றுகிறதா? கூடுகிறதா என்பதையும், இந்நிலையைப் பற்றியும் இதன் பின்னணியைப் பற்றியும் மேலும் நன்கு அறிந்துகொள்வது தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

துணை நூல்கள்

AkkiReddy, S. 1971 'English loan words in Telugu'' unpublished Ph. D. dissertation. S. V. Universiry, Tirupati.

Hockett, C. F. 1958 *A Course in Modern Linguistics* The Macmillian company, New York,

Kothandaraman, R. 1968 "Some Bilingual observations: with special reference to Tamil-English contact" unpublished M. A. Dissertation, Annamalainagar.

Shanmagam Pillai, M. 1973 *Engligh Borrowing in Educated Tamil* collceted papers, Madurai.

முதல் உயிரெழுத்துக்கள்

மொழியில் முதல் முதலில் உயிரெழுத்துக்கள் மூன்றே இருந்தன என்பர். அம்மூன்று அ, இ, உ என்பன. இம்மூன்று உயிரொலிகளும் பிறக்கும் நாநிலைகளை ஆராய்ந்தால் ஓர் உண்மை புலனாகும். அதாவது நா அடியில் படிந்திருக்கும் நிலையில் அகரம் பிறத்தலும், முன் அண்ணம் நோக்கி மேலெழுங்கால் இகரம் பிறத்தலும், உண்ணாக்கை நோக்கி எழுங்கால் உகரம் பிறத்தலும் உணரப்படும். இப்பிறப்பிடங்களை ஒரு முக்கோணத்தின் மூலைகளுக்கு ஒப்பிடலாம். இதனை உயிர் முக்கோணம் (vowel – triangle) என்றும், இம்மூன்று ஒலிகளே உயிரெழுத்துக்களுக்கு அடிப்படை என்றும் கூறுவர். சிவஞான முனிவரும் உயிரெழுத்துக்களின் முறைவைப்பை விளக்கும்போது இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றார்.

டாக்டர் **மு. வரதராசனார்**
மொழிநூல், சென்னை, 1974

மொழியியல் 4.1 & 2 (1980)

தேர்வுக் கட்டுப்பாடுகளும் மொழி கற்பித்தலும்

ந. நடராசப்பிள்ளை

ஒரு மொழியின் இலக்கணம், அது மொழியின் விளக்கத்திற்காக வானாலும் சரி, முதல்/இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கானாலும் சரி, அந்த மொழியில் உருவாக்கப்படுகின்ற எல்லா வாக்கியங்களையும் முறையாக, சுருக்கமாக, புரியும் கலைச் சொற்களுடன் விளக்க வேண்டும். இலக்கணம் எடுத்துச் சொல்ல வேண்டிய சில விளக்கங்களைப் பார்க்கலாம்.

அ. மொழியில் உருவாக்கப்படுகின்ற வாக்கியங்கள் புறத் தோற்றத்திலும், அளவிலும் வேறுபட்டிருப்பினும் அவைகளின் வாக்கிய அமைப்பு அக அமைப்பு நிலையில் ஒன்றுபட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, எழுவாய், செயப்படு பொருள் போன்ற இலக்கணச் செயல்களையும், எழுவாய், பயனிலை போன்ற இலக்கணக் கூறுகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சான்றாக,

1. நான் அவனைப் பார்த்தேன்.
2. அந்த நரை விழுந்த கிழவன் அழகும், பண்பும், இளமையும் உள்ள பதினாறு வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

இவ்விரு வாக்கியங்களும் அளவில் வேறுபட்டிருப்பினும், இலக்கண அமைப்பில் வேறுபடுவதில்லை.

ஆ. புற அமைப்பில் ஒன்றுபோல் காணப்படுகின்ற வாக்கியங்கள் பொருள் வேறுபாடு கொண்டிருப்பதின் காரணத்தைத் தெளிவாக விளக்கவேண்டும்.

சான்றாக,

3. அவன் பணத்தால் அவளைக் கட்டிக் கொண்டான்.
4. அவன் பணத்துக்காக அவளைக் கட்டிக் கொண்டான்.
5. அவனிடம் நிறையப் பணம் இருக்கின்றது.
6. அவளிடம் நிறையப் பணம் இருக்கின்றது.

வாக்கியங்கள் 3-ம், 5-ம் ஒன்றுபடுவதும், 4-ம், 6-ம் ஒன்றுபடுவதும் ஏன் என விளக்க வேண்டும்.

இ. தொடரியலால் எழுகின்ற பொருள் மயக்கத்தைத் தீர்த்து வைக்க வேண்டும்.

சான்றாக,

7. என்னிடம் புதுச் செருப்பும் குடையும் இருக்கின்றன.

இவ்வாக்கியத்தின் பெயரடையான 'புது' கொண்டிருக்கின்ற தொடர்பினால்தான் பொருள் மயக்கம் ஏற்படுகின்றது. இதில் இருபொருள் ஒலிப்பதைக் காணலாம்.

7. அ. என்னிடம் புதுச் செருப்பும், புதுக்குடையும் இருக்கின்றன.
7. ஆ. என்னிடம் புதுச் செருப்பும், பழைய குடையும் இருக்கின்றன.

இதற்கான காரணத்தை விளக்கவேண்டும்.

ஈ. வாக்கியத்தில் வருகின்ற சொற்களுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டவேண்டும்.

சான்றாக,

8. ராமன் ராவணனைக் கொன்றான்.

9. ராமனால் ராவணன் கொல்லப்பட்டான்.

10. ராவணன் ராமனைக் கொன்றான்.

வாக்கியங்களுக்கிடையிலான தொடர்புகள் - மாற்றுத் தொடர்புகளை விளக்க வேண்டும். அவ்வாறு மாற்றுவதற்கான விதிகளையும் கொடுக்க வேண்டும்.

உ. எதிர்மறை, ஏவல் போன்ற வாக்கிய அமைப்புக்கள் பற்றிய விளக்கத்தைத் தர வேண்டும்.

11. நான் இந்தப் புத்தகத்தைப் படித்தேன்.

12. நான் இந்தப் புத்தகத்தைப் படிக்கவில்லை.

13. நீ இந்தப் புத்தகத்தைப் படி.

ஊ. இலக்கணக் கூறுகள் விளக்கப்பட்ட பின் அவை மேலும் சிறுசிறு கூறுகளாகப் பிரிக்கப் படுகின்றன என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

சான்றாக, [± பொதுப் பெயர்], [± ஆண்], [± உயிருள்ளவை]
[± மனிதன்] போன்றவை. (ருவெட், 1973)

எ. இவ்வாறு மேற்கூறிய ஆறையும் விளக்கிய பிறகு தேர்வுக் கட்டுப்பாடுகள் **(selectional restrictions)** பற்றிய விளக்கத்தைக் கொடுக்கவேண்டும். (பார்க்க; புளூம் ஃபீல்டு 1933, ஹாரிஸ் 1951, சோம்ஸ்கி 1965, குரோடா 1969, மெக்காலே 1968.)

'க' பிரிவைச் சேர்ந்த ஒரு வினை, வாக்கியத்தில் அமைவதாகக் கொள்வோம். இவ்வினை 'அ' பிரிவைச் சேர்ந்த பெயர்ச் சொற்களையே தன் எழுவாயாகவும், 'ஆ' பிரிவைச் சேர்ந்த பெயர்ச் சொற்

களையே தன் செயப்படு பொருளாகவும் கொள்வதாகக் கொள்வோம். இங்கு,

க [+அ] [+ஆ] — — — — — — — — —

என அது வருகின்ற சூழலைத் தெளிவுறுத்த வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படுகின்றவைகளே 'தேர்வுக் கட்டுப்பாடுகள்' என அழைக்கப்படுகின்றன.

பெரும்பாலான மொழியியல் ஆய்வுகள் இத்தேர்வுக் கட்டுப்பாடு களைப் பற்றிப் பேசுவதைக் காணலாம். இலக்கண வழுக்களுக்கு இத்தேர்வுக் கட்டுப்பாடுகள் பெரிதும் காரணமாகின்றன. சான்றாக

14. ஆசிரியரின் கோபம் என்னைப் பயமுறுத்தியது.

15. *நான் ஆசிரியரின் கோபத்தைப் பயமுறுத்தினேன்.

இவ்விரு வாக்கியங்களுமே தொடரியற் பார்வையில் வழுவற்றவை; ஆனால், சொற்பொருளியலின் அடிப்படையில் இரண்டாவது வாக் கியம் வழுவானது. இதற்குக் காரணம் வினைச்சொல் ஏற்றுக்கொள் கின்ற எழுவாய்க்கும் செயப்படு பொருளுக்கும் இருக்கின்ற சில கட்டுப்பாடுகள் மீறப்பட்டிருப்பதுதான்.

சோம்ஸ்கியின் (1965) கருத்துப்படி இவ்வினையைக் கீழ் வருமாறு கொடுக்கவேண்டும்.

16. பயமுறுத்து, [+ உயிருள்ளவை] [+ உயிருள்ளவை] —— அதாவது 'பயமுறுத்து' எழுவாயாக [+உயிருள்ளவையை]யும் செயப் படு பொருளாக [+உயிருள்ளவையை]யும் கொள்ளும் என்பதாகும்.

ஆக 15-ஆவது வாக்கியம் வழுவாக இருப்பதற்குக் காரணம் அது [—உயிருள்ளவை]யைச் செயப்படு பொருளாகக் கொண்டது தான். எனவே, மேற்கூறிய (16) அமைப்புக் கொடுக்கப்படும்போது எழுவாய்/செயப்படு பொருளின் சொற்பொருளியல் கூறுகள் கொடுக்கப் பட வேண்டும்.

சான்றாக,

சாப்பிடு, [+உயிருள்ளவை] எழுவாயாக வேண்டும்.
சிரி, [+மனிதன்] ,, ,,

இதேபோன்று,

கொல், [+உயிருள்ளவை] செயப்படுபொருளாக வேண்டும்.

சோம்ஸ்கி (1965:82) ஆங்கில வினைக்குத் தேர்வுக் கட்டுப் பாட்டிற்காக, பெயர்க்கூறுகளாக ஐந்தைக் கூறுகின்றார்.

17. [±பொதுப்பெயர்] (±common)
[±எண்ணுப்பெயர்] (±count)
[±உயிருள்ளவை] (±animate)
[± உயர்திணை] (±human)
[±பண்புப்பெயர்] (±abstract)

இப்பாகுபாடு குறுகியது என்றும், போதுமானதல்ல என்றும் மெக் காலே (1968) இசின்ஃபூ (1978) போன்றோர் கருதி, அதற்குக் காரணம் காட்டுகின்றனர்.

'சாப்பிடு' என்னும் வினைக்கு செயப்படுபொருளாக [—பண்புப் பெயர்]தான் வரவேண்டும் எனும்போது அது கல்லையும் காட்டலாம். எனவே,

18. அவன் கல்லைச் சாப்பிட்டான்.
போன்ற வாக்கியங்கள் உருவாக்கப்படுவதைத் தடுக்கமுடியாது.

எனவே சோம்ஸ்கி கொடுத்திருக்கின்ற ஐந்து கூறுகளும் (17) போதாதவை.

ஆக, ஒரு வினையின் தேர்வுக் கட்டுப்பாட்டை விளக்க ஏராள மான கூறுகள் தேவைப்படுகின்றன. 'சாப்பிடு' —வினைக்கு [—பண்புப் பெயர்] [+உண்ணத் தக்கவை] எனும் கூறு அதிகப்படியாகச் சேர்க்க வேண்டியிருக்கும். 'வாசி' வினைக்கு [—பண்புப்பெயர்]

[+ வாசிக்கத்தக்கவை] எனும் கூறு அதிகப்படியாகச் சேர்க்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு வினைக்கும் ஒரு கூறு அதிகப்படியாகச் சேர்ப்பதாக இருந்தால் அது இலக்கணத்தின் போதாமையையும், சிக்கன மின்மையையும்தானே காட்டும்?

எனவே மெக்காலே, இசின்ஃபூ போன்றோர் இது இலக்கணத்தின் தொடரியலில் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்றே நம்புகின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் அதன் தாய்மொழி வாயிலாகக் கிடைக்கின்ற அனுபவம், மற்றமொழி பேசுகின்றவர்களின் அனுபவத்தைப் போல்தான் இருக்கும். சான்றாக, 'சாப்பிடு' எனும் வினைக்கு [+ உண்ணத்தக்கவை] எனும் கூறு கொடுக்கத் தேவையில்லை. இது அனுபவத்தால் கிடைக்கின்ற அறிவின்பாற்பட்டது. எனவே இவைபோன்ற தேர்வுக் கட்டுப்பாடுகள் சொற்பொருளியலின் பொதுமையைத்தான் காட்டுகின்றன. ஆகவே, வகுப்பறையில் ஒரு மொழியைக் கற்பிக்கும்போது இக்கூறுகளை கொடுக்கத் தேவையில்லை. மேலும் மொழிகள் தொடரியல் அளவில்தான் பெரிதும் வேறுபடுகின்றனவேயன்றித் தேர்வுக் கட்டுப்பாடுகள் எனும் சொற்பொருளியல் அளவைகளில் வேறுபடுவதில்லை என முடிவுகட்டி விடுகின்றனர். இது எந்த அளவுக்குச் சரியானது என்பதே இங்கு ஆராயப்படுகின்றது.

இத்தேர்வுக் கட்டுப்பாடுகளை எளிதில் தள்ளிவிட முடியாது என்பது ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது தான் தெளிவாகின்றது. அவைகள் தொடரியலில் கொண்டிருக்கும் பங்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

சோம்ஸ்கி கொடுத்திருக்கின்ற பெயர்க்கூறுகளோடு இன்னும் சில தேவைப்படுகின்றன என்பது ஒப்புக்கொள்ளக் கூடியதே. ஆனால் மெக்காலே போன்றோர் கூறுவது போன்று எண்ணிக்கையில் அடங்காதது அல்ல. வினைச் சொற்களுக்குத் தேவையான அளவில் சில பெயர்க்கூறுகள் கொடுக்கப்படவேண்டும். சோம்ஸ்கியின் ஆய்வில் [+ ஆண்] **[+male]** எனும் கூறின் முக்கியத்துவத்தை மெக்காலே எடுத்துக்காட்டியிருப்பது உண்மையாகும்.

ஒரு வாக்கியத்தில் அவன்/அவள் எனும் பெயர்ப் பதிலியை ஏற்றுக்கொள்ள ஒரு பெயருக்கு [+ ஆண்] கூறு மிகத் தேவையான தொன்றாகும்.

சான்றாக,

19. அந்தப் பாடகி தன்னை அடித்துக் கொண்டாள்

எனும் வாக்கியம் கீழ்க் கண்டவாறுதான் உருவாக்கப் படுகின்றது.

20. அ. அந்தப் பாடகி பாடகியை அடித்துக் கொண்டாள்

ஆ. அந்தப் பாடகி அவளை அடித்துக் கொண்டாள்

இ. அந்தப் பாடகி தன்னை அடித்துக் கொண்டாள்

ஆக, 19-வது வாக்கியம் கிடைக்க 'பாடகி' எனும் பெயருக்கு [–ஆண்] எனும் கூறு தேவையாகிறது, அக்கூறினால்தான் பாடகி, 'அவள்' எனப் பெயர்ப்பதிலி (pronominalization) யாக்கப் பட்டுப் பின்னர், இருதிணை முக்கூற்றுப் பெயராக்கப் (தான் பெயராக்கம் – Reflexivization) படுகின்றது. எனவே சோம்ஸ்கியின் ஆய்வில், பெயர்ப்பதிலியாக்க விதியில் செயல்படுகின்ற [+ ஆண்] கூறு ஒரு தொடரமைப்பு விதியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

21. [+ மனிதன்] → [+ ஆண்]

இதைப் போன்று பாடகி எனும் பெயரும் [— ஆண்] கூறு பெறுகின்றது. இதனால் பின்னர் வாக்கியம் உருவாகும் போது - சொற்கள் புகுத்தப்படும்போது [— ஆண்] கூறு இருப்பதால் 'பாடகி' எனும் சொல் சேர்க்கப்பட்டு, பின்னர் பெயர்ப் பதிலி பதிலீடு செய்யப்படுகின்றது.

இவ்வாறு இலக்கணத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற தேர்வுக் கட்டுப்பாடுகள் மொழி கற்பதில்/கற்பிப்பதில் எந்த அளவுக்குப் பயன்படுகின்றன? அவற்றைக் கற்பிக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுகின்றது.

முன்னர் கூறியது போன்று சிலர் (மெக்காலே, 1968; இசின்ஃபூ 1878) தேர்வுக் கட்டுப்பாடுகள் தேவையில்லாதவை, மொழியின் தொடரியற் கூறே போதுமானது எனக் கூறுகின்றனர்.

ஆனால் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்ற மாணவர் களின் பிழைகளை எடுத்து ஆராயும்போது அதன் முக்கியத்துவம் தெரிகின்றது.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் கிளை நிறுவன மான, தென்னிந்திய மொழிகளின் பயிற்சி நிறுவனத்தில் தமிழ் பயில் கின்றவர்களின் பிழைகளே இங்கு ஆராய எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

அவர்களின் கட்டுரைகள், தேர்வுத்தாள்கள் முதலியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட பிழைகளில் சில, தேர்வுக் கட்டுப்பாட்டு விதிகள் மீறப்பட்டிருப்பதால் நேர்ந்தவை. (பார்க்க: நடராசப்பிள்ளை 1979) அவற்றை இனிப் பார்க்கலாம்.

'புறப்படு'. 'கிளம்பு', 'ஆரம்பி', 'தொடங்கு' இந்நான்கு வினைச் சொற்களுக்கும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது, அவைகளின் எழுவாய்க்கான தேர்வுக் கட்டுப்பாடுகளைக் கொடுக்க வேண்டியது மிகமிகத் தேவையாகும்.

22. *சினிமா புறப்பட்டது.

23. *நாங்கள் போவதற்கு முன்னால் அந்தப் பொதுக் கூட்டம் கிளம்பியது.

இவைபோன்ற பிழை வாக்கியங்கள் அதிக அளவு எழுதப்படுகின்றன. இதற்குக் காரணம் தேர்வுக் கட்டுப்பாடுகள் கொடுக்கப்படாமையே.

24. புறப்படு [+பண்புப்பெயர்] [+physical movement]
கிளம்பு

ஆரம்பி [+பண்புப்பெயர்] [—physical movement]
தொடங்கு

இங்கு எழுவாய்க்கான தேர்வுக்கட்டுப்பாடுகள் மீறப்பட்டிருப்பதுதான் பிழைக்குக் காரணமாகும். இதேபோன்று செயப்படுபொருளுக்கான தேர்வுக் கட்டுப்பாடுகளும் மீறப்படுவதைக் காணலாம்.

'துலக்கு', 'துவை', 'கழுவு', 'விளக்கு' இந்நான்கு வினைகளும் பொருள் அளவில் அவ்வளவு வேறுபடுவதில்லை. எனினும், அவை களின் தொடரியல் அமைப்பில் வேறுபாடு காணப்படுகின்றது.

25. துவை
கழுவு
துலக்கு
விளக்கு } [—பண்புப்பெயர்]

இதன் செயப்படுபொருள் [—பண்புப்பெயர்] எனக் கொடுக்கப்பட்டாலும், இன்னும் ஒரு கூறும் ஒவ்வொன்றிற்கும் தேவையாகின்றன.

26. வினை— துவை — செயப்படுபொருள் — துணி
துலக்கு —
விளக்கு — } ,, பாத்திரம், பல்
கழுவு — ,, உடல் உறுப்புக்கள், கார், தரை பாத்திரம் போன்றவை.

எனவே. இவைகளுக்கென ஒரு கூறு அதிகப்படியாகக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அதிகப்படியான ஒரு கூறு கொடுக்கப்படாததின் காரணத்தால்தான்.

27. * நான் கைகளைத் துவைத்தேன்

28. * நான் ஞாயிற்றுக்கிழமைகளில் துணிகளைத் துலக்குவேன்

29. * நான் துணிகளைக் கழுவுவேன்

போன்ற பிழையான வாக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன.

30. ஒடி [பண்புப்பெயர்]
உடை

எனும் இரு வினைகளின் செயப்படுபொருள்களும் இவ்வாறே ஒரு கூறில் வேறுபடுகின்றன. [—பண்புப்பெயர்] –ஆக இருப்பினும் அவைகளின் வடிவம் ஒரு கூறாக அமைகின்றது.

31. உடை, [—பண்புப்பெயர்] [+உள்ளீடு உள்ளவை]
ஒடி, [—பண்புப்பெயர்] [—உள்ளீடு உள்ளவை]

எனக் கொடுக்கப்படவேண்டும்.

உருவகப் பொருளில் பயன்படுத்தும் போது,

32. மனம் உடைந்தது
33. அவன் மனம் ஒடிந்துபோனான்.

போன்ற வாக்கியங்களில் [+பண்புப்பெயர்] வருகின்றது. ஆனால் அவ்வாறு இவ்வினைச் சொற்கள் மட்டுமின்றிப் பெரும்பாலான வினைச் சொற்களையும் பெயர்ச் சொற்களையும் அவைகளின் தேர்வுக் கட்டுப்பாடுகளையும் மீறிப் பயன்படுத்துவது மிகவும் சாதாரணம். இவ்வாறு எழுதப்படுவதால், இத் தேர்வுக் கட்டுப்பாடுகள் தேவையில்லாதவை எனக் கூற முடியாது.

மொழி பயில்கின்றவர்களில் சிலர் செய்கின்ற வினைச்சொற் பிழைகளுக்குத் தேர்வுக் கட்டுப்பாடுகள் தெரியாமையே காரணமாகின்றது. ஆகவே, ஒரு மொழியை இரண்டாம் மொழியாக/அயல் மொழியாகக் கற்பிக்கும்போது தேர்வுக் கட்டுப்பாடுகள் கொடுக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்.

துணை நூல்கள்

Bloomfield, L. 1933 *Language*. NewYork: Holt.

Chomsky, N. 1965 *Aspects of the Theory of Syntax*. Mass
The M. I. T. Press.

Harris, Z. S. 1951 *Methods in Structural Linguistics.* Chicago: The University of Chicago Press.

Kuroda, S.Y. 1969 "Selectional Restrictions and Presupposition" *Studies in Syntax and Semantics*, F. Kiefer (ed). Holland: D. Reidel Publishing Company.

McCawley, J. D. 1968 "Concerning the Base Component of a Transformational Grammar". Foundations of Language. 4. 243-69.

——— 1969 "Where do Noun Phrases Come From?" *Readings in English Transformational Grammar*, Jacobs and P. S. Rosenbaum (eds.) Waltham: Ginn and Company.

Nadaraja Pillai, N. 1979 "An Error Analysis in Tamil of the Advanced Course Learners" Decennial Volume, Mysore: Central Institute of Indian Languages.

Ruwet, Nicolas. 1973 *An Introduction to Generative Grammar.* Amsterdam: North Horth Holland Publishing Company.

Yi-Chin Fu. 1978 "Thoughts on Selectional Restrictions". IRAI. XVI/3.

மீனவர் பேச்சுத் தமிழில் மண்வகைகளைக் குறிக்கும் சொற்கள்

மீனவர் பேச்சுத் தமிழில் கடலின் அடியில் இருக்கும் மண் சேறு ஆகியவைகளைக் குறிக்க பல்வேறு சொற்கள் உள்ளன. சேற்றின் தன்மைக்கும், நிறத்திற்கும் ஏற்றவாறு பெயர்கள் காணப்படுகின்றன. கடலின் ஆழத்தைப் பொருத்தும் பெயர்கள் அமைகின்றன. ஒவ்வொரு சேற்றிலும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

அசி மண்ணு

அழுக்கு மண்ணு

கலவ மண்ணு

காக்கா மண்ணு

பொத்து மண்ணு

வெள்ள மண்ணு

சேறு

கல் சேறு

கம்பி சேறு

கும்பி சேறு

சல்லா சேறு

புச் சேறு

பன சேறு

தெளிவாஞ்சேறு

ஓட சேறு

கே. வி. ராஜகுமாரி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

(கள ஆய்வில் கண்டவை)

மொழியியல் 4, 1 & 2 (1980)

கம்பராமாயணக் கட்டளைக் கலித்துறைகள்

ம.ரா. பூபதி

1. கட்டளைக் கலித்துறை - பெயர் விளக்கம்

கலித்துறையின் இலக்கணத்தை யாப்பருங்கலம்,

"நெடில் அடி நான்காய் நிகழ்வது கலித்துறை" (யாப். 88)

என்று கூறுகிறது. ஒரே அடி எதுகை அமைந்து, ஐஞ்சீர் அடிகள் நான்காக வருவது கலித்துறை ஆகும் என்பது இதன் பொருள். கட்டளை என்பது ஓர் அடியில் உள்ள எழுத்தெண்ணிக்கையைக் குறிப்பது. கட்டளை: எழுத்தெண்ணிக்கை. அடியில் உள்ள எழுத்துக்களை என்னும்போது, மெய், ஆய்தம் ஆகியவற்றை எண்ணாமல், உயிர், உயிர்மெய் யெழுத்துக்களையே எண்ணுதல் வேண்டும். குற்றியலிகரமும் எண்ணப்படாமல் விடப்படுவதுண்டு. எனவே, கட்டளைக் கலித்துறை என்பது, ஒரே எழுத்தெண்ணிக்கை உடைய அடிகள் நான்கால் ஆகிவரும் கலித்துறைச் செய்யுட்கள் என்று பொருள்படும்.

2. காரைக்காலம்மையார் கட்டளைக் கலித்துறை

கட்டளைக் கலித்துறைகளில் பல வகைகள் உண்டு. எனினும், ஒரு குறிப்பிட்ட வகைக் கட்டளைக் கலித்துறைக்கே — ஓர் அடியில் 16, 17 எழுத்துக்களை உடைய கலித்துறைக்கே இதுவரை கட்டளைக் கலித்துறை என்ற பெயர் யாப்பிலக்கணங்களால் வழங்கப் பட்டு வந்துள்ளது. அக் குறிப்பிட்ட வகைக் கட்டளைக் கலித் துறையின் இலக்கணம் வருமாறு:

1) ஒவ்வோர் அடியிலும் ஐந்து சீர்கள் இருக்கும். (2) முதல் நான்கு சீர்கள் ஈரசைகளால் ஆன இயற்சீர்களாகவோ, மாங்காய்ச் சீராகவோ இருக்கும். (3) ஐந்தாம் சீர் விளங்காய்ச் சீராக இருக்கும். சில சமயம் மாங்கனி அல்லது மாந்தண்பூச் சீராகவும் இருப்பதுண்டு (4) ஒவ்வோர் அடியும் வெண்டளையில் அமையும். (5) ஈற்றடியின் ஈற்றுச் சீரின் ஈற்றெழுத்து ஏகாரமாக இருக்கும். சிறுபான்மை ஓகார மாக இருப்பதும் உண்டு; மெய்யெழுத்தாகவும் இருக்கும். (6) இவ் வாறு அமைந்தால், ஒவ்வோர் அடியிலும் உள்ள எழுத்துக்களை எண்ணிக் கணக்கிடும் போது, நேரசையில் தொடங்கும் அடியில் 16 எழுத்துக்களும், நிரையசையில் தொடங்கும் அடியில் 17 எழுத் துக்களும் காணப்படும்.

“ அடிஅடி தோறும் ஐஞ்சீர் ஆகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக
கடைஒரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே, நிரைபதி னேழ்என்று
ஓதினார் கலித்துறை ஓர்அடிக்கு எழுத்தே”

என்பது இக்கட்டளைக் கலித்துறையின் இலக்கணத்தைக் கூறும் பழைய நூற்பா. இதில் ஈற்றெழுத்து பற்றிய இலக்கணம் எதுவும் கூறப்படவில்லை. ஏகாரத்தில் முடியும் இவ்வகைக் கட்டளைக் கலித் துறையை முதலில் கையாண்டு பாடியிருப்பவர், காரைக்கால் அம்மை யார். அவரது திருவிரட்டை மணிமாலையில் காணப்படும் பத்துக் கட்டளைக் கலித்துறைகளும் ஏகாரத்தில் முடிவன. ஆனால், அவ ருக்குப் பிற்பட்ட திருஞான சம்பந்தர் இக்கட்டளைக் கலித்துறையில் பாடியுள்ள இரண்டு பதிகங்களில், ஒரு பதிகம் (பதி. 117) ஏகாரத்தில்

முடியும் பாக்களைக் கொண்டது. மற்றப் பதிகம் (பதி. 116) ஏகாரத்தில் முடியாத பாக்களைக் கொண்டது. எனவே, ஏகாரத்தில் முடிவதைக் காரைக்காலம்மையார் கட்டளைக் கலித்துறை என்றும், ஏகாரத்தில் முடியாததைச் சம்பந்தர் கட்டளைக் கலித்துறை என்றும் முதன் முதலாகக் கண்டவர் பெயர்களால் குறியீடு செய்து வழங்கலாம்.

3. கம்பராமாயணமும், 16, 17 எழுத்துக் கட்டளைக் கலித்துறைகளும்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்ட கம்பராமாயணத்தில், காரைக்காலம்மையார் கட்டளைக் கலித்துறையோ, சம்பந்தர் கட்டளைக் கலித்துறையோ ஒன்றுகூட இல்லாதது வியப்பாக உள்ளது. கம்பர் பாடிய சடகோபர் அந்தாதியில் உள்ள எல்லாப் பாடல்களும் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையில் அமைந்திருக்கும் போது, அதேபுலவரால் பாடப்பட்ட இராமாயணத்தில் மட்டும் ஒரு பாடல்கூட இவ்வகையில் அமையாததற்கு உரிய காரணம் விளங்கவில்லை. எனவே, கம்பராமாயணத்தில் உள்ள கட்டளைக் கலித்துறைகள் அனைத்தும் வேறுவகையில் — வேறு எழுத்தெண்ணிக்கை உடைய அடிகளைக் கொண்டமைந்த கட்டளைக் கலித்துறைகளே ஆகும்.

4. கம்பராமாயணக் கட்டளைக் கலித்துறைகளின் வகைகள்

கம்பராமாயணத்தில் மொத்தம் 9 வகைக் கலித்துறைகள் உள்ளன. அவற்றுள் 7 வகைகள் எழுத்தெண்ணிப்பாடும் அடிகளைக் கொண்ட கட்டளைக் கலித்துறைகளாகக் காணப்படுகின்றன.

அவை, நேரசையில் தொடங்கும் அடி, நிரையசையில் தொடங்கும் அடி என்ற அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப் படலாம்.

1. 12, 13 எழுத்து அடிகளைக் கொண்டவை
2. 13, 14 எழுத்து அடிகளைக் கொண்டவை
3. 14, 15 எழுத்தடிகளைக் கொண்ட இருவகை

4. 15, 16 எழுத்தடிகளைக் கொண்ட இருவகை
5. 21, 22 எழுத்து அடிகளைக் கொண்டவை.

5. 12, 13 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறை

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையின் அடிகள்,

"ஒருவிளம் கூவிளம் தேமா தேமா தேமா"

என்ற வாய்ப்பாட்டில் அமைந்துள்ளன. முதல் நான்கு சீர்களின் இறுதியில் நெடிலோ, நெடிலொற்றோ வருவதில்லை. 5-ஆம் சீரின் இறுதியில் நால்வகை நேரசைகளும் வரலாம். விளச்சீர்க்கு மாறாக மாங்காய்ச் சீரும் வரலாம்.

கம்பராமாயணத்தில், அயோத்தியா காண்டத்தில், கைகேயி சூழ்வினைப் படலத்தில், 5 முதல் 28-ஆம் பாடல் முடிய 24 பாடல்கள் இவ்வகையில் அமைந்துள்ளன. இந்த ஓர் இடம் தவிரக் கம்பராமாயணத்தில் வேறெங்கும் இவ்வகைக் கட்டளைக் கலித்துறை காணப்படவில்லை. தயரதனிடம் கைகேயி இரண்டு வரங்களைக் கேட்டுப் பெற்ற செய்தியைப் பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

"ஏயவ ரங்களி ரண்டின் ஒன்றி னாலென்
சேயுல காள்வது, சீதை கேள்வன் ஒன்றால்
போய்வன மாள்வதெ னப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னும்சி றந்த தீயாள்"

இது நேரசையில் தொடங்குவதால், அடிக்கு 12 எழுத்துக்களைப் பெற்றுள்ளது.

"உலர்ந்தது நா;உயிர் ஓடலுற்ற துள்ளம்
புலர்ந்தது; கண்கள்பொ டித்த; பொங்குசோரி
சலந்தலை மிக்கது; தக்க தென்கொல் என்றென்
றலந்தலை உற்ற,அ ரும்புலன்கள் ஐந்தும்"

இது நிரையசையில் தொடங்குவதால் அடிக்கு 13 எழுத்துக்கள் உள்ளன.

பெருமிதம், அவலம், துயரம் ஆகிய உணர்ச்சிகள் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையால் புலப்படுத்தப் படுகின்றன.

கம்பனுக்கு முன்னால் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை எந்தப் புலவனும் எந்த நூலிலும் கையாளவில்லை. கம்பனே இதனை உருவாக்கி முதன் முதலில் பாடியவன். எனவே, இதற்குக் கம்பன் கட்டளைக் கலித்துறை I எனக் குறியீடு செய்யலாம்.

6. 13, 14 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறை

இக் கட்டளைக் கலித்துறையின் அடிகள்

"ஒருமா தேமா கூவிளம் தேமா புளிமாங்காய்"

என்ற வாய்பாட்டில் அமைந்தவை ஆகும். இக்கட்டளைக் கலித்துறை கம்பராமாயணத்தில் எல்லாக் காண்டங்களிலும் மொத்தம் 13 இடங்களில், 161 பாடல்களில் காணப்படுகின்றது.

உவகை, இளிவரல், அழுகை, வெகுளி, வீரம் பெருமிதம் ஆகிய உணர்ச்சிகளைக் கம்பன் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையால் பாடியுள்ளான்.

மிதிலையில் கன்னிமாடத்தில், சீதை நிற்கின்ற அழகைப் பின் வரும் பாடல் எடுத்துக் கூறுகிறது.

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவை யெல்லாம்
வெல்லும் வெல்லும் என்னம தர்க்கும் விழிகொண்டாள்
சொல்லும் தன்மைத் தன்றது; குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லும் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்"

இது நேரசையில் தொடங்குவதால் அடிக்கு 13 எழுத்துக்களைப் பெற்றுள்ளது.

தயரதன் இறந்தமையை அறிந்து கோசலை புலம்புவதைப் பின் வரும் பாடல் உணர்த்தும்.

"வடித்தாழ் கூந்தல் கேகயன் மாதே! மதியாலே
பிடித்தாய் வையம்; பெற்றனை பேரா வரமின்னே

முடித்தாய் அன்றே மந்திரம் என்றாள் முகில்வாய்மின்
துடித்தால் என்ன மன்னவன் மார்பில் துவள்கின்றாள்''

இது நிரையசையில் தொடங்குவதால், அடிக்கு 14 எழுத்துக்கள் உள்ளன.

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை முதன் முதலாகப் பயன் படுத்தியவர் திருஞான சம்பந்தர். சம்பந்தர் தேவாரத்தில், இரண்டு பாடல்கள் (பதி 110:1; பதி. 103;11) இவ்வகையில் அமைந்துள்ளன. சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி ஆகிய காப்பியங்களும் கம்பனுக்கு முன்னால் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையைப் பயன் படுத்தி யுள்ளன.

7. 14, 15 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறைகள்

14, 15 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறையில் இருவகைகள் காணப்படுகின்றன. ஒருவகை,

"ஒருவிளம் தேமா கூவிளம் தேமா புளிமாங்காய்"

என்ற வாய்ப்பாட்டு அடிகளால் ஆனதாகும். மேலே குறிப்பிட்ட கட்டளைக் கலித்துறை வகையிலிருந்து இது சிறிதளவே வேறு பட்டது. முந்தியதில் முதற்சீர் ஒரு மாச்சீராக இருக்கும்; இதில் முதற்சீர் ஒரு விளச்சீராக இருக்கும். வேறுபாடு அவ்வளவே.

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையானது, கம்பராமாயணத்தில், ஆரணிய, கிட்கிந்தா, யுத்த காண்டங்களில், மொத்தம் 3 இடங்களில் 30 செய்யுளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இளிவரல், அழுகை, வீரம் ஆகிய உணர்ச்சிகள் இவ்வகைப் பாடலால் புலப்படுத்தப்படு கின்றன.

சீதையை வஞ்சனை வழியில் கவர்ந்து வருவதற்கு இராவணன் மாரீசனது துணையை வேண்டுவதைப் பின்வரும் பாடல் தெரிவிக் கின்றது.

"வெப்பழி யாதென் நெஞ்சமு லர்ந்தேன். விளிகின்றேன்
ஒப்பிவர் என்றே போர்செயல் ஒல்லேன், உடன்வாழும்

துப்பழி செவ்வாய் வஞ்சியை வெளவத் துணைகொண்டிட்
டிப்பழி நின்னால் தீரிய வந்தேன் இவண் என்றான்.”

இது நேரசையில் தொடங்குவதால் அடிக்கு 14 எழுத்துக்களைப் பெற்றுள்ளது.

இலங்கைக்குச் செல்லக் கடலைக் கடப்பது யார் என வானர வீரர் தமக்குள் பேசிக்கொள்ளும் போது, சாம்பன் அனுமனது ஆண்மையைப் பலவாறு புகழ்ந்து கூறுகிறான். அப்பகுதியைச் சார்ந்தது பின்வரும் பாடல்.

“ அடங்கவும் வல்லீர் காலம தன்றேல்; அமர்வந்தால்
மடங்கல்மு னிந்தால் அன்ன வலத்தீர்; மதிநாடித்
தொடங்கிய தொன்றோ? முற்றுமு டிக்கும் தொழிலல்லால்
இடங்கெட, வெவ்வாய் ஊறுகி டைத்தால் இடையாதீர்.”

இது நிரையசையில் தொடங்குவதால், அடிக்கு 15 எழுத்தைக் காண்கிறோம்.

திருஞான சம்பந்தர் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை முதல் முதலாகப் பயன்படுத்தியுள்ளார். (பதி. 97;2) சீவகசிந்தாமணி (நாமகள். 360), பெரியபுராணம் (திருநாவுக்கரசர் : 237) ஆகிய காவியங்களும் கம்பனுக்கு முன்னால் இவ்வகைக் கட்டளைக் கலித்துறையைப் பயன்படுத்தியுள்ளன.

14, 15 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறையில் மற்றொருவகை,

“ ஒருமா புளிமா புளிமாங்கனி தேமா தேமா ”

என்ற வாய்பாட்டில் அமைந்த அடிகளைக் கொண்டது. இதில் பல உள் வகைகள் உண்டு. ஓர் அடியில் உள்ள சீர் அமைப்பு மாறி வந்தாலும், அடியின் எழுத்தெண்ணிக்கை மாறாது. எடுத்துக் காட்டாக,

“ ஒரு மாங்காய் தேமா புளிமாங்கனி தேமா தேமா ”

“ ஒருமா புளிமா புளிமாங்காய் புளிமா தேமா ”

என்று இப்படிப் பல வகையாக அடிகள் அமைவதுண்டு. இதற்கு வண்ணப்பாடல், விருத்தக் கலித்துறை என்றெல்லாம் வேறு பெயர் கள் வழங்குகின்றன.

கம்பராமாயணத்தில் 6 காண்டங்களிலும், மொத்தம் 14 இடங்க ளில், 216 பாடல்கள் இவ்வகையில் அமைந்துள்ளன. வீரம், உவகை வெகுளி, அவலம் ஆகிய உணர்ச்சிகளை இக்கட்டளைக் கலித்துறை யின் மூலம் கம்பன் புலப்படுத்துகிறான்.

தயரதன் தன் மகன் இராமனது திருமணத்திற்குச் சேனைக ளோடு அயோத்தியை விட்டு மிதிலைக்குச் செல்லும் வழியில் ஒரு சோலையில் இளைப்பாறத் தங்க, அச்சோலையில் தன் காதலனோடு ஒரு மங்கை ஊடல் கொள்வதைப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

"செம்மாந்த தெங்கின் இளநீரை,ஓர் செம்மல் நோக்கி
அம்மா இவைமங் கையர்கொங் கையின் ஆயஎன்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன என்றொர் ஏழை
விம்மா, வெதும்பா, வெயராமுகம் வெய்து யிர்த்தாள்"

இது நேரசையில் தொடங்குவதால் அடிக்கு 14 எழுத்தைப் பெற் றுள்ளது.

இராவணன் சீதையைக் கவர்ந்து கொண்டு விண்வழியே செல் வதைக் கண்ட சடாயு, அவளுக்குத் தேறுதல் கூறி இராவணனோடு போர் தொடங்குவதைப் பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

"கொழுந்தே அனையாள் குமைந்தேங்கிய கொள்கை கண்டான்
அழுந்தேல், அவலத் திடையஞ்சலை; அன்னம் என்னா
எழுந்தான் உயிர்த்தான் அட!எங்கினிப் போவதென்னா
விழுந்தான் அவன்தேர் மிசைவிண்ணவர் பண்ணை ஆர்ப்ப"

இது நிரையசையில் தொடங்குவதால் அடிக்கு 15 எழுத்துக்கள் உள்ளன.

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை முதலில் பயன்படுத்தி யுள்ளவர் திருஞான சம்பந்தர் (பதி. 312:4 முதல் 12ஆம் பாடல்

வரை). சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, வளையாபதி, பெரியபுராணம் ஆகிய காப்பியங்களும் கம்பனுக்கு முன்னால் இவ் வகைக் கட்டளைக் கலித்துறையைக் கையாண்டுள்ளன.

8. 15, 16 அடிக் கட்டளைக் கலித்துறைகள்

இவ்வகையிலும் இரண்டு விதக் கட்டளைக் கலித்துறைகள் கம்பராமாயணத்தில் காணப்படுகின்றன. ஒருவகை,

" ஒருமா கூவிளங்காய் கூவிளங்காய் தேமா புளிமா "

என்ற வாய்பாட்டில் அமைந்த அடிகளைக் கொண்டது. இதனை,

" ஒருமா கூவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்கனி"

என்ற வாய்பாட்டு அடிகளைக் கொண்ட நாற்சீர் அடிக் கட்டளைக் கலிவிருத்தமாகவும் கருத இடமுண்டு. கம்பராமாயணத்தில் ஆரணிய, கிட்கிந்தாக் காண்டங்களில், மொத்தம் 7 இடங்களில், 73 பாடல் கள் இவ்வகையில் அமைந்துள்ளன. வாழ்த்தல், வீரம், அவலம், அச்சம், பெருமிதம் ஆகிய உணர்ச்சிகள் இக்கட்டளைக் கலித்துறை யால் தெரிவிக்கப்படுகின்றன.

இராமன், சீதை, இலக்குவன் மூவரும் தண்டக வனத்தை அடைந்தபோது, விராதன் சீதையைக் கவர்ந்து செல்ல வருகிறான்; அவனது அச்சமூட்டும் தோற்றத்தைப் பின்வருமாறு கம்பன் கூறு கிறான்.

" பூதம் அத்தனையும் ஓர்வடிவுகொண்டு புதிதென்
றோத ஒத்தவுரு வத்தனுரு மொத்த குரவன்
காத வித்தயன ளித்தகடை இட்ட கணிதப்
பாத லக்கமத வெற்பவைப டைக்க வலியான் "

இது நேரசையில் தொடங்குவதால், அடிக்கு 15 எழுத்துக்கள் உள்ளன.

சீதையைக் கவர்ந்து சென்ற விராதனுடைய தோள்களை இராமன் துணித்து மண்ணில் புதைத்ததைக் கீழ்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

"மதநல் யானையனை யாம்நிலம்வ கிர்ந்த குழிவாய்
நதமு லாவுநளி நீர்வயின மூந்த நவைதீர்
கதழ்வ மாய்நறுநெய் உண்டுலகில் அன்பர் கருதிற்
றுகவு சேவடியி னாலமலன் உந்து தலுமே"

இது நிரையசையில் தொடங்குவதால், அடிக்கு 16 எழுத்துக்கள் உள்ளன.

கம்பனுக்கு முன்னால் இத்தகைய கட்டளைக் கலித்துறையை எவரும் கையாளவில்லையாதலால், கம்பனே இதனை முதலில் உருவாக்கிப் பாடியவன் ஆகிறான். எனவே இதனைக் கம்பன் கட்டளைக் கலித்துறை II எனக் குறிப்பிடலாம்.

15, 16 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறையின் மற்றொருவகை,

"ஒருவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் தேமாங்காய்"

என்ற வாய்பாட்டு அடிகளைக் கொண்டதாகும். இராமாயணம் முழுவதிலும் ஒரே ஓர் இடத்திலேயே அயோத்தியா காண்டம், கங்கை காண் படலத்தில் மட்டும் - 11 செய்யுட்களைக் கம்பன் இவ்வகையில் பாடியுள்ளான். வீரச் சுவையைப் பாட இது மிகவும் பொருத்தமாக உள்ளது.

கானகம் சென்ற இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வந்து, அரசனாக்கும் நோக்கத்தோடு, படைகள் தொடர்ந்து வரப் பரதன் பயணம் செய்து, கங்கைக் கரையை அடைகிறான். இராமனைக் கானகத்திலும் வாழவிடாமல், எதிர்த்துக் கொள்வதற்காகவே பரதன் படைகளோடு வந்திருக்கிறான் எனத் தவறாகக் கருதிய குகன், தன் ஆட்களை விளித்து வீரமாகப் பேசுகிறான்.

"அஞ்சன வண்ணனென் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சரம் என்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ?"

நேரசையில் தொடங்கும் இதில், அடிக்கு 15 எழுத்திருப்பதைக் காணலாம்.

" அருந்தவம் என்துணை ஆள,இ வன்புவி ஆள்வானோ?
மருந்தெனின் அன்றுயிர் வண்புகழ் கொண்டுபின்மாயேனோ
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நின்றுக ழிக்குவென் என்கடன் இன்றோடே"

எனக் குகனுடைய வீரஉரை தொடர்கின்றது. இப்பாடல் நிரையசையில் தொடங்குவதால் அடிக்கு 16 எழுத்துக்கள் உள்ளன.

கம்பனுக்கு முன்னால் சேக்கிழார் மட்டுமே இவ்வகைக் கட்டளைக் கலித்துறையைப் பாடியுள்ளார். திருத்தொண்டர் புராணத்தில், ஆனாய நாயனார் புராணத்தில், மேன்மழ நாட்டு வளம் முதலியவற்றைக் கூற 12 பாடல்களை இவ்வகைக் கட்டளைக் கலித்துறையில் அமைத்துள்ளார்.

9. 21, 22 எழுத்தடிக் கட்டளைக் கலித்துறை

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையானது,

" ஒரு விளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் கூவிளங்கனி ".

என்ற வாய்பாட்டு அடிகளால் ஆனது. இராமாயணத்தில் ஒரே இடத்தில் - யுத்த காண்டத்தில், மூலபலவதைப் படலத்தில் - அரக்கர்கள் இராமன் ஏவிய அம்புகளால் மடிதலைப் பாடுவதற்குக் கம்பன் 17 செய்யுட்களை இவ்வகையில் பயன்படுத்துகிறான். விரைந்த செயலும், வீர உணர்ச்சியும் அவற்றால் வெளிப்படுத்தப்படுகின்றன.

" ஊன்நகுவ டிக்கணைகள் ஊழியனல்
ஒத்தன,உ லர்ந்த வுலவைக்
கானகம்நி கர்த்தனர்அ ரக்கர்;மலை
ஒத்தன,க ளித்தமதமா;
மானவன்வ யப்பகழி வீசுவலை
ஒத்தன,வ லிக்குளுனவாம்
மீனகுல மொத்தன,க டற்படை,இ
னத்தொடும் விளிந்திறுதயால்"

இது நேரசையில் தொடங்குவதால் அடிக்கு 21 எழுத்துக்கள் உள்ளன.

"எடுத்தவர்,இ ரைத்தவர்,எ றிந்தவர்,செ
றிந்தவர்,ம றங்கொ டெதிரே
தடுத்தவர்,ச லித்தவர்,ச ரிந்தவர்,பி
ரிந்தவர்,த ணிக்களிறுபோல்,
கடுத்தவர்,க லித்தவர்,க றுத்தவர்,செ
றுத்தவர்,க லந்துசரமேல்
தொடுத்தவர்,து ணிந்தவர்,தொ டர்ந்தனர்,கி
டந்தனர்,து ரந்தகணையால்'

இது நிரையசையில் தொடங்குவதால், அடிக்கு 22 எழுத்துக்கள் உள்ளன.

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை

"ஒருவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய்
கூவிளங்காய் தேமா புளிமா"

என்ற வாய்பாட்டு அடிகளைக்கொண்ட அறுசீர்க் கட்டளை ஆசிரிய விருத்தமாகவும் இடமுண்டு.

இவ்வகைக் கட்டளைக் கலித்துறையை முதலில் பாடியிருப்பவர் திருஞான சம்பந்தர் (பதி. 330:6). திருமங்கையாழ்வாரும் (பெரிய திருமொழி, 5-ஆம் பத்து, 10-ஆம் திருமொழி) இவ்வகையைப் பயன் படுத்தியுள்ளார்.

இதுவரை கூறியவற்றால், யாப்பிலக்கணங்கள் எதனைக் கட்டளைக் கலித்துறை என்று மரபாகக் கூறி வருகின்றனவோ, அதனைக் கம்பராமாயணம் கையாளவில்லை என்பதும், ஆனாலும் கம்பராமாயணத்தில் உள்ள 9 வகைக் கலித்துறைகளில் 7 வகைகள் எழுத்தெண்ணி அடி வகுத்துப்பாடப்படும் வேறு வகையான கட்டளைக் கலித்துறைகள் என்பதும், அவற்றுள் நான்கு வகைகளைச் சம்பந்தரும், ஒன்றினைச் சேக்கிழாரும் முதன் முதலாகக் கையாண்டுள்ளனர் என்பதும், இரண்டு வகைகள் கம்பனாலேயே முதல் முதலாக உருவாக்கிக் கையாளப்பட்டவை என்பதும் விளங்கும்.

தாகூர் கலைக் கல்லூரி,
பாண்டிச்சேரி.

மொழியியல் 4, 1 & 2 (1980)

மொழியும் நிலைபேறாக்கமும்

வ. ஞானசுந்தரம்

1.1. மக்கள் தொகை அதிகமாக இருக்கும்போது எந்த ஒரு மொழிபேசும் சமுதாயமும் சிறுசிறு குழுக்களாக இயங்குவதை நாம் காண்கிறோம். குழுக்கள் சாதி அடிப்படையிலோ மத அடிப்படையிலோ அல்லது அரசியல் மற்றும் நில அமைப்புக் காரணங்களால் குறிப்பிட்ட இட எல்லையைப் பொறுத்தோ அமையப் பெறலாம். காரணங்கள் எத்தகையதாக இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு மொழி பேசும் மக்கட் கூட்டம் குழுக்களாக இயங்கும்போது ஒவ்வொரு குழுவும் தங்களுக்கிடையே நிகழும் செய்திப் பரிமாற்றத்திற்காக (Communication) தனித்த ஒரு மொழிவகையைக் (variety) கொள்கின்றனர். குழுக்கள் தனித் தனியாகவும் இயங்கும்; சில சமயங்களில் ஒன்றோடொன்று எதிர்ப்பட்டு இணைந்தும் இயங்கும். ஒரு குழு மற்றொரு குழுவை எதிர்ப்படும்போது அதாவது ஒரு குழுவிலுள்ள சிலர் மற்றொரு குழுவிலுள்ள சில்ரை எதிர்ப்படும்போது (சந்திக்கும்போது) செய்திப் பரிமாற்றத்து வகையில் ஒரு மொழிவகை மற்றொரு மொழி வகையை எதிர்ப்படுகிறது. ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவரும் இன்னொரு குழுவைச் சேர்ந்த மற்றொருவரும் ஆளுக்

கொரு மொழி வகையைப் பேசுபவர்களாக இருந்தும், தாங்கள் பேசுவதை இருவரும் புரிந்து கொள்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அந்த இரண்டு பேச்சு வகைகளும் **ஒரே மொழியைச்** சேர்ந்திருக்கின்றன என்பதாலேயே. சில சமயங்களில் ஒரு குழுவினர் பேசும் பேச்சை இன்னொரு குழுவினர் சரியாக முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் குழப்பத்துடன் விளங்கிக் கொள்ளலாம்; குறிப்பிட்ட ஓரிரண்டு சொற்களின் பொருளை நேரடியாக விளங்கிக் கொள்ளாவிட்டாலும், வாக்கியம் முழுமையையும் எண்ணிப்பார்த்து அச்சொல்லின் பொருளையறிந்து வாக்கியத்தைப் புரிந்துகொள்ளலாம்.

ஒரு குழுவினர் பேசும் பேச்சை மற்றொரு குழுவினர் சிறிதும் ஐயமின்றி முழுமையாகப் புரிந்து கொள்வதற்குத் துணையாக இருந்தது எது என்று எண்ணிப்பார்த்தால், அது ஒரு மொழியின் பலவகைகளுக்கிடையேயும் அமைந்திருக்கும் பொதுமை நிலைதான் என்பது தெளிவாகும். மொழியில் பல வகைகள் அதாவது கிளைமொழிகள் பல இருந்தாலும் ஒவ்வொரு கிளைமொழியையும் அல்லது கிளைமொழி பேசுபவரையும் பொதுமைப்படுத்தும் போது என்ன சொல்கிறோம்? அது தமிழ்; அவர் தமிழ் பேசுகிறார் என்கிறோம். அதே சமயம் சிறப்புப் படுத்தும்போது அதாவது ஒரு வகையிலிருந்து இன்னொரு வகையைப் பிரித்து இனங்காணும் போது, ஒருவர் பேசும் தமிழ் மற்றொருவர் பேசும் தமிழிலிருந்து சிறப்பாக மாறும்போது நாம் அவர் திருநெல்வேலித் தமிழ் பேசுகிறார், இவர் சென்னைத் தமிழ் பேசுகிறார், அவர் பிராமணத் தமிழ் பேசுகிறார், இவர் செட்டிநாட்டுத் தமிழ் பேசுகிறார் என்கிறோம்.

ஒரு மொழியின் ஒரு வகைக்கும் அதே மொழியின் இன்னொரு வகைக்கும் இடையே ஒலியியன் நிலை (**Phonological level**) இலக்கணவியல் நிலை (**Grammatical level**), சொல்லியல்நிலை (**Lexical level**), பொருளியல் நிலை (**semantic level**) ஆகிய நிலைகளில் பொதுப் பண்புகளும் இருக்கும்; சிறப்புப் பண்புகளும் இருக்கும். பொதுப்பண்புகள் இருக்கும் நிலையை பொதுமை நிலை (**common Core**) எனலாம்; சிறப்புப் பண்புகள் இருக்கும் குணத்தைச் சிறப்புப் பண்பு நிலை (**Individual system**) எனலாம். பொதுப் பண்புகள் உள்ள இந்தப் பொதுமை நிலைதான் ஒவ்வொரு கிளைமொழியையும்

மற்றொரு கிளைமொழியோடு சம்பந்தப்படுத்துகிறது. அதுமாத்திர மல்ல, இதுபோல் எல்லாக் கிளைமொழிகளையும் ஒரு மொழியின் கிளைமொழிகள்தான் என்று புரிந்து கொள்வதற்கும் இந்தப்பொதுமை நிலைதான் உதவுகிறது. ஒரு குழுவினர் பேசுவதை மற்றொரு குழு வினர் புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கு அதாவது ஒருவர் பேசும் மொழியின் ஒரு வகையை, வேறு ஒருவகையைப் பேசும் மற்றொருவர் புரிந்து கொள்கிறாரே இந்த (**Mutual Intelligibility**) ஆற்றலுக்கு இந்தப் பொதுமைப் பண்பு (**commoncore**) மிக முக்கியம்.

1.2. ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவர் **A**, மற்றொரு குழுவைச் சேர்ந்த ஒருவரோடு **B**, உரையாடுகிறார் என்று கொள்வோம். இவர் களுக்கிடையே செய்திப் பரிமாற்றம் எப்படி நிகழ்கிறது என்பதை நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் இந்த நோக்கில் புரிந்துகொள்ள முயற்சிப்போம். ஒன்று: **A, B** இருவரும் நிகழ்த்தும் உரையாடல் பகுதியில் உள்ள (**a**) இலக்கண அமைப்பு (**b**) சொற்கள் (**c**) சொற் களின் பொருள் (**d**) சொற்களில் உள்ள ஒலியன்கள் (ஒலிப்பு) எல் லாமே **A, B** என்ற இருவர்க்குமிடையில் உள்ள பொதுமை நிலை என்ற பகுதியிலேயே இருந்தால் புரிந்துகொள்ளவில் சங்கடம் எதுவும் இருக்காது. நூற்றுக்கு நூறு வெற்றிகிட்டலாம். இரண்டு: **A, B** என்ற இருவரும் நிகழ்த்தும் உரையாடல் பகுதிகளில் நாம் குறிப்பிட்ட அந்த நான்கு நிலைகளில் ஏதாவது ஒன்றிரண்டு நிலைகளில் உள்ள சில சொற்களோ அல்லது இலக்கண அமைப்போ **AB** என்ற இரு வர்க்கும் பொதுவாக உள்ள பொதுமைநிலை என்ற பகுதியில் அமை யப் பெறாமல் **A**-க்கே உரிய பகுதியில் சிலவும் **B**-க்கே உரிய பகுதி யில் சிலவும் அமையப்பெற்றால் புரிந்து கொள்ளுதலில் இடர்ப்பாடு (தற்காலிகமாவது) தோன்றலாம். அப்படித் தோன்றும்போது, குறிப் பிட்ட ஒரு வாக்கியத்தில் உள்ள மற்றச் சொற்களின் மூலமாக அதாவது புரிந்து கொள்ளுதலில் இடர்ப்பாடு உண்டாக்கிய அச்சொல் (தெரியாத சொல் என்பது ஒருகாரணம்; சொல்லில் உள்ள புதிய ஒலி மற்றொரு காரணம்) வாக்கியத்தில் அமையப்பெற்ற விதத்தால் நேரிட்ட சந்தர்ப்பத்தால் (**Context**) பொருள் விளங்கப் பெறலாம். அல்லது குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தின் பொருள் விளங்காமலே கூடப் போகலாம். ஆனால் சில சமயங்களில் அவ்வாக்கியம் மற்ற வாக்கியங்களுக்கு மத்தியில் அமையப்பெற்ற விதத்தாலும், மற்றும்

உள்ள மொழியியலுக்குப் புறம்பாக உள்ள வேறு சில காரணங்களாலும் (Non linguistic reasons) (சைகை போன்றவை) அவ்வாக்கியத்தின் பொருளையும் விளங்கிக் கொள்ளலாம்.

பின் வரும் உரையாடலைக் கவனியுங்கள்.

உரையாடல் நிகழ்ச்சியில் உள்ள வாக்கியங்கள்	முறையே B யாலும் A யாலும் அவை புரிந்துகொள்ளப்படும் விதம்
A) எங்**கிட்டு** வந்தெ? டே! ஒன்னதான் கேக்கறேன் எங்**கிட்டு** வந்தெ?	எங்க வந்தெ? டே! ஒன்னதான் கேக்கறேன். எங்க வந்தெ? (B)
B) **இஞ்ச**தான்	இங்கதான் (A)
A) **ஆத்தா** ஒங்கூட **வாற**லியா	(?) ஒங்கூட வர்லியா (B)

முதல் கட்டத்தில் உள்ள கோடிடாத பகுதிகள் A,B என்ற இருவர்க்குமிடையே உள்ள பொதுமை நிலையில் உள்ளவை. கோடிட்டவைகள் சில A க்குரிய சிறப்பு நிலையில் உள்ளவை; சில B க்குரிய சிறப்பு நிலையில் உள்ளவை.

A கூறும் 'எங்கிட்டு Bக்கு முதலில் புதிரை உண்டாக்கினாலும் உடனேயே அதில் முதலில் உள்ள சுட்டான **எ**-என்பதைக் கொண்டும் தொடர்ந்து உள்ள **-ங்க்** அதாவது எ**ங்க்**- வரை உள்ள பொதுமையைக் கொண்டும் அச்சொல் உருவம் உணர்த்த விரும்புவது **'எங்கெ'** என்று புரிந்து கொள்கிறான். **இஞ்ச** என்று B சொல்லும்போது முதன் முதலில் அன்றைக்குத்தான் B இப்படிப்பட்ட சொல்லைக் கேட்க நேரிட்டிருந்தால் கூட, சொல்லில் உள்ள முதல் ஒலி வடிவ வடிவமான சுட்டு **இ** ஐக் கொண்டும் உரையாடல் இலக்கணம் (Discourse structure) கொடுத்த குறிப்பைக் கொண்டும் **'இஞ்ச'** என்பது **இங்க** என்பதைத்தான் உணர்த்துகிறது என்று ஊகித்துப் பொருள் புரிந்து கொள்கிறான். A கூறும் வாக்கியத்தில் உள்ள **வாறலியா** என்பதை B தனது பேச்சு வகையில் உள்ள **வர்லியா** என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்துகொள்கிறான் — தனது

வகையில் உள்ள அச்சொல்லும் A கூறும் இச்சொல்லும் நெருங்கிய வடிவ ஒற்றுமையோடு இருப்பதால். ஆனால் A கூறும் **ஆத்தா** என்பதை B சிறிதும் புரிந்துகொள்ளவில்லை; ஏனெனில்

i. இச்சொல்லை முதன்முறையாகக் கேட்கிறான்.

ii. உரையாடல் இலக்கணத்தால் ஊகிக்கும் முறையில் சரியான குறிப்பை இங்கே தரமுடியவில்லை.

iii. **ஆத்தா** என்பதற்கும் தன் பேச்சுவகையில் உள்ள **அம்மா** என்பதற்கும் வடிவ ஒற்றுமை அவ்வளவாக இல்லை. இக் காரணங்களால் A யாரைக் குறிப்பிடுகிறான் என்று B திகைக்கிறான். யார்? என்ற கேள்வி Bயின் மனத்தில் நிற்கிறது.



ஒரு கிளைமொழியும் இன்னொரு கிளைமொழியும் தத்தம்மளவில் கொண்டுள்ள புரிந்துகொள்ளும் ஆற்றலின் (Mutual Intelligibility) அளவு இந்தப் பொதுமை நிலையைப் பொறுத்துள்ளது (HocKett: 1958: 331-338).

கிளைமொழிகளுக்கிடையே உள்ள பொதுமையின் அளவு குறையக் குறைய அவைகளுக்கிடையே உள்ள புரிந்துகொள்ளும் ஆற்றலின் அளவும் குறையத்தான் செய்யும். எடுத்துக் காட்டிற்கு சென்னைக் கிளைமொழியையும், நாகர்கோயில் கிளைமொழியையும் கொண்டால் இரண்டிற்குமிடையே உள்ள புரிந்து கொள்ளும் ஆற்றலின் அளவு குறைந்து காணப்படலாம்.

எனவே ஒரு குழுவினர் மற்றொரு குழுவினரை எதிர்ப்படும் போது செய்திப் பரிமாற்றத்து வகையில் ஒரு குழுவினரது பேச்சை மற்றொரு குழுவினர் புரிந்து கொள்வதில் இடர்ப்பாடு உண்டாகிறது என்பது தெளிவாகிறது. எந்த ஒரு கிளைமொழியுமே அதே கிளைமொழியின் மற்றொரு கிளைமொழிபேசும் கூட்டத்தினர்க்கு ஒரு கருத்தைத் தெரிவிக்கும் போது புரிந்துகொள்ளும் ஆற்றலில் தடங்கல் எதுவும் நேராது அக்கருத்தை வெளியிடமுடியாது என்பதை இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். மொழி என்றால் மொழி வகைகள் (கிளைமொழிகள்) இருப்பதும், மொழிவகைகள் இருந்தால் பின் இந்தப் புரிந்துகொள்ளுதலில் இடர்ப்பாடு உண்டாவதும் தவிர்க்க முடியாத மொழியியல் நியதி என்றாகிறது. இந்நியதி மக்கட்தொகை அதிகமுள்ள உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவானது.

2.1. தினம் நிகழும் செய்திப் பரிமாற்றம் ஒரு புறமிருக்க மக்களது வாழ்வின் வளர்ச்சிப் பரிமாணத்தில் கல்வி, மேடைப்பேச்சு, இலக்கிய ஆற்றல் வெளியீடு (சிறுகதை, நாவல், நாடகம், கவிதை போன்றவை) போன்ற துறைகள் **(domains)** தோன்றத் தோன்ற ஒருவர் தம் எண்ணத்தைக் கல்வி கற்பிப்பதன் மூலமோ, சிறுகதை எழுதுவதன் மூலமோ, மேடைப்பேச்சு நிகழ்த்துவதன் மூலமோ எதுவானாலும் சரி, குறிப்பிட்ட அம்மொழி பேசும் எல்லார்க்கும் அதாவது எல்லாக் குழுவினர்க்கும் மொழி என்ற வெளியீட்டுச் சாதனம் மூலம் புரியவைக்கும் தேவை நாளுக்கு நாள் பெருகுகிறது. வாழ்க்கையில் எதிர்ப்படும் இதுபோன்ற மொழி சம்பந்தப்பட்ட அன்றாட அலுவல்களுக்கு எந்த (ஒரே) ஒரு கிளைமொழியையும் பயன்படுத்த முடிவதில்லை. (புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு என்ற பகுதி கிளைமொழி வகைகளுக்கிடையே உள்ள தவிர்க்கமுடியாத மொழியியல் நியதி என்பதை நினைவில் கொள்ளுங்கள்) ஒரு மொழி வகையை ஒரு

குழுவினர் மாத்திரமே **முழுதும்** புரிந்துகொள்கின்றனர்[1] என்பதால் கல்வி, இலக்கிய வெளியீடு... என்ற இதுபோன்ற ஒவ்வொரு துறைக்கும் எல்லா மொழி வகைகளையும் மாற்றி மாற்றிப் பயன் படுத்திக்கொண்டிருக்க முடியாது. கொள்கையளவில் இது முடியக் கூடிய செயல்தான் என்றாலும் நடைமுறையில் நிகழ்வது பின்வரும் முறையில் இருக்கும்: வானொலியில் உள்ள ஒரே உள்ளடக்கம் உள்ள செய்தி ஒலிபரப்பு மாத்திரம் ஒரு மொழியில் உள்ள கிளை மொழி வகைகளுக்குத் தகுந்தாற் போலப் பத்துப் பதினைந்து கிளை மொழி வகைகளில் ஒலிபரப்ப வேண்டிவரும்! கல்வி கற்பிப்பதற்காக ஒரே உள்ளடக்கம் உள்ள புத்தகங்கள் ஒரு மொழிக்கு அதன் பதினைந்து கிளைமொழிகளிலும், அதாவது ஒரே மொழியில் 15 கிளை மொழிகள் இருப்பதால் 15 புத்தகங்கள் எழுத வேண்டிவரும். இதனால் முக்கியமாகக் காலமும் பணமும் விரயமாகும். இதனாலேயே ஒரு மொழி பேசப்படும் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையிலும் உள்ள எல்லாக் கிளைமொழி வகையினரும் புரிந்து கொள்ளும் விதத்தில் ஒரு பொதுமொழி தேவைப்படுகிறது.

2.2. ஒரு மொழியென்றால் அதில் நிறையப் பேச்சு வகைகள் இருக்கும் என்று கண்டோம். அப்பேச்சு வகைகள் குறிப்பிட்ட நிலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அதாவது குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதிக்கு மாத்திரம் உரிய மொழி அமைப்புக்கள் குறிப்பிடும் வண்ணம் இருந்தால் அதை வட்டாரக் கிளைமொழி என்றும், குறிப் பிட்ட சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அதாவது குறிப் பிட்ட ஒரு சாதியினர் மாத்திரம் பயன்படுத்தும் மொழியமைப்புகள் குறிப்பிடும் வண்ணம் இருந்தால் அதைச் சாதிக் கிளைமொழி என் றும் சொல்கிறோம். குறிப்பிட்ட ஒரு நிலப் பகுதியினர் மாத்திரம் அல்லது சாதியினர் மாத்திரம் பயன்படுத்தும் மொழி அமைப்புகள் மொழிப் பொதுமைப் (Common core) பகுதியில் இடம் பெறாததால் வட்டார வழக்குகளோ சாதிவழக்குகளோ பேச்சில் இடம்பெறும் போது மற்ற வட்டாரத்தினரும், சாதியினரும் அவற்றைப் புரிந்து கொள்வதில் இடர்ப்படுகின்றனர். அதுமாத்திரமல்ல; அவை தங்கள் பேச்சுப்போல இல்லாதபோது 'கொச்சை வழக்கு' என்றும் கூறிவிடுகின்றனர். இதனால் சில சமயங்களில் பாமரர் கள் தங்கள் 'கொச்சை வழக்குகளை' விட்டுவிட்டு எல்லோரும்

புரித்து கொள்ளும் வண்ணம் பொதுப் பேச்சுபோல மாற்றிப்பேச முயற்சிக்கிறார்கள். இப்படி ஒரு பக்கம் நடைபெறலாம். இன்னொரு பக்கம். அறிஞர்கள் தங்கள் தாய்மொழிக்காக சில வரையறைகளை (மொழிக்கு வேலி அவசியம் என்ற கோட்பாடும் இதன்பாற்பட்டதுதான்) உண்டாக்க முயற்சிக்கிறார்கள். உண்டாக்குவது மாத்திரமல்ல அவ்வரையறைகளின்படி எழுதவேண்டும், பேசவேண்டும் என்றும் பிரச்சாரம் செய்கிறார்கள். இவர்கள் இப்படி வரையறைகளை உண்டாக்குவதற்கு அடிப்படையாகச் சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட வட்டாரக் கிளைமொழியோ அல்லது சாதிக் கிளைமொழியோ மாதிரியாகக் (model) கூட அமையலாம்.

2.2.1, பேச்சு மொழியாகவே இருந்த ஒரு மொழியை அதாவது எண்ணிறந்த (கிளை) மொழி வகைகளைக் கொண்ட ஒரு மொழியை எழுத்து மொழியாக (written language) மாற்றம் செய்யும்போது அம்மொழிக்கு எழுத்து வடிவம் கொடுக்கும்போது நிகழ்வது என்ன என்பதைப் பின்வரும் முறையில் விளக்க முயற்சிக்கலாம்.

தமிழில் **காட்டில்** என்ற கருத்தை (idea) விளக்குவதற்கு ஒவ்வொரு கிளைமொழியிலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். (இது முற்றிலும் உண்மையல்ல என்றாலும்) அதன்படி பின்வரும் வடிவங்கள் கிடைப்பதாகக் கொள்வோம். **காட்லெ, காட்லே, காட்டுலெ, காட்டுலே, காட்டில்** எழுத்து மொழியாக மாற்றம் செய்ய முயன்றபோது அறிஞர்கள் ஏதோ சில காரணங்களுக்காக (அவை மொழியியலுக்கு அப்பாற்பட்ட காரணமாகக்கூட இருக்கலாம்) **காட்டில்** என்ற வடிவத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு எழுத்து வடிவம் கொடுத்துவிட்டார்கள் என்று கொள்வோம். இதன் பொருள் (விளைவுகள்) என்ன?

a) ஒரு மொழியில் வழங்குகின்ற ஒரு சொல்லுக்கு உரிய பல வடிவங்களில், உதாரணத்தில் கொடுத்துள்ள ஆறு வடிவங்களில் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு எழுத்துவடிவம் பெறுகிறது என்றால் மற்ற ஐந்தும் பின்னுக்குத் தள்ளப்பட இந்த ஒன்று உயர்நிலை மதிப்பு (super imposed) பெறுகிறது.

b) அன்றாட வாழ்வில் நாம் ஆற்றவேண்டிய பல காரியங்களான கல்வி கற்பித்தல், எழுதுதல், உரையாடுதல், மேடைப்பேச்சு நிகழ்த்துதல் போன்றவைகளில் வெவ்வேறு கிளைமொழி பேசும் பல குழுவினரும் சம்பந்தப்படுவர் என்ற காரணத்தால் இந்தச் சொல் வடிவத்தையே பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிப்பது — அதாவது பல குழுவினரும் பொதுமொழியாக அங்கீகரிக்கப்பட்ட இது போன்ற சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கிறோமே அது மொழியை வரையறை செய்யும் பாங்கு (**prescriptive or normative)** ஆகும்,

c) அறிஞர்களின் முயற்சியால் ஒரு பொதுமொழி உருவாகிறது. மக்கள் பின்பற்றத் தொடங்கும் போது அது அவர்களிடையே நிலைத்துவிடுகிறது. அப்படி நிலைத்துவிடும் முறையில் நிலைபேறாக்கக் கூறுக்ளைப் (**Standardization phenomena**) அவ்வகை பெற்றுவிடுகிறது. இனி இந்த வகையை நிலைமொழி (**Standard Language)** என்போம்.

d) ஆனால் எழுத்து வடிவம் பெற்ற நிலைமொழியாதலால் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டவர்களால்தான் (பெரும்பாலும்) ஆள (**control**) முடிகிறது.

e) கல்வி, கலைகள் முதலான மனிதனின் சிந்தனை மேம்பாட்டு நிகழ்வுகள் எல்லாம் இந்த வகையில் தேக்கிவைக்கப்படுகின்றன.

f) எழுதப்படிக்கத் தெரிந்தவனுக்குக் கல்வியைப் பெறுவது எளிதாக இருப்பதால், எழுதப்படிக்கத் தெரிந்தவன் கல்வி கற்றவனாக மதிக்கப்படுகிறான். அப்படி அவன் மதிப்புப் பெறுவதற்கு ஒரு காரணமாக இருந்த இந்த மொழிவகை ஒரு உயர் மதிப்புப் (**prestige)** பெறுகிறது.

g) முன்னதன் மறுதலையாக (**corollory**) ஏனைய மொழி வகைகள் உயர்மதிப்புப் பெறுவதில்லை. அதனோடு ஒப்பிடும்போது அவைகள் கீழ்நிலையில் (**Low**) வைத்து எண்ணப்படுகின்றன.

இதனாலேயே “வடக்கத்தியான் இவன்; ‘என்னபா’ன்னு (சென்னைத் தமிழ்) மரியாதை இல்லாமல் பேசுகிறான்” என்றும்

"இவன் கொங்கு நாட்டுக்காரன்; ராகம் போட்டுப் பேசுகிறான்" என்றும் "அவன் நாஞ்சில் நாட்டுக்காரன்; மலையாளம் கலந்து பேசுகிறான்" என்றும் இப்படிக் கூறுபவர்கள் அவ்வக் கிளைமொழிச் சொற்களின் பொருளைப் புரிந்துகொண்டிருந்தால்கூட அவை தங்கள் 'பேச்சு'ப்போல இல்லாததால் எழுந்த வேற்றுமை உணர்ச்சியால் அவ்வழக்குகளையே வெறுப்போடு சாடுகின்றனர். நாளடைவில் இத்தகைய சொற்கள் பிற குழுவினரால் ஏற்றப்பட்ட வெறுப்பைத் தாங்கிய சொற்களாகக் காட்சியளிக்கின்றன. பின் நாளடைவில் தங்கள் கிளைமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது ஏளனத்துக் குரியது என்ற எண்ணத்தையும் பெறுகிறார்கள். நிலைமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதுதான் மதிப்புள்ள செயல் என்று நம்ப ஆரம்பிக்கிறார்கள். நாள் முழுவதும் தங்கள் வட்டார சாதி வழக்குக் கலந்த பேச்சையே பேசினாலும் கொள்கையளவில் அதை வெறுக்கத் தலைப்படுகிறார்கள். பல சமயங்களில் பேசமுடியாதபோதும் நிலைமொழியை விரும்பத் தலைப்படுகிறார்கள். இது ஒருவகையான மனப்போக்கு **(mental attitude)**.

h) இந்நிலைமொழி **(standard Language)** எழுத்து வடிவம் பெற்றுவிடுவதால் மற்ற வகைகளோடு பேச்சுமொழி வகைகளோடு ஒப்பிட்டுக் காணும்போது மொழியில் நிகழும் மாற்றங்கள் **(linguistic changes)** இந்த நிலைமொழி வகையை அதிகம் தாக்குவதில்லை. அதனாலேயே எந்த ஒரு மொழியிலுமே நிகழும் மாற்றங்கள் பேச்சு மொழியில்தான் முதலில் இடம் பெறுகின்றன. எழுத்து மொழிகளில் ஒன்று, இடம் பெறுவதேயில்லை; அல்லது காலந்தாழ்த்து இடம் பெறுகின்றன. அதுவும் பேச்சு மொழியின் பாதிப்பால். இந்த மொழிப் போக்கு, தமிழுள்ளிட்ட சில மொழிகளில் காணப்படும் இரு நிலைக்கு **(Diglossia)** ஒரு காரணமாக அமைந்து விடுகிறது எனலாம்.

எனவே எந்த ஒரு பேச்சு மொழியுமே முதன் முதலில் எழுத்து மொழி என்ற வடிவத்தைப் பெறும்போது நிலைபேறாக்கக் கோட்பாடு **(Standardization phenomena)** பெருமளவில் செயல்படுகிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும். உலகில் எழுத்து வடிவில் உள்ள வாழும் மொழிகள் பலவற்றை இந்த நோக்கில் நிலைமொழி **(Standard Language)** என்று குறிப்பிடுவோமா.?

2.3. இனிக் குறிப்பிட்ட ஒருமொழி பேசும் எல்லாக் கிளை மொழிக் குழுவினர்க்குமே இந்த நிலைமொழி பொதுமொழியாக இருக்கிறதா என்று ஒரு கேள்வியைக் கேட்போம். பதில்: ஆம், பொது மொழியாகத்தான் இருக்கிறது. ஆனால் உலகில் உள்ள இது போன்ற நிலை மொழிகளைக் (அது ஆங்கிலமாகட்டும், ஜப்பானிய மொழியாகட்டும் அல்லது கன்னடமாகட்டும்) கைக்கொள்ளும் **(control)** முறையில் வேறுபாடுகள் காணப்படலாம். இது எழுத்து வடிவில் இருப்பதால் நூற்றுக்குநூறு இதை ஒருவர் தனதாக்கிக் கொள்வது பள்ளிக்கல்வி **(formal education)** கற்பதன் மூலமே நிறைவேறுகிறது. ஆனாலும் இது குறிப்பிட்ட நிலப்பகுதிப் பேச்சு வகையைச் சார்ந்திருந்தால், பெருமளவிற்கு அப்பேச்சு வகையில் பழக்கமேற்படுவதன் மூலம் உரையாடல் அளவிலேனும் தனதாக்கிக் கொள்ளலாம். (பெர்னாட்ஷாவின் 'பிக்மாலியன்' நாடகப் பாத்திரமான எலிஸா டுலிட்டில் ஆங்கில நிலைமொழியை **(Standard English)**க் கற்றுக்கொள்ளும் முறையை இங்கே நினைவு கூரலாம்.) ஆனால் எழுத்து வடிவம் பெற்றபின் காலப்போக்கில் நிகழ்ந்த மொழிமாற்றங்களால், எழுத்து வடிவம் பெற்ற நிலைமொழிக்கும் பேச்சு வகையாக உள்ள அதன் பல்வேறு கிளைமொழிகளுக்கு மிடையே, இடைவெளி அதிகமாகி விட்டிருந்தால் பின் கண்டிப்பாக அம்மொழி வகையைப் பள்ளிக் கல்வி மூலமே கற்றுக் கொள்ள முடியும். பள்ளிக் கல்வி பெறாதவர்கள் பெரும்பாலும் இத்தகைய நிலைமொழியை வரப்பெற்றவர்களாக இருப்பதில்லை. இங்கே தமிழ்ச் சூழலை மனதிலே கொள்ளலாம்.[3]

3. பல மொழிவகைகளில் ஒருவகை நிலைபேறாக்கத்தின் மூலமாக நிலைமொழி என்ற கவுரவத்தைப் பெறுகிறது என்று பார்த்தோம். நிலைபேறாக்கத்திற்கென்று சில விசேடப் பண்புகளைப் பின்வருமாறு வரையறுக்கலாம். **(Garvin : 1964)**

3.1.1. இலக்கண அமைப்புக் கூறுகள், சொற்களஞ்சியம் இரண்டுமே எதிர்காலத்தில் ஏற்படும் எந்த ஒரு புதிய சூழலுக்குத் தகுந்தாற்போலவும் வளைந்துகொடுத்து அவற்றை நிலைமொழி இலக்கண அமைப்பில் ஏற்றுக்கொள்ளும் சக்தியைப் **(Flexible stability)** பெறும் வண்ணம் நிலைபேறாக்கம் திகழவேண்டும்.

3.1.2. அறிவு மேம்பாட்டின் வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல தேவைப்படும்போதெல்லாம் அத்துறை அறிவை சொற்களால், சொற்றொடர்களால், விளக்கும் வகையில் திறனும், புதிய துறைகள் தோன்றின் அப்புதிய துறைகளின் அறிவையும் விளக்கும் அளவிற்கு நிலைமொழி வகை திறன் பெற்றதாயும் (Intellectualization) அமையும் வகையில் நிலைபேறாக்கம் நடைபெறவேண்டும்.

3.2. நிலைமொழி ஆற்றும் பணிகள் (Functions) பின்வருமாறு:

3.2.1. ஒருங்கிணைத்தல் (Unifying function): கிளைமொழிகள் பலவற்றைப் பேசும் பல குழுவினரையும் அவர் எல்லாம் ஒரே மொழி பேசும் கூட்டத்தினர்தான் என்று ஒருங்கிணைக்கும் வகையில் அந்நிலைமொழி விளங்கும்.

3.2.2. வேறு பிரித்தல் (Seperatist function): ஒரு மொழி பேசும் கூட்டத்தினரை, அடுத்துள்ள இன்னொரு மொழி பேசும் கூட்டத்தினரிடமிருந்து பிரித்துக் காட்டும் வகையில் நிலைமொழி இருக்கும்.

3. 2. 3. மதிப்பு (Prestige function): நிலைமொழி ஒன்றினைப் பெற்றிருப்பதாலேயே ஏற்படும் உயர் மதிப்பைத் தாங்கியிருப்பதும் நிலைமொழியின் செயல் திறன்களில் ஒன்று.

3. 2. 4. உரைகல்லாக (Frame of reference function). ஒருவர் இலக்கண சுத்தமாகப் பேசுகிறார் எழுதுகிறார் என்று சொல்வதற்கும், அவர் பேசுவது எழுதுவது இலக்கண சுத்தமல்ல என்று கூறுவதற்கும் உரைகல்லாக, மாதிரியாக (point of reference) நிலைமொழி விளங்குகிறது. எடுத்துக் காட்டிற்கு நிலைமொழித் தமிழில் (அதாவது எழுத்து நிலைத் தமிழில்) ஒருவர் எழுதும்போது அவர் சரியான தமிழில் எழுதுகிறார் என்று சொல்வதும் கிளைமொழிக் கூறுகள் உள்ள பேச்சுத் தமிழ்ச் சொற்கள் கலந்து எழுதும்போது அவர் எழுதுவது இலக்கண சுத்தமல்ல என்று கூறுவதும் இந்த வகையைச் சேர்ந்ததே. மேலும் செய்யுள் உரை நடை போன்றவை எழுதப்படுவதும் இந்த நிலைமொழி வகையிலேயே என்பதை மனதிற் கொள்ளலாம்.

3.3 உலக மொழிகளில் நிலைபேறாக்கம் (standardization) பொதுவாக இரண்டு வழிகளில் நடைபெறுவதைக் காணலாம். அவை:

1. இயற்கை வழியிலேயே நடந்து முடியும் நிலைபேறாக்கம்
2. சிலவரையறைகள், கட்டுத்திட்டங்கள் மூலமாக உண்டாகும் நிலைபேறாக்கம்

3.3.1. இயற்கை வழியிலேயே நடந்துமுடியும் நிலைபேறாக்கம்: இயற்கை வழியிலேயே நடந்து முடியும் நிலைபேறாக்கம் இரண்டு விதங்களில் அமைகின்றது. 1) குறிப்பிட்ட ஒரு நிலப் பகுதியைச் சார்ந்து அமைவது. 2) குறிப்பிட்ட ஒரு தனிமனிதரின் தனிமொழி (idioloct) யைச் சார்ந்து அமைவது.

மக்கட்தொகை அதிகமுள்ள மொழிகளில் கிளைமொழிகள் இயல்பாகவே அமைந்திருக்கும் என்பதை முன்பே நாம் கண்டோம். சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரு நிலப் பகுதியைச் சார்ந்த ஏதாவது ஒரு (கிளை) மொழி வகை பிற கிளைமொழி வகைகளைவிட அரசியல் அல்லது சமுதாய அல்லது பொருளாதாரக் காரணங்களால் மேம்பட்டு நிலைமொழி என்ற மதிப்பைப் பெற்றுவிடுகிறது. இலண்டன் நகரத்துப் படித்த மக்களது பேச்சை அடிப்படையாகக் கொண்டுதான் ஆங்கிலத்துக்கு அதன் நிலைமொழி (Standard language) அமைந்துள்ளது. இதுபோலவே பாரிஸ் நகர மக்களது பேச்சை அடிப்படையாகக் கொண்டு பிரஞ்சு நிலைமொழியும் பூனா நகர படித்த மத்திய தர மக்களது பேச்சை அடிப்படையாகக் கொண்டு மராத்தி நிலைமொழியும் (Rajashri : 1980) கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த மத்திய மற்றும் உயர்தரமட்ட ஆந்திர மக்களது பேச்சை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு நிலைமொழியும் (Krishnamurthy : 1976) மைசூர் நகரப் பிராமணர்களது பேச்சை அடிப்படையாகக்கொண்டு கன்னட நிலைமொழியும் அமைந்துள்ளன.

குறிப்பிட்ட ஒரு நிலைப்பகுதியைச் சார்ந்து நிலைமொழி அமைவது போலவே சில சமயங்களில் தனி மனிதர்களின் தனி மொழியைச் சார்ந்தும் நிலைமொழிகள் அமைவது உண்டு. தாந்தேயின் தனிமொழியைச் சார்ந்து இத்தாலிய நிலைமொழி அமைந்

துள்ளது. லூதரின் தனிமொழியைச் சார்ந்து ஜெர்மானிய நிலை மொழி அமைந்துள்ளது.

இயற்கை வழியிலே நடந்து முடியும் நிலைபேறாக்கம் குறிப்பிட்ட ஒரு மொழி வரலாற்றிலே ஏற்படும் விபத்தைப்போலவே நடந்து முடிகிறது. இப்படி இயற்கையாகவே நிகழ்ந்தேறுவதற்குக் காரண மாக இருக்கும் சக்திகள் பின்னிப் பிணைந்த இலக்கண சக்தி களாகும். பல்வேறு பேச்சுவகைகளுக்கிடையே ஒரு பேச்சு வகை மேம்பட்டு நிலைமொழி வழக்கு என்ற கவுரவத்தைப் பெறுகிறது. அந்த ஒன்று எது என்று நாம் கண்டுபிடிக்க முடியாது. அதைத் திட்டமிட்டு வேகமாக நாம் நிலைபேறாக்கம் செய்யவும் முடியாது. ஏனெனில் பல வழக்குகளில் ஒன்று நிலைமொழி வழக்காக அமையப் பெறுவது பல சமயங்களில் மொழியியல் காரணங்களுக்கு அப்பாற் பட்டதாக **(Non linguistic consideration)** அமைந்துவிடுகிறது.

3.3.2. திட்டமிட்ட நிலைபேறாக்கம் : இயற்கை வழியில் - வரலாற்று ரீதியில் குறிப்பிட்ட எந்த ஒரு வழக்கும் (வட்டார அல்லது சாதிக் கிளைமொழி வகை) நிலைமொழி என்ற மதிப்பைப் பெறாம லேயே இருக்கக் கூடிய நிலையும் சில மொழிகளில் தோன்றுவது உண்டு. இதுபோன்ற நிலையில் கொள்கையளவில் எந்த ஒரு கிளை மொழி அல்லது தனி மொழியை நிலைபேறாக்கம் செய்து நிலைமொழி யாக மாற்றலாம்? நிலைபேறாக்கம் என்பது புதுவழக்கு எதையும் படைப்பதல்ல; மொழிமாற்றம் செய்வதல்ல; கடன் வாங்குவதும் **(Borrowing)** அல்ல என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இருக் கின்ற வழக்குகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதனைப் போற்றிப் பரந்துபட்ட வழக்காக மாற்ற முயற்சிப்பதே திட்டமிட்ட நிலைபேறாக் கமாகும். **(Ghatage; 1967)** எடுத்துக் காட்டாக ஆங்கில மொழியில் முன்பு படர்க்கை ஒருமையை **(Third person singular)** உணர்த்தும் வினைச்சொல் உருவங்களாக **(a) (He) see-th** என்ற வடிவமும் **(b) (He) see-s** என்ற வடிவமும் மக்களது வழக்கில் இருந்தன. இரண்டாவதாக உள்ள **see-s** என்ற வடிவம் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பளித்துப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் **see-th** என்ற வடிவமே மக்கள் வழக்கிலிருந்து மறைந்துவிட்டது.

நிலைபேறாக்கம் செய்ததன் விளைவால்தான் ஆங்கில மொழியில் **see-s** என்ற வடிவம் ஆட்சிக்கு வந்ததும் **see-th** என்ற வடிவம் மறைந்து போனதும் எனலாம்.

இருக்கின்ற பல வழக்குகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுப்பது திட்டமிட்ட நிலைபேறாக்கத்தின் கூறுகளில் ஒன்று என்று கண்டோம். பல வழக்குகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுப்பது பின்வரும் முறைகளில் அமையலாம்.

3.3.2.1. ஒரு சொல்லே வெவ்வேறு கிளைமொழிகளில் வெவ்வேறு வடிவங்களைப் பெற்றிருந்தால் (ஒரு கிளைமொழியும் இன்னொரு கிளைமொழியும் ஒலியியன் நிலையில் வேறுபடுவது கூட ஒரு காரணமாக இருக்கலாம்) அந்த வெவ்வேறு வடிவங்களுக்கிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டி வரலாம்.

எடுத்துக் காட்டிற்குத் தமிழ்க் கிளைமொழிகளில் ஒரு பகுதியில் **பயம்** என்ற வழக்கும், இன்னொரு பகுயிதில் **பளம்** என்ற வழக்கும் பிறிதொரு பகுதியில் **பழம்** என்ற வழக்கும் (மூன்றுமே பழத்தைக் குறிக்கின்றன) இருந்தால் நிலைபேறாக்கத்திற்கு இந்த மூன்றில் ஏதாவது ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகிறோம் அல்லவா. இதுஒரு வகை.

3.3.2.2. இனி, சில சமயங்களில் ஒரே சொல் (பல மொழிகளிலும் இருக்கலாம் அல்லது ஒரே கிளைமொழியில்கூட இருக்கலாம்) மிகக் குறைந்த வடிவ வேற்றுமையோடு பல வடிவங்களில் வழங்கப் பெறலாம். எடுத்துக்காட்டிற்குத் தமிழில் (பேச்சு வகையில்) **தோட்டத்லெ, தோட்டத்துலெ, தோட்டத்துலே, தோட்டத்துல, தோட்டத்தில்** என்று இப்படிப் பல வடிவங்கள் உள்ளன என்று கொள்வோம். நிலைபேறாக்கம் செய்ய முனைபவர்கள் இவற்றில் ஏதாவது ஒரு வடிவத்தைத் தேர்ந்தெடுப்பவர்கள், இல்லையா? மேலே குறிப்பிட்ட இரண்டு நிலைகளிலுமே தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவம் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. பேச்சு நிலையிலிருந்து எழுத்து நிலைக்கு மாற்றப்பட்ட நிலைபேறாக்க வகையில் மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் அமையப்பெற்றால் இதை நாம் முதன்முதலில் எழுத்துமொழியாக மாற்றும்போது செய்யப்பட்ட

'ஸ்பெல்லிங்' நிலைபேறாக்கம் (Standardization of spelling) எனலாம். அதாவது **பழம்** என்ற வடிவமும், **தோட்டத்தில்** என்ற வடிவமும் தேர்ந்தெடுக்கப்பட்டால் மக்கள் எப்போதும் **ப, ழ, ம்,** என்ற ஒலி அல்லது ஒலிச்சேர்க்கை : (syllable) க்குரிய எழுத்துக்களையும், **தோ, ட், ட, த், தி, ல்,** என்ற ஒலி அல்லது ஒலிச்சேர்க்கை : (syllable) க்குரிய எழுத்துக்களையும் எழுத்து வடிவத்தில் எழுதவேண்டும். மொழி நிலை பேறாக்கத்திற்கு உட்பட்ட பின்னர் நிலைமொழியில் உள்ள 'ஸ்பெல்லிங்'கைத் தவிர வேறு 'ஸ்பெல்லிங்'கைப் பயன்படுத்த நிலைமொழியில் உள்ள கட்டுத் திட்டம் அல்லது வரையறை சம்மதிப்பதில்லை. அல்லது ஒரு சமயம் 'தோட்டத்தில்' என்றும் மறுசமயம் 'தோட்டத்லெ' என்றும் ஒரு சமயம் 'பழம்' என்றும் மறுசமயம் 'பளம்' என்றும் எழுதவும் நிலைபேறாக்கம் சம்மதிப்பதில்லை. ஏனெனில் ஒரு முறை **பழம்** என்ற சொல் வடிவம் நிலைமொழி வழக்காக மாறிவிட்டால் ஒவ்வொரு முறையும் அச்சொல் வடிவத்தையே பயன்படுத்தவேண்டும் (தமிழில் எழுதவேண்டும்) என்பது நிலைமொழியின் நியதி.

3.3.2.3. அடுத்து ஒரு இலக்கணக்கூறு பல கிளைமொழிகளில் பல இலக்கண வடிவங்களில் இருக்கலாம். அவற்றில் ஒன்றுமாத்திரம் நிலைமொழி வழக்காக அங்கீகரிக்கப்படலாம். அப்படிப்பட்ட நிலையில் குறிப்பிட்ட ஒரு கிளைமொழியைப் பேசுபவன் தனது மொழி வகையில் **எனக்கு மகன்** (என்னுடைய மகன் என்ற பொருளில்) என்ற தொடர் இருந்தபோதும்கூட **என்னுடைய மகன்** என்ற தொடர் மாத்திரம் நிலைமொழியாக அங்கீகரிக்கப்பட்டால், 'எனக்கு மகன்' என்ற தொடரைக் கொண்டிருப்பவன்கூட, 'என்னுடைய மகன்' என்ற தொடரையே நிலைமொழியாகப் பயன்படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறான் – ஏனெனில் 'எனக்கு மகன்', 'என்னுடைய மகன்' என்ற இரண்டு தொடரில் 'என்னுடைய மகன்' என்ற தொடரே நிலைமொழியாக அங்கீகரிக்கப்படுவதால்; இல்லையா?

இப்படி நிலைபேறாக்கம் செய்யும்போது இரண்டு விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டி வருகின்றது. அவை (a) தேர்ந்தெடுக்கும் வழக்கு எல்லார்க்கும் உடன்பாடாய் இருத்தல்வேண்டும், (b) பேச்சுவழக்கின் பல வடிவங்களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்படும் அந்த ஒன்று வேகமாகப் பரவும்படி வழிசெய்யவேண்டும். தேர்ந்

தெடுக்கப்பட்ட அந்த ஒன்றினைப் பயன்படுத்துவோர் ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம். அல்லது ஏற்றுக்கொள்ளாது விடவும் செய்யலாம்.[5]

திட்டமிட்ட நிலைபேறாக்கம்,[6] எதிர்ப்படுகின்ற சூழலுக்குத் தகுந்தாற்போல் மக்கள் வழக்கில் உள்ள ஒரே மொழியின் பல வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஒன்றை நிலைபேறாக்கம் செய்து நிலைமொழியாக அங்கீகாரம் பெறச் செய்யும் என்பதை நாம் பார்த்தோம். ஏறக் குறைய இருபது மொழிகள் தாய்மொழிகளாகப் பேசப்படும் நாகாலாந்தில் கல்வியின் தேவைக்காக 'நாகாமிஸ்' எனப்படும் ஒரு 'பிட்ஜினே' (pidgin) (Sridhar : 1974) நிலைபேறாக்கம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.[7]

4. தமிழ்மொழி இருநிலை (Diglossia) உள்ள மொழி (Ferguson: 1959; Pillai : 1960; Gnanasundaram : 1975; Desilva : 1976; சண்முகம், செ. வை. 1978; Ramaswamy 1979) என்பது பலரும் அறிந்த ஒன்றுதான். பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்குமிடையே சில வேறுபாடுகள், குறைந்த அளவிலாவது எந்த மொழியிலும் இருக்கத்தான் செய்யும். ஆனால் தமிழ் மொழியில் இந்த வேறுபாடுகள் பின்வரும் முறையில் அமைந்துள்ளன.[8] (Ramaswamy : 1979)

4.1.1. ஒரு சொல்லின் வடிவம் (spelling) பேச்சு மொழியில் ஒரு மாதிரியாகவும் எழுத்து மொழியில் வேறுமாதிரியாகவும் உள்ளது. எடுத்துக் காட்டுகள் வருமாறு:—

பேச்சுமொழி	எழுத்துமொழி
a) பாவக்கா	பாகற்காய்
b) வர்ரேன்	வருகிறேன்
c) போகாட்டா	போகாவிட்டால்

4.1.2. எழுத்து மொழிக்கென்றே வழங்கும் பல சொற்கள் பேச்சுமொழியில் வழங்குவதில்லை. சில எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடலாம்.

a) அன்னை
b) ஆரவாரம்
c) அளி
d) தர்மம்
e) இயலும்
f) இல்லம்
g) கட
h) கற்பி

4.1.3. பேச்சு மொழிக்கென்றே வழங்கும் பல சொற்கள் எழுத்து மொழியில் வழங்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

a) லேசு
b) ரொம்ப
c) வண்டவாளம்
d) வாத்தியார்
e) தடவை

4.1.4. இலக்கண அமைப்பில் உருபனியல் நிலையிலும் **(morphological level)** தொடரியல் நிலையிலும் **(syntactic level)** பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. எழுத்து மொழியில் உள்ள இவ்விலக்கண அமைப்புகள் பேச்சு மொழியில் பயன்படுத்தப்படுவதில்லை.

4.1.4.1. உருபனியல் நிலை

	எழுத்துமொழி	பேச்சுமொழி
a)	நான் மதுரை போகிறேன்	நான் மதுரைக்குப் போ(கி)றேன்
b)	அது அவரது பணம்	அது அவரு பணம்
c)	நான் பேனாவை அவனிடம் கொடுத்தேன்.	நான் பேனாவை அவங்கிட்டெ கொடுத்தேன்
d)	மழை நின்றதும் அவன் போனான்	மழெ நின்னஒடனே அவன் போனான்
e)	நான் நாளை வரக்கூடும்.	நான் நாளெ வரலாம்
f)	அக்கா வந்தார்	அக்கா வந்தது.

4.1.4.2. தொடரியல் நிலை

	எழுத்துமொழி	பேச்சு மொழி
a)	கண்ணன், ராமன், கமலம் முதலியோர்/ஆகியோர் வந்தார்கள்	கண்ணன், ராமன், கமலம் எல்லாம் வந்தாங்க
b)	கதை என்னால் எழுதப் பட்டது	கதை நான் எழுதுனேன்
c)	அவன் கோபம் அடைந்தான்	அவனுக்குக் கோபம் வந்தது

4.2. அடுத்து, சில சமுதாயச் சூழல்களில் **(Social contexts)** எழுத்துத் தமிழையே பயன்படுத்த வேண்டும் (உரைநடை செய்யுள் முதலியன எழுதுதல், மேடையில் சொற்பொழிவாற்றல் போன்றவை) என்றும் சில சமுதாயச் சூழல்களில் பேச்சுத் தமிழையே பயன்படுத்த வேண்டும் (குடும்பத்தில் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் சூழல், ரேடியோ கிராம நிகழ்ச்சி, பத்திரிகைகளில் நகைச்சுவைத் துணுக்கு போன்றவை) என்றும் வரையறைகள் இந்த இருவகைகளுக்கும் உண்டு. அதாவது பேச்சுத் தமிழுக்குரிய சூழலுக்கு எழுத்துத் தமிழைப் பயன்படுத்தாமல் இருத்தலும், எழுத்துத் தமிழுக்குரிய சமுதாயச் சூழலுக்குப் பேச்சுத்தமிழைப் பயன்படுத்தாது இருத்தலும் இருநிலையின் விளைவுதான் என்பதை மனதில் கொள்ளவேண்டும். இருநிலையல்லாத மற்ற மொழிகளில், ஒன்று : எழுத்து வகைக்கும் பேச்சு வகைக்கும் தமிழ்போல இந்த அளவிற்கு வேறுபாடுகள் இல்லை. இரண்டு : அப்படியே (சிறு) வேறுபாடுகள் இருந்தாலும் இன்ன வகையைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற (சமுதாய) மொழிக் கட்டுத்திட்டமும் கிடையாது. இந்த இருநிலை அமைப்பால் மொழியில் நிகழும் மொழி மாற்றங்கள் பேச்சுத் தமிழைப் பெரிய அளவில் பாதிக்க எழுத்துத்தமிழ் பெரிய அளவில் பாதிக்கப்படாமல் இருந்துவருகிறது.

பொதுவாக மொழிகள் எழுத்து வடிவம் பெறுவதே ஒருவகையான நிலைபேறாக்கந்தான் என்றும் எழுத்து வடிவம் பெற்ற மொழிகளை அம்மொழி பேசும் கூட்டத்தினர்க்குரிய நிலைமொழி என்று சொல்லலாம் என்றும் முன்பு கூறினோமல்லவா? இக்கூற்று

இருநிலை உள்ள தமிழ் மொழிக்கு எந்த அளவிற்குப் பொருந்துகிறது என்று இனிப் பார்ப்போம்.

4.3.1. படித்தவர்கள் படிக்காதவர்கள் (எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்) என்ற பாகுபாட்டின் அடிப்படையில் இப்போது தமிழிலே உள்ள இருநிலையைக் காண்போம்.

படித்தவர்கள் a) இருநிலைகளில் ஒன்றான எழுத்து மொழியைப் பள்ளிக் கல்வி மூலம் கற்று (learn) ஆள்கிறார்கள் (b) இருநிலைகளில் மற்றொன்றான பேச்சுமொழியைக் குழந்தைப் பருவத்தின் மூலம் தாய்மொழியாகப் பெறுகிறார்கள் (acquire).

படிக்காதவர்களைப் பொறுத்தவரையில் தாய்மொழியாகப் பெற்ற பேச்சு மொழியோடு நின்று விடுகிறார்கள். பள்ளிக் கல்வி (Formal education) இவர்களுக்குக் கிடைக்கப் பெறாததால் அதன் மூலம் கிடைக்கக் கூடிய இருநிலையின் மற்றொரு வகையான எழுத்துத் தமிழைக் கற்று ஆளமுடியாதவர்களாகி விடுகிறார்கள்.

பேச்சுத் தமிழிலே வட்டார மற்றும் சாதிக்கிளைமொழிக் கூறுகள் நிறைந்திருக்கும். இதற்கு மாறாக எழுத்துத் தமிழிலே வட்டார, சாதிக் கிளைமொழிக் கூறுகள் இருப்பதில்லை. வட்டார, சாதிக் கிளைமொழிக் கூறுகள் இல்லாத தன்மையுடையது என்ற காரணத்தினாலேயே எழுத்துத் தமிழ் நிலைமொழிபோல பொதுத் தமிழாக நின்று தமிழர்களை — அதாவது படித்த தமிழர்களை மாத்திரம் ஒருங்கிணைக்கிறது (Unidying function).

4.3.2. வேறுவிதமாகக் கூறப்போனால் தமிழின் இருநிலையின் இந்த ஒருவகை பொதுத் தமிழாக – எழுத்து நிலைத் தமிழாக (standard (written) Tamil)[9] நிலைபெற்றுள்ளது என்போமா? செய்திப் பரிமாற்றம் முழுவதும் இந்தத் தமிழிலேயே நடந்தால் புரிந்துகொள்ளும் திறன் அதாவது ஒரு தமிழர் பேசுவதை இன்னொரு தமிழர் புரிந்து கொள்வது (mutual intelligibility) மிக அதிகமாக இருக்கும் எனலாமா?

இது இரண்டு விதங்களில் சாத்தியமாகவில்லை. ஒன்று: படிக்காதவர்களை இது ஒருங்கிணைக்க முடியாததால் இதன் இணைக்குந்

திறன் மொழியின் இருநிலைகளில் ஒன்றான எழுத்துமொழியோடு நின்றுவிடுகிறது. இரண்டு: படித்தவர்கள்கூட எழுத்துத் தமிழை சமுதாயத்தில் நிகழும் செய்திப் பரிமாற்றச் சூழல்கள் எல்லா வற்றிலும் பயன்படுத்துவதில்லை. கல்வியோடு தொடர்புள்ள சமுதாயச் சூழல்கள் — எழுதுவது, கல்விச் சொற்பொழிவு, மேடைப் பேச்சு போன்ற பெரும்பாலானவற்றிற்கு எழுத்துத் தமிழைப் (Formal Tamil) பயன்படுத்துகிறார்கள். (Formal Tamil, Written Tamil) இரண்டும் இங்கே ஒரு பொருளில் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் மன இறுக்கம் நீங்கிய இயல்பான சூழல் களில் (Informal situations) எந்த வகையைப் பயன்படுத்துகிறார் கள்? குழந்தைப் பருவத்தை எய்தி அதைக் கடந்துகொண்டிருந்த போது சிரமமின்றித் தாய்மொழியாகப் பெற்ற (unconcious effort)[10] அந்தப்பேச்சுத் தமிழைத்தானே? காரணம் என்னவாக இருக்கும்?

எழுத்துமொழி பள்ளிக் கல்வி மூலம் சிரத்தையெடுத்துக் கற்ற மொழி. பேச்சு மொழியில் இயல்பாகப் பேசமுடிவதைப் போல் அதற்கென்ற விசேடப் பயிற்சியும் முயற்சியும் மேற்கொண்டா லொழிய எழுத்து மொழியில் தொடர்ந்து எல்லோராலும் உரை யாற்ற, உரையாட முடியாது. அதனாலேயே இறுக்கமற்ற இயல் புச் சூழலுக்கு எளிதாகப் பெற்ற பேச்சுமொழி (படித்தவர்கள், படிக்காதவர்கள் இருசராராலும்) பயன்படுத்தப்படுகிறது. எனவே தமிழில் உள்ள எழுத்துத் தமிழ் மொழியின் இரு நிலைகளில் ஒன்றான எழுத்து மொழி என்ற நிலையில் பெரும்பாலும் படித்த தமிழர்களை மாத்திரம் ஒருங்கிணைப்பதால் தமிழ் மொழி பேசும் சமுதாயம் முழுமைக்கும் இது நிலைமொழியாகச் செயல்பட வில்லை எனலாம்.

இருநிலைகளில் ஒன்றான பேச்சுத் தமிழ் வட்டாரக் கிளை மொழி, சாதிக் கிளைமொழி என்ற நிலைகளில்[11] வேற்றுமைப் பட்டுப் போனாலும், ஒருங்கிணைக்கும் பண்போடு கூடிய நிலை மொழி ஒன்று பேச்சுத் தமிழில்—அதாவது பொதுப் பேச்சுத்தமிழ் என்ற ஒன்று இயற்கை வழியிலே தோன்றி உருவாகிக்கொண் டிருக்கிறது என்பது அறிஞர்களிடையே இன்று நிலவி நிற்கும் ஒரு கருத்தாகும்.[12]

அடிக்குறிப்புகள்

1. இயல்புவாதம் (Realism) சிறப்புறவெளிப்பட வேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட நிலப்பகுதி அல்லது சாதியினர் வழக்கில் உள்ள கிளைமொழிச் சொற்களை நாவலாசிரியர் கள் தங்கள் புதினங்களில் பயன்படுத்தும் போது, வாசகர்கள் அச்சொற்களின் பொருளறியாமல் தடுமாறுவதும், திறனாய் வாளர்கள் அப்படிப்பட்ட கிளைமொழிச் சொற்களுக்கு அடிக்குறிப்பிட்டுப் பொருள் கொடுக்கலாமா வேண்டாமா என்று விவாதிப்பதும் தமிழ் இலக்கிய உலகில் நடைபெறு பவைதான் என்பதை இங்கு நினைவு கூறலாம். பழனியப்பன் (1965) அவர்கள் எழுதிய 'காவிரிக் கரையினிலே' என்ற நாவலில், சேலம் மாவட்டத்துக் கிளைமொழிச் சொற்களுக்கு 17,18,112,286 முதலான பக்கங்களில் அடிக் குறிப்பிட்டுப் பொருள் கொடுத்திருப்பதும், புரிந்து கொள்ளுதலில் நேரிடும் இடர்ப்பாட்டைத்தானே சுட்டுகிறது.

2. எழுத்து வடிவம் பெறாத மொழிகளில் நிலைபேறாக்கம் செய்யும்போது எந்த ஒருவகை நிலைபேறாக்கத்திற்கு ஏற்றது என்று தீர்மானிப்பது அல்லது எந்த ஒருவகையாவது அம்மொழி பேசும் கூட்டத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டி நிலைமொழியா கருக்கிறதா என்று கண்டுபிடிப்பது அல்லது எந்த ஒரு வகையாவது அம்மக்கள் கூட்டத்தினரால் உயர் மதிப்புப் (prestige) பெற்றிருக்கிறதா என்று கண்டுபிடிப்பது ஆகிய யாவுமே சிரமமான தேவையான பணிகளாகும். இந்திய மொழிகளின் மைய நிறுவனத்தில் கோண்டி கிளைமொழிகள் வழங்கும் பகுதிகளில் ஒரு 'சர்வே' மேற்கொள்ளப்பட்டு, எத்தனைக் கிளைமொழிகள் வழக்கில் உள்ளன என்று கண்டுபிடிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. கோண்டி கிளைமொழிகள் பேசும் பல குழுவினர்க்கும் கோண்டித் தாய் மொழிப் பயிற்சிக்காகப் பொதுவான ஒரு புத்தகம் இயற்றவேண்டிய தேவை வந்தால், அப்புத்தகத்தை எந்த ஒரு கிளைமொழியில் எழுதுவது என்ற பிரச்சனை வரும் அல்லவா? அதற்கு (a) புரிந்து கொள்ளுதலில் இடர்ப்பாடு அதிகம் விளைவிக்காத ஒருகிளைமொழி கோண்டி மொழியில் உண்டா என்றும்,(b) எந்த ஒரு கிளைமொழியாவது கோண்டி

மொழி பேசும் மக்கட் கூட்டத்தினரிடையே உயர் மதிப்புப் பெற்றதாக உள்ளதா என்றும் கண்டுபிடிப்பதற்காகச் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நடராஜன் ; 1977).

3. இதற்கு ஒரு புறனடையும் உண்டு. தமிழகத்தில் தி.மு.க. வின் அரசியல் செல்வாக்கால் எழுதப் படிக்கத் தெரியாத பல உள்ளூர்த் தலைவர்கள் தி.மு.க. அரசியல் மேடைகளில் ஓரளவிற்கு எழுத்துத் தமிழில் (written formal Tamil) பேசியதை இக்கட்டுரை ஆசிரியரின் நண்பர் டாக்டர் அரங்கன் (இந்திய மொழிகளின் மைய நிறுவனம்) சின்னசேலம் போன்ற ஊர்களில் பலமுறை கேட்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்.

4. தமிழகத்தில் ஒரு காலகட்டத்தில் பிராமணர் பேச்சுத் தமிழில் பேசுவது மதிப்புள்ள செயலாக இருந்துவந்தது. தனித் தமிழ் இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி, திராவிட, திராவிட முன்னேற்றக் கழகங்களின் செல்வாக்கு அதிகமானவுடன் பிராமணர் பேச்சுத் தமிழில் பேசுவது மதிப்புள்ள செயல் என்ற நிலை மாறி, பிராமணச் சாதி மொழிக் கூறுகளை நீக்கிப் பேசுவது தான் மதிப்பு என்ற நிலை அண்மைக் காலத்தில் தமிழக வரலாற்றில் நிகழ்ந்தேறிய ஒன்று என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

5. தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது தோட்டத்தில்: தோட்டத்திலே, வீட்டிற்கு: வீட்டுக்கு, அவனது: அவனுடைய போன்ற ஒரு பொருள் உணர்த்தும் இணைச்சொல் உருவங்களில் (synonymous expressions) முன்னவை எழுத்துத் தமிழில் மாத்திரம் வழங்குபவைகளாகவும், பேச்சுத் தமிழ்ச் சொல் உருவத்தோடு நெருங்கியவைகளாக உள்ள பின்னவை (தோட்டத்திலே, வீட்டுக்கு, அவனுடைய முதலியன) எழுத்துத் தமிழிலும் அதாவது இலக்கியத் தமிழிலும் எழுதப்படுவதால் தெரிந்தவற்றை முதலில் கற்பித்துவிட்டுத் தெரியாதவற்றைப் பின்னர் கற்பித்தல் (known to unknown) என்ற கோட்பாட்டுக் கிணங்க (திருமலை : 1978; ஞானசுந்தரம் : 1975) துவக்கப் பள்ளி நிலையில் தமிழ் மொழி கற்பித்தலின்போது முதலில் தோட்டத்திலே, வீட்டுக்கு

போன்ற சொற்கக்ளை கற்பித்துவிட்டுப் பின் (வாக்கிய முறைகளும் இதுபோல) அடுத்த நிலையில் அதே சொற்களின் வேறு வடிவங்களான தோட்டத்தில், வீட்டில் என்பவை களைக் கற்பிக்கலாமே என்ற கருத்தைத் தெரிவித்தபோது அவர் நான் குறிப்பிட்ட பேச்சு மொழிக்கு அருகில் வடிவ ஒற்றுமையோடு காணப்படும் அச்சொற்களை எழுத்து மொழியில் எழுதலாம் என்று தமிழர்கள் எங்கே அங்கீகரித் துள்ளார்கள் என்ற முறையில் ஐயத்தைத் தெரிவித்தார். அவை அங்கீகரிக்கப்பட்ட எழுத்துத் தமிழ் என்பது எனது வாதம். ஆனால் பேராசிரியர் சஞ்சீவி அவர்களது வாதமோ இன்னும் அவை எழுத்துத் தமிழில் அங்கீகரிக்கப்படவில்லை என்பது. இங்கே குறிப்பிட் விரும்புவது எங்களுக்கிடையே நிகழ்ந்த வாதச் சிறப்பை அல்ல. மொழியின் ஒருவகை அம்மொழி பேசுபவர்களால் அங்கீகரிக்கப்படாவிட்டால் பின் அவை நிலைபேறாக்கத்திற்குரிய சொற்களாக மாறா என்ற கருத்தை விளக்கும் பொருட்டே இந்த நிகழ்ச்சி இங்கே தெரிவிக்கப்படுகிறது.

6. திட்டமிட்ட நிலை பேறாக்கம் பற்றிய சமுதாய மொழியியல் நோக்கில் உள்ள விரிவான விளக்கத்திற்கு டாக்டர் கி. கருணாகரன் அவர்களின் (a) மொழித் திட்டமிடுதல் (1977) என்ற நூலில் உள்ள "நிலைபேறாக்கம்" (பக். 69-93) என்ற தலைப்பில் உள்ள செய்திகளையும் (b) சமுதாய மொழியியல் (1975) என்ற நூலில் உள்ள "மொழித் திட்டமிடுதல்" என்ற அத்தியாயத்தையும் காண்க.

7. நாகாலாந்தில், ஆரம்பக் கல்வி முதலில் தாய்மொழி மூலமாகவும் பின்னர் ஆங்கிலம் மூலமாகவும் கற்பிக்கப்படு கிறது. நாகாலாந்தில் பேசப்படும் பல மொழிகளில், 13 மொழிகள் தாய்மொழிக் கல்விக்காக கல்லூரிக் கல்வியாக தேர்ந்தெடுக்கப்பட்டுளளன. ஆங்கிலம் முதலாவது வகுப்பி லிருந்து கற்பிக்கப்படுகிறது... அங்கீகரிக்கப்பட்ட 13 மொழி களிலும், நாகாலாந்து அரசினரால் பாடப் புத்தகங்கள் தயாரிக்க முடிவதில்லை. இதனால் நடைமுறை அளவில் நாகாலாந்தில் உள்ள சிறுவர்கள் எந்த நாகமொழியில் பாடப் புத்தகங்கள் உள்ளனவோ அது தங்கள் தாய்மொழியாக

இல்லாத போதும் அந்த நாகமொழி மூலம் கல்விகற்கிறார் கள். இன்னும் சிலர் பாடப் புத்தகங்கள் உள்ள ஆங்கில மொழி மூலம் முதலாம் வகுப்பிலிருந்தே கல்வி கற்கிறார்கள். பெரும் பாலான ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆங்கிலமொழி யில் போதிய திறமை இல்லாததால் வகுப்பறையில் நடை முறையளவில் அரசினரின் அங்கீகாரம் இல்லாமலேயே 'நாகாமீஸ்' எனப்படும் நாகாபிட்ஜின் செய்திப் பரிமாற்றத் திற்குப் பயன்படுத்தப்படுகிறது. வேறுவிதமாகக் கூறப்போ னால் பாடங்கள் ஆங்கில மொழியில் இருந்தாலும், வகுப் பறையில் பாடச் செய்திகள் 'நாகாபிட்ஜின்' மூலமாக விளக் கப்படுகிறது. இதன் காரணம் என்ன? நாகாலாந்தில் நாக மொழிகள் பேசும் எல்லாக் குழுவினரும் தங்களுக்கிடையே செய்திப் பரிமாற்றத்திற்கு (Interlingual communication) நாகாபிட்ஜினைப் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு நாகாக் குழந்தையும் ஆறு வயது முடிவதற்குள் நாகாபிட்ஜினைப் பூரணமாகக் கற்றுக்கொண்ட பின்னர்தான் பள்ளிக்கு வரு கிறது. அதாவது ஒரு தமிழ்க் குழந்தை எந்த அள்விற்குப் பேச்சுத் தமிழைக் கற்றுக்கொண்டு வகுப்பறைக்கு வருகிறதோ ஏறக்குறைய அதே அளவிற்கு நாகாக் குழந்தை 'பிட்ஜினை'க் கற்றுக்கொண்டு வகுப்பறைக்கு வருகிறது. குழந்தைப் பரு வத்தைக் கடக்கும் பருவத்தில் கற்றுக்கொண்ட (acquired) மொழி மூலமாக ஆரம்பக்கல்வி அமைவதே மிகச் சிறந்தது என்ற கல்விக் கோட்பாட்டிற்கிணங்க நிலைபேறாக்கம் செய்யப்பட்ட நாகாபிட்ஜின் மொழியை ஸ்ரீதர் (1976) ஆரம்பக் கல்விக்காகத் தேர்ந்தெடுத்துப் பரிந்துரை செய்கிறார்.

நாகாலாந்தில் பேசப்படும் எந்த ஒரு நாக மொழியும் பயன் படுவதை விட நாகாபிட்ஜின் பல்வேறு செய்தித் தொடர்புச் சூழல்களிலும் எல்லோராலும் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் காரணத்தாலேயே ஸ்ரீதர் நாகாபிட்ஜினை நிலைபேறாக்கம் செய்யத் தேர்ந்தெடுத்தார். நாகாலாந்தில் உள்ள தெற்கு வட்டாரக் கிளைமொழிகள், வடக்கு வட்டாரக் கிளைமொழி கள், மத்திய வட்டாரக் கிளைமொழிகள் ஆகிய கிளைமொழி களுக்கிடையே உள்ள இலக்கணப் பொதுமையை(commoncore at the grammatical level) வரையறுத்து, இந்தஇலக்கண வரை

யறைக்கு ஏற்ப நாகாபிட்ஜின் மொழியில் உள்ள இலக்கணக் கூறுகளைச் செப்பம் செய்து (modified) நாகாபிட்ஜினை நிலை மொழியாக மாற்றுகிறார்.

8. பெரும்பாலான எடுத்துக்காட்டுகள் ந. ராமசாமி (1979) Formal and Informal Tamil என்ற அவரது Ph. D. ஆய்வுக்கட்டுரை யிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

9. எழுத்துத் தமிழிலும் பல நிலைகள் உண்டு. பழந்தமிழ் இலக் கியங்கள் கற்றதால் விளைந்த பண்டிதர் மொழிநடை ஒரு புறம், பரவல் செய்தித் தொடர்புச் சாதனங்களான தினத் தாள், மாத வார இதழ்கள், சினிமா நாடகம் (தற்போது சுருங்கிய அளவில் 'டெலிவிஷன்') போன்றவைகளால் விளைந்த மொழிநடை மறுபுறம்... என்று எழுத்துத் தமிழி லும் இப்படிப் பல படிகளைக் காணலாம். இன்றைய வார மாத இதழ்களும், புதின எழுத்தாளர்களும் பின்பற்றும் எழுத்துத் தமிழ் நடைதான் எழுத்து நிலைமொழி (standard written Tamil) என்ற ஒரு கருத்து பரவலாக உள்ளது.

I. a) தந்தை மனையின் கண் உள்ளார்.
   b) அப்பா வீட்டில்/வீட்டிலே இருக்கிறார்.

II. a) நான் அவரை அறிவேன்.
   b) எனக்கு அவரைத் தெரியும்.

என்பன போன்ற ஒரே பொருள் உணர்த்தும் இரண்டு இரண்டு வாக்கியங்களில், bக் குறியிட்ட இரண்டாவதாக உள்ள வாக் கியங்களும் அவை போன்ற வாக்கியங்களும் எழுத்து நிலைத் தமிழில் இடம்பெறும். வேறு விதமாகக் கூறப்போனால் எழுத்து நிலைத் தமிழில் பேச்சுத் தமிழ் மொழி அமைப்புக்கு நெருக்கமாக உள்ள மொழி அமைப்புகள் (Gnanasundaram) அதிக அளவில் இடம்பெறும்போலத் தோன்றுகிறது. இக் கருத்தின் விரிவான விளக்கத்திற்கு காண்க. Annamalai, E. Thirumalai, M. S. (1978); மணியன், தங்க (1978) (பக்.30) தெய்வசுந்தரம், ந. (1978); Karunakaran K. (1980).

10. குழந்தை மொழி கற்கும் பாங்கினைப் பற்றிய விரிவான விளக்கத்திற்குக் காண்க. ராசாராம், சு. (1973); அரங்கன், கி. (1975) Thirumalai, M. S. (1977).

11. தமிழின் வட்டார, சாதிக் கிளைமொழிகளைப் பற்றிய முழு விவரத்திற்கு சீனிவாசவர்மா (1977) அவர்களின் கிளைமொழி யியல் என்ற நூலைக் குறிப்பாக அதன் இரண்டாவது பாகத் தைக் காண்க.

12. இக்கருத்தின் விளக்கத்திற்குக் காண்க. ஞானசுந்தரம், வ. (1979 – 80).

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்.

துணை நூல்கள்

1. அரங்கன் கி. 1975 மாற்றிலக்கண மொழியியல், தமிழ் நூலகம், சென்னை.

2. இராசாராம் சு. 1973. மொழியும் மொழியியலும், அண்ணா மலைநகர்.

3. கருணாகரன் கி. 1973 சமுதாய மொழியியல், பாரி நிலையம், சென்னை 600001.

4. ——— 1977. மொழித்திட்டமிடுதல், அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

5. சண்முகம், செ. வை. 1978 "பேச்சும் எழுத்தும்" மொழியியல் தொகுதி 2. எண் 3, அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

6. சீனிவாசவர்மா, கோ. 1977 கிளைமொழியியல், அனைத் திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

7. ஞானசுந்தரம் வ. 1979 - 80 "பொதுப் பேச்சுத் தமிழ் அதில் இருநிலையின் பங்கு" மொழியியல் தொகுதி 3; எண் 2 & 3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

8. நடராஜன். ஜி. வி. 1977 "பஸ்தர் மாவட்டத்துக் கோண்டிக் கிளைமொழிகள்" மொழியியல் தொகுதி 2: எண் 1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலை நகர்.

9. தெய்வசுந்தரம், ந. 1978 "தமிழில் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் இடையே உள்ள உறவு" மொழியியல் தொகுதி 2: எண் 1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

10. பழனியப்பன், ஆ. 1965 காவேரிக் கரையினிலே, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி,)லிட்., சென்னை 2.

11. மணியன், தங்க. 1978 பத்திரிகைத் தமிழ், மாணிக்கப் பதிப்பகம். பரணம் (உடையார் பாளையம் வழி) திருச்சி மாவட்டம்.

12. திருமலை, மா.சு. 1978 தமிழ் கற்பித்தல் அல்லது மொழி கற்பித்தல், சென்னை.

13. Annamalai E. "Convergence of Literary and colloquial Tamil" 3 Pakha Sanjam (forth coming) University of Punjab, Punjab.

14. De Silva, Sugatha Pala M. V. 1976 Diglossia and C I I L Adult Literary series, C I I L, Mysore.

15, Ferguson, Charles A. 1959 "Diglossia" in Language and Culture in Society ed. by Dell Hymes, New York, Harper and Row Publishers.

16. Garvin Paul, L. 1964 "The Standard Language problem: Concepts and Methods" in Language and Culture in Society ed. by Dell Hymes, Harper and Row Publishers, New York.

17. Ghatage, A. M. 1967. "Language Standardization" Indian Linguistics Vol. 28.

18. Gnanasundaram V. "A Programme for teaching the Formal and Informal varieties of Tamil", Forth coming in Prof. M. Shanmugam pillai 60th birthday commemoration volume, Madurai.

19. Hockett C.F. 1958 "Common core and over all pattern", in A Course in **A Course in Modern Linguistics**. New York Macmillan.

20. Karunakaran, L. 1980 **Linguistic Convergence** All India Tamil Linguistics Association, Annamalainagar.

21. Krishnamurthi, Bh. 1976 "Problems of Language Standardization in India" in Osmania papers in Linguistics, ed. by A.S. Ananthanarayana, Hydrabad.

22. Shanmugam Pillai, M. 1960 "Tamil Literary and Colloquial" in Linguistic diversity in South Asia I J A L 7 (4) ed. by Charles A. Ferguson and Jhon J. Gumperz.

23. Rajashree, 1980 Standardization of Language : a Case Study of Market, (unpublished Ph. D. dissertation). University of Mysore; Mysore.

24. Ramaswamy, N. 1979 Formal and Informal Tamil (unpublished Ph. D. Dissertation) Linguistics Department, Kerala University, Trivandrum.

25. Sridhar M.V. 1974 Naga Pidgin : A Sociolinguistic Study of Inter-lingual communication pattern and Nagaland, C I I L occational memogragh series 8, Mysore.

26. ——— 1976 'Standardization of Naga pidgin" in Anthropological Linguistics.

27. Thirumalai M. S. 1977 **Learning Theories and Linguistics** 18-Tamil nulagam, Madras 600018.

28. ——— 1978 Stylistics - A Linguistic approach (The Dr. R. P. Sethupillai Silver Jubilee commemoration Lectures) University of Madras.

மட்டக் களப்புத் தமிழ் வட்டார வழக்குகள்

ஒவ்வொரு வட்டாரத்திலும் வழங்கப்படும் வட்டார வழக்குகள் பிற வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு வியப்பையும் புதுமையையும் தரவல்லன. ஈழத் திருநாட்டில் மட்டக்களப்புப் பகுதியில் வாழும் தமிழ் மக்களிடையே வழங்கும் வட்டார வழக்குகள் ஒருசில இவண் தரப்படுகின்றன.

வாரிக்காலன்	...	மாடுகள்
அரக்குப் புதைத்தல்	...	சூடு பிடிக்கத் தொடங்கு
வெள்ளோடன்	...	தேங்காய்
பெருவாயன்	...	கடகம்
கூரைக் கோடு	...	வீடு
கணக்கன்	...	மரக்கால்
குஞ்சுவாயன்	...	கைப் பெட்டி
வேலைக்காரன்	...	போர்கிளறும் வளைதடி
நெடுமுழவன்	...	கயிறு

மு. சதாசிவம்
தமிழின் அழகுகள், ஈரோடு, 1980.

மொழியியல் 4, 1 & 2 (1980)

எளிமையாக்கம் : புதுமையாக்கத்தின் ஒருமுறை*

இ. அண்ணாமலை

மொழித் திட்டமிடுதல் பற்றிய இலக்கியங்களில், குறியீட்டின் விளக்கம் பற்றி மேற்கோள்கள் உள்ளன (Haugen 1966). புதிய நடையும் சமுதாயத் தொடர்பின் அடிப்படையில் நிகழும் பேச்சும் – புதுமையாக்கத்தின் ஒரு முறையாக உள்ளது. ஆனால் நான் அறிந்தவரை புதுமையாக்கத்திற்கு, எளிமையாக்கம் ஒரு முறையாக இதுவரை குறிப்புகள் ஏதும் இல்லை. இது மொழியினை, வளர்ந்த மொழி, வளராத மொழி என இரு விதமாகப் பிரித்ததால் ஏற்பட்ட இழப்பாக இருக்கக்கூடும். மேலும், ஒரு மொழி ஒரு குறிப்பிட்ட துறையில் வளர்ச்சியடைந்து, பிற துறைகளில் வளர்ச்சியுறாமல் இருக்க வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. இந்தியாவில் உள்ள பல மொழிகள் இவ்வாறு ஏதேனும் சில துறைகளில் மட்டுமே வளர்ச்சியடைந்து பிற துறைகளில் வளர்ச்சியின்றி இருப்பதைக் காணலாம். மொழியில் இலக்கியத்துறை கற்றறிந்த சிறுபான்மையினருக்கு மட்டுமே உரிமையாக இருப்பதால், எழுத்துமொழி பெரும்

பான்மை மக்களுக்கு விளங்காத ஒன்றாக இருக்கின்றது. பெரும்பான்மையோருக்கும் மொழியறிவு கிடைக்க வழிவகை செய்யும்பொழுது, எளிமையாக்கம் பெறுதல் இன்றியமையாததா கிறது. எளிமையாக்கம் என்பது விரிவாக்கத்தின் அடிப்படை யினாலும், துறைகள் பலவாக விரிவடைவதாலும் ஏற்படலாம். ஆதலால் மொழி பல குழுவினருக்கும் பயனாகிறது. கற்றறிந் தோருக்கும் நயம்பட உரைப்போருக்கும் மட்டுமின்றி, பாமர மக்கட்கும், செய்தித் தொடர்பு, பத்திரிகை ஆகியவற்றிற்கும் பயன்படுகிறது.

மொழியின் எளிமையாக்கம் என்பதை மொழி அடிப்படை யில் அதாவது இலக்கண அடிப்படையில் விளக்குவது கொஞ்சம் கடினமான காரியமாகும். அதற்குப் பல பொருள்கள் உண்டு; வணிகத் தொடர்பால் தோன்றும் மொழி நிலைக்கும் (Hymes: 1971, Introduction), புதுமையாக்கத்திற்கும் உள்ள நிலைகளைக் குறிப்பிடலாம். செய்தித் தொடர்பு என்ற நிலையிலிருந்து எளிமையாக்கத்தைப் பற்றிய விளக்கத்தைக் காண்போம். மொழியைப் பேசும் பெரும்பான்மையோருக்கு வேண்டி, மொழி யினைப் புரிந்துகொள்ளும் நிலையிலும், உருவாக்கும் நிலையிலும் எளிமையைப் புகுத்துவதை எளிமையாக்கம் எனலாம். மொழித் திட்டமிடுதல் போன்ற துறைகளில் உள்ளதைப் போன்றே மொழி யின் எழுத்து முறையையே இது சீர்படுத்துகிறது.[1]

இந்நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழ்மொழி, ஒருதலையான வளர்ச்சிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இருந்தது. இரண்டா யிரம் ஆண்டு வரலாற்றினையும், வளர்ச்சியடைந்த மிகச் சிறப் பான இலக்கியங்களையும் பெற்றிருந்தபோதிலும் அவை அனைத் தும் செய்யுள் வடிவினையே கொண்டுள்ளன. உரைநடை, தத்துவக் கருத்துக்களுக்கும், நவீன படைப்புகட்கும் மட்டுமே சிறுபான்மை கற்றறிந்தோரால் பயன்படுத்தப்பட்டது. தமிழ், ஆட்சி மொழியாகவும் பயன்பட்டது என்பதைக் கல்வெட்டுக் களின் மூலம் அறிகிறோம். அதுவும்கூட இடையிடையே தடைப் பட்டு, அந்நிய மொழிகள் ஆட்சி மொழியாகப் பயன்படலாயின என்பதையும் அறிய முடிகிறது. ஆதலால் தமிழ் மொழியின்

1 In the case of diglossic Tamil, platform speech, where the formal Tamil is used, is also affected.

வளர்ச்சி ஒருதலையானதாகவும், தனிப் பயிற்சியின்றி எழுத்து மொழியைப் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலையும் உருவாயிற்று. இந்நூற்றாண்டில் அச்சுப்பொறி அறிமுகப் படுத்தப் பட்டதால் புதிய கல்விமுறையும் பத்திரிகைத் துறையும் வளர்ந்து பரவியதால் மக்கட்குப் புரிந்துகொள்ளும் தன்மை பெருகவேண்டி, செய்யுள் வடிவமும், உரைநடையும் பலராலும் கற்றுத்தேற முடிந்தது.

தமிழ் வடிவத்தை மாற்றியமைப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வந்ததுடன், எழுதும் முறையிலும், புணர்ச்சி, சொற்றொடர் அமைப்பு முறை ஆகியவற்றிலும் புதுமையாக்கத்தைக் கையாண்டனர். இதற்கு இணையாகத் தமிழைப் பிறமொழிக் கலப்பிலிருந்து தூய்மைப்படுத்தும் முறையும் இந்நூற்றாண்டில் ஏற்பட்டதைக் காணலாம். (அண்ணாமலை: 1977). குறிப்பாக சொற்றொகுதியில் இது ஏற்பட்டது; அங்கும்கூட எளிமையாக்கம் தலைகாட்டிற்று. இனி, தமிழில் எளிமையாக்கம் எவ்வாறு செயல்பட்டது என்று காண்போம்.

எழுதும் முறையில் எளிமையாக்கம் என்பது, பார்த்தவுடனே வேறுபடுத்தி அறியும் முறையில் இணைந்த எழுத்துக்களையும், ஒன்றன்பின் ஒன்றாக அடுத்துவரும் முறைகளையும், சீர்செய்து பிரிந்த எழுத்துக்களையும் ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவருவதாகும். கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலை முதலியவற்றில் எழுதிய எழுத்தின் வடிவங்கள் மெய்யெழுத்துக்களையும் (உயிர் நீக்கிய மெய்யெழுத்து வடிவம்) உயிர்மெய் எழுத்துக்களையும், எகர ஒகரங்களில் உள்ள குறில், நெடில் வேற்றுமைகளையும் வேறு படுத்தி அறியும்படியாக அமைக்கப்படாமல் இருந்தன. எடுத்துக் காட்டாக கொளா என்று எழுதியிருந்ததை முறையே “கொளா கொளர், கோளா, கோளர், கேரளா, கேரளர்” என்று படிக்கலாம் எனக் கூறியுள்ளனர். (வேங்கடசாமி 1962:42). இத்தாலியப் பாதிரியரான பெஸ்கி அவர்கள் 18ஆம் நூற்றாண்டில், எளிதில் தெரியும்படியாக சில சீர்திருத்தங்களைத் தமிழ் வரிவடிவத்தில் (அச்சு முறையில்) கொண்டுவந்தார். தமிழ் இலக்கணத்தில் கூறியுள்ளபடி மெய்யெழுத்தின் மேல் புள்ளியும் (அல்லது சிறுவட்டம்), எகரத்தின் கீழ் ஒரு சாய்வுக் கோடும், ஒகரத்தின் முடிவில் சிறு வளையமும் ஏற்படுத்தினார்.[1]

1 பெஸ்கி அவர்கள், தம்முடைய தொன்னூலில் எகர ஒகரங்கட்கு

இவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மக்களாலும் வழங்கப் பட்டது. ஆதலால் மேலே குறிப்பிட்ட பல்வேறு முறையில் படிக்க முடிந்த முறைகளை வெவ்வேறாக பாகுபடுத்தி அறியலாம். **கொளா, கொளர், கோளா, கோளார், கேரளா, கேரளர்.** பழைய எழுத்து முறையில் சிறு சொற்றொடர் மற்றும் முழுச் சொற்றொடர்கள் வேறுபடுத்தப்படவில்லை. எழுத்துக்களின் கோவையை ஒரு வாக்கியமாகவோ, இரண்டு வாக்கியமாகவோ அல்லது சொற்களை பிரிக்கும் முறையையொட்டி ஒரே வாக்கி யத்தை பல வாக்கியமாகவோ வகைப்படுத்தலாம். ஒரே முறை யில்தான் படிக்க வேண்டும் என்பது (சொற்றொடர் சிலேடையில் அமையும் வாக்கியங்கள் தவிர) கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப் புள்ளி, இடைவெளி ஆகியவைகள் உதவியுடன் மட்டுமே முடிந்தது.

நிறுத்தற்குறிகள், செய்தி வாக்கியங்கள், ஏவல், வினா வாக்கி யங்கள் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிய பயன்படுத்தப்பட்டன. மேலும் இவை ஒலி இடைவெளிகளையும், பேச்சின் ஏற்ற இறக் கங்களையும் காட்டி வரிவடிவத்தை எளிமையான முறையில் ஒலி வடிவமாக்கப் பயன்பட்டன. இந்த இரண்டு முறைகளும் (இடை வெளி விட்டு எழுதுதல் நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்துதல்) வாசிப்பதை பெரிதும் எளிமைப்படுத்தி வேகமாகப் படித்துப் புரிந்து கொள்வதற்கு உதவி புரிந்தன.

ஒழுங்காகவும் முறையாகவும் இருப்பதே எளிமைப்படுத்தும் என்ற கருத்தின் அடிப்படையில் எழுந்ததே வேறுபாடுகளைக் குறைத்து ஒழுங்குபடுத்துதல். தமிழ் வரிவடிவத்தில் உயிரெழுத்து களின் மாற்றுவடிவங்களில் சில ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, அ,ஐ,ஒ என்ற உயிர்கள் சில மெய்யெழுத்துகளுடன் சேர்ந்து உயிர்மெய்யாக வரும்போது வரி வடிவங்களில் சில

மேல் ஒரு சிறுகோடு போடவேண்டும் என்று கூறுகிறார். ஆனால் எகரத்திற்குக் கீழ் ஒருகோடும், ஒகரத்திற்கு வளைவும் போட வேண்டும் என்று கூறியது யார் என்பதுபற்றி கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. ஆனால் சிலர், அவர் பெஸ்கி தான் என்பர் (வேங்கடசாமி பக்:350, அறவாணன் 1975:89). எகர ஒகர நெடில் மாத்திரைகள் கல்வெட்டுக்களில் கண்டுள்ள படி முன்னரே வழக்கில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன என அந்நூலிலேயே குறிப்புகள் உள்ளன.

ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆ, ஐ, ஓ, என்பன சில மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து வரும்பொழுது அவை பெறும் வரிவடிவங்களாகும். இவைகள் மற்ற மெய்யொலிகள் பெறும் மாற்று வடிவங்களைப் பெறுவது எளிமையாக்கத்தின் கீழ்ப்படும். சான்றாக 'ஞ' என்ற எழுத்தை 'னா' எனவும் 'ணோ' என்பதை 'ணை' எனவும் அமைப்பது. ஈருயிர் ஒலிகளான ஐ, ஔ எழுத்துக்களை உயிரை அடுத்துவரும் மெய்யெழுத்து வரிசையால் எழுதி (அய், அவ்), இரண்டு எண்ணிக்கைகளை நெடுங்கணக்கிலிருந்து குறைத்துவிடலாம். இவ்விரு உயிர் எழுத்துக்களும் சொல்லின் முதலில் மட்டுமே வருவதால், அவ்வாறு பிரித்து எழுதுவதால் சிக்கல் ஏதும் இல்லை.

இந்த மாற்றங்கள் அல்லது சீர்திருத்தங்கள் மொழியை எளிமையாக்கும் எண்ணத்தில் எழுந்தவைகளேயானாலும், அவை மொழியைக் கற்கவும் பின்னர் தட்டெழுத்து இயந்திரத்தில் அவைகளைப் பொருத்தவும் ஏற்றதாக அமையலாயின. இக் கோட்பாடு முதன்முதலில் திரு மாணிக்க நாயக்கர் (1871–1931) என்ற பொறியியல் அறிஞராக விளங்கியவரால் அமைக்கப்பட்டு, பின்னர் திராவிடர் கழக அரசியல்வாதிகளால் பின்பற்றப்பட்டது. ஆனால் அப்பொழுது அவை பெருவாரியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அண்மைக் காலத்தில் உ, ஊ, உயிரொலிகட்கான மெய்யுடன் வரும் மாற்று வடிவங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தில் ஆராய்ச்சிகள் செய்தும் புலவர் குழுவின் விவாதத்திலும், அகில இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கழகம் நடத்திய மாநாட்டிலும் விரிவாகக் கலந்தாலோசித்தும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படியான முடிவுக்கு இன்னும் வரவில்லை.[1]

இரண்டு ஆராய்ச்சியாளர்கள், தமிழ் மொழியில் உள்ள 247 எழுத்துக்களை 31 ஆகவோ, அல்லது அதற்கும் குறைவாகவோ குறைக்க முடியும் என்று கூறி அம்முறையில் உயிர் எழுத்து தனியாகவும், மெய்யெழுத்து தனியாகவும் உரோமன் எழுத்து முறையில்

---

1 அறவாணன் அவர்களின் நூலில் முன்னர் குறிப்பிட்ட பக்கத்தில் பார்க்கவும்.

பின்பற்றும் வழக்கத்தின்படி அவைகளை உயிர் மெய்யாகக் கருதலாம் என்று துணிந்துள்ளனர். (கோதண்டராமன் 1974 மகாதேவன் 1975). இம்முறையில் "தமிழ்" என்பது 'த்அம்இழ்' என எழுதப்படவேண்டும். எளிமை என்ற கோட்பாடு இதில் அடியோடு தகர்க்கப்படுவதுடன், போலியாகவும் இருக்கிறது.

கூட்டெழுத்துக்களை நீக்கியதன் மூலம், உண்மையிலேயே, எளிமையாக்கம் நடந்தது என்று கூறலாம். அவை இரட்டித்த மெய்களும், வெவ்வேறு மெய்களின் கூட்டுக்களும்: kk – க்க், ks க்ஷ ஆகும். இது தட்டெழுத்து இயந்திரத்தில் உள்ள எழுத்தின் எண்ணிக்கையையும், எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளும் பொழுது ஏற்படும் எண்ணிக்கையையும் குறைத்துள்ளன. எழுத்து முறை எளிமையாக்கத்துடன் இணைந்ததும், எண்களின் வரிவடிவ மாற்றமும் ஆகும். தமிழ் எண்ணின் வரிவடிவம் பத்துப்பத்தாக அமைக்கும் முறையைப்பெற்றது. ஆனால் பூச்சியத்தைக் குறிக்க எண்வடிவம் இல்லை.

பத்து, நூறு, ஆயிரம் ஆகிய பெரிய எண்களைக் குறிக்க தனித்தனி வரிவடிவங்கள் இருந்து அவை பயன்பட்டன. அம்முறையில் 10, 11, 21, 100, 101, 111, 221 என்பன முறையே தமிழில் ௰, ௰க, உ௰க, ௱௱க, ௱௰க, உ௱உ௰க ஆகும். இம்முறையில் உள்ள சில இடர்ப்பாடுகள், உரோமன் எண் முறையில் உள்ள குறை பாடுகளுடன் இணைந்ததாக இருந்து, பெரும் எண்களைக் குறிக்கும் பொழுது ஏற்படும் தொல்லைகளையும் பட்டாலை ராமசாமி நாயக்கர் (1825ஆம் ஆண்டு, வேங்கடசாமி அவர்களின் நூலில் பக். 51—61 குறிப்பிட்டுள்ளபடி) எடுத்துக்காட்டியுள்ளார். அவர் பூச்சியத்திற்கான O வடிவை இந்தோ–அராபிக் எண் முறையிலிருந்து கடனாகப் பெற்று தமிழில் சேர்த்தார். அப்புதிய முறையில் மேலே காட்டிய எண்கஇ கO கக உக கOO கOக ககக உஉக ஆகும். இந்த எளிய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்பொழுது தமிழ் எண்களைப் பயன்படுத்தும் அனைவரும் இதனையே பின்பற்றி வருகின்றனர் எனலாம். ஆயினும் பொதுவாக இந்தோ–அராபிக் எண் முறையே வழக்கிலிருந்து வருகிறது.

புணர்ச்சி விகுதிகளினால் ஏற்படும் மாற்றங்களைக் குறைத்து எளிமையாக்கி, வரிவடிவத்தில் எளிதாகப் படிக்கவும் தனிச் சொல் உருபு வடிவங்களைப் பாதுகாக்கவும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இது, சொற்கள் அடுத்து வரும்பொழுது உண்டாகும் புணர்ச்சியை நீக்குவதன்மூலம் ஏற்பட்டது. புணர்ச்சி விதிகள் பயன்படும்பொழுது அவை சொற்களின் வடிவங்களைப் பின்வருமாறு பலவாறாக மாற்றும்.

மரம் பார்த்தான்

மரங் கண்டான்

மரஞ் சாய்ந்தது

மரந் தேவை

மர முறிந்தது

இவைகளில் 'மரம்' என்ற சொல் மரங், மரஞ், மரந், மர எனத் திரிந்தது. மிகக் கடினமான புணர்ச்சி விகுதியினால் சில சொற்கள் 'முட்டாட்டாமரை' என்று ஒலிவடிவம், மூலச் சொற்களிலிருந்து' எளிதில் அறியமுடியாதவாறு வேறுபட்டிருக்கும். மேலே காட்டிய தொடர் 'முள், தாள், தாமரை' என்ற சொற்களால் உருவாக்கப் பட்டதில் 'தாள்' என்பது 'டாட்' எனத் திரிந்துள்ளது. புணர்ச்சி விதிகளால் மயக்கம் தரும் சொற்றொடர்களும் உருவாகலாம். சொற்களின் தனித்த வடிவம் சிதைந்து, எழுதவும் அறியவும் இடர்ப்படும்படியாக புணர்ச்சி விதிகள் செயல்பட்டால் படிக்கும் வேகம் குறையும். புணர்ச்சி விதிகள் செயல் படுத்தப்படுவதால் சொற்களின் வடிவங்களைக் காப்பாற்ற முடிவதுடன், சொற்களின் இடையில் உள்ள வெற்றிடத்தைப் பயன்படுத்தவும் முடிந்தது. நாமடி ஒலிகள் சொல்லின் முன் வராது என்ற ஒலியன் விதி வேறு முட், டாட், டாமரை என்று எழுதுவதைத் தடைசெய்து, முட் டாட்டாமரை என்றே எழுதும்படி வலியுறுத்தியது. நிறுத்தற் குறிகளான காற்புள்ளி முதலியன புறப்புணர்ச்சி விதிகள் செயல் படுவதைத் தடைசெய்யத் தடையாய் இருந்தன.

புறப்புணர்ச்சி விதிகள் செயல் மறுக்கப்பட்டதால் வரிவடிவம் பேச்சு வடிவத்துடன் மிக நெருக்கத்தில் கொண்டுவந்து, இரண்டிற்

கும் உள்ள இடைவெளி குறைந்து, எழுதவும் படிக்கவும் எளிதாகிறது. இவ்வாறு புறப்புணர்ச்சியற்ற சொற்றொடர்கள் கூட்டுச் சொற்கள் பேச்சு வடிவத்துடன் ஒத்த

மண்குடம்,

பல்பொடி,

கதவுக்கு,

என்பன மட்குடம், பற்பொடி, கதவிற்கு என்று புணர்ச்சி விதிக்குட்பட்ட சொற்களிலிருந்து வந்தனவாகும். இதுபோன்றே, புறப்புணர்ச்சிக்குட்பட்ட 'மரப்பெட்டி' போன்ற சொற்கள், பேச்சு வழக்கிலும் அவ்வாறே வழங்குவதால், அவை எழுத்து முறையிலும் புறப்புணர்ச்சிக்குட்பட்டே உள்ளன. ஆதலால் பேச்சு வழக்கே சந்தி பிரித்து சொல்லுருபுகள் தம் வடிவை மாறாமல் அமைத்துக்கொள்ள துணை செய்கின்றன எனலாம். சொல் தன் வடிவைப் பாதுகாப்பதில் புணர்ச்சி விதிகள் செயல்பட்டு வருவது பேச்சின் அடிப்படையில் எளிமையாக்கத்திற்கு எதிராக உள்ளது. மேலும் வேறுபடுத்தி படித்தறிவதற்கு எதிராகவும் அமைகிறது.

பேச்சு வழக்கு மட்டுமே, சொற்களைப் புணர்ச்சியின்றி எழுதப் பயன்படுகிறது என்று கூறமுடியாது. எடுத்துக்காட்டாக 'மரம்தான்' என்பதை 'மரந்தான்' என்று உச்சரித்தபோதிலும், எழுதும்பொழுது ஏற்பட்டுள்ள புணர்ச்சி (ம்>ந்/-த்) நிகழ்வை விட்டுவிட்டு 'மரம்தான்' என எழுதுகிறோம். அதுபோல 'அவன் தான்' என்பது பேச்சில் உள்ளதுபோல எழுதப்பட்டு புணர்ச்சிக் குட்பட்ட 'அவன்றான்' என எழுதப்படவில்லை. இச்சொற்கள் கூட்டுச்சொற்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. சொற்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறைக்கும் பேச்சு வடிவத்தில் எழுதும் முறைக்கும் போட்டி ஏற்படும்பொழுது, சாதாரண மற்றும் கூட்டுச்சொற்கள் அல்லாதவைகட்கு முன்னர் கூறப்பட்டதற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. சாதாரண சொற்கட்கும் கூட்டுச் சொற்கட்கும் பின்னர் கூறியது சிறப்பிடம் பெறுகிறது.

பேச்சு வடிவத்தை ஒத்திருப்பதில் பல சொற்கள் சொல்லின் நீளத்தையே முதலிடமாகக் கொள்கின்றன. தமிழ் மொழி பின்

னொட்டு மொழியாதலால் மிகநீண்ட சொல் வடிவத்தை குறிப்பாக வினைச் சொற்கள் பெறுகின்றன. அத்தகைய சொற்களில் புணர்ச்சி விதியை நீக்கி தனித்தனிச் சொல்லாகப் பகுத்து எழுதும் முறை மேற்கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக 'பேசிக் கொண்டிருந்தார்கள்' என்பதை 'பேசிக்கொண்டு இருந்தார்கள்' என்று எழுதப்படுவதைக் குறிப்பிடலாம். ஆயினும் இம்முறையிலும் சில வேறுபாடுகள் உள்ளன. தினத்தந்தி, மாலைமுரசு போன்ற செய்தித் தாள்கள் அரைகுறை கல்வி கற்றவரிடம், படிக்கும் பழக்கத்தை விரிவுபடுத்த வேண்டி, மேலே குறிப்பிட்டபடி சொற் களைப் பிரித்து எழுதும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளன.

புதிய எழுத்தாளர்கள், திறனாய்வாளர்கள், செய்தியாளர்கள், பிரித்தெழுதும் முறையில் முன் நின்றார்கள். திரு டி. கே. சிதம்பர நாத முதலியார் மற்றும் வ. ராமசாமி ஆகிய இருவரும் இதனைப் பரப்புவதில் முன்நின்றனர். இதற்குப் பெரும்பாலும் மறுப்பு ஏற் படவில்லை. கூட்டுச்சொற்கள் மற்றும் பழைய இலக்கியங்களை வெளியிடும்பொழுது மட்டும் மக்கள் குறைகண்டனர். காரணம் கூட்டுச்சொல்லை சொல்பிரித்து எழுதினால், சாதாரண சொல்லை யும் சொல் பிரித்து எழுதி, ஒரு முடிவேயில்லாமல் போகும் என எண்ணினர். புற்றரையைப் புல்தரை என்று பிரித்து எழுதும் பொழுது 'கற்றான்' என்பதை 'கல்–தான்' என்று எழுதவேண்டி வருமோ எனவும் அஞ்சினர். ஆனால் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டுச்சொற்களுக்கு இவ்வாதம் முட்டுக் கட்டையாக அமைய வில்லை. 'பால்காரன்' என்பதை அப்படியே 'பால்காரன்' என்று எழுதலாம்; அதனைப் பாற்காரன் என்று விதிக்குட்படுத்தி எழுத வேண்டுவதில்லை. லகரத்திற்குப் பின்வரும் தகரம் இரட்டிக்கப்பட வேண்டும் என்ற திரு.டி.கே.சி. அவர்களின் கருத்து வன்மையாக மறுக்கப்பட்டது. ஆனால் அவர், அதுவே பேச்சு வழக்குடன் பெரிதும் ஒத்திருக்கிறது என்றார்.

'புல் தரை' என்பதை 'புல்த்தரை' என எழுத வேண்டு மென்றார். இம்முறை தேவையற்றது. ஏனெனில் 'தரை' என்ற சொல்லில் தகரம் மொழி முதலில் வருவதால் தகர வல்லொலி குரல் இலா ஓசையே பெறும்; லகரத்திற்குப் பின் வரும்போது மெல் தொடரொலியாக அமையாது. டி.கே.சி. அவர்களின் கருத்து,

வரன் முறையைக் கெடுத்தும், இயற்கையான ஓசை நயத்தை முறித்தும் மெல்லொலி வல்லொலித் தொடரைக் கெடுத்தும் உச்சரிப்பைப் பெரிதும் மாற்றிவிடும் என்பர்.

செய்யுளில் சொல்பிரிப்பது முக்கியமல்ல. அவை அடுத்து வருகின்ற முறையும், ஓசை நயமும், தாளமும், சேர்ந்தே இனிமை சேர்க்கின்றன. ஆதலால் ஒரு தொடர், அதில் உள்ள சொற்களின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிக்கப்படாமல், ஓசை நயத்திற்கேற்பவே பிரிக்கப்படுகின்றன.

இக்கால நவீன எழுத்துத் தமிழில் சொல்பிரித்து எழுதும் முறை மிகுந்த அளவு வெற்றியைத் தந்துள்ளது எனலாம். முற்றுப் பெறாத சொற்றொடர்களான வினையெச்ச பெயரெச்சத் தொடர்களே மிகுந்த அளவு இந்த முறையினால் பிரித்தெழுதப் பட்டுள்ளன. இங்கு கூட வல்லொலிகள், சொல் முதலில் இரட்டிக் கும் நிகழ்ச்சி முற்றிலும் கைவிடப்படவில்லை. கூட்டுச் சொற்களில் ஏற்படும் மூன்று புணர்ச்சி நிகழ்வுகள் முறையே தோன்றல், கெடு தல், திரிதல் என்பனவற்றில், முதல் இரண்டும் செயல்படுகின்றன. இத்தகைய கூட்டுச் சொற்களில் கூட வேறுபாடுகள் காணப்படு கின்றன. வீராணம் திட்டம் / வீராணத் திட்டம்; தங்கம் விலை / தங்கவிலை; கண்டு எடு/கண்டெடு, ஆயினும் பிரித்தெழுதும் முறை இவைகளில் குறைவாகவே உள்ளது. புறப்புணர்ச்சி விகுதிகளில் புதியதாக உருவாக்கப்பட்ட கூட்டுச் சொற்களில் மட்டுமே ஒரே ஒழுங்காகப் பின்பற்றப்பட்டு வந்து, ஏனைய வற்றில் அவ்வளவு முறையாகப் பின்பற்றப்படாமலும் இருக்கிறது. ‘சொற்பொழிவு’ என்ற கூட்டுச்சொல் இலக்கிய வழக்கிலிருந்து உருவாக்கப்பட்டது. பேச்சுவழக்கிலும் இச்சொல் எழுதும் முறையிலேயே உச்சரிக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. பழைய இலக்கியங்கள், பெரும்பாலும் மறுபதிப்பாக வெளியிடும்பொழுது, சொற்களைப் பிரித்து வெளி யிடுவதைக் காணலாம்.

வாக்கிய அமைப்பில் பெரியமாற்றம் என்னவென்றால் பெரிய வாக்கியங்களின் நீளத்தைக் குறைப்பதே. முற்றுப்பெறா சொற் றொடர்கள் “இரவுநேரம்” “ஒரே இருட்டு” என்பன முழுவாக்கியங் களாக ஒத்துக்கொள்ளப்பட்டன. இணைக்கப்பட்ட வாக்கியங்கள், சொற்றொடர்கள் சிறுசிறு சாதாரண வாக்கியங்களாகப் பிரிக்கப் பட்டன. மேற்கோள் குறியீட்டின் மூலம், ‘என்றும்’ என்ற

சொல்லுருபினால் இணைந்து நீளமான வாக்கியங்கள் அமைப் பதைத் தவிர்த்து 'என்று' என்ற சொல்லால் மேற்கோள் குறி முடியும் இடத்தில் எழுதி எளிமையாக்கி வருகின்றனர். மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் இணைக்கப்பட்ட வாக்கியங் களாக ஒரே ஒரு பயனிலையைக் கொண்டு மூல வாக்கியம் முடியு மானால், அங்கு இடப்பெயரினை வருவித்து, சிறு சிறு வாக்கியங் களாக மாற்றுவர். இதே முறையில் ஒப்பிடப்படும் வாக்கியங்களி லும், இரண்டு நிகழ்ச்சிகள் தொடராக அமைந்தால், அவைகளை 'போல' என்ற சொல்லை வருவித்து, இடப்பெயருடன் கூட்டி. புதிய வாக்கியம் அமைப்பர். தொடர்புபடுத்தும் வாக்கியங்களில் உள்ள 'செய்ய' என்னும் வாய்பாட்டில் அமைந்தசொற்றொடரைப் பயன்படுத்துவதற்கு ஈடாக 'ஆனால்', 'அதனால்', 'இருந்தாலும்' என்ற சொற்களின் துணையினால் புதிய தனித்தனி வாக்கியங் கள் தொடங்கப்படுகின்றன.

இப்புதிய வாக்கிய அமைப்பு பேச்சு வழக்கினை எதிரொலிப்ப தாக உள்ளது. பேச்சு வழக்கில் புதியதாகவும், பொதுவானதாக வும் உள்ள வாக்கியங்களை எழுதுவதற்கும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. வாக்கிய எளிமையாக்கம் பேச்சுவழக்கினையும், எழுத்து வழக்கினையும் இணையும்படி செய்கின்றது.

பழைய தமிழறிஞர்களில் எளியவாக்கியங்களைப் பயன்படுத்தி யவர்களில் திரு ஆறுமுக நாவலர் (1822–1867) திரு உ. வே. சாமிநாதையர் (1852–1942), திரு. வி. கலியாணசுந்தர முதலியார் (1883–1052) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவார்கள். இவர்கள் அனைவரும் மொழியின் புதுப்பயனுக்குத் துணைநிற்கும் துண்டு வெளியீடுகள், செய்தித் தொடர்பு, மேடைப்பேச்சு, செய்தி இதழ் கள் ஆகியவைகட்கு இம்முறையையே பின்பற்றினர். படைப்பாளர் களில் திரு சுப்பிரமணிய பாரதி அவர்கள் துவக்கிய சிறு வாக்கிய முறை அவருக்குப்பின் வந்தோரிடம் பரவலாகக் காணப்பட்டது.[1]

---

1 திரு சுப்பிரமணிய பாரதியாருக்குமுன், திரு கோபாலகிருஷ்ண பாரதியார், வடலூர் இராமலிங்க அடிகளார் பாடல்களில் சிறு சிறு வாக்கிய அமைப்புக்களைக் கையாண்டிருந்தபோதிலும் அவை பக்தி மார்க்கத்தை வலியுறுத்தியதால், அதன் தாக்கம், இந்நூற்றாண்டின் உரைநடையில் ஏற்படவில்லை.

இப்பொழுது எளிய வாக்கியமுறையை, மக்கள் விரும்பும் பத்திரிகை நடைக்கு மட்டுமல்ல, கற்றறிந்தோர் பின்பற்றும் இலக்கிய நடைக்கும் பின்பற்றுகின்றனர்.

சொல் நிலையில், எளிமையாக்கம் என்பது பேச்சு மொழியில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதாகும். ஆனால் பேச்சு வழக்கினைப் பின்பற்றி, எழுதும் முறையில் உள்ள எழுத்துக்களைக் கூட்டியோ குறைத்தோ மாற்றங்கள் செய்து, பேச்சிற்கும் எழுத்திற்கும் உள்ள வேறுபாடுகளை முற்றிலும் நீக்கிவிடவில்லை. ஆதலால் இலக்கியங்களில் மட்டுமே பயின்றுவரும் சொற்களுக்கு ஈடாக பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதால், அது பெரும் பான்மையோருக்கு எளிதில் புரியும் என்பதால் அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சொல் எளிமையாக்கம் என்பதை ஆராயும்பொழுது அயல் மொழிச்சொல் தமிழ் மொழிச்சொல் என்று வகைப்படுத்தி அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். தமிழ் பேச்சுமொழிச் சொல், பொதுப்பேச்சிற்குப் பயன்பட்டு, எழுத பயனற்றதாக (திரைப்படம், நாடகம் ஆகியவற்றில் பயன்படும்), உள்ளவை மிகச்சில சொற்களே. 'சுமார்', 'ரொம்ப' என்பன குறுமொழியாகும். எழுத்துமொழி மேற்குறிப்பிட்ட சொற்களைத் தவிர பேச்சு மொழியில் உள்ள சொற்களை ஏற்றுக்கொண்டு வருகிறது. தனியார் கடிதங்களிலும், நாடகங்கள், கதைகள், (வருணனைகள்)செய்தித்தாள்கள் ஆகியவற்றிலும் பெரும்பான்மையாக இது காணப்படுகிறது. எழுத்து வழக்கில் உள்ள சொற்களும் பேச்சு வழக்கில் உள்ள சொற்களும் இணையாக வழங்குவதால் அவைகளைக் குறைக்க எந்த முயற்சியும் இல்லை. ஒரே பொருளில் அல்லது ஒத்த பொருளில் வழங்கும் : கூறு / சொல், உள் / இரு என்பன இவைகட்கு நல்ல எடுத்துக்காட்டுகள்.

பிற மொழிச்சொற்கள் வந்து வழங்குவதை, தூய தமிழ் இயக்கம் எதிர்த்து வந்தது. அயல்மொழிச் சொற்களான 'கஷ்டம்' 'கண்டக்டர்' போன்றவை எழுத்து மொழியில் வந்த பொழுது அவைகளை நீக்கி, தமிழ்ச்சொற்களைப் புகுத்த கல்வெட்டுக்கள், பழைய இலக்கியங்களிலிருந்து பேச்சு வழக்கில் இல்லாத சொற்களைத் தேர்ந்தெடுத்தனர். இதன் காரணமாக இச்சொற்களைப் படிக்க

புதிய அறிவு தேவைப்பட்டது. எளிமையாக்கமும், தூய்மையாக்கமும் நேர் எதிராகச் செயல்படுகின்றனவா என்ற வினா எழுகிறது. இவ்விரு முறைகளைப் பற்றியும் மிகச்சிறந்த தீப்பொறி பறக்கும் விவாதங்கள் நடந்தன. குறிப்பாக நவீன எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், திறனாய்வாளர்கள் பிறமொழிச் சொல்லும், பேச்சு வழக்கில் உள்ளவைகளும் புரிந்துகொள்ளும் தன்மையை அதிகப் படுத்தும்; மாறாக இலக்கியச் சொற்கள் விளங்காமல் போகும் என்று வாதிட்டனர். (சோமலெ 1969: 100–107). தூய தமிழ் இயக்கத்தினர், பெரும்பாலும் தமிழறிஞர்கள், பிறமொழிச் சொல்வழக்கு தமிழின் இனிமையையும், அழகையும், வளத்தையும், தனித்தன்மையும் கெடுத்துவிடும் என்றனர்.

இவ்விரு முயற்சிகளிலும், புதுமையாக்கச் சொற்களைப் பொருத்த மட்டில், மொழித் தூய்மையே பெருமளவு வெற்றி பெற்றுள்ளது எனலாம். (சோமலெ. 1968. 112–151). ஆயினும் புதிய கருத்துக்களை விளக்கும் சொற்கள், நிறுவனங்கள், புதுமையாக்கத்தினால் புதிய சொற்களை உருவாக்கும் பொழுது, மொழித் தூய்மையால் உருவான சொற்களைப் பயன்படுத்தும் பொழுது பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள இடைவெளி குறைந்து வருகின்றது எனலாம். இந்நிலை நீடித்து வெற்றி பெற்றால், தூய்மையாக்கம் எளிமையாக்கத்தைக் கெடுத்துவிடாது. அறிஞர் எழுத்தாளர் திரு. மு. வரதராசன் போன்றோர் இவ்விரண்டினையும் கலந்து உரைநடைகளில் பயன்படுத்தி ஒரு முன்னோடியாக விளங்கினார்கள்.

* டாக்டர் இ. அண்ணாமலையின் 'Simplification as a process of modernization'' (**Socio linguistics and Dilectology** 1980, pp. 1–12) என்ற கட்டுரையின் தமிழாக்கம்.

தமிழாக்கம்: கோ. சீனிவாசவர்மா

துணை நூல்கள்

Annamalai E. 1977 Movement for Linguistic Purism: The case of Tamil. To appear in **Language movements of this century in India.** Mysore: CIIL.

Aravanan K. P. 1975 Editors' Note on Tamil script reform in Gnanaprakasam, V.M. & K.P. Aravanan.

Ferguson C. 1971: **Lang uage structure and Language use.** The Hauge; Mouton.

Gnanaprakasam V.M. and K.P. Aravanan, (ed) 1975 **Pioneers of modern Tamil,** Madr as Academy of Tamil culture (in Tamil)

Huagen, E. 1966 Linguistics and Language planning. In Bright. William (ed.) **Sociolinguistics.** The Hauge: Mouton.

Hymes, D. (ed.) 1971 **Pidginisation and Creolisation of Languages**. London: Cambridge.

Kothandaraman P. 1974 'Tamil Eluttukkal' In **Centamil,** Madras: Tamil Nulagam.

Mahadevan K. S. 1975 Periyar E. V. R., In Gnanaprakasam, V.M. & K.P. Aravanan.

Somale. 1968 **Valarum Tamil** Third Edition (in Tamil). Paari Nilayam, Madras.

Venkataswamy, Mayili Seeni; 1962 **History of Tamil Literature 19th Century** (in Tamil): Santhi Nuulagam Madras

மொழியியல் 4.1 & 2 (1980)

தமிழ்ச் சிறுகதைகளில் இரட்டை வழக்கு

ந. தெய்வசுந்தரம்

0. தமிழ்மொழியில் நிலவுகிற இரட்டை வழக்குச் சூழ்நிலை (diglossic situation) எவ்வாறு தமிழ்ச் சிறுகதைகளில் பிரதிபலிக்கப்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும் எழுத்தாளர்கள் தமிழ்மொழியை அதனுடைய இரட்டைவழக்குப் பண்புடன் தங்கள் சிறுகதைகளில் பயன்படுத்துவதில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதையும் கண்டறிய இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0.1. தமிழில் இரட்டை வ்ழக்குச் சூழ்நிலை

தமிழ் மொழியில் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என இரு வேறு வழக்குகள் நிலவுகின்றன. இவை இரண்டில் ஒவ்வொன்றும் வெவ்வேறு குறிப்பிட்ட சமூகச் செயல்பாடுகளை (Social function) நிறைவேற்றுகின்றன. இலக்கியம், கடிதங்கள், இலக்கியச் சொற்

பொழிவுகள், செய்தி ஒலிபரப்பு, பத்திரிக்கைத்தலையங்கம், கவிதைகள் போன்றவைகளில் எழுத்து வழக்கு பயன்படுத்தப் படுகின்றது. குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் உரையாடுவதற்குப்பேச்சு வழக்கு பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்ச் சமுதாயமானது மேற்குறிப்பிட்ட இருவழக்குகளையும் வேறுபட்ட இரு வழக்குகளாகவே கொள்கிறது. எழுத்து வழக்கு பயன்படுத்தப்பட வேண்டிய இடங்களில் பேச்சு வழக்குப் பயன்படுத்தப்படுவதில்லை; அதுபோல் பேச்சு வழக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இடத்தில் எழுத்து வழக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. இத்தன்மை கொண்ட ஒரு சூழ்நிலையே இரட்டை வழக்குச் சூழ்நிலை அல்லது இரட்டை வழக்கு என அழைக்கப்படுகிறது. தமிழில் இரட்டை வழக்குச் சூழ்நிலை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வருகின்றது.

பொதுவாக, தமிழ்ச்சமுதாயமானது எழுத்து வழக்கிற்கே மதிப்பு (prestige) அளிக்கிறது; அதையே உயர் மொழியாகக் (standard language) கருதுகிறது; பேச்சு வழக்கை எழுத்து வழக்கின் சிதைவு வடிவமாகக் (the corrupted form) கருதுகிறது.

எழுத்து வழக்கு நிறைவேற்றுகின்ற சமூகச் செயற்பாடுகளின் தன்மை, பேச்சு வழக்கு நிறைவேற்றுகின்ற சமூகச் செயற்பாடுகளின் தன்மையிலிருந்து வேறுபடுகின்ற காரணத்தால், இரு வழக்குகளும் தங்களுடைய அமைப்புகளில் அனைத்து மட்டங்களிலும் வேறுபாடுகளைக் கொண்டிருப்பது இயற்கையே.

அதே சமயத்தில், மேற்கண்ட இரு வழக்குகளும் ஒரு மொழியின் இரு வழக்குகளே என்பதையும் அவை இரண்டும் ஒரே மொழிச் சமுதாயத்தால் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் மனதில் கொள்வது அவசியமாகும். இதன் காரணமாக, அவை இரண்டும் தங்கள் அமைப்பில் ஒற்றுமைப் பண்புகளைப் கொண்டிருப்பதும் இயற்கையே. மேலும் இவை இரண்டின் செயற்பாடுகளைப் பொறுத்த மட்டில், சிற்சில இடங்களில் வரையறுத்த எல்லைகள் நிலவாத காரணத்தால், ஒரு வழக்கின் பாதிப்பு மற்றொரு வழக்கின் மீது ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

1.0. கதை எழுதுவதில் தற்காலப் போக்கு

தற்காலத்தில் இயற்பண்புவாதக் கருத்துகள் (concept of realism) தமிழ் எழுத்தாளர்களை ஒரு குறிப்பிட்ட அளவு பாதித்துள்ளது. அவர்கள் தங்களுடைய இலக்கியங்களை இயற்பண்பு உடையதாகப் படைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய பாத்திரங்களை அப்பாத்திரங்களின் அனைத்து இயற்கையான பின்னணிகளுடன் படைக்க முயற்சி செய்கிறார்கள். இயற்கைப் பின்னணி அம்சங்களில் மொழி முக்கியமான ஒன்றாகும். எனவே, எழுத்தாளர்கள் பாத்திரங்களின் உரையாடல்களில் பேச்சு வழக்கைப் பயன்படுத்த முயற்சி செய்கிறார்கள். இதன் பயனாய்ப் பேச்சுத் தமிழ் எழுத்து இலக்கியங்களில் புகத் தொடங்கியுள்ளது.

1.1. இரட்டை வழக்கு உணர்வு (Diglossic Consciousness)

தமிழ்ச் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் இரட்டை வழக்குப் பண்பைப் பற்றி உணர்வு உள்ளவர்களாகவே இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் இரு வழக்குகளுக்கும் தமிழ்ச் சமுதாயம் பிரித்து அளித்துள்ள வேறுபட்ட சமூகச் செயற்பாடுகளை நன்கு தெரிந்தே உள்ளனர். யாராவது ஒருவர் இவ்வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதில் தவறிழைத்து ஒரு குறிப்பிட்ட வழக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இடத்தில் மற்றொரு வழக்கைப் பயன்படுத்தினால், அவர் நகைப்பிற்கு உள்ளாவார். மேற்கண்ட இரு வழக்குகளின் பாத்திரங்கள் பற்றிய உணர்வை "இரட்டை வழக்கு உணர்வு" என்றழைக்கலாம்.

எனவே ஒரு எழுத்தாளர் தன்னுடைய எழுத்துக்களுக்கு இயற்பண்பு அளிப்பதற்காக, தமிழின் இருவழக்குகளையும் பயன்படுத்த விரும்பினால், அவர் முதலில் இவ்விரு வழக்குகளின் செயற்பாடுகளைப் பற்றியும் தெளிவான அறிவைக் கொண்டிருப்பது மிக அவசியமானதாகும். வேறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப இவ்விரு வழக்குகளையும் முறையாகப் பயன்படுத்தும் திறமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தமிழின் இருவழக்குகளின் செயற்பாடுகளைப் பற்றிய அறிவை பெற்றிருப்பதனால் மட்டும் ஒரு எழுத்தாளர் இரட்டை வழக்குச் சூழ்நிலையைச் சரியாகப் பிரதிபலித்துவிட முடியாது; மாறாக, இரு வழக்குகளின் அமைப்புகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு களைப் (Structural differences) பற்றிய அறிவையும் கொண்டிருப் பது மிக அவசியமானதாகும். இல்லையென்றால், இரு வழக்குகளை யும் தன்னுடைய எழுத்துக்களில் முறையாகப் பயன்படுத்தும் தனது முயற்சியில் அவர் எதிர்பார்த்த வெற்றியை அடையமாட்டார்.

எனவே ஒரு எழுத்தாளர் தமிழின் இரு வழக்குகளையும் பயன் படுத்த விரும்புவாரானால், எழுத்து வழக்கின் இலக்கணத்தை மட்டும் படித்திருப்பது போதாது; மேற்கண்ட இரு வழக்குகளுக்கு இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றிய அறிவை யும் அவர் பெற்றிருக்க வேண்டும். எழுத்து வழக்கு எவ்வாறு தனக் கென்று சில விதிகளைக் கொண்டுள்ளதோ அவ்வாறே பேச்சு வழக்கும் தனக்கென்று சில விதிகளைக் கொண்டுள்ளது; இதனை மறத்தல் கூடாது.

எனவே இரட்டை வழக்கு உணர்வு என்பதானது, இரு வழக்கு களுக்கும் சமுதாயம் பிரித்தளித்துள்ள செயற்பாடுகளின் வேறுபாடு பற்றிய உணர்வுமட்டுமின்றி, அவை இரண்டுக்கும் இடையில் அமைப்பில் நிலவுகிற வேறுபாடு பற்றிய உணர்வையும் உள்ளடக்கியதாகும்.

2.0. ஜெயகாந்தன் எழுத்துக்களில் எழுத்து வழக்கும், பேச்சு வழக்கும்.

இக்கட்டுரையில் நாடறிந்த எழுத்தாளரான ஜெயகாந்தனின் கதைகள் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. ஒப்பு நோக்குகையில் இரு வழக்குகளையும் பயன்படுத்துவதில் ஜெய காந்தனே அதிகம் வெற்றி கண்டுள்ளார். எனவே, அவருடைய கதைகள் இங்கு ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஜெயகாந்தன் எழுதிய ''சீட்டாட்டம்'' என்ற சிறுகதை ஆய்விற்காக இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறுகதையில், ஜெயகாந்தன் எழுத்து வழக்கை இரு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துகிறார்: (1) எழுத்தாளரின்

சொந்த வர்ணனை (author's own narration) (2) பாத்திரங்கள் நினைப்பதைக் கூறுவதற்கு.

பாத்திரங்களுக்கு இடையில் உள்ள உரையாடல்களுக்கு அவர் பேச்சுத் தமிழைப் பயன்படுத்துகிறார்.

3.0. ஆய்வுமுறை

3.1. எழுத்து வழக்கை முறையாகப் பயன்படுத்துவதில் ஜெயகாந்தன் பெற்றுள்ள வெற்றி பற்றி முதலில் ஆய்வு செய்யப் படுகிறது.

3.2. இரண்டாவதாக, உரையாடல்களில் பயன்படுத்தப்பட் டுள்ள எல்லா வார்த்தைகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. பின் அவை எழுத்து வழக்கைச் சேர்ந்தவை, பேச்சு வழக்கைச் சேர்ந்தவை, இரண்டு வழக்கிற்கும் பொதுவானவை என்று வேறுபடுத்தப்படு கின்றன.

3.3. மூன்றாவதாக, ஜெயகாந்தன் உரையாடல்களில் பேச்சு வழக்கு வடிவங்களைப் பயன்படுத்துவதில் எவ்வளவு தவறு புரிந்துள்ளார் என்பது புள்ளியியல் அடிப்படையில் கணக்கிடப் பட்டுள்ளது.

4. கடைசியாக, பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதில் அவர் எவ்விடத்தில் தவறுகிறார் என்பதைக் கண்டறிய முயற்சி செய்யப் பட்டுள்ளது.

4.0. பிழைகள்

4.1. எழுத்து வழக்கைப் பயன்படுத்துவதில், ஜெயகாந்தன், சில இடங்களில் "லேசா" "ரொம்ப" என்ற சொற்களைப் பயன் படுத்தியதைத் தவிர அவர் எழுத்தில் வேறு குறிப்பிடத்தக்க தவறு எதுவும் இல்லை.

4.2. ஆனால் பேச்சு வழக்கைச் சரியாகப் பயன்படுத்துவதில் அவர் பல இடங்களில் தவறுகிறார். உரையாடலில், மொத்தம் 677 சொற்கள் உள்ளன. அவற்றில்,

1. 207 சொற்கள் எழுத்து வழக்கிற்கே உரித்தானவை;
2. 235 சொற்கள் பேச்சு வழக்கிற்கே உரித்தானவை;
3. 235 சொற்கள் இரு வழக்கிற்கும் பொதுவானவை,

4.3. எனவே, ஜெயகாந்தன் 207 சொற்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

5.0. பேச்சுவழக்கைப் பயன்படுத்துவதில் தவறுகள்

ஜெயகாந்தன் உரையாடல்களில் 30.6 விழுக்காட்டுச் சொற்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். இச் சொற்கள் பேச்சு வழக்கு வடிவங்களில் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் அவை கதையில் எழுத்து வழக்கு வடிவத்தில் காணப்படுகின்றன.

பேச்சுவழக்கின் அமைப்பு முறையைப்புரிந்து, பயன்படுத்துவதில் ஜெயகாந்தன் முழுமையாக வெற்றி அடையவில்லை. அவருடைய தவறுகள் மூன்று தலைப்புகளில் கீழே ஆராயப்படுகின்றன

5.1. தவறுகள் (Errors)

இங்கே ஜெயகாந்தன் கதைமுழுவதும் செய்துள்ள தவறுகள் ஆராயப்படுகின்றன.

5.1.1. –ஆய் என்பது எழுத்து வழக்கில் வினையடை விகுதியாக (adverbial marker) பயன்படுத்தப்படுகிறது. இதற்குச் சமமாக பேச்சு வழக்கில்–ஆ என்ற விகுதி பயன்படுத்தப்படுகிறது.

–ஆய்→–ஆ

ஆனால், ஜெயகாந்தன்–ஆய் என்ற எழுத்து வழக்கு விகுதியையே பேச்சு வழக்கிற்கும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா) 'தாராளமாய்'

('தாராளமா' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்).

5.1,2 பேச்சு வழக்கில் சொற்கள் மெய்யெழுத்தில் முடிவடைவதில்லை. எழுத்து வழக்கில் ஒரு சொல் மூக்கொலியில் முடிந்தால், பேச்சு வழக்கில் அந்த மூக்கொலி கைவிடப்பட்டு அதற்கு முந்தைய உயிர் மெல்லினமாக்கப்படும். மற்ற மெய்யெழுத்துகளில் முடிந்தால், "உ", "இ" என்ற இரண்டு உயிர்களில் ஏதாவது ஒன்று அக்கடைசி மெய்யெழுத்துடன் இணைக்கப்படும்.

ஆனால், ஜெயகாந்தன் மெய்யெழுத்துகளில் முடிவடைகின்ற சொற்களைப் பேச்சு வழக்குச்சொற்களாகப் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா) யார்

திமிர்

ஆனால், 'யார்' என்பதற்குப் பதில் 'யாரு' என்பதும் '**திமிர்**' என்பதற்குப் பதில் '**திமிரு**' என்பதும் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

5.2. நிலையின்மை (Inconsistency)

ஜெயகாந்தன் சில இடங்களில் பேச்சு வழக்கு விதிகளை முறையாகக் கையாண்டுள்ளார். ஆனால் சில இடங்களில் அவ்வாறு செய்யத் தவறியுள்ளார். இப்படிப்பட்ட சில தவறுகள் கீழே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

5.2.1. –VN → V

V–உயிர் எழுத்து

N–மூக்கொலி

ˆ –மூக்கொலி தன்மை உடையதாக்கல்

மேற்கண்ட விதி பேச்சு வழக்கிற்குரிய ஒரு பொது விதியாகும். எழுத்து வழக்குச் சொற்களில் இறுதியில் வருகின்ற மூக்கொலி கைவிடப்படும்.

ஜெயகாந்தன் மேற்கண்ட விதியை இரண்டு இடங்களில் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்.

(எ–கா) நா (நான்)

ஆமா (ஆமாம்)

இவ்விடத்தில் அவர் கடைசி உயிர் எழுத்து மெல்லினத் தன்மை பெறுதலைக் குறிக்கின்ற எவ்வித அடையாளக் குறியீட்டையும் பயன்படுத்தவில்லை. ஆனால் கடைசி மூக்கொலியைக் கைவிட்டுள்ளார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சரியான பேச்சு வழக்கு வடிவத்தை எவ்வாறு எழுதுவது என்பதில் அவருக்கு உள்ள குழப்பத்தையே மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் பிரதிபலிக்கின்றன.

ஆனால், மற்ற எல்லா இடங்களிலும் அவர் மேற்கண்ட விதியைப் பின்பற்றுவதில் தவறு செய்றுள்ளார். அவர் மேற்கண்ட விதியைச் சரியாகக் கடைப்பிடித்த சொற்களில், அதாவது, மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சொற்களில் கூட, பின்னால் பயன் படுத்தும்போது தவறிழைக்கிறார்,

(எ.கா) சொன்னேன்
ஸ்தானம்
அழலாம்
ஏன்
நான்
ஆமாம்

5.2.2. $C_IB_2C_2 \rightarrow C_2C_2$

மேற்கண்ட விதி பேச்சு வழக்கில் C_IC_2 – மெய் எழுத்துக்கள் மெய் ஒட்டுக்கள் (Clusters) வரும் இடத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் ஜெயகாந்தன் மேற்கண்ட விதியைப் பயன்படுத்துவதில் நிலையற்ற தன்மை உடையவராக இருக்கிறார்.

(எ.கா) பாத்தியா

மற்ற இடங்களில் அவ்வாறு பயன்படுத்தத் தவறுகிறார்.

(எ.கா) பார்க்கக் கூடாதா
பார்த்துத்தான்

5,2.3. – ஆல் (நிபந்தனை விகுதி) → – ஆ

ஆனால் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து இவ்விதியைப் பயன்படுத்துவதில் ஜெயகாந்தனின் நிலையற்ற தன்மையைக் காணமுடியும்.

(எ.கா) பண்ணினா
கூப்பிட்டா
மூடிட்டா
இருந்தால்
சொன்னால்

5.2.4. இ→எ/-(மெ.எ) அ/ஐ

இவ்விதி மிகவும் பிரபலமானது; அடிக்கடி பயன்படுத்தப்படுவதும் ஆகும். ஆனால் ஜெயகாந்தன் இந்த விதியை எல்லா இடங்களிலும் சரியாகப் பயன்படுத்தவில்லை.

(எ.கா.) நெறெயெ
நெனச்சிக்க
கெடைக்க
நிலையும்
கிடைக்கிறது
கிழமை
தினமும்

5.2.5. உ→ஒ/-(மெ.எ) அ/ஐ

இவ்விதியைப் பின்பற்றுவதிலும்கூட ஜெயகாந்தனிடம் நிலையற்ற தன்மையே நீடிக்கிறது.

(எ.கா.) கொறச்சல்
கொழெந்தை
குறை
உடம்பிலே
உன்னை
புடவை
முதல்

5.2.6. ஐ →அய்/முதல் அசையில்
→எ/இறுதியில்
→அ/பிற இடங்களில்

ஜெயகாந்தன் மேற்கண்ட விதியைச் சில இடங்களில் சரியாகப் பயன்படுத்துகிறார். சில இடங்களில் தவறிவிடுகிறார்.

(எ.கா) வெப்பான்னு
நெறெய
புழுங்கறதே
இல்லே

அதை
அவனை
பந்தை
தடவை
ஆசை

5.2.7. –த்த் – (இறந்தகால விகுதி) → –ச்ச் – /ய–/இ–/இ–
ஜெயகாந்தன் மேலே காட்டிய விதியைக் கீழ்க்கண்ட ஒரு சொல்லில் தவிர, மற்ற சொற்களில் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்.

கோபித்து

5.2.8.

–இடம் (இடவேற்றுமையைக் குறிக்கும் உருபு) → கிட்டே

ஜெயகாந்தன் கீழ்க்கண்ட ஒரே ஒரு சொல்லைத்தவிர, பிற இடங்களில் இந்த விதியைச் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்.

புருஷனிடம்

5.2.9.

–ஆக (வினையடை விகுதி) → – ஆ

கீழ்க்கண்ட சொற்களில் ஜெயகாந்தன் மேற்கண்ட விதியைச் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்.

சந்தோஷமா
பயமா
நேரா

ஆனால் கீழ்க்கண்ட இரு சொற்களில் அந்த விதியைப் பயன்படுத்தவில்லை.

விசித்திரமாக
அழகாக

5.3. உறுதியற்ற நிலை (Uncertainty)

பேச்சு வழக்கை எழுத்தில் பிரதிபலிப்பதில் உள்ள சில பிரச்சனைகள், சில சொற்களைப் பொறுத்தமட்டில் ஜெயகாந்தனிடம் உறுதியற்ற நிலையை ஏற்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு இடத்தில் 'நான்' என்ற எழுத்து வழக்கிற்கு இணையான 'நா' என்ற பேச்சு வழக்கு வடிவத்தைப் பேச்சு வழக்கில் பயன்படுத்துகிறார். அதாவது, இங்கே கடைசி மூக்கொலியை நீக்கி விடுகிறார். ஆனால் பிற எல்லா இடங் களிலும் அவர் 'நான்' என்ற எழுத்து வழக்கு வடிவத்தை அப்படியே பேச்சு வழக்கிலும் பயன்படுத்துகிறார். அதுபோல, ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'ஆமா' என்ற பேச்சு வழக்கு வடி வத்தைப் பயன்படுத்துகிறார்; பிற இடங்களில் 'ஆமாம்' என்ற எழுத்து வழக்கு வடிவத்தை அவ்வாறே பேச்சு வழக்கிலும் பயன்படுத்துகிறார்.

மேற்கண்ட எடுத்துக் காட்டுகள் மூலம் சில இடங்களில் ஜெயகாந்தன் உறுதியற்ற நிலை உடையவராக இருத்தலை நம்மால் காணமுடிகிறது. மெல்லினத் தன்மைக்கு உருவம் கொடுப்பதில் பிரச்சனைகளை எதிர் நோக்குகிறார். எனவே சில இடங்களில் இறுதி மூக்கொலியை நீக்கிவிடுகிறார்; சில இடங்களில் எழுத்து வழக்கு வடிவத்தை அப்படியே பயன்படுத்து கிறார்.

6. வேறுபாடுகளுக்குக் காரணங்கள் (Causes for the discrepancy)

ஜெயகாந்தனின் கதையில் காணப்படுகிற வேறுபாடுகளுக்கு மூன்று காரணங்கள் கூறப்படலாம்.

6.1 எழுத்து வழக்கின் தாக்கம்

பொதுவாக எழுத்து வழக்கே எழுத்து இலக்கியங்களில் உரையாடல் உட்பட அனைத்து நோக்கங்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. தற்போதுதான், சில எழுத்தாளர்கள் பேச்சு வழக்கை தங்களுடைய இலக்கியங்களில் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்த முயற்சி செய்கிறார்கள். எனவே, அவர்கள் பேச்சு வழக்கைப் பயன்படுத்தும் போது, எழுத்து வழக்கின் செல்வாக் கிற்கு உட்படுவது இயல்பே. ஆனால் இது தவிர்க்க முடியாத ஒன்றல்ல என்பது இங்குச் சுட்டிக் காட்டப்பட வேண்டியது அவசியமாகும். எழுத்தாளர்கள் இரட்டை வழக்கு உணர்வில் மிக எச்சரிக்கையாக இருந்தால், அவர்களால் எழுத்து வழக்கின் பாதிப்பிலிருந்து விடுபட முடியும்.

6.2. அமைப்பு முறைகள் பற்றிய அறிவுக் குறைவு (Lack of knowledge of the system)

ஒருவர் எழுத்து வழக்கைப்பயன்படுத்த விரும்பினால், அவர் எழுத்துத் தமிழின் அமைப்பைக் கற்றறிய வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லையென்றால், அவர் தன் முயற்சியில் தோல்வியையே தழுவுவார். எல்லா எழுத்தாளர்களும் இதனை ஏற்றுக்கொள்வார்கள். அதுபோல, பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதற்கும், ஒருவர் பேச்சுத் தமிழின் அமைப்பு பற்றிய உணர்வு பூர்வமான கல்வியைப் பெற வேண்டியது உள்ளது. ஆனால் பேச்சு வழக்கைப் பயன்படுத்த முயற்சி செய்யும் பல எழுத்தாளர்கள், அந்த வழக்கைக் கற்றறிய உணர்வுபூர்வமான முயற்சி எடுப்பதில்லை. எழுத்து வழக்கு பற்றிய அறிவே பேச்சு வழக்கைக் கையாள்வதற்கும் போதுமானது என்று அவர்கள் எண்ணுகின்றனர். அதாவது, ஒருவர் எழுத்துவழக்கைப் பயன்படுத்துவதில் திறமையும் அறிவும் பெற்றிருந்தாலே, அவரால் பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதற்குத் தேவையான திறமையைப் பெற முடியும் என அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அது உண்மை அல்ல. உணர்வுபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளாமல் ஒருவராலும் பேச்சு வழக்கில் திறமைபெற முடியாது.

மேலும் பேச்சு வழக்கு எங்கெங்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஒருவர் திறமை உடையவராக இருந்தாலே, அவரால் தானாக சரியான பேச்சு வழக்கு வடிவத்தைத் தரமுடியும் என சில எழுத்தாளர் நினைக்கின்றனர். இதுவும் உண்மையல்ல. பொருத்தமான சூழ்நிலைகளில் பேச்சு வழக்கைப் பயன்படுத்தும் திறமை (skill) என்பது வேறு; சரியான பேச்சு வழக்கு வடிவத்தை அளிக்கும் அறிவு (knowledge) எனபது வேறு. முதலில் கூறிய திறமையைப் பெறுவதற்கு, இரு வழக்குகளுக்கும் சமூகம் அளித்துள்ள செயற்பாடுகளைப் பற்றிய அறிவு போதுமானது. ஆனால் இரண்டாவது கூறிய அறிவைப் பெறுவதற்கு ஒருவர் இரு வழக்குகளின் அமைப்புகளைப் பற்றி ஆராய்ந்தறிந்து இருக்கவேண்டும். எனவே பேச்சு வழக்கைத் தேவையான இடத்தில் பிழை இல்லாமல் பயன்படுத்துவதற்கு, ஒருவர் பேச்சு வழக்கை எங்கே பயன்படுத்த வேண்டும் என்பதைப்பற்றிய திறனையும், அதே சமயத்தில் பேச்சு வழக்கின் அமைப்பு பற்றிய அறிவையும் பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

6.3. வரிவடிவங்களில் ஏற்படும் பிரச்சினைகள் (Difficulties with the Graphemes)

தற்போது தமிழில் நிலவுகின்ற வரிவடிவங்கள் எழுத்து வழக்கிற்கான வரிவடிவங்களே ஆகும். அவை பேச்சு வழக்கையும் முழுமையாக எழுதுவதற்கு போதுமானதல்ல. பேச்சு வழக்கில் சில புதிய ஒலியன்கள் தோன்றியுள்ளன. எனவே இப்புதிய ஒலியன்களை எழுதுவதற்கு வரிவடிவங்கள் தேவையாக உள்ளது. பேச்சு வழக்கில் உள்ள அனைத்து ஒலியன்களையும் எழுதுவதற்கு வரிவடிவங்கள் இல்லாத காரணத்தால் எழுத்தாளர்கள் சரியான பேச்சு வழக்கை எழுதுவதில் பிரச்சனையை சந்திக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, மெல்லினத் தன்மை பெறுதலையும் (nasalization) ஒலியுள்ள வல்லெழுத்துக்களையும் (voiced plosives) எழுதுவதற்கு தற்போது நிலவுகிற தமிழ் வரிவடிவ அமைப்பில் வரிவடிவம் இல்லை. எனவே மேற்கண்ட ஒலியன்கள் வரும் இடங்களில், எழுத்தாளர்கள் எழுத்து வழக்கை அப்படியே தருகிறார்கள். எனவே பேச்சு வழக்கை வெற்றிகரமாக எழுத்திலக்கியங்களில் பயன்படுத்துவதற்கு, புதிய வரிவடிவங்களும், தேவை என்பது தெளிவாகிறது.

7.0. முடிவுரை:

7.1. தமிழ்ச் சமுதாயம் தமிழின் இரு வழக்குகளுக்கும் பிரித்தளித்துள்ள சமூகச் செயற்பாடுகள் பற்றி ஜெயகாந்தன் நன்கு உணர்ந்தவராக இருக்கிறார்.

7.2. அவர் எழுத்து வழக்கின் அமைப்பு முறையை சரியாகவே பின்பற்றுகிறார். ஆனால் பேச்சு வழக்கைப் பொருத்தவரையில் தவறுகிறார். அவர் பேச்சு வழக்கின் அமைப்பை உணர்வு பூர்வமாக ஆய்ந்தறிய முயற்சி செய்திருந்தால், பெரும்பான்மையான தவறுகளைத் தவிர்த்திருக்க முடியும்.

7.3. பேச்சு வழக்கின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் தமிழ் வரிவடிவ அமைப்பு முறை வளர்க்கப்பட வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

ஒரு பொருட் பன்மொழி வளம்

உலகிலேயே ஒருபொருட் பலசொற்கள் (Synonyms) நிறைந்த மொழி ஆங்கிலமே என்று பலரும் கருதி வருகின்றனர். ஆங்கிலத்தில் உள்ள ஒரு பொருட் பல சொற்களைக் காட்டிலும் நுட்பமான பொருள் வேறுபாடுகளைக் காட்டும் அளவில்லாத சொற்றொகுதிகளைக் கொண்டது தமிழ். ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள ஒரு பொருட் பன்மொழி அகராதியில் உள்ள சொற்களைக் காட்டிலும் இருமடங்கு சொற்களுக்குத் தமிழில் ஒரு பொருட் சொற்கள் உள்ளன. தமிழ் நிகண்டுகளில் கூறப்பட்டுள்ள ஒருபொருட் பல சொற்களைவிட ஐந்து மடங்கு விரிவான ஒருபொருட் பன்மொழியகராதி (செந்தமிழ்ச் செல்வம்) ஒன்று தொகுக்கப் பெற்றுள்ளது. பெண்ணைக் குறிக்கும் ஆயிரஞ் சொற்கள் 'பெண்ணின் பெயர்கள்' என்ற தனி நூலாக வெளிவந்துள்ளது. பெண்ணைக் குறிக்கும் இத்துணைச் சொற்கள் உலகில்வேறு எம்மொழியிலுமில்லை என்று மொழியாராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். தமிழில் பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் சொற்கள் 2000 தொகுக்கப் பெற்றுள்ளன. சிவபிரானைக் குறிக்க ஐயாயிரஞ் சொற்கள் உள்ளன; முப்பதாயிரம் அடைமொழித் தொடர்கள் உள்ளன; முருகனைக் குறிக்கும் பன்னீராயிரம் தொடர்கள் 'முருகன் அருட் செல்வம்' என்ற தலைப்பில் தொகுக்கப் பெற்றுள்ளன. விநாயகர், திருமகள், கலைமகளைக் குறிக்கும் தொடர்களும் பெயர்களும் நூல்வடிவம் பெற்று வெளிவந்துள்ளன. உமாதேவி, திருமால், கண்ணன் முதலிய தெய்வங்களைப்பற்றிப் பல்லாயிரம் அடைமொழித் தொடர்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

மு. சதாசிவம்,

தமிழின் அழகுகள் ஈரோடு, 1980.

மொழியியல் 4, 1 & 2 (1980)

மொழி ஞாயிறு

ஞா. தேவநேயப் பாவாணர்

மொழியியற் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரநாயினர் கோவில் என்னும் ஊரில், ஞானமுத்து, பரிபூரணம் ஆகிய பெற்றோர்க்கு 1902 ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் ஏழாம் நாள் (7—2—1902) பிறந்தார். பண்டிதர், புலவர் வித்துவான் முதலியவற்றைப் பயின்றபின்பு எம்.ஏ. பட்டமும் பெற்றார். 1924லிலேயே பண்டிதப் பட்டம் பெற்றார்.

திருச்சி புத்தூர் பீசப் ஈபர் உயர்நிலைப்பள்ளியிலும் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும் பணியாற்றினார். பின்னர் சேலம் கல்லூரியில் பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிநூல் துறையில் இணைப்பேராசிரியராகப் (Reader) பணியாற்றினார். சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் தமிழக

அரசின் அகரமுதலித் திட்டத்தில் இயக்குநராகப் (Director) பணியாற்றும்போது இயற்கை எய்தினார்.

1968–ல் ‘உலகத் தமிழ்க்கழகம்’ என்ற அமைப்பை உருவாக்கி, தமிழ் வளர்ச்சிபெற தமிழர் எல்லாத்துறையிலும் முன்னேற அரும்பாடுபட்டார். உலகத்தமிழரை ஒன்று கூட்டுவதும் அவர் களது உள்ளங்களில் தமிழ் உணர்வை ஊட்டுவதும் ஒளிதரும் தமிழ் வரலாற்றை அறியச் செய்வதும் உண்மைப் பழம்பெருமையை ஈட்டுவதும் பாவாணரின் கொள்கைகளாக அமைந்தன.

மொழியியல் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு. தமிழ் அகராதி, ஒப்பிலக்கணம், தமிழ் நாட்டு வரலாறு, தமிழர் மதம், தமிழ் இலக்கிய வரலாறு, மொழியியல் சம்பந்தமாக முப்பது நூற்களும் நூற்றுக்கு மேற் பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்கள். மொழிப் பேரறிஞர், சொல்லியல் வல்லுநர், புலமைக்கடல், குமரி வரலாற்றுக்கோள், தனித்தமிழ்க்குரிசில் என்றெல்லாம் இவரைப் பாராட்டுவர்.

பாவாணர் எழுதியுள்ள நூற்கள்

1. ஒப்பியன் மொழிநூல்
2. முதல் தாய்மொழி
3. சுட்டு விளக்கம்
4. திராவிடத்தாய்
5. இயற்றமிழ் இலக்கணம்
6. செந்தமிழ்க் காஞ்சி
7. தமிழர் திருமணம்
8. பழந்தமிழாட்சி
9. கட்டுரை வரைவியல்
10. தமிழ்நாட்டு விளையாட்டுக்கள்
11. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற் பாகம்)
12. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (இரண்டாம் பாகம்)

13. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு
14. தமிழ் வரலாறு
15. தமிழர் வரலாற்றுச் சுருக்கம்
16. கட்டுரை கசடற
17. மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை
18. பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும்
19. இசைத்தமிழ்க் கலம்பகம்
20. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
21. வடமொழி வரலாறு
22. தமிழர் வரலாறு
23. தமிழர் மதம்
24. திருக்குறள் - தமிழ் மரபுரை
25. தமிழிலக்கிய வரலாறு
26. வண்ணனை மொழிநூலின் வழுவியல்
27. வேர்ச்சொல் கட்டுரைகள்
28. இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
29, A critical Survey of the Madras University Tamil Lexicon
30. The primary classical language of the world

இவரது நூற்களை நோக்குமிடத்து பல்துறை அறிவும் மதி நுட்பமும் ஆழ்ந்த புலமையும் உடையவர் எனத் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் பெரும்பான்மையும் சொல் பிறப்பியலைப் (Etymology) பற்றிய தாகும். தமிழில் சொற் பிறப்பியலைப் பற்றி எண்ணும்போது பாவாணரின் நினைவுதான் அனைவருக்கும் வரும். சொல்லுக்குச் சொல் வரலாறு கண்ட அறிஞர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார் தொல்காப்பியர். மொழி நூலறிவுடை யார் ஒவ்வொரு சொல்லிற்கும் அடிப்படையாய் நிற்கும் வேரினை ஆராய்ந்து அதன் பொருளைத் தெள்ளிதின் கண்டு கொள்வர். சொல்லின் வேரே அச்சொல் எம் மொழியைச் சார்ந்ததென்பதை அறுதியிடுவதற்கான பற்றுக்கோடாகும். வேர்ச்சொற் கட்டுரை களைத் தொடர்ந்து 'செந்தமிழ்ச் செல்வி'யில் எழுதிவந்தார்கள். இவரது நுண்மாண் நுழைபுலத்திறனை விளக்குவனவாக அமைந் திருந்தன இக் கட்டுரைகள். இப்பணிக்கு தமிழகத்தில் இவரை யொப்பாரும் மிக்காரும் பிறரிலரென்பது மிகையுரையாகாது.

அதனால்தான் தமிழக அரசு தொடங்கிய 'அகரமுதலித்திட்டத்திற்கு' பன்மொழிப் புலமையும் நுண்மதி வன்மையும் ஆய்வுத்திறனுமுடையபாவாணரே ஏற்றவர் என அறிந்து, இத்துறையின் இயக்குநராக அமர்த்தியது. அகர முதலித்திட்டம் மொழிபெயர்ப்பாளர்க்கும் புதுச்சொல் புனைபவர்க்கும் தனித்தமிழ் விரும்பியர்க்கும் சொல்லாராய்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவனவாகும். இதில், எல்லாச்சொற்களுக்கும் இயன்றவரைவேரும் வரலாறும்கூறப்படும். தமிழ் மொழிக்கண் அறியப்பெற்றுள்ள அனைத்துச் சொற்களும் அவற்றை யொட்டிய எல்லா விளக்கங்களும் இதன்கண் இடம் பெறும். ஆகையால் இஃது ஓர் அகரமுதலி போன்றல்லாது ஒரு கலைக்களஞ்சியம் போன்றும் விளங்கி நிற்கும். மொழி ஆராய்ச்சியிலும் சொல்லாராய்ச்சியிலும் சிறந்த பாவாணர் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகளை ஊன்றிப்படித்தவர்; தம் பேச்சும் மூச்சும் இன்பமும் துன்பமும் வாழ்வும் வளமும் எல்லாமும் தமிழ்மொழி ஒன்றினுக்கே எனக்கருதிய பேரறிஞர்.

மறைமலையடிகளார்க்குப் பின் தனித்தமிழ் இயக்கத்தை வளர்த்தவர். ஆய்வுமிக்க பேச்சாலும் எழுத்தாலும் இளைஞர்களைத் தட்டி யெழுப்பி, தமிழ் உணர்வு ஊட்டியவர். மறைக்கப்பட்ட தமிழர் வரலாற்றினைவெளிகொணர்ந்தவர். மொழியியலை மரபுவழியில் நோக்கியவர். தமிழுக்குத் தீங்கெனில் ஆர்ப்பெழுந்து முழக்கமிட்டவர். தமிழுக்காகவே தம் வாழ்நாள் முழுதும் உழைத்த பெருமகன்.

தமிழுக்காக, தமிழ் நாட்டிற்காக தமிழ்ப் பண்பாட்டிற்காக அயராது உழைத்த இப்பெருமகனார் 15—1—1981 வியாழன் இரவு 12–50 மணியற் காலை மறைந்தார் என்ற செய்தி கேட்டுத் தமிழகமே ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கிவிட்டது.

'சாவிலும் தமிழ்கலந்தே சாகவேண்டும் – என்
சாம்பலும் தமிழ் மணந்தே வேகவேண்டும்'

என புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கேற்ப ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட பொழுது மறைந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பாவாணர் மறைவு தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

— **சு. சக்திவேல்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழியியல், 4. 1 & 2 (1980)

வானொலித் தமிழ்: ஓர் அறிமுகம்

எஸ். ஆரோக்கியநாதன்

நாகரிகம் தோன்றிய நாள் முதலாக மக்களிடைக் கருத்துப் பரிமாற்றம் நடந்து வருகிறது. மொழி வழி நடக்கும் பரிமாற்றம் மக்களிடை சுலபமாகவும் வேகமாகவும் நடக்கிறது. அறிவியல் மயமான இவ்வுலகின் வளர்ச்சி மேம்பாட்டுக்குப் பொதுச்செய்தி பரிமாற்றத்தின் (mass–communication) பங்கு அளவிடற்கரியது. செய்திப் பரிமாற்றம் பல வகையில் மக்களிடை நடைபெறலாம். மரபுவழி முறையிலான (traditional–media) தெருக்கூத்து, நாடகம், வாயிலாகவும் அச்சடிக்கப்பட்ட (print media) பத்திரிகை, செய்தித் தாட்கள் இவைகளின் மூலமாகவும் இன்றைய உலகில் பொதுச் செய்திப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மின்னியல் மூலமாக நடைபெறும் செய்திப் பரிமாற்றமே விரைவாக எளிதில் அனைவருக்கும் கிட்டும் வகையில் அமைந்துள்ளது. பல்வேறு மொழி, மதக் கலாச்சாரங்களால் மாறுபட்டு இருக்கும் இந்திய மக்களிடை மின்னியல் ஊடகங்களான (electronic–media) வானொலியும், தொலைக்காட்சிப் பெட்டிகளும் அன்றாட வாழ்வின்

தவிர்க்கமுடியாத அம்சங்களாக விளங்கி மக்களிடை செய்தி உலகில் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியுள்ளன. தெருக்கூத்து, நாடகங்கள், பிரச்சாரப் பேச்சுக்கள் இவைகளைக் காட்டிலும் செய்தித் தாட்கள், பத்திரிகைகள் முதலியன பெருமளவு பரவலான செய்தித்தொடர்பினை பெருவாரியான மக்களிடையே ஏற்பட உதவுகின்றன, அச்சடிக்கப் பட்டவைகளைக் காட்டிலும், வானொலி, தொலைக்காட்சி முதலியன படித்தவர், பாமரர் என்ற பாகுபாடின்றி, அனைவரும் செய்திப் பரிமாற்றம் நடத்திட உதவுகின்றன. தொலைக்காட்சியினை விட வானொலிதான் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் கிட்டும் வகையில் அமைந்துள்ளது. வானொலி மூலம் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் இந்தியாவின் மூலைமுடுக்கெங்கிலும் உள்ள பலருக்குச் செய்தி கூறிடும் சாதனமாக, இசை விருந்தளிக்கும் பொழுதுபோக்கு அம்சமாக, நடப்பு நிகழ்ச்சிகளைக் கூறி நாட்டு நிலையினை உணர்த்திடும் துணையாக இருந்து வருகின்றன.

இவ்வானொலியின் அமைப்புமுறை, செய்திப் பரிமாற்றத்தில் வகிக்கும் பங்கு, அதன் பயன், வானொலியில் பயன்படும் மொழி இவை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அகில இந்திய வானொலி நிலையங்களும், அவை ஒலிபரப்பும் தமிழ் நிகழ்ச்சிகளும்தான் இவ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

வானொலி வரலாறு

சென்னை பிரதேச வானொலிக் கழகம் தான் (Madras Presidency Radio club) 1924-இல் முதன்முதலாக இந்தியாவில் வானொலித் துவக்கத்திற்கு வித்திட்டது. 8 கி. மீ. சுற்றளவு தூரத்திற்கு மட்டும்தான் அந்த ஒலிபரப்பினைக் கேட்க முடியும். எனினும், கழகத்தின் ஒலிபரப்பு முயற்சி, வியப்போடும், ஆர்வத்தோடும் பலராலும் கவனிக்கப்பட்டும், பாராட்டப்பட்டும் வந்தது. பின்னர் 1927-இல், கல்கத்தாவிலும், பம்பாயிலும் இந்திய ஒலி பரப்புக் கம்பெனியால் (Indian Broad casting Company) வானொலி நிலையங்கள் துவக்கப்பட்டு ஒலிபரப்பு தொடர்ந்து நடைபெற்றது. 1930-இல், இந்திய அரசு ஒலிபரப்புத் துறையினைத் தன் ஆணையின் கீழ்க் கொண்டுவர நினைத்து 1936-இல்,

அகில இந்திய வானொலி (All India Radio) என்ற பெயரோடு வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. 10,000–க்குச் சற்று அதிகமாக ரேடியோ லைசன்ஸ்களைக் கொண்டு 1936–இல் தொடங்கிய இந்திய வானொலி ஒலிபரப்பு இன்று ஏறக்குறைய 82 வானொலி நிலையங்களைக் கொண்டு, ஒரு நாளைக்கு 1760 மணி நேரம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது. வானொலியில் ஏறக்குறைய எல்லா இந்திய மொழிகளிலும், 17 அந்நிய மொழி களிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. இந்தியாவில் நடை பெறும் ஒலிபரப்பு, 76.20 விழுக்காடு நிலப்பரப்பினையும், 87.75 விழுக்காடு இந்தியர்களையும் தன் ஆளுகைக்குள் கொண்டுள்ளது. இன்று 1.78 கோடி வானொலிப் பெட்டிகள் உள்ளதாக அதற்காக வழங்கப்பட்டுள்ள லைசன்ஸ் எண்ணிக்கையிலிருந்து தெரிகிறது. 80 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ, நம் மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர் படிப்பறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் கேள்வி ஞானத்தை மட்டுமே நம்பிப்பயனாகும் வானொலியின் பங்கு இந்தியாவில் இன்றியமையாததாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

தமிழ் வானொலி நிலையங்கள்

இந்தியாவில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் வானொலி நிலையங்கள் தமிழ் நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி வானொலி நிலையங்களும், யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி வானொலி நிலையமும் தான். இந்த ஐந்து வானொலி நிலையங்களைத் தவிர, பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற ஊர்களில் உள்ள வானொலி நிலையங் கள் அங்குள்ள தமிழர்களுக்காகத் தமிழ் நிகழ்ச்சிகளை சில குறிப்பிட்ட கால அளவுக்கு ஒலி பரப்புகிறது. டெல்லியிலிருந்து வெளிநாட்டுத் தமிழர்களுக்காக நாள்தோறும் 15 நிமிடங்கள் தமிழ் நிகழ்ச்சிகள் (பெருமளவு செய்தி விமர்சனங்கள்) ஒலிபரப் பாகின்றன. அத்தோடு டெல்லி வானொலி நிலையம் தமிழ்ச் செய்தியறிக்கையினை நாளொன்றுக்கு மூன்று முறை ஒலிபரப்ப அதனை மேற்கூறிய ஐந்து தமிழ் வானொலி நிலையங் களும் அஞ்சல் செய்கின்றன. நம் அண்டை நாடான இலங்கையி லிருந்து ஒலிபரப்பாகும் முழுநேரத் தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்

தமிழக மக்களிடைப் பெருமளவு பிரபல மடைந்து பலராலும் விரும்பிக் கேட்கப் படுகின்றது. பொழுது போக்கு அம்சத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஒலிபரப்பு நடத்துகின்ற இலங்கை வானொலி நிலையம் பெரும்பாலும், திரைப் பாடல்கள், திரை ஒலிச் சித்திரம் போன்றவைகளைத்தான் ஒலிப்பரப்புகிறது. மாஸ்கோவிலும், லண்டனிலிருந்து பி. பி. சி. யிலும், மற்றும் பல அயல் நாடுகளிலிருந்தும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. நம் ஆய்வுக்குத் தமிழ்நாட்டில் (பாண்டிச்சேரி உட்பட) உள்ள ஐந்து வானொலி நிலையங்களும், அவைகள் ஒலிபரப்பும் தமிழ் நிகழ்ச்சிகளும் மட்டும்தான் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

சென்னை, திருச்சி ஆகிய இரு வானொலி நிலையங்களும் இந்தியா சுதந்திரம் அடையும் முன்னரே துவக்கப் பட்டவை. 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி சென்னை வானொலி நிலையமும், 1939–ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையமும் துவக்கப்பட்டன. 1–12–63 இல் திருநெல்வேலி நிலையமும், 18–12–66 இல் கோயம்புத்தூர் நிலையமும் 23–9–67 இல் பாண்டிச் சேரி நிலையமும் துவக்கப்பட்டன. சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் ஒரு நாளைக்கு சராசரி $13\frac{1}{2}$ மணி நேரமும் கோயம்புத்தூர், திருநெல்வேலி பாண்டிச்சேரி நிலையங்கள் 10 மணி நேரமும் ஒலிபரப்பு நடத்துகின்றன. இதில் டெல்லியிலிருந்து அஞ்சலாக்கப்படும், ஹிந்தி, ஆங்கில செய்தியறிக்கைகள், பாராளு மன்ற நிகழ்ச்சிகள், அகிலபாரத நிகழ்ச்சிகள் முதலியன அடங்கும். சில நேரங்களில், ஒரு தமிழ் வானொலி நிலையம் ஒலிபரப்பும் நிகழ்ச்சியினை ஏனைய நிலையங்கள் அஞ்சல் செய்கின்றன. சான்றாக, சென்னையிலிருந்து ஒலிபரப்பாகும் மாநிலச் செய்தி யினைக் கூறலாம்.

ஒலிபரப்பு நிகழ்ச்சிகளும் முறைகளும்

ஒலிபரப்புக்கான நிகழ்ச்சிகளை அமைப்பதில் ஒவ்வொரு வானொலி நிலையத்திலும், அந்தந்த நிகழ்ச்சிகளுக்குள்ள நிகழ்ச்சி அமைப்பாளர்கள் (programme executive) பெருமளவு பொறுப் பாகின்றனர். குறிப்பிட்ட நேரத்திற்கு ஒலிபரப்பாகும் செய்தி யறிக்கைகள், அறிவிப்புக்கள், மற்றும் டெல்லியிலிருந்து ஒலிபரப் பாகும் நிகழ்ச்சிகள் முதலியவற்றை அஞ்சல் செய்ய வேண்டிய

நிரந்தர நேர ஒதுக்கீடுகளை (fixed time-chunks) தவிர்த்துவிட்டு மீதியுள்ள ஒலிபரப்பு நேரங்களில் இதர நிகழ்ச்சிகள் அமைக்கப் படுகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை எந்த நாளில், எப்போது ஒலிபரப்புவது பற்றி தீர்மானிக்க எந்த ஒரு ஆய்வும் நடந்ததாகத் தெரியவில்லை. விவசாய நிகழ்ச்சி மட்டும்தான் மாலை நேரத்தில் 6 மணிக்கு மேல் ஒலிபரப்பப்பட்டால் விவசாயி கள் பெருமளவு கேட்டுப் பயன் பெறலாம் எனத் தீர்மானித்து, விவசாய நிகழ்ச்சி ஒலிபரப்பு நேரத்தை முடிவு செய்ததாகத் தெரிகிறது. வானொலியில் நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு நேரம் பெரும்பாலும் அங்குள்ள பலரின் ஆலோசனையின் பயனாக முடிவானதேயொழிய ஆய்வின் முடிவாக இருப்பதாகத் தெரிய வில்லை. அப்படி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிபரப்பு நேரமே சிறந்தது என்றும் சொல்வதற்கில்லை.

வானொலியில் பல தரப்பட்ட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பானாலும் குறிப்பிட்ட கேளுநர்களுக்காக (listners) ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி கள், சான்றாக குழந்தைகள் நிகழ்ச்சிகள், மகளிர் அரங்கு, இளை ஞர் உலகம், விவசாய நிகழ்ச்சி போன்றனவும் உள்ளன. சில சமயம் தம்முடைய கேளுநர்களை வரையறுத்துக் குறிப்பிடாது சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பானாலும் நிகழ்ச்சியின் தன்மையால் கேளுநர்கள் யார் எனத் தீர்மானித்துக் கொள்ளலாம். இலக்கியச் சொற்பொழிவுகள், ஆங்கில நிகழ்ச்சிகள் முதலியன படித்த கேளுநர்களுக்கே (educated listners) பயனாகும். சில சமயம் வானொலியின் கொள்கை காரணமாக (on policy matters) சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு மிகக் குறைந்த விழுக்காடின ருக்கே பயன்படுவதும் உண்டு. சான்றாக, சமஸ்கிருத செய்தி யறிக்கையை (தமிழகத்தில் 200 க்கு ஒருவரே கேட்பதாகவும் அதுவும் எப்போதோ ஒரு முறை கேட்பதாகவும் கூறினார் என்பதனை)[3] இங்கு குறிப்பிடலாம். வானொலியில் ஒலிபரப்பாகும் முக்கிய நிகழ்ச்சிகளின் விகிதாசார அட்டவணை கீழே கொடுக் கப்பட்டுள்ளது.[4]

நிகழ்ச்சிகள்	விழுக்காடு
1. கர்நாடக இசை	
அ) வாய்பாட்டு	8.3
ஆ) வாத்திய இசை	7.5
2. நாட்டுப்புறப் பாடல்கள்	3.2
3. மெல்லிசை	
அ) வாய்பாட்டு	8.7
ஆ) வாத்திய இசை	1.2
4. பக்திப்பாடல்கள்	4.7
5. திரையிசைப் பாடல்கள்	5.4
6. மேற்கத்திய இசை	1.8
7. பேச்சு, உரையாடல்	9.4
8. நாடகம்	3.9
9. செய்திகள்	23.3
10. குழந்தைகள் நிகழ்ச்சி	1.2
11. மகளிர் நிகழ்ச்சி	1.3
12. விவசாய நிகழ்ச்சி	6.1

மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு நேரத்தின் விகிதாச்சாரம் கேளுநர்களின் எண்ணிக்கை விகிதாச்சாரத்தோடு ஒத்துப்போகிறதா என்பதும் ஆய்வுக்குரியது. 9.4 விழுக்காடு ஒலி பரப்பாகும் பேச்சு, உரையாடல் போன்ற நிகழ்ச்சிகள் 4 விழுக் காட்டினரே கேட்பதாகத் தெரிகிறது[5]. 5.4 விழுக்காடு நேரம் ஒலி பரப்பாகும் கர்நாடக இசை நிகழ்ச்சிகள் 10 விழுக்காட்டிற்கும் குறைவான கேளுநர்களையே கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.[6] வானொலி நிலையத்திலுள்ள நேயர்களின் கருத்தாய்வுப் பிரிவு கேளுநர்களின் கருத்துக்குச் செவி சாய்க்கின்றனவா என்பது கேள்விக் குறியாக உள்ளது. நேயர்களின் கருத்தாய்வுகளின் முடிவுகள் ரகசியமானதாகக் கருதப்பட்டு மக்களின் பார்வைக்கும், பெரும்பாலான நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கும் கூட கிட்டாத வகையில் இருப்பதாகவும், மேலும் இந்த ஆய்வுகளின் முடிவுகளை வானொலி நிலையத்தினரே பொருட்படுத்தாது விட்டுவிடுவதாக

வும், அவைகள் எந்த வகையிலும் பயனின்றிப் பெயரளவில் இயங்குவதாகவும் அவஸ்தி (1965 : 218) குற்றம் சாட்டுகின்றார். மேலும், வானொலி நிலையங்களுக்கு வருகின்ற நேயர் கடிதங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட திரைப்படப் பாடலை ஒலிபரப்பச் சொல்லியோ அல்லது வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்புக்கள் கேட்டோ எழுதப்படுவனவாகவே உள்ளன.[7]

வானொலியில், ஒலிபரப்பாகும் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை பலவேறு விதமாக ஒலிபரப்பலாம். இசை நிகழ்ச்சி நீங்கலாக, ஏனைய நிகழ்ச்சிகளை, பேச்சாகவோ, கலந்துரையாடலாகவோ சித்திரமாகவோ, நாடகமாகவோ, பேட்டியாகவோ ஒலிபரப்ப, வாய்ப்பு உண்டு. இவ்வாறு வெவ்வேறு விதமாக ஒலிபரப்பு முறையில் (Method of Presentation) வேறுபடும்போது அதில் பயன்படும் மொழி வழக்கிலும் வேறுபாடு இருப்பதைக் காணலாம். தமிழ்ச் செய்தியறிக்கையில் பயனாகும் மொழி வழக்கு விவசாய நிகழ்ச்சியிலுள்ள பேட்டி நிகழ்ச்சியின் மொழி வழக்கிலிருந்து மாறுபட்டிருப்பது நாம் அறிந்ததே. தமிழிலுள்ள இரு வழக்கு நிலை (Diglossia) காரணமாக ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகளிலுள்ள மொழிவழக்குகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

தமிழின் இருவழக்கு நிலை (Diglossia in Tamil)

குறிப்பிட்ட சமுதாயச் சூழலுக்குத் தக்கவாறு, பயன்படுத்தப் படும் மொழிவழக்கு மாறுபடுகின்றது. வீட்டில் குழந்தைகளோடு பேசும்போது பயன்படும் மொழிவழக்கு, அலுவலகத்தில் உயர் அதிகாரிகளிடம் பேசும்போதுள்ள மொழி வழக்கிலிருந்து மாறு பட்டிருப்பது திண்ணம். ஒரு மொழியில் ஒருவகையான மொழி வழக்கு குறிப்பிட்ட சமுதாயச் சூழலுக்குப் பயன்படும் வகையில் அமைந்து மொழியிலுள்ள இரு வழக்கும் ஒலியியல், சொல்லியல், தொடரியல் நிலைகளில் தெளிவாக வேறுபட்டு, ஒரு சமுதாயச் சூழலுக்குப் பயன்படும் மொழிவழக்கு மற்றொரு மொழிவழக்குக் குரிய சமுதாயச் சூழலுக்கு ஒவ்வாததாக விளங்கும் நிலையே மொழியின் இரு வழக்கு நிலை எனக் கூறப்படுகின்றது. இவ்விரு வழக்கு நிலையில் ஒரு வழக்கு இலக்கியங்களில் பயன் பட்டிருப்ப தால் உயர்வழக்காகக் கருதப்பட்டு, அதுவே செம்மொழியாகவும் சரியானதாகவும் கருதப்பட்டு உயர்சமுதாயச் சூழலில் (formal

occassions) பயன்படுத்தப்படும். மற்றொரு மொழிவழக்கானது பேச்சு மொழி வழக்காக, குடும்பம் மற்றும் இயல்புச் சூழலில் (informal situations) பயன்படுவதாகவும் விளங்கும். இவ்வகை யான மொழியின் இரு வழக்கு நிலையை முதன்முதலில் மொழி யியல் உலகுக்கு எடுத்துக் காட்டிய ஃபர்கூசன் (1959) அரேபிய மொழி, கிரேக்க மொழி, தமிழ் ஆகியவற்றில் இந்நிலை இருப்ப தாகவும் குறிப்பிடுகின்றார். உயர்மொழி வழக்கு அம்மொழியி லுள்ள இலக்கண இலக்கியங்களால் வளம் பெற்றுச் சொல், ஒலிப்பு, எழுதும் முறை, இலக்கண விதிகள் இவைகளால் நிலை பெற்று (stable) விளங்குவதாகவும் பேச்சு மொழி வட்டாரம், கிளை மற்றும் சாதி மொழி வழக்கு இவைகளால் பாதிக்கப்பட்டு பல வேறுபாடுகளைக் கொண்டிலங்குவதாகவும் ஃபர்கூசன் (1959) குறிப்பிடுகின்றார். தமிழின் இருவழக்கு நிலையினை சண்முகம் பிள்ளை (1960, 1972), கருணாகரன் (1975), ஷிப்மன் (1978) போன்றவர்கள் ஆய்ந்துள்ளனர். தமிழில் உள்ள உயர்மொழி வழக்கில் பல்வேறு நடைகள் (styles) உள்ளன. சங்ககால நடை, பண்டிதர் நடை, பத்திரிகை நடை போன்ற பலவகை நடைகள் உள்ளன (திருமலை 1976). பேச்சு மொழி வழக்கில் பொதுப் பேச்சு மொழி வழக்கொன்று நிலவி வருவதனை வசந்தகுமாரி (1975), அண்ணாமலை (1975) போன்றவர்கள் குறிப்பிட்டு, இப்பொதுப் பேச்சுவழக்கு வட்டார மற்றும் சாதி வழக்கிற்கான குறியீட்டுச் சொற்களை (stigmatized words) தவிர்த்துவிட்டுப் படித்த பார்ப்பனரல்லாத தமிழ் மக்களிடை வழங்கும் வழக்கே என்று கருதுகின்றனர். வானொலியில் பயனாகும் தமிழில் உயர்மொழி வழக்கும் பேச்சு மொழிவழக்கும் உள்ளன. வானொலியின் உயர் மொழிவழக்கு இன்றைய பத்திரிகை நடையினை ஒட்டியிருப் பதாகக் கருத வாய்ப்புண்டு. வானொலியில் பயனாகும் பேச்சு வழக்கு பெரும்பாலும் பொதுப்பேச்சுத் தமிழாக விளங்குகின்றது.

வானொலியில் பயனாகும் மொழி வழக்கினை வானொலி நிகழ்ச்சியின் அடிப்படையில் தீர்மானிக்க இயலவில்லை. சான்றாக மகளிர் நிகழ்ச்சியில் உயர்மொழி வழக்கும் (பேச்சு–நிகழ்ச்சியில்) சில சமயம் பொதுப் பேச்சு மொழி வழக்கும் (கலந்துரையாடல் நிகழ்ச்சியில்) மற்றும் சில சமயம் வட்டார, சாதி மொழி வழக்கு களும் (பேட்டி நிகழ்ச்சிகள்) பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஆகையால், நிகழ்ச்சியின் தன்மையால் ஊகிக்க முடியாத மொழி

வழக்குப் பயனை ஒலிபரப்பு முறையின் மூலமாக (method of presentation) ஓரளவு கணிக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக செய்தியறிக்கை, அறிவிப்புக்கள், முதலியன உயர்மொழி வழக்கி லும், சமூக நாடகங்கள், உரையாடல், பேட்டி போன்ற நிகழ்ச்சி கள் பேச்சுத் தமிழிலும் இருப்பதனை நாம் காணலாம். ஆயினும், சில பேட்டி நிகழ்ச்சிகள் உயர்வழக்கில் இருப்பதும் உண்டு. பேட்டி யாளர் மதிப்பிற்குரியவராய் (prestigeous person) அல்லது பேட் டிக்கான பொருள் இலக்கியத் தரமுள்ளதாய் (literary content) இருப்பின் உயர்மொழி வழக்கினை அந்நிகழ்ச்சியில் எதிர்பார்க்க லாம். வானொலியில் பயனாகும் மொழி வழக்கினை நிகழ்ச்சியில் பங்கு கொள்வோரின் எண்ணிக்கை, அவர்களின் ச்முதாய நிலை (social–status) கல்வியறிவு, மற்றும் நிகழ்ச்சியின் தன்மை இவை களைப் பொறுத்து அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

வானொலியில் உயர்மொழி வழக்கு

வானொலியில் உயர்மொழி வழக்கு செய்தி அறிக்கைகள், அறிவிப்புக்கள் ஆகியவைகளில் பயன்படுத்தப்படுகிறது. அவ்வப் போது டெலிபிரிண்டர் வாயிலாக கிடைக்கும் ஆங்கிலச் செய்தி களை மிகக் குறுகிய கால நேரத்தில் காலதாமதமின்றித் தமிழில் மொழிபெயர்த்துச் செய்தி அறிக்கைகள் படிக்கப்படுகின்றன. உயர் தமிழில் எழுதப்பட்டாலும் படிக்கப்படுகின்ற காரணத்தால் எழுத்துத் தமிழுக்குரிய சில இலக்கண விதிகள் மீறப்படுகின்றன. குறிப்பாக சந்தி விதிகள் மீறப்படுகின்றன. சான்றாக, 'அந்தப் பையன்' என்பது, 'அந்த பையன்' என ஒற்று மிகாது படிக்கப் படுகின்றது. 'கிராமம்' என எழுதப்பட்டாலும் 'க்ராமம்' என்று முதல் அசையின் மெல்லொலி கூட்டொலியாக ஒலிக்கப்படுகிறது. அதுபோலவே, 'அறிவிப்பு+க்கள்' என்பது 'அறிவிப்புக்கள்' எனப் படிக்கப் படாது 'அறிவிப்புகள்' என்றே படிக்கப்படுகின்றது.

சொற்களின் முதல் அசையில் உள்ள மெய்யொலி அதிர் வொலியாக (voiced) ஒலிக்கப் படுகின்றது. மேற்கூறிய கூட்டொலி மற்றும் அதிர்வொலி ஒலிப்புக்கள் உயர்தமிழ் எழுத்து வழக்கில் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப் படாவிட்டாலும் உயர்மொழி வழக்கில் இருப்பதைக் காணலாம். மேலும் இத்தகைய ஒலிப் புகள், அயல்மொழிச் சொற்களால் விளைகின்றன. செய்தியறிக்

கையில் 'தற்காலிகமாக' எனும் சொல் 'தாற்காலிகமாக' என்றும், 'அஸ்ஸாம்' எனும் சொல் 'ஆசாம்' என்றும் படிக்கப் படுகிறது. மேலும், 'பாரதம்' 'தவா' போன்ற சொற்கள் பெரு மளவு உள்ளன. பெயர்களில் உள்ள முதலெழுத்து (initials) ஆங்கில எழுத்தாகவே படிக்கப்படுகின்றது. செய்தியறிக்கையில் ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழிச் சொற்கள் பெருமளவு பயன்படுத்தப் படுகின்றன. சான்றாக, ஆர். வி. வெங்கடராமன், எம்.எம். இஸ்மாயில் என்றே முதலெழுத்து ஆங்கில எழுத்தாகவே கூறப்படுகின்றது. செய்தியறிக்கையில் பேச்சு மொழி வழக்குச் சொற்களும் சில சமயங்களில் பயன்படுத்தப் படுகின்றன. 'நான்கு கோடி' என்பதற்கு பதிலாக 'நாலுகோடி' எனவும், 'ஏறக்குறைய' என்பதற்குப் பதிலாக 'கிட்டத்தட்ட' எனவும் படிக்கப்படுகின்றன. ஆங்கிலத்திலிருந்து மொழியறிக்கைகள் மொழிபெயர்க்கப் படுவதால், சில சமயம் சொற்கள் முழுவதும் மொழிபெயர்க்கப் பட்டோ, அல்லது கலப்புக்கு உட்பட்டோ அல்லது புதுச்சொற்கள் உருவாக்கப்பட்டோ பலசொற்கள் செய்தியறிக்கைகளில் உள்ளன.[9]

மேலும் செய்தியறிக்கையில் உள்ள தமிழ் வாக்கியங்களின் சொற்றொடர்கள் ஆங்கிலச் சொற்றொடர்களின் சாயலில் உள்ளன என்பதை 'நடப்பு நிதியாண்டு', 'நடப்பு எண்ணையாண்டு', 'கொள்கையளவில் ஒப்புதல்', 'கருத்து வெளியிடல்' போன்ற சொற்றொடர்களிலிருந்து அறியலாம். அதுபோலவே, 'திரு அன்பழகன், ஒரு முன்னாள் எம்.பி:' எனும் வாக்கியமும், 'மத்திய அரசின் அனுமதி நாடி இத்திட்டங்கள் காத்திருக்கின்றன' 'எனும் வாக்கியமும் ஆங்கில வாக்கியச் சொற்றொடரியல் (English Syntax) அடிப்படையில் அமைந்தன என்று கூறலாம். வினைத் தொடரில் பெரும்பாலும் முடிவடையும் வாக்கியங்கள் சில சமயம் செய்தியறிக்கையில் மாறுபட்டிருப்பதைக் காணலாம்.
'ஓராண்டு காலத்திற்கு ஆனது இந்த அனுமதி' என்பதும், '……………தொழிற்சாலையில் அமைதியான சூழ்நிலை இருக்கும்' என்றார் அவர்' என்பதும் வினைத் தொடரில் வாக்கியங்கள் முடிவடையாது மாறுபட்டிருப்பதனை விளக்கும்.[10]

செய்தியறிக்கைகளில் உள்ள வாக்கியங்கள் பெரும்பாலும் 'கலப்பு வாக்கியங்களை' (Complex Sentences) கொண்டதாகவும்,

நீண்ட வாக்கியங்களாகவும் உள்ளன. தமிழ்ச் செய்தியறிக்கைகளில் வரும் வாக்கியங்களில் ஒரு வாக்கியத்திற்கு சராசரி 8 வார்த்தைகள் இருப்பதாகத் தெரிகிறது. சில வாக்கியங்கள் 18 வாத்தைகளைக் கொண்டு மிக நீண்ட வாக்கியங்களாக உள்ளன. கேள்வி ஞானத்தைக் கொண்டே செய்திப் பரிமாற்றம் நடத்தும் வானொலியில் செய்தியறிக்கைகள் உயர்மொழியில் இருப்பதும், வாக்கியங்கள் நீண்டு கடினமாக இருப்பதும், செய்திப் பரிவர்த்தனைக்குத் தடையாக இருக்கலாம் எனக் கருத வாய்ப்பிருக்கிறது.

பேச்சுமொழி வழக்கு மட்டுமே அறிந்தவர்கள் உயர்மொழி வழக்கினைப் புரிந்து கொள்வதைக் காட்டிலும், உயர்மொழி வழக்கு அறிந்தோர் பேச்சு மொழியினை அறிந்து கொள்வது சுலபம் என கருணாகரன் (1974) குறிப்பிடுகின்றார். அவ்வாறாயின், 70 விழுக்காட்டிற்கு மேலாகப் படிப்பறிவில்லாத மக்கட் தொகையுள்ள நாட்டில், பேச்சுத் தமிழ் மட்டுமே அறிந்த மக்கள் அதிகமாகின்றனர். அவ்வாறாயின் எத்தனை சதவிகிதத்தினர் புரிந்துகொள்கின்றனர் என்பது கேள்விக்குறியாகின்றது. மேலும் வாக்கியங்கள் நீண்டு இருந்தால் ஒருவரின் புரிந்து கொள்ளும் தன்மையினை (Comprehension Skill) பாதிக்கும். அதுமட்டுமின்றி, பேச்சுத் தமிழ் அறிந்தோர் உயர்மொழியினை புரிந்து கொள்வது பெருமளவு கடினம் என்பதாலும், தமிழ்ச் செய்தியறிக்கை குறைந்த சதவிகிதத்தினருக்கே பயன்படுகிறது எனலாம்.

அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வில், மக்கள் வானொலி, தொலைக்காட்சி இவைகள் மூலம்தான் செய்திகளை முதன்முதலில் அறிந்துகொள்கிறார்கள் என்றும், ஆனால் அப்படி அறிந்து கொண்ட செய்திகள் உண்மையா, பொய்யா என்பதற்கு செய்தித் தாட்களைத்தான் நம்புவதாகவும் (reliability) தெரிகிறது. நம் வானொலி நிலையங்கள் தருகின்ற விலைவாசிப் பட்டியலில் காணப்படும் பண்டங்களின் விலைகள் நடைமுறையில் உள்ள விலையோடு ஒத்துப் போகாதிருப்பதனை இங்கு குறிப்பிடலாம்.

அறிவிப்புக்கள்

வானொலியில் ஒலிபரப்பப்படும் அறிவிப்புக்கள், செய்தியறிக்கைகள் போலவே உயர்மொழி வழக்கில் உள்ளன. வானொலி

அறிவிப்புக்களை செய்தி அறிவிப்புக்கள், நிகழ்ச்சி அறிவிப்புக்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். செய்தி அறிவிப்புக்கள், சேவைச் செய்திகள், தேவைச்செய்திகள், காணவில்லை, போன்றவையாகும். இவ்வறிவிப்புக்கள் எழுதப்பட்டு அப்படியே படிக்கப்படுகின்றன. செய்திகளின் பொருள் (content) காரணமாக சில சமயம் ஆங்கிலச் சொற்கள் விரவிக் காணப்படும்.

நிகழ்ச்சி அறிவிப்புக்கள் வானொலியின் நிகழ்ச்சி நிரலைப் படித்தலும், நிகழ்ச்சியின்போது தரப்படுகின்ற அறிவிப்புகளும் ஆகும். இவ்வறிவிப்புகளில் நிகழ்ச்சிநிரலைப் படிக்கும்போது எல்லா வாக்கியங்களும் குறை வாக்கியங்களாகவே உள்ளன. சான்றாக,

1. காலை 7–15க்குத் தமிழில் செய்திகள்–டெல்லி அஞ்சல்.
2. காலை 7–30க்குத் திரைப்படப் பாடல்கள்.
3. இரவு 9–15க்கு புவியியல் பற்றி டாக்டர் ரமணி அவர்களின் பேச்சு.

இவ்வாக்கியங்கள் (1–3) ஒவ்வொன்றும் காலவேற்றுமைத்தொடர் மற்றும் பெயர்த்தொடர் இவைகளால் உருவான குறை வாக்கியங்கள். ஏழாம் வேற்றுமை உருபு–இல் என்றாலும், கால வேற்றுமைக்கு நான்காம் வேற்றுமை உருபான – க்கு பயன்படுகிறது. முதலாவது வாக்கியத்தில் உள்ள 'தமிழில் செய்திகள்' என்பது news (which is) in Tamil, என்பதன் மொழி பெயர்ப்பாகும். 'தமிழில் செய்திகள்' எனும் தொடர் 'தமிழில் ஒலிபரப்பாகும் செய்திகள்' எனும் பெயர்த் தொடராகக் கருத வாய்ப்புண்டு. 'தமிழில் செய்திகள் ஒலிபரப்பாகும்' எனும் வாக்கியத்திலிருந்து பெயர்த்தொடர் தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் தமிழில் செய்திகள் என்பது எழுந்தது எனக் கருதலாம்.

டெல்லியில் உருவாகும் நிகழ்ச்சியினை எமது நிலையம் அஞ்சல் செய்கிறது எனும் வாக்கியத்தினை 'டெல்லி அஞ்சல்' எனும் சொற்றொடரால் குறிக்கின்றனர் என்று கருத வாய்ப்புண்டு. அவ்வாறாயின், 'டெல்லி அஞ்சல்' எனும் தொடரை மேற்கூறிய முழு வாக்கியத்திலிருந்து தோற்றுவிக்க 'டெல்லியிலிருந்து உருவாகும் நிகழ்ச்சியின் அஞ்சல்' என்ற பெயர்த் தொடரிலிருந்து டெல்லி அஞ்சல்' தோற்றுவிக்கப்பட வேண்டும்.

நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் முன்னரும், நிகழ்ச்சிக்குப் பின்னரும் அறிவிப்புக்கள் உண்டு. சான்றாக, 'புவியியல் பற்றி டாக்டர் ரமணி அவர்களின் பேச்சினை இப்போது கேட்கலாம்' என்ற முன்னறிவிப்பும், 'புவியியலைப் பற்றி டாக்டர் ரமணி அவர்களின் பேச்சினைக் கேட்டீர்கள்' என்ற பின்னறிவிப்பும், உண்டு. இவ்விரு வாக்கியங்களிலும் எழுவாயாக 'நீங்கள்' என்று கருத வாய்ப்பு உண்டு. தொகுப்பு நிகழ்ச்சிகளில் மட்டும் 'நாம்' என்னும் எழுவாய் அறிவிப்புகளில் பயன்படுத்தப்பட்டு, '......... பேசியதைக் கேட்டோம்; 'இனி ஒரு மெல்லிசைப் பாட்டு' என்று வாக்கியங்கள் அமைகின்றன. திரைப் படப் பாடல்கள் ஒலி பரப்பும்போது நிகழ்ச்சிநிரல் அறிவிப்பின் போது உள்ள குறை வாக்கியங்களைப் போன்றே சில சமயங்களில் அமைகின்றன. சான்றாக, 'இரு மலர்கள் படத்தில் டி. எம். சௌந்தர ராஜன், பி. சுசிலா.' மேலும் சில அறிவிப்புக்கள், 'படம் இருமலர்கள்: பாடுவது டி. எம். சௌந்தரராஜன், பி. சுசிலா.' என்று இணைக்கப் படாத சொற்றொடர்களாக அமைவதும் உண்டு.

வரலாற்று நாடகங்கள் பெரும்பாலும் உயர்மொழி வழக்கிலேயே உள்ளன.[14] முக்கியப் பாத்திரங்கள் உயர்மொழி வழக்கினைப் பயன்படுத்துகின்றனர். அதுபோலவே முன்னேற்பாடு செய்யப்பட்டு எழுதப்பட்டு நடைபெறும் உரையாடல்கள் கூட சில சமயம் உயர்மொழி வழக்கில் அமைகின்றன. இலக்கியப் பேருரை, முதலியன உயர்மொழி வழக்கிலேயே நடைபெறுகின்றன. ஆயினும், இவைகளில் பேச்சுத்தமிழ்ச் சொற்கள் பல விரவியிருத்தலைக் காணலாம்.

வானொலிப் பேச்சுத்தமிழ்

பொதுவாக, மக்களின் பேச்சுவழக்கில் உள்ள கிளை, வட்டார மற்றும் சமூக வழக்குச் சொற்கள் இல்லாத பொதுப் பேச்சுத் தமிழே, வானொலியில் பயன்படுத்தப் படுகின்றது. சமூக நாடகங்கள், இயற்கையான உரையாடல்கள் முதலியன இப்பொழுது பேச்சுத்தமிழில்தான் அமைகின்றன. வானொலியில் நடிக்கப் படும் நாடகங்கள் முதலியவை எழுதப் பட்டுப் பின்னரே நடிகர்களால் நடிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. பேச்சுத் தமிழில் நாடகங்களை எழுதுவதில் பல சிக்கல்கள் உள்ளன. தமிழ்

எழுத்துக்கள் உயர்வழக்கிற்கே பெரிதும் பயனாவதாகவும், உகந்த தாகவும் உள்ளன. பேச்சுத் தமிழினை எழுத்தில் வடிக்க நினைக் கும் எழுத்தாளர்களின் எழுத்தோட்டத்திற்குத் தமிழ் எழுத்துக் கள் தடங்கலாக இருந்து அவர்களின் கருத்து வேகத்தினைத் தடுக்கிறது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர் (திருமலை 1978 : 38). பேச்சுத் தமிழினை எழுதும் போது எழுத்தாளர் களால் முறையாக எழுத முடியாமல் இருப்பதோடு, ஒரே மாதிரியாக எல்லாவிடங்களிலும் எழுதப்படாது இருத்தலும், ஒவ்வொரு எழுத்தாளர்களுக்கும் தனித்தனி நடை இருப்பதும் தெரிகிறது.[15] 'போகவில்லை' என்பதனை ஒருவர், சில இடங் களில் 'போகலை' என்றும், சில இடங்களில் 'போவலை' என்றும் எழுதுவதைக் காணலாம்.

அது போலவே, ஒரு எழுத்தாளர் 'பிடித்தான்' என்ற சொல்லை, 'பிடிச்சான்' என்றும், வேறொருவர், 'புடிச்சான்' என்றும், பேச்சுத் தமிழ்ச் சொற்களாகக் காட்டுவது உண்டு. மேலும், பேச்சுத் தமிழினை அப்படியே எழுத்தில் படம் பிடித்துக் காட்ட வேண்டும் என்றாலும், அப்படி எழுதிடும் அளவிற்குத் தமிழ் எழுத்துக்கள் துணை செய்யாது. 'அவன்' என்பதில் உள்ள 'ன'கரத்தை பேச்சுத் தமிழில் முழுவதுமாக யாரும் உச்சரிப்பதில்லை. அதற்கு மாறாக னகரத்திற்கு முன்னுள்ள உயிரொலியினை மூக்கின ஒலியாக மாற்றி ஒலிப்பது வழக்கம். அதனைத் தமிழ் எழுத்துக்களால் காட்ட இயலாது.

பேச்சு மொழி வழக்கிலேயே முழுதும் எழுதிவிட்டால் படிப்போருக்கும் கடினமாக இருக்கும். இதனால் படிப்போட்டத் தில் தடை ஏற்படும்.[16] ஆகையால், எழுத்தாளர்கள் பேச்சுத்தமிழ் வழக்கினைக் குறிக்க ஆங்கங்கே சிலசில சொற்களை மட்டும் மாற்றிப் படிப்போர் வேகத்தைத் தடைப் படுத்தா வண்ணம் அமைக்கின்றனர். இவ்வாறு எழுதப்படும் வானொலி நாடகங் களை நடிக்கின்றவர்கள்தான் தமிழ்ப் பேச்சுக்கு முழு அளவு மாற்றி நடிக்கின்றனர். வசனங்களை மனப்பாடம் செய்து நடிக்க வேண்டிய அவசியமின்றி எழுதப்பட்ட வசனங்களை கையில் வைத்துக் கொண்டு நடிக்க வானொலியில் வசதி இருப்பதால் (குரலால்) நடிக்கும் போதே நடிகர்கள் வசனங்களைப் பேச்சுத்

தமிழுக்கு மாற்றிக்கொள்கின்றனர். இவ்வாறு நடைபெறும் மாற்றங்கள் தனிப்பட்ட நடிகரின் மாற்றும் திறமைக்கு ஏற்ற வகையில் இருக்கிறது. ஆயினும், சொல் தொடரில் செய்கின்ற மாற்றங்களைக் காட்டிலும் சொல்லியலில் அதிகம் செய்கின்றனர். அது போலவே, பேச்சுத் தமிழுக்கு சொல்லியலில் செய்கின்ற மாற்றங்களைக் காட்டிலும், ஒலியியலில் அதிகம் மாற்றம் செய்கின்றனர்.[17] இம்மாற்றத்திற்கு தேவையான ஒலியியல் விதிகளை தெய்வசுந்தரம் (1978), ஃஷிப்மேன் (1979) போன்றவர்கள் ஆய்ந்துள்ளனர். இவ்வொலியியல் விதிகளுக்கு ஒரு விதிமுறை **(order)** இருப்பதாகவும் கருத வாய்ப்புண்டு. ஒரு சொல் பேச்சுத் தமிழுக்கு மாற்றப் பட்டால் அதன் மாற்றம் எத்திசையிலிருந்து நடக்கிறது என்பதையும் ஊகிக்க முடியும். சான்றாக, ‘பிடித்துக் கொண்டிருந்தான்’ என்னும் சொல் ‘பிடித்துக் கொண்டிருந்தான்’ என்று கடைசி அசையிலுள்ள னகரம் திரிந்து உயிர் மூக்கொலியாக இருப்பது போல வரலாம், அல்லது ‘பிடித்துக்கிட்டிருந்தான்’, ‘பிடிச்சுக்கிட்டிருந்தான்’, ‘புடிச்சுக்கிட்டிருந்தான்’ என்று வரலாம். ஆனால், ‘பிடித்துக் கொண்டிருந்தான்’ என்றோ, ‘பிடித்துக்கிட்டு இருந்தான்’ என்றோ வருவதில்லை. அதனால் பேச்சு வழக்குக்கு மாறுகின்ற சொற்களின் கடைசி அசையிலிருந்து மாற்றங்கள் தொடங்கி வலமிருந்து இடமாக வருகிறது என்பதனை அறியலம். (ஃஷிப்மேன், ஆரோக்கியநாதன் 1979)

வசனங்கள் எழுதப்படுவதால் உயர்மொழி வழக்கின் சொற்கள் சில சமயம் பேச்சுத் தமிழில் அமைந்துவிடுகின்றன. சான்றாக, ‘உணவு உற்பத்தி விஷயத்திலே அரசாங்கம் விவசாயிகளான, நமக்கு எவ்வளவோ உதவி செய்து வந்தும் நம் நாட்டின் மொத்த நிலப் பரப்பில் பாதிதான் சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கு’ ‘......நம் சோம்பேறித்தனமும், முயற்சியின்மையாலும்தான் பத்தாக் குறைக்குக் காரணமாயிருக்கு, ‘...கவனம் செலுத்தணுமின்னு உங்களைக் கேட்டுக் கொண்டு இப்ப வழக்கு விசாரணையை ஆரம்பிக்கிறேன்.’ (தரிசு நிலத்தை விளை நிலமாக்க மறுத்த வழக்கு விசாரணை. திருச்சி, வானொலி 25-3-76.)

பேட்டி போன்ற நிகழ்ச்சிகளில் பேச்சுத்தமிழ் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. எந்தவிதக்குறிப்பும் இன்றி நடைபெறு

கின்ற பேட்டி நிகழ்ச்சியில் பேட்டி காண்பவர், பேட்டியாளர் இருவரும் கலந்துரையாடும் போது ஒரு வகையான சிறப்புச் சூழ்நிலையில் வானொலியில் ஒலிபரப்ப, தற்போது பதிவா கின்றது, என்ற நினைப்போடு மிகுந்த கவனத்தோடு பேட்டி நிகழ்ச்சி நடக்கிறது. அதன் காரணமாக, உயர்மொழிச் சொற்கள் அப்பேட்டி நிகழ்ச்சியில் வரக் காணலாம். பேட்டியாளரின் கல்வி யறிவு, சமுதாயஅந்தஸ்து போன்றவைகளைப் பொறுத்து உயர் மொழிச் சொற்களின் கலப்பும், வேறுமொழிச் சொற்களின் கலப்பும் இருக்கும். அலுவலர், (ஆபீசரு) விளைச்சல், (வெளச்சல்) போன்றவைகளும், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் சொற்களான 'விதை தெளிப்பான்', 'அமிலம்', 'பயிற்சிப் பண்ணை' போன்ற சொற்களும், சில சமயம் ஆங்கிலச் சொற் களான பெர்டிலைசர் (fertilizer) அமோனியா (amonia) போன்ற சொற்களும் பேச்சுத் தமிழிலுள்ள பேட்டி நிகழ்ச்சிகளில் கேட்கலாம். கூடவே பேட்டியாளரின் வட்டார, கிளை, சமூகச் சொற்களும் பயனாவதுண்டு.

இவ்வாறு வானொலியில் உயர்தமிழ் வழக்கு, பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கு இரண்டும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப் பட்டாலும், உயர்வழக்கில் பொதுப் பேச்சுத்தமிழ் வழக்கிலுள்ள சொற்களும், பொதுப் பேச்சுத் தமிழில் உயர் வழக்குச் சொற்களும் விரவி இருக்கின்றன. அவைகளின் கலப்பு விழுக்காடு நிகழ்ச்சியின் தன்மை, பேசுவோரின் கல்வியறிவு, சமுதாயச் சூழல் முதலியனவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றது. இதனால் உயர்மொழி வழக்கும், பொதுப் பேச்சுத் தமிழ் வழக்கும் இருவேறு தனிப்பட்ட நிலையாக இருந்தாலும், ஒன்றோடு ஒன்று கலக்காது வேறுபட்டுத் தனித்தனி நிலையாக விளங்காது ஒரு தொடர் நிலையாக விளங்குகிறது. தமிழின் இருநிலைத் தன்மை ஒரு தொடர் நிலையையே குறிக்கிறது. அதில் ஒரு முனை உயர் தமிழ் வழக்காகவும், மறுமுனை, பேச்சுத்தமிழ் வழக்காகவும் விளங்கி, பேசுவோரின் கல்வியறிவு, தரம், சமுதாயச் சூழல், பேசப்படும் பொருளின் தன்மை, இடம் முதலியவற்றைக் கொண்டு தொடர்நிலையாக விளங்கும் இருவழக்குநிலை கொண்ட பேச்சு வழக்கில் ஒரு குறிப்பிட்ட இடத்தினைப் பேசுவோரின் பேச்சு சாருகின்றது. அது சில சமயம் அதிகம் உயர்தமிழ் வழக்

காகவும், சில சமயம் பொதுப் பேச்சுத் தமிழ் வழக்காகவும் பேசப் படும்போதே மாறலாம். இந்நிலையில், மொழியில் இருவழக்கு நிலை நிலையானதாகக் (static) கருதாது மாறிக் கொண்டே யிருப்பதாக நிலைபெற்றதாக (dynamic) கருதலாம்.

வாஷிங்டன் பல்கலைக்கழகம்,
சியாட்டல்.

துணை நூல்கள்

Anton Helga. 1975. *Tamil Usage in Mass Media*, Madras: The Author.

Arokianathan, S. 1976. "Tamil Diglossia in Radio", *Journal of Tamil Studies*, Vol : 9, pp: 94–97.

Annamalai, E. 1977. "Convergence of Literary & Colloquial Tamil", Pakha Sanjam, Patiyala: University of Patiyala.

Awasthy, G. C. *Broadcasting in India*, Madras: Allied Publishers.

Deivasundaram, N. 1978. "Can we measure...", *Pulamai*, 4. 2, pp: 173–82.

Director of Publication Divisions. 1978. *Mass Media in* 1978, New Delhi: Government of India.

Ferguson, C. 1959. "Diglossia", *Word*, 15.2, pp: 325–40.

Hawkins, Peter, 1979. "Greek Diglossia and Variation Theory", *General Linguistics* 19.4, pp: 169–87.

Karunakaran, K. 1974. "Accessibility between Literary & Colloquial Tamil", *Indian Linguistics*, 35. pp. 55-59.

1978. *Studies in Tamil Sociolinguistics*, Annamalai Nagar: Malar Publishers.

Schiffman, Harold. 1978. "Diglossia Purity/Pollution" in Maloney (eds.) *Contributions to Asian Studies*, pp: 98-110.

„ & Arokianathan, S. 1979. "Diglossia Variation in Tamil Film & Fiction" Presented in X th International Congress of Anthropological & Ethnological Sciences, Mysore: Central Institute of Indian Languages.

Shanmugham Pillai, 1960. "Tamil Literary & Colloquial", IJAL, 26.3 pt. 3, pp: 27-42.

„ 1965. "Merger of Literary & Colloquial Tamil", AL, 7.4 pt.3, pp:

„ 1972. "Tamil - Literary & Colloquial", *Linguistics*, 81, pp: 81-91.

Sivashanmugam, 1978. *The Language of Radio*, Annamalai University, (M.A. thesis).

Thirumalai, M. S. 1978. *Stylistics - A Linguistic Approach*, Madras: University of Madras.

Vasantha Kumari, 1976. "The Standard Spoken Tamil", in Gopinatha Nair (eds.) Studies in Dialectolology, Vol: 1.1, Trivandrum: University of Kerala.

மொழியியல், 4 . 1 & 2 (1980)

தொல்காப்பியனார் கண்ட மொழியியல் உறழ்வு

கே. எம். இருளப்பன்

I. முன்னுரை

ஒரு மொழி வளர்ச்சி பெற்றுக்கொண்டிருப்பதனை அதில் தோன்றும் மாற்றங்கள் உணர்த்துகின்றன, இம்மாற்றங்கள் மொழியின் அமைப்பில், ஒலிப்பில் எனப் பலநிலைகளில் தோன்றுகின்றன. மொழியமைப்பில் ஏற்படும் மாற்றங்களுள் ஒன்று மொழியியலுறழ்வு [variation] ஆகும். மொழியியல் துறையின் வளர்ச்சி இவ்வுறழ்வுகளைத் தெளிவாக விளக்க முற்பட்டுள்ளது. மொழியியலுறழ்வு வரலாறு மேலை நாடுகளில் பிளாட்டோவின் காலத்திலேயே தோன்றியுள்ளதுபோல் கீழை நாடுகளில் தொல்காப்பியருடன் தோன்றியுள்ளமை குறிப்பிடற் குரியது.

மொழியியல் துறையில் துரிதமான வளர்ச்சியைப்பெற்று விளங்கும் மேற்கத்திய நாடுகளின் மொழியியற் கொள்கைகளின் பெரும்பகுதியைத் தொல்காப்பியர் கி.மு. 5–3 ஆம் நூற்றாண்

டுக்கு முன்பே கூறியுள்ளமை தமிழரின் மொழியியலறிவிற்குச் சான்று பகர்வதாகும்.

இன்றைய சமுதாய மொழியியலார் [Social-linguists] அனைவரின் சிந்தனையையும் ஈர்க்கும் அடிப்படைக் கருத்தாக விளங்கும் "மொழியியலுறழ்வுக் கொள்கை" என்பது தொன்மை இலக்கணமாகவும் தமிழரின் தனிப்பெரும் சிறப்பாகவும் இலங்கும் தொல்காப்பியத்தில் பெறும் பங்கினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. மொழியியலுறழ்வு

மொழியியலுறழ்வை விளக்க அதன் உட்கூறுகளைக் கருத்தில் நோக்கல் இவண் ஏற்புடைத்தாம். உறழ்வை, மாற்றுறழ்வன் (variant), உறழ்வன் (variable) என வழங்கு நிலையிலும் (performance level) கருத்து நிலையிலும் (abstract level) வேறு படுத்தல் மரபு. உறழ்வனும், குறிப்பன் (indicator) குறியீடு (marker) சீரன் (stereotype) எனும் முக்கூட்டமைப்பே.[1]

2.1. மாற்றுறழ்வன்

ஒலியின் பாகுபாடாகிய உயிரொலி (vocoid) மெய்யொலி (contoid) எனும் இவ்விரு தன்மைக்கு மேற்ற மாற்றுறழ்வனைத் தொல்காப்பியர் சிறப்பாக எடுத்தியம்புகின்றார்.

---

1 A *variable* is "an inconsistency or disagreement that a particular form of language may exhibit from an abstract standard"

A *variant* is "a specific value of a variable"

An *indicator* is "a variable which has an indexical volue correlating with the socio - economic class membership or someother demographic characteristic of the user and do not subject to stylistic variation"

A *marker* is "like an indicator but it is subject to stylistic variation"

A *stereotype* is "the mirrorimage of an indicator since it does not relate to social factors rather subject to stylistic shifting"

எ.கா. 1. நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்
[தொல்–6]

2. அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங்காலை
[தொல்.–13]

2.2. உறழ்வன்

தொல்காப்பியத்தின்கண் காணப்படும் "போலி" எனும் பகுதி உறழ்வனின் தனித் தன்மையை விளக்குமுகமாக அமையப் பெற்றது எனலாம். அகர இகர ஐகார உறழ்வையும், அகர உகர ஔகார உறழ்வையும், மகர னகர உறழ்வையும் தொல் காப்பிய நூற்பாக்கள் சிறப்பாக விளக்குகின்றன.

எ.கா. 1. அகர இகரம் ஐகாரமாகும் [தொல்.–54]

2. அகர உகரம் ஔகாரமாகும்]தொல்.–55]

3. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்
[தொல்.–56]

4. இகர யகரம் இறுதி விரவும் [தொல்.–58]

5. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன [தொல்.–82]

2.2.1. குறிப்பன்

குறிப்பன்பற்றிய தொல்காப்பியக்கருத்து மொழியியலாளரை வியக்கச் செய்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் பல பிரிவினரிடையே வழங்கிய நுணுகிய மொழி வேறுபாட்டை இம்மூதறிஞர் சிறப்பாக எடுத்தியம்புகின்றார். இவ்விலக்கண வித்தகர் கண்டுணர்ந்த இச்சீரிய கருத்தே தற்கால மொழியியற் கொள்கைகளில் மிகச் சிறப்பாகப் பேசப்படும் சமுதாய மொழியியற் [Sociolinguistics] கொள்கையின் கருப்பொருளாக விளக்க முற்றுள்ளது. எனவே, சமுதாய மொழியியலின் வரலாற்றை ஆயும் பொழுது அதன்

வளர்ச்சியைச் சசூரின் [Saussure] கொள்கையுடனோ, உர்பின் [Worf] கொள்கையுடனோ, அல்லது, தற்கால சமுதாய மொழியியலாரான லெபவ் [Labov], உல்பிரம் [Wolfram], டிரட்கில் [Trudgill], பெர்கூசான் [Ferguson], பிசுமேன் [Fishman] ஆகியோரின் கொள்கைகளுடனோ ஒப்பிடாது பழந்தமிழிலக்கண ஆசிரியர் தொல்காப்பியனாருடன் ஒப்பிடல் தமிழுக்கும் தமிழருக்கும் அளிக்கும் பெருமையாம்.

இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் என்பன தொல்காப்பியர் உணர்த்தும் சமுதாயப் பாகுபாடாகும். ஈ, தா, கொடு எனும் கூற்றுகளை நடை வேறுபாட [Stylistic Variation]ன்றி வழங்குவோர் பற்றிய விளக்கத்தையும் தொல்காப்பிய நூற்பாக்கள் சிறப்பாக விளக்கும்.

எ.கா. 1, ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய [தொல்.–927]

2. ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே [தொல்.–928]

3. தா என் கிளவி ஒப்போன் கூற்றே [தொல்.–929]

4. கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே
[தொல்.–930]

2.2.2. குறியீடு

மொழியியலுறழ்வுகள் சமுதாய, நடை வேறுபாடுகளுக்கொப்ப மாற்றமடையும் தன்மையைத் தொல்காப்பிய நூற்பாக்கள் [தொல். 243–246] எடுத்தியம்பும். மொழிச்சூழல் [Linguistic Context] சமுதாயச்சூழல் [Social Context] என்பவையே மொழியியலுறழ்வுகளைக் கட்டுப்படுத்தும் [Constraints] ஆற்றல்மிகு இலக்குகளாகும்.

உதி, புளி என்பனவற்றில் காணக்கிடக்கும் புணரியல் மாற்றங்களை [Morphophonemic Changes] விளக்குமிடத்து, தொல்காப்பியனாரின் நுண்ணறிவிற்குச் சான்று பகரும் மொழியியற் கொள்கைகளைக் காணமுடிகிறது.

எ. கா. 1. உதி மரக்கிளவி மெல்லெழுத்து மிகுமே
[தொல். – 243]

2. புளி மரக் கிளவிக்கு அம்மே சாரியை
[தொல். – 244]

3. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே
[தொல். – 245]

இம்மூன்று நூற்பாக்கள் வாயிலாகப் புணர்ச்சிகளுக்கான விதிகளை விதித்த பின்பு, அடுத்துவரும் நூற்பாவில் இப்புணர்ச்சியிலும் உறழ்வு காணக்கிடப்பதைச் சுட்டி, அதற்கு மொழிச் சூழலின் விளக்கம் காட்டி, அமைதி காண்கிறார்.

எ. கா. 1. வல்லெழுத்து மிகினும் மானமில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத்தான [தொல். – 246]

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் முதல்வரான இளம்பூரணர் இத் தொல்காப்பிய விதிகளை விளக்கும் பொருட்டு, சில மேற் கோட்களாக

1. உதி கோடு > உதிங்கோடு
2. புளி கோடு > புளியங்கோடு
3, புளி கூழ் > புளிங்கூழ் ~ புளிக்கூழ்

என்பவற்றைக் கையாள்வதும் தொல்காப்பியனாரின் மொழியியலுறழ்வுக் கொள்கையின் குறியீட்டுத் தன்மையைத் திறம்பட விளக்குவதாகும்.

3.2.3. *சீரன்*

சமுதாய வேறுபாட்டைத் தவிர்த்து நடைமுறை வேறுபாட்டையுணர்த்தும் சீரனைப் பற்றிய எண்ணங்களை தொல்காப்பியனார் வெளிப்படையாக உணர்த்தவில்லையாயினும் அவருக்குச் சீரனைப் பற்றிய உணர்வு இருந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். இதற்கு தொல்காப்பியத்தின் “வல்லெழுத்து மிகினும் மானமில்லை” எனும் நூற்பாவைச் சான்றாகக் காட்டமுடியும். இந்நூற்பாவின் வாயிலாகப் புணரியல் முறைகள் புறச் சூழலுக்கேற்ப மாறும் என்பதை யாவரும் அறிவர். தொல்காப்பியனார் கூறும் இச்

சூழலைச் சமுதாயச் சூழலாகவும் [Social context] கொள்ளலாம் அல்லது நடைச்சூழலாகவும் [Stylistic context] கொள்ளலாம். சமுதாயச் சூழலைக் குறித்த தொல்காப்பினாரின் சிறந்த கருத்து, நூற்பாக்கள் 927–930 வாயிலாகப் புலப்படுகிறது. எனவே நூற்பாவின் கண் காணப்படுவது நடைச்சூழல் எனக் கொளினும் தவறாகாது. ஆயினும் இம்மயக்கத்தை நீக்கி, தொல்காப்பியனாரின் உறழ்வியல் கொள்கையில் சீரன் குறித்த கருத்தைக் கற்றுணர்ந்த மொழியியற் பெருமக்கள் மேலும் தெளிவுறுத்துதல் வேண்டற்பாலது.

3. *மொழியமைப்பு*

தொல்காப்பியனாரின் மொழியியற் கொள்கைகளனைத்தும் மொழியியலுறழ்வைப் பின்னிணைத்ததாகும். மொழியமைப்பின் [Language System] வடிவத்தையும் [Structure] வழக்கையும் [Use] பல விதிகள் [Rules] மூலமாகத் தொல்காப்பியர் விளக்கிப் போந்துள்ளார். அவ்விதிகளைச் செறிவுவிதி [Obligatory Rule], நெகிழ்வுவிதி [Optional Rule] என இருவகைப்படுத்தலாம். தொல்காப்பிய நூற்பாக்கள் 927–930 செறிவுவிதிகளாகவும், 243–246 நெகிழ்வுவிதிகளாகவும் அமைந்துள்ளன.

இதுபோன்றே இன்றைய மேலைநாட்டுச் சமுதாய மொழியியலாளர்களான லெபாவ் [Labov], டிரட்கில் [Trudgill] ஆகியோரும் மொழியமைப்பை விளக்குகின்றனர். நெகிழ்வு விதியை மாற்று விதி [Variation Rule], ஓரினமாக்க விதி [Assimilation Rule] எனத் தொல்காப்பியனார் இருவகைப்படுத்தி இயம்புகின்றார்.

3.1. *மாற்றுவிதி* (variable rule)

நுழை யுருபு [Input unit], வெளிவரு வுருபு [Output unit], தடுப்பு [Constraint] எனும் இம்முப்பகுதியைத் தன்னுளடக்கியதே மாற்றுவிதியாகும்.

நுழையுருபு → வெளிவருவுருபு/–தடுப்பு

குறிப்பிட்ட நுழையுருபுகள் குறிப்பிட்ட தடுப்புகளில் குறிப்பிட்ட வெளியுருபுகளாக மாறும் என்பதே இவ்விதியின் பொருளாகும்.

தொல்காப்பியனாரின் மாற்று விதிகளை ஒலியனுறழ்வு [Phonemic-Variation], புணர்ச்சி யுறழ்வு [Morphophonemic Variation] சொல்லுறழ்வு [Lexical Variation] என முவ்வகைப் படுத்தலாம்.

3.1.1. ஒலியனுறழ்வு

ஐ, ஔ எனும் கூட்டுயிர் [Diphthong] களுக்கும் பிற உயிர் களுக்கு மிடையே ஏற்படும் உறழ்வை மூன்று தொல்காப்பிய நூற்பாக்கள் சுட்டும். அவற்றில் தடுப்புகளைப் பற்றித் தொல் காப்பியனார் குறிப்பிடாத பொழுதும், பின் வந்த உரையாசிரியர் கள் அவை சொல் முதலில் [Word initial] வருவதாக விவரித் துள்ளனர். தொல்காப்பியனாரின் நூற்பாக்களையும் உரை யாசிரியர்களின் விளக்கவுரைகளையும் நோக்கின் கீழ்க்காணும் உறழ்வு விதிகளை ஆக்கமுடியும்.

1. ஐ ~(நெ.வி.) { ஐ / அய் } / # சொல்முதல்

2. ஔ ~(நெ.வி.) { ஔ / அவ் } / # சொல்முதல்

எ.கா. 1. தொல். — [இளம்] 54, 56
ஐயர் ~ அய்யர்
ஐ வனம் ~ அய்வனம்

2. தொல் — [இளம்.] 55, 56
ஔவை ~ அவ்வை

யகர சிகர உறழ்விற்குத் தகுந்த தடுப்பாகச் சொல்லிறுதியைத் தொல்காப்பியனார் காட்டுகின்றார்.

எ.கா. 3. தொல். [இளம்,] 58
ய் ~(நெ.வி) இ / + சொல்லிறுதி #
நாய் ~ நாஇ

மகர னகர உறழ்விற்கு அஃறிணையைத் தொல்காப்பியனார் அமைத்த போதிலும் உரையாசிரியர் இளம்பூரணனார் இது சொல்லிறுதியில் வருவதாக உணர்த்துகின்றார்.

---

* # இடைநிறுத்தத்தைக் குறிக்கிறது.

நெ.வி.
4. ம் ~ ன் / [+ அஃறிணை சொல்லிறுதி #]

எ.கா. தொல், [இளம்.] 82

நிலம் ~ நிலன்

பிலம் ~ பிலன்

3.1.2. புணர்ச்சி யுறழ்வு

புணர்ச்சி யுறழ்வு குறித்துத் தொல்காப்பியனார் ஆழ்ந்த கருத்துக்கொண்டிருந்தார் என்பதைத் தொல்காப்பியப் பகுதி களான புணரியல், தொகைமரபு, உருபியல். உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன மூலம் தெளிவுறலாம். புணர்ச்சி யுறழ்விற்குப் பல தடுப்புகளைச் சான்று பகர்வது தொல்காப்பியனாரின் தனிச்சிறப்பாகும். அவற்றுள் சிறப்பாக நான்கைச் சுட்டலாம்.

1. வேற்றுமை வடிவத் தடுப்பு

நெ.வி,
[+ சாரியை] ~ [— சாரியை] / [— ஒடு]
வேற்றுமை வடிவம்

எ.கா. தொல். [இளம்] 133
பூவினொடு ~ பூவொடு

2. ஒலியன் தடுப்பு

நெ.வி.
i. ல் → ற் ~ ஃ /– த்

எ.கா. தொல். [இளம்.] 370
கற்றீது ~ கஃறீது

நெ.வி.
ii. ள் → ட் ~ ஃ / – த்

எ.கா. தொல். [இளம்.] 400
முட்டீது ~ முஃடீது

3. சூழற்றடுப்பு

நெ.வி.
ங் ~ க் / [புளி – க் – #
முறையான சூழல்]

எ.கா. தொல். [இளம்.]
புளிங்கூழ் ~ புளிக்கூழ்

4. திணைத்திடுப்பு

நெ.வி.
ф ~ மெய் / உயர்திணை # – இ – மெய் – #
(அஃறிணை)

எ.கா. தொல். (இளம்.) 154,

குமர கோட்டம்
குமரக்கோட்டம்

3.1.3. சொல்லுறழ்வு

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் [தொல். 880] எனச் சொற்களைப் பாகுபடுத்தியதோடு அமைதி காணாது ஈ, தா, கொடு [தொல். 927 – 930] என்பனப் போன்றுச் சொற், களை அவை வழங்கும் சமுதாயச் சூழலையும் உட்கொண்டு பிரித்து தெளிவு படுத்திய பெருமை தொல்காப்பியனாரையே சாரும்.

4. முடிவுரை

அமைப்பு மொழியியல் [Structural Linguistics], மாற்றிலக்கண மொழியியல் [Transformational Linguistics], இயங்கு மொழியியல் [Implicational Linguistics or Dynamic Linguistics] ஆகிய மூன்றுமே உறழ்வுக் கொள்கையை விளக்குவன எனத் தற்கால மொழியிய லார் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், கி.மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே இக்கொள்கைகள் தொல்காப்பியனாரால் திறம்படக் கையாளப்பட்டுள்ளன என்பதை நினைக்கும்பொழுது தமிழ் நெஞ்சங்கள் பூரித்து மகிழும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

துணை நூல்கள்

1. *இலக்கணக்கொத்து மூலமும் உரையும்*, 1973, தொகுப்பு – கோபாலய்யர், சரசுவதிமகால், தஞ்சாவூர்.
2. *இலக்கண விளக்கம்*, 1973, தொகுப்பு – புலவர் செய்யொளி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. *சுவாமிநாதம்*, 1975, தொகுப்பும் விளக்கமும் – செ. வை. சண்முகனார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
4. *தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – சேனாவரையர் உரையுடன்*, 1966, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. *தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – இளம்பூரணர் உரையுடன்*, 1969, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. *தொன்னூல் விளக்கம்*, 1978, தொகுப்பு – ச. வே, சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.
7. *பிரயோக விவேகம் மூலமும் உரையும்*, 1973, தொகுப்பு – கோபாலய்யர், சரசுவதிமகால், தஞ்சாவூர்.
8. *நன்னூல் – காண்டிகையுரை*, 1961, சங்கரநமச்சிவாயர் உரையுடனும், சிவஞானமுனிவர் குறிப்புடனும், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.
9. *நேமினாதம் மூலமும் உரையும்*; 1923, தொகுப்பு – இராகவ அய்யங்கார். செந்தமிழ்ப் பதிப்பு, மதுரை.
10. *வீரசோழியம்*, 1970, தொகுப்பு – கோவிந்தராச முதலியார்' தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

Agesthialingam, S. 1977 *A Grammar of Old Tamil with Reference to Pathirruppattu*, Annamalai University, Annamalainagar.

Fishman, J. A. 1968 *Language problems & Developing Nations*, John Werly of Sons, Inc. New york.

Irulappan, K. M. 1978 "The Theory & Linguistic Variation in Tolkappiyam" *Seminar on Tolkappiyam*, Annamalai University, Annamalainagar.

Karunakaran, K. 1978 *Studics in Tamil Sociol linguistics.* Malar Patippu-1, Annamalainagar.

Labov, W. 1966 *"The Social Stratfication & English in New york City" CAL*, Washington, D. C.

Subramanian, S. V. and Irulappan, K. M, (eds.) 1980 *Heritage of the Tamil Language and Grammar International Institute of Tamil Studies,* Madras

Trudgill, P. 1974 *The Social Stratification of English in Norwich,* CUP, London.

Wolfrsm, W. and Fasold, R. W. *Study of Social Dialects in American English* Prentice Holl Inc. New Jersey.

சிறப்புச்சொற்களும் நாகரிகமொழிகளும்

பொதுவாக ஆராய்ந்தால் நாகரிகம் குறைந்த மொழிகளில், பொதுப் பெயர்களும், பொதுவினைகளும் குறைவாகவும், சிறப்புப்பெயர்களும் சிறப்பு வினைகளுமே மிகுதியாகவும் இருத்தலைக் காணலாம். உடம்பின் உறுப்பாகிய கால் என்பது மனிதனுடைய கால், விலங்கின் கால், பறவையின் கால் ஆகிய பலவற்றிற்கும் பொதுவான பெயர். சில மொழிகளில் ஒவ்வொரு வகைக்கும் தனிச்சொற்கள் உள்ளன. வருதல் என்பது மனிதன், பறவை, விலங்கு எல்லாவற்றிற்கும் பொதுவான வினை. சில மொழிகளில் இத்தகைய வினைச்சொல் மனிதனுக்கு வேறாகவும் விலங்குக்கு வேறாகவும் பறவைக்கு வேறாகவும் இருந்தால் அது வேடிக்கையாகத் தோன்றும் அன்றோ? அமெரிக்கச் சிவப்பிந்தியரின் மொழியில் 'ஓடு' என்னும் பொதுவான வினைச்சொல் இல்லையாம். ஒவ்வொருவகை விலங்கின் ஓட்டத்தையும் குறிக்க வெவ்வேறு வினைச்சொற்கள் உள்ளனவாம். இத்தகைய சிறப்புச் சொற்கள் மிகுந்த மொழி, நாகரிகம் குறைந்தவர்கள் பேசும் மொழி என்பர். இது எல்லா இடத்திற்கும் பொருந்தும் எனக் கூறமுடியாது. ஆங்கிலத்தில் குதிரையின் பல்வேறு வகையான ஓட்டங்களுக்குச் சொற்கள் உண்டு (gallop, trot). ஆனால் குதிரையின் ஓட்டத்தைப் பொதுவாகக் குறிக்கும் சொல் இல்லை. அதனால் ஆங்கிலமொழி நாகரிகம் குறைந்தவர்களின் மொழி எனக் கூறமுடியாது. பெரும்பான்மையாக உள்ளநிலை கண்டே முடிவு செய்தல் வேண்டும். மக்களைக் குறித்துக் கூறும்போது உணவு என்றும், விலங்கு பறவைகளைக் குறித்துக் கூறும்போது. தீனி என்றும் இரை என்றும் தமிழில் வழங்குகிறோம். அதுபற்றித் தமிழ் குறையுடையது ஆகாது.

டாக்டர் மு. வரதராசனார்

மொழிவரலாறு, கழகப்பதிப்பு, சென்னை, 1975.

மொழியியல் 4, 1 & 2 (1980)

வீரசோழியம்: ஒரு மொழியியல் ஆய்வு

செ. வை. சண்முகம்

0. முன்னுரை

தமிழ்மொழி வரலாற்றின் துவக்க காலமான சங்ககாலத்தில் தொல்காப்பியம் தோன்றிய பிறகு இடைக்காலத்தில் எழுந்த முதல் நூல் என்ற முறையால் மட்டுமின்றி வேறுசில வகையாலும் வீரசோழியம் தமிழ் இலக்கண உலகில் தனி இடம் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது.

பௌத்தர் எழுதிய முதலும் கடைசியுமான இலக்கண நூலாகவும், வடமொழி மரபைப் புகுத்திய நூலாகவும், தொல்காப்பியத்திற்குப் பிறகு இலக்கிய வழக்கில் புகுந்த மாற்றங்களையும் பேச்சுவழக்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் அதிக அளவில் கூறும் நூலாகவும் தனிச்சிறப்புபெற்று விளங்குகிறது என்றாலும் மொழி அமைப்பை முழுமையாகவும், சரியாகவும் விளக்காததாலும் வடமொழிச் சார்பாலும் இலக்கண உலகில் சிறப்பிடத்தைப் பெறவில்லை. ஆயினும் இலக்கண வரலாற்றை

அறிந்து கொள்ள விரும்பும் எவரும் தமிழில் எழுந்த எந்த நூலையும் புறக்கணிக்காது ஆராய்ந்து மதிப்பீடு செய்யவேண்டும். அப்போதுதான் இலக்கணத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளைச் சரியான வரலாற்று நோக்கோடு புரிந்து கொள்ள முடியும். அந்த முறையில் இன்று வளர்ந்துள்ள மொழியியலின் துணைகொண்டும் தமிழ்மொழி வரலாற்று அறிவின் உதவி கொண்டும் இங்கு எழுத்து, சொல் என்ற இரண்டு படலங்களும் ஆராயப் பட்டுள்ளன.

வீரசோழிய ஆசிரியர் புத்தமித்தரனார் என்பதும் அவர் 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதும் இதற்கு பெருந் தேவனார் எழுதிய உரை ஆசிரியருக்கு அண்மைக் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் என்பதும் வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. (உதாரணம், இளவரசு, 1963).

1. வீரசோழிய மொழியியல் கோட்பாடு

இலக்கணம் எந்த அடிப்படையில் எழுதப்பட்டது என்று ஆராய்வதே இலக்கணக் கோட்பாட்டு ஆராய்ச்சியாகும். வீர சோழியத்தின் எழுத்திலக்கணக் கோட்பாடு முன்னரே (சண்முகம், 1980) ஆராயப்பட்டுள்ளதால் இங்கு அதன் சொல்லதிகாரக் கோட்பாடு, சொல்லியல் கோட்பாடு, தொடரியல் கோட்பாடு, என்று இரண்டு பிரிவாக விளக்கப்படுகிறது.

பொதுவாக சொல்லதிகாரம் ஆறுபடலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவையாவன வேற்றுமை, உபகாரகம், தொகை, தத்திதம், தாது, கிரியாப்பதம் என்பன. இவைகளில் முதல் நான்கு பெயர்ச் சொல்லையும் இறுதி இரண்டு வினைச்சொல் லையும் விளக்குகின்றன. இந்த நிலையில் வீரசோழியம் தமிழ் மொழியின் சொல்லிலக்கணம் முழுமையும் ஆராயவில்லை என்று தெளிவாகிறது. பொதுவாக வேற்றுமை, உபகாரகம், தொகை ஆகிய மூன்றில் தொடரியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் ஏனைய இயல்களில் சொல்லியலுக்குச் சிறப்பிடம் தந்தும் ஆராயப்பட்டுள்ளன. வேற்றுமைப் படலத்தில் வேற்றுமை உருபுகளைப் பகுத்துக் காட்டினாலும் பெயர்ப் பாகுபாடு பெயர்ச் சொற்களில் வரும் விகுதிகள் பற்றி விவரிக்காது

வேற்றுமை உருபுகளைப் பகுத்துக்காட்டி அவற்றின் பொருளைப் பற்றிப் பேசுவதால் தொடரியலுக்கே தலைமை இடம் கொடுக்கப் படுகிறது என்று கருத வேண்டியுள்ளது.

சொல்லதிகாரத்தில் எழுத்தியல் பற்றி இரண்டு விதமான செய்திகள்: i) வடமொழிச் சொற்களைத் தமிழாக்கும் முறை (57-59). ii) அறிவில்லாதவர் பேச்சில் ஏற்படும் எழுத்து மாற்றங் கள் (82) காணப்படுகின்றன. எனவே தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிட்ட 'மயங்கா முறையின் எழுத்து முறைகாட்டி' என்ற கோட்பாடு இங்கு கடைப்பிடிக்கப்படவில்லை.

எழுத்ததிகாரத்தில் காணப்படுவது போன்று தொடர்பற்ற இரண்டு செய்திகள் ஒரே சூத்திரத்தில் விளக்கப்படுவது (சண்முகம், 1980-274) சொல்லதிகாரத்தில் அமையாவிட்டாலும் மேலே குறிப்பிட்டபடி எழுத்தியல் செய்திகள் சேர்க்கப்பட்டிருப் பது குறை உடையதுதான். மேலும் சொல்லிலக்கணத்தில் விவரிக்க எடுத்துக்கொண்ட பெயர், வினை ஆகிய இரண்டின் அமைப்பையுங் கூட ஒழுங்காகவும், செம்மையாகவும் வீரசோழியம் வருணிக்கவில்லை.

1.1. சொல்லியல் கோட்பாடு

வீரசோழியத்தின் ஒருசிறப்பு தொல்காப்பியர் பகுக்காமல் விட்ட பல உருபன்களைப் புத்தமித்தரனார் பகுத்துக் காட்டி யுள்ளதாகும். அவையாவன

1) வினைச் சொல்லின் காலவிகுதி
2) ஏவல் வினை விகுதி
3) வினையெச்ச விகுதி (துமந்தம், துவந்தம்)
4) எதிர்மறை விகுதி
5) காரித விகுதிகள்
6) பண்புப் பெயர் விகுதி
7) தொழிற் பெயர் விகுதி
8) பெயரில் திணைபால் விகுதி
9) விளி வேற்றுமை விகுதி

ஆயினும் எல்லாச் சொற்களும் பகுத்துக்காட்டப்பட்டுள்ளன என்று கூறமுடியாது.

1.1.1. பகுக்காமை

வீரசோழியம் சில சொற்களைப் பகுக்காமல் அவற்றின் முழுவடிவத்தையும் அப்படியே ஓரிடத்தில் கொடுத்துள்ளது ஆச்சரியமாக உள்ளது.

ஆட்டு, ஆற்று, தீற்று ஆதி தாதுக்களை அடற் காரிதமென்று
ஒட்டா அறிக............ (65.1,2)

என்று காரிதத்தாதுக்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார். ஆடு-ஆட்டு, ஆறு-ஆற்று என்ற இரண்டு சொற்களில் இறுதி எழுத்து இரட்டித்து வருவதும் தின்-தீற்று என்பதில் முதல் எழுத்து நீண்டு ஈற்றெழுத்து திரிந்து வருவதும் அந்தக் காரிதச் சொற்களைப் பகுப்பது சற்று சிரமமாகத் தோன்றியிருக்க வேண்டும். இன்று சொல்லியல் கோட்பாட்டில் நல்ல தெளிவு ஏற்பட்டிருந்தும் ஆட்டு, ஆற்று போன்ற சொற்களின் பகுப்பு விவாதத்துக்கு உரியதாகவே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இந்த நிலையில் சொல்லியல் என்று தனியாக வளராத அந்தக் காலத்தில் புத்தமித்தரனார் பகுக்காமல் விட்டது பெரிய குறையாகக் கருத முடியாது.

1.1.2. குறைப்பகுப்பு

சொற்களைப் பகுத்த போதும் முழுமையாகச் செய்யாமல் குறையாகப் பகுத்த இடங்களும் சில காணப்படுகின்றன. இப்படிக் குறையாகப் பகுத்தவற்றைக் குறைப்பகுப்பு (under segmentation) என்று சொல்லியலார் குறிப்பிடுவார்கள். அதாவது மேலும் பகுக்க இடமிருக்கும் போதும் பகுக்காமல் விட்டு விடுவதே குறைப் பகுப்பாகும்.

வீரசோழியக்குறைப் பகுப்பில் சிறிது வியப்புக்குரிய செய்தியும் உள்ளது. புத்தமித்தரனார் கால விகுதியையும் திணை பால் காட்டும் விகுதியையும் சேர்த்தே கிரியாபத பிரத்தியம் (வினைச்சொல் விகுதி) என்று கிரியாபத படலத்தில் குறிப்பிடுகிறார். உதாரணமாகத் தான் என்பது ஆண்பால் இறந்தகால

விகுதி என்று குறிப்பிட்டுள்ளார். (73) ஆனால் அவரே தாதுப் படலத்தில் த, ன, ய ஆகிய மூன்றும் இறந்தகால விகுதிகள் (66) என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் தான் என்பதில் த் என்பது இறந்தகால விகுதி என்றும் ஆன் என்பது மட்டுமே ஆண்பால் விகுதி என்றும் பகுத்திருக்கலாம். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் இப்படி இறந்தகால, எதிர்கால, நிகழ்கால விகுதிகளிலும் (73–78) துணிவுப் பொருளில் வரும் விகுதிகளிலும் இந்த குறைப்பகுப்பு முறை (79) காணப் படுகிறது. ஒருகால், வடமொழிச் செல்வாக்கால் இது ஏற்பட் டிருக்கலாம். எப்படியாயினும் கோட்பாட்டு நிலையில் கிரியாபதப் படலத்தில் கூறிய பிரத்தியங்கள் குறைப்பகுப்பை உடையன வாகவே கருதப்பட வேண்டும். கிரியாபத விகுதிகளில் இறந்த கால விகுதியைப் பொறுத்தவரையில் இன்னொரு வகையில் குறைப்பகுப்பு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மூவிடப் பெயர்களின் இறந்தகால விகுதியைக் கூறும்போதும் அந்தக் குறைப்பகுப்பு காணப்படுகிறது. இறந்தகால விகுதிகளாக, த, ன, ய ஆகிய மூன்று மெய்களைக் கொண்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்டது. ஆனால் கிரியாபத படத்தில் இரண்டுவித விகுதிகளையே குறிப்பிட்டுள்ளார். அவைகளில் தகர இறந்தகால விகுதியோடு வரும் பதமே சரியான முறையில் விவரிக்கப் பட்டிருக்கிறது (தான், தாள், தார், தார்கள் முதலியன). இன்னொரு விகுதியாக ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அன என்பன படர்க்கைக்கும் (73), ஆய், ஈர், ஈர்கள் என்பன முன்னிலைக்கும் ஏன், ஏம், ஓம் என்பன தன்மைக்கும் உரிய விகுதிகளாக (71) கூறப்பட்டுள்ளன. இங்கெல்லாம் காலவிகுதி சேர்த்துச் சொல்லப்படவில்லை என்பது வெளிப்படை. ஆகவே இறந்தகால விகுதியை விவரிக்கும்போது முரண் அமைந்து விடுகிறது. உண்மையில் இன் என்பது இறந்தகால விகுதியாக வரும் சொற்களினால்தான் இந்தத் தடுமாற்றம் புத்தமித்தர னார்க்கு ஏற்பட்டிருக்கிறது.

உறங்கினான், ஓடினான் என்பன போன்ற சொற்களில் ஆன் என்பதைப் பிரித்து விட்டால் உறங்கின், ஓடின் என்று பகுதியில் குறைப் பகுப்பு ஏற்பட்டு விடுகிறது. பலவின் பால் விகுதியாகப் புத்தமித்தரனார் அன என்பதைக் குறிப்பிட்டுள்ளார். தான், ஆன்; தாள்; ஆள்; தார்கள்; ஆர்கள் என்ற இணைபோல தன

பால் விகுதியை ஒப்புமையாக்கத்தால் கூறியிருக்க வேண்டும். இது பலவின்பால் சொல்லின் சரியான வடிவத்தைத் தராமல் போய் விடுகிறது. உறங்கின என்பதற்குப் பதிலாக *உறங்கன என்ற தவறான வடிவமே அமைந்து விடுகிறது. இங்கு, குறைப் பகுப்போடு தவறான வடிவமும் தரப்பட்டு விட்டன. இந்தக் குறையை உணர்ந்த உரையாசிரியர்

'அன என்பதின் முன்னின்ற அகரத்திநுக்குப் பெருகவும் இகரம் ஆதேசமாய் (=விகாரம்) உறங்கின என முடியும். பிறவும் விகாரத்தால் அறிந்து முடிக்க' (சூத். 73. பக். 79)

என்று சமாதானம் கூறியுள்ளார். பலவின்பாலைப் பொறுத்த மட்டில் உரையாசிரியர் தன் சாமர்த்தியத்தால் நூலாசிரியரை ஓரளவு காப்பாற்ற முடிந்தது. ஏனெனில் உறங்கன என்று நூலாசிரியர் கூறிய வடிவத்தில் சிறு மாற்றம் செய்து (அகரத்தை இகரமாகத் திரித்து) சரியான வடிவத்தை அமைத்து விட்டார். ஏனைய திணை – பால் வடிவங்களில் விகாரத்தால் சரியான வடிவங்களைப் பெறமுடியாது. புத்தமித்தரனார் கருத்துப்படி ஓடு என்ற சொல்லின் இறந்தகால வடிவம் ஓடான் என்றோ உடம்படுமெய் சேர்த்து ஓடுவான் என்றோதான் அமைக்க முடியும். ஆனால் சரியான வடிவம் ஓடினான் என்பது. எனவே இதை விகாரத்தால் விளக்க முடியாது. அதாவது நூலாசிரியர் செய்த தவறை உரையாசிரியர் முழுமையாகச் சமாதானம் செய்ய முடியவில்லை; பலவின்பாலைப் பொறுத்த மட்டில்தான் அவர் நூலாசிரியரைத் தன் திறமையால் காப்பாற்றியுள்ளார்.

1.1.3. தவறான பகுப்பு

இந்த இடத்தில் நூலுக்கும் உரைக்கும் முரண்பாடாக அமைந்துள்ள ஒன்றையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக அமையும். உரையாசிரியரும் அவரை ஒட்டி சுப்பிரமணியமும் (1977–46) தவறாகப் பகுத்து ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏவற்பன்மை விகுதிகளைப் பற்றி புத்தமித்தரனார்,

……………பன்மையாமிடத்து
நீங்காத மின்களுங்கள்ளாம்…………(79.2,3)

என்று கூறியதை உரையாசிரியர்

'முன்னிலை ஏவற் பன்மையின் கண் மின்கள், உம், கள் என்னும் மூன்றுமாம்'

என்று கூறியுள்ளார். ஆனால் உதாரணம் கொடுக்கும்போது

'நீங்கள் போமின்கள், நீங்கள் நில்லும், நீங்கள் போங்கள் என முன்னிலை ஏவற்பன்மை வந்தது. நீங்கள் போமின் என ஒரோவிடத்துக் கள் அழிந்து முடியும்'

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு 'கள்' என்ற விகுதி தனியாக ஏவற்பன்மையில் வராதது கவனிக்கத்தக்கது. போங்கள் என்பதில் கள் என்பது தனித்து வந்ததாகக் கருதமுடியும். அதுவும் 'உங்கள்' என்ற விகுதிப் புணர்ச்சியில் சிறு மாற்றம் பெற்று வந்ததே தவிர கள் விகுதி பெற்று வந்ததல்ல. மேலும் இலக்கிய வழக்கிலும் கூட 'கள்' என்பது தனித்து ஏவற்பன்மையாக வராததும் குறிப்பிட வேண்டும். எனவே உரையில்தான் தவறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதாவது உரையாசிரியர் உங்கள் என்பதை தவறாகப் பகுத்து உம், கள் என்று பிரித்து விட்டார், 'உங்கள்' முழுவதுமே ஒரு விகுதியாகக் கருதவேண்டும். (சண்முகம், 1968 ஆ: 76)

1.1.4. மிகைப் பகுப்பு

பகுக்கத் தேவையல்லாத இடத்தும் பகுப்பது மிகைப் பகுப்பு (over segmentation) எனப்படும். அதாவது பொருளை வேறு படுத்த புறநிலையில் வடிவம் இல்லாதபோது பகுப்பது ஆகும்.

புத்தமித்தரனார் /சு/ என்ற விகுதி சில இடங்களில் இருப்பதாகக்கொண்டு அது எங்கும் அழிந்துவரும் (33) என்று குறிப்பிட்டுள்ளார். இது ஒரு மிகைப்பகுப்பாகக் கருதலாம். ஆயினும் இங்கு வேறு ஒரு கருத்து புதைந்து கிடக்கிறது.

1) முதல் வேற்றுமைக்கு உருபாக சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், மார் என ஏழு வரும் (30)

சு என்ற உருபு உன், என், தன் என்று சு என்ற விகுதியோடு சேர்ந்து நீ, நான், தான் என்று திரியும் (37)

2) முன்னிலை ஏவல் சு விகுதி பெறும்

3) ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் ஆகிய மூன்று சொல்லுக்கும் பின் வரும். பலவின்பால் சொற்களிலும் சு, கள் என்ற இரண்டு விகுதி வரும் எல்லா இடத்தும் சு அழிந்து வரும் (33)

4) தத்திய பிரத்தியங்களில் ஒன்றாக சு அமையும் (52).

எழுவாய் வேற்றுமைக்கு உருபு உண்டு என்று கூறியது சரியா தவறா என்ற கேள்விக்கு விடையைப் பின்னால் பார்ப்போம். உருபு உண்டு என்ற புத்தமித்தரனாரின் கருத்தை ஒத்துக்கொண்டு சு விகுதியை அமைத்த காரணத்தைக் காணமுயலுவோம். முதல் வேற்றுமைக்கு அமைத்த சு தவிர ஏனையவை பன்மை விகுதிகள். எனவே /சு/ விகுதி ஒருமையில் (ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால்) மட்டும் வரும் என்று கூறினார். ஒருமை, பன்மை என்ற இரண்டு வகை எண்கள் இருக்கும்போது பன்மைக்கு மட்டும் விகுதி இருக்க ஒருமைக்கு விகுதி இல்லை; எனவே அதற்கு விகுதி இருக்கலாம் என்று எதிர்பார்க்கலாம். எனவே இலக்கணத்தில் பொதுமை ஏற்படுத்துவதற்காக இரண்டு வகை எண்ணிலும் விகுதி இருக்கிறது என்று பொது விதி அமைத்து, பின்னர் ஒருமைக்குரிய சு விகுதியானது கெட்டு விடுகிறது என்று ஒரு விதியும் அமைத்து விட்டார். இது சூனிய உருபன் போன்றது. இது கொஞ்சம் சுற்றி வளைத்துக் கூறுவது போல அமைந்தாலும் பொதுமை பெருமளவில் அமைந்ததுதான் நன்மை. எனினும் இங்கு இரண்டுவித ஐயங்கள் எழுகின்றன. ஒன்று: தமிழில் ஆண்பால், பெண்பால் விகுதிகளைப் புத்தமித்தரனாரே தத்திதப் படலத்தில் கூறியிருக்கிறாரே, அவைகளை இங்கும் ஏன் சொல்லியிருக்கக்கூடாது என்ற எண்ணம் வரலாம். ஆனால் உண்மையில் புத்தமித்தரனார் அவைகளை வெறும் திணைபால் காட்டும் விகுதிகளாகக் கருதவில்லை. ஏனெனில் அந்த விகுதிகளை ‘உண்ணும்’, ‘இதனால் உரைக்கும்’ போன்ற வாக்கியத்திலிருந்து ஆக்கப்பட்டதாக விளக்கியுள்ளார். (சூத். 53) உதாரணமாக வலையன் என்பதை வலை+அன் என்று உருபன் சேர்க்கையாக (morphological construction) கருதாமல் வலையினால் உண்பவன் வலையன் என்ற தொடரிலிருந்து உண்டானதாகக் கருதுகிறார். இதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. எல்லாச்

சொற்களையும் வலையன் போன்று எளிமையாக உருபன் சேர்க்கையாகக் கருத முடியாது. சிபி – செம்பியன், திதி – தைத்தியன் போன்ற இணைச் சொற்களை (சிபி வருக்கத்தான் செம்பியன்; திதிமகன் தைத்தியன் என்று விளக்குவார்) எளிமை யாக விளக்க முடியாது. எனவே ஆண்பால், பெண்பால் பெயர் களில் விகுதியை எளிதாகப் பகுக்க முடியாது போனதும், ஒன்றன் பால் பெயர்ச்சொற்களுக்கு விகுதி பெரும்பான்மையும் இல் லாததுமே புத்தமித்திரனாரை சு விகுதி அமைக்கத் தூண்டி யிருக்க வேண்டும். மேலும் அவருடைய வடமொழி அறிவும் துணையாக அமைந்திருக்கலாம். எனினும் கோட்பாட்டு நிலை யில் இது ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தக்கது.

இரண்டு: இதை வேறுவிதமாக விளக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். இன்றைய மொழியியலாளர் இப்படி ஒரு சொல்வகை முழுவதும் அதன் இலக்கணப் பண்பைச் சுட்ட விகுதி இல்லாவிட்டால் சூனிய உருபன் (zero morpheme) அமைக்கலாம் என்று கொள்வார்கள். ஆனால் அதே சமயத்தில் அப்படி அமைப்பது அமைப்பு ஒற்றுமை ஏற்படுத்தப் (structural congruence and balance) பயன்பட்டாலும், பல இடங்களிலும் அனாவசியமாக சூனிய உருபன் ஏற்படுத்த வேண்டுமே[1] என்றும், இலக்கணத்தில் சிக்கலை ஏற்படுத்துமே என்றும் இலக்கணம் எளிமையாக இருக்க வேண்டும் என்ற இலக்குக்கு மாறுபட்டதே என்றும் கருதி சூனிய உருபன் அமைப்பதைக் கூடியவரையில் குறைத்துக் கொள்வார்கள்.[2] ஆகையினால் நாமும் முதல் வேற்றுமைக்குச் சு விகுதி அமைப்பதை மிகை என்றுதான் கொள்ள வேண்டும்.

முன்னிலை ஏவலில் வரும் /சு/ விகுதியும் சூனிய உருபனை ஒத்ததுதான். எனவே மேலே கூறிய தடை விடைகள் இதற்கும் பொருந்தும்.

பலவின்பால் விகுதியாக சு, கள் என்று ஏற்படுத்தியதை ஓரளவு சூனிய மாற்றுருபு என்று கருதும்படி அமைத்துள்ளார். ஏனெனில் அஃறிணைப் பெயர்கள் பன்மை விகுதி ஏற்காமலும் பன்மை வினை முற்றை ஏற்கலாம்.

மரம் நின்ற(ன)
மரங்கள் நின்ற(ன)

என்ற உதாரணத்தை உரையாசிரியர் தந்துள்ளார் (பக். 31). ஒரு பெயர்ச் சொல்லில் பன்மை விகுதி இருந்து மற்றொரு சொல்லில் பன்மை விகுதி இல்லாமலிருப்பதால் சூனியமாற்றுருபு (zero allomorph) என்று கருதலாம்.[3] மொழியியலாளரும் இதை ஒத்துக்கொள்வார்கள். ஆயினும் எல்லா அஃறிணைப் பெயர்ச் சொற்களையும் அப்படிப் பயன்படுத்துவதால் /சு/ விகுதி இருந்து கெட்டுவிட்டது என்று கூறுவதை விட ஏனைய தமிழ் இலக்கணங் களில் குறிப்பிடுவது போல அஃறிணை ஒருமைப் பெயரின் பொதுப் பண்பாகக் குறிப்பிடுவதே எளிமையான முறையாகும். இதனாலேயே பால்பகா அஃறிணை என்று அஃறிணைப் பெயர் கள் வழங்கப்படுகின்றன. அதாவது புத்தமித்தரனார் அஃறிணைப் பன்மைப் பெயர்க்கு /சு/ என்ற மாற்றுருபு கூறியதை தவறு என்று கூறமுடியாவிட்டாலும் சிறந்தமுறை என்று கொள்ள முடியாது. ஏனெனில் அதை அஃறிணைப் பெயரின் பொதுப் பண்பு என்று எளிமையாகக் கூறிவிடலாம்.

தத்தியப் பிரத்தியங்களில் (பெயர்ச் சொல்லில் வரும் திணை-பால் விகுதிகள்) /சு/வும் ஒன்றாகக் கூறியிருப்பது சூனிய மாற்றுருபு ஆகும். ஏனெனில் பல சொற்களில் வெளிப்படையாக இருந்து சில சொற்களில் விகுதி இல்லாமல் இருப்பதே சூனிய மாற்றுருபு (zero allomorph) ஆகும். அன், இயன் போன்ற விகுதிகள் சில சொற்களில்வர (இப்பையன், வேதியன்) வேறு சிலவற்றில் (உதாரணம்: இறை என்ற சொல் இறைவன் என்ற பொருளில் வரும்போது) விகுதி இல்லாமல் /சு/ விகுதி இருந்து கெட்டதாகக் கருதுகிறார். எனவே இங்கு வரும் /சு/ சூனிய மாற்றுருபு ஆகும்.

1.1.4. தொகுப்பு

பகுத்த உறுப்புகளை எப்படித் தொகுப்பது என்பது சொல் லியல் ஆய்வில் ஒரு கூறாகக் கருதப்படுகிறது. பகுபத உறுப்பு களைத் தொகுக்கும்போது பொருள் ஒத்திருந்து வடிவங்களில்

வேறுபட்டிருந்தாலும் அவை ஒரு உருபனின் மாற்று உருபுகளாகக் கருதப்படும். அந்த மாற்றுருபுகளில் ஒலியன் கட்டுப்பாடு உடைய மாற்றுருபுகளைப் புணர்ச்சிவிதி மூலமும் சொல் கட்டுப்பாடுடைய மாற்றுருபுகளையும் உறழ்ந்துவரும் மாற்றுருபுகளையும் தொகுத்துப் பட்டியல் போட்டுக் கூறுவதன் மூலமும் விளக்குவது இலக்கண நூல்களில் ஓரளவும் மொழியியலில் முழுமையும் காணப்படுகிறது. வீர சோழியத்திலும் இந்த உண்மை பின்பற்றப் படுகிறது.

இறந்தகால இடைநிலைகளாக புத்தமித்தரனார் த, ன, ய என்ற மூன்றையும் கூறியிருப்பது இந்த உண்மையை வலியுறுத்தும். த என்பது த, ட, ற என்ற மூன்று மாற்றுருபுகளைக் கொண்டது. னகரம், இன், ன் என்ற இரண்டு மாற்றுருபுகளைக் கொண்டது. ய என்பது னகரத்தின் உறழ்ச்சியாக (ஓடின~ஓடிய; போன~போய) வருவது. ஒரு வேற்றுமைக்கு உருபுகளாகக் கூறிய பல விகுதிகளும் உறழ்ச்சியாக வருவனவாகக் கொண்டு தொகுத்துச் சொல்லியிருப்பதாகக் கருதலாம்.

1.1.5. உருபனுக்குப் பொருள் கூறல்

சொற்களைப் பகுத்து அவற்றைத் தொகுத்து உருபனாகக் கருதும்போது அதற்குரிய சரியான பொருளையும் குறிப்பிட வேண்டும். ஆனால் வீரசோழியம் பெயர்ச் சொல்லில் வரும் திணை-பால் விகுதிகளை முதல் வேற்றுமை உருபுகளாகக் கருதியது ஆய்வுலகில் கண்டனத்தையே எழுப்பியுள்ளது (சுப்பிரமணிய சாஸ்திரி, 1934 : 116).

உண்மையில் இங்கு மாற்றுருபுகளைத் தொகுத்துக் கூறும் போது அவைகளுக்குத் தரும் பொருளில் தவறு ஏற்பட்டதாகக் கருதவேண்டும். ஏனெனில் அந்த உருபுகள் இரண்டு முதல் ஏழு வேற்றுமையிலும் வரும். எனவே அவைகளை முதல் வேற்றுமைக்கு உரிய விகுதியாகச் சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது.

எதிர்மறையில் வரும் விகுதிகளைப் பற்றிப் பேசும்போது ஆன், ஆள், ஆர், ஆர்கள், ஆது, ஆ போன்ற விகுதிகளையும்,

இலன், இலள், இலர் போன்ற விகுதிகளையும் குறிப்பிட்டு அவை தடைப் பொருளில் (எதிர் மறையில்) வரும் என்று விளக்கியுள்ளார் (70). இலன், இலர் போன்றவை எதிர் மறை விகுதிகளே. ஆயினும் அவைகளையே இன்னும் பகுத்து எதிர்மறை விகுதி வேறு, திணை-பால் விகுதி வேறு என்று பிரித்துக் காட்டியிருக் கலாம். அப்படிப் பகுக்காததால் குறைப் பகுப்பு உடையது என்ற குற்றம் உடையதாக அமைந்து விடுகிறது. ஆன், ஆள் போன்ற விகுதிகள் உண்மையில் திணை-பால் காட்டும் விகுதிகள்தான். அங்கு எதிர்மறை விகுதி இல்லை, அல்லது சூனிய மாற்றுருபாக அமைந்திருக்கிறது. வீரசோழியர் பாணியில் கூறினால் அங்கும் 'சு' விகுதி இருந்து கெட்டுவிட்டது என்று விளக்கவேண்டும். இலன், இலள் போன்றவற்றை ஒரு விகுதியாகக் கொண்ட காரணத்தினால் ஆன், ஆள் போன்ற விகுதிகளையும் எதிர்மறைப் பொருளும் திணைபால் விகுதியும் சேர்ந்து அமைந்துவிட்டதாகக் கருதிவிட்டார். இலன், இலள் போன்றவற்றில் குறைப்பகுப்பு குற்றமும் ஆன், ஆள் போன்றவற்றில் மிகுதிப்படுத்தப்பட்ட பொருள் வேறுபாடும் ஆகிய இரண்டு குற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

6. உருபனின் தொகை

ஒரு மொழியில் உள்ள உருபனின் தொகையை எளிதாகக் கணக்கிட முடியாது. ஏனெனில் அதன் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும்[4]. ஆயினும் கட்டுண்ட உருபன்களையும் ஒரு இனத்தைச் சேர்ந்த உருபனையும் கணக்கிடுவதில் தொல்லை எதுவும் இருக்காது. தமிழில் வேற்றுமை எத்தனை என்றால் எட்டு என்றும் காலம் எத்தனை என்றால் மூன்று என்றும் திட்ட வட்டமாக கூறமுடிகிறது அல்லவா? அப்படித் திட்டவட்டமாகக் கூறும் உருபனின் தொகையில் தவறு ஏற்பட்டால் அதற்குரிய காரணம் ஆராய்தற்குரியது. கோட்பாட்டு வேறுபாடு, தவறாகப் புரிந்து கொண்டது, சரியான தரவுகள் (data) இல்லாமை முதலியவை காரணமாக இருக்கலாம்.

வீரசோழியத்தில் மூன்று இடங்களில் தொகை வேறுபாடு காணப்படுகிறது. இவைகளில் இரண்டு வடமொழிச் செல்வாக்

கால் ஏற்பட்டிருக்கலாம். ஒன்று மொழியியல் கோட்பாட்டின் காரணமாக அமைந்திருக்கலாம்.

புத்தமித்தரனார் பெயர்ச் சொல்லை எட்டு வகையாகப் பிரித்துள்ளார். ஆண், ஆண்சிறப்பு, பெண், பெண்சிறப்பு, ஒன்று ஒன்றன் சிறப்பு, பலர், பல என்பன அவை. (சூத், 30) உதாரணம்.

அரசன், அரசர், அரசி, அரசியார், அரசர்கள், நரி, நரியார், நரிகள் முதலியன.

இங்கு பொருளில் எட்டுவகை வேறுபாடு இருப்பது உண்மை தான். ஆனால் இலக்கணக் கூறுகளைக் கணக்கிட வெறும் பொருளும் வடிவமும் சேர்ந்த உருபன் வேறுபாடுகளை மட்டும் பார்க்கக் கூடாது. ஏனெனில் அரசியர்கள், அரசர்கள் என்று பலர்பாலிலும் ஆண்-பெண் வேறுபாடு இருக்கிறதை ஏன் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற கேள்வி எழும். வாக்கிய அமைப்பிலும், பிரதிப் பெயர் (pronoun) மாற்றத்திலும் அந்த வேறுபாடுகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் (திணை-பால் அடிப்படையில்) தொல்காப்பியர் பெயர்களை ஐந்து வகைப்படுத்தினார். புத்தமித்தரனாரே வினை முற்றில் திணை-பால் விகுதிகளை ஆறுவகையே செய்துள்ளார். ஒருவன், ஒருத்தி, சிறப்பு, பலர், ஒன்று, பல, (சூத். 71) என்பன அந்த வேறுபாடுகள். வினை விகுதிப் பாகுபாட்டை நோக்கும்போது பெயர்ச் சொல்லில் செய்த வேறுபாடு பொருத்தமானதாக, ஏற்றுக் கொள்ளத்தக்க தாகப் படவில்லை. மேலும் பெயரில் எட்டுவகை வேறுபாடும் வினையில் ஆறுவகை வேறுபாடும் இருப்பது பெயருக்கும் வினைக் கும் உள்ள திணை-பால் இயைபு (concordance) இல்லாமல் போய்விடுகிறது. பெயரைப் பொறுத்த வரையில் பொருளுக்குக் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுத்ததால் தவறு ஏற்பட்டதாகக் கருத வேண்டும்.

பெயரை எட்டு வகைப் படுத்தினார் என்று மேலே பார்த் தோம். தமிழில் எட்டுவகை வேற்றுமை இருக்கிறது. அதனா ல்

........காரகப் பதங்கள்
உருவு மலியும் அறுபத்து நான்கு உள...(31.3,4)

என்று கூறியுள்ளார். ஒவ்வொருவகைப் பெயருக்கேற்ப ஒவ்வொரு வேற்றுமையும் வேறு வேறு வடிவங்களும் பெற்றிருந்தால்தான் அறுபத்து நான்கு என்று கூற முடியும். உதாரணமாக ஆண்பால் இரண்டாம் வேற்றுமை உருபு ஒன்று; பெண்பால் இரண்டாம் வேற்றுமை உருபு மற்றொன்று; ஆண்பால் சிறப்புப் பெயருக்கு இரண்டாம் வேற்றுமை உருபு வேறொன்று என்று ஒவ்வொரு திணை பாலுக்கும் ஒவ்வொரு வேற்றுமை வடிவங்களும் வேறு பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழில் அப்படி இல்லை. புத்த மித்தரனாரே 34 ஆம் சூத்திரத்தில் கூறியபடி ஐ என்பது எல்லாச் சொல்லுக்கும் பொதுவான இரண்டாம் வேற்றுமை உருபு. மூன்றாம் வேற்றுமைக்கு ஒடு, ஓடு, ஆல் என்ற மூன்று உருபுகளிருந்தாலும் அவை மூன்றும் மூன்றாம் வேற்றுமை உருபனின் மாற்றுருபுகள். வேற்றுமை உருபனின் எண்ணிக் கையைக் கணக்கிடும்போது மாற்றுருபுகளைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. அந்த மூன்று மாற்றுருபுகளும் எட்டுவகைப் பெயரோடும் வரும்; பெயரின் திணை-பாலுக் கேற்ப அவை மாறுவதில்லை. இப்படி மாறுவது வடமொழியில் இருப்பதால் தமிழிலும் புத்தமித்தரனார் தவறாகக் கணக்கிட்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

முன்னரே கிரியாபத படலத்தில் கால விகுதியையும், திணை-பால் விகுதியையும் சேர்த்துக் கூறியது பொருத்தம் அற்றது என்று பார்த்தோம். இரண்டையும் சேர்த்துக் கூறியதன் மற்றொரு விளைவு கிரியாபத விகுதிகளின் – வினைமுற்று விகுதி களின் எண்ணிக்கையையும் மிகைப்படுத்திக் கூறும்படி ஆகி விட்டது. படர்க்கையில் திணை-பால் வேறுபாடு ஆறும் கால வேறுபாடு மூன்றும் சேர்த்து பதினெட்டு விகுதிகள் என்றும் முன்னிலை, தன்மை ஆகிய இரண்டு இடத்திலும் மூன்று வகையான எண் வேறுபாடும் (ஒருமை, சிறப்பு, பன்மை) கால வேறுபாடு மூன்றும் சேர்த்து ($2 \times 3 \times 3$) பதினெட்டு என்றும் கூறியுள்ளார். படர்க்கையில் திணை-பால் விகுதி கால விகுதிக் கேற்ப மாறவில்லை. முன்னிலை-தன்மையிலும் எண் வேறு பாட்டிற்கேற்ப விகுதி வேறுபடவில்லை. எனவே முன்னதற்கும்

பின்னதற்கும் 18, 18 விகுதிகள் என்று கூறியதும் மிகைப்படுத்தப் பட்டதுதான். தமிழ்மொழி அமைப்பை நோக்கினால் இப்படிக் கூறியிருக்க வேண்டாம். இவைகளைத் தனித்தனியே கூறி (காலம் மூன்று, படர்க்கையில் திணை-பால் விகுதி-6; தன்மை – முன்னிலையில் எண் வேறுபாடு-3) வருணித்தால் போதுமானது.

1.2. தொடரியல் கோட்பாடு

மேலே குறிப்பிட்டபடி பெயரியல்களில் மட்டுமே ஓரளவு தொடரியல் செய்திகள் காணப்படுகின்றன.

வேற்றுமை, காரகம் என்ற இரண்டுவகையான வேறுபாடு வடமொழிச் செல்வாக்கால் ஏற்பட்டதாயினும் தொடரியல் நிலையில் இன்று பலராலும் பாராட்டப்படுகிற வேறுபாடாக உள்ளது. வேற்றுமை உருபன் அடிப்படையில் அமைந்தது. காரகம் பெயருக்கும் வினைக்கும் உள்ள உறவு அடிப்படையில் அமைந்தது. காரகம் என்பது இன்று மாற்றிலக்கண மொழி யியலார் கூறும் அகநிலை வேற்றுமை (Deep Case) யோடு ஒத்தது. அகநிலை வேற்றுமையாக எத்தனை அமைப்பது என்று மொழி யியல் அறிஞர்களிடையே வேறுபாடு உள்ளது. (அருள்ராஜ், 1981). எனினும் வடமொழியை ஒட்டி காரகம் ஆறு என்றும் வேற்றுமை எட்டு என்றும் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கண மரபு முறையில் இரண்டாம் வேற்றுமைப் பொருள் கருமம் என்றும் மூன்றாம் வேற்றுமைப் பொருள் கருத்தா, கரணம் என்றும் கூறியுள்ளது ஓரளவு தொடரியல் அடிப்படை உடையது (சண்முகம், 1972). ஆனால் நான்காம் வேற்றுமைக்கு கோளி (அதாவது கொடை) ஐந்தாம் வேற்று மைக்கு அவதி (அதாவது நீக்கம்) என்று கூறியிருப்பது குறைபடக் கூறியிருப்பதாகும். ஏனெனில் அந்த இரண்டு வேற்றுமைகளும் வேறுபல பொருள்களையும் உடையன. ஐந்தாம் வேற்றுமை ஒப்பு, எல்லை போன்ற பொருள்களிலும் வரும்.

உபகாரப் படலத்தில் ஒவ்வொரு காரகத்தின் பொருளையும் விளக்கி (38) அவை ஒவ்வொன்றின் உட்பிரிவுகளையும் குறிப்பிட்டு (39), ஒவ்வொரு காரகத்திற்குரிய வேற்றுமைகளையும் (40, 41 குறிப்பிட்டுள்ளார்.

காரகத்தின் உட்பிரிவுகள் பெரும்பான்மையும் தொடர்நிலை அடிப்படையில் – அதாவது வாக்கிய வேறுபாடுகளை ஒட்டி அமைக்கப்படவில்லை. பொருள், சமூக வேறுபாடு, புறநிலை அமைப்பு (Surface Structure) முதலியவற்றையும் அடிப்படையில் அமைத்துள்ளார். மேலே குறிப்பிட்டபடி வாக்கிய நிலையில் வரும் அடிப்படை தவிர வேறுவழியில் செய்யப்படும் வேறுபாடு கள் மொழி அமைப்பின் உண்மையான பண்பைக் காட்டாது போய்விடும்; அவை மொழியியலாராய்ச்சியில் முக்கிய கடமை ஆற்றவில்லை என்று ஆகிவிடும்.

உதாரணமாகக் கருத்தாவை ஐந்து வகையாகப் பிரித் துள்ளார். அவையாவன: காரணக்கருத்தா, தான் தெரி கருத்தா, தான் தெரியாக் கருத்தா, சுருமக்கருத்தா, தலைமைக் கருத்தா என்பன.

1. சாத்தன் கொற்றனை
அஞ்சுவித்தான் – காரணக்கருத்தா
2. சாத்தனால் எறியப்பட்டது
கல் – தான் தெரியாக் கருத்தா
3. தேவதத்தன் சோற்றை
அடுகின்றான் – தான்தெரியாக் கருத்தா
4. நன்மைதானே வெளிப்படும்
விழுமியோர் பக்கல் – கருமகர்த்தா
5. விழுமியோர் நன்மை
செய்வர் – தலைமை கருத்தா

இங்கு வாக்கியத்தின் முதலில் வரும் சொல் அடிப்படையில் தான் வேறுபாடு செய்யப்பட்டிருக்கிறது. முதல் வாக்கியம் செய்வியென் வினை (Causal Verb) கொண்டது. கொற்றன் அஞ்சுவதற்குக் காரணமாக சாத்தன் இருப்பதால் காரணக் கருத்தா என்பது தொடரியல் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனைய வாக்கியங்களிலிருந்து வேறுபட்டது. சாத்தன் கொற்றனை அஞ்சும்படிச் செய்தான். அதனால் அது புதை நிலையில் இரண்டு வாக்கியமாகக் கருதப்படும். அஞ்சுதலாகிய செயலைச் சாத்தன் செய்யவில்லை. கொற்றன் அஞ்சுவதற்குக் காரணமாக சாத்தன்

ஏதோ செயல் செய்ததால் காரணக்கருத்தா என்று அழைக்கப் படுகிறது. இங்கு பொருள் நிலையிலான விளக்கத்தைவிட வாக்கிய அமைப்பில் புதைநிலையில் இரண்டுவிதமாக அமைந் திருப்பதும் அஞ்சுவித்தான், அஞ்சும்படிச் செய்தான் என்று மாற்றி உரைக்கக் கூடியதுமே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

ஆனால் இரண்டாவது வாக்கியம் தான் தெரிகருத்தா என்பது சிறப்பானதாகப்படவில்லை. உரையாசிரியர், 'கருத்தா இடம் தெரிந்து நிற்றலால் தான் தெரிகருத்தா வாயிற்று' (பக்.42) என்று விளக்கியுள்ளார். உண்மையில் சாத்தன் என்பது புதை நிலையில் கருத்தா. சாத்தன் கல் எறிந்தான் என்று இந்த வாக்கியத்தை மாற்ற முடியும். அதுவே இரண்டாவது வாக்கியத் தின் புதை வாக்கியமாக அமையும். எனவே சாத்தனால் என்பது தான் தெரிகருத்தா என்பது பொருத்தமாக அமையவில்லை; தான் தெரிகருத்தா என்று கூறுவதன் மூலம் கருத்தா மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்று வாக்கியத்தில் முதலில் வருவதுதான் சிறப்பு, இயல்பானது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. முதல் வாக்கியமும் இரண்டாம் வாக்கியமும் தொடர் நிலையில் வேறுபட்டாலும் இரண்டாம் வாக்கியத்துக்குச் சரியான பெயர் சூட்டப்பட வில்லை.

தேவதத்தன் சோற்றை அடுகின்றான் என்பதை உரை யாசிரியர் தேவதத்தன் என்னும் சொல் தானே கருத்தா என்னும் இடம் தெரிந்து நில்லாமையாலும் சோற்றை என்னும் காரகப் பதத்தானும் அடுகின்றான் என்னும் கிரியா பதத்தானும் கருத்தா என்று அறியப் படுதலானும் தான் தெரியாக் கருத்தா வாயிற்று என்று விளக்கியுள்ளார். முதல் வாக்கியம் போலவே மூன்றாம் வாக்கியம் அமைந்தாலும் இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது. 'அடுகின்றான்' என்பதை 'அடும்படிச் செய்தான்' என்று சொல்ல முடியாது. இரண்டு வாக்கியம் போலவும் கொள்ள முடியாது. ஆகையினால் இங்கு கருத்தா எழுவாயாக வந்திருக்கிறது என்று இதை எழுவாய்க்கருத்தா என்று வேண்டு மானால் பெயரிடுவது பொருத்தமாக இருக்கும். தான் தெரியாக் கருத்தா என்று பெயரிட்டது வாக்கிய அமைப்பின் சிறப்பைப்

புலப்படுத்துவதாக இல்லை; பொதுவாக வாக்கிய அமைப்பிலுள்ள வேறுபாடு புலப்படும்படிப் பெயரிடாததும் அந்த முறையில் விளக்காததும் வெறும் பொருள் நிலையில் பெயரிடப்பட்டது என்று எண்ணத்தை ஏற்படுத்தி தொடரியல் ஆய்வு வளராமல் போய்விட்டது அடிப்படையான சில நல்ல கருத்து இருந்தும் அது மேலும் வளராதது மேலே குறிப்பிட்ட குறைகளினால்தான். ஆயினும் மாற்றிலக்கணப் பொருளியல் (Generative semantics) என்ற இன்றைய ஆய்வுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது சில மொழியியல் கோட்பாடுகளை நமது இலக்கண ஆசிரியர்கள் முன்னரே உணர்ந்திருந்தார்கள்; இருந்தாலும் அதன் அடிப் படையை தெளிவாக விளக்காத காரணத்தால் அவர்களின் ஆய்வு அதற்குரிய சிறப்பிடத்தைப் பெறத்தவறிவிட்டது; வளர்ச்சியை ஏற்படுத்தவும் முடியாமல் அலட்சியப்படுத்தும் நிலைக்கு ஆகி விட்டது.

உபகாரகப்படலத்தில் கூறியவற்றை மொழியியல் நோக்கில் விரிவாக ஆராய்ந்து, கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளித் தொடரியல் ஆய்வில் அதிக கவனம் செலுத்த தமிழ் அறிஞர்கள் முன்வர வேண்டும்.

2. ஆசிரியரின் நோக்கம்

தமிழில் முன்னரே தொல்காப்பியம் இருக்கிறது. பிறகு வேறு பல இலக்கண நூல்களும் இருந்திருக்க வேண்டும் என்று அறியமுடிகிறது (இளவரசு, 1963). அப்படியிருந்தும் புத்தமித்தர னாருக்குத் தான் ஒரு இலக்கணம் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டிய காரணம் என்ன? இந்த கேள்விக்கு பாயிரம் ஒருவித விடையைத் தருகிறது. இதை வெளிப்படை நோக்கம் என்று கூறலாம். இன்றைய இலக்கண ஆய்வாளர்கள் மேலும் சில காரணங்களைக் கண்டுள்ளார்கள். இவைகளை உள்ளீட்டு நோக்கம் என்று கூறலாம். இறுதியாக சமூகப் பண்பாட்டுப் பார்வையில் நோக்கும்போது வேறு உள்நோக்கம் புலப்படுகிறதா என்று பார்க்க முயலுவோம்.

2.1. வெளிப்படை நோக்கம்

நாமே எழுத்துச் சொல் பொருள்
யாப்பு அலங்காரம் எனும்
பாமேவு பஞ்ச அதிகார
மாம் பரப்பைச் சுருக்கி
... ...
... ...
... ... உரைப்பன் வடநூல்
மரபும் புகன்று கொண்டே (பாயிரம் 3)

என்ற வரிகளில் இரண்டு கருத்துகள் கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்று ஐந்து அதிகாரத்திலும் விரிவாக இருப்பதைத் தொகுத்துக் கூறுதல். இரண்டு: வடநூல் இலக்கண மரபைச் சேர்த்துக் கூறுதல்.

2.1.2. சுருக்கம்

பொதுவாக முதல் கருத்து வேறுபல தமிழ் இலக்கண நூல்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. நேமிநாதம் 'தொல்காப்பிய கடலைக் கடக்க உதவும்' என்று பாயிரத்தில் கூறியுள்ளது (சிறப்புபாயிரம்: சொல் அதிகாரம்)

"அரும்பொருள் ஐந்திணையும் யாவரும் உணர
தொகை வகை விரியிற் தருக என.........
... ...
மொழிந்தனனாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்"

என்ற நன்னூல் பாயிர வரிகள் (10-12, 18, 19) தொகுத்தும் (சுருக்கியும்) வகுத்தும் விரித்தும் தர வேண்டும் என்று சீயகங்கன் கேட்டுக்கொள்ள நன்னூல் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இங்கு வீரசோழியத்துக்கும் நன்னூலுக்கும் இரண்டு முக்கிய வேறுபாடுகள் உள்ளன. ஒன்று: வீரசோழிய ஆசிரியர் சுருக்க வேண்டும் என்று தானே நினைக்க நன்னூலாருக்கு அரசன் அப்படி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறான். மற்றொன்று: வீரசோழியத்துக்கு சுருக்கமே முக்கிய பணியாக இருந்திருக்கிறது. நன்னூலுக்கு சுருக்கியும் வகுத்தும் விரித்தும் எழுத வேண்டும்

என்பதைக் கடமையாகக் கொண்டிருக்கிறது. இந்த வேறுபாடு களைப் புறக்கணித்தாலும் இரண்டு ஆசிரியருக்கும் முன்னூல் களைச் சுருக்கி எழுத வேண்டும் என்ற நோக்கத்தில் ஒற்றுமை இருந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். முன்னுள்ள நூல்களைச் சுருக்கிக் கூற வேண்டும் என்ற எண்ணம் எழக் காரணம் என்ன? எப்படிச் சுருக்கிக் கூறியுள்ளார்கள்? என்ற இரண்டு கேள்வி இந்த வெளிப்படை நோக்கையொட்டி எழுகின்றன.

பொதுவாக இன்றையத் தமிழ் அறிஞர்களும் தொல்காப்பியம் பரந்துபட்டு விரிவாக இருப்பதாகவும் அதில் ஒரு செய்தி ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் சொல்லப்பட்டிருப்பதாகவும் கருதுகிறார்கள். உதாரணமாக,, 'தொல்காப்பியனாராற் செய்யப்பட்ட இந்நூலில் (தொல்காப்பியத்தின்) இலக்கணங்கள் பலபடப் பரந்து கிடத்த லான் பிற்காலத்தில் மாணாக்கராலும் பிறராலும் பயிலப்படாது போகவே தமிழ் இலக்கண விதிகளை அறிதல் இயலாததாயிற்று'' என்று வெள்ளை வாரணனும், (1967:5) தொல்காப்பியர் விரித்துக் கூறியதனைத் தொகுத்து வகைப் படுத்தியுள்ளார் என்று இளவரசும் (1963:140) குறிப்பிட்டுள்ளார்கள். எனவே பழைய நூல்களைச் சிறப்பாகத் தொல்காப்பியத்தை சுருக்கித் தர வேண்டும் என்ற எண்ணம் இடைக்காலத்திலும் பரவலாக இருந்திருக்கலாம். ஆகவே பல ஆசிரியர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் புத்தமித்தரனார் என்பது பாயிரத்தால் வெளிப்படுகிறது. அடுத்து, வீரசோழியர் எப்படி சுருக்கிச் சொல்லியிருக்கிறார் என்பது ஆராய வேண்டும். வீரசோழிய எழுத்ததிகாரம் தொல்காப்பிய எழுத் ததிகாரத்தை நோக்க எப்படியெல்லாம் தொகுத்துச் சொல்லப் படுகிறது என்று முன்னரே (சண்முகம், 1980:273) விளக்கப் பட்டுள்ளது. அதனால் சொல்லதிகாரம் எப்படி சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் இங்கு பார்ப்போம்.

தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றுமைக்கும் இரண்டு சூத்திரம் கூறியிருக்கிறார். வேற்றுமை இயல் மட்டும் தொல்

காப்பியத்தில் 21 சூத்திரங்கள் உடைய தாயிருக்க வீரசோழியத்தில் 4 சூத்திரங்கள் (29, 33–35) மட்டுமே உள்ளன. விளிமரபு என்று தனி இயல் அமைத்து 39 சூத்திரங்களில் விளி வேற்றுமை தொல்காப்பியத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. வீரசோழியத்தில் விளிமரபுக்கு ஒரு சூத்திரமே அமைந்திருக்கிறது. தொகைச் சொற்களைப்பற்றித் தொல்காப்பியத்தில் ஒன்பது சூத்திரங்கள் (எச்ச இயல் 406–414) இருக்க வீரசோழியத்தில் இரண்டே சூத்திரங்கள் (50,51) உள்ளன. ஏனைய இயல்களில் இரண்டையும் ஒப்பிடும்படியாக இல்லை. ஆயினும் இரண்டுக்கும் ஒப்புக் காணக் கூடிய சூத்திரங்களில் எண்ணிக்கைச் சுருக்கம் மட்டுமே காணப்படுகிறதே தவிர பொதுமைப்படுத்தி எளிமையாகக் கூறப்பட்டிருக்கிறது என்று கூற முடியாது. எழுத்ததிகாரத்திலும் கூட, சுருக்கிக் கூறியதால் வேறு எந்த நன்மையும் ஏற்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது (சண்முகம், 1980). மொழி அமைப்பைக்கூறும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டைப் பொருத்தமட்டில் சுருக்கிக் கூறப்பட்டிருப்பது உண்மைதான். என்றாலும் அதனால் வேறு நன்மை சிறப்பாக பொதுமையும் எளிமையும் ஏற்படவில்லை. பிறப்பியல், மெய் மயக்கம் போன்ற சில இலக்கணக் கூறுகளைப் பொதுநிலையில் பேசிவிட்டு தமிழ்மொழி அமைப்பை விளக்காமல் விட்டதும் பெயரெச்சம், இடைச்சொல் முதலியவற்றைச் சொல்லதிகாரத்தில் கூறாததும் சுருக்கமாகக் கூறியதன் விளைவு என்று கருதக் கூடாது. வீரசோழியர் தமிழ் மொழி அமைப்பு முழுமையையும் ஏனோ ஆராயாமல் விட்டிருக்கிறார்; அவைகளையெல்லாம் சிறப்பில்லை என்று நினைத்தாரா அல்லது கவனிக்காமல் விட்டு விட்டாரா என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறது. இதற்கும் ஏதாவது காரணம் உண்டா என்றும் சிந்தித்துப் பார்ப்பது அவசியமே. எப்படியாயினும் சுருக்கிச் சொன்னதில் புத்தமித்தரனார் பெருவெற்றி பெறவில்லைஎன்றே கருத வேண்டியிருக்கிறது.

2.1.2. வடநூல் மரபு

அடுத்த வெளிப்படை நோக்கமாகிய 'வடநூல் மரபும் சேர்த்துச் சொல்ல வேண்டும்' என்பது மூன்று கேள்விகளை எழுப்புகிறது. ஒன்று: எப்படியெல்லாம் வடமொழி மரபைப் புகுத்தி

யிருக்கிறார். இரண்டு: அப்படி வடமொழி மரபைப் புகுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றியது. மூன்று; வட மொழி மரபைப் புகுத்தியதால் ஏற்பட்ட நன்மை, தீமை என்ன? இவைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

வடமொழி மரபுபைப் புகுத்திய விதம்

நான்கு முறையில் வீரசோழியத்தில் வடமொழிச் செல்வாக்கு காணப்படுகிறது.

1) வடமொழி இலக்கணக் கலைச்சொற்களைக் குறிப்பிடுதல்.

(i) தமிழில் புணர்ச்சியைப் பற்றி ஒரு சூத்திரத்தில் விளக்கி விட்டு (9) அடுத்த சூத்திரத்திலேயே

> ‘ஆன்றாம் உலோபத்தோடு ஆகமம் ஆதேசம் ஆரியத்துள்
> மூன்றாம் மொழியோடு எழுத்து விகாரம்’.......

என்றும் அவை சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் கடையிலும் வந்தால் மொத்தம் ஒன்பது விகாரம் ஆகும் என்றும் கூறி யுள்ளது. எழுத்தில் விகாரம் [ஒன்பது, மொழியில் விகாரம் ஒன்பது ஆக பதினெட்டு என்றும் அவை உலகத்தார்க்கு ஒத்த போதன்றி மற்று எவ்விடத்தும் வராது என்றும் விளக்கியுள்ளார்.

பொதுவாக நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேரும் போது தனிமொழியிலும் தொடர் மொழியிலும் தோன்றல், திரிதல், கெடுதல் என்ற மூன்று விகாரமும் இயல்பும் வரும் என்று தமிழ் இலக்கணம் கூறும். ஆயினும் தமிழிலும் சொல்லுக்கு முதலிலும் (யான் — என்), இடையிலும் (இரண்டு + பத்து > இருபஃது, இறுதியிலும் (மரம் + குறிது > மரங்குறிது) மாற்றம் ஏற்படும். அப்படியே வருமொழியிலும் மூன்று இடத்திலும் (முள் + தீது > முட்டீது, இரண்டு + பத்து > இருபஃது, ஒன்பது + நூறு > தொள்ளாயிரம்) மாறுவதும் உண்டு. எனவே வடமொழி இலக்கணத்தையும் தமிழ் இலக்கணத்தையும் தனித்தனியே கூறாமல் வடமொழியில் விளக்கியது போல தமிழுக்கும் விளக்கி யிருந்தால் வடமொழி அறிவால் தமிழ் இலக்கணம் தெளிவு பெற்றது எனக்கருதலாம். இரண்டு மொழிக்கும் இரண்டு வகையில்

விளக்குவது சிறப்பாக இல்லை. வடமொழியில் இயல்பு புணர்ச்சி பற்றிப் பேசப்படவில்லை. தமிழில் எழுத்திலும் விகாரம் ஏற்படும் என்று கூறவில்லை. தமிழில் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணர்ச்சி பெறும் என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் மொழிக்கு முதலிலும், இடையிலும், இறுதியிலும் நடைபெறும். எனவே இரண்டையும் தனித்தனியே கூறாது பொதுவாகத் தமிழுக்குப் பொருந்தும் முறையில் விரிவாகக் கூறியிருக்கலாம்.

(ii) தொகைச்சொற்களின் வகைகளைத் தமிழுக்கும் (50–51) வடமொழிக்கும் (45–49) தனித்தனியே கூறியுள்ளார். அங்கும் சிறுசிறு வேறுபாடுகளே உண்டு. இவற்றையும் பொதுவாக்கிக் கூறியிருக்கலாம்.

காரகம் பற்றியும் (காரகப் பிரத்திபயம்), தத்திய பிரத்தியங்கள் பற்றியும் பொதுவாகப் பேசினாலும் அங்கு வடமொழி வாடையே அதிகம் அடிக்கிறது.

2) வடமொழிச் சொற்களுக்குரிய இலக்கணத்தைக் கூறுதல்

i) வடமொழி பெயர்ச்சொல்லில் எதிர்மறை வடிவத்தை விளக்குவது (11)

ii) வடமொழிச் சொற்களின் புணர்ச்சி மாற்றத்தை வருணிப்பது (12)

iii) வடமொழிப் பெயரில் உள்ள காரகப்பதத்தை (வேற்றுமை உருபுகளை) கூறுதல் (32)

iv) வடநூலில் தாதுக்கள் அமையும் முறை (60) இங்கு

... ...
துன்னிய தாதுக்களின் போலிபோலத் தொகு தமிழ்க்கும்
பன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க......

என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(v) வடமொழி தாதுக்களோடு பிரத்தியங்களும் (விகுதிகளும்) (63) அவை சேரும்போது தாதுக்கள் அடையும் மாற்றங்களும் (64) விளக்குதல்.

3) வடமொழி இலக்கண அமைப்பை விளக்கியது.

i) பெயரில் திணை-பால் காட்டும் விகுதிகளை எழுவாய் வேற்றுமை உருபு (30) என்றது.

வடமொழியில் மூன்று எண்ணும் (ஒருமை, இருமை, பன்மை) ஏழு வேற்றுமையும் (கருத்தா - எழுவாய்; கருமம் - செயப்படு பொருள்; கரணம் - கருவி; சம்பிரதானம் - கொள்பவன் (கோளி); அவதி - நீக்கம்; சம்பந்தம் - உடைமை; அதிகரணம் - இடம்) உண்டு. ஒவ்வொரு வேற்றுமையும் ஒவ்வொரு எண்ணுக்கும் தனித்தனி உருபுகளைப் பெற்றிருக்கும். அதனால் வேற்றுமை உருபு இருபத்தொன்று என்று கருதப்படுகிறது (Wilson, 1847 : 28). உதாரணமாக

	ஒருமை	இருமை	பன்மை
கருத்தா	சு	ஔ	அஸ்
கருமம்	அம்	ஔ	அந்
கருணம்	ஆ	ப்யாம்	பிஸ்
		(bhya:m)	(bhis) முதலியன

எனவே புத்தமித்தரனார் இந்த வடமொழி மரபையொட்டி தமிழுக்கும் எழுவாய் வேற்றுமைக்குத் தனி உருபு உண்டு என்று கூற முற்பட்டுவிட்டார். மேலும்

(ii) வேற்றுமை உருபின் எண்ணிக்கையைக் கூறும்போது தமிழில் அவர் கருத்துப்படி எட்டுவகை பெயரும் (ஆண், ஆண் சிறப்பு, பெண், பெண் சிறப்பு, பலர், ஒன்று, ஒன்றன் சிறப்பு, பல) எட்டு வேற்றுமையும் இருப்பதால் அவற்றைப் பெருக்கி அறுபத்து நான்கு உருபுகள் (31) என்று கூறியுள்ளார். இதற்கு மேலே. காட்டியவடமொழி எண்ணிக்கை மரபே காரணம் என்பதைத் தெளிந்து கொள்ளவேண்டும்.

(iii) வடமொழி இலக்கணத்தில் நான்காம் வேற்றுமையைச் சம்பிரதானம் 'கொள்பவன்' என்று குறிப்பிட்டதால் தமிழிலும் நான்காம் வேற்றுமையைக் கோளி (கொள்பவன்) என்று மொழி பெயர்த்துக் கூறிவிட்டார் (34). அப்படியே ஐந்தாம் வேற்றுமையை அவதி என்று வடமொழியில் குறிப்பிட்டதால் அதன் பொருளான 'நீக்கம்' என்பதே தமிழுக்கும் உரியதாகக் கூறிவிட்டார் (35).

ஆனால் நான்காம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் வேறு சில பொருள்களையும் உடையன என்று முன்னரே குறிப்பிட்டோம். எனவே வடமொழியையொட்டித் தமிழ் வேற்றுமைக்குப் பெயர் தந்தது குன்றக் கூறலாய் அமைந்துவிட்டது.

(iv) வடமொழியில் செயவென் எச்சம் வினைப் பகுதியோடு – தும் (tum) விகுதி சேர்த்து உண்டாக்கப்படுவதால் அது தும் என்பதை இறுதியாக (அந்தமாக) உடையது என்ற பொருளில் துமந்தம் என்று குறிப்பிடப்படும் (Wilson, 1847: 286).

வினைவிகுதி	துமந்தம்
க்ரு (kr). செய்	கர்தும் kar–tum 'செய்ய'
ஜன் (jan) ஜனி	ஜனிதும் (janitum) ஜனிக்க முதலியன.

இதையொட்டி புத்தமித்தரனார் செயவென் எச்சப்பொருளில் விகுதிகளை யெல்லாம் (பொருட்டு, க, பான், தற்கு, வான், அ) துமந்தபிரத்தியம் (67) என்று பெயரிட்டுவிட்டார்.

(v) அதே முறையில் வடமொழியில் த்வா என்ற விகுதி சேர்த்தால் செய்து என்ற வினையெச்சப் பொருள் உண்டாகும். அதனால் அந்த விகுதி சேர்த்து உண்டாகும் சொற்களை க்த்வாந்தம் அதாவது த்வா என்ற விகுதியை இறுதியாக உடையது என்று குறிப்பிடுவார்கள் (க் என்பது இலக்கணத்தில் கற்பிதமாகச் சேர்த்துக் கூறப்படுவது). அதை யொட்டியே தமிழில் செய்து என்ற எச்சப்பொருளில் எல்லா விகுதிகளையும் (ஆ, இட்டு, து, உ, இ) துவாந்த பிரத்தியங்கள் (68) என்று வீரசோழியர் கூறியுள்ளார்.

(vi) வடமொழியில் எட்டுவித காலங்கள் உள்ளன. எனினும் அவற்றை நிகழ்காலம், முடிந்தகாலம் (Perfect tense), எதிர்காலம் (Future), காலப்பொது (Aorist) என்று நான்கு விதமாகவும் பிரிப்பார்கள். (Whitney, 1888 : 201, 202) இவை ஒவ்வொன்றுக்கும்

தனித்தனி விகுதி வடமொழி இலக்கணத்தில் கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக லட் என்பது நிகழ்கால விகுதி என்றும் சட் என்பது எதிர்கால விகுதி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் வினைமுற்று தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்துக்குரிய விகுதி ஒன்றையும் ஏற்றுவரும். அங்கும் பரஸ்மனே பதம் (செய்தான் போன்று வருவது) ஆத்மனே பதம் (செய்து கொண்டான் என்று கொள் என்ற துணைவினை ஏற்று வருதல், ஆகிய இரண்டிற்கும் தனித்தனி இடவிகுதி உண்டு. உதாரணமாக பரஸ்மனே பதத்துக்குரிய இட விகுதியாக வடமொழியில் கீழ்க் கண்டவை வழங்கும்,

	ஒருமை	இருமை	பன்மை
தன்மை	மி	வஸ்	மஸ்
முன்னிலை	சி	தஸ் (thas)	அத (tha)
படர்க்கை	தி	தஸ்	அந்தி (anti)/ அதி (ati)

ஆயினும் வடமொழி முன்னர் கூறியபடி உட்பிணைப்பு மொழி ஆனதால் இரண்டும் சேர்ந்து தனித்தனியாகப் பிரிக்க முடியாதபடி வரும். உதாரணமாக பூ (பிகா:) 'இரு' என்ற சொல்லின் நிகழ் கால வினைமுற்றுச் சொற்களையும் முடிந்தகால வினைமுற்றுச் சொற்களையும் பார்ப்போம்.

நிகழ்காலம்

	ஒருமை	இருமை	பன்மை
தன்மை	பவாமி	பவாவஹ்	பவாமஹ்
முன்னிலை	பவசி	பவதஹ்	பவத
படர்க்கை	பவதி	பவதஹ்	பவந்தி

முடிவுறாதகாலம் (I have done)

தன்மை	அபவம்	அபவாவ	அபவாம
முன்னிலை	அபவஹ்	அபவதம்	அபவத
படர்க்கை	அபவத்	அபவதாம்	அபவம்

போன்ற சொற்களை நோக்கினால் கால விகுதியும் இட விகுதியும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். ஆயினும் வடமொழி இலக்கண ஆசிரியர்கள் காலத்துக்கும் இடத்துக்கும்

தனித்தனி கூறியே சென்றிருக்கிறார்கள். இங்கு புத்தமித்தர னார் வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கருத்தைப் பின்பற்றாது மொழி அமைப்பைப் புறநிலையில் நோக்கி அந்த முறையில் தமிழில் காலவிகுதியும் திணை-பால் விகுதியும் சேர்த்துக் கூறியுள்ளார்.

இங்கு வடமொழி சொல் அமைப்பும் தமிழ் மொழி சொல் லமைப்பும் வேறுவேறு வகையைச் சார்ந்தவை என்பதைப் புத்தமித்தரனார் புரிந்துகொள்ளவில்லை. தமிழில் கால விகுதிக்கு ஏற்றவாறு திணை-பால் விகுதி மாறாததால் இரண்டுவித விகுதி களையும் தனித்தனியே சொல்லியிருக்க வேண்டும். அப்படி கூறாததால் குறைப்பகுப்பு (undersegmentation) என்ற குற்றம் ஏற்பட்டுவிட்டது.

(vii) புணர்ச்சியில் தமிழ் எழுத்துகளை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிப்பிடுவதும் வடமொழிச் செல்வாக்காகக் கருதப் படுகிறது. உதாரணமாக இகரத்தை நான்காம் உயிர் என்றும் (14) மகரமெய் பத்தாம் மெய் (19) என்றும் குறிப்பிடுகிறார்.

வடமொழியில் பழைய இலக்கண நூல்களில் இந்த முறை காணப்படவில்லை. ஆனால் பிற்கால நூல்களில் இந்த முறை பின்பற்றப்பட்டிருக்கலாமோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. வடமொழியில் எழுதப்பட்ட தெலுங்கு இலக்கண நூல்களில் இந்த முறை காணப்படுவதும், பிற்கால வடமொழி இலக்கண நூல்களில் இந்த முறை பின்பற்றியிருக்கலாம் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதை ஒட்டியே புத்தமித்தரனாரும் எழுத்து களை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

(viii) வீரசோழியர் சந்திராந்தம் என்ற ஒன்றைக் குறிப் பிடுகிறார் (66). அங்கு காலவிகுதிகளே விளக்கப்பட்டுள்ளன. உரையாசிரியர்

> 'தாதுக்களின் த, ன, ய என்று மூன்று பிரத்தியமும் இறந்த காலத்தைக் குறித்துவரும்........ இவை சந்திராந்தம் என்று பெயராம்; இவை பிழையாமல் முடிக்க.'

என்று உரை எழுதிவிட்டு

'சந்திராந்தம் வேறுசில பதங்களுக்கு உறுப்பாய் நிற்பதல்லது தனித்து வரப்பெறாது'

என்று விளக்கி

'பிறந்தபிள்ளை, கண்ட எருது, நின்ற பசு எனத் தகாரமும் ஊட்டின, தீட்டின, போன என னகாரமும்; சொல்லிய, ஆய என யகாரமும் இறந்தகாலத்திலும்......... வந்தன.'

என்று உதாரணமும் தந்துள்ளார். இதிலிருந்து சந்திராந்தம் என்பது பெயரெச்சத்தைக் குறிக்கிறதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் பதிப்பாசிரியர் 'காலங் காட்டும் பிரத்தியங்கள்' என்று சூத்திரத்துக்குத் தலைப்பு கொடுத்து

'சம், திரம் முதலிய அந்தப் பிரத்தியத் தொகுதியைச் சந்திராந்தம் என்றார். இப்பதம் வடமொழி வியாகரணங்களில் இலது. சங்கிராந்தம் சந்திராந்தம் என மரீஇயதென்பர். சங்கிராந்தப் பதத்தின் பொருளுக்கும் மரூஉ மொழி வழக்குக்கும் அது பொருந்தாது என்பது பழைய குறிப்பு.'

என்று அடிக்குறிப்பில் எழுதியுள்ளார். எனவே உரையாசிரியரும் பதிப்பாசிரியரும் இங்கு காலங்காட்டும் விகுதிகளை இந்தச் சூத்திரம் பேசுவதாகக் கருதுகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உரையாசிரியர் கொடுத்துள்ள உதாரணமும் சூத்திரங்களின் போக்கும் இந்த சூத்திரம் (66) பெயரெச்ச விகுதிகள் (அதாவது காலம்காட்டும் விகுதியும் பெயரெச்ச விகுதியும் சேர்ந்தது) பற்றி குறிப்பிடுகிறதா என்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. அடுத்து வடமொழியில் சந்திராந்தம் என்று எதைக் குறிக்கிறது என்றும் காண வேண்டும். புத்தமித்தரனாரே சந்திராந்தம் என்று குறிப் பிடுவதால் அது வடமொழியில் எதைக்குறிக்கிறது என்று முதலில் பார்த்துவிட்டு சூத்திரம் கால விகுதியைமட்டும் சுட்டுகிறதா? அல்லது பெயரெச்ச விகுதியைச் சுட்டுகிறதா என்ற பிரச்சனைக்கு விடை காண முயலுவோம். வடமொழியில் நிகழ்கால (present participle) எச்ச விகுதியாக Satr என்ற விகுதி சொல்லப்படுகிறது. அது மொழியது அத் (at) என்று பயன்படும் (Wilson, 1847 : 287). அந்த விகுதிக்கு அந்த்

(ant) என்ற மாற்று வடிவம் தன்மை ஒருமை, தன்மை இருமை தன்மை பன்மை, முன்னிலை ஒருமை, முன்னிலை இருமை ஆகியவற்றில் உடையது. எனவே அதை சந்திரந் (Santr) என்பதை அந்தமாக (இறுதியாக) உடையது என்ற பொருளில் Santrantam என்பார்கள்.

அடிச்சொல்	நிகழ்கால எச்சம்
ஜி 'வெல்'	ஜயத் – 'வெல்லும்'
கம் 'சமை'	கச்சத் – 'சமைக்கும்'

இந்த/அத்∞ அந்த/விகுதி எப்பொழுதும் சார்ந்து வரக்கூடியது. அதாவது எச்சம் ஏற்கும் பெயருக்கு ஏற்ற பால் விகுதியையும் ஏற்றேவரும்.

gacchantam pasya:mi
கச்சந்தம் பஸ்யாமி
'போகிறவனைப் பார்த்தேன்'

தமிழில் பெயரெச்சம் எல்லா திணை–பாலுக்கும் பொதுவாக வருவதால், 'பொதுவினை' என்று மற்ற தமிழ் இலக்கணங்கள் குறிப்பிடும் (உ. ம். தொல். 707 நன். 330). எனவே வட மொழியில் நிகழ் எச்சவிகுதியாக வருவதைத் தமிழ் பெயரெச்ச விகுதிக்கு ஒப்பானதாகக் கருதி பெயரெச்சத்தை 'சந்திராந்தம்' என்று வீரசோழியர் குறிப்பிட்டிருக்க வேண்டும். எனவே சந்திராந்தம் என்று கூறுவது பெயரெச்ச விகுதி (காலவிகுதியும் பெயரெச்ச விகுதியும் சேர்ந்தது) என்றே கொள்ள வேண்டும் என்று ஆகிறது.

மேலே குறிப்பிட்டபடி சூத்திரப்போக்கும் பெயரெச்ச விகுதி என்பதையே புலப்படுத்துகிறது. எப்படியென்றால் அடுத்த இரண்டு சூத்திரங்களும் வினையெச்ச விகுதிபற்றி விளக்குவதால் இந்த சூத்திரம் பெயரெச்சம் பற்றிப் பேசுகிறது என்பதும் ஓரளவு பொருத்தமாகும்.

மேலும் சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிற விகுதிகளும் பெய ரெச்ச விகுதிகள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் தமிழில் வினை முற்று, பெயரெச்சம் இரண்டிலும் கால விகுதிகள் வந்தாலும் இரண்டிற்கும் வரும் மாற்றுருபுகளில் வேறுபாடு இருக்கிறது. இறந்த காலத்தைப் பொறுத்தவரையில் /ய/ என்ற இறந்தகால உருபு பெயரெச்சத்தோடு மட்டும்தான் வரும். போய. வீரசோழியர் யகரத்தையும் இறந்தகால மாற்றுருபாகக் கூறியிருக்கிறார். எதிர்கால விகுதியில் வினைமுற்றில் வரும் வடிவத்துக்கும் பெயரெச்சத்தில் வரும் வடிவத்துக்கும் பெரிய வேறுபாடு உண்டு. வினைமுற்றில் ப்/வ்/உம் என்ற மூன்று மாற்றுருபு வரும். பெயரெச்சத்தில் உம் என்ற மாற்றுருபு மட்டுமே வரும். வீரசோழியத்தில் எதிர்கால விகுதியாக உம்/ம் என்ற இரண்டு வடிவங்களையே குறிப்பிட்டுள்ளார். ம் என்பது /உம்/ என்ற விகுதியின் திரிந்த வடிவமே. சாங்கிழவி என்று உரையாசிரியரும் உதாரணம் கொடுத்துள்ளார். இது சாவும் என்பதன் திரிந்த வடிவமே. எனவே இங்கு நிச்சயமாக பெய ரெச்ச விகுதிதான் கூறியிருக்கிறார் என்பது வெளிப்பட்டு விடுகிறது. ஆகவே இந்த சூத்திரத்துக்குரிய தலைப்பு 'பெயரெச்ச விகுதிகள்' என்பதே பொருத்தமாக இருக்கும்.

4. புத்தமித்தரனார் நிறைய வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். வேறுபாடு தெரிவதற்காகத் தொல்காப்பி யரும் பிறரும் பயன்படுத்திய கலைச்சொற்கள் முதல் வரிசை யிலும் வீரசோழியர் கையாண்ட வடமொழிக் கலைச் சொற்கள் அடுத்தவரிசையிலும் கொடுக்கப்பட்டுள்ளன. வீரசோழியர்தான் முதல் முதலில் வடமொழி கலைச் சொற்களை உபயோகப்படுத்தி யிருக்கிறார் என்று கூற முடியாது. தொல்காப்பியரே ஓரிரு வடமொழிச் சொற்களை (அந்தம்–487.4; கருவி–557.3) கையாண் டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (திண்ணப்பன் 1972 ; 366). மேலும் வீரசோழியம் கையாண்ட சொற்கள் முன்னரே தமிழ் இலக்கியத்தில் கையாளப்பட்டிருக்கின்றன என்பதும் சுட்டிக் காட்டத் தக்கதாகும்.

தொல்காப்பியம்	வீரசோழியம்	இலக்கியப் பயிற்சி
மிடறு	கண்டம் (6)	சிலம்பு. 7.32.7
நெஞ்சு	உரம் (6)	அப்பர்தே 20.2
தலை	சிரம் (6)	அப்பர்தே 162.3
வினைமுதல்	கருத்தா	இவை கலைச்சொற்கள் ஆனதால் இலக்கியப் பயிற்சி கிடைக்கவில்லை.
இனம் (நன்னூல்)	வர்க்கம் (12)	
புணர்ச்சி	சந்தி (18)	
ஈறுகள்	பிரத்தியம்	
வினை	கிரியாபதம்	
நீக்கம் (நன்னூல்)	அவதி	

புதிதாகப் பல கலைச்சொற்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

தாது (65)
காரிதம் (65)
வர்க்கம் (2)
காரகம் (31)
துவந்தம் (67) முதலியன.

சுப்பிரமணிய சாஸ்திரியார் வீரசோழியம் தொல்காப்பிய முறையிலிருந்து மாறுபட்ட கருத்து உடையது என்றும் பிரயோக விவேகமும் வீரசோழிய முறையைப் பின்பற்றுகிறது என்றும் ஓரிடத்தில் (1934:iii) குறிப்பிட்டு வேறொரு இடத்தில் (பக். 5) வீரசோழியமும் பிரயோக விவேகமும் பாணினியின் இலக்கணத்தை வேற்றுமை உருபு, கால விகுதி, சொல்லாக்கம் ஆகியவற்றில் தமிழ்மொழி அமைப்பு ஆராயும் முறையையும் மதிப்பிடும் முறையையும் திரிபு படுத்துகிற அளவுக்கு பின்பற்றியுள்ளன[5] என்று கூறுவது குறை கூறியுள்ளதாகவே கருதப்பட வேண்டும். ஆனால் மீனாட்சி சுந்தரனார் சிறிது அனுதாபத்துடன் வடமொழி முறையைப் பின்பற்றிய வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கண விளக்கம் ஆகிய மூன்றுமே வடமொழி இலக்கண முறையில் தமிழை ஆராயப்புகுந்தது பிற திராவிட மொழியினர் தமிழ் இலக்கணத்தைப் புரிந்து கொள்ளப் பயன்படும்[6] என்று பொதுவாகக் கூறிவிட்டு வீரசோழியம் பற்றி தனியே கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

“வீரசோழியம் முதன் முறையாக தமிழை வடமொழி இலக்கணக் கோட்பாட்டு அடிப்படையில் விளக்க முயன்றுள்ளது.

அது வடமொழி இலக்கணக் கலைச் சொற்களையும் பயன்படுத்தி யுள்ளது............வடமொழிக் கலைச் சொற்களுக்குச் சான்றுகள் தரும்போது வடமொழி உதாரணங்களையே தருவது தமிழில் உதாரணம் கிடைப்பது கடினம் என்பதை உணர்த்துகிறது. இந்த முயற்சி பேச்சு மொழியில் கூட நிறைய வடமொழிச் சொற்கள் கடனாளப்பட்ட காரணத்தினால் இருக்கலாம்" என்று கூறி யுள்ளார் மீனாட்சிசுந்தரனார் (1974 : 34).

வடமொழி இலக்கண நோக்கில் தமிழை விளக்கியது என்பது வீரசோழியத்தைப் பொறுத்த வரையில் நாம் மேலே குறிப்பிட்ட மூன்றாவது வகையை அதாவது வடமொழி அமைப்பை ஒட்டித் தமிழ்ச் சொற்களின் அமைப்பை விளக்குவது என்பதைக் குறிப்ப தாகக் கொள்ளலாம். அப்படியானால் முன்னர் விளக்கியபடி அவை சரியாகத் தமிழ் மொழி அமைப்பை விவரிக்கவில்லை. அவற்றைப் படித்தால் ஒருவர் தமிழ் மொழி அமைப்பைத் தவறாக அல்லவா புரிந்து கொண்டு விடுவார். இதைப் பொறுத்த மட்டில் சுப்பிரமணிய சாஸ்திரியாரின் மேலே குறிப்பிட்ட கருத்தே சரியானது.

வடமொழிக் கலைச் சொற்களைப் பயன்படுத்தியிருப்பது என்பது நாம் மேலே குறிப்பிட்ட முதல் வகையைக் குறிக்கும். ஆனால் அவை இலக்கணத்தில் தொடர்பு அற்றுத் தனியே அமைந்துள்ளதே தவிர அந்தக் கலைச்சொற்கள் தமிழ் மொழி அமைப்பை விளக்கப் பயன்படுத்த வில்லை. இவையல்லாமல் நூல் முழுமையும் நோக்கினால் நமக்கு கிடைக்கிற பார்வையே வேறாக இருக்கிறது.

(i) நூலுள் தமிழ்க் கலைச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் தனித்தனியாகப் பயன்படுத்தியிருப்பது (புணர்ச்சி பற்றியும் தொகை பற்றியும் உள்ள சூத்திரங்கள்) ஒற்றுமை வேற்றுமை ஆராய்ச்சி (contrastive study) போல அமைந் திருக்கிறது.

(ii) சில வடமொழிப் பதங்களைப் பயன்படுத்தினாலும் அவை தமிழ்க் கலைச் சொல்லுக்கு இணையானதாக அமைக்காமல்

துணையானதாக அதாவது வேறுவேறு பொருளில் அமைத்திருப்பது உதாரணம்: வேற்றுமை – காரகம்.

(iii) தமிழில் வழங்கும் பழைய சொற்களையும் கையாண்டிருப்பது.

அளபெடை – அளவு (5) –
தடைபொருள் (70)
தன்மை (72)
முன்னிலை (11)
படர்க்கை (71)
ஒருமை (72)
பன்மை (72)

(iv) வடமொழி சொல்லின் இலக்கணம் கூறும்போதும் வடமொழிக் கலைச் சொல்லால் வருணிக்காது தமிழ்க் கலைச் சொற்களையே வழங்குவது. வடமொழியில் காரணப் பதங்கள் எத்தனை என்று விளக்கும் சூத்திரத்தில் (32) ஆண், பெண், அலி என்று பால் வேறுபாட்டிற்கும் ஒன்று இரண்டு பல என்று எண் வேறுபாட்டிற்கும் தமிழ் கலைச் சொற்களையே கையாளுதல்.

(v) வடமொழிக் கருத்தை ஒட்டி தமிழ் இலக்கண அமைப்பை விளக்கும் போதும் வடமொழிச் சொற்களைக் கையாளாது அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து கலைச் சொற்களைக் கையாண்டிருப்பதும். உதாரணம்

தான் தெரி கருத்தா
தான் தெரியா கருத்தா
இருபுறக் கருமம்
புறக் கரணம்
அகக் கரணம்
ஆர்வக் கோளி
கிடப்புக் கோளி
இரப்புக் கோளி முதலியன (சூத். 40, 41)

எனவே சில வடமொழிக் கலைச் சொற்களைப் பயன்படுத்தி யுள்ளார் என்பதற்காகப் பிற மொழியினர் தமிழ் இலக்கணம் கற்றுக் கொள்ள வசதி கருதியது என்பது பொருத்தமாகப்பட வில்லை. ஏனெனில் மேலே குறிப்பிட்ட ஐந்து செய்திகளும் அந்தக் கருத்துக்கு எதிராக அமைந்திருக்கின்றன.

இந்த நிலையில் சுப்பிரமணியம் (1974 : 7) குறிப்பிடும் கருத்து கொஞ்சமும் பொருந்தாது என்பது தெளிவு.

"வடமொழி இலக்கணம் தமிழுக்குத் தேவையா?" என்பது வினாவாக அமைகிறது. தாது, தத்திதம் போன்ற கலைச் சொற்களும் தமிழ்வாணர் அடிப்படை அறிவின்றிப் புரிந்து கொள்ளும் பான்மைய அல்லன. எனவே இவை அமைக்கப்பட்ட தற்கு ஏதேனும் காரணம் இருத்தல் வேண்டும். தமிழருக்குத் தமிழ் மொழி இலக்கணம் உணர்த்தும் நோக்கம் இன்றி வட மொழி வல்லாரின் பிறமொழி விருப்பத்தைத் தமிழ் மொழி அறிவு பெறும் விருப்பை நிறைவு செய்யும் பொருட்டு புத்தமித்திரானார் இதனை நோக்க நிறைவேற்றமாகப் படைத்துத் தந்தாரோ என எண்ண வேண்டியுள்ளது. உடம்படு மெய் தோற்றத்தை ஆகமம் எனும் கலைச்சொல்லால் சுட்டலும் தமிழ் எழுத்துப் புணர்ச்சி பேசும் பல இடங்களில் நேரடியாக எழுத்தைக் கூறாது எண்ணிக்கையால் கூறலும் கருத்திற்கு அரண் செய்யும்".

என்ற அவர் கருத்தின் சுருக்கம் வடமொழியாருக்குத் தமிழ் கற்பிப்பதற்காக வீரசோழியம் இயற்றப்பட்டது என்பதுதான். இதற்கு மறுப்பாக பல காரணங்களைக் கூறலாம். (1) வட மொழியாளருக்கு தமிழ் கற்பிப்பதுதான் நோக்கமென்றால் அந்த இலக்கணத்தில் வடமொழி அமைப்பையும் (காரகப்பத எண்ணிக்கை, வடமொழித்தொகை) வடமொழிக் கலைச் சொற் களையும் தனியே கூறும் சூத்திரங்களை அமைத்திருக்க வேண்டாம், (2) பாயிரத்தில் வடநூல் மரபு கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளாரே தவிர வடமொழிவாணர்க்காக இலக்கணம் இயற்றியதாகக் குறிப்பிடவில்லை. (3) அலங்காரப்படலம் என்று அமைத்து

'.........அலங்காரங்கள் தண்டி சொன்ன
கரைமலி நூலின் படியே உரைப்பன்' (141)

என்று கூறுவதால் வடமொழியாளர் வடமொழியிலுள்ள காவிய தரிசனத்தை தமிழ்மொழி மூலம் படிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது புத்தரமித்திரனாரை நாம் தவறாக எடை போடும்படி செய்துவிடும். (4) மேலும் வடமொழியாளர் தமிழ் படிக்க இலக்கணம் எழுதுவதனால் வடமொழியில் தமிழ் இலக்க ணத்தை எழுதியிருக்க வேண்டும். ஐரோப்பியர்கள் தங்கள் நாட்டாருக்கு இலக்கணம் எழுதியபோது அந்தக் காலப்பொது மொழியான லத்தீனிலும் அவரவர் தாய்மொழியான போர்ச்சுக்கீஸ், ஜெர்மன், பிரெஞ்சு, முதலிய மொழிகளிலும்தான் எழுதினார்கள். வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் தமிழில் எழுதினார் என்றால் அவர் தங்கள் நாட்டவர்க்கு முதலில் லத்தீன் மொழியில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற இலக்கணம் எழுதிய பிறகு நல்ல தமிழ்ப் புலமை ஏற்பட்டபிறகு தொன்னூல் விளக்கம் எழுதினார். அதிலும் தமிழில் உள்ள பிற இலக்கண கருத்துகளையும் சூத்திரங்களையும் பயன்படுத்திக்கொண்டார். எனவே வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தை உதாரண மாகக் கொள்ள முடியாது. (5) வீரசோழியத்தின் மொழிநடை எளிமையானதாக இல்லை. தமிழைத் தாய்மொழியாக உடையவர் களே இலக்கண இலக்கிய கல்வி பெற்றிருந்தும் உரை உதவியால் தான் படித்துப் புரிந்து கொள்ள முடியும். எனவே புத்தமித்திரனார் வடமொழியாளர் தமிழ் படிக்க வீரசோழி யத்தை இயற்றினார் என்பது பொருத்தமாக இல்லை. மேலும் சுப்பிரமணியமே சில இடங்களில் (பக். 19, 39) புத்தமித்திரனாரின் தமிழ்ப் பற்றை அதாவது 'தமிழ்மொழியின் தூய்மை கெடாது எழுத்து மாறி ஒலிக்காது அமைதல் வேண்டும் என்ற நல்லெண் ணத்தை புத்தமித்திரனார் தருகின்றார்' (பக். 19). என்றும் 'வடமொழி சார்போடு பேசுகின்ற வீரசோழியம் இத்துணை அளவேனும் பொருள் இலக்கணம் கூறுவது தமிழ் மரபைப் பாதுகாத்தல் வேண்டும் என்ற உணர்வோடு போலும்' (பக். 39) என்றும் கூறுவது முதற் கருத்துக்கு முரணாகவே அமைந் துள்ளது.

மீனாட்சிசுந்தரனார் கூறிய இரண்டாவது கருத்தான பேச்சு மொழியிலும் கூட வடமொழிச் சொற்கள் கடனாளப்பட்ட காரணத்தினால்தான் புத்தமித்திரனார் வடமொழிச் சொல்லுக் குரிய இலக்கணத்தைக் கூறியுள்ளார் என்ற கருத்து நாம் மேலே குறிப்பிட்ட இரண்டாம் வகையான வடமொழிச் சொற்களுக் குரிய இலக்கணத்தைக் கூறுதல் என்பதைக் குறிக்கும். ஆனால் அங்கு குறிப்பிட்ட வடமொழிச் சொற்களின் காரகப்பத எண் ணிக்கையும் தாதுக்கள் அமையும் முறையும் தமிழில் கடனாண்டு இருக்க முடியாது. பொதுவாகவே இலக்கணக் கூறுகளைக் கடனாளுவது மிகக் குறைவாகவே உலக மொழிகளில் காணப் படுகிறது. மேலும் வடமொழி வேற்றுமை விகுதி அறுபத்து மூன்றும் தமிழில் கையாளப்படவில்லை. வடமொழி ஆக்க விகுதிகள் சில தமிழில் பயன்படுத்தப் பட்டிருக்கலாமே தவிர அம்மொழியின் உட்பிணைப்பு விகுதிகளைக் கடனாண்டிருக்க முடியாது. எனவே வடமொழிச் சொற்களின் இலக்கணத்தைக் கூறும் எல்லாச் சூத்திரங்களும் தமிழில் வடமொழிச் சொற் களைக் கடனாளப்பட்டதால் வீரசோழியத்தில் கூறப்பட்டிருப்பது என்பது பொருந்தாது. வடமொழிச் சொல்லின் எதிர்மறை விகுதிகளும் வடமொழிச் சொற்களின் புணர்ச்சி மாற்றங்களும் தமிழில் வடமொழிச் சொற்கள் நிறைய வழங்கி வருவதால் வடமொழி இலக்கண விதிகள் பொருந்துவனபோலத் தோன்று கின்றன. இதன் முழுஉண்மையும் உணர இடைக்காலத் தமிழில் வந்த எல்லா வடமொழிச் சொற்களையும் தொகுத்து வீரசோழியத்தில் கூறப்பட்ட விதிகளுக்கேற்ப வடமொழிச் சொற்கள் வந்துள்ளனவா என்று ஆராய வேண்டும். அப்படிப் பட்ட சொற்களஞ்சியம் இன்று தமிழில் இல்லாததால் மாதிரிக் காக ஒன்றிரண்டு உதாரணங்களே காட்டப்படுகின்றன.

புத்தமித்திரனார் கூறிய வடமொழி விகுதிகளை உடைய சொற்கள் மணிமேகலையிலும் இடைக்கால இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கீழ்காணும் சொற்கள் தமிழ் இலக்கியத்தில் வழங்கியுள்ளன.

உடன்பாடு		எதிர்மறை	
நித்தம் – பரிபாடல்	12.43	அநித்தம் – மேகலை	29.220
ஆன்மா – மேகலை	27.239	அநான்மா – மேகலை	27.179
ஏகம் – அப்பர்	136.1	அநேகம் – அப்பர்	710.1

இங்கு மெய் முதல் சொற்களுக்கு /அ/ விகுதியும் உயிர் முதல் சொற்களுக்கு /அந்/ என்ற விகுதியும் உள்ளன. புத்தமித்திரனார் வடமொழி மரபை ஒட்டி விளக்கியுள்ளதற்கேற்பவே எதிர்மறை விகுதிகள் அமைந்துள்ளன. ஆனால் /ந/ என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு எதிர்மறையை விளக்கியுள்ளார். ஏனெனில் வடமொழியில் நகரம் மட்டுமே எதிர்மறையாக வரும் சொற்களும் உண்டு. (மும்சம் : நமும்சம்) இப்படி தத்தித விகுதி களாக வருவனவற்றிற்கும் தமிழ் உதாரணங்கள் இலக்கிய வழக்கிலோ அல்லது கல்வெட்டு வழக்கிலோ காணப்படுகின்றனவா என்று பார்க்கவேண்டும்.

புத்தன் (மேகலை 21 : 167); பௌத்தன் (மேகலை 29 : 169) ஆகிய இரண்டும் மணிமேகலையிலும்

பசுபதி	:	பாசுபதன்	(பசுபதியைத் தொழுபவன்)
சிவன்	:	சைவன்	(சிவனை வணங்குபவன்)

முதலியன இடைக்காலத் தமிழிலும் (Anantakrishna Pillai 1969 வருவதால் தத்தித படலத்தில் கூறிய மாற்றங்கள் தமிழிலும் அமைவதுபோல ஆகிறது. ஆகவே புத்திரமித்திரனார் கூறிய வடமொழிச் சொற்களின் இலக்கணங்கள் சிலவே கடனாண்டதால் தமிழுக்கும் பொருந்தும் என்று ஆகிறது.

பேச்சு மொழியில் வடமொழி புகுந்ததற்குக் காரணம் நாட்டின் அரசியல் சமூகச் சூழ்நிலைதான். இடைக்காலத்தில் பல்லவர்கள் முதலில் வடமொழியையே ஆதரித்தனர்; பின்னரே தமிழுக்கும் ஆதரவு தந்தார்கள். மேலும் மக்களிடையே சமய நம்பிக்கை பெருகியது. எனவேதான் பேச்சு மொழியில் வடமொழிச் சொற்கள் நிறையப் புகுந்தன. மொழியில் மாற்றம் ஏற்பட்டதற்கேற்ப இலக்கணத்திலும் மாற்றம் ஏற் படுவது தடுக்க முடியாதது. எனவேதான் அக்கால சூழலை

யொட்டி வடமொழி மரபைத் தமிழில் புகுத்தினார் (இளவரசு, 1963:103).[8] இதற்கு ஆதாரமாக இலக்கிய ஆசிரியர்களும் தமிழை யும் வடமொழியையும் சமமாகக் கருத ஆரம்பித்த மனநிலையும் குறிப்பிட வேண்டும். இப்படிப்பட்ட நிலை சங்ககாலத்தில் இல்லை. எனவே இடைக்காலத்தில் இருந்த மொழி பற்றிய உணர்வும் வீரசோழியர்க்கு உறுதுணையாக இருந்திருக்க வேண்டும். உதாரணமாக.

ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்
சம்பந்தர். 3214.

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அப்பர். 6479

வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் அப்பர். 71

மேலும் 'பக்திப்பாடல்களில் வடமொழியும் தமிழும் ஈச உவக்கும் இருமொழிகளாகக் கூறப்படுவதைக்காணலா என்று கைலாசபதியும் (1970 : 104) பல மேற்கோள்க காட்டியுள்ளார். எனவே வடமொழி மரபைச் சேர்த்துக் கூற தற்கு முழுப் பொறுப்பையும் புத்தமித்திரனார் மேல் ஏற்ற கூறுவது வரலாற்றுக்கும் உண்மைக்கும் அக்கால மொழி உண வுக்கும் மாறுபட்டது. எனவே வடமொழி மரபு புகுவதற் யார் காரணமாய் இருந்தாலும் அந்தப்பிரச்சனையை விடுத் வடமொழி அறிவால் தமிழ் இலக்கணம் ஏதாவது நன்மையுற்ற என்ற இறுதி கேள்விக்கு விடைகாண முயலுவோம்.

மீனாட்சிசுந்தரனார் பொதுநிலையில் நன்மை ஏற்பட என்று கூறியுள்ளார் (1974:13)

'சிறந்த முறையில் அமைக்கப்பட்ட இலக்கண நூ உடைய சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் அறிவால் ஒரு மொழிப் பொதுமையை உணர்ந்துகொள்ள உதவியாக இருக்கு மேலும் தன்னுடைய மொழியின் இலக்கண அமைப் அறிந்து கொள்ளவும், விளக்கவும் அந்த அறிவு பயன்படு

அப்படியானால் வீரசோழியர் வடமொழியை அறிந்ததால் தமிழ் இலக்கணத்தில் ஏதாவது திருத்தத்தையும், செம்மையையும் ஏற்படுத்தினாரா என்று ஆராய்வோம்.

பிறப்பியலில் தொல்காப்பியர் தலை, மிடறு, நெஞ்சு ஆகிய மூன்றையும் ஒரு பிரிவாகவும், பல், இதழ், நா, மூக்கு, அண்ணம், ஆகிய ஐந்தையும் மற்றொரு பிரிவாகவும் குறிப்பிடுவார் (தொல். 83). மூக்கறை ஒலியூக்கியாகவும் (Resonator) அதாவது முன்பே ஓரிடத்தில் உண்டான ஒலியை மாற்றியமைக்கும் காற்றறையாகவும் அதே சமயத்தில் ஒலியெழுப்பியாகவும் அதாவது காற்றறையின் வழியே செல்லும் காற்றில் மாற்றங் களை உண்டாக்குவதாகவும் அமையும். தொல்காப்பியர் ஒலி யெழுப்பி என்பதற்கு முக்கியம் கொடுத்து இதழ், நாக்கு, ஆகியவற்றோடு சேர்த்துக் கூறிவிட்டார். புத்தரமித்திரனார் ஒலியூக்கி – காற்றறை என்ற முறையில் மூக்கை உரம் (நெஞ்சு) சிரம் (தலை), கண்டம் (மிடறு) ஆகிய வற்றோடு சேர்த்துக் கூறியுள்ளார்.

> உந்தி முதல் எழும் காற்று பிறந்து உரமும் சிரமும்
> பந்தமலி கண்டமும் மூக்கும் உற்று……… (6.1, 2)

என்று விளக்கியுள்ளார். இதற்கு ஆதாரமாக தைத்தேரிய பிராதிசாக்கியத்தில் உரம், கண்டம், சிரம், முகம் (வாய்), நாசிகா (மூக்கு) என்று ஐந்தையும் பிராதி சுருக்தா (ஒலியூக்கி) என்று கூறியுள்ளதைச் சொல்லலாம் (Allen, 1953:23). வீரசோழியர் வாயை நீக்கிவிட்டு நாசிகா என்பதை மூக்கு என மாற்றிக் கொண்டுள்ளார். எனவே வடமொழி செல்வாக்கே இந்த மாற்றத்திற்கு காரணம் என்று தெரிகிறது. மேலும் பின்னைய நான்கு உறுப்புக்களில் தமிழ் இலக்கணங்கள் வேறுபாடு செய்வதில்லை.

> எழுமணுத்திரள் உரம், கண்டம், உச்சி
> மூக்கு உற்று இதழ், நாப் பல், அனத்தொழிலின்
> வெவ்வேறு எழுத்தொலியாய் வரவே பிறப்பே (74.2–3)

என்றுதான் நன்னூலார் பொதுவாகக் கூறியுள்ளார். வீரசோழியம் மட்டும்

………அண்ணம் பல்லுடனே
முந்தும் இதழ் நா மொழியுறுப்பாகும் (6.2,3)

என்று அண்ணம், பல் என்ற இரண்டை ஒரு பிரிவாகவும், இதழ், நாக்கு ஆகிய இரண்டையும் மற்றொரு பிரிவாகவும் கருதுவதற்கு 'உடனே' என்ற இடைச்சொல்லை நடுவில் பயன் படுத்தியுள்ளார். இதற்கும் காரணம் வடமொழி அறிவாக இருக்கலாமோ என்று ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில் வட மொழி இலக்கணங்களில் இயங்கா உறுப்பாகிய அண்ணம், பல் இரண்டையும் ஸ்தானம் என்றும் இயங்கும் உறுப்பாகிய நாக்கு, இதழ் என்ற இரண்டையும் கரணம் என்றும் பிரித்துப் பேசுவார் கள். இந்த வேறுபாடு இன்றைய ஒலியியல் அறிஞர்கள் மேற்கொள்கிற வேறுபாடுதான். பைக் என்ற ஒலியியல் அறிஞர் (1943 : 120–122) பல், அண்ணம் இரண்டையும் ஒலி எழுப்பும் இடம் (Point of articulation) என்றும் இதழ், நாக்கு இரண்டை யும் இயங்கு உறுப்புகள் (Active articulators) என்றும் குறிப்பிடு கிறார்கள் (Allen, 1953 : 17) எனவே இந்த பயனுள்ள வேறு பாட்டைப் புத்தமித்திரனார் வடமொழி அறிவால் தான் செய்திருக்க முடியும் என்று எண்ணலாம்.

புறநிலையில் வருவன வேற்றுமை என்றும் அகநிலையில் பொருளோடு தொடர்பு உடையன காரகம் என்றும் கூறுவதும் நிச்சயமாக வடமொழிச் செல்வாக்கினால் தான். ஆனால் அந்த வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொண்டு தமிழ் அமைப்புக்கு ஏற்பத் தொடரியல் ஆய்வை மேற்கொள்ளாதது ஒரு குறையே, ஆயினும் அந்த வேறுபாட்டைக் காட்டி ஒரே காரகத்துள்ளும் பலவகையான வித்தியாசம் இருக்கிறது என்பதை வீரசோழியர் வகுத்துக் காட்டியது வடமொழி அறிவுத் துணை கொண்டுதான் என்பது மறுக்க முடியாது.

அடிச் சொற்கள் அல்லது வினைப் பகுதிகள் ஏவலாக வரும் வடிவத்தோடு ஒத்தது என்பது வடமொழி தாக்கம் என்பதை அவரே கூறிவிட்டார்.

மன்னிய சீர் வடநூலிற் சரபசவென்றுவந்து
துன்னிய தாதுக்களின் போலிபோலத் தொகுதமிழ்க்கும்
பன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க : முன்னிலையின்
உன்னிய ஏவல் ஒருமைச் சொற்போன்று உலகிற்கு ஒக்கவே
(60)

இதனால் இலக்கணத்தில் இன்னொரு நன்மையும் விளைந்துள்ளது. தொல்காப்பியர் ஏவல் பற்றிய எழுத்ததிகாரத்தில் இரண்டு இடத்தில் (ஏவல் குறித்த உரை மியா 224. 3; ஏவல் கண்ணிய வியங்கோள் 210.4) பேசினாலும் வினையியலில் முன்னிலை வினை விகுதியையும் ஏவல் விகுதியையும் சேர்த்தே பேசியுள்ளார்.

இர் ஈர் மின் என வருஉம் மூன்று (709)

என்று குறிப்பிடுகிறார். இவற்றுள் இர், ஈர் என்ற இரண்டுமே முன்னிலைக்கு உரியது. மின் என்பது ஏவலுக்கு உரியது.

ஏவல், முன்னிலை, வியங்கோள் ஆகிய மூன்றும் வடிவத்தாலும் (form) பயனிலையாலும் (function) வேறுபாடு உடையவை. ஏவல் (imperative) முன்னிலைக்கு மட்டுமே உரியதாய் கால விகுதி ஏற்காமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு மட்டும் உடையது. முன்னிலை (second person indicative) என்பது கால விகுதி ஏற்று ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு உடையது. வியங்கோள் என்பது காலவிகுதி ஏற்காது; எண் வேறுபாடும் காட்டாது.

ஏவல்: வினைப்பகுதி + { ஒருமை / பன்மை }

முன்னிலை: வினைப்பகுதி + { கால விகுதி } + { எண் விகுதி }

வியங்கோள்: வினைப்பகுதி + வியங்கோள் விகுதி

எனவே முன்னிலையையும் ஏவலையும் இலக்கண அளவில் வேறுபாடு செய்வது அவசியமானதாகும். அதனால் வீரசோழியர் கிரியாபதப்படலத்தில் முன்னிலை விகுதிகளைத் தனியாகவும்

(76, 77, 78) ஏவல் விகுதிகளைத் தனியாகவும் (79) விவரிக்கிறார். இதுவும் வடமொழிச் செல்வாக்கால் ஏற்பட்டிருக்கலாம். வடமொழியிலும் முன்னிலையையும் ஏவலையும் தனித்தனி விகுதியால் புலப்படுத்துவார்கள். மேலே முன்னிலைக்குரிய விகுதி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஷி, தஸ் (thas), த (tha) போன்றவை) ஏவல் வினைக்கு வடமொழியில் தி (dhi) / ஹி (hi) என்ற விகுதிகள் சேர்க்கப்படும்.

யுஜ் (yuj) என்ற வினைச் சொல்லின் முன்னிலை வடிவங்களையும் ஏவல் வடிவங்களையும் பார்ப்போம்

பரஸ்மனேபதம்

	ஒருமை	இருமை	பன்மை
முன்னிலை :	யுநக்ஷி	யுங்க்தஸ்	யுங்க்தா
ஏவல் :	யுங்க்தி	யுங்க்தம்	யுங்க்தா

(Whitney, 1888 : 251, 252)

எனவேதான் புத்தமித்திரனார் முன்னிலையையும் ஏவலையும் வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

புத்தமித்திரனார் விகுதி இல்லாத போது /சு/ என்ற விகுதியைப் படைத்துப் பின்னர் அது கெட்டது என்று கூறுவது வடமொழி செல்வாக்கினால்தான் என்று பார்த்தோம். இது கோட்பாட்டு முறையில் ஒரு புதிய கருத்தைப் புலப்படுத்துகிறது. பொதுமையை உண்டாக்குவதற்குச் சூனிய விகுதி படைப்பது போல் அந்தக் காலத்தில் /சு/ விகுதியைப் படைத்திருக்கிறார்கள். /சு/ விகுதி உருபனாகவும் மாற்றுருபாகவும் கொண்ட இலக்கண ஆராய்ச்சி பரு நிலையிலிருந்து (concrete) நுண் நிலைக்குச் (abstract) செல்வதையே சுட்டுகிறது. எனவே வடமொழிச் செல்வாக்கால் சொல்லியல் ஆராய்ச்சியில் புதுமுறை ஒன்றை வீரசோழியர் சுட்டிச் சென்றதாகக் கொள்ளலாம்.

வடமொழி அறிவால் ஏற்பட்ட நன்மை குறைவாகவே உள்ளது. தீமை கொஞ்சம் அதிகம் (குறைப் பகுப்பு, உருபன் எண்ணிக்கை தவறு, உருபனின் பொருளைச் சரியாக நிர்ணயிக்

காமை போன்றவை) என்றே கருத வேண்டியிருக்கிறது. இரு மொழி அறிவு இருப்பதால் நன்மை மட்டும் விளையாது; அந்த அறிவைச் சரியான முறையில் உணர்ந்து தன் மொழிக்குப் பொருத்திப் பார்ப்பதற்கும் தனி அறிவும் சில அணுகல் முறைகளும் வேண்டும்.

2.2. உள்நோக்கம்

வீரசோழியத்தை நன்கு ஆராய்ந்தால் சுருக்கிச் சொல்லவும் வடநூல் மரபைப் புகுத்தவும் மட்டுமின்றி வேறு சில நோக்கம் இருப்பதும் புலப்படும். அவையே முன்னர் உள் நோக்கம் என்று குறிப்பிடப்பட்டது. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1934:2) வீரசோழியத்தில் இரண்டு பண்புகள் உள்ளதாக குறிப்பிடுகிறார் ஒன்று: தொல்காப்பியர் கூறிய இலக்கண முறையை மேலும் செம்மை செய்திருக்கிறார். இரண்டு: தொல்காப்பியத்தில் இல்லாமல் தன்கால இலக்கியத்தில் வழங்கிய சில உண்மைகளை குறிப்பிட்டிருக்கிறார். முன்னதை வீரசோழியம் கூறும் திருத்தம் என்றும் பின்னதை வரலாற்று மாற்றத்தால் ஏற்பட்ட உண்மைகள் அல்லது மொழி மாற்றங்கள் என்றும் அழைக்கலாம்.

2.2.1. வீரசோழியத்திருத்தம்

தொல்காப்பியம் தன்மைப் பெயர்களையும் தன்மை வினைமுற்று விகுதிகளையும் உயர்திணையைச் சேர்ந்ததாகக் கருதுகிறது.

> ... ...
> யான், யாம், நாம் என வரூஉம் பெயரும்
> ... ...
> பால் அறிவந்த உயர்திணைப் பெயரே (647.5,8)

அப்படியே தன்மை வினைமுற்று விகுதிகளை (687,688) சேர்த்து 'முன்னுறக் கிளந்த உயர்திணையவ்வே' (693.3) என்று கூறியுள்ளார். உயர்திணை என்பது ஆண்பால், பெண் பால், பலர்பால் என்ற மூன்று பால் – எண் வேறுபாடுகளை உடையது. ஆனால் தன்மையோ ஒன்று, பல என்ற இரண்டு எண் வேறுபாடு

மட்டுமே உடையது. எனவே தொல்காப்பியர் படர்க்கையோடு தன்மையைச் சேர்த்தது மொழி அமைப்பு நிலையில் பொருத்த மாக அமையவில்லை. எனவே இரண்டு வகை எண் வேறுபாடு உடைய முன்னிலையோடு தன்மையைப் புத்தமித்திரனார் சேர்த்துக் கூறிவிட்டார்.

முன்னிலைத் தன்மையிடத்தினிற் காலங்கள்
மூன்றையும் வைத்
துன்னும் ஒருமை சிறப்பொடு பன்மையும்
உய்த்து உறழ்ந்தால்......(2.1.2)

என்று கூறுவதன் மூலம் தன்மையைப் படர்க்கையோடு சேர்த்து எண்ண முடியாது என்று காட்டிவிட்டார். இந்தத் திருத்தம் சரியாகப்பட்டதால்தான் நன்னூலாரும் ஏற்றுக் கொண்டுள்ளார்

தன்மை நான்கு முன்னிலை ஐந்தும்
.........பொதுப்பெயர் (282.3.4)
தன்மை முன்னிலை வியங்கோள் வேறு இடை
உண்டு ஈரெச்சம் இறுதிணைப் பொதுவினை (330)

இங்கு வீரசோழியம் குறிப்பிடாத விரவுத்திணை என்பது தான் புதிதே தவிர தன்மை, முன்னிலையோடு சேர்க்கத் தகுந்தது என்பது வீரசோழியத்திலிருந்து பெற்றதுதான்.

உடம்படுமெய் வருவது கட்டாயமில்லை (தொல்-140) என்று தொல்காப்பியர் கூறினாலும் வரும்போது எந்தெந்த உயிர்க்கு எதுஎது உடம்படுமெய்யாக வரும் என்பது குறிப்பிடுவது அவசியம். ஆயினும் அதுபற்றித் தொல்காப்பியர் பேசாமல் போய்விட்டார். ஆனால் தமிழ்மொழி அமைப்பை நன்கு கவனித்து இ, ஈ, ஐ ஆகிய உயிருக்குப் பின்னால் உயிர் முதன் மொழி வரும்போது யகரமெய்யும் ஏனைய உயிருக்கு வகர மெய்யும் ஏகார மெய்க்கு யகரமும் வகரமும் வரும் என்று வரை யறுத்துக் கூறிவிட்டார் புத்தமித்திரனார் (13). நன்னூலார் இதை அப்படியே பின்பற்றி,

இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும் (122)

என்று அழகான சூத்திரமாகச் செய்துவிட்டார்.

தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமை உருபாக வயின் என்பதைப் பயன்படுத்தியுள்ளார்.

தொன்னெறிமொழி வயின் ஆஅ குநவும் தொல். 932.3

எருத்து வயின் திரியும் தொல் 891. 2

அம்மின் மகரம் செறுவயின் கெடுமே தொல். 260.3

என்று பல இடங்களில் தாமே கையாண்டிருந்தும் ஏழாம் வேற்றுமை உருபை விளக்கும் 566 ஆம் சூத்திரத்தில் வயின் என்பதைச் சொல்லாமல் போய்விட்டார். ஆனால் வீரசோழியர்

... ... ஏழினிற்கே
தானாம் உழை, வயின், பக்கல், ஊழி, இல்
சார் பிறவும்.........(35.2, 3)

என்று குறிப்பிட்டுள்ளார்.

நன்னூலும் கண், கால், இடை, தலை, வாய், திசைவயின் ....இடப்பொருள் உருபே (302) என்று வீரசோழியம் கூறிய உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளது.

தொல்காப்பியர் சிறப்புப் பெயரை (Honorific singular) 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி' என்றும் 'ஒன்றினைக் கூறும் பன்மைக் கிளவி' என்றும் குறிப்பிட்டு

வழக்கினாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லாறல்ல (510)

என்று கூறுவார். ஆயினும்,

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே (755)

என்று இடையியலில் சிறப்பு ஒருமை வினைமுற்றைப் பேசுகிறார். அதனை ஒட்டி வீரசோழியர் வினைச் சொல்லில் சிறப்பு என்

பதைத் தனிப்பிரிவாக எடுத்துக் கொண்டது முன்னரே குறிப்பிடப்பட்டது. ஆனால் பெயர்ச் சொல்லில் மட்டும் மிகையாக ஆண் சிறப்பு, பெண் சிறப்பு, ஒன்றன் சிறப்பு என்று மூன்று வகையாகக் கொண்டது சுட்டிக் காட்டப்பட்டு இந்தப் பாகுபாடு சரியானதில்லை என்பதும் முன்னரே விளக்கப்பட்டது. ஆனாலும் சிறப்பு என்பதைத் தனி இலக்கணக் கூறாக வைத்தது பாராட்டு தற்குரியதுதான். நன்னூலார் சிறப்பு என்று தனிப்பிரிவு வைக்காவிட்டாலும்

ஒருவர் என்பது உயர் இரு பாற்றாய்
பன்மை வினை கொள்ளும் பாங்கிற் றென்ப (289)

என்று மட்டுமே விளக்கியுள்ளார்.

2.2.2. மொழிவரலாற்று உண்மைகள்

வீரசோழியம் கூறிய மொழிவரலாற்று உண்மையைப் பற்றி அறிஞர்களிடையே இரண்டுவிதக் கருத்துகள் காணப்படுகின்றன. மேலே சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்பிட்டபடி தன்கால இலக்கிய வழக்கைக் கவனித்து மொழியில் நடந்த மாற்றத்தை விவரித்திருக்கிறார் என்பது ஒன்று. இன்னொன்று, பேச்சு மொழியை ஆராய்ந்து மொழிமாற்றத்தைச் சுட்டிக்காட்டி இருப்பதால் வீரசோழியத்தை கல்வெட்டுத் தமிழுக்கு இலக்கணமாகக் கொள்ளலாம் என்பது. இந்தக் கருத்தை வேலுப்பிள்ளையும் (1968 : 345; 348) மீனாட்சிசுந்தரனாரும் (1974 ; 34) வெளியிட்டிருக்கிறார்கள். மேலும் வேலுப்பிள்ளை வீரசோழியம் கல்வெட்டுத் தமிழுக்கு இலக்கணம் என்பதற்கு ஐந்து காரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

வேலுப்பிள்ளை குறிப்பிடும் காரணங்களாவன: புணர்ச்சியில் அல்வழி, வேற்றுமை என்ற வேறுபாடு செய்யாதது. ஏனெனில் அல்வழிப் புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி போலவும், வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி போலவும் மாற்றம் பெறுதல் கல்வெட்டில் காணப்படுவதால்தான் புத்தமித்திரனார் அல்வழி-வேற்றுமை எனப் பாகுபாடு செய்யவில்லை. இதுபோன்ற மாற்றம் தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் உண்டு.

அகர ஈற்றுச் சொற்கள் வல்லினத்தின் முன் அல்வழியில் ஒற்று மிகுந்து வரும் (203); வேற்றுமையிலும் அப்படி வல்லெழுத்து மிகுந்து வரும் (216); மகப்பெயர்க் கிளவி இன் சாரியை பெற்று வரும் (218); அத்துச் சாரியை பெற்றுவரும் (219) அல்வழியில் இகர ஈற்றுப் பெயர் இயல்பாகவும் வல்லெழுத்து மிகுந்தும் உறழ்ந்தும் இரண்டுவித மாற்றம் பெற்று முடியும் (158); வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு முடியும் (235). எனவே இங்கெல்லாம் வேற்றுமை – அல்வழி என்ற பிரிப்பு புணர்ச்சி மாற்றத்தைத் தெளிவாகப் புலப்படுத்தவில்லை. மேலும் எண் என்ற பெயர் அல்வழியில் வேற்றுமை மாதிரி புணர்ச்சி பெறும் (208) என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார். எனவே எல்லா இடத்திலும் அல்வழி – வேற்றுமை என்பது வரையறுத்த வேறு பாடுடன் செயல்படவில்லை. அதனால் வேற்றுமை அல்வழி இலக்கணத்துக்குத் தேவையற்றது என்று கூறக்கூடாது. சில இடங்களிலாவது இந்த வேறுபாடு புணர்ச்சி மாற்றத்தை விளக்க உதவும். மேலும் புணர்ச்சி வேறுபாடு சொல்லின் அசை அமைப்பு, இலக்கணக்கூறு (பெயரா, வினையா, என்பது) பொருள் (மரப்பெயரா, விலங்குப்பெயரா) போன்ற அடிப்படையிலும் நடைபெறும் (சண்முகம், 1980:211). கல்வெட்டுத் தமிழின் மொழி அமைப்பே நெகிழ்ச்சி உடையது. அதனால் அல்வழி–வேற்றுமை வேறுபாடு தேவையற்றதுபோலத் தோன்றலாம். நுணுகிப் பார்த்தால் சில இடங்களிலாவது அந்த வேறுபாடு பயன் படுவதைக் காணலாம்.

உண்மையில் வீரசோழியர் வேற்றுமை–அல்வழி சொல்லாதது அவருடைய புணர்ச்சி பற்றிய கோட்பாட்டைக் காட்டும். (சண்முகம், 1980:215) எனவே இந்த வேறுபாடு கூறாததற்குக் கல்வெட்டுத் தமிழை மனதில் கொண்டார் என்பது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை.

வேலுப் பிள்ளை கூறும் ஏனைய மாற்றங்கள் கல்வெட்டுத் தமிழில் மட்டுமின்றி இலக்கியத் தமிழிலும் இடம் பெற்றுள்ளன; அவை காலத்தால் கல்வெட்டுத் தமிழுக்கு முந்திய இலக்கியத் தமிழிலும் பயின்று வந்திருக்கின்றன.

ழகரஈற்றுச் சொல் வல்லினத்தோடு புணரும் போது ட அல்லது ணகரமாகவும் நகரத்தோடு புணர்ந்தால் ணகரமாகவும் மாறும் என்பதை வீரசோழியம் கூறிய இலக்கணத்தைக் குறிப்பிட்டு கல்வெட்டிலிருந்து உதாரணம் கொடுத்துள்ளார் வேலுப்பிள்ளை (1968:346). இப்படிப்பட்ட உதாரணங்கள் சங்க இலக்கியத்திலும் பக்தி இலக்கியத்திலும் காணப்படுகின்றன.

முதலில் ழகரம் டகரமாகவும் ணகரமாகவும் மாறுவதற்கு காரணம் ழகரம் ளகரமாக ஒலிமாற்றம் பெற்றதுதான். வீர சோழியம் கல்லாதவர் பேச்சில் ழகரமும் ளகரமும் உறழ்ந்து வரும் (82) என்று கூறியது இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். பவழம் ~ பவளம், கவழம் ~ கவளம் ஆகிய உறழ்ச்சி சங்க இலக் கியத்திலேயே காணப்படுகிறது (சண்முகம், (1971அ : 39). மேலும் புணர்ச்சியில் நகரமொழி ணகரமாக மாறியதற்கும் சங்க இலக்கியத்திலும் தேவாரத்திலும் சான்று உண்டு. பட்டினப் பாலையிலும் சிலப்பதிகாரத்திலும் சோழநாடு என்பது சோ ணாடு என்று காணப்படுகிறது. இந்தமாற்றம் சோழநாடு > *சோழ்+நாடு > *சோள்+நாடு > சோணாடு என்ற முறையில் தான் ஏற்பட்டிருக்கவேண்டும். அப்படியே வாழ்நாள் என்பது வாணாள் என்று தேவாரத்தில் உள்ளது. (சண்முகம், 1971அ:39). வீரசோழியரே நிகழ்ச்சி என்பதை நிகட்சி (66.1) என்று பயன் படுத்தியுள்ளார். ஆகவே இந்த மாற்றம் கல்வெட்டுத் தமிழுக்கே உரியமாற்றம் என்று கூறுவது பொருந்தாது.

புதிய வேற்றுமைகளை வீரசோழியர் சொல்லிச் சென்றிருக் கிறார். அவையெல்லாம் கல்வெட்டுத்தமிழில் பயின்று வந்திருக் கின்றன. என்பது அவருடைய மற்றொருவாதம் ‘உதாரணமாக மூன்றாம் வேற்றுமைக்கு ஆல்விகுதியும் ஐந்தாம் வேற்றுமைக்கு இல் விகுதியும் ஏழாம் வேற்றுமைக்குப் பக்கல் உருபும் ஆறாம் வேற்றுமைக்கு உடைய உருபும் வீரசோழியத்தில் சிறப்பாகச் சொல்லப் பட்டிருப்பவை’ கல்வெட்டுத்தமிழில் நிறைய காணப் படுகின்றன என்று அவர் காட்டியுள்ளார். ஆனால் இவை சங்க இலக்கியத்திலும் இடைக்கால இலக்கியத்திலும் கூடப் பயின்று

வந்திருப்பதால் கல்வெட்டுத்தமிழுக்கு உரிய சிறப்பு விதிகளாகக் கொள்ள முடியாது என்பதைச் சுட்டுகிறது.

3 ஆம் வேற்றுமை	ஆல்	–கனவினால்	சிலம்பு	9.45
5 ஆம் ,,	நின்று	–குணதிசை நின்று குடமுதல் செலினும்	புறம்	386.20
6 ஆம் ,,	உடைய	–தம்முடையதண்ணளி	சிலம்பு	7.32.1
7 ஆம் ,,	பக்கல்	–தொழலார் பக்கல் துயரம் இல்லை	சம்பந்தர்	23.7.4

வினைச் சொற்களில் இரண்டுவித மாற்றங்களை எடுத்துக் காட்டியுள்ளார். 1) கேவலத்தாது, காரிதத்தாது அதாவது பிறவினையும் செய்வினை ஏவல் வினையும் வருதலும் 2) ஆன, போன, போய போன்ற பெயரெச்ச வடிவங்கள் வருதலும் ஆகும். கேவலத்தாது

ஆட்டு –	அப்பர் தேவாரம்	1295.3
ஆற்று –	,,	972.9
தீற்று –	பெரும்பாணாற்றுப்படை	343
ஆட்டுவி –	அப்பர் தேவாரம்	3017.1
பாட்டுவி –	,,	,,
ஆய –	சிலம்பு 8.92. அப்பர்	5.2
போய –	,, 30.133	
போன –	,, 7.31.3 அப்பர்	534.2

ஆகவே இலக்கியப் பயிற்சி உடைமையால் கல்வெட்டுத் தமிழின் தனிச்சிறப்பு இந்த இலக்கணக் கூறுகள் என்று சொல்ல முடியாது; சொல்லக் கூடாது என்பதையும் புலப்படுத்துகின்றன.

மேலும் இலக்கியத் தமிழில் ஏற்பட்ட இன்னும் எத்தனையோ மாற்றங்களைப் புத்தமித்திரனார் சொல்லிச் சென்றுள்ளார். அவையெல்லாம் இலக்கிய வழக்கில் இடம்பெற்ற மாற்றங்களாகவே முதலில் அறிமுகமாகின்றன.

ழ > ள, ள > ழ, ற் > ச்ச் ஆகிய மாற்றங்களை வீரசோழியர் குறிப்பிட்டு

'நேரிட்டு உரைப்பர் அறிவொன் றிலாதவர் நீயவற்றைப்
பாரிட்டமாகப் பெரியோர் தமதுரை பார்த்தறியே (82.2,3)

(தமிழைப்) பிழைக்க வழங்குவர் அறிவு இல்லாதவர். அவற்றையெல்லாம் உலகத்தாரோடு ஒக்கத் தேர்ந்து பெரியோர் உரையே இலக்கியமாக அறிக.

என்று கூறியுள்ளார். இப்படிப்பட்ட மாற்றங்கள் கல்வெட்டுத் தமிழில் உள்ளன. எனவே கல்வெட்டில் காணப்படும் சிலமாற்றங்களை அவர் ஏற்றுக்கொள்ளாததோடு அவை தவறு; ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று நம்மை எச்சரிக்கிறார். அப்படியானால் அவர்கூறும் இலக்கணத்தை எப்படி கல்வெட்டுத் தமிழுக்குப் பொருந்தும் என்று கொள்வது. மேலும் பொருள், யாப்பு, அணி என்ற மேலும் மூன்று படலங்களைச் சேர்த்து இலக்கணம் இயற்றியுள்ளதால் வீரசோழியம் இலக்கியத்தமிழை-செய்யுளை மனதில் கொண்டு எழுதப்பட்டது என்பதை வலியுறுத்துகிறது. ஏனைய ஆசிரியர் குறிப்பிடாத சில மொழிமாற்றங்களைக் கூறியிருக்கிறார் என்பதற்காகவோ அவர் கூறிய சிலமாற்றங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன என்பதற்காகவோ வீரசோழியம் கல்வெட்டுத் தமிழுக்குரிய இலக்கணம் என்று கூறுவது குன்றக் கூறலாகவே அமையும்.

இனி வீரசோழியர் குறிப்பிட்ட ஏனைய வரலாற்று மாற்றங்களைப் பார்ப்போம். இவற்றிற்கும் இலக்கியச் சான்றுகள் பெரும்பான்மையும் கிடைக்கின்றன என்பது சுட்டிக்காட்டத் தக்கது.

எழுத்தியல்

உயிரளபெடையை மூன்று மாத்திரை உடைய ஒரு ஒலியாகக் குறிப்பிடுகிறார் (5.2). தொல்காப்பியர் காலத்திலேயே இரண்டு உயிர்களின் கூட்டொலியாகவும் மூன்று மாத்திரை பெற்ற ஒரு ஒலியாகவும் அமைந்திருந்தன என்றும் கூட்டொலி உச்சரிப்பே சங்ககாலத்தில் பெருவழக்காக இருந்திருக்க வேண்டும் என்றும் முன்னரே (சண்முகம், 1980:63) விளக்கப்பட்டுள்ளது. இடைக் காலத்தில் மூன்று மாத்திரை உடைய ஒலியாக பெருவழக்குப்

பெற்றதால் வீரசோழியர் அளபெடையைத் தனி எழுத்தாகக் கூறியிருக்க வேண்டும். இந்த உண்மையை நேமிநாதமும் (5.1) நன்னூலும் (99.1) ஒத்துக் கொண்டுள்ளன.

சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்களிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் கவனித்துக் கூறியிருக்கிறார். தொல்காப்பியர் சகர மெய் அ, ஐ, ஔ என்ற மூன்று உயிரோடு கூடி சொல்லுக்கு முதலில் வராது என்று கூறியிருக்க புத்தமித்திரனார் சகர மெய் எல்லா உயிரோடும் கூடிச் சொல்லுக்கு முதலில் வரும் (7) என்று கூறியுள்ளார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டிலும் குறள், சிலம்பு, மேகலை ஆகியவற்றிலும் சகர முதல் சொல்லாக ஆறு தமிழ்ச் சொற்களும் அறுபது பிறமொழிச் சொற்களும் வந்துள்ளன (சண்முகம், 1971 அ 40-42). அப்படியே சைகாரத்தை முதலாக உடைய சொற்கள் பரிபாடலிலும் மேகலையிலும் (சைவம், சைமினி முதலியன) வந்துள்ளன. எனவே அவர் கூறிய மாற்றம் சங்ககாலத்திலேயே ஏற்பட்ட மாற்றமாகக் கருதலாம்.

சௌகாரச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் வரவில்லை. இடைக்கால இலக்கியத்திலும் பயின்று வந்துள்ளனவா என்பதை அறிய முடியவில்லை. எனினும் வீரசோழியர் அந்தப் பயிற்சியைக் கண்டே கூறியிருக்கலாம் என்று நாம் நம்பலாம்.

ஞகர மெய், ஆ, எ, ஒ என்ற மூன்று உயிரோடு மட்டுமே கூடி வரும் என்று தொல்காப்பியர் கூறியிருக்கிறார் (64). புத்தமித்திரனார் ஞகரமெய் நான்கு உயிரோடு மட்டுமே கூடிவரும் என்று கூறியுள்ளாரே தவிர அவை எவை யெவை என்று குறிப்பிடவில்லை. (7). ஆனால் உரையாசிரியர் அ, ஆ, எ, ஒ என்பதே அந்த நான்கு உயிர்கள் என்று குறிப்பிடுகிறார். இதற்கேற்பவே ஞகரத்தை முதலாக உடைய சொற்கள் சங்க இலக்கியத்திலேயே (ஞமலி, ஞமன், ஞரல்) பயின்று வந்துள்ளன. எனவே வீரசோழியர் குறிப்பிடும் நான்காவது உயிர் அகரமாகக் கொள்வது பொருத்தமாகவே அமையும்.

யகரமெய் ஆகார உயிரோடு சேர்ந்துதான் வரும் என்பார் தொல்காப்பியர் (65). ஆனால் சங்ககாலத்திலேயே யகர முதன் மொழிச் சொற்களும் (யவனர், யமன், போன்றவை), யூகாரத்தை

முதலாக உடைய சொற்களும் (யூகம், யூகி, யூபம்), யோகாரத்தை முதலாக உடைய சொற்களும் (யோகம்; யோசனை) வந்துள்ளன. யௌகார உயிர்மெய் பெருங்கதையில் உள்ளது (யௌவனம்). எனவே வீரசோழியர் யகரமெய் ஆறு உயிரோடு சொல்லுக்கு முதலில் வரும் என்றும் பொதுவாகக் கூறியதை உரையாசிரியர் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர்கள் என்று விதந்து எடுத்து விளக்கியுள்ளார். இதுவும் இலக்கியப் பயிற்சியை நோக்கி ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவே அமைகிறது.

எல்லா உயிரும் சொல்லுக்கு இறுதியில் வரும் என்றும் ஔகாரம் மட்டும் க, வ என்ற இரண்டு மெய்யோடு சேர்ந்தே இறுதியாகும் (69,70) என்றும் தொல்காப்பியர் வருணித்துள்ளார். ஆனால் வீரசோழியர் ஈரைந்து ஏழில் உயிருமே (8) சொல்லுக்கு இறுதியில் வரும் என்று கூறியிருக்கிறார். இதற்கும் உரையாசிரியர் எ, ஒ என்ற இரண்டு குற்றெழுத்து நீங்கிய ஏனையவை என்று விளக்கம் தந்துள்ளார். சங்ககாலத்திலேயே அந்த இரண்டு குற்றுயிர்களும் அளபெடையில் தான் (சேஎ, ஒஒ) இறுதியாக வந்தன. பேச்சு மொழியில் அளபெடை ஒரு ஒலியாகப் போய் விட்டதாலும் ஓரசைச் சொற்கள் உகரம் பெற்று ஈரசையாக மாறியதாலும் அந்த இரண்டு உயிர்களும் சொல்லுக்கு இறுதியில் வராமல் போயிருக்க வேண்டும். மேலும் பல்லவர்காலக் கல்வெட்டுத் தமிழில் எ, ஒ இரண்டும் சொல்லுக்கு இறுதியில் வராதது ஒரு வரலாற்று மாற்றமாகவே கருதப்பட வேண்டும். (மீனாட்சிசுந்தரனார். 1965 : 119).

தொல்காப்பியர் சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகளைக் குறிப்பிடும் போது எல்லா இடையின எழுத்துகளும் ஙகரம் ஒழிந்த மெல்லின எழுத்துகளும் இறுதியில் வழங்கலாம் (78) என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் வீரசோழியரோ ம, ண, ன என்ற மூன்று மெல்லினமும் இடையினத்தில் வகரம் நீங்கிய மெய்களும் இறுதியில் வரும் என்று குறிப்பிடுகிறார். இந்த வேறுபாடும் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு தான்.

தொல்காப்பியர் ஞகரத்தை இறுதியாக உடைய சொல் ஒன்றுதான் (உரிஞ்) என்று குறிப்பிட்டுள்ளார். அது உரிஞ்சு

என்று ஆகிவிட்டது (அப்பர் 2248.1). எனவே அந்த எழுத்து இடைக்காலத்தில் இறுதியில் வராமல் போய்விட்டது. நகரத்தை இறுதியாக உடைய சொற்கள் இரண்டு (வெரிந், பொருந்) என்று தொல்காப்பியர் சொன்னாலும் சங்க இலக்கியத்தில் வருவது வெரிந் மட்டுமே. அது வெரிநு (அகம். 65-14) என்று சங்க காலத்திலேயே மாறிவிட்டது. தேவாரத்தில் இந்தச் சொல் காணப்படவில்லை. எனவே மெல்லினத்தில் வீரசோழியர் மூன்று மெய்களை மட்டும் இறுதியில் வரும் என்று கூறிச் சென்றுவிட்டார்.

இடையினத்தில் வகரஈறு நான்கு சொற்களில் மட்டுமே (அவ், இவ், உவ், தெவ்) வரும் என்று தொல்காப்பியர் வரையறுத்துள்ளார் (81). இங்கும் இந்தச் சொற்கள் மாற்றம் அடைந்துவிட்டதால்தான் புத்தமித்திரனார் வகரமெய் இறுதியில் வராது என்று வருணித்து விட்டார். அவ், இவ், உவ் என்ற மூன்று சுட்டுச் சொற்களில் முதல் இரண்டும் அவை, இவை என்றே பெரும்பான்மையும் சங்க மருவிய காலத்திலும் இடைக் காலத்திலும் வழங்கி வந்தன. உவ் என்ற சுட்டு மறைந்து விட்டது. தெவ் என்பது தெவ்வு என்று (பரிபாடல் 19-10) மாறிவிட்டது. எனவே வகர ஈற்றையும் நீக்குவது அவசியமாகப் போய்விட்டது.

இந்த மாற்றங்கள் பெரும்பான்மையும் இலக்கியப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டன என்பது மீண்டும் வலியுறுத்தத் தக்கது.

உரையாசிரியர் குறித்த மாற்றங்கள் இங்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை.

புணர்ச்சியில் இ, ஈ, ஐ, ய ஆகியவற்றை இறுதியாக உடைய சொற்களுக்குப் பின்னால் நகர முதன் மொழி வந்தால் ஞகரமாக மாறும் என்று கூறியிருப்பது (15) நகரம் ஞகரமாக மாறியதாகக் கருதலாம்.

தொல்காப்பியத்திலே ஐம்+நூறு>ஐந்நூறு என்று இருப்பது ஓரிடத்து ஐஞ்ஞூறு (தொல்:1358:1) என்றும் பதிற்றுப்பத்தில் பைந் நிணம் என்பது பைஞ்ஞிணம் (17.9) என்றும் மணிமேகலையில் செய்நர் என்பது செய்ஞ்ஞர் (28.35) என்றும் மாறிவந்திருப்பது வரலாற்று மாற்றமாகக் கருதி அது சங்ககாலத்திலேயே தொடங் கியதாகக் கொள்ள வேண்டும்.

புணர்ச்சியிலும் வீரசோழியர் ஒரு மாற்றத்தை கவனித்திருக் கிறார். லகரஈற்றுச் சொல்லுக்குப் பின் யகர முதன்மொழி வந்தால் இகரந்தோன்றும் என்று (17) வீரசோழியம் குறிப்பிடு கிறது. தொல்காப்பியத்திலேயே இகரம் தோன்றாமல் இயல் பாக வந்திருக்கிறது.

நல்யாழ்த் துணைமையோர் (1088.4)

ஆனால் சங்ககாலத்தில்

நல்+யாழ்>நல்லியாழ் — புறம் 242.2 மலைபடுகடாம் (450) என்று வந்துள்ளது. இதோடு மட்டும் அல்லாமல் வேறு மெய் யீறுகளும் யகரத்தின் முன் இகரம் மிகுந்து வந்திருக்கின்றன.

பேர் + யாழ் > பேரியாழ் பதிற்று. 46.5

எனவே நன்னூலார் யகரமெய் ஒழிந்த எல்லா மெய்யீறுமே யகர முதன் மொழி முன்னர் இகரம் மிகுந்து வரும் (205) என்று பொதுமைப் படுத்திக் கூறியுள்ளார்.

சொல்லதிகாரம்

பால்காட்டும் விகுதிகளாக வீரசோழியர் கன், மன் என்ற இரண்டு புதிய விகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். சிறுக்கன், கருமன், குறுமன். சிறுக்கன் என்பது மிகப் பழைய வடிவம் என்று ஒப்பிலக்கண ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். (சண்முகம், 1972 a ; 112). எனவே அது ஒரு கிளைமொழியில் பாதுகாக்கப் பட்டிருந்ததை வீரசோழியர் அறிந்ததால் புது விகுதியாகக் கூறிவிட்டார். மன் என்பதற்கு இலக்கிய வழக்கு கிடைக்க வில்லை.

பெண்பாலுக்குரிய விகுதியாக மி, சி, ஆட்டி, ஆத்தி என்பன வற்றை புதிதாகக் குறிப்பிட்டுள்ளார். மி என்பது சிறுமி என்ற சொல்லில் சிலம்பில் (17–28–2) வந்துள்ளது. சி என்பது ஆய்ச்சி என்ற சொல்லில் கலித்தொகையில் (166.3) காணப்படுகிறது. ஆட்டி என்பது வெள்ளாட்டி என்ற சொல்லிலும் ஆத்தி என்பது வண்ணாத்தி என்ற சொல்லிலும் வழங்கினாலும் இலக்கிய வழக்கு உண்டா என்று தெரியவில்லை.

தொல்காப்பியர் கள் விகுதி அஃறிணைச் சொல்லுக்கே உரியதாகக் கூறியுள்ளார். (654) ஆனால் பரிபாடல், குறள், சிலம்பு, மேகலை ஆகியவற்றிலேயே உயர்திணைக்கும் கள் பயன் படத் துவங்கிவிட்டது.

வாளிகள் (வாளை உடையவர்கள்)		பரி.	9.54
எயினர்கள்	—	சிலம்பு	12.10.2
மற்றையவர்கள்	—	குறள்.	263
நோன்பிகள்	—	சிலம்பு	10 124
		மேகலை	3.75
பெண்கள்	—	சிலம்பு	30.50

எனவே வீரசோழியம் பலர்பால் விகுதியாக (30) அர்கள், கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டிருக்கிறது. மார் என்ற புதிய பன்மை விகுதியையும் வீரசோழியம் அதே சூத்திரத்தில் கூறியுள்ளது. அது புறநானூற்றிலும், அகநானூற்றிலும் கூட வந்து விட்டது.

ஐமார் 'சகோதரர்கள்'	– புறம் 342.15
தோழிமார்	அகம் 48.5

இடப்பெயர் வடிவங்களில் தொல்காப்பியர் கூறாத பல புதிய வடிவங்களை புத்தமித்திரனார் கண்டு சொல்லியுள்ளார்.

தன்மை : நான் (பரிபாடல் மேகலை 23.95)
முன்னிலை : நீங்கள் (அப்பர் தேவாரம் 574.2)

வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் : உன் (அகம். 222.2)
உம் (நற். 368.3)

இவையும் சங்க இலக்கியத்திலும் பிற்காலத்திலும் வந்துள்ளன.

நிகழ்கால இடைநிலைகளாக கிறு, ஆநின்று (66) என்ற இரண்டு வடிவம் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறு என்பதன் மாற்று வடிவமாக கின்று என்பது பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் வரும் என்று வேறு ஒரு சூத்திரத்தில் (74) குறிப்பிட்டுள்ளார். ஓசனிக்கின்ற என்ற நிகழ்கால பெயரெச்ச வடிவம் சிலம்பிலும் (14.15) சாதிக்கிற என்பது மேகலையிலும் (28.299) வந்துள்ளன. தேவாரத்தில் இவை நிறையப் பயின்று வந்துள்ளன.

காண்பான் (கலி. 97.7), கொள்வான் (பரி. 16.59) என்பது வினையெச்சமாக வந்துள்ளதை வீரசோழியர் பான் என்பது துமந்த விகுதி என (செயவென் எச்சம்) (67.1) குறிப்பிட்டுள்ளார்.

வினைமுற்று விகுதிகளில் தன்மை ஒருமை விகுதியான அன்னும், ஓம் விகுதியும் வீரசோழியர் பிற்கால இலக்கியத்தில் வழங்கியுள்ளதைப் பார்த்துக் கூறியதுதான். இவற்றிற்கும் சங்க இலக்கியச் சான்றும் சங்க மருவியகாலச் சான்றும்உண்டு.

கைவிடுகலன்	அகம். 193
உரைத்தனன்	புறம். 136
கூறுவன்	நற். 233 முதலியன
ஆடினோம்	சிலம்பு. 24.7.2
இலோம்	மேகலை. 5.56

இப்படி சங்க இலக்கியத்தில் தொல்காப்பிய வழக்கிலிருந்து மாறுபட்ட வழக்குகளைக் கவனித்து வீரசோழியர் தன்னுடைய இலக்கணத்தில் கூறியிருப்பது அவருடைய இலக்கியப் புலமைக்குச் சிறந்த சான்று.

3. மதிப்பீடு

3.1. இலக்கண முழுமை

வீரசோழியர் தமிழ்மொழி அமைப்பு முழுமையும் விளக்கவில்லை என்று முன்னரே சுட்டிக் காட்டப்பட்டது. இடைச்சொற்கள், பெயரெச்சம் போன்றவற்றை கூறவில்லை என்பதும் முன்னரே குறிப்பிடப்பட்டது. அப்படியே மெய்மயக்கம் வரும் என்று சொல்லிவிட்டு என்னென்ன மெய்கள் சேர்ந்து வரும்

என்று விதந்து கூறாமல் விட்டுவிட்டார். எனவே வீரசோழியம் தமிழ்மொழி அமைப்பை முழுமையும் விளக்கவில்லை என்பது தெளிவு.

வரலாற்று மாற்றத்திலுங்கூட சில முக்கியமான உண்மை களைப் புறக்கணித்துள்ளது வீரசோழியம்.

ஞிகரம் மொழிக்கு முதலில் சங்ககாலத்திலேயே வந்துவிட்டது.

ஞிமிறு –	புறம்	93, 12
	அகம்	599
	பதிற்.	12.42
	சிலம்பு	252.50
	சிந்தாமணி	48.3
ஞிணம்	புறம்.	177.14

இந்த உண்மையை சுவாமிநாதம் (21) தவிர ஏனைய எல்லா இலக்கணங்களுமே அலட்சியப்படுத்தி விட்டமை ஏன் என்று தெரியவில்லை.

சொல்லதிகாரத்தில் முன்னிலைப் பன்மை வடிவங்களான நீம் நீங்கள் என்ற வடிவங்களையும் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் எல்லோருமே குறிப்பிடாமல் சென்றுவிட்டார்கள்.

நீம் என்பது சீவக சிந்தாமணியிலும் (1932) நீங்கள் என்பது அப்பர் தேவாரத்திலும் (405.1, 450.1) சீவக சிந்தாமணி (1045) யிலும் வந்துள்ளன. உரையாசிரியர்கள் மட்டுமே இவற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு நூலாசிரியர் கூட இந்த வடிவங்களை ஏற்றுக் கொள்ளாதது வியப்பாகவே உள்ளது.

செய்பாக்கு என்ற வடிவம் திருக்குறளில் வந்திருந்தும் வீரசோழியர் குறிப்பிடவில்லை.

வேபாக்கு	குறள்.	1128
கரப்பாக்கு	„	1227

இந்த வடிவத்தை வினையெச்சமாகக் கருதி நன்னூலார் -பாக்கு என்று குறிப்பிட்டுள்ளார் (343). இந்த வாய்பாடு உடைய சொற்கள் எல்லாம் அறிந்து என்ன சொல்லைக்கொண்டு

முடிந்தாலும் தொழிற் பெயராகக் கருதுவதே சிறந்தது என்று சித்தரபுத்திரன் பிள்ளை (1981) கருதுகிறார். எப்படியாயினும் செய்பாக்கு என்ற வடிவத்தைக் கூறாதது ஒரு குறையாகவே கருதப்படும்.

சங்ககாலத்தில் எதிர்மறை வினையெச்சம் 'செய்யாது' என்ற வாய்பாட்டிலேயே பெரும்பான்மையும் அமைந்துள்ளது. தொல்காப்பியர் எதிர்மறை வினையெச்ச வடிவத்தைப் பற்றி பேசவே இல்லை. சங்ககாலத்திலேயே இன்னொரு வாய்பாடு 'செய்யாமல்' என்பது அருகிய வழக்காக வழங்கத் தலைப்பட்டு இடைக்காலத்தில் அதன் பயிற்சி மிகுந்தது.

படாமல்	— மலை படுகடாம்	365
காணாமல்	— கலித்தொகை	39.42
ஞெகிழாமல்	— சிலம்பு	1.61

ஆனால் வீரசோழியரும் எதிர்மறை வினையெச்சத்தைப் பற்றிப் பேசவே இல்லை. நன்னூலிலும் இந்த எதிர்மறை வினையெச்சம் குறிப்பிடப்படவில்லை.

எனவே வீரசோழியம் பல வரலாற்று மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளது என்பது உண்மையாயினும் இன்னும் பல மாற்றங்கள் இலக்கிய வழக்கில் ஏற்பட்டிருந்த போதிலும் அவற்றை வீரசோழியம் புறக்கணித்து விட்டது. ஆனால் வீரசோழியம் சொன்ன அளவுக்குக் கூட நன்னூலோ பிற இலக்கண நூல்களோ கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்பு

1. It is possible to say that in English the nouns have a zero morpheme for singular and [-ez] for plural. This would mean that *sheep* in the singular would have a morphemic zero and in the plural an allomorphic zero. One should, however, avoid the indiscriminate use of morphemic zeros. Otherwise, the description of a language becomes unduly sprinkled with zeros merely for the sake of structural congruence and balance.

(Nida, 1949 P-46 FN 44)

2. The Other possible use of the zero concept in morphology would be to set up a morpheme, that is, one in which there is no overt allomorph whatever. To do so is quite unnecessary, and will generally lead to increased complexity of statement, the precise opposite of our desired goal. Moreover, it is logically indefensible. If we are to make such free use of zero, there is no definable place to stop. We could freely add zeros of all kinds to our descriptions, and each would be justifiable as the last.

(Gleason, 1961, P. 76)

3. எனவே தத்திதபிரத்தியங்களில் வரும் /சு/ என்பது சூனிய உருபன் அல்லது 'பொருளற்ற பொருளன்' (zero morpheme)' என்று சுப்பிரமணியன் (1977:15) கூறுவது பொருந்தாது. உண்மையில் அது சூனிய மாற்றுருபு.

4. The grammar of a given language cannot conveniently be stated in terms of the arrangement of specific morphemes, because the total number of morphemes in any language is far too large to permit this. (Gleason, 1961:58)

5. The authors of Viracoliyam and Pirayokavivekam have imitated Panini's Grammar in declension, conjugation and word formation to such an extent that they have completely distorted the perspective through which the linguistic phenomena of the Tamil Language should be analysed and evaluated. (Subrahmanya Sastri, 1934:4) வடமொழி உதாரணங்களையும் வடமொழியில் எழுதப்பட்ட தெலுங்கு இலக்கணங்களில் இந்த முறை பின் பற்றப் பட்டிருக்கிறது என்ற உண்மையையும் தெரிவித்த பேரா சிரியர் பி. எஸ். சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றி.

6. ......except Tamil the other major Dravidian languages followed the Sanskrit grammatical theories and technical terms. Therefore it is difficult for the students of those

languages, to follow the analysis of the Dravidian language, Tamil made by the Tamil grammarians. Fortunately a few authors have attempted to analyse Tamil from the point of view of Sanskrit.

(Meenakshi Sundaran, T.P. 1974:34)

7. Viracoliyam for the first time probably attempted to explain Tamil in terms of Sanskrit grammatical theories. It uses Sanskrit technical grammatical terms.................. In giving examples for its Sanskrit technical terms in Tamil often it gives Sanskrit examples showing the difficulty in finding out purely Tamil examples. Perhaps this attempt is due to the number of Sanskrit terms borrowed into even the colloquial language.

(Meenakshi Sun aran, T. P. 1974:34)

8. தமிழகத்தில் வேற்றுநாட்டார் ஆட்சியும் மொழியும் மதங்களும் புகுந்தமையால் ஏற்பட்ட மாற்றங்கள் பல. சிறப்பாக மொழியில் புது வாழ்வு தோன்றியது. இவ் வாழ்வு மதச் சார்புடைய மக்களிடையே பரவியது. ஓரளவு இலக்கிய உலகிலும் நிலைபெற்றது. இதனால் இலக்கண ஆசிரியர்கள் மொழியின் நிலைகண்டு புதிய விதிகளை வகுக்க வேண்டிய பொறுப்புடையர் ஆயினர். இச் சூழ்நிலையில் எழுந்த இலக்கண நூலே வீரசோழியம்.

(இளவரசு, 1963: பக் 103)

9. Perhaps a deeper knowledge of a language like Sanskrit, blessed with a systematized grammar, gives one a grasp of the linguistic universals, so as to help one to understand and explain the grammatical structure of one's own language. (Meenakshi Sundaran, T. P. 1974:13)

10. tasya pratisrutkani bhavanty urah kanahah Siro mukham nasike iti '(Tribh.: pratisrut pratidhvanih).

Taittiriya Pratisakhya, ii. 3

(Quoted in Allen, 1953:23)

"Its resonators are chest, throat, head, mouth and nose"
(English Translation by Prof. P. S. Subrahmanyam, Annamalai University)

11. The author of Viracoliyam improves upon Tolkappiyam and mentions a few points with reference to the literature of his time which are not found in it.

(Subrahmanya Sastri, 1934:2)

12. Viiracoozhiyam was not well received by the Tamil scholars as a whole, partly because of excessive Sanskrit influence in it, and partly because of its slant to colloquial Tamil.

(Velupillai, 1968:345)

......it seems that Viiracoozhiyam can lay claim to being the best descriptive grammar available, among the early and medieval traditional grammars, for the language of the Tamil inscriptions.

(-do- P. 348)

13. It has taken into consideration the language of the common man without however, recognising what it calls the corrupt speech of the lower classes. Probably the inscriptions of those times are explained by this grammar. Perhaps there were many attempts of this kind, but we do not know anything of them. (Meenakshi Sundaran, T. P. 1974:34)

துணை நூல்கள்

அனந்தகிருஷ்ணபிள்ளை, A. (1969) Descriptive grammar of Early Middle Tamil (represented by Hymirs of Sairaite and Vaishnavite songs) – thesis submitted to the Poona University.

அருள்ராஜ், வே. சா. (1981) 'Case System in Tamil' Ph.D thesis submitted to the Annamamalai University.

இளவரசு, சோம. (1963) *இலக்கண வரலாறு*, சிதம்பரம்.

கைலாசபதி, க. (1970) *அடியும் முடியும்*, சென்னை.

சண்முகம், செ. வை. (1969 அ) இடைக்கால இலக்கணங்கள்: நேமிநாதம், *தமிழ்ப் பொழில்* 42.6, பக். 131–48.

——— (1969 ஆ) 'A Modern evaluation of Vi:raco:liyam' *Journal of the Annamalai University* Vol. 26. PP 65–78.

——— (1971) 'Some Problems of Old Tamil Phonology' *Indo–Iranian Journal*, Vol. 13 PP 31–43.

——— (1972 அ) *Dravtdian Nouns (A Comparative study)*, Annamalainagar.

——— (1972 ஆ) 'வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்' *தொல் காப்பிய மொழியியல்* பக். 267–308, அண்ணாமலைநகர்.

——— (1975) *சுவாமிநாதம்* (உரையும் பதிப்பும்), அண்ணாமலை நகர்.

——— (1980) *எழுத்திலக்கணக் கோட்பாடு*, அண்ணாமலைநகர்.

சிங்காரவேலன், சொ. (1967) A Critical study of Appar Te:va:ram-thesis submitted to the Annamalai University.

சித்தரபுத்திரபிள்ளை (1981) Historical study of Tamil verbal suffixes form early to middle Tamil-unpublished thesis submitted to the Annamalai University.

சுப்பிரமணியன், ச. வே. (1977) *வீரசோழியம்: ஒரு திறனாய்வு மூலமும் கருத்தும்*, சென்னை.

சுப்பிரமணியசாஸ்திரி, பி. சா. (1934) *History of grammatical theories in Tamil in relation to grammatical literature in Sanskrit*, Madras.

திண்ணப்பன். சுப. (1972) 'தொல்காப்பியத்தில் இலக்கணக் குறியீட்டுச் சொற்கள்' தொல்காப்பிய மொழியியல் பக். 363-84. அண்ணாமலைநகர்.

——— (1972) தொல்காப்பிய மொழியியல் (பதிப்பாளர் ச. அகத்தியலிங்கம்&க. பாலசுப்ரமணியம்) அண்ணாமலை நகர்.

தொல்காப்பியமூலம், (1967) கழக வெளியீடு, சென்னை.

நடராசன், R. (1957) 'Manime:kalai as an epic (with an index) thesis submitted to the Annamalai University.

நன்னூல் (1973) கழகப்பதிப்பு.

நேமிநாதம் (1973) கழகப்பதிப்பு.

மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. (1965) '*A History of Tamil language*, Poona.

——— (1974) *Foreign Models in Tamil grammar*, Trivandrum.

விஜயவேணுகோபால், G. (1968) *A Modern evalution of Nannu:l*, Annamalainagar.

வீரசோழியம் பெருந்தேவனார் இயற்றிய உரையுடன் 1970. கழகப் பதிப்பு.

வெள்ளைவாரணன், க. (1962) தொல்காப்பியம் – நன்னூல் எழுத்ததிகாரம் இரண்டாம் பதிப்பு, 1970, அண்ணாமலை நகர்.

வேலுப்பிள்ளை, A. (1968) 'Vi:raco:liyam as a grammar of Inscriptional Tamil' *Proceedings of the second International Conference – Seminar of Tamil studies'* (ed. R. Asher) Madras.

Allen, W. S. (1953) *Phonetics in Ancient India*, London.

Gleason, H. A. (1961) *An Introduction to Descriptive Linguistics*, Revised edition, Indian Reprint, 1966.

Nida, E. A. (1949) *Morphology: A Descriptive analysis of words* Ann Anbor.

Pike, (1943) *Phonetics*, Ann Anbor.

Whitney, W. D. 1888. *Sanskrit grammar*, 2 nd Edition, Indian Reprint, Delhi 1962.

Wilson, H. H. 1847 *An Introduction to the grammar of the Sanskrit language*. 2 nd edition. Indian Reprint, Varanasi, 1961.

Index des mot dela literature famuole ancienne, 1967 Pondicherry.

அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழக வெளியீடுகள்

1\. மொழியியல்-வாழ்வும் வரலாறும் **(History of Linguistics)**

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
M.A., Ph.D. (Kerala) Ph.D., (Ind. U.S.A.)

டாக்டர் **க. புஷ்பவல்லி,** M.A., Ph.D.

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 458) (விலை ரூ. 16/-

2\. கிளை மொழியியல் **(Dialectology)**

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா,** M.A., Ph.D.

ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி, தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழிகளைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/-

3\. மொழித்திட்டமிடுதல் **(Language Planning)**

டாக்டர் **கி. கருணாகரன்,** M.A., Ph.D.

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாகவரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும்

கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எடுத்தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துரு வாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரூ. 7/–

4. உலக மொழிகள் – திராவிட மொழிகள்
(Dravidian Languages)

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/–

5. உலக மொழிகள் – திராவிட மொழிகள் II
(Dravidian Languages)

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட திராவிட மொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல் திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு, பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்று காட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 15–/

6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா,** M.A., Ph.D.

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்து கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/–

7. எழுத்துச் சீர்திருத்தம் **(Script Reform)**

டாக்டர் **செ. வை. சண்முகம்,** M.A., M.Litt., Ph.D.

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடிவத்தில் செய்யப்படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து, பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்ய வேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளள.

பக்கம் 240) (விலை ரூ. 12.50/–

8. ஒலியியல் **(Phonetics)**

டாக்டர் **இராசாராம்,** M.A., Ph.D.

தமிழொலிகளின் வகை, பிறப்புமுறை ஆகியவற்றோடு பொதுவாக ஒலியைப் பற்றியும் அதன் ஆய்வு முறைகள் மற்றும் பேச்சுறுப்புக்களைப் பற்றியும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. ஒலியியல் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் விளக்கத்தோடு இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பக்கம் 180) (விலை ரூ. 15/–

9. எழுத்திலக்கணக் கோட்பாடு

(Phonological Theoreis in Tamil Grammers)

டாக்டர் **செ. வை. சண்முகம்,** M.A., M.Litt., Ph.D.

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களின் எழுத்ததிகாரத்தில் காணப்படும் மொழியியல் கோட்பாடுகள், எழுத்ததிகார அமைப்பு, பிறப்பியல், தொல்காப்பியரின் 'எழுத்து', முதலும் சார்பும், எழுத்தியலின் களன், எழுத்தியல், பதவியல், புணரியல், அடிநிலைக்கிளவி, புணரிய்ல்களின் அமைப்பு, சாரியை என்று பதினோரு இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. முதல் இயலான 'இலக்கணமும் மொழி யியலும்' என்பதில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் உள்ள உறவு, மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராயும் முறை இந்த நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் வரலாறு ஆகியனவும் கடைசி இரண்டு இயல்களான 'போக்குகள்' 'உத்திகள்' என்பன வற்றில் இலக்கணங்களிடையே காணப்படும் ஆய்வுப்போக்கும், இலக்கண உத்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே உரையாசிரியர்களின் கருத்துகளும் இலக்கண ஆய்வாளர்களின் கருத்துகளும் மொழியியல் நோக்கில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்த நூல் எழுத்ததிகாரத்தை ஒப்பு நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.

பக்கம் 306) (விலை ரூ. 20/-

10. சொல்லியல் 1 **(Morphology)** - பெயரியல் **(Noun)**

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

தமிழ் மொழியின் சொல்லியல் பற்றி இக்கால மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்வது இந்நூல்.

முதல் இயலான 'சொல்லியல் கொள்கைளும் விளக்கங்களும்' என்ற தலைப்பில் தற்கால மொழியியல் கோட்பாடுகளும், 'பெயரியல்' என்ற இரண்டாம் இயலில் தமிழ்ப் பெயர்ச் சொற்

களின் வகைப்பாடுகளும் அவற்றின் காரணங்களும், பதிலிடு பெயர்கள் எண்ணுப்பெயர்கள் போன்றவையும் விளக்கப்படுகின்றன. மூன்றாவது இயலான 'எண் பால் பகுப்பு' என்ற தலைப்பில் எண் அமைப்பும் பால் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன. 'வேற்றுமை' என்னும் இயலில் வேற்றுமைகளின் அமைப்பும் ஆக்கமும், பொருளும், போக்கும் ஆராயப்படுகின்றன. பொதுவாக தமிழ் மொழியின் பெயர்ச்சொல் அமைப்பு பற்றிப் பல புதிய விளக்கங்களை இதில் காணலாம். பல்வேறு புதிய கோணங்களில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சொல்லியல் என்ற வரிசையில் முதல் நூல் இது.

பக்கம் 280) (விலை ரூ. 21/-

11. Linguistic Convergence

Dr. K. KARUNAKARAN, M.A.,Ph.D., Dip., in Kannada

This monograph deals with some of the problems related to the use of languages in contact situations, and as a result, the development of some commonness in the structure of the languages. The topics discussed include nature and direction of convergence; use of minority languages in multilingual situation; mass communication - diglossia and linguistic convergence; social setting-language development and linguistic convergence; and current issues and research related to the study of convergence.

pp. 118) (Pricc Rs. 10/-

12. இரு மொழியம் **(Bilingualism)**

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா,** M.A., Ph.D.

ஒருவர் இரண்டு மொழிகளைக்கற்று அவைகளைப் பேசும் பொழுது, அவருடைய பேச்சில் ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு மொழியில் கலந்து வழங்குகின்றன. மொழித் தொடர்பு நீண்ட காலம் நிலைத்திருந்தால் தொடர்பு கொண்ட மொழிகள் ஒன்று

மற்றொன்றாலோ அல்லது இரு மொழிகளுமோ தாக்கத்திற்குட் படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும் பொழுது, பிற மொழிக் கூறுகள் குறுக்கீடாகவோ, அல்லது கடனாகவோ வரும். இவை களை மொழி அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் விரிவாக விளக்கிக் கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 152) (விலை ரூ. 15/–

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரை களைத் தெளிவாகத் தட்டச்சு (typt) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச் சிக்கு உதவ வேண்டுகிறோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1. வெளியீட்டாளர் & ஆசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற்கழகம்,
மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608002.

2. அச்சிட்டோர்: கே. பி. டி. இண்டஸ்ட்ரி
C. கொத்தங்குடி,
அண்ணாமலைநகர், சிதம்பரம்.

தொல்காப்பியம் எழுந்ததின் நோக்கம்
கு. மீனாட்சி ... 199-212

தமிழ்த்துணைவினைகள் முதல் வினைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன என்னும் கூற்றிற்கு ஒரு சான்று
க. திலகவதி ... 213-235

தமிழ் ஆய்வேடுகளில் காணும் சில குறைகள்
மா. சு. திருமலை ... 237-246

தமிழ் வினாக்களின் ஒலியேற்றம்
க. இரவிசங்கர் ... 247-264

பழந்தமிழில் உந்தீறு
தி. முருகரத்தனம் ... 265-272

மேடைப்பேச்சில் பொருள் விளக்கம்
மா. கணேசன் ... 273-291

கல்லாதவர்களின் பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் நிலை
ச. இராதாகிருட்டிணன் ... 293-308

தேர்வுக் கட்டுப்பாடுகளும் மொழி கற்பித்தலும்
ந. நடராசப்பிள்ளை ... 309-319

கம்பராமாயணக் கட்டளைக் கலித்துறைகள்
ம. ரா. பூபதி ... 321-332

மொழியும் நிலைபேறாக்கமும்
வ. ஞானசுந்தரம் ... 333-362

எளிமையாக்கம்: புதுமையாக்கத்தின் ஒரு முறை
இ. அண்ணாமலை ... 363-376

தமிழ்ச் சிறுகதைகளில் இரட்டை வழக்கு
ந. தெய்வசுந்தரம் ... 377-389

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்
சு. சக்திவேல் ... 391-394

வானொலித்தமிழ்: ஓர் அறிமுகம்
எஸ். ஆரோக்கியநாதன் ... 395-412

தொல்காப்பியனார் கண்ட மொழியியல் உறழ்வு
கே. எம். இருளப்பன் ... 413-423

வீரசோழியம்: ஒரு மொழியியல் ஆய்வு
செ. வை. சண்முகம் ... 425-488

மொழியியல்

தொகுதி 4 ஜூலை - டிசம்பர் 1980 எண் 1 &

உள்ளுறை

பக்கம்

பேச்சுமொழியின் இலயமும் பாரதி கூட்டிய பெருமையும்
தெ. பொ. மீனாட்சிசுந்தரன் ... 1-9

கிளைமொழியியல் : கிளைமொழி அகராதி
கோ. சீனிவாச வர்மா ... 11-27

வாய்மொழியும் வரைமொழியும்
ஜெ. நீதிவாணன் ... 29-37

இ என்ற வினையாக்கவிகுதி
பொன். கோதண்டராமன் ... 39-45

மீனவர் தமிழில் கலைச்சொற்கள் : [illegible]
கே. வி. இராஜகுமாரி 47-58

தமிழில் பின்னோக்குப் பிரதிப்பெயராக்கம்
ப. பத்மநாபபிள்ளை ... 59-64

சாதிக் கிளைமொழியா? சமூகக் கிளைமொழியா?
ச. மனோகரன் ... 65-83

சமூகத் தொடர்பும் மரியாதையும் -
நடத்துநர்களின் மொழிப்பயன்பாடு
மு. ஆனந்தராசன் ... 85-99

பயனிலை : அகமும் புறமும்
இரா. கோதண்டராமன் ... 101-130

உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும்
ச. அகத்தியலிங்கம் & சு. சக்திவேல் ... 131-160

தக்கனி உருதில் தமிழின் செல்வாக்கு
எஸ். காதர்மொஹிதீன் ... 161-170

இளம்பூரணர் உரை நுணுக்கம்
கே. வி. தாட்சாயணி ... 171-176

தமிழ் ஒலிகளின் சிறப்பியல்புகள்
என். இராமசாமி ... 177-184

தமிழில் நேர்க்கூற்றும் அயற்கூற்றும்
க. சுசீலாபாய் ... 185-197

(தொடர்ச்சி பின்பக்கம்)